
மல்லிகா மணிவண்ணனின்
வீழ்வேனென்று நினைத்தாயோ
பாகம் - 1

# வீழ்வேனென்று நினைத்தாயோ

(பாகம் - 1)

மல்லிகா மணிவண்ணன்

நாகம்மை நிலையம்
43/18, எஸ்.பி.எஸ். முதல் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : வீழ்வேனென்று நினைத்தாயோ (பாகம் - 1) |
| ஆசிரியர் | : மல்லிகா மணிவண்ணன் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : ஜனவரி, 2015 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 X 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 396 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : நாகம்மை நிலையம்<br>43/18, எஸ்.பி.எஸ். முதல் தெரு,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.180.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : பா.குணாளன் |
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ்,<br>சென்னை-14. |

# ஆசிரியர் கடிதம்

இது எனது பத்தாவது நாவல் என்பதை மகிழ்ச்சியுடன் எல்லோருடனும் பகிர்ந்து கொள்கிறேன். விளையாட்டு போல ஆரம்பித்தது தான் என்னுடைய எழுத்துப் பணி. உங்கள் எல் லோருடைய ஊக்கமும் உற்சாகமும் மட்டுமே இதை இப்பொழுது என்னை மிகுந்த ஈடுபாட்டுடன் செய்ய வைத்திருக்கிறது.

என்னுடைய இந்த எழுத்துப் பணி தொடர உதவிய இருவரை பற்றி நான் நிச்சயம் சொல்ல வேண்டும். ஒருவர் எப்பொழுதும் நான் புத்தகம் வாங்கும் கடையின் உரிமையாளர் திரு A.S.குணசேகர் (ஓம் முருகா புக் ஷாப், சேலம்) அவர்கள். நான் ஒரு கதையை எழுதியிருக்கிறேன். எப்படி பிரசுரிப்பது? யாரை அணுகுவது என்று தெரியவில்லை என்று நான் சொன்னபோது, சற்றும் யோசிக்காமல், நான் எப்படி கதை எழுதுவேன் என்று கூடத் தெரியாமல், என் மேல் நம்பிக்கை வைத்து உடனே நாகம்மை நிலையம் திரு. அருணாசலம் அவர்களிடம் என்னைப் பற்றிச் சொல்லி, பேசச் சொன்னார்.

அடுத்தவர் நாகம்மை நிலையம் திரு அருணாசலம் அவர்கள் ஒரே ஒரு கதை மட்டுமே எழுதியிருந்த நிலையில் என்னுடைய கதையை எந்த நிபந்தனையும் இல்லாமல் உடனே பிரசுரித்தார். முதல் புத்தகம் வெளிவந்திராவிட்டால் அடுத்தடுத்து எழுத வேண்டும் என்ற உந்துதல் எனக்குள் இருந்திருக்காது.

இந்த இருவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

நான் எழுத முழு முதற் காரணம் எனக்கொரு லேப் டாப் பரிசளித்த என் கணவர். அவர் அதைக் கொடுத்ததால்தான் விளையாட்டு போலவாவது நான் எழுதக் காரணமாய் அமைந்தது. பின்பு அது என்னுடைய இடைவிடாத பணியாகிவிட்டது என் எண்ணத்தில்.

என்னுடன் எப்பொழுதும் துணை நிற்கும் என் குடும்பத்தினராலும் நான் தடையில்லாமல் தொடர்ந்து எழுதுகிறேன்.

என்னுடைய புத்தகங்களை உடனுக்குடன் வெளியிட்டு நான் தொடர்ந்து எழுத துணை நிற்கும் நாகம்மை நிலையம் திரு அருணாசலம் அவர்களுக்கும், அவருக்கு ஆசானாய் விளங்கும் அவருடைய தாத்தா திரு. அருணோதயம் அருணன், ஐயா அவர்களுக்கும் என்னுடைய நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

you can catch me online at www.mallikamanivannan.com

இப்படிக்கு

திருமதி S.மல்லிகா மணிவண்ணன்

மேலும் மின்நூல்களுக்கு

www.tamilnesan1981.blogspot.in

# வீழ்வேனென்று நினைத்தாயோ

## (பாகம் - 1)



# 1

**யார்க்கும் அஞ்சோம், எதற்கும் அஞ்சோம்;**

**எங்கும் அஞ்சோம், எப்பொழுதும் அஞ்சோம்**

- பாரதி

''இது மகாகவி சுப்ரமண்ய பாரதி சொன்னது. இந்த வரிகள் எனக்கு ரொம்பப் பிடிக்கும். பெண்கள் மிகவும் தைரியமாக இருக்கணும் மனதளவில். அந்தத் தைரியம் மற்றவர்களால் பாராட்டப்பட வேண்டும். அதே தைரியம் இவளுக்கு இது தேவையா என்று மற்றவர்களின் வாயில் இருந்து ஒரு சொல் வர ஏதுவாக இருக்கக்கூடாது.''

''பெண்களுக்கு மட்டுமில்லை இது ஆண்களுக்கும் பொருந்தும். இன்றைய வேகமான உலகில் நம் மன தைரியம் என்பது மிகவும் முக்கியம். அதுவே நமக்கு தீமைகளை எதிர்த்துப் போராட மிகுந்த உத்வேகம் கொடுக்கும்'' என்று சக்தி பேச ஆரம்பித்தாள்.

அவளின் பேச்சில் கட்டுண்ட கல்லூரி மாணவ மாணவிகள் அவளின் பேச்சை ரசித்தனரா இல்லை அவளை ரசித்தனரா அவளுக்கே வெளிச்சம்.

ஒரு கருநீல சில்க் காட்டன் புடவையில் பாந்தமாய் ஜொலித்தாள். தோள் வரை வெட்டப்பட்ட கூந்தல் அவளை விட மென்மையாக இருந்தது. அதை ஒரு பின்னிலோ இல்லை ஹேர் பேண்டிலோ கட்டாமல் ப்ரீயாக விட்டிருந்தாள். பேசும்போது அவள் அந்த கூந்தலை ஸ்டைலாக முகம் மறைக்காமல் தள்ளி விட்டு விட்டுக்கொண்டே பேசியது அவளை இன்னும் அழகாகக் காட்டியது.

கிட்டதட்ட அரைமணி நேர பேச்சு. எந்த சல சலப்பும் இல்லாமல் மாணவ மாணவிகள் அமைதியாக அமர்ந்திருந்தனர்.

மிகைப்படுத்தி சொல்ல விழையவில்லை என்றாலும் சக்தியின் பேச்சு அனைவரையும் கவர்ந்தது உண்மை. மிகவும் நன்றாக கல்லூரி மாணவர்களை கவரும் வகையில் இருந்தது.

அவள் சக்தி. சக்தி பிரியதர்ஷினி இந்த கல்லூரியின் தாளாளராக பொறுப்பேற்க இருக்கிறாள். இந்த விஷயம் அவளுக்கே இரண்டு நாட்களுக்கு முன்பு தான் தெரியும். அப்போது தான் அவளின் தந்தை சொன்னார்.

அவருக்கும் அதற்கு ஒரு இரண்டு நாட்களுக்கு முன்பு தான் தெரியும். அப்போது தான் கார்த்திகேயன் அவரிடமும் சொல்லியிருந்தான்.

கார்த்திகேயன் அவளின் தந்தையின் பீஏ என்றும் சொல்லலாம், அவளின் பீஏ என்றும் சொல்லலாம். அவர்களின் வாசுகி குழுமத்தின் மானேஜிங் டைரக்டர் என்றும் சொல்லலாம், ஏன் அவர்கள் குழுமத்தின் சொல் செயல் என்றும் கூறலாம்.

இப்படி பல சொல்லலாம்களை தாங்கியிருந்த கார்த்திக் இன்றி அவர்கள் அணுவும் அசையாது.

இப்போது சக்தி பேசிக்கொண்டிருக்க ஒரு ஓரமாக நின்று அதை கவனித்து கொண்டிருந்தான். ஆறடி உயரம், சற்று ஆஜானுபாகுவான தோற்றம். மாநிறத்திற்கும் கறுப்பிற்கும் இடைப்பட்ட நிறம். முக வசீகரம் பார்த்தவளை திரும்பப் பார்க்க வைக்கும். ஆனால் சிரித்தால் நன்றாக இருப்பான் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் அவன் சிரித்தே இதுவரை யாரும் பார்த்திருக்க மாட்டார்கள்.

எப்போதும் யோசனையில் இருக்கும் இறுக்கமான முகம். ஆனால் எல்லோரும் எளிதாக அணுகும்படி தான் இருப்பான். ஸ்நேகபாவத்தை அவனிடத்தில் அவ்வளவு எளிதில் யாரும் பார்க்க முடியாது என்றாலும், கருணை பாவத்தை எப்பொழுதும் பார்க்கலாம். யாரும் உதவி என்று வந்தால் அது நியாயமானதாக மனதிற்கு பட்டால் உடனே செய்வான்.

ஒரு சாயம் போன ஜீன்ஸ் பேண்ட்டும், கார்கோ ஷர்ட்டும் போட்டு முரட்டுத்தனமான தோற்றத்தில்

இருந்தான். சக்தி பேசிய ஒவ்வொரு வார்த்தைகளையும் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தான்.

சக்தி தொடர்ந்து பேசிக்கொண்டு இருந்தாள். ''நாங்கள் இந்தக் கல்லூரியின் பொறுப்பை இன்றிலிருந்து ஏற்கிறோம். முதலில் மாணவர்களாகிய உங்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில் இந்த மீட்டிங் ஏற்பாடு செய்யப்பட்டது. உங்களுக்கு இங்கே குறை ஏதுவாகினும் நீங்கள் எங்களை நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம்'' என்று சொல்லி அவள் பேச்சை முடிக்க அங்கே பலத்த கரகோஷம்.

பின்னே இவ்வளவு அழகான மென்மையான தாளாளர். ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் நட்பு ஏற்படுத்திக் கொள்ள ஆர்வம் காட்டும் பெர்சனாலிட்டி சக்தி.

இருபத்தி ஐந்து வயதானவள் என்று சொல்ல முடியாதபடி கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படிக்கும் மாணவியின் தோற்றத்தில் இருந்தாள்.

அதனால் தான் அவள் சுடிதாரில் கிளம்பிய போது. ''இப்படி போனா சின்ன பொண்ணா தெரிவீங்க மேம், சாரியை கட்டிட்டு வாங்க'' என்று கார்த்திக் சொல்ல, இவள் மறுக்க, அவன் சொல்ல, இவள் மறுக்க, முடிவில் கார்த்திக் விடாமல் வற்புறுத்த. பிறகு வேறுவழியில் லாமல் கட்டிக்கொண்டு வந்தாள்.

அவள் பேசி முடித்ததும் பழைய நிர்வாகத்தினர் மற்றும் அந்தப் பொறியியல் கல்லூரியின் முதல்வர் பேசி முடிக்கும் வரை அமைதியாக இருந்த கார்த்திக். உடனேயே, ''போகலாம் மேம்'' என்றான்.

''ரொம்ப அருமையா பேசினீங்க மேடம்'' என்று புகழாரம் சூட்டிய அவர்கள். இன்னும் சக்தியிடம் பேச விருப்பப்பட..

''மேம்க்கு வேற ப்ரோக்ராம் இருக்கு, மே பீ நாளைக்குப் பார்க்கலாம்'' என்று கார்த்திக் சொல்லிவிட. அவனை அதிகம் மறுத்து பேசி பழக்கப்பட்டிராத சக்தி எல்லோரையும் நோக்கி பொதுவாக கை கூப்பி விடை பெற்றாள்.

பின்பு அவள் கல்லூரி பில்டிங்கின் வெளியே வர. கார்த்திக், காரின் கதவை திறந்து விட்டவன், அவள் ஏறியதும் கார் கதவை மூடி அவன் முன்னே ஏற. கருப்பண்ணன் வண்டியை எடுத்தார். அவர்களின் காரை இன்னும் இரண்டு கார்கள் பின் தொடர்ந்தன.

கருப்பண்ணன் தான் சக்தியின் கார் ஓட்டுனர். அவரின் அருகில் இருந்த கார்த்திக் அவனின் கண்களில் இருந்த கறுப்புக் கண்ணாடியை கழட்டினான். ஆமாம், அவனை கண்ணாடி இல்லாமல் வெளியே பார்க்கவே முடியாது.

'பெரிய எம் ஜி ஆர் இவன், இவன் கண்ணாடியை கழட்டவே மாட்டான்' என்று நினைத்தாள் சக்தி.

அதை பலமுறை கார்த்திக்கிடம் சொல்லிக் கூட விட்டாள். ''ஏன் நீ எப்பவும் இந்த கண்ணாடியை போட்டுட்டே இருக்க?''

''உங்க முன்னாடி நான் போடறதில்லையே மேம்.''

''ஆனா மத்த எல்லா இடத்திலையும் போடறையே. ஏன்?''

இதற்கு பதில் சொல்ல மாட்டான்.

பல சமயங்களில் கிண்டல் கூட செய்வாள் சக்தி. ''ஒரு தொப்பி மட்டும் போட்டா நீ கருப்பு எம் ஜி ஆர் தான் போ'' என்று.

இதற்கு மட்டும் கருப்பண்ணன் இடையில் புகுவார், ''என்னம்மா இப்படிச் சொல்லிட்டீங்க. எம் ஜி ஆர் என்ன அழகு! என்னா கலரு! அழகன்மா அவரு!''

''ஏன் கருப்பண்ணா, கார்த்திக் எம் ஜி ஆர் பக்கத்துல நிக்க முடியலைன்னாலும், ஒரு கிலோ மீட்டர் தள்ளி யாவது நிற்பான் இல்லை'' என்பாள் சிரிப்புடனே.

அது தான் சக்தி. மிகவும் சந்தோஷமான கலகலப்பான பெண். அவள் இருக்கும் இடத்தில் எப்போதும் சிரிப்பு சத்தம் கேட்கும்.

ஆனால் கார்த்திக் முகத்தில் எந்த ரியாக்ஷனும் இருக்காது. ''செம அழுத்தம் கார்த்திக் நீ!'' என்பாள்.

அதற்கும் எந்த ரியாக்ஷனும் இருக்காது. அப்போதும் விடாமல் சீண்டுவாள் சக்தி. ''ஏன் கார்த்திக்? யாராவது பொண்ணு உன்கிட்ட கண்ணாடி போட்டா நீ நல்லா இருக்கேன்னு சொன்னாளா என்ன?'' என்று கேட்பாள்.

அதற்கும் நோ பதில். ''செவுடன் காதுல ஊதுன சங்கு தான் போ!'' என்பாள்.

அதற்கும் நோ ரெஸ்பான்ஸ், சலித்து அவளாக நிறுத்திக் கொள்வாள்.

அவர்களின் காரை பின் தொடரும் இரண்டு கார் களையும் பார்த்த சக்தி. 'இவன் வேற ஒருத்தன், எங்க போனாலும் கூட ரெண்டு காருங்க. எதை சொன்னாலும்

இந்த கார்த்திக் கேட்க மாட்டான், சரியான அடியாள் லுக்!' என்று மனதிற்குள் சலித்தாள். அப்படி சட்டென்று கல்லூரியில் இருந்து வந்ததும் சக்திக்குப் பிடிக்க வில்லை.

''எப்படி கார்த்திக் நான் பேசினேன்.''

''மோசமில்லை'' என்றான் கார்த்திக்.

''அதானே இவனாவது நல்லா இருக்குன்னு சொல்றதாவது, பெரிய மேதாவி இவன்'' என்று மனதில் அவனை திட்டிக்கொண்டே. .

''ஏன் கார்த்திக் இன்னும் கொஞ்ச நேரம் இருந்திருக் கலாமே.''

''அவங்க யாரு எப்படின்னு இன்னும் நமக்குச் சரியா தெரியாது. உங்களை பேச விட்டா நீங்க பாட்டுக்குப் பேசிக்கிட்டே இருப்பீங்க. முதல்ல அவங்க நீங்க பழகச் சரியானவங்களான்னு பார்க்கிறேன். அப்புறம் பேசலாம்'' என்றான்.

''எனக்கு ஆளுங்க எப்படி என்னன்னு தெரியற அளவுக்கு கூட மூளையில்லையா?'' என்று கேட்க சக்திக்கு வாய் வரை வார்த்தை வந்தன. இருந்தாலும் கேட்கவில்லை. ஏனென்றால் கேட்டாலும் பதில் வராது. அவன் பேசி முடித்து விட்டால் மறுபடியும் பேச மாட்டான்.

சில சமயம் அவன் நடப்பதை பார்த்தால் சக்திக்கே சந்தேகம் வரும், நாங்கள் முதலாளியா அவன் முத லாளியா என்று.

ஆனால் தந்தை சக்தியின் சொல் கேட்க மாட்டார். அவன் சொல் தான் கேட்பார். ஏனென்றால் கார்த்திக்கின்

உழைப்பு அப்படி. அவன் எது சொன்னாலும் நிறு வனத்தின் வளர்ச்சிக்காக இருக்கும், எது செய்தாலும் நிறுவனத்தின் வளர்ச்சிக்காக இருக்கும். அவன் வந்த பிறகு அவர்களின் நிறுவனம் அவ்வளவு வளர்ச்சி கண் டிருக்கிறது.

வாசுகி குழுமத்தின் முதன்மை தொழில் கிரானைட் ஏற்றுமதி தான். அதன் நிர்வாகியும் சக்தியின் தந்தையும் ஆன வீரமணி கிருஷ்ணகிரி அருகில் உள்ள ஒரு கிரானைட் குவாரியை அரசாங்கத்திடம் இருந்து லீசிற்கு எடுத்து பல வருடங்களாக நடத்தி வருகிறார்.

அது அவருக்கு நல்ல லாபத்தைக் கொடுத்தது என்றாலும் கொள்ளை லாபத்தை அவர் கனவிலும் நினைக்காத லாபத்தைக் கொடுத்தது கார்த்திக் அவரிடம் வந்த பிறகு தான், அவனுக்கு பணத்தை அதீதமாக பெருக்கும் வழி கைவந்த கலையாக இருந்தது.

அதன் புதிய பரிமாணம் தான் அவன் வீரமணியிடம் சொல்லி விற்பனைக்கு இருந்த இந்த பொறியியல் கல்லூரியை வாங்கியது.

இன்றைய காலகட்டத்தில் குறைந்த முதலீட்டில் நிறைய லாபம் அதுவும் சுலபமாக பார்ப்பது கல்வி துறையில் மட்டுமே.

“இப்போ எதுக்கு கார்த்திக் நாம இந்த எஜுகேஷன் பீல்ட்ல இறங்கி இருக்கோம். நம்ம கிரானைட் பிசி னஸ்பே போதாதா” என்றாள் சக்தி.

“நாம சாப்பிடறது மட்டும் தான் போதும்னு நினைக் கனும் மேம்!” என்றான் சுள்ளென்று.

சக்திக்கு முகம் விழுந்துவிட்டது. அவனை முறைத்துப் பார்க்க.

திரும்பி அவளை பார்த்தவன், "பின்ன என்ன மேம்? எவ்வளவு கஷ்டப்பட்டு அவங்களை கன்வின்ஸ் பண்ணி இந்த காலேஜ் டீல் நான் முடிச்சிருக்கேன். நீங்க ஒரே வார்த்தையில தேவையான்னு சொல்றீங்க!"

"எனக்கெப்படி தெரியும் நீ இவ்வளவு கஷ்டப்பட்டு முடிச்சேன்னு."

"தெரியணும்! தெரிஞ்சிக்கணும்! இந்த உலகத்துல ஈஸியா கிடைக்கறது எதுவுமே இல்லை. எல்லாத்துக்கும் கஷ்டப்படணும்! அப்படி கஷ்டமில்லாம கிடைச்ச துன்னா அதுக்கு பின்னாடி ஒரு விலை இருக்கும்" என்றான்.

'விசுவாசி தத்துவத்தை ஆரம்பிச்சிட்டான்' என்று வாய்க்குள் முனகினாள்.

வீரமணி இப்போது ஊரில் இல்லை கிரானைட் ஏற்றுமதி விஷயமாக துபாய் போயிருந்தார். கூட அவரின் மனைவி தெய்வானையும் போயிருந்தார். அவர் வர இன்னும் பத்து நாட்கள் ஆகும். அதுவுமில்லாமல் கார்த்திக் அவரிடம் சொல்லியிருந்தான், "சக்தி மேடம் தான் கரஸ்பாண்டன்ட் ஆகணும்" என்று. அதனால் தான் சக்தி தனியாக வந்து பொறுப்பேற்றாள்.

இப்போது அவர்கள் சென்று கொண்டிருந்தது கிரா னைட் உற்பத்தியாளர்கள் சங்க மீட்டிங்கிற்கு. சக்திக்கு அங்கே போகவே இஷ்டமில்லை. ஆனால் சொன்னால் அவளின் அப்பா கேட்க மாட்டார்.

அப்போது சரியாக அவளின் தந்தை போனில் அழைக்கவும் தன் மறுப்பை தெரிவித்தாள்.

"நீ போகணும் சக்தி! எனக்குப் பின்னாடி இதை எல்லாம் கட்டி ஆளப்போறது நீதான்! நீ எல்லாத்தையும் கத்துக் கணும்! உனக்குக் கல்யாணம் பண்ணி எவனோ ஒருத்தன் மாப்பிள்ளைன்னு வந்து இந்த சொத்தை ஆளுரதுல எனக்கு விருப்பமில்லை. மாப்பிள்ளை வந்தா அவன் சொத்தை அவன் கவனிக்கட்டும். நம்ம தொழிலை நீதான் பார்க்கணும்" என்றார்.

"அப்பா ப்ளீஸ் பா! அங்க எல்லாம் ஜென்ட்ஸா இருப் பாங்க! எனக்கு தனியா இருக்க ஒரு மாதிரி இருக்கும்."

"அப்படி எல்லாம் சொல்லக் கூடாது சக்தி. நீ ஆளப் பிறந்தவமா தைரியமா இருக்கணும்! அதுவுமில்லாம நான் என்ன தனியாவா உன்னை போகச் சொல்றேன்! கூட கார்த்திக் இருக்கான், அவன் உன்கூட இருக்கும் போது உனக்கென்ன பயம். எல்லாம் அவன் பார்த்துக்கு வான், அதை விடு! எப்படி பேசின நீ?"

"அதை நான் எப்படிச் சொல்ல முடியும்! உங்க விசு வாசி இருக்கான் சொல்லுவான்."

"சொல்லு சக்தி! நான் சீரியஸா கேட்கறேன்! தைரியமா கூட்டத்துல பேசணும் நீ. நான் உனக்கு வரப் போற எலெக்ஷன்ல எம் பீ சீட்டு கேட்கலாம்னு இருக் கேன்மா" என்றார்.

"அப்பா!" என்று அதிர்ந்தாள் சக்தி. அவளின் தந்தை விளையாட்டுக்காக எதுவும் பேச மாட்டார் என்று தெரியும். ஆனால் இது சக்தி எதிர்பாராதது.

அவளின், ''அப்பா!!!'' என்று அதிர்ந்த அழைப்பில் திரும்பி பார்த்தான் கார்த்திக்.

திரும்ப அவன் அப்பாவிடம் அவள் பேசாமல் போனை கார்த்திக்கிடம் கொடுக்க, ''சொல்லுங்க ஐயா'' என்றான் கார்த்திக்.

''என்ன கார்த்திக்? எப்படி பேசினா என் பொண்ணு?'' என்றார்.

''மேடம் ரொம்ப நல்லா பேசினாங்க!'' என்றான் உண்மையாக கார்த்திக்.

''அதுதானே எனக்கு வேணும்'' என்று சிரித்தவர். ''எப்படி வர்ற எலெக்ஷன்ல சீட் கேட்டுறலாமா'' என்றார்.

இது கார்த்திக்கிற்கும் புது செய்தியே. திரும்பி சக்தி யின் முகத்தைப் பார்க்க அவளின் முகத்தில் திருப்தி யின்மையும் கோபமும் நன்றாகத் தெரிந்தது.

''உங்க விருப்பம் ஐயா!'' என்றான் தொலைபேசியில்.

அவர் கேட்பதற்கு தான் இந்த பதில் சொல்கிறான் என்று புரிந்த சக்தி அவனை, ''நல்லா ஜால்ரா அடிக்கற நீ!'' என்பது போல முறைத்துப் பார்த்தாள்.

சிறிது நேரம் தொழில் விவரங்களை வீரமணியிடம் சொல்லி கார்த்திக் போனை வைக்க. ''கருப்பண்ணா வண்டியை ஓரம் கட்டுங்க'' என்றாள் சக்தி.

அப்போதும் கருப்பண்ணன் வண்டியை ஓரம் கட்டாது கார்த்திக்கைப் பார்க்க. அவனின் சிறு தலை யசைவில் வண்டியை ஓரம் கட்டினார்.

அது சக்தியின் கண்களுக்குத் தப்பவில்லை. ''நீங்க கொஞ்ச நேரம் வெளிய இருங்க!'' என்றாள் கருப்பண்ணனை பார்த்து.

''அப்படியே இறங்குங்க! இவனை பார்த்து பெர்மிஷன் கேட்டீங்க.'' என்று சக்தி வார்த்தைகளை கடித்து துப்ப, அவள் மிகுந்த கோபமாக இருக்கிறாள் என்று கார்த்திக்கிற்கும் புரிந்தது, கருப்பண்ணனிற்கும் புரிந்தது.

ஜாக்கிரதையாக கார்த்திக்கின் முகம் பார்க்காமல் இறங்கினார்.

அவர் இறங்கியதும் அவனைப் பார்த்தவள், ''எங்கப்பா சொன்னதைக் கேட்டியா நீ!'' என்றாள்.

''கேட்டேன்!'' என்பது போல அவன் தலையாட்ட.

''உனக்கு இது முன்னமே தெரியுமா?''

''தெரியாது!'' என்றான் ஒற்றை வார்த்தையில்.

''எங்கப்பா யோசிக்காமையோ உன் கிட்ட கேட்காமையோ எந்த முடிவும் எடுக்க மாட்டார், எனக்குத் தெரியும்!''

''இல்லை! எனக்கு நிஜமாவே தெரியாது. அவர் எலெக்ஷன்ல நிக்கணும்னு அவருக்கு ஒரு ஆசையிருக்குன்னு எனக்குத் தெரியும். உங்களை நிறுத்த முடிவெடுப்பார்ன்னு எனக்குத் தெரியாது'' என்றான் தன் னிலை விளக்கமாக.

''நீ என்ன பண்ணுவியோ? ஏது பண்ணுவியோ? எனக்குத் தெரியாது! நான் எந்த எலெக்ஷன்லையும் நிக்க மாட்டேன்'' என்றாள்.

கார்த்திக் அவளை மௌனமாகப் பார்க்க. ''ஒரு பேச்சுக்கு சொல்றேன்னு நினைக்காத! கண்டிப்பா நான்

நிக்க மாட்டேன்! நான் சொன்னா அப்பா கேட்க மாட்டார்! நீ எப்படியாவது இதை நிறைவேத்துற!'' என்றாள கட்டளையிடுவது போல.

கார்த்திக் அதற்கும் மௌனமாக இருக்க. ''மீறி நடந்தது, நான் என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது!'' என்றாள் மிரட்டலாக.

பொதுவாக சக்திக்கு அதிகம் கோபம் வராது. அதுவும் சக்தி இப்படியெல்லாம் கார்த்திக்கை எதிர்த்துப் பேச மாட்டாள். எப்பொழுதாவது அபூர்வமாக தான் தன் கோபத்தைக் காட்டுவாள், பேசவும் செய்வாள். பேச ஆரம்பித்தால் நிறுத்த மாட்டாள்.

அவள் மிகவும் டென்சனில் இருக்கிறாள் என்று புரிந்த கார்த்திக். ''எலெக்ஷன்ல நிக்கறது அவ்வளவு ஈஸி யில்லை. முதல்ல கட்சில சீட் குடுக்க வேண்டாமா? அரசியல்ல பழம் தின்னு கொட்ட போட்டவன் நிறைய பேர் இருக்கான். உங்களுக்கு முதல்ல சீட் கிடைக்காது! அதுவுமில்லாம எலெக்ஷன் வர்றதுக்கு இன்னும் ஒன்னரை வருஷம் இருக்கு. இப்போ எதுக்கு டென்சன், அப்போ பார்த்துக்கலாம்'' என்றான்.

அவனின் சொல் கேட்ட பின் தான் சிறிது சமா தானமானவள், ''நம்பலாமா?'' என்றாள்.

''முயற்சி செய்யறேன்! அதுக்கு மேல வாக்குறுதி கொடுக்க முடியாது.''

''சரி! வண்டியை எடு!''

கருப்பண்ணனை கார்த்திக் அழைக்க போக. ''நீ எடு!'' என்றாள்.

''ஏன்?''

''நான் சொல்றதை கேட்காம சும்மா சும்மா உன்னையே பார்த்துட்டு இருக்காங்க! இன்னைக்கு நடந்து வீடு வந்து சேரட்டும்! வண்டியை எடு!'' என்றாள்.

''பாவம் அவர். ஊருக்குள்ள போக இன்னும் அஞ்சு கிலோமீட்டர் இருக்கு. நடுவழி. பஸ் நிறுத்துவானோ மாட்டானோ?''

''அவ்வளவு கவலையா இருந்தா. நீயும் அவர்கூட இறங்கி நடந்து வா! நான் போயிக்கறேன்!''

''விளையாடாதீங்க மேம்! நாம இப்போ மீட்டிங் போகணும்!''

''அப்போ பேசாம வண்டியை எடு!''

கார்த்திக் இயலாமையில் அவளைப் பார்க்கவும்.

''ஏன் நீ வண்டி ஓட்டினா உனக்குக் கௌரவக் குறைச்சலோ'' என்று சக்தி கேட்க. பதில் பேசாமல் மறுபுறம் வந்த அமர்ந்து காரை எடுக்க போனவன், சட்டென்று திரும்பி ''முடிக்கு ஒரு ரப்பர் பேண்ட் போடுங்க'' என்றான்.

அவள் முறைக்கவும். 'கோவப்படாதீங்க' என்று பொறுமையாகவே சொன்னான். ''இடம் பொருள் ஏவல்ன்னு ஒண்ணு இருக்கு. நீங்க இதுவே ஒரு பெரிய சிட்டில இருந்து அங்க ஒரு மீட்டிங் போனீங்கன்னா பொடவை கட்டுங்க பொட்டு வைங்க தலையை கட்டுங்கன்னு சொல்ல மாட்டேன்.''

''இங்க நீங்க இப்படி ஸ்டைலா போனா எல்லோரும் ஆர்வமா பார்ப்பாங்க, எனக்கு தான் வீணா டென்சன்

ஆகும். அப்புறம் எவனாவது ஏதாவது கமென்ட் அடிச் சான்னு வெச்சிகோங்க கட்டாயம் என்கிட்ட அடி வாங்குவான், பரவாயில்லைனா இப்படியே வாங்க'' என்றான்.

திரும்ப அவனிடம் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் அவன் சொன்னதை செய்தாள். அதன் பிறகே வண் டியை எடுத்தான்.

அபூர்வமாக வரும் அவளின் கோபம் தெரிந்த கருப் பண்ணனும் வீட்டைப் பார்த்து நடையை எட்டிப் போட்டார்.

அவருக்கும் தெரியும் சக்திக்கு அவ்வளவாக கோபம் வராது. வந்தால் கடவுளான அந்த சக்தியம்மனை கூட மலையிறக்கி விடலாம், இவளை முடியாது.

அவ்வளவு விரைவாக கார்த்திக் காரை எடுத்தும் சக்தியின் கவனத்தை கவராமல் ஒரு ஆயிரம் ரூபாய் நோட்டை கீழே போட்டான் கருப்பண்ணன் எடுத்துக் கொள்வதற்காக.

இவர்கள் கார் நின்றவுடன் நின்ற இரண்டு கார்களும் இவர்கள் மறுபடியும் செல்லவும் இவர்களை பின் தொடர்ந்தன. கார்த்திக்கின் கண்ணசைவு இல்லாமல் அந்த காரில் இருப்பவர்கள் எப்போதும் கீழிறங்க மாட்டார்கள்.

ஒரு புன்சிரிப்போடு வந்து அந்த பணத்தை எடுத்தார் கருப்பண்ணன், ''நம்ம தம்பி! நம்ம தம்பி தான்!'' என்று நினைத்தபடியே.

மீட்டிங் நடக்கும் இடம் வந்ததும் காரை நிறுத்திய கார்த்திக், அவன் இறங்கி வந்து சக்தியின் புறம் இருந்த

காரின் கதவைத் திறந்து விட அவள் இறங்கினாள். எப்போதும் அந்த வேலையை கார்த்திக் சலிக்காமல் செய்வான். அவன் கூட இருக்கும் போது அவள் இறங்குவதற்கும் ஏறுவதற்கும் அவன் தான் கார்க் கதவைத் திறந்து விடுவான். வீரமணி கூட அவராக தான் இறங்குவார் ஏறுவார். அவருக்குக் கூட அந்த வேலையை கார்த்திக் செய்ய மாட்டான்.

அவள் இறங்கியதுமே பின்னே வந்த காரை பார்த் தான். அவன் பார்க்கவும் அதில் இருந்தவன் அவசரமாக இறங்க, அவனிடம் காரின் சாவியை தூக்கி போட்டான். அவன் இவர்களின் காரை பார்க் செய்ய கிளம்ப. இவன் சக்தியை முன்னே விட்டு சற்று இடைவெளி விட்டு தொடர்ந்தான்.

அங்கே மீட்டிங் நடக்கும் ஹாலை நோக்கி போனவன், அங்கே இருந்த சிவாவை பார்த்து, "ஹாய்!" என்று ஆர்ப்பாட்டமாக கையை அசைக்க போனவன், கூட கார்த்திக் வரவும், "ஹாய்" என்று உதட்டை மட்டும் அசைத்தாள். சிவாவும் இவளுக்காக தான் காத்திருந்தான்.

சிவாவை பார்த்த கார்த்திக், "அவனுக்கு எப்படி நீங்க வர்றது தெரியும், வெளில வெயிட் பண்றான். நீங்க போன் பண்ணுனீங்களா" என்று கார்த்திக் கேட்க.

"நான் போன் பண்ணலை, மெசேஜ் தான் பண்ணினேன்" என்று அவளாகவே நடந்ததை உளறினாள்.

அதற்குள், "ஹாய் ஏஞ்சல். ஏன் லேட்" என்றபடியே வந்தான் சிவா. சக்தியை முறைத்துப் பார்த்தான் கார்த்திக்.



# 2

**சொல்ல வல்லாயோ?-கிளியே!**

**சொல்லநீ வல்லாயோ?-**

- பாரதி

சக்தியின் அருகில் வந்த சிவா அவளைப் பார்த்து, "போகலாமா" என்று கேட்டான்.

சக்திக்கு கார்த்திக்கின் முறைப்பே வேண்டிய செய்தியை சொல்ல. "நீங்க முன்ன போங்க சிவா, நாங்க வர்றோம்" என்றாள்.

"ஏன்? உங்களுக்காக தான் வெயிட் பண்ணிட்டு இருக்கேன், வாங்க போகலாம்!" என்றான்.

"இல்லை, ஒரு கால் வரும். அட்டெண்ட் பண்ணிட்டு வர்றோம். நீங்க போங்க! இது கொஞ்சம் கான்ஃபிடன் ஷியல்" என்று கார்த்திக் இடை புகுந்து பதிலளித்தான்.

அவனை மீறி சக்தி வரமாட்டாள் என்று சிவாவிற்கு தெரியும். அதனால் வேறு வழியில்லாமல் சிவா மீட்டிங் ஹால் உள்ளே சென்றான்.

"எதுக்கு நீங்க வர்றீங்கன்னு அவன் கிட்ட சொன் னீங்க?"

"நம்ம தனியா இருக்கோமே, அவரும் தானே இங்க மீட்டிங் வருவார்ன்னு நினைச்சு தான் அவர்கிட்ட சொன்னேன்."

சிவகுமாரும் அவர்களைப் போல அந்தப் பக்கம் ஒரு கிரானைட் குவாரி எடுத்து நடத்தும் ஓனரின் மகன். இவர்கள் அளவிற்கு இல்லை என்றாலும் அவர்களும் ஓரளவு வசதியானவர்கள் தான்.

இப்படி பிசினெஸ் மீட்டிங், அங்கே... இங்கே... என்று பார்த்ததில் தற்போது சக்திக்கு சிவா நல்ல பழக்கம். சிவாவும் பழக இனிமையானவன், நல்ல மனிதன். அதனால் எப்போதும் சக்தி அவனிடம் நன்றாக பழகு வாள்.

இப்போது அவனும் மீட்டிங் வந்திருப்பானே என்று ஒரு எஸ் எம் எஸ் அனுப்பியிருந்தாள் தானும் வருவதாக. அவன் வெளியே நிற்பான் என்று எதிர்பார்க்கவில்லை.

சக்தி, "இப்போ அதனால என்ன?" என்று பதில் கேள்வி கேட்க.

"என்னவா? அவன் பாட்டுக்கு வெளியே நின்னு வாங்க போகலாம். உங்களுக்கு தான் வெயிட் பண்றேன்னு சொல்றான்" என்றான் கடுப்பாக.

"ஏன் போனா என்ன?" என்றாள் சக்தி மறுபடியும்.

"போனா என்னவோ? அவனோட ஜோடி போட்டுட்டு போவீங்களா. நமக்கு மரியாதை இல்லை. பார்க்கிறவங்க என்ன நினைப்பாங்க" என்று கோபமாகக் கேட்க.

அவன் ஜோடி, அது, இது என்று சொன்னதும் எரிச்சலான சக்தி. "நீயேன் கார்த்திக் எக்ஸ்ட்ரீம்க்கு திங்க் பண்ற! அவங்க ஜஸ்ட் என் பிரண்ட். உன்கூட கூட தான் போறேன்! ஜோடி போடறேன்னா சொல்வாங்க!" என்றாள்.

இதைக் கேட்ட கார்த்திக்கிற்கு கட்டுக்கடங்காமல் கோபம் வந்தது, ''என்ன பேசறீங்க நீங்க மேம்! நானும் அவனும் ஒண்ணா! நான் உங்க கிட்ட வேலை பார்க் கிறேன்! உங்ககூட மட்டுமில்லை, உங்க அப்பாகூட கூட நான் தான் வருவேன்.''

''அதுவுமில்லாம நான் இன்னைக்கு ஒண்ணும் உங்கிட்ட வேலைக்கு வரலை! சின்ன வயசுல உங்க அப்பாகிட்ட வேலைக்கு வந்தேன்! இங்க என்னை தெரியாதவங்க யாரும் கிடையாது. என்னை இந்த மாதிரி விஷயத்துல தப்பா பேச ஆளே கிடையாது.''

கார்த்திக்கை கோபப்படுத்திவிட்டோம் என்று புரிந்த சக்தி. ''ஷ்! கோபப்படாதா, நான் அந்த மீனிங்கல சொல்லலை'' என்று தணிந்தாள்.

''என்ன பெரிய பொடலங்கா மீனிங்! அவன் பாட்டுக்கு ஏஞ்சல்ன்னு கூப்பிட்டிட்டு வர்றான்! யாராவது கேட்டா என்ன நினைப்பாங்க?''

''அவர் தப்பான ஆள் கிடையாது! அவர் ஜஸ்ட் என் பிரண்ட்.''

''அவன் சரி தப்புன்னு நான் சொல்ல வரலை! அவன் நல்லவனாகவே இருக்கட்டும்! இப்படி சத்தமா ஏஞ்சல்ன்னு கூப்பிட்டிட்டு வர்றானே. நீங்க இன்னும் கல்யாணமாகாத பொண்ணு, யாராவது கேட்டா உங்களைப் பத்தி என்ன நினைப்பாங்க?''

''நாளைக்கு கல்யாணம் ஆன பிறகு இவன் இப்படி லூசு மாதிரி உங்க புருஷன் முன்னாடி ஏஞ்சல்ன்னு கூப்பிட்டு வெச்சா. உங்க கல்யாண வாழ்க்கை என்ன ஆகும்?''

''அப்படி என் மேல நம்பிக்கை இல்லாதவன் எனக்கு புருஷனா வரவேண்டாம்'' என்றாள் பட்டென்று.

''சும்மா சொல்ல வர்றதை புரிஞ்சிக்காம பேசக் கூடாது, இது நம்பிக்கையோட பேச்சு கிடையாது, உரிமையோட பேச்சு!'' என்று அவன் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே வேறு ஒரு தொழில் அதிபர் வர.

''என்ன கார்த்திக் இங்க நிக்கறீங்க? உன் முதலாளி வரலை.''

''இல்லைங்க சார், அவர் துபாய் போயிருக்கார், மேடம் தான் மீட்டிங் அட்டெண்ட் பண்றாங்க'' என்றான்.

''அடடே வாம்மா வா, போகலாம்!'' என்றார்.

''போங்க!'' என்று அவளைக் கூட்டிக்கொண்டு அவனும் நடந்தான்.

''உன் முதலாளி குடுத்து வெச்சவன்பா! உன்னை மாதிரி ஒரு ஆள் கூட இருக்கவும் தைரியமா தொழிலை விட்டுட்டு வருஷத்துல ஆறு மாசம் தொழிலை பார்க்கிறேன்னு டூர் போயிடறான்'' என்று அவர் பெருமூச்சு விட. அதற்குள் அவருடன் யாரோ பேச இவர்கள் முன் சென்றனர்.

''இவரோட மட்டும் நான் போகலாமா?'' என்றாள் சக்தி.

''போகலாம், எனக்கு தெரியும்! நீங்க யாரோட போகலாம் போகக்கூடாதுன்னு'' என்றான்.

மேலும் வார்த்தை வளர்க்காமல் சக்தி முன்னே நடக்க. சற்று இடைவெளி விட்டு பின் தொடர்ந்தான்.

அங்கே சென்றவள் எங்கே அமர்வது என்பது போல பார்வையை சுழற்ற, ''அங்கே போய் சிவா பக்கத்துல உட்காருங்க'' என்றான்.

''இப்போ ஜோடி சேர்க்க மாட்டாங்களா?''

''மாட்டாங்க உள்ள வரும்போது அது எல்லார் கண்ணையும் உறுத்தும்னு தான் சொன்னேன். அதுவுமில்லாம நானும் கூட இருக்கேன் வாங்க!'' என்று அழைத்து போனவன் அவளை சிவாவின் அருகில் அமரவைத்து அதே வரிசையில் அவளுக்கு சமமாய் அமராமல் பின்புறம் அமர்ந்தான்.

''என்ன ஆச்சு? உங்க பாடிகார்ட் ரொம்ப கோபமா இருக்காங்க போல!'' என்றான் சிவா.

அவன் பேசியது என்னவோ மெதுவாக தான், ஆனால் நம் கார்த்திக்கிற்கு பாம்பு காது நன்றாகக் கேட்டது.

''இப்போதான் சமாளிச்சிட்டு வந்திருக்கேன், விடுங்க!''

''ஏன் என்ன கோபம்?''

''நீங்க ஏஞ்சல்ன்னு கூப்பிட்டது ரொம்ப கோபம்!''

''சாரி! அது தானா வந்துடுச்சு, நிஜமாவே நீ ஒரு ஏஞ்சல் மாதிரி இருக்கீங்கள்ல, அதான்!'' என்றான்.

இப்போது சக்தி முகத்தில் சற்று அதிருப்தியை காட்ட. ''ஹேய், ஐ அம் ரியல்லி சாரி! இட்ஸ் வாஸ் ஜஸ்ட் எ காம்ப்ளிமென்ட்! நத்திங் மோர் தேன் தட்!'' என்றான்.

''பதிலுக்கு நானும் ஒரு காம்ப்ளிமென்ட் குடுப்பேன் பரவாயில்லையா!'' என்றாள் சக்தி.

''ஓஹ்! யூ ஆர் மோஸ்ட் வெல்கம்!'' என்று சிவா சொல்ல.

''நீங்க என்னை ஏஞ்சல்ன்னு கூப்பிட்டா. நான் உங்களை அண்ணான்னு கூப்பிடுவேன்!'' என்றாள்.

இப்போது சிவாவின் முகத்தில் நல்ல புன்னகை ஒன்று விரிந்தது. எதற்கும் சிரிக்காத கார்த்திக்கின் முகம் கூட சக்தி பிரச்சனை வராமல் பிரச்சனையை தீர்க்கும் முறையை பார்த்து முகம் இளக்கம் காட்டியது.

''வேண்டாம்! வேண்டாம்!'' என்று சிநேகமாக சொன்ன சிவா.

''இவ்வளவு அழகான பொண்ணு, என்னை அண்ணான்னு சொல்றதா!'' என்று போலியாக அதிர்ச்சி காட்டியவன்.

''யாரது ஏஞ்செல் இங்க? இங்க யாருமே ஏஞ்சல் இல்லையே!'' என்றான் சுற்றும் முற்றும் விளையாட்டு போல பார்த்து.

''ம்! அது!'' என்றாள் சக்தி.

இன்னும் மீட்டிங் தொடங்காததால் அங்காங்கே சல சல வென்று பேசிக்கொண்டு இருந்தனர்.

''இரு, உனக்கு ஒண்ணு காட்டறேன்!'' என்ற சிவா அவனின் மொபைலின் போட்டோ கேலரியை திறந்தான்.

அதில் ஒரு பெண்ணின் புகைப்படத்தைக் காட்டினான், ''பார்த்துக்கோங்க சக்தி! இவ தான் என் காதலி!'' என்றான்.

ஆவலாக அதை வாங்கிய சக்தி ''அது என்ன காதலி? நான் கல்யாணம் பண்ணிக்க போற பொண்ணுன்னு சொல்லுங்க!'' என்றாள்.

''இன்னும் கல்யாணப் பேச்சை ஆரம்பிக்கவே இல்லையே! இப்போதைக்கு அவ என் காதலி மட்டும் தான்!''

''அவகிட்டயாவது பிடிச்சிருக்குன்னு சொன்னீங்களா இல்லையா?'' என்றாள்.

''இன்னும் இல்லை'' என்றான் பாவம் போல.

''அப்போ எதுக்கு போட்டோ வெச்சிருக்கீங்க!'' என்று அவனிடம் சண்டைக்கு போனாள் சக்தி.

சிவா அயர்ந்து பார்க்க ''அந்த பொண்ணு உங்களை பிடிச்சிருக்குன்னு சொல்றதுக்கு முன்னாடியே போட்டோ வெச்சிருக்கிறது ரொம்ப தப்பு! டெலிட் பண்ணுங்க!'' என்றாள் சீரியஸாக.

''இதை அவ காலேஜ் போகும் போது ரொம்ப கஷ்டப்பட்டு எடுத்தேன் சக்தி!'' என்றான்.

''அப்போ தெரியாம எடுத்திருக்கீங்க'' என்றவள்.

''முதல்ல அதை டெலிட் பண்ணுங்க'' என்றாள் இன்னும் சீரியஸாக.

சிவா மனமேயில்லாமல் பார்க்கவும். ''எனக்கு இந்த காதல், அது, இது, இதுலயெல்லாம் நம்பிக்கை இல்லை'' என்றவள்.

''இருந்தாலும் உங்களுக்காக சொல்றேன், அப்படி நீங்க இந்த பொண்ணை அவ்வளவு இஷ்டமா காத லிச்சீங்கன்னா அவ முகமே உங்க மனசுல இருக்குமே! போட்டோ எதுக்கு? நிச்சயம் உங்க காதல் கை கூட. ணும்ங்கறது என்னோட விருப்பம்! ஒரு வேளை நூத்துல

ஒரு பங்கா இது நிறைவேறாம போனிச்சின்னா, அந்த பொண்ணுக்கு எவ்வளவு சங்கடம்.''

''உன்னைத் தவிர யாருக்கும் தெரியாது சக்தி!'' என்று தன்னிலை விளக்கம் கொடுத்தான் சிவா.

''தெரியும் தெரியலைன்றது வேற, சீக்கிரம் சொல்லி சம்மதம் வாங்கி போட்டோ வெச்சிக்கோங்க, இப்போ டெலிட் பண்ணுங்க!'' என்றாள்.

அதுதான் சக்தி. அவள் மனதிற்கு சரியில்லையென்று தோன்றினாள் அதை சரி செய்வதற்காக விடாமல் போராடுவாள்.

இவர்களின் பேச்சை எல்லாம் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்த கார்த்திக். சக்தியின் புறம் கையை நீட்ட அவள் சிவாவின் மொபைலை கொடுத்தாள். கார்த்திக் அந்த போட்டோவை பார்த்தான். ஆனால் அவன் என்ன நினைக்கிறான் என்று முகத்தை பார்த்து ஒன்றும் தெரியவில்லை. அவன் தான் கறுப்பு கண்ணாடி கண்களில் போட்டு இருக்கிறானே.

கார்த்திக் சக்தியிடம் அந்த மொபைலை திரும்ப நீட்டி யவன். ''உங்க பிரண்ட இதை டெலிட் பண்ண சொல்லுங்க'' என்றான்.

மறைமுகமாக சக்தியின் நண்பனாக சிவாவை ஏற்றுக் கொண்டான் என்ற செய்தி அதில் ஒளிந்து இருந்தது.

சிவா அதையெல்லாம் கவனிக்கும் மனநிலையில் இல்லை, சக்தி சொல்வது அவனுக்கும் சரியென்றே பட்டதால் அவன் சோகமாக அதை டெலிட் செய்தான்.

புன்னகைத்த சக்தி. ''டோன்ட் வொர்ரி! பொண் ணுக்கு மட்டும் உங்களை பிடிச்சிருக்கட்டும், என்ன தடை வந்தாலும் அதையெல்லாம் தாண்டி கல் யாணத்தை நல்ல படியா முடிச்சிடலாம்.''

''நான் என்ன செய்வேன்னு நினைக்காதீங்க. உங்களுக்கு எந்த ஹெல்ப் வேணும்னாலும் கார்த்திக் செய்வான். இட்ஸ் மை வொர்ட்ஸ். எங்க கார்த்திக்குனால முடியாதது எதுவுமே இல்லை'' என்றாள் ஒரு நல்ல தோழியாக.

''மேம்!'' என்று கார்த்திக் அதட்ட.

''நீ செய்யற கார்த்திக்'' என்றாள்.

சிவா முன்னிலையில எதுவும் பேச விரும்பாமல், கார்த்திக் அவளை பயங்கரமாக முறைத்தான். ஆனால் கறுப்பு கண்ணாடி போட்டிருந்ததால் சக்திக்கோ சிவாவிற்கோ அது தெரியவில்லை.

சிவா சக்தியிடம், ''சொன்னதுக்கு தேங்க்ஸ் சக்தி! அதுக்கு அவசியமிருக்காதுன்னு நினைக்கிறேன்! இருந்தா கட்டாயம் உதவி கேட்கிறேன்'' என்றான்.

அதற்குள் மீட்டிங் ஆரம்பிக்க போக. ''உங்க முதலாளி வரலையா!'' என்று கார்த்திக்கிடம் வந்து கேட்டனர்.

''அவர் வரலை!'' என்று அவன் சொன்னதும்.

''அப்போ நம்ம பொண்ணை மேடையில உட்கார வைக்கலாமா'' என்று அவர்கள் கேட்க.

சக்தியை ஒரு பார்வை பார்த்தான் கார்த்திக். அதில் வேண்டாம் என்ற செய்தி இருக்கவும். ''இல்லை, வேண்டாம்!'' என்று வந்தவரிடம் சொன்னான்.

''நீங்க வர்றீங்களா!'' என்று அவர் கேட்க.

''இல்லை வேண்டாம்!'' என்றான். எல்லோரும் பெரிய ஆட்கள் தான் என்றாலும் கார்த்திக்கிடம் எல்லோருக்கும் ஒரு பயம் உண்டு. வீரமணியை பார்த்து கூட அவர் களுக்கு அந்த பயமில்லை என்பது தான் உண்மை.

அதன் பிறகே அவர்கள் மீட்டிங்கை ஆரம்பித்தனர்.

ஒரு மணி நேரத்திற்கும் மேல் நீடித்தது மீட்டிங் அதில் கடைசியாகப் பேச வந்தவர், ''கிரானைட் வெட்டி எடுப்பதில் அரசாங்கத்தின் விதிமுறைகளை சொன்னவர். முடிந்த வரையில் நாம் அதை பின்பற்ற வேண்டும். அதை மீறி செயல்படுவது என்பது சரியானதல்ல.''

''இங்கே பலரும் அந்த விதிமுறைகளை மீறி செயல் பட்டுக் கொண்டிருந்தாலும். மிக மிக அதிகமாக மீறி. தொழில் செய்கிற அனைவருக்கும் ஓரிருவர் தொல்லை கொடுக்கின்றனர். நாம் அதை வன்மையாக கண்டிக்க வேண்டும், இப்படி செய்ய வேண்டாம் என்று சொல்ல வேண்டும்.''

''மீறி செய்தால் ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று கடுமையாகப் பேசினார்.

சக்தி யாரை இவர் இப்படி கடுமையாகத் தாக்கிப் பேசுகிறார் என்று தெரிந்து கொள்ள வேண்டி சிவா விடம், ''அவர் யாரை பத்தி சொல்லிட்டு இருக்கார்?'' என்று கேட்டாள்.

சிவா அதற்கு பதில் சொல்லும் முன்னே கார்த்திக், ''அவரை கேட்டா? அவருக்கு என்ன தெரியும்'' என் றான்.

"அதில் நீ எதுவும் சொல்லாதே" என்ற முறைமுக எச்சரிக்கை இருந்தது. கார்த்திக் அப்படி எதுவும் குறிப்பு கொடுத்து இருக்காவிட்டாலும் சிவா எதுவும் சொல்லி யிருக்க மாட்டான். ஏனென்றால் அங்கே மீட்டிங்கில் விதிகளை மிக அதிகம் மீறுகிறார்கள் என்று அவர்கள் பேசிக்கொண்டு இருந்தது சக்தியினுடைய வாசுகி குழுமத்தைப் பற்றி தான்.

"எனக்குத் தெரியலை" என்றான் சிவா.

சக்தி கார்த்திக்கைத் திரும்பி பார்த்தவள், அவனை நோக்கித் தலையசைக்க. "என்ன?" என்பது போல கார்த்திக் அவளருகில் தலையை குனிய.

"உன் காதெல்லாம் இங்கயே வெச்சிருப்பியா! உன் வேலையைப் பார்!" என்று வார்த்தைகளை அவனுக்கு மட்டும் கேட்குமாறு கடித்து துப்பினாள்.

தலை நிமிர்ந்து உட்கார்ந்தவன், பதில் எதுவும் சொல்லாமல் அசால்டாக தோளை மட்டும் குலுக்கி னான்.

அதன் பிறகும் மைக்கை பிடித்தவர் முறைகேடாக கிரானைட் வெட்டுவதை பற்றியே பேசிக்கொண்டிருக்க.

அவனுக்கு கோபம் வந்துவிட்டதோ என்று அங் கங்கே ஓரிருவர் கார்த்திக்கை வேறு திரும்ப பார்த்தனர். அவனின் கறுப்புக்கண்ணாடி வெளி உலகத்துக்கு எதையும் காட்டவில்லை.

ஒரு வழியாக மீட்டிங் முடிய. அங்கேயே பஃபே முறையில் மதிய விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சக்தி, ''நாம வீட்டுக்கே போயிடலாமே!'' என்றாள் கார்த்திக்கை பார்த்து.

''இல்லை சாப்பிட்டிட்டு போகலாம்'' என்றான் அவனுக்கு ஒரு வேலை இருந்ததால்.

சக்தி தயங்க. ''அதான் உங்க பிரண்ட் உங்களுக்கு கம்பெனி குடுப்பாறே'' என்றான் சமாதானமாக.

''கூட உள்ள வந்தா தப்பு. சேர்ந்து சாப்பிட்டா தப்பு இல்லையா'' என்றாள்.

''உள்ள என்டர் ஆகும்போது எல்லோரும் பார்ப்பாங்க! இப்பவும் பார்ப்பாங்க! அதுக்கும் இதுக்கும் வித்தியாசம் இருக்கு!'' என்றான்.

''என்னவோ போ! என்னை டார்ச்சர் பண்ற நீ!'' என்றாள்.

''சாப்பிடுங்க மேம்!'' என்றவன். அவளை ஓரமாக நிற்க வைத்து அவளுக்கு வேண்டியதை அவனே வாங்கி வந்து கொடுத்தான்.

சிவாவிற்கு சக்தியின் அருகில் போவதா வேண்டாமா என்று குழப்பம். உண்மையில் அவனுக்கு கார்த்திக்கை பார்த்து சற்று பயம் அதனால் தயங்கினான்.

அதிசயமாக அவனருகில் வந்த கார்த்திக், ''எங்க மேம்மோட கொஞ்ச நேரம் இருங்களேன். ஒரு அஞ்சு நிமிஷம், நான் வந்துடறேன், முடிஞ்சா அவங்களை அங்கேயே நிறுத்தி வெச்சிக்கோங்க. நகர விடாதீங்க'' என்றான்.

சிவா, ''சரி'' என்று சக்தியிடம் போய் நின்று பேச்சு கொடுத்து கொண்டே சாப்பிட.

அந்த மைக்கை பிடித்து பேசியவர் முன் போய் நின்றான்.

''உங்க கையை பிடிச்சு நாங்க நிறுத்தினோமா'' என்றான்.

அவர் புரியாமல் பார்க்க ''அதிகமா கிரானைட் வெட்டி எடுக்க விடாம உங்க கையை பிடிச்சு நாங்க நிறுத்தி னோமா. எங்களுக்குப் பிரச்சனை வந்தா நாங்க பார்த் துக்கறோம், நீங்க ஏன் அதை மைக் பிடிச்சு பேசறீங்க.''

அவன் கேட்ட விதத்தில் பேசியவருக்கு உள்ளுக்குள் பயம் பரவியது. இருந்தாலும் வெளிக்காட்டாமல் நின்றார். சிலர் அவர்கள் அருகில் வந்து பேச்சைக் கவ னித்தனர்.

''உங்களுக்குத் திறமையிருந்தா நீங்களும் எடுத்துக் கோங்க! அதைவிட்டுட்டு கட்டுப்பாடு போடணும் வெங்காயத்தை போடணும்னு பேசினீங்க'' என்று அவன் அடிக்குரலில் சீறினான்.

''கண்டிப்பா நான் பண்றது சட்டத்தை மீறி தான். ஆனா பூமி தாய்க்கு பாதிப்பு வராத வகையில தான்.

''அதென்ன ஒரிருவர்ன்னு மறைமுகமா பேசினீங்க. நல்ல தைரியமா சொல்லுங்க. வாசுகி குழுமம்னு கூட சொல்லாதீங்க, கார்த்திகேயன்னு என் பேர இனிமே சொல்லுங்க. எவன் என்னத்தை புடுங்கறான்னு நான் பார்க்கிறேன்!'' என்றான்.

''விடு தம்பி! விடப்பா!'' என்று ஒரிருவர் அவனை சமாதானப்படுத்தி அழைத்துச் சென்றனர்.

"ஏம்பா அவங்களோட உனக்கு பிரச்சனை. அவன் அநியாயம் செஞ்சா அவன் அதனோட விளைவுகளைப் பார்த்துக்குறான். அவனை புடிச்சா அவன் ஜெயிலுக்கு போறான், கோர்ட்டு கேசுன்னு அலையறான். உனக் கென்ன."

"உனக்கு அவன் மாதிரி சம்பாதிக்க முடியலைன்னு பொறாமையா. அவன் மாதிரி ரிஸ்க் எடு நீயும் சம்பாரி. ஆனா அவனுக்கு தப்பிக்கற அளவுக்கு திறமையிருக் குப்பா நீ மாட்டிக்காத" என்றனர் அந்த மைக் ஆசாமி யிடம்.

"ஏன்? உங்களுக்கெல்லாம் அவனைப் பார்த்து பயமா" என்று மைக் ஆசாமி எகிற.

"பயமோ? என்னவோ? அவன் இருக்கறதுனால எல்லா அரசாங்க அதிகாரியையும் அரசியல்வாதியையும் அவன் பார்த்துக்கறான். அவனால நம்மளும் அதுல குளிர் காயறோம்பா. விட்டுட்டு போவியா. என்னவோ உன் நேரம் நல்லா இருக்கறதனால அவன் பேசறதோட நிறுத்திகிட்டான்" என்றனர்.

"எதுக்கு அநியாயமா கிரானைட் வெட்டி எடுக்கணும், அப்புறம் அரசியல்வாதியையும் அரசாங்க அதிகாரி களையும் சமாளிக்கணும்!" என்று மைக் ஆசாமி கேட்க.

"நாம நியாயமா தொழில் செஞ்சாலும் இவங்களை எல்லாம் கவனிச்சுதான் ஆகணும். அப்போ மட்டும் இவங்க நமக்கு தொல்லை குடுக்க மாட்டாங்கன்னு யார் சொன்னா?" என்று அவர் கேட்க.

அதில் இருந்த உண்மைய புரிந்தவராக அந்த மைக் ஆசாமி அமைதியானார்.

கார்த்திக் பேச்சோடு நிறுத்திய ரகசியம் அவனுக்கு மட்டுமே தெரியும். அது சக்தி கூட இருப்பதனால். சக்திக்கு இதெல்லாம் தெரிவதில் கார்த்திக்கிற்கு விருப்பமில்லை. அவள் நீதி, நேர்மை, நியாயம் என்று அதையும் இதையும் பேச மட்டும் செய்யமாட்டாள். அதனை சரிப்படுத்தும் வரை ஓயவும் மாட்டாள் அவனுக்குத் தெரியும்.

மற்றவர்களிடம் எப்படியோ இவனை உண்டு இல்லை என்றாக்கி விடுவாள்.

இந்த மைக் ஆசாமியிடம் அப்புறம் தனியாக கூட பேசியிருக்கலாம். ஆனால் அவன் எல்லோர் முன்னிலையிலும் பேசியதால் எல்லோர் முன்னிலையிலும் பதில் குடுக்க வேண்டியே இந்த மிரட்டல். அப்போது தான் மற்றவர்களுக்கும் ஒரு பயம் இருக்கும் என்று அவனுக்குத் தெரியும்.

பிறகு சக்தியிருக்கும் இடம் நோக்கி வந்தவன். அவள் சாப்பிடும் வரை காத்திருக்க போக.

''நீ சாப்பிடலை?'' என்றாள் சக்தி.

''இல்லை! பசியில்லை!'' என்றான்.

''போ! கொஞ்சமாவது சாப்பிடு!'' என்று சற்று அதட்டலாக சக்தி சொல்லவும்.

அவன் சாப்பாட்டை வாங்கப் போக.

சிவா சக்தியை பார்த்து, ''எனக்கு உங்க பாடி கார்ட் பார்த்தா பயம், நீங்க என்னடான்னா அவரை மிரட்றீங்க. யப்பா! அதுவும் அவர் வேற அந்த கூலிங் க்ளாஸ் போட்டுக்கறாங்க, நம்மளை பார்க்கறாங்களா? வேற

யாரையாவது பார்க்கறாங்களா? நல்லா பார்க்கறாங்களா? முறைச்சு பார்க்கறாங்களா? ஒண்ணும் தெரிய மாட் டேங்குது!'' என்றான்.

''சில விஷயத்துக்கு தான் அமைதியா இருப்பான்! சில விஷயம் எல்லாம் சொல்லவே வேண்டாம்., அவன் திட்டுற திட்டுல நானா பதில் பேசவே மாட்டேன்'' என்றாள்.

''எல்லாரும் அவருக்குப் பய்ப்படறாங்க. நீங்க அசால்டா வா போன்னு கூப்பிடறீங்க. உங்ககிட்ட வேலை செய்யற டிரைவரை கூட வாங்க போங்கன்னு கூப்பிடறீங்க! அப்புறம் இவரை மட்டும் ஏன்?'' என்று சிவா கேட்க.

''அவன் என்னை விட சின்னவன்'' என்றாள் சக்தி.

விழித்த சிவா. ''என்ன சின்னவங்களா? பார்த்தா அப்படித் தெரியலையே!''

''பார்க்க தான் அப்படி பெரிய ஆள் மாதிரி இருக்கான், என் வயசு தான். என்னைவிட பத்து நாள் சின்னவன்'' என்று அவள் சொல்ல.

''யப்பா! பத்து நாளுக்கு தான் இந்த பில்ட் அப்பா!''

''பத்து நாளோ. பத்து நிமிஷமோ. சின்னவன் சின்னவன் தானே!'' என்று அவள் சொல்ல.

''ஆமாம்! ஆமாம்!'' என்று சிரிப்போடு தலையாட்டி னான்.

வீட்டிற்கு திரும்பி போகும் போது கார்த்திக்கிடம் நன்றாக வாங்கி கட்டினாள் சக்தி. ''உங்களை யாரு இப்படி

எல்லாம் கார்த்திக் பார்த்துக்குவான். இட்ஸ் மை வொர்ட்ஸ்ன்னு சொல்ல சொன்னா?''

''எல்லா விஷயத்தை நம்மளால பார்க்க முடியாது! நம்மை மீறியும் விஷயங்கள் இருக்கும்! நானெல்லாம் எதையும் பார்க்க மாட்டேன்!'' என்றான்.

''என் வார்த்தைக்காக நீ இதைக்கூட செய்ய மாட்டியா?'' என்று சக்தி கேட்க.

''செய்ய மாட்டேன்! முதல்ல இந்த மாதிரி எமோஷனல் ப்ளாக்மெயில் செய்யறதை நிறுத்துங்க!'' என்றான்.

சக்தி அதன் பிறகு எதுவும் பேசவில்லை, ஜன்னலை பார்த்து முகத்தை திருப்பியவள் தான்.

வீடு வந்த பிறகும் அவனிடம் பேசாமல் இறங்கி உள்ளே சென்றாள்.



# 3

**வேத வானில் விளங்கி ''அறஞ்செய்மின்,**

**சாதல் நேரினுஞ் சத்தியம் பூணுமின்,**

**தீத கற்றுமின்'' என்று திசையெல்லாம்**

**மோத நித்தம் இடித்து முழங்கியே.**

- பாரதி

கோபமாக வந்த சக்தி அதன் பிறகு கார்த்திக்கிடம் பேசவில்லை. அவனிடம் பேசாமல் இருப்பது மட்டும் செய்யாமல் சாப்பிடவும் இல்லை.

கார்த்திக் அவளை வீட்டில் விட்டு விட்டு குவாரிக்கு போய் விட்டான். கார்த்திக்கும் அங்கே சக்தியின் வீட்டில் தான் தங்கியிருந்தான்.

பங்களாவின் வராண்டா சைடில் அவன் ரூம் இருக்கும். வராண்டா தாண்டி வீட்டின் உள் நுழைவாயில் இருக்கும். அதனால் அங்கே வீட்டில் இருந்தாலும் அவனுடைய ராஜ்ஜியம் தனி. அவனுக்கும் வீட்டிற்கும் சம்மந்தமில்லை.

அவன் பாட்டிற்கு வருவான் அவன் பாட்டிற்கு போவான். இஷ்டமிருந்தால் வீட்டிலேயே சாப்பிடுவான் இல்லை வெளியில் சாப்பிட்டுக் கொள்வான். எல்லாம் அவன் இஷ்டமே. அவனை கட்டுப்படுத்துவோர் யாரும் கிடையாது.

அவன் அன்று வீட்டிற்கு வரும்போதே இரவு மணி பதினொன்று. எப்போதும் அவனின் ரூமிற்குள் புகுந்து கொள்வான். வீட்டிற்கு உள் எல்லாம் செல்ல மாட்டான்.

இப்போது சக்தியின் பெற்றோர்கள் இல்லாததால் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்க்க. அவன் வீட்டிற்கு உள் சென்றான்.

அங்கே சமையல் செய்யும் முனியம்மா டீவி பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்.

''என்ன இந்த நேரத்துல இங்க உட்கார்ந்து இருக்கீங்க'' என்று அவன் சத்தமாக கேட்கவும்.

பதட்டமாக எழுந்தவர், ''உங்களுக்காக தான் தம்பி பார்த்துட்டு இருந்தேன்'' என்றார்.

''என்ன விஷயம்'' என்று அவன் கேட்க.

"நம்ம சக்தி பொண்ணு எதுவும் சாப்பிடலை தம்பி. சாயந்தரம் பூஸ்ட் டு கூட குடிக்கலை" என்றார்.

"என்ன உடம்பு சரியில்லையா" என்று கார்த்திக் கேட்க.

"அப்படி எதுவும் தெரியலை தம்பி! ஏதோ கோவம் மாதிரி தெரியுது!" என்றார்.

அவளுக்கு எதற்கு கோபம் என்று கார்த்திக்கிற்கு நன்கு தெரிந்தாலும். "விடுங்க! ஒரு வேளை சாப்பிடலைன்னா ஒண்ணும் ஆகிடாது. அவங்களுக்கு ரொம்ப அடமா போச்சு. போங்க நீங்க போய் தூங்குங்க! காலையில எழுந்து வேலை செய்ய வேண்டாமா?" என்று அதட்டினான்.

அவர் சொன்னதோடு அவரின் வேலை முடிந்தது என்பது போல தூங்க போ்ய்விட்டார்.

'ஏன் சக்தி இப்படி கலாட்டா செய்கிறாள்?' என்று எரிச்சலாக வந்தது கார்த்திக்கிற்கு.

சக்தியின் அம்மாவும் அப்பாவும் இல்லாத நேரத்தில் கார்த்திக் அவனின் ரூமிற்கு போகாமல் சில சமயம் இங்கே வீட்டின் ஹாலிலேயே எப்போதும் படுத்துக் கொள்வான்.

அதற்காக ரூமிற்கு போய் ஒரு பெட்ஷீட்டும் தலையணையும் எடுத்து வந்து, அங்கே இருந்த ஒரு விளக்குமாறை எடுத்து. ஏற்கனவே சுத்தமாக இருந்த ஹாலை இன்னும் ஒரு தடவை கூட்டி. லைட்டை எல்லாம் ஆஃப் செய்து. அப்படியே கீழேயே ஹாலி லேயே பெட்ஷீட்டை போட்டு தூங்க ஆரம்பித்தான்.

நடுநிசியில் முழிப்பு வர கண்ணை திறந்தான். எதிரில் சோபாவில் ஒரு உருவம் இருப்பது தெரிய, தூக்கத்தில் மசமசத்த கண்களுக்குச் சரியாகவும் தெரியவில்லை. அவசரமாக எழுந்து உட்கார்ந்து பார்த்தான்.

அங்கே சக்தி அமர்ந்திருந்தாள். ''ஊஃஃப்'' என்று பெரு மூச்சு விட்டவன் அப்படியே தலையில் தட்டி கொண்டான்.

அதிகமான கோபம் தலைக்கேற ''இங்க என்ன பண்ணீங்க?'' என்று கர்ஜித்தான்.

''இப்போ தான் வந்தேன்! உன்னை எழுப்பறதா வேண்டாமான்னு யோசனையா இருந்தது! பசிச்சது தூக்கம் வரலை, அதான்!'' என்றாள்.

''திமிர்தானே! ஒழுங்கா சாப்ட்டுட்டு படுக்க வேண்டியது தானே. இங்க வந்து பேய் மாதிரி உட்கார்ந்து இருக்கீங்க'' என்று கடுமையாகவே வார்த்தைகளை விட்டான்.

அவன் பேசியதில் சக்திக்கு கண்களில் நீர் நிறைந்தது. சோர்வாக எழுந்து போகப் போனாள்.

''உட்காருங்க!'' என்று அதட்டியவன். சாப்பிட என்ன இருக்கிறது என்று பார்க்கப் போனான்.

டைனிங் டேபிள் மேல் சப்பாத்தி குருமா எல்லாம் அப்படியே இருந்தது. இவன், ''போய் தூங்குங்க'' என்று முனியம்மாவை அதட்டிய அதட்டலில் அதை எடுத்து பிரிட்ஜில் வைக்காமல் கூட போயிருந்தார்.

போய் அந்த சப்பாத்தி குருமாவை ஓவனில் வைத்து சூடு செய்து எடுத்து வந்தவன், ''சாப்பிடுங்க!'' என்று அவளிடம் கொண்டு வந்து கொடுத்தான்.

''இல்லை! வேண்டாம்!'' என்று சக்தி முறுக்க.

''மேம்!'' என்று ஒரு அதட்டல் போட்டவன்.

''ஒரு சமயம் ரொம்ப மெச்சூர்டா பீஃகேவ் பண்றீங்க! ஒரு சமயம் சின்ன பொண்ணு மாதிரி அடம் பிடிக்கறீங்க! சாப்பிடுங்க!'' என்றான்.

சக்திக்கு பயங்கர பசி வாங்கிச் சாப்பிட ஆரம்பித்தாள். நடுவில் நிறுத்தி, ''உனக்கு!'' என்று கேட்க.

''அர்த்த ராத்திரில பேய் தான் சாப்பிடும், நான் மனுஷன்'' என்றான் சிரிக்காமல்.

அவனை முறைத்த சக்தி. பிறகு பேசாமல் சாப்பிட்டு முடித்தாள்.

அவள் எழுந்து கை கழுவ போக. ''இதுலயே கழுவுங்க!'' என்று அவளை அதட்டி தட்டிலேயே கழுவ வைத்து.

''சீக்கிரம் மேல போங்க! உங்க அப்பா அம்மா கூட இல்லை! யாராவது பார்த்தா தப்பா தோணும்'' என்று அதட்டினான்.

சக்தியும் அவனிடம் மேலும் பேச்சு கொடுக்காமல் உறங்க போய்விட்டாள்.

கார்த்திக்கிற்கு என்னவோ போல் இருந்தது. சக்தியிடம் அவன் துளி அளவு கூட உரிமை எடுத்துக் கொள்ள மாட்டான், ஒரு சிநேக பாவம் காட்ட மாட்டான்.

ஒன்று அவனுடைய மேடம் என்ற வகையில் மிகுந்த மரியாதையாக நடந்து கொள்ளுவான். இல்லையென்றால் ஏதாவது இப்படி சிறு பிள்ளை தனம் செய்து அவனிடம் திட்டு வாங்குவாள்.

அவன் அவளை நன்றாகப் பார்த்துக்கொள்வான் என்பதில் எந்த சந்தேகமும் கிடையாது. அதில் உரிமை எங்கேயும் இருக்காது, ஒரு அக்கறை மட்டுமே இருக்கும்.

ஆனால் அந்த அக்கறை உரிமையாக அவளுக்கோ மற்றவர் கண்களுக்கோ தெரியும் என்பது அவனுக்குப் புரியவில்லை. அதுவுமில்லாமல் அதிகமான அக்கறை உரிமையால் வருவது தான் என்றும் அவனுக்குப் புரியவில்லை.

அவனைப் பொறுத்தவரை சக்தி மேல் அவன் கொண்டது உரிமையல்ல, அக்கறை மட்டுமே.

எவ்வளவு அவன் இடைவெளி விட்டு பழகினாலும் அவள் மிகுந்த உரிமையாக பழகுவாள். என்ன முயன்றும் அவனால் அதை மாற்ற முடியவில்லை. அவன் இந்த வீட்டிற்கு வந்ததில் இருந்து அப்படித்தான். வருடங்கள் அதிகமாக அதிகமாக அவளின் அவனோடான பழக்கமும், உரிமை உணர்வும் அதிகம் தான் ஆகியதே தவிர குறையவில்லை.

இதை தவிர்ப்பதற்காக சில பொய்கள் கூட அவளிடம் சொல்லியாகி விட்டது. எதற்கும் அவள் அசைய வில்லை. கார்த்திக்! கார்த்திக்! கார்த்திக் தான்! அவ ளுக்கு எல்லாவற்றிற்கும். அவனில்லாமல் அவள் வெளியே போய் வந்த இடம் அவள் கல்லூரி மட்டுமே.

அந்த மட்டிலும் பரவாயில்லை, வீரமணி அவளை ஹாஸ்டலில் சேர்த்தார். முதலில் பிஇ முடித்தவள் பின்பு எம் பி ஏ படித்தாள். அதுவும் சென்னை என்பதால் ஹாஸ்டல் கொண்டு போய் விடுவதும் கூட்டிக் கொண்டு வருவதும் கார்த்திக்கின் வேலை.

எங்கு போவதானாலும் ஒன்று அவளின் அப்பா அம்மாவோடு போவாள். இல்லையென்றால் கார்த்திக் வேண்டும்.

''எனக்கு வேலை இருக்கு!'' என்று கார்த்திக் சொன்னதும்.

''அப்பா கார்த்திக்கை என்கூட அனுப்புங்க!'' என்று தந்தையிடம் போய் நிற்பாள்.

அவள் படிப்பை முடித்து இங்கே வந்து ஆறுமாதங்கள் தான் ஆகின்றன. இப்போதுதான் வீரமணி அவளை தொழிலில் கொண்டு வர வேண்டும் என்று எண்ணி வேலைகள் செய்ய ஆரம்பித்து இருக்கிறார்.

அதனை முன்னிட்டே இந்த பொறியியல் கல்லூரியை அவசரமாக. மிகவும் அதிகமான தொகை பேசி கார்த்திக் வாங்கினான்.

வரப்போவது என்னவோ? மனதின் ஓரத்தில் ஒரு இனம் புரியாத பயம். அதன் பிறகு தூக்கத்தை தொலைத்தான்.

சில சமயங்களில் நாம் எது நடக்கக்கூடாது நடக்கக்கூடாது என்று நினைப்போமோ அது நடந்து விடும். வருமுன் காப்போம் என்பது எல்லா விஷயத்திலும் சரி வராது.

**வாழ்க்கையே போர்க்களம்.**

**வாழ்ந்து தான் பார்க்கனும்.**

**போர்க்களம் மாறலாம்.**

**போர்கள் தான் மாறுமா.??**

காலையில் எழுந்ததுமே சக்தி அவனிடம் வந்தவள், "சாரி கார்த்திக்! ராத்திரி டென்சன் பண்ணிட்டேனா! இனிமே இப்படி பண்ண மாட்டேன்!" என்று.

அவ்வளவு தான் அவளின் கோபத்தின் அளவு. அவளாகவே கோபத்தை இழுத்துப் பிடிக்க முடியாமல் கார்த்திக்கிடம் சமாதானம் ஆகிவிட்டாள்.

சக்தியை பற்றி நன்கு தெரிந்த கார்த்திக்கும். "இது நமக்குள்ள இருக்கட்டும்! போய் முனியம்மா கிட்ட ராத்திரி எனக்கு பசிச்சது. கார்த்திக் தான் எனக்கு சப்பாத்தி சூடு பண்ணி குடுத்தான்னு சொல்லாதீங்க!" என்றான்.

"நீ ஏன் கார்த்திக் எப்பவும் எக்ஸ்ட்ரீம்க்கு திங்க் பண்ற. யாரும் தப்பா எடுக்க மாட்டாங்க."

"சொல்லாதீங்கன்னா விட்டுடுங்க" என்றான்.

"ஒகே! அஸ் யூ விஷ்!" என்றவள். "இன்னைக்கு நான் என்ன பண்ணனும்."

"காலேஜ் போய் அங்க என்ன வொர்க்ன்னு பாருங்க."

"எப்போ போகலாம்?"

"எப்போ போகலாம் இல்லை, எப்போ போறேன்னு கேளுங்க."

"ஏன் நீ வரமாட்டியா."

"மாட்டேன்! எனக்கு குவாரில வேலை இருக்கு!"

"சரி, ஒண்ணு செய்யலாம்! முதல்ல குவாரில போய் வேலையை முடி! அப்புறம் காலேஜ் போகலாம்!" என்று அதற்கு சக்தியே தீர்வு சொல்ல.

''மேம்!'' என்று பல்லை கடித்தான் கார்த்திக். ''நீங்க மட்டும் தான் காலேஜ் போறீங்க, எல்லாத்தையும் சமாளிக்கறீங்க. நான் உங்க பின்னாடியே சுத்திட்டு இருக்க மாட்டேன் நீங்க தனியா எல்லா விஷயத்தையும் ஹாண்டில் பண்ணனும்.''

''எனக்கு தான் ஆளுங்க எப்படின்னு தெரியாதுன்னு சொன்னியே!''

''எப்போ கத்துக்குவீங்க ஆளுங்க எப்படி என்னன்னு நீங்களே தெரிஞ்சிக்கோங்க'' என்றான்.

அவன் சக்தியை அவனுடன் பழகுவதை வைத்தே எடை போட்டான். அவன் அங்கே வந்த போது அவள் பத்தாவது முடித்து பதினொன்றாவது சென்றாள். எதற்கும் கார்த்திக்கை கூப்பிடுவாள், கார்த்திக்கின் உதவியை நாடுவாள்.

ஆனால் அது கார்த்திக்குடன் இருக்கும் போது மட்டும் தான். மற்றபடி சக்தி தைரியமான பெண். அதை பார்க்கும் சூழ்நிலை கார்த்திக்கிற்கு அமையவில்லை.

''இப்போ முடிவா என்ன தான் சொல்ற? நீ வருவியா? மாட்டியா?''

''நீங்க போங்க! அப்புறம் நான் வர்றேன்!'' என்றான் கார்த்திக் அப்போதும் அவளைத் தனியாக அனுப்ப மனம் வராமல்.

''ஓகே! அஸ் யூ விஷ்!'' என்றாள் எப்பொழுதும் போல.

''ஆம்! எப்போதும் சக்தி அவனிடம் சொல்லும் வார்த்தை அது! எது அவன் முடிவாகச் சொன்னாலும்.

''ஓகே! அஸ் யூ விஷ்!'' என்று ஒப்புக் கொண்டோ அல்லது ஒப்புக் கொடுத்தோ விடுவாள்.

அவள் ரெடியாக போகவும். ''புடவை இல்லைனா சுடிதார்ல போங்க! ஜீன்ஸ் குர்தா. ஸ்கர்ட் டாப்ஸ்ன்னு. எதுலயாவது போகாதீங்க''' என்றான்.

''உன் கெடுபிடி அதிகம் போ!'' என்று சலித்துக் கொண்டே போனாள்.

எப்போதும் உடை விஷயத்தில் ஏதாவது சொல்லிக் கொண்டே இருப்பான். அதுவும் நைட்டியில் அவன் முன் வந்தால் போதும் வள்ளென்று விழுவான். ''நைட்ல போடறதுக்கு பேர் தான் நைட்டி! அதை நாள் முழுசும் போட்டுட்டு சுத்தக் கூடாது.''

''உங்கப்பாவைப் பார்க்க யாராவது வந்துட்டே இருக்காங்க! இப்படி நைட்டியோட சுத்துவீங்களா!'' என்று பல வருஷத்திற்கு முன்பே அவள் ஸ்கூல் படிக்கும் பெண்ணாக இருக்கும் போதே அவனிடம் திட்டு வாங்கியிருக்கிறாள்.

அதனால் முடிந்தவரை நைட் பேன்ட் ஷர்ட்டிலேயே சுத்துவாள். அதை போடும்போதே சொல்லிவிட்டால், ''இதுவும் பசங்க மாதிரி ட்ரெஸ் அது இதுன்னு எதுவும் சொல்லாத! நான் இதை தான் போடுவேன்!'' என்று.

அவளை கருப்பண்ணனுடன் காலேஜ் கிளப்பி விட்டு இவன் குவாரிக்கு கிளம்பினான்.

அங்கே இவன் வருவதற்காகவே காத்திருந்த மாரி, இவனின் வலது கை போன்றவன். ''அண்ணா! இரு வத்தஞ்சாயிரம் கல்லு இங்க இப்போ இருக்குங்கண்ணா'' என்றான்.

''அவ்வளவு ஏன்டா இங்க வெச்சிருக்கீங்க? குடௌன் கொண்டு போக வேண்டியதுதானே.''

''இது கணக்குல வருமா வராதா! எந்த குடோவுன் கொண்டு போகணும்ன்னு ஒரு டௌட்டு'' என்றான்.

அங்கே எது கணக்கில் வரும் வராது என்று தெரிந் தவன் கார்த்திக் மட்டுமே. மற்றவர்களுக்கு விவரங்கள் தெரிந்தாலும் பிட்டு பிட்டாகத் தான் தெரியும். முழு விவரம் தெரியாது.

ஒருவனிடமே எல்லா வேலைகளையும் சொல்ல மாட்டான். அததற்குத் தனித்தனி ஆட்கள். ஒருவன் செய்யும் வேலை மற்றவருக்குத் தெரியாது.

அதனால் வீரமணிக்கு ஏதாவது விவரம் தெரிய வேண்டும் என்றால் அதை கார்த்திக் மட்டுமே சொல்ல முடியும். வேறு யாராலும் முடியாது. அதைவிட சொல்வ தென்றால் வீரமணிக்கே அதிக விவரங்களும் தெரியாது, தெரிவிக்கப்படவும் மாட்டாது.

வாசுகி குழுமம் எங்கும் கார்த்திக் மயமே. எவ்வளவு சொத்துக்கள், யார், யார் பெயரில் எவ்வளவு பணம். சுவிஸ் வங்கியில் அக்கௌண்ட் ட்ரான்ஸ்சாக்ஷன் எல்லாம் அவன் வசம்.

அது யாருடைய கவனத்தையும் கவராமல் அவன் வசமாகி சில வருடங்கள் ஆகிவிட்டன. அதை வசமாக் குவது அவனுடைய பல வருட முயற்சியுடன் கூடிய உழைப்பு.

அதற்காக அவன் இழந்தது...???

எல்லாவற்றிற்கும் காரணம் வீரமணி அவன் மேல் வைத்த நம்பிக்கை. அந்த நம்பிக்கையை அவன் பெற அவன் மிகப்பெரிய ரிஸ்க் எடுத்திருந்தான்.

தைரியமாக அவனிடம் சொத்துக்களை மட்டுமல்ல மகளையும் விட்டு நாடாறு மாசம் காடாறு மாசம் என்பது போல இந்தியாவில் சில மாதம், வெளிநாட்டில் சில மாதம் என்று தன் மனைவியுடன் வீரமணி உலகையே சுற்றிக்கொண்டு இருந்தார்.

வீரமணியை விட அவரின் மனைவிக்கு கார்த்திக்கின் மேல் இன்னும் நம்பிக்கை அதிகம். இல்லையென்றால் வயது பெண்ணை கார்த்திக்கை நம்பி விட்டுவிட்டு கணவனுடன் ஊர் சுற்ற செல்வாரா?

அவன் கண்ணசைவு இல்லாமல் அங்கே அணுவும் அசையாது.

தலையை சொரிந்து கொண்டு அவனிடம், "எந்த குடெளன் அனுப்பட்டும்?" என்று கேட்டு கொண்டிருந்த மாரியிடம்.

"டேய்! இப்படி தலைல கையை வெச்சிட்டு பேசா தன்னு எத்தனை தடவை சொல்றேன்" என்று கையில் வைத்திருந்த கார் சாவியிலேயே அவன் கையில் ஒரு அடி வைத்தான் கார்த்திக்.

"ச்சாரிண்ணா!" என்று அவன் வேகமாக கையை கழுவ ஓடினான்.

உழைப்பு என்று வந்துவிட்டால் கார்த்திக் கடின உழைப்பாளி என்றெல்லாம் சொல்ல முடியாது. கடின உழைப்பை மற்றவர்களிடம் இருந்து வாங்கத் தெரிந்த புத்திசாலியான உழைப்பாளி.

மற்றபடி முரட்டுத்தனமான தோற்றம் இருந்தாலும் ஒரு மாதிரி மிகுந்த சுத்தம் பார்க்கும் ஆசாமி. தூசும் மண்ணும் கிளம்பும் குவாரி வெட்டி எடுக்கும் இடத்தில கூட இவனின் சுத்தமான தோற்றம் தனி தான்.

மாரி வந்ததும்.

"சூப்பர்வைசர் கிட்ட அஞ்சாயிரம் கல்லை கணக்குல வர்ற மாதிரி வைக்க சொல்லு. மத்ததை நம்ம ஓசூர் குடௌன் னுக்கு கொண்டு போங்க!" என்றான்.

மாரி போனதும் செல்வம் வந்தான். அவன் கார்த்திக்கின் இடது கை போன்றவன். "சார்! கலெக்டர் வீட்டுல அவர் பேரனுக்கு நாளைக்கு காது குத்து!" என்றான்.

"நம்மளை கூப்பிட்டாங்களா?"

"யாரையும் கூப்பிடலை போல, தகவல் மட்டும் வந்தது" என்றான் செல்வம்.

"டேய் பொண்ணுன்னா ஏதாவது நகை கொடுக்கலாம்! பையனா போயிட்டானே நம்ம என்னடா செய்ய முடியும்? ஏதாவது பணமா குடுக்கலாமா."

"அதான் மாசாமாசம் கப்பம் கட்றோமே" என்றான் செல்வம்.

"இதுல எல்லாம் கணக்கே பார்க்கக் கூடாதுடா" என்ற கார்த்திக். போன் எடுத்து ஒரு பெரிய நகைக்கடைக்கு போன் செய்தான்.

"ஒரு பத்து பவுன்ல பொண்ணுங்க போடற நகை, அருமையான டிசைன், பார்த்தா எல்லோரும் எங்க வாங்குணீங்கன்னு கேட்கற மாதிரி ஒண்ணு எடுத்து வைங்க. நம்ம பையன் செல்வம் வருவான், அவன்

கிட்ட குடுத்துடுங்க. எவ்வளவு ரேட்டுன்னு சொல்லி விடுங்க! நான் ஈவினிங் காஷ் குடுத்து விடறேன்!'' என்றான்.

அவர், ''சரிங்க சார்'' என்று சொல்லவும்.

''போ செல்வம்! போய் அதை வாங்கிட்டு கலெக்டர் வீட்டுக்கு போய் கலெக்டர் வீட்டுக்காரம்மாகிட்ட தனியா கார்த்திக் அய்யா உங்க பேரனுக்கு செய்யற முறைன்னு சொல்லி குடுத்துட்டு வந்துடு!'' என்றான்.

''ம்! சரிங்க...!'' என்று செல்வம் கிளம்பினான்.

பின்பு கல்வெட்டும் இடத்திற்கு போனவன் அங்கே மேற்பார்வையிட்டான். கற்களின் அளவை சரியாக இருக்கிறதா என்று அளந்தான். பின்பு குவாரியை ஒரு சுற்று சுற்றினான்.

ஒரு இடத்தில் வெடி பொருட்கள் அப்படியே கிடக்க, ''டேய்! எவன் இவன் இதை அப்படியே போட்டு வெச்சது!'' என்று அவன் அதட்டவும் பயத்தில் எவனும் முன்னேயே வரவில்லை.

பின் அவன் அதில் கைவைத்து தூக்க போகவும். ஆளாளுக்கு ஓடிவந்து அப்புறப்படுத்தினர். அதற்கு தனியாக அங்கிருக்கும் மேஸ்திரி அவனிடம் நன்றாக வாங்கிக் கட்டிக்கொண்டான்.

பிறகு தான் மணியை பார்த்தான், நேரம் மதியம் ஒன்றரை என்றது. கருப்பண்ணனுக்கு அழைத்தான், ''ணா! எங்கிருக்கீங்க!''

''இங்க காலேஜ்ல தான் தம்பி!''

"மேடம் என்ன பண்றாங்க?"

"காலேஜ் சுத்தி பார்த்தாங்க! அப்புறம் அந்த பிரின் சிபல் ஒரு மணிநேரமா நம்ம பொண்ணோட பேசிட்டு இருக்கான்!"என்றார்.

போவதா? வேண்டாமா? என்று ஒரே யோசனையாக இருக்க. அதற்குள் சக்தியிடம் இருந்து போன் வந்தது.

"கார்த்திக் வரலை? நீ வர்றதுக்கு தான் வெயிட் பண்ணிட்டு இருக்கேன்" என்று.

"நீங்க வந்துடறீங்களா?"

"நீ வாயேன்! இங்க இந்த பிரின்சிபல் காலேஜ் டெவ லப்மெண்ட்டுக்கு என்னென்னவோ லிஸ்ட் குடுக்கறார்."

"வாங்கி வெச்சுக்கோங்க! அப்புறம் யோசனை பண்ணலாம்!"

"நீ வாயேன்!"

"நீங்க தான் அதை பார்க்கணும் மேம்!" என்றான்.

"நீ வா!"என்றாள் பிடிவாதமாக.

அவளின் பிடிவாதத்தை அறிந்தவனாக அவன் காலேஜிற்கு கிளம்பினான்.

அங்கே முன்பிருந்த சேர்மன் ரூமில் அவள் அமர்ந் திருந்தாள். அவன் வந்தவுடன் கல்லூரியின் செயல் பாடுகள் முன்னிட்டு ஆயிரம் சந்தேகங்கள் கேட்டாள்.

"மேடம்! நீங்க... நீங்க தான் இதுக்கு கரெஸ் பாண்டென்ட். நீங்க படிச்சிருக்கீங்க நான் படிக்கலை, எனக்கு இதைபத்தி ஒண்ணும் தெரியாது!" என்றான்.

''தெரியாதுன்னா! அப்புறம் எதுக்கு வாங்கின?''

''நான் இதை எனக்கொண்ணும் வாங்கலை! உங்களுக்கு தான் வாங்கினேன்!'' என்றான் பொறுமையாகவே.

''ஆனா எனக்கொண்ணும் தெரியலையே?'' என்றாள் சலிப்பாக.

''உங்களுக்கு ஒண்ணும் தெரியலைன்னு அடுத்தவங்களுக்கு தெரியாம இருந்தாலே போதும். அதுதான் உங்க வெற்றிக்கு முதல் படி'' என்றான்.

''தத்துவம் நம்பர் நூத்தி பதினொண்ணு'' என்றாள் நக்கலாக.

''அதென்ன நூத்தி பதினொண்ணு'' என்று கார்த்திக் கேள்வி வேறு கேட்க.

''நீ இப்படி தான் எல்லோருக்கும் பட்டை நாமம் சாத்துறதை சொன்னேன்'' என்றாள் இன்னும் கிண்டலாக.

அவள் சொன்னதை சட்டையே செய்யாமல், ''கத்துக்கலாம்! மெதுவா கத்துக்கலாம!'' என்றான்.

''பசிக்குது'' என்றாள்.

''போகலாம்!'' என்று அவன் எழ.

''இங்க காண்டீன் இருக்கு சாப்பிடலாமா?'' என்றாள்.

''இங்கயா?''

''இங்கே சாப்பிட்டா தானே சாப்பாடு எப்படி இருக்குன்னு தெரியும்! எப்பவுமே ஸ்டுடண்ஸுக்கு ஃபர்ஸ்ட் கம்ப்ளைண்ட் அது தான்'' என்றாள்.

''இப்போ நான் ஒண்ணுமே தெரியலைன்னு சொன்னீங்க'' என்றவன்.

''இப்படி தான் ஆரம்பிக்கணும்! தப்பா இருந்தாலும் பரவாயில்லை! நீங்களே செய்ங்க. இது சத்தி ப்ரிய தர்ஷினியோட ராஜ்ஜியம். இல்லையில்லை சாம்ராஜ்யமா வளரணும் இதுல கார்த்திக் பேர் எங்கேயும் எப்பவும் வரக்கூடாது'' என்றான்.

சக்தி மேலே பேசும்முன், ''சரி வாங்க!'' என்று காண்டீன் போய். சாப்பிட்டு. அங்கே இருந்த இன்சார்ஜிடம் சில யோசனைகளை சொல்லிவிட்டு வந்தனர்.

பின்னர் வீடு திரும்பும் போது, ''என் பிரண்ட்டுக்கு நாளன்னைக்கு கல்யாணம்! ஏதாவது கிஃப்ட் வாங்கணும்'' என்றாள்.

''எங்க போக?''

''ஏதாவது நகைக்கடைக்கு போ!''

கருப்பண்ணனை நகை கடை நோக்கி விட சொல்ல. அவர் சென்ற நகை கடையும் காலை கார்த்திக் நகை ஒன்றை குடுக்க சொன்ன நகை கடையும் ஒன்றே.

கார்த்திக் அதை பெரிதாக நினைக்கவில்லை. சக்திக்கு அந்த மாதிரி லஞ்சம் கொடுப்பது எல்லாம் பெரிய விஷயம் என்பது அந்த நேரத்திற்கு அவனுக்கு ஞாபகம் வரவில்லை.

இருவரும் கடை உள்ளே சென்றனர். அங்கே அவர்களை முதலாளியே ஓடிவந்து பலத்த வரவேற்பு கொடுக்க கடையில் இருந்த எல்லோரும் திரும்பிப் பார்த்தனர்.

அங்கே நகை பார்த்துக் கொண்டிருந்த இரண்டு இளம் பெண்களும் திரும்பி பார்த்தனர். இருவரின் கண்களும் கார்த்திக்கையும் சக்தியையும் அளவெடுத்தன.

அதில் ஒரு பெண் சிவா அவனின் மொபைலில் அவனின் காதலி என்று காட்டிய பெண்.



# 4

**எத்தனை கோடி படைகொண்டு வந்தாலும்**

**மாயையே! நீ**

**சித்தத் தெளிவெனுந் தீயின்முன்**

**நிற்பாயோ?-மாயையே!**

- பாரதி

அங்கே நகை கடையில் நகை வாங்கிக்கொண்டு இருந்த இரண்டு பெண்களும் விடாமல் கார்த்திக்கையும் அவளோடு வந்த சக்தியையும் பார்த்தனர். அவர்களுக்கு தெரியவில்லை கார்த்திக் அவர்களை பார்த்தானா இல்லையா என்று, அவன் தான் கறுப்புக் கண்ணாடி அணிந்திருக்கிறானே.

அதற்குள் அந்த பெண்களின் புறம் சென்ற கண் களினால் அதில் உள்ளவளை சக்தி கூர்ந்து பார்த்தாள். அவள் சிவா காட்டிய பெண் போல இருக்கிறாளே என்று.

உடனே கார்த்திக்கிடம் சொல்லவும் வேறு செய்தாள். "கார்த்திக் அந்த பொண்ணு நம்ம சிவா காட்டின பொண்ணு மாதிரியே இல்லை!"

அப்போது தான் அவர்களை பார்த்த கார்த்திக், "இல்லையே!" என்றான்.

"இல்லை! அந்த மாதிரி தான் இருக்கு!" என்றாள் சக்தி.

"அப்போ எதுக்கு என்கிட்ட கேட்டீங்க?" என்றான் கார்த்திக் எரிச்சலாக.

அவனுக்கு எதற்கு எரிச்சல் என்று புரியாதவளாக, "நீ ரொம்ப ஓவரா பண்ற" என்று அவனைக் கடிந்தவள். யாரும் எதிர்பாராமல், "ஹாய்" என்று சொல்லியபடி அந்த பெண்களின் அருகில் போனாள்.

தான் சொன்ன வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து போட்டோவை உடனே சிவா டெலிட் செய்து விட்டதால். அந்தப் பெண்ணை பற்றி ஏதாவது விவரம் கிடைத்தால் அவனிடம் சொல்லலாம் என்று நினைத் தவள் அவளிடம் நட்பு பாராட்ட சற்றும் யோசியாமல் சென்றாள்.

அந்த இருவரும் பதட்டமானார்கள். அவளோடு கார்த்திக் வரவும், "நீ போய் பொண்ணுக்கும் மாப்பிள் ளைக்கும் பிரேஸ்லெட் டிசைன் பாரு கார்த்திக், நான் இப்போ வர்றேன்!" என்றாள்.

கண்களில் இருந்த கண்ணாடியை கழற்றி சக்தி அறியாமல் அந்த பெண்களின் புறம் ஒரு பார்வை பார்த்தான் கார்த்திக். பிறகு கண்ணாடியை மாட்டியவன் சென்று விட்டான்.

''நான் சக்தி, சக்தி பிரியதர்ஷினி'' என்று சிநேகமாக அவர்களைப் பார்த்து சக்தி புன்னகைக்க... அந்த போட்டோ பெண்ணுக்கு பதிலுக்குச் சிரிப்பதா, வேண்டாமா என்றொரு குழப்பம் போல.

ஆனால் பக்கத்தில் இருந்தவளுக்கு எந்த குழப்பமும் இருந்த மாதிரித் தெரியவில்லை. ''நான் உன்னை பார்த்து சிரிக்க மாட்டேன்'' என்பது போலவே அவளின் பாவனை இருந்தது. அவர்கள் இருவரும் முகத்தை முகத்தை பார்த்துக் கொண்டார்கள்.

அந்த புகைப்படத்தில் பார்த்த பெண்ணை பார்த்து, ''நாம எங்கயோ பார்த்த மாதிரி இருக்கு! பார்த்திருக் கோமா!'' என்றாள்.

''இல்லைங்க'' என்று ஒற்றை வார்த்தையில் அந்த பெண் பதில் சொன்ன விதமே அவளுக்கு சக்தியுடன் பேச விருப்பமில்லை என்று நன்கு தெரியப்படுத் தினாள்.

''நான் யார்ன்னு தெரியாம என் கிட்ட பேச தயங்கறீங் கன்னு நினைக்கிறேன், வாசுகி க்ரானைட்ஸ் எங்களது தான், இப்போ ஓ எம் ஆர் என்ஜினீயரிங் காலேஜும் எங்களது தான்'' என்றாள்.

அந்த போட்டோ பெண்ணுக்கு பக்கத்தில் இருந்த பெண், ''ஓஹ்! வாசுகி க்ரானைட்ஸ் உங்களுதா?'' என்றாள். அவள் கேட்ட விதம் சாதாரணம் போல தோன்றினாலும் அதில் ஏதாவது நக்கல் இருக்குமோ என்ற மாதிரியான ஒரு எண்ணம் சக்திக்குத் தோன்றியது.

அதுவுமில்லாமல் அந்த பெண் தன்னை ஒரு குரோ தத்துடன் பார்ப்பது போல தோன்றியது. இப்போதுதான்

பார்க்கும் சிறு பெண்ணிற்கு இந்த வார்த்தைகள் அதிகம் தான் இருந்தாலும் சக்திக்கு தோன்றியது.

சக்தி மிகவும் ஸ்நேகபாவத்தை விரும்பும் பெண் என்பதால் முகம் மாறாமல் மேலும் பேச்சுக் கொடுத்தாள்.

"நீங்க என்ன பண்றீங்க?" என்றாள்.

அந்த போட்டோ பெண், "நாங்க காலேஜ் படிக்கிறோம்" என்று சொன்னாள்.

பக்கத்தில் இருந்த பெண் அவள் பதில் சொல்வதை விரும்பவில்லை என்று முகத்தில் நன்றாக காட்டினாள்.

சக்திக்கு அது புரிந்தாலும், சிவாவிற்காக என்று பேச வந்தவள், இப்போது அவளுக்கே ஏதோ பேச வேண்டும் போல ஒரு ஆர்வம் எழ. அவளை விட்டு அந்த போட்டோ பெண்ணுடன் மட்டுமே பேசினாள். "உங்க பேரு?" என்று சக்தி கேட்க.

"நான் சுமித்ரா! இது வைஷ்ணவி!" என்று கேட்காத தகவலாக பக்கத்தில் இருந்தவளின் பெயரையும் சேர்த்துச் சொல்ல.

அவள் தங்களின் விவரம் சொல்வது பிடிக்காத வைஷ்ணவிக்கு என்னவோ கோபம் எழ.

அந்த வைஷ்ணவியாகப் பட்டவள். "நம்ம போகலாம் சுமி!" என்று சொல்லி சக்தியுடன் அவள் பேசிக்கொண்டு இருக்கும் போதே அவளை கை பிடித்து இழுத்துக் கொண்டு போகப் போனவள்.

"I dont think it is necessary for you to know about us/ you are a stranger to us/ do you get that, நீங்க வாசுகி க்ரானைட்ஸ் சேர்ந்தவங்கங்கறதுக்காக

உங்களுக்கு நாங்க எங்க விவரம் சொல்லணும்னு ஏதாவது இருக்கா என்ன?'' என்றாள் கடுமையாக.

சக்திக்கு ஒரு மாதிரியாகிவிட்டது. அந்த பெண்ணின் கண்களில் தெரிந்த கோபத்தில் சக்தி தடுமாறினாலும் ஒரு மாதிரி சமாளித்து உடனே பதிலும் சொன்னாள். ''am sorry. this wont be repeated again even in diehard circumstances'' என்று அலட்சியமாக சொல்லித் திரும்ப கார்த்திக்கிடம் நடந்தாள்.

அந்த வைஷ்ணவி சொன்னது என்னவோ உண்மை தான், யார்? எவர்? என்று தெரியாமல் விவரம் சொல்வது தவறு தான். அங்கே தான் சக்தி ஒரு தவறும் செய்தாள், வாசுகி கிரானைட்ஸ் என்னவோ அவளின் பெரிய அடையாளம் மாதிரி அதை சொன்னால் அந்த பெண்கள் தன்னுடன் ஸ்நேகிதமாகி விடுவார்கள் என்று நினைத்தாள்.

அதை அந்த கர்வத்தை ஒன்றுமில்லாமல் செய்தாள் வைஷ்ணவி. அதுமட்டுமில்லாமல் அதை அவள் சொன்ன விதம் ஏதோ சக்திக்கும் அவளுக்கும் ஜென்ம பகை என்பது போலத் தோன்றியது.

ஏனோ கண்கள் கலங்கி விடுமோ என்று பயந்தவள் அமைதியாக கார்த்திக்கின் புறம் சென்று அமர்ந்து கொண்டாள். அவளுக்குப் புரியவில்லை ஏன் அந்த பெண்ணிற்கு தன்னிடம் இத்தனை கடுமை. யாரோ எவரோ அவர்களிடம் பேசிய தன்னுடைய அதிக பிரசிங்கித்தனத்தை அவளே வெறுத்தாள்.

''என்ன ஆச்சு? ஏன் மேம் ஒரு மாதிரி இருக்கீங்க?'' என்றான் கார்த்திக்.

"ஒண்ணுமில்லை" என்றாள்.

"யாராம் அந்த பொண்ணுங்க?" என்றான் அவள் அவர்களைப் பற்றி என்ன தெரிந்து கொண்டாள் என்று அறிவதற்காக.

"தெரியாது? அந்த பொண்ணுங்க ஒண்ணும் சொல் லலை! என்னவோ அந்த பொண்ணுங்களுக்கு என்னை பிடிக்கவே இல்லை! ஏன்னு எனக்கு தெரியலை! ரொம்ப ஹார்ஷா பேசினா கார்த்திக் அவ...?" என்றாள் குரலில் வருத்தம் நன்கு தெரிந்தது.

செல்வ சீமானின் ஒரே பெண்ணான அவளிடம் யாரும் இதுவரை இப்படிப் பேசியதில்லை.

"அவ சொன்னது கரெக்ட் தான் யார் என்னன்னு தெரியாம விவரங்கள் சொல்ல முடியாது! அது ஓ கே! ஆனா என்னவோ ரொம்ப ஹார்ஷா அந்த பொண்ணு பதில் சொன்னா? என்னவோ ஜென்ம ஜென்ம பகை மாதிரி?" என்றாள்.

"எந்த பொண்ணு?" என்று அடையாளம் கேட்க.

"வைஷ்ணவி" என்றாள்.

"பேர் சொன்னாங்களா?"

"அந்தப் பொண்ணு சுமித்ரா நல்லா பேசிச்சு! ஆனா இந்த வைஷ்ணவிக்கு என்னவோ பிடிக்கலை ரொம்ப எடுத்தெறிஞ்சு பேசினா."

"பேசாம அவளும் உன்னை மாதிரி ஒரு கறுப்பு கண்ணாடி போட்டுக்கலாம். அப்பா என்னமா முறைக் கிறா! எனக்கு பயமா போச்சு!" என்றாள்.

அவளின் இந்த வார்த்தையில் டென்ஷனான கார்த்திக்.

"உங்களை யார் அவங்க கிட்ட போய் பேச சொன்னா! பண்றது எல்லாம் அதிகப்ரசிங்கித்தனம் அப்புறம் அதை யும் இதையும் சொல்ல வேண்டியது" என்று எரிந்து விழுந்தான்.

"என்னடா இது? நம்ம நேரமே இன்னைக்கு சரி யில்லை போல! ஆளாளுக்கு திட்டுறாங்க! சக்தி எல் லோருக்கும் அவ்வளவு ஈஸியா போயிட்டானா?" என்று ஒரு கோபம் சக்திக்கு தோன்ற.

அந்தக் கோபத்தை கார்த்திக்கிடம் காட்டினாள். "போ! நீ தூர போ! பக்கத்துல இருந்து சும்மா என்னை திட்டித் திட்டி டென்ஷன் பண்ணாத! எழுந்து போ!" என்று அமர்த்தலான தீவிரமான குரலில் சொல்ல.

அந்தக் குரல். சக்திக்கு அதிக கோபம் வந்தால் வெளிப் படும் அந்தக் குரல். கார்த்திக்கை பணிய வைத்தது. எழுந்து கடையை விட்டு போன் பேசுபவன் போல வெளியே வந்தான்.

வெளியே வந்தாலும் கண்கள் எல்லாம் உள்ளே சக்தியின் மேலும் வைஷ்ணவி மற்றும் சுமித்ராவின் மேலும் தான் இருந்தது.

அந்தப் பெண்கள் நகையை கவனித்ததை விட சக்தியை கவனித்தது தான் அதிகம்.

இப்போது கார்த்திக் அருகில் இல்லாததால் அவனைத் தேடியும் கண்களைச் சுழற்றினர்.

ஆனால் அதிகம் அவர்களுக்கு வேலை கொடுக்காமல் இரண்டே நிமிடத்தில் தேர்ந்தெடுத்த சக்தி, ''பில் பண்ணுங்க!'' என்றாள்.

அவள் காஷ் எடுக்க அவளின் ஹேண்ட் பேக்கை திறக்க போகவும். ''கார்த்திக் சார் எங்கங்க மேடம்!'' என்று அந்தக் கடையின் முதலாளி கேட்டார்.

''ஏன் கேட்கறீங்க?''

''காலையில ஒரு நகை வாங்கினார் அதுக்கும் சேர்த்து பில் பண்ணவா? இல்லை அப்புறம் தர்றாரான்னு கேட்கணும்.''

''அந்த பில் எவ்வளவு?''

''மூணு லட்சம்?''

யாருக்கு நகை வாங்கியிருப்பான் என்ற யோசனை எழுந்தாலும் அதை பின்குக்கு தள்ளி, ''பில் பண்ணிடுங்க'' என்றவள் கார்த்திக்கை பார்த்து உள்ளே வருமாறு சைகை செய்தாள்.

அவன் வரவும், ''கேஷ் என்கிட்ட கம்மியா இருக்கு கார்த்திக் நீ பே பண்ணு'' என்றாள்.

அதற்குள் கடை முதலாளி வந்து, ''வாங்க மேடம்! புது டிசைன்ஸ் வந்திருக்கு!'' என்று கூப்பிட. எழுந்து அவரோடு வேறு பக்கம் டிசைன்ஸ் பார்க்க போனாள்.

கார்த்திக் இங்கே பணம் கொடுக்க எண்ணி கொண்டிருக்க.

வைஷ்ணவியும் சுமித்ராவும் இரண்டு நகை எடுத்திருந்தனர், அதன் பில்லும் வந்தது.

அதை கையில் வாங்கிய சுமித்ராவிடம் இருந்து. திரும்ப வாங்கிய வைஷ்ணவி, ''அவர்கிட்ட கொடுத்துடுங்க'' என்று கார்த்திக்கை காட்டினாள்.

அந்த கடை சிப்பந்தி விழிக்க. ''குடுங்க சார்!'' என்றாள் அலட்சியமாக.

''வேண்டாம் வைஷு!'' என்று சுமித்ரா சொல்ல.

''வாயை மூடு எருமை மாடே! உனக்காக தான் நான் சண்டை போடறேன்! இல்லைன்னா எனக்கென்ன வந்தது!'' என்று அந்த சுமித்ராவிடம் எரிந்து விழுந்தாள்.

சுமித்ரா மௌனமாகிவிட. வைஷ்ணவி கார்த்திக் என்ன செய்கிறான் என்று தான் பார்த்தாள்.

கார்த்திக்கிடம் அந்த சிப்பந்தி போய், ''சார்! அவங்க குடுக்க சொன்னாங்க!'' என்று கை காட்ட. கார்த்திக் அவர்களை கூட பார்க்கவில்லை. அவசரமாக சக்தி எங்கே இருக்கிறாள் என்றுதான் பார்த்தான்.

சக்தி அங்கே வேறு எதையோ பார்த்துக் கொண்டிருந்தாள் என்பதை விட. வேறு பார்ப்பது மாதிரி முயன்று மனதை அமைதிபடுத்திக் கொண்டிருந்தாள். இதுவரை யாரும் அவளிடம் இப்படி பேசியதே இல்லை.

அங்கே இருந்தால் அந்தப் பெண்களின் புறமே பார்வை செல்வதால் அதன் எதிர்புறம் வந்து நின்று கொண்டிருந்தாள்.

சக்தியின் கவனம் இங்கே இல்லவே இல்லை என்று உறுதிபடுத்திக் கொண்ட கார்த்திக்.

ஒன்றும் சொல்லாமல் அந்த பில்லை வாங்கி வைத்துக் கொண்டு எல்லாவற்றிற்கும் சேர்த்து பணம் கொடுத்தான்.

''அதானே பார்த்தேன்! அவன் மட்டும் வாங்காம இருந்திருக்கட்டும்?'' என்று சுமித்ராவிடம் வைஷ்ணவி கோபப்பட.

''எனக்கு பயமா இருக்கு வைஷு! அவங்க திட்டு வாங்க!'' என்றாள்.

''போடி! எது வந்தாலும் நான் பார்த்துக்கறேன்! அவன் மட்டும் எனக்குத் தெரியாம உன்னை திட்டு னான்னா சொல்லு! நான் பார்த்துக்கறேன்!'' என்றான்.

கடையின் முதலாளி யோசனையாக பார்க்க. கார்த்திக் எந்த விளக்கமும் குடுக்கவில்லை.

கடை முதலாளியாகவே பேச்சுக் கொடுத்தார். ''ரொம்ப நல்லா வாழ்ந்த குடும்பத்தை சேர்ந்தவங்க! இப்போவும் வசதிக்கு குறைச்சல் இல்லை. ரொம்ப வருஷமா வேற ஊர்ல இருந்து இப்போ தான் இங்க வந்து இருக்காங்க. சின்ன பொண்ணுங்கன்றதால யாரு என்னன்னு எனக்கு அடையாளம் தெரியலை அப்புறம் அவங்க அம்மா போன் பண்ணி சொன்னாங்க'' என்றவர்.

''உங்களுக்கு'' என்று அவர் ஆரம்பிக்க.

சக்தி அவர்கள் புறம் வருவதை கண்டவர், கார்த் திக்கின் சிறு கையசைவில் பேச்சை அவராகவே நிறுத்தி விட்டார்.

கார்த்திக் என்ன நினைக்கிறான், அவனுக்கு விவரங்கள் தெரியுமா? தெரியாதா? என்பது போல பார்க்க. அவ ளுக்கு ஒன்றும் தெரியவில்லை, அவன் தான் கறுப்பு கண்ணாடி அணிந்திருக்கிறானே!

சக்தியும் அந்த பெண்களின் புறம் கண்கள் திருப்பக்கூடாது. கூடாது. என்று நினைத்துக்கொண்டே

கதவு வரை போனவள், முடியாமல் அவர்களைத் திரும்பி பார்க்க அவர்கள் இவளை தான் பார்த்திருந்தனர்.

அந்தப் பெண் சுமித்ரா சாதாரணமாக தான் பார்த்துக் கொண்டிருந்தால். ஆனால் அந்த வைஷ்ணவி முகத்தில் கோபத்தை அப்பட்டமாக காட்டினாள்.

ஏன்? ஏன்? ஏன்? என்று சக்தியின் மண்டையை குடைந்தது.

கார்த்திக்கிடம், ''அந்த பெண் என்னை முறைக் கிறாள்'' என்று சொல்ல வந்தவள், ''ஆமா, சொன்னா இவன் பெரிய இவன் மாதிரி என்னை திட்டுவான். இதுக்கு தான் தெரியாதவங்க கிட்ட எப்பவும் பேசக் கூடாது. உனக்கு இது தேவை தான்'' என்று அவளுக்கு அவளே சொல்லிக்கொண்டே போனாள்.

அவர்கள் கடையின் வாசலில் நிற்க. காரை கருப் பண்ணன் கொண்டு வரவும், எப்போதும் போல கார்த்திக் கதவை திறந்து விட சக்தி ஏறினாள்.

அதை பார்த்த சுமித்ராவின் கண்களில் வருத்தம் தோன்ற. அதை பார்த்த வைஷ்ணவியின் கண்களில் அவ்வளவு கோபம் தோன்றியது.

காரிலும் ஏதாவது கருப்பண்ணனுடனோ கார்த்திக் குடனோ வளவளக்கும் அவள் அன்று அமைதியாகவே வந்தாள்.

கார்த்திக் என்று அவள் சாப்பிட்டாளா இல்லையா என்று அவனே சரிபார்த்துக் கொண்டான். அன்று போல கலாட்டா எதுவும் செய்யவில்லை, அவள் நேரத்திற்கு சாப்பிட்டு விட்டாள்.

இரவு எட்டு மணி இருக்கும் போது அவளின் அப்பா போன் செய்ய, "எப்போப்பா வர்றீங்க?" என்றாள் எடுத்த உடனேயே.

மகள் அப்படிக் கேட்டதுமே வீரமணி பதட்டமாகி விட்டார். அவர் எத்தனை முறை சக்தியை விட்டு டூர் வந்திருக்கிறார். எப்போதும் சக்தி இந்த மாதிரிக் கேட்டதேயில்லை.

என்னவோ இரண்டு மூன்று நாட்களாக அவர்களை சக்தியின் மனம் தேடியது.

கார்த்திக் அவளிடம் சற்று கடுமையாக நடந்து கொள்வதினால் அவர்களை மனம் தேடியதோ? இல்லை இன்று சந்தித்த அந்த பெண்கள். அதிலும் வைஷ்ணவி யின் கண்களில் தெரிந்த வெறுப்பு பயமாக இருந்தது சக்திக்கு என்னவோ நடக்க போவதாக.

"ஏன்மா?" என்றார்.

"இல்லைப்பா, கேட்டேன்" என்றாள் சலிப்பாக.

அவரிடம் இருந்து போனை வாங்கிய அவரின் மனைவி தெய்வானை. 'என்ன சக்திம்மா?" என்றார்.

"ஐ மிஸ் யூ மா! நீ எப்போ வர்ற!" என்றாள் குரல் கமறியது.

"சீக்கிரம் வந்துடறோம் சக்திம்மா!" என்றார் அவர். "என்ன சக்தி ஏதாவது பிரச்சனையா?"

"இல்லைம்மா! என்னவோ தனியா இருக்குற மாதிரி இருக்கு!" என்றாள்.

மகளை சமாதானப்படுத்த அவளிடம் சிறிது நேரம் பேசிக்கொண்டு இருந்தார் தெய்வானை.

அவளிடம் போன் பேசி முடித்ததுமே அவர் உடனே கார்த்திக்கிற்கு அடித்தார்.

''சொல்லுங்கம்மா'' என்று கார்த்திக் கேட்டதுமே.

''என்ன பிரச்சனை கார்த்திக்? சக்தி ஏன் அப்செட்டா இருக்கா! எப்பவுமே அவ இப்படி இருந்ததே இல்லை! எல்லாத்தையும் ஈஸியா எடுத்துக்குவாளே!'' என்றார்.

''ஒண்ணும் பிரச்சனை இல்லீங்களே!'' என்றான் கார்த்திக்.

''நிச்சமயா தெரியும் தானே உனக்கு? தெரியாம ஏதாவது இருக்கப் போகுது!'' என்றாள் கவலையாக.

''இல்லைங்கம்மா, எனக்கு நல்லா தெரியும்! என்ற கார்த்திக். ''எதுக்கும் நான் மேடம் கிட்ட பேசறேன்'' என்றான்.

''எங்க இருக்க கார்த்திக்?''

''வெளில இருக்கேன்மா.''

''முதல்ல வீட்டுக்கு போ கார்த்திக்! அவ தூங்க போற வரைக்கும் நீயும் வீட்லயே இரு!'' என்றார். குரலிலேயே அவரின் கவலை கார்த்திக்கிற்கு நன்கு தெரிந்தது.

கார்த்திக் விரைந்து வீட்டிற்கு வர சக்தி அவளின் ரூமில் இருந்தாள்.

முனியம்மாவை விட்டு அவளை அழைத்து வர சொன்னவன். ''என்ன மேடம் ஏதாவது பிரச்சனையா'' என்றான்.

''இல்லையே!'' என்றாள் சக்தி.

''அம்மா சொன்னாங்களே! நீங்க ஏதோ அப்செட்ன்னு!''

"அம்மா சொன்னாதான் நான் அப்செட்ன்னு உனக்குத் தெரியுமா?" என்றாள்.

"நீங்க சின்ன பொண்ணு இல்லை மேடம்! இப்படி சின்னச் சின்ன விஷயத்துக்கு அப்செட் ஆகறதுக்கு" என்று அவன் சொல்லி மேலே பேசப் போக.

"அப்பா! அட்வைஸ் திலகம்! கொஞ்ச நேரம் அட்வைஸ் பண்ணாம வேற ஏதாவது பேசறதுன்னா பேசு! இல்லைனா எதுவும் பேசாத!" என்றாள் சலிப்பாக.

கார்த்திக் வாயை மூடிக்கொள்ள.

"யார் கார்த்திக் அந்த பொண்ணுங்க? அவங்களுக்கு என் மேல என்ன கோபமா இருக்க முடியும்! அவங்களை பத்தின விவரம் தெரிஞ்சிக்க முடியுமா!" என்றாள்.

"ம்கூம், முடியாது! வயசு பொண்ணுங்க நாம ஏதாவது விசாரிக்க போய் தப்பாயிடுச்சுன்னா! வேண்டாம்! அவங்களை விட்டுடுங்க! அவங்களை மறந்துடுங்க!" என்றவன்.

அவளை போலவே. "நீங்களும் வேற ஏதாவது பேசற துன்னா பேசுங்க! இல்லை, எதுவும் பேசாதீங்க!" என்றான்.

"ம்" என்று அமைதியானவள். உடனேயே ஞாபகம் வந்தவளாக, "ஆமாம்! யாருக்கு கார்த்திக் காலையில நகை வாங்கின? அந்தக் கடைக்காரர் சொன்னார்!" என்றாள்.

கார்த்திக்கிற்கு ஒரு நிமிடம் எதுவும் புரியவில்லை. அவள் எதைப்பற்றி சொல்லுகிறாள் என்று. ஏனென்றால் வைஷ்ணவி சுமித்ராவின் நகைகளுக்கும் அவன் தானே பணம் கொடுத்தான்.

அவன் விழிக்க.

"அதான் பா அந்த மூணு லட்சம்!" என்று அவள் எடுத்துக் கொடுக்கவும் தான். ஹப்பாடா என்று அவனின் மூச்சு வெளியே வந்தது. சுமித்ரா, வைஷ்ணவியின் பில்கள் அதைவிட அதிகம். சுமார் ஐந்து லட்சம்.

சாமான்ய மக்களால் யோசித்து செய்யப்படும் செலவுகள் அவனால் எப்போதுமே தண்ணீராய் செலவு செய்யப்படும். எல்லாம் கிரானைட் செய்யும் மாயம்.

"கலெக்டர் பேரனுக்கு காதுகுத்து! அதான் நம்ம கிஃப்ட் பண்ணினோம்!" என்றான்.

"லஞ்சமா?" என்றாள் காட்டமாக சக்தி.

"லஞ்சம்னு ஏன் சொல்றீங்க ...ம். இப்போ நீங்க உங்க பிரண்ட் கல்யாணத்துக்கு கூட நகை வாங்கினீங்க. அதை ப்ரெசென்ட் பண்ண போறீங்க! அது லஞ்சமா?" என்றான்.

"அவ என் பிரண்ட் கார்த்திக்!"

"இவர் என் பிரண்ட் மேடம்!"

சக்திக்கு மேலே என்ன பேசுவது என்றே தெரிய வில்லை. கார்த்திக்கிடம் வாக்குவாதத்தில் ஈடுபடவும் மனமில்லை. லஞ்சம் என்பது அவளுக்குப் பிடிக்காத விஷயம் என்றாலும் கார்த்திக்கிற்காக அதை ஒதுக்கி னாள்.

"போ! நீ என்னை ஏய்க்கற கார்த்திக்" என்றாள் சலுகையாக. அந்த வார்த்தைகளைக் கேட்டு மனதிற்குள் அதிர்ந்த கார்த்திக், மேலே எதுவும் பேசவில்லை.

மெய்யென்பர் பொய்யென்பர்

மெய்யை மெய் தீண்டும் போது

மெய்யே பொய்யாகிப் போனால்

பூவை மெய்யும் பொய்யாகுமோ?

(மெய் = உடலும், உண்மையும்).



# 5

பொய்யாய் பழங்கதையாய்க் கனவாய்

மெல்லப் போனதுவே

- பாரதி

அடுத்த நாள் காலை சக்தி கண்விழித்தது அவளின் அம்மா தெய்வானை முகத்தில் தான்..

''அம்மா!'' என்று அவளின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள், எப்போ வந்தீங்க?''

''இப்போ தான் வர்றேன்.''

''ஆனா நீங்க வர்றதுக்கு இன்னும் ஒன் வீக் இருந் ததே!''

''என் பொண்ணு என்னை மிஸ் பண்ணும்போது எங்கயாவது உட்கார்ந்துட்டு இருப்பனா என்ன? நீ பேசி முடிச்சதும் ஃபிளைட் பார்த்தோம், ஒரு டூ ஹவர்ஸ்ல ஃபிளைட் இருந்தது. உடனே ரூமை வெகேட் பண்ணி,

ஃபிளைட் பிடிச்சு சென்னை வந்து, இப்போ இங்க வந்துட்டோம்'' என்றார்.

''ஸோ ஸ்வீட் மாம் யூ ஆர்'' என்றாள் சக்தி அவரின் கன்னத்தில் முத்தமிட்டு கொண்டே. சக்தி அவளின் அம்மாவிடம் கொஞ்சவது அதிகமல்ல, மிக மிக அதிகம். அம்மாவை பார்த்ததும் நேற்று இருந்த அவளின் மனசோர்வுகள் எல்லாம் போயே போச்சு. போயிந்து. இட்ஸ் கான்.

வேகமாக ரூமை விட்டு அப்பாவைப் பார்க்க ஓடி வந்தாள், அவர் ஹால் சோபாவில் உட்கார்ந்து பேப்பர் படித்துக்கொண்டு இருந்தார். அங்கேயே தான் கீழே இன்னும் கார்த்திக் உறங்கிக்கொண்டு இருந்தான்.

''அப்பா!'' என்றபடி சக்தி அவரின் பக்கத்தில் அமர.

''என்ன சக்திம்மா? இப்படி அப்பாவையும் அம்மாவையும் பயமுறுத்திட்டியே! என்னடாம்மா, என்ன ஆச்சு? என்றார்.

''ஒண்ணும் ஆகலைப்பா! என்னவோ உங்களைப் பார்க்கணும் போல இருந்துச்சு!''

''இதுக்கு தான் கூட வான்னு கூப்பிட்டாலும் வர மாட்டங்கற'' என்றார்.

அதற்கு பதில் ஒரு புன்னகை மட்டுமே. சக்திக்கு அப்படி வெளிநாடுகளில் சுற்ற பெரிதாக ஒன்றும் ஆர்வமில்லை. அதுமட்டுமில்லாமல் அவளின் அம்மாவும் அப்பாவும் காதல் மணம் புரிந்தவர்கள். ஆரம்ப காலத்தில் மிகுந்த சிரமங்களை அனுபவித்தவர்கள்.

அவர்களது பெரிய கூட்டுக் குடும்பம். சக்தி எட்டாவது படிக்கும் போதோ என்னவோ தான் தனியாக வந்தார்கள்.

அதுவும் கூட்டு குடும்பத்தில் இருக்கும் போது அவர்களின் பாட்டி ரொம்ப ஸ்ட்ரிக்ட். இவர்கள் காதல் மணம் புரிந்தவர்கள் என்பதால் எல்லா வேலைகளும் இவளின் அம்மாவின் தலையில் தான் விழும். என்ன செய்தாலும் அதில் பேச்சும் வாங்குவார்.

தனியாக வந்த பிறகு தான் அவளின் அம்மாவிற்கு நிம்மதியான மனநிலை கிட்டியது என்று சக்திக்கு தெரியும்.

இப்போது அதிக இடங்களுக்கு அடிக்கடி சென்றாலும் முன்பு எங்கேயும் சென்றது கிடையாது. ஏன் தனிமை என்பதே வீரமணிக்கும் தெய்வானைக்கும் அரிதான ஒன்று.

அதனால்தான் தான் ஒற்றை பெண்ணாய் நின்று விட்டோமோ என்று வளர்ந்த பிறகு சக்திக்கு தோன்று வது உண்டு. அதனால் தான் அம்மா அப்பாவின் தனி மையில் என்றுமே சக்தி குறுக்கிட மாட்டாள்.

''போங்கப்பா! எனக்கு சைட் சீயங் எப்பவுமே போரிங்'' என்று சமாளித்தாள்.

''காலேஜ் எப்படி இருக்கு?'' என்று அவர் விசாரிக்க.

''ஓஹ்! இட்ஸ் ஃபைன் பா! போன வருஷம் வரைக்கும் நான் காலேஜ் ஸ்டூடண்ட்! இப்போ நான் ஒரு காலேஜ்க்கு ஓனர். இட்ஸ் எக்சைடிங்!''

''நான் ப்ரின்சிபல்க்கு மரியாதை கொடுத்தது போய், நான் போனாலே எல்லோரும் எழுந்து நிக்கறாங்க! இது

கூட நல்லா இருக்குப்பா! ஆனா இந்த கார்த்திக் அலப் பறை தான் தாங்க முடியலை!'' என்று அவள் சொல்லும் போதே தெய்வானை காபியுடன் வந்தார்.

''சும்மா கார்த்திக்கை சொல்லக் கூடாது! நீ என்ன பண்ணின?'' என்ற கேள்வியுடன்,

''அம்மா'' என்று சக்தி கத்த.

''சக்தி! கத்தாத! கார்த்திக் முழிச்சிக்கப் போறான்! அவன் தூங்கட்டும்!'' என்றார் கரிசனமாக. அவருக்கு கார்த்திக் என்றால் மிகவும் இஷ்டம். ஏனென்று தெரி யாமலேயே சிலர் மேல் நாம் பாசம் வைத்து விடுவோம், அப்படிப்பட்ட பாசம் தெய்வானையுடையது கார்த்திக் மீது.

சக்தி கத்திய கத்தில் கார்த்திக்கிற்கு விழிப்பு வந்தது, இருந்தாலும் தன்னுடைய பேர் அடிபடுவதால் போர் வையை விலக்காமல் அசையாமல் படுத்திருந்தான்.

''அதும்மா நான் காலேஜ்க்கு ஜீன்ஸ், ஸ்கர்ட், இது மாதிரி ட்ரெஸ்ல போகக்கூடாதாம்.''

''சரியாத்தானே சொல்லியிருக்கான்! நீ அங்கிருக்கிற ஸ்டுடண்ட்ஸுக்கு ரோல் மாடலா இருக்கணும் சக்தி! அதுவுமில்லாம உனக்கு இருபத்தைஞ்சு வயசானாலும் நீ பார்க்க இன்னும் ஒரு லேடி அப்பியரன்ஸ்ல இல்லை, ஒரு கேர்ள் அப்பியரன்ஸ்ல தான் இருக்க. நீ பார்வைக்கு ரொம்ப சின்ன பொண்ணாத் தெரியக்கூடாதுன்னு அப்படி சொல்லியிருப்பான்'' என்றார்.

''போ! நீ எப்பவும் அவனுக்கு தான் சப்போர்ட் பண் ணுவ, என்னோட முடியே பார் என்னோட ஷோல்டர்

வரைக்கும் தான் இருக்கு, அதையும் ஹேர் பேண்ட் போட சொல்றான்'' என்று விளையாட்டுத்தனமாக அலுத்தாள்.

''நீ இன்னும் சின்ன பொண்ணில்லை சக்தி, அதுல இருந்து வெளில வா. கொஞ்சம் சீரியஸா பேசலாம்'' என்றார் தெய்வானை.

''என்னமா?'' என்று உடனே முகபாவனையை மாற்றினாள்.

''உனக்கு எப்படியோ சக்தி? நேத்து நீ பேசினதுக்கு அப்புறம் என் மனசு என்ன பாடுபட்டுச்சின்னு எனக்கு தான் தெரியும்'' என்றார் கவலையாக.

''சரி மா! என்ன பண்ணலாம்.''

''கல்யாணம் பண்ணலாம்'' என்றார்.

''கல்யாணமா?''

''ம்! கல்யாணம் தான்!''

''உங்கபபா இன்னும் நீ சின்ன பொண்ணு மாதிரி இருக்கன்னு யோசிக்கறார்! என்ன உயரம் எல்லாம் நல்ல உயரமா தான் இருக்க! உடம்பு தான் ஏறலை! ஒல்லியா இருக்க! அதுக்கென்ன பண்றது உன் வயசுல எனக்கு நீ அஞ்சு வயசு குழந்தை'' என்றார் டென்ஷனாக.

''எல்லோரும் இந்த ஜீரோ சைஸ் லுக்குக்கு எவ்வளவு கஷ்டப்படறாங்க. டையட் ஜிம் அது இதுன்னு. எனக்கு தானா இருந்தா எதுக்கு கவலை.''

தெய்வானை முறைக்க.

''ஒகே! ஒகே! நான் வீக்கா இருக்கேன்! ஒத்துக்கறேன்! நான் இன்னும் ஸ்ட்ராங் ஆகணும்!'' என்று கார்ட்டூனில்

வருவது போல பேசி பயில்வான் போல் புஜத்தை கையால் தட்டி காமிக்க. இன்னும் டென்ஷன் ஆனார் தெய்வானை.

''முதல்ல நீ இந்த கார்ட்டூன் சேனல் பார்க்கறதை நிறுத்தணும்! அப்போ தான் நீ பெரிய பொண்ணு ஆவ!'' என்று தெய்வானை சொல்ல.

அவரின் காதருகில் சென்று, ''நான் பெரிய பொண்ணாகி பன்னண்டு வருஷம் ஆகுது!'' என்றாள் ரகசியமாக.

''கர்மம்! கர்மம்!'' என்று அவளை இரண்டு அடி வைத்தார்.

''நான் பெரிய பொண்ணு ஆகிட்டேன்னு ஒத்துக்குறியா, கார்ட்டூன் பார்க்கறவங்க இப்படி பேச மாட்டாங்க!'' என்றாள் கண்ணடித்து.

''நான் உன் அம்மாடி!''

''ஸோ வாட் மாம்!'' என்று மறுபடியும் கழுத்தை கட்டிக்கொண்டவள்.

''நீயென்ன இதுக்கு போய் டென்ஷன் ஆகற. நீ கல்யாணம் பண்ணிக்கோன்னா கல்யாணம் பண்ணிக்கறேன்! உன் பேச்சை நான் எப்போ மறுத்திருக்கிறேன்!'' என்று உடனே சக்தி சம்மதம் கொடுக்க.

''பாருங்க! அவளே சரின்னு சொல்லிட்டா! நீங்க மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிங்க!'' என்றார் வீரமணியிடம்.

''சரி!'' என்று வீரமணி சொல்லும்வரை விடவில்லை.

அவர் சரியென்று சொல்லுவதற்கு காத்திருந்தது போல உடனே வேறொன்றை ஆரம்பித்தார் தெய்வானை.

கார்த்திக் உறங்கிக் கொண்டிருக்கிறாள் என்று நினைத்து தைரியமாகப் பேசினார்.

''நம்ம கார்த்திக்கையே பார்க்கலாமா! நிறைய வருஷமா நம்ம கூட இருக்குற பையன். நல்ல பையன். நமக்கு நல்லா தெரிஞ்சவன். தொழிலை நல்லா பார்த்துக்கறான். சக்தியும் நம்ம கூடவே கல்யாணத்துக்கு அப்புறமும் இருப்பா. என்ன சொல்றீங்க?'' என்றார் வீரமணியும் சக்தியையும் பார்த்து.

வீரமணி அது சரி வருமா என்று யோசிக்கும் முன்னரே. ''அம்மா! கார்த்திக் என்னை விட சின்னவன்'' என்றாள் சக்தி.

''என்ன சின்னவனா? உளறாத! எப்படி வாட்ட சாட்டமா இருக்கான்! நீ சின்னவன்னு சொல்ற!''

''இல்லைம்மா, பார்க்க தான் அவன் அப்படியிருக் கான், ஆனா என்னைவிட பத்து நாள் சின்னவன்.''

''உனக்கு எப்படித் தெரியும்?''

''அவன் சொன்னான்!''

''அவன் சும்மா விளையாட்டுக்குச் சொல்லியிருப் பான்.''

''இல்லைமா நான் அவன் டிரைவிங் லைசென்ஸ் பார்த்தேன்!''

''என்னங்க கார்த்திக் சக்தியை விட சின்னவனா?'' என்று தெய்வானை வீரமணியை பார்த்துக் கேட்டார்.

கார்த்திக் மூச்சு விடவும் மறந்து போர்வைக்குள் இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் இதயம் துடிக்கும் ஓசை அவனுக்கே கேட்டது.

''தெரியலை தெய்வா! ஒரு பதினாறு பதினேழு வயசுல நம்ம கிட்ட வந்தான்னு நினைக்கிறேன்! உனக்கு எத்தனை வயசுன்னெல்லாமா கேட்பாங்க! அப்போவே உயரமாதான் இருப்பான். தவிர ஒல்லியா இருப்பான். வயசெல்லாம் தெரியலை!'' என்றார்.

''என்ன படிச்சிருந்தப்போ வந்தான்'' என்று படிப்பை வைத்து வயதை கணக்கிட முயன்றார் தெய்வானை.

''பத்தாவதா பன்னண்டாவதா, எனக்குச் சரியா ஞாபக மில்லை!'' என்றார் வீரமணி.

''பத்து நாள் தானே சக்திம்மா! நம்ம கார்த்திக் மாதிரி ஒருத்தன் உனக்கு மாப்பிள்ளையா வரணும்னு எனக்கு ஆசை. உன்னை நல்லா பார்த்துக்கறான்'' என்றார்.

''ஆமா மா அவன் சின்னவன், இது சரிவராது! நான் வேற அவனை வா போன்னு கூப்பிட என் பிரண்ட்ஸ் எல்லோரும் கேட்க, அவன் சின்னவன்னு டமாரம் அடிச்சிருக்கேன்.''

''உனக்குக் கார்த்திக்கை பிடிக்குமா? இல்லையா?''

''இது ஒரு கேள்வியா? எனக்கு கார்த்திக்கை பிடிக் கும்ங்கறது ஊருக்கே தெரிஞ்ச ரகசியம்'' என்று சிரித்தாள் சக்தி.

''அப்போ பேசலாமாடா'' என்று தெய்வானை மறு படியும் கேட்க.

''வேண்டாமா! அவன் சின்னவன்! ஆனா எனக்கு கார்த்திக் மாதிரி ஒரு மாப்பிள்ளை பாருங்க!'' என்றாள்.

''ஏன்டாம்மா அசல் உன் கண் முன்னாடி இருக்கான்! நீ அவனை மாதிரி ஒரு நகலை கொண்டுவான்னா நான் எங்க போவேன்'' என்றார்.

''சக்திக்கு மாப்பிள்ளை பார்க்கறதுன்னா சும்மாவா! தேடுங்க!'' என்றாள் சிரிப்புடனே.

கார்த்திக்கிற்கு இப்போது தான் சற்று மூச்சு சரியாகிற்று. ஆனாலும் முள் மேல் படுத்திருப்பது போல இருந்தது. இவர்கள் எப்போது எழுந்து போவார்களோ தெரியவில்லை என்று இருந்தது.

''முடிவா சொல்றியா சக்திம்மா?'' என்றார் வீரமணி.

''முடிவா தான் சொல்றேன்! எனக்கு கார்த்திக் மாதிரி ஒரு மாப்பிள்ளை தான் வேணும்! அப்படியே பாருங்க!'' என்றாள் சக்தி.

பிறகு, ''அப்பா! நாளைக்கு என் பிரண்ட் கஸ்தூரியோட கல்யாணம் பா! நம்ம போகணும்!'' என்றாள்.

''நீ போயிட்டு வாம்மா!''

''ம்கூம்! அதெல்லாம் முடியாது! அவங்க அப்பா, அம்மா, மாப்பிள்ளை வீட்டுக்காரங்களோட வந்து நமக்கு மரியாதை செஞ்சு பத்திரிகை வெச்சிட்டு போனாங்க. நீங்க வர்றீங்க! நான் உங்களோட தான் போவேன்!'' என்றாள்.

''கல்யாணம் கோயில்ல! ரிசப்ஷன் மதியம் பதினொண்ணுல இருந்து ரெண்டு வரைக்கும், நம்ம ரிசப்ஷன் தான் போறோம்!'' என்றாள்.

அவர் யோசிக்கும் போதே தெய்வானை. ''போங்க! நாலு எடத்துக்கு போனா தான் நல்ல மாப்பிள்ளை யாராவது கண்ல படுவாங்க! இல்லை அட்லீஸ்ட் அவங்க அப்பா அம்மாவாவது கண்ல படுவாங்க!'' என்றார்.

''மா நீ வரலை!''

''இல்லை சக்தி, அப்பாவை கூட்டிட்டு போ! அம்மா வரலை!'' என்றவர், ''ப்ளீஸ்டா'' என்றார்.

''சரி போ!'' என்று சக்தி எழுந்து போக.

''என்னங்க இப்படி சொல்லிட்டா! எனக்கு கார்த்திக் மாப்பிள்ளையா வரணும்னு தான் ஆசை! நம்ம பொண்ணு கூடவே இருப்பான்னு நினைச்சேன்! வரப்போற மாப்பிள்ளை கிட்ட நம்ம விடவா சொத்து அதிகமா இருக்க போகுது? எதுக்கு தெரியாதவங்க யாரையாவது பார்க்கணும்.''

''தெய்வா! இனிமே அவளுக்கு மாப்பிள்ளை பொறக்க போறது இல்லை! கார்த்திக் தான் அவளுக்கு மாப்பிள்ளையா வரணும்னு விதி இருந்தா அவன் தான் வருவான்! அவன் வரக்கூடாதுன்னு இருந்தா நம்ம என்ன செய்ய முடியும் சொல்லு! எல்லாம் நல்லதாவே நடக்கும் விடு!'' என்று அவர் எழுந்து போக. தெய்வானையும் அவர் பின்னோடு போனார்.

அதன் பிறகே கார்த்திக் எழுந்து உட்கார்ந்தான்.

யாரும் பார்க்கும் முன்னர் அவனின் ரூமிற்கு வந்து விட்டான்.

நெஞ்சு பட படவென்று அடித்துக் கொண்டது. சிறிது ஆசுவாசப்படுத்திக் கொண்டே வேலையை கவனிக்கப் போனான்.

அடுத்த நாள் திருமணத்திற்கு கிளம்பினர். வீரமணி எங்கே போனாலும் இதுவரை அவரின் நிழலாய் தான் கார்த்திக் இருப்பான்.

இன்று வீரமணியும் சக்தியும் ரெடியாகி வர. கார்த்திக் இன்னும் ரெடியாகவே இல்லை.

"கார்த்திக், நீ வரலையா?" என்றார் வீரமணி.

"இல்லைங்கய்யா நீங்க போங்க!" என்றான் கார்த்திக். எப்போதும் அப்படி சொன்னதே இல்லை. அவருக்கு முன் அவன் நிற்பான்.

"ஏன் கார்த்திக்?" என்றாள் சக்தி.

"கொஞ்சம் குவாரில வேலை இருக்குது."

"நீ வந்தா ரிசப்ஷன் முடிச்சிட்டு அப்படியே நம்ம வாங்கியிருக்கிற காலேஜ் போய் பார்த்துட்டு வரலாம்னு நினைச்சேன்" என்று வீரமணி சொல்லும்போதே.

அங்கேயிருந்த தெய்வானை, "நீ போ கார்த்திக்! சக்திக்கு மாப்பிள்ளை பார்க்கலாம்னு இருக்கோம்! கல்யாணம் மாதிரி இடத்துக்கு போனா தான் ஏதாவது மாப்பிள்ளை நமக்குத் தகுந்த மாதிரி இருக்கான்னு தெரியும்! நீ போ நம்ம சக்திக்கு ஏத்த மாப்பிள்ளையா பாரு! இவருக்கு சாமர்த்தியம் பத்தாது! சக்திக்கு மாப்பிள்ளை பார்க்க வேண்டியது உன் பொறுப்பு!" என்றார்.

"என்னம்மா? அப்பாக்கு சாமர்த்தியம் பத்தாதுன்னு பொசுக்குன்னு சொல்றீங்க! எவ்வளவு சாமர்த்தியமா உங்களை லவ் பண்ணிக் கல்யாணம் பண்ணியிருக்கார்! இப்படி சொல்லிட்டீங்களே!" என்று போலியாக வருத்தப்பட,

"அதனால தான் சக்திம்மா எனக்கு சாமர்த்தியமில்லை" என்று வீரமணி சொல்ல,

''அப்பாவும் பொண்ணும் என்னை ஓட்டறீங்களா? இருங்க உங்க ரெண்டு பேருக்கும் நைட் டிபன் கிடையாது!''

''என்ன டிபன் கிடையாதா?'' என்று வீரமணி போலியாக பயப்பட.

''அப்பா! டோன்ட் வொர்ரி! டிபன் கிடையாது, ஒன்லி சாப்பாடு!'' என்று சக்தி சொல்ல. அங்கே எல்லோரும் சிரிக்க. கார்த்திக்கின் முகத்தில் சிரிப்பல்ல. ஒரு புன்னகையல்ல. ஒரு இளக்கம் கூட கிடையாது.

மூவரும் அவனை தான் பார்த்தனர். அதுவும் சக்தி வாய்விட்டே சொன்னாள், ''ஏன் கார்த்திக் எப்பவும் இப்படி சீரியஸா இருக்கற மனுஷனா பொறந்தா சிரிக்கணும்'' என்றாள்.

எதற்கும் கார்த்திக்கிடம் பதில் இல்லை.

''அவன் தான் அப்படின்னு தெரியும் இல்லை. ஏன் அவனை வீணா இழுக்கற, போ! கார்த்திக் சீக்கிரம் கிளம்பி வா'' என்று அவனை ரெடியாக அனுப்பினார் தெய்வானை.

ஐந்து நிமிடத்தில் வந்தான் கார்த்திக்.

பிறகு மூவரும் கிளம்பினர். கருப்பண்ணன் காரை எடுக்கப் போக.

''அதுதான் கார்த்திக் வர்றான் இல்லை, நீ இங்கேயே இரு!'' என்று வீரமணி அவனை நிறுத்தி விட்டார். கார்த்திக் வண்டியோட்ட. வீரமணி பக்கத்தில் அமர. சக்தி பின்னால் அமர்ந்தாள்.

திருமண வீட்டில் இவர்கள் கார் நின்றதுமே வேகமாக பெண்ணின் தந்தையும், மாப்பிள்ளையின் தந்தையும் வீரமணியை வரவேற்க விரைந்து வர. அவர்களோடு இன்னும் சில பேரும் வர. அவர்களோடு கேமராமேனும் லைட்பாயும் கேமராவையும் லைட்டையும் தூக்கி கொண்டு ஓடி வந்தனர்.

அந்தக் கூட்டத்தைப் பார்த்து சக்தி பயந்து விட்டாள். "அப்பா! நீங்க இறங்கி போங்க! நான் கார்த்திக் கார் பார்க் பண்ணின உடனே அவனோட வர்றேன்!" என்றாள்.

"நீங்க உங்க அப்பாவோட போங்க மேம்! அது தான் மரியாதை!" என்றான்.

"ஏன் உன்னோட போனா என்ன மரியாதை இல்லை! அங்க பாரு எத்தனை பேரு? இடிச்சு தள்ளிடுவாங்களோ என்னவோ? நான் போகலைப்பா! உனக்கு என்கூட வர இஷ்டமில்லைன்னா நான் தனியா போயிக்கறேன்!" என்றாள்.

அதற்குள் யாரோ வீரமணிக்காக கார் கதவைத் திறக்க அவர் இறங்கினார், அவர் இறங்கியதும் பெண்ணின் தந்தை, "கார்த்திக் தம்பி! இறங்குங்க! நம்ம பசங்க கார் பார்க் பண்ணிடுவாங்க!" என்றார்.

"இல்லைங்க! நீங்க அய்யாவை கூட்டிட்டு போங்க! நான் பார்க் பண்ணிட்டு வர்றேன்!" என்று அவர் மேலே பேசும்முன் காரை நகர்த்தி விட்டான் கார்த்திக்.

"சொன்னா எதையுமே புரிஞ்சுக்க மாட்டீங்களா. உங்களுக்கு அப்பாவோட போனா என்ன?"

''என்ன புரிஞ்சிக்கணும்? எனக்குக் கூட்டத்தைப் பார்த்தாலே பிடிக்காது! நான் போகலை! விடேன்! இதுக்கு ஏன் நீ இவ்வளவு பெரிய இஷ்யு பண்ற!'' என்று சக்தி கேட்க. கார்த்திக் மௌனியாகிவிட்டான்.

கார்த்திக் காரை பார்க் செய்ய, இவள் புறம் வந்து இவளுக்கு கதவை திறந்து விட்டான். இவன் கார் கதவை திறந்து விடவும் சக்தி இறங்கவும், எதிர்புறமாக அப்போது தான் ஒரு கார் வந்து நிற்க. அதில் இருந்தவர்கள் இதை கவனித்தனர்.

அவர்கள் இறங்கவில்லை, இவர்கள் செல்வதற்காக காத்திருந்தனர். கார்த்திக் அவள் இறங்கியதும் முன்னே நடந்தான். எப்போதும் சக்தி நடக்க அவளை முன்னே விட்டு பின்னே நடப்பான்.

இன்று முன்னே நடந்தான். சக்திக்கு அவனின் செய்கையே புது மாதிரியாக இருந்தது. ''கல்யாணத்துக்கே வரமாட்டேன்னு சொல்லிட்டு, எதுக்கு இப்படி ஓடறான்?'' என்பது போல பார்த்தவள், அவள் நடக்க தொடங்கினாள்.

அப்போது பார்த்து அவள் அணிந்திருந்த கொலுசு புடவையின் ஜரிகையில் மாட்டிக்கொள்ள.

அவளுக்கு நடக்க முடியவில்லை, தடுக்கியது. அவள் கீழே குனிந்து அதை எடுத்து விட முயல, அது வருவேனா என்றது. சக்திக்கு பொறுமையே போயிற்று, ஒரு இழு இழுத்து விடலாமா என்று பார்த்தால் புடவை கிழிந்து விடுமோ என்று இருந்தது.

திருமணம் முடிந்திருந்தால் புடவை கிழிந்தாலும் பரவாயில்லை என்று இழுத்திருப்பாள். ஆனால் இன்னும் மண்டபத்தின் உள்ளேயே போகவில்லையே.

சிறிது தூரம் நடந்துவிட்ட கார்த்திக் சக்தி வருகிறாளா என்று பின்னால் திரும்பி பார்க்க. அவள் குனிந்து ஏதோ செய்து கொண்டிருந்தாள்.

அவளின் அருகில் வந்த கார்த்திக், "என்ன ஆச்சு?" என்று கேட்டான்.

"கொலுசு புடவையில மாட்டிக்கிச்சு! வர மாட் டேங்குது. நடக்கும் போது தடுக்குது."

சுற்றும் பார்வையை விட்டான். அந்த சமயத்தில் பார்க்கிங்கில் யாரும் இல்லை, எதிரில் இருந்த காரோ அதன் ஆட்களோ கண்களில் படவில்லை.

அவன் அப்படியே உட்கார்ந்து ஜரிகையில் மாட்டி யிருந்த கொலுசை எடுக்க பார்க்க. அது வரவேயில்லை. மிகவும் சிரமப்பட்டு எடுத்தான்.

பார்ப்பவர்களுக்கு அவன் நிறைய நேரமாக அவளின் காலை பிடித்துக்கொண்டு ஏதோ செய்வது போல தோன்றும்.

காரில் மூன்று பெண்கள் இருந்தனர். ஒரு ஜோடி கண்கள் எந்த சலனமுமில்லாமல் பார்க்க. ஒரு ஜோடி கண்கள் கோபத்துடன் பார்க்க. ஒரு ஜோடி கண்கள் வருத்தத்துடன் பார்த்தது.

"ம்! வந்துடுச்சு!" என்று கார்த்திக் நிமிர்ந்தான். பின் சக்தி நடக்க. அவன் பின் தொடர்ந்தான்.

அப்போது தான் எதிரில் இருந்த காரை பார்த்தான். பார்த்தவுடன் டென்சனாகிவிட்டது. இவர்கள் கண்ணில் சக்தியோடு சேர்ந்து தனியாக படக்கூடாது என்று தான் அவளை அவளின் அப்பாவோடு போக சொன்னான்.

அவள் போகவில்லை. பிறகும் இவன் வேகமாக முன்னே போனான். பின்னே திரும்பி வரும்படி ஆகிற்று. அதுவும் அவளின் புடவையில் மாட்டியிருந்த கொலுசை வேறு எடுத்து விட்டுக் கொண்டிருந்தான். அதை வேறு பார்த்திருப்பார்கள், ஐயோ என்று இருந்தது.

இனி என்ன செய்ய முடியும். ஒன்றும் செய்ய முடியாதவனாக சக்தியை இடைவெளி விட்டு தொடர்ந்தான்.

''பாருங்கம்மா! நான் சொன்னேன் இல்லை! நீங்க தான் நம்பவேயில்லை'' என்றாள் எதிரில் இருந்த காருக்குள் முன் சீட்டில் அமர்ந்திருந்த வைஷ்ணவி, டிரைவிங் சீட்டில் அமர்ந்திருந்த அவளின் அன்னையிடம்.

''பாருங்க எப்படி அவளுக்கு கார் தொறந்து விடறான்! கொஞ்சமும் கூச்சமேயில்லாம பப்ளிக்ல காலை பிடிக்கறான் பாருங்க!'' என்று பொரிந்தாள்.

''அவன் புடவையில் மாட்டியிருந்த கொலுசை தானே எடுத்துவிட்டான்! நம்ம தான் பார்த்தமில்ல.''

''கொலுசு கால்ல தான் போடுவாங்க'' என்றாள் காட்டமாக.

என்ன சொல்வார் அவர். அமைதியாக அவர் இறங்க. அவரை தொடர்ந்து பின்னால் அமர்ந்திருந்த சுமித்ராவும் இறங்கினாள். வைஷ்ணவி இறங்கவேயில்லை.

"இறங்கு வைஷு!" என்று அவளின் அம்மா சொல்ல. "நான் வரலை போ! அவன் யாரோடவோ சுத்துற கண்றாவியை எல்லாம் என்னால பார்க்க முடியாது!" என்றாள் கோபமாக, சுமித்ராவை ஒரு முறை முறைத்துக் கொண்டே.

"வா வைஷு! இங்க எதுவும் சீன் க்ரியேட் பண்ணாத! என்னோட அமைதியா வர்ற! அப்படியே திரும்பவும் வர்ற! அங்க வாயே தொறக்கக் கூடாது! நம்ம ரொம்ப வருஷம் கழிச்சு இப்ப தான் இந்த ஊருக்கு வந்திருக் கோம், வந்தவுடனே உறவுகளுக்கு சலசலப்பை உண் டாக்காத" என்று அழுத்தமான குரலில் சொல்ல வேறு வழியில்லாமல் வைஷ்ணவி **இறங்கினாள்.**

"அவன் இப்படி நம்மளை விட்டுட்டு அவங்களோட சுத்தினா எல்லோரும் என்ன நினைப்பாங்க?"

"என்ன நினைப்பாங்க? ஒண்ணும் நினைக்க மாட் டாங்க! அவன் என் பையன்றதே யாருக்கும் தெரியாது. ரொம்ப வருஷம் கழிச்சு பார்க்கற எல்லோரும் உங்க பையன் எங்கன்னு கேட்பாங்க! யார் கேட்டாலும் கொஞ்சம் வேலையா வெளில போய் இருக்கான்னு சொல்லு!"

"மேல எதுவும் பேசக் கூடாது. நான் ஒண்ணும் அவன் என் பையன் இல்லைன்னு சொல்லலை! அவன் தான் நம்மள வேண்டாம்னு போயிட்டான். அவனா வரும் போது வரட்டும்" என்றார் அழுத்தமாக வாசுகி, கார்த் திக்கின் அம்மா.



# 6

**பக்தியினாலே-இந்தப்**

**பாரினிலெய்திடும் மேன்மைகள் கேளடி!**

**சித்தந் தெளியும்-இங்கு**

**செய்கை யனைத்திலும் செம்மை பிறந்திடும்,**

- பாரதி

அதட்டி உருட்டி வாசுகி, அதாகப்பட்டது நம் கார்த்திக்கின் அம்மா, வைஷ்ணவியின் அதாகப்பட்டது நம் கார்த்திக்கின் தங்கை. அவளின் வாயை கட்டி திருமண வீட்டிற்குள் அவளையும் சுமித்ராவையும் அதாகப்பட்டது நம் கார்த்திக்கின் தாய் மாமாவின் பெண். இருவரையும் அழைத்து சென்றார்.

அவர்களுக்கு அங்கே நல்ல வரவேற்பு. மாப்பிள்ளை வீட்டினர் அவர்களுக்கு நெருங்கிய சொந்தமே. மாப்பிள்ளையின் அன்னையும் தந்தையும் வாசலுக்கே வந்து அவர்களை அழைத்து சென்றனர்.

''வாம்மா! வா! வா! எப்பவும் போல வர்றேன்னு சொல்லிட்டு வராம இருந்திடுவியோன்னு மனசுக்குள்ள ஓடிட்டே இருந்தது, நீ வந்ததுல எனக்கு ரொம்ப சந்தோஷம்'' என்றார்.

''வாங்கண்ணி வாங்க! வாங்க!'' என்று வந்த மாப்பிள்ளையின் அம்மாவும். ''நீங்க வந்ததுல எனக்குத்

தலை கால் புரியலை போங்க! என்னவோ மனசு வந்து இப்பவாவது சொந்தக்காரங்க முகத்தையெல்லாம் பார்க்கணும்னு தோணிச்சே!'' என்று கை பிடித்து அழைத்துச் சென்றார்.

அவர் உள்ளே சென்றதும் பல உறவுகள் அவர்களைச் சூழ்ந்து கொள்ள. ''இந்த பொண்ணுங்க யாரு'' என்று ஆர்வமாக வைஷ்ணவியையும் சுமித்ராவையும் விசாரித்தனர்.

''இது என் பொண்ணு வைஷ்ணவி, இது என் அண்ணன் பொண்ணு சுமித்ரா.'' என்று அவர்கள் இருவரையும் அனைவருக்கும் அறிமுகப்படுத்தினர்.

''எங்க அண்ணி பசங்களை காணோம்.''

''சுமித்ராவோட அண்ணன் டாக்டர் மேற் படிப்புக்காக அமெரிக்கா போயிருக்கான். என் பையனுக்கு இங்க தான் வேலை, ஒரு வேலை இருந்ததினால எங்களோட வர முடியலை, அப்புறமா வர்றேன்னு சொல்லியிருக்கான்'' என்று சமாளித்தார்.

''பொண்ணுங்களை கண்ல காட்டிட்டீங்க. இன்னும் பசங்களை தான் காட்டலை, பார்க்கலாம் அதுக்கு எப்போ வேளை வருதுன்னு'' என்று ஒரு பெண்மணி சொன்னார்.

''ரெண்டு பொண்ணுங்களும் அம்புட்டு அழகா இருக்காங்க! எப்போ கல்யாணம் பண்ணப் போறீங்க! எங்க கிட்ட ஒரு வார்த்தை சொல்லாம கொள்ளாம அசல்ல பேசிடாதீங்க. நம்ம வீட்லயே நல்ல பசங்க இருக்காங்க'' என்றார் இன்னொரு பெண்மணி.

"அதுக்கென்ன அண்ணி சொல்லிட்டா போச்சு! ஆனா பாருங்க அதுக்கு அவசியமே வராதுன்னு நினைக்கிறேன்! எங்க வீட்டுக்குள்ளேயே பொண்ணு குடுத்து பொண்ணு எடுத்துக்கலாம்னு இருக்கேன். எனக்கு ஒரு பையன் பொண்ணு. என் அண்ணனுக்கும் அப்படித்தான்."

"எல்லாம் நான் வளர்த்த பசங்க! நம்ம கண் முன்னாடியே இருக்கும்! அதான்!" என்றவர்,

"பார்ப்போம் என் ஆசை அதுதான்! ஆனா கடவுள் என்ன வெச்சிருக்கான்னு அவருக்கு தானே தெரியும்" என்றார் தத்துவார்த்தமாக.

"ஒண்ணும் குறைபடாத வாசுகி உன் நல்ல மனசுக்கு நீ பட்ட கஷ்டம் எல்லாம் போதும்! நீயும் உன் பசங்களும் நல்லா இருப்பீங்க!" என்றார் ஒரு முதிய பெண்மணி.

"உங்க வாக்கு பலிக்கட்டும் அத்தை!" என்றார் வாசுகி. என்னதான் பேசிக்கொண்டு இருந்தாலும் அவரின் கண்கள் மகன் தென்படுகிறானா என்று அலசிக் கொண்டே இருந்தது.

வீரமணியும் சக்தியும் கார்த்திக்கும் உணவருந்தி விட்டு அப்போது தான் வந்தனர். வாசுகி அவர்களை பார்க்க. வீரமணி அப்போது தான் வாசுகியை பார்த்தார்.

அவருக்கு பார்த்ததும் சற்று அதிர்ச்சி, அது வாசுகி தானா என்று உற்று பார்த்தார். அவர் பார்க்கும் போதே அருகில் வந்த வாசுகி, "நல்லா இருக்கீங்களா அண்ணா?" என்றார்.

அவர் பேசிய பிறகு எப்படி பேசாமல் இருப்பது என்று வீரமணியும், "நல்லா இருக்கேன்மா! நீ எப்படி இருக்க?" என்றார்.

''இருக்கோம்'' என்றார் வாசுகி. கார்த்திக் யாரோ எவரோ போல பார்த்துக்கொண்டு நின்றிருந்தான்.

''இது என் பொண்ணு சக்தி'' என்று வீரமணி சக்தியை வாசுகிக்கு அறிமுகப்படுத்தி வைத்தவர்,

அவளிடம், ''இவங்களை உனக்கு ஞாபகம் இருக்காம்மா?'' என்று சக்தியிடம் கேட்டார்.

''எங்கயோ பார்த்த மாதிரி இருக்குப்பா! சரியா ஞாபகம் வரலை!'' என்றாள்.

''பார்த்து ரொம்ப வருஷம் ஆச்சு! ரொம்ப சின்ன பசங்களா இருக்கும் போது பார்த்தது, எப்படி நினைவு வரும்? அதுவுமில்லாம அதிகம் பார்த்தது இல்லையே'' என்று வாசுகி சொல்ல.

''என் நண்பன் சந்திரசேகர் மனைவி மா. அவன் இருந்த வரைக்கும் நானும் அவனும் ரொம்ப ஒண்ணுக்குள்ள ஒண்ணா இருந்தோம். குடும்ப அளவுல ரொம்ப பழக்கம் இல்லை! இவங்க அப்பா அப்படி! அப்புறம் என்னென்னவோ பிரச்சனை! ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பார்க்கலை! ரொம்ப நாள் கழிச்சு பார்க்கிறோம்!'' என்று சொன்னார்.

கார்த்திக் சற்று விலகி நின்றிருந்தான், இருந்தாலும் அவர்கள் பேசுவது கேட்கும் தூரத்தில் நின்றிருந்தான்.

''வணக்கம்மா'' என்று சக்தி கை குவித்தாள்.

அவளை பார்த்து புன்னகைத்த வாசுகி, ''என்ன படிச்சிருக்க சக்தி? என்ன பண்ற?'' என்று கேட்க. அவளின் கல்வித் தகுதிகளைச் சொன்னவள்.

''இப்போதான்ம்மா ஒரு காலேஜ் பொறுப்பெடுத்து நடத்த ஆரம்பிச்சிருக்கேன்'' என்றாள்.

அவர்கள் பேசும்போதே வைஷ்ணவியும் சுமித்ராவும் அருகில் வர. ''இவ என் பொண்ணுண்ணா, வைஷ்ணவி'' என்று வைஷ்ணவியை அறிமுகப்படுத்தி வைத்தவர்.

''இது என் அண்ணன் பொண்ணு சுமித்ரா'' என்று அவளையும் அறிமுகப்படுத்தி வைத்தார்.

வைஷ்ணவியின் கண்கள் சற்றும் சக்தியை பார்த்து சிநேக பாவத்தை காட்டவில்லை, பதிலுக்கு ஒரு முறைப் பையே காட்டியது. சுமித்ராவுக்கு எப்போது போல உணர்ச்சிகளை அதிகம் வெளிப்படுத்தாத பாவனை. ஆனால் அவளும் சக்தியை தெரிந்தது போல காட்ட வில்லை.

சக்தியும், ''அவர்களுக்கே இப்படி என்றால் எனக் கென்ன வந்தது'' என்பது போ்ல அவளும் முன்பு அவர் களுக்குள் அறிமுகம் இருந்தது போல காட்டவில்லை.

அதற்குள், ''எங்கேம்மா பையன், சில சமயம் அவனை பார்க்கணும்னு நினைப்பேன், சந்துரு அவன் பையன் மேல அவ்வளவு உயிரா இருந்தானே'' என்றார்.

''அவனுக்கும் அவனுடைய அப்பான்னா உயிர்ண்ணா! உங்ககிட்ட சொல்றதுக்கு என்ன? இப்போ அவன் எங்க கூட இல்லை, எங்கப்பாக்கும் அவனுக்கும் பிரச்சனை வீட்டை விட்டு போயிட்டான்'' என்றார்.

''உங்கப்பா எப்போ என் சந்துருக்கு மரியாதை குடுத்திருக்காரு, அவர் பையனுக்கு குடுக்கறதுக்கு'' என்று கசப்பான ஒரு புன்னகையை சிந்தியவர்.

"எங்கே இருக்கான்மா அவன்" என்றார்.

கேட்ட கார்த்திக்கின் இதயத்துடிப்பு அதிகமாக ஆரம்பித்தது.

"எங்க இருக்கான்னு எனக்குத் தெரியும்ண்ணா, ஆனா அதைச் சொல்ற உரிமையை எனக்கு அவன் கொடுக்கலை!" என்றார்.

"எப்படி இருக்கான்மா நல்லா இருக்கான் தானே" என்றார் அக்கறையாக.

"வசதி வாய்ப்புகள்ள நல்லா இருக்காண்ணா, மன சளவுல எப்படி இருக்கான்னு தெரியாது" என்றார்.

வைஷ்ணவிக்கு எரிச்சலாக வந்தது, அவளின் அம்மாவின் பேச்சைக் கேட்டு. "இந்தம்மா இதை இவங்க கிட்ட சொல்லலைன்னா என்ன" என்று இருந்தது.

கார்த்திக்கிற்கு அதை விட எரிச்சலாக இருந்தது, எப்போது இவர்கள் இந்த இடத்தை விட்டு கிளம்புவார்கள் என்றிருந்தது.

வீரமணி கேட்காத தகவலாக வாசுகி அவரை பார்த்து. "இவ தான் அண்ணா என் மருமக" என்று சுமித்ராவை காட்டி. "இவளை தான் என் பையனுக்கு கல்யாணம் பண்ணப் போறேன்" என்றார்.

அந்த தகவல் வீரமணிக்கா. இல்லை கார்த்திக்கிற்கா. இல்லை சக்திக்கா. இல்லை சுமித்ராவிற்கா. இல்லை வாசுகி அவருக்கு அவரே சொல்லிக்கொண்டாரா அவருக்கே வெளிச்சம்.

கேட்ட சக்தி அதிர்ந்தாள். "ஐயோ இந்த சிவா வேற இவளை நினைச்சு மனசுல ஆசையை வளர்த்திருக் காறே" என்று.

''என்ன செய்ய முடியும்? இந்த பெண் பேசுவதே குறைவு. இதில் பேசினாலும் பக்கத்தில் இருக்கும் பெண் சண்டைக்கு வருகிறாள்'' என்று அமைதி காத்தாள்.

பிறகு வாசுகி கையை குவித்து ''வர்றோம்ணா'' என்று விடைபெற்றார்.

''என்ன உதவினாலும் தயங்காம கேளும்மா. என் சந்துருக்காக நான் செய்ய கடமை பட்டிருக்கேன்'' என்றார் வீரமணி.

பதிலுக்கு ஒரு புன்னகையை மட்டுமே பதிலாய் தந்தார் வாசுகி.

அவர்கள் உணவருந்த செல்ல வீரமணியும் கார்த்திக்கும் கிளம்பினர்.

''அப்பா நான் இன்னும் கொஞ்ச நேரம் இருக்கவா கல்யாண பொண்ணு கேட்கறா'' என்றாள் சக்தி.

அவர் பதில் சொல்லும் முன்னே கார்த்திக், ''வேண்டாம் மேம் கிளம்புங்க! அவங்களுக்கு இன்னைக்கு உங்ககிட்ட பேசக் கூட நேரம் இருக்காது, ஒரு வார்த்தைக்கு சொல்றதுக்கு தான் அதெல்லாம்'' என்றான்.

''ஓகே! அஸ் யூ விஷ்!'' என்று எப்போதும் போல ஒப்புக் கொடுத்தாள் சக்தி.

காரில் போகும்போது, ''யாருப்பா அவங்க?'' என்றாள் சக்தி.

''என் நண்பன் சந்துருவோட மனைவிம்மா. நானும் அவனும் உயிர் நண்பர்கள்ன்னு கூட சொல்லலாம்.''

''எனக்கு அவங்களை தெரியுமாப்பா.''

அவர் மடை திறந்த வெள்ளமாய் சொல்ல ஆரம்பித் தார்.

''தெரிஞ்சிருக்க வாய்ப்புகள் கம்மி மா. அவன் வீடு வரைக்கும் அதிகம் வந்ததில்லை. நானும் அவன் வீட்டுக்கு அதிகம் போக மாட்டேன்.''

''அவங்க வீட்ல நான் வர்றதை விரும்ப மாட்டாங்க. எங்க வீடு கூட்டுக்குடும்பம், என்னாலயும் அதிகம் அவனை வீட்டுக்குக் கூப்பிட முடியாது. எங்க சந்திப்பு எல்லாம் அவன் ஆபீஸ்ல தான்ம்மா. இல்லை என் தொழில் நடக்கற இடத்துக்கு அவன் வந்துடுவான்.''

''என் குடும்பத்துல நடக்கற எல்லா விஷயமும் அவ னுக்குத் தெரியும். அவன் குடும்பத்துல நடக்கற எல்லா விஷயமும் எனக்குத் தெரியும். இருந்தாலும் குடும்ப அளவுல அதிகத் தொடர்பு கிடையாது, ஏன்னா அப்போ நாம இந்தளவுக்கு வசதி கிடையாது.

''அவன் ரொம்ப வசதி, அதுவும் அவன் கல்யாணம் பண்ணின இந்த பொண்ணு இன்னும் வசதி, ரொம்ப பெரிய பாரம்பரியமான குடும்பம். நமக்கு அந்த மாதிரி எந்த அடையாளமும் கிடையாது.''

''அதனால அந்த பொண்ணோட அப்பா. அவர் தலையீடு அவன் விஷயத்துல அதிகமா இருக்கும். அதனால என் தொடர்பு அவனோட மட்டும் தான்றதுல நான் ரொம்ப கவனமா இருப்பேன் சக்தி'' என்றார்.

அவர் குரலில் அவ்வளவு வருத்தம்.

''உங்களுக்கும் அவருக்கும் ரொம்ப ஸ்நேகித மாப்பா.''

''ரொம்ப இல்லைம்மா. ரொம்ப! ரொம்ப! ரொம்ப! அவனுக்கு அப்புறம் எனக்கு யாரோடயும் இப்போ ஸ்நேகிதம்னு கிடையாது. எல்லோரடையும் நான் பழகினாலும் பேசினாலும் யாரையும் என்னை நான் நெருங்க விடறதே இல்லை.''

''அதுகெல்லாம் கார்த்திக் தான் சந்துருக்கு அப்புறம் எனக்கு நெருக்கம்'' என்றார்.

கார்த்திக்கின் கண்களில் வேதனையின் சாயல்கள். அவனின் கண்ணாடி அதை நன்கு மறைத்தது.

''கடைசி காலத்துல ரொம்ப கஷ்டத்தை அனுபவிச்சிட்டான்மா என் நண்பன். என்னாலயும் ஒண்ணுமே செய்ய முடியலை. அவனோட துன்பங்களுக்கு நானும் ஒரு காரணமானேன்'' என்றார் கலங்கிய குரலில்.

''இல்லை! நீங்க இல்லை!'' என்று கார்த்திக்கிற்கு அவரிடம் சொல்ல வேண்டும் போல ஒரு ஆவேசம், ஆனால் அவனால் முடியவில்லை.

''நீங்க அவரை பத்தி பேசினதே இல்லையேப்பா.''

''சந்தர்ப்பம் அமையலம்மா! இப்போ வாசுகியை பார்த்ததும் எனக்கு அவனோட ஞாபகம் அதிகமா இருக்கு'' என்றார்.

''வாசுகி'' என்று அந்த பெயரை உச்சரித்தவள்.

''அப்பா நம்ம கம்பெனி அவங்க பேர்ல எப்படி?'' என்று சந்தேகத்தை கேட்டாள்.

''இது எங்க தாத்தா கம்பெனி!'' என்று கார்த்திக்கிற்கு சொல்ல வேண்டும் போல இருந்தது. ஆனால் சொல்ல முடியாதே.

''அவங்களது தான்மா அது!'' என்றார் வீரமணி.

''என்னப்பா சொல்றீங்க!'' என்று சக்தி ஆச்சர்யமாக வினவ.

''அது இந்த பொண்ணு வாசுகியோட அப்பா கம்பெனி தான்மா. எனக்கு என் நண்பன் எழுதிக் குடுத்தான்'' என்றான்.

''என்னப்பா என்னென்னவோ சொல்றீங்க? எப்படி எனக்கு எதுவுமே தெரியாம போச்சு.''

''இது என் மனசை வருத்துற விஷயம்மா. அதனால நான் இதை ஞாபகப்படுத்திக்கவே இல்லை. அதனால உன்கிட்ட சொல்லலைமா.''

''எனக்கு தெரியக்கூடாத விஷயமாப்பா.''

''அப்படி எல்லாம் இல்லைமா. அவன் பெரிய சினிமா தயாரிப்பாளர்மா. ஒஹோன்னு இருந்தான். அதுல மூணு பெரிய படம் பெரிய ஹீரோக்களை வெச்சி ஒரே சமயத்துல எடுத்தான்.''

''சொன்னபடி படம் வெளில வர்றதுல சிக்கலாச்சு. அப்புறம் படத்தை எப்படியோ ரிலீஸ் பண்ணினான். பெரிய கொடுமை மூணு படமுமே ப்ளாப்! அவனால அதுல இருந்து எந்திரிக்கவே முடியலை.''

''இருந்த சொத்தையெல்லாம் வித்து எல்லோருக்கும் பணம் குடுத்தான். அப்பவும் பணம் பத்தலை. அவங்க மாமனார் அவனுக்கு உதவி செய்யத் தயாராயில்லை. அவர் வாசுகிக்கு கொடுத்த தொழில் தான் இது. தொழில் வாசுகி பேர்ல இருந்தாலும் பவர் சந்துரு பேர்ல இருந்தது.''

''அதை விக்க முயற்சி பண்ணினான், யாரும் வாங்கலை. கடைசியா என்கிட்ட வந்தான். ஏதாவது செய்டான்னு அவன் மனசொடிஞ்சு நின்னப்போ என்னால அப்படியே விட முடியலைம்மா.''

''என் பேர்ல, உங்கம்மா பேர்ல இருந்த சொத்து, நகை எல்லாத்தையும் வித்து அவனுக்கு குடுத்தேன். அதுமட்டுமில்லாம நானும் சில பேர்கிட்ட கடன் வாங்கி கொடுத்தேன்.''

''பதிலுக்கு அவன் இந்த தொழிலை என் பேர்ல மாத்திட்டான்.''

''எப்படியோ எல்லோருக்கும் பணத்தை செட்டில் பண்ணி. கடன் தொல்லையில் இருந்து மீண்டான். ஆனா வாழ்க்கை அவனுக்கு ரொம்ப சிக்கலா போச்சு.''

''வாசுகியோட அண்ணன் டாக்டர். அவர் இந்த தொழிலை பார்க்க மாட்டாருன்னு தான் வாசுகிக்கு இதை கொடுத்தாங்க. இவன் அதை என் பேர்ல மாத்தினதுல வாசுகியோட அப்பாவுக்கு ரொம்பக் கோபம்.''

''வாசுகியை அவர் கூப்பிட்டுகிட்டார். இவனுக்கு வீடில்லை, தொழிலில்லை, ஒண்ணுமில்லை. குடும் பத்தை அவனோட கூட்டிட்டு வரவும் வழியில்லை. பையன் ஊட்டி கான்வென்ட்ல படிச்சிட்டு இருந்தான்.''

''வாசுகியால இவனை நம்பி வர முடியக்கூடிய சூழல் இல்லை. ஏன்னா குடி. குடிச்சுக் குடிச்சு ஒழிஞ்சு போனான்.''

''அதுக்குள்ள எனக்கும் அவங்க மாமனாருக்கும் ரொம்ப பிரச்சனையாயிடுச்சு. நான் என் மாப்பிள்ளைக்கு பவர் தான் கொடுத்திருந்தேன். அவனுக்கு விக்க உரிமையில்லைன்னு பிரச்சனை பண்ணினார்.''

''சக்தி! நான் என்கிட்ட இருந்த எல்லாத்தையும் குடுத்துட்டேன்! அதுமட்டுமில்லாம கடன் வேற வாங்கி குடுத்திருக்கேன்! திரும்ப குடுன்னா எப்படி குடுப்பேன்! எனக்கு அது ஜீவ மரண போராட்டம்.''

''அப்பவும் நான் வாசுகியோட அப்பாவோட சமாதானமா போக முயற்சி எடுத்தேன். எனக்கு இந்த கம்பெனி தான் வேணுங்கற மாதிரி எல்லாம் எதுவு மில்லை. நீங்க எனக்கு நான் குடுத்த பணத்தை குடுங்க! நான் திரும்ப குடுத்தற்றேன்னு சொன்னேன்.''

''பணமெல்லாம் குடுக்க முடியாது! இது எங்க சொத்து! என் மாப்பிள்ளைக்கு விக்கற உரிமையெல்லாம் இல்லைன்னார்.''

''பணத்தை குடுத்தா குடுக்கறேன் இல்லைன்னா குடுக்க முடியாது, உங்களால ஆனதை பார்த்துக்கோங்க அப்படின்னு அவன் மாமனார் கிட்ட சொல்லிட்டேன்.''

''அவர் கேஸ் போட்டார். கொஞ்ச வருஷம் நடந்துச்சு. இந்த பிரச்சனையினால சந்துருக்கு மனவருத்தம். சொத்தையும் வாங்கிட்டு என்னை ப்ரச்சனையிலையும் மாட்ட விட்டுடோம்னு.''

''கேசை வாபஸ் வாங்க சொல்லி அவன் வாசுகி கிட்ட சொல்ல. வாசுகிக்கு புருஷன் பக்கமும் நிக்க முடியலை, அப்பா பக்கமும் நிக்க முடியலை.''

''சந்துரு வேற அவன் குடும்பத்தோட இல்லை. ஒரு மேன்சல ரூம் எடுத்து இருந்தான். என்னன்னு தெரியலை எனக்கும் அவனுக்கும் ஒரு ரெண்டு மூணு மாசமா ஒரு தொடர்பும் இல்லை.''

''எனக்கும் இங்க நம்ம குடும்பத்துல பிரச்சனைகள். அதனால நான் அப்போ தான் தனிக்குடித்தனம் வந்தேன். திடீர்ன்னு அவன் இறந்துட்டான்னு எனக்கு செய்தி வருது.''

தந்தையின் சாவைப் பற்றிய செய்தி.

**ஆராரிரோ பாடியதாரோ தூங்கிப் போனதாரோ**

**யாரோ யாரோ எனக்காரோ யாரோ**

**என் தெய்வமே இது பொய் தூக்கமா**

**நான் தூங்கவே இனி நாளாகுமா**

எத்தனை வருடங்கள் ஆனாலும் மறக்க முடியுமா அந்த நிகழ்வை கார்த்திக்கினால். கண்களில் நீர் துளிர்த்தது. மனதில் துக்கப் பந்து அடைத்தது.

''வாசுகியோட அண்ணன் குடும்பம் அப்போ மலேசியால இருந்தது. இவன் சாவுக்கு அவசரமா அவங்க குழந்தைங்களை விட்டுட்டு வாசுகி அண்ணனும் அண்ணியும் வந்திருக்காங்க.''

''வந்த ஃப்ளேன் ஆக்சிடென்ட் ஆகி கடலுக்குள் விழுந் துடுச்சி. ரெண்டு பேரோட பாடி கூட கிடைக்கலை. ரொம்பவும் அவங்க குடும்பம் ஆடிப்போச்சு.''

''அதுக்கப்புறம் அவங்கப்பா வாசுகியை அவ பசங் களை அவங்க அண்ணன் பசங்களை எல்லாம் கூட்டி

கிட்டு ஈரோடு போயிட்டார். அங்க பக்கத்துல அவங்களுக்கு நில புலன் எல்லாம் இருந்தது.''

''அதுக்கப்புறம் கேஸையும் அவங்க கவனிக்கலை. தானா கேஸ் தள்ளுபடி ஆகிடுச்சு. கேஸ் மட்டும் தொடர்ந்து நடந்திருந்தா என்னவாகியிருக்கும்னு என்னால சொல்ல முடியலை'' என்றார் வருத்தத்துடன்.

கேட்டுக்கொண்டிருந்த கார்த்திக் அந்த நாளின் நினைவுகளுக்கே சென்றுவிட்டான். என்ன முயன்றும் அவனால் அவனின் உணர்வுகளை கட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை. அவனின் இறுகிய முகமும் கண்களின் கண்ணாடியும் கூட அவனுக்கு துணை புரியவில்லை. காரை வேறு அவன் ஓட்டிக்கொண்டிருந்தான்.

வண்டி வேகமெடுத்து அவர்களின் வீட்டின் முன் நின்றது. அவர்கள் இறங்கியதும், ''ஒரு சின்ன வேலை வந்துடறேன்'' என்று சொல்லி அவன் காரை விட்டு இறங்காமல் அப்படியே கிளம்பி விட்டான்.

கார் பாட்டிற்கு சென்று கொண்டே இருந்தது. ஏதோ ஒரு ஹைவேஸ் வர அதில் இலக்கில்லாமல் சென்றான். நடுவில் டோலில் நின்றது, அவன் பணம் செலுத்தி ரசீது வாங்கியது எல்லாம் இயந்தர கதியில் நடந்தது.

ஒரு வழியாக டிராப்பிக்கில் மாட்டி கார் நின்ற போது அவன் சுற்று புறத்தை பார்க்க அது பெங்களூர் சிட்டியை காட்டியது.

இறங்கி அங்கே இருந்த ஒரு டீக்கடையில் டீ குடித்தவன் மறுபடியும் கிருஷ்ணகிரி நோக்கிக் காரைத் திருப்பினான்.

அந்த நாட்களின் நினைவுகள், அதுவும் அவனின் தந்தையின் நினைவு அவனை மிகவும் பாதித்தது. வெகு நாட்களுக்குப் பிறகு ஒரு பாதுகாப்பாற்ற நிலையை உணர்ந்தான்.

அதுவும் தான் வீரமணியுடனும் அவரின் குடும்பத்துடனும் செய்ய போவது அவன் தந்தை அவனை என்றும் அதற்கு மன்னிக்க மாட்டார் என்று தெரியும். ஆனால் அவனுக்கு வேறு வழியில்லை.

இது அவனின் தாத்தாவின் சொத்து. தந்தை அதை கணக்கில் கொள்ளாமல் விற்று விட்டார். அதை அவர் களுக்கு திருப்பி தர வேண்டிய கடமை அவனுக்கு இருக்கிறது. அதே சமயம் வீரமணியின் மேலும் தப் பில்லை. அவரும் பாதிக்கப் படக்கூடாது.

அவனின் எண்ணம் எல்லாம் அவனின் தந்தை. வீரமணி. அவனின் தாத்தா என்று சுழன்றதால். அவன் சக்தியை பற்றியோ சுமித்ராவைப் பற்றியோ யோசிக்க மறந்துவிட்டான்.

மறக்கப்பட வேண்டியவர்கள்ல அந்த இரு பெண் களும். சுமித்ராவால் தான் அவனுக்கு வீட்டை விட்டு வரவேண்டிய சூழலே ஏற்பட்டது.

ஆனால் அந்த பெண்கள். அவர்களை அவன் பெரிதாக எடுக்கவில்லை. அவர்கள் அவனை உயிரோடு கொல்லக் கூடியவர்கள் என்று அவனுக்கு தெரிந்திருக்கவில்லை.

அவனின் தந்தையை பற்றிய எண்ணமே அவனுள் ஓங்கி இருந்தது.

எண்ண அலைகள் அவனை சுழற்ற. அவன் அதற்குள் சுழன்று நசுங்க ஆரம்பித்தான். அது நான்கு வழிப்பாதை

எதிரில் வண்டி வர வாய்ப்பில்லாததால் வண்டி நூற்றி முப்பது கிலோமீட்டர் வேகத்தை தொட்டது.

நடுவில் ஒரு டிவைடர் வர கடைசி நிமிஷத்தில் அதை கவனித்து பிரேக் போட நினைக்கும் போது. அவன் பிரேக் போட்டால் பின்னால் இருந்த வண்டி மோதி பின்னால் வருபவன் ஒன்றுமில்லாமல் ஆகிவிடு வான் என்பது கடைசி நொடியில் தோன்ற. தெரிந்தே டிவைடரில் மோதினான். கார் பல சுழற்சியைப் பார்த்தது.

கார் சுழன்ற போதும் பின்னால் வந்தவர்களுக்கு ஏதாவது ஆகியதா என்று அவன் பார்க்க. அதில் வந் தவன் லாவகமாக காரை திருப்பி அவன் கார் மோதாமல் பார்த்துக் கொண்டு தள்ளி நிறுத்தினான்.

பின் வந்த வண்டிகள் எல்லாம் சர சர வென்று அணிவகுத்து நின்றன.யாருக்கும் எந்த பாதிப்புமில்லை என்று பார்த்தான்.

அதை பார்த்த பிறகே கார்த்திக்கின் கண்கள் மயக் கத்தில் சொருகின.



# 7

நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே, நீங்களெல்லாம்
சொற்பனந் தானோ? -பல தோற்ற மயக்கங்களோ?
கற்பதுவே, கேட்பதுவே, கருதுவதே, நீங்க ளெல்லாம்
அற்பமாயைகளோ? -உம்முள் ஆழ்ந்த பொருளில்லையோ?

- பாரதி

கார்த்திக் அதிர்ச்சியில் மயங்கியிருந்தான். அவனுடைய ஏர் பேக் உடன் கூடிய மிகவும் விலையுயர்ந்த கார் என்பதால் அவனுக்கு பெரிய அடி இல்லை. காருக்கு அதிக டேமேஜ் தான்.

பின்னால் வந்தவர்கள் உடனே வந்து இவனை பார்த்து உதவி செய்ய முற்பட்டனர். அந்த காரில் காலேஜ் படிக்கும் மாணவர்கள் மூன்று பேர் இருந்தனர். அவர்கள் அவனை அப்படியே விட்டு செல்லவில்லை. பக்கத்தில் பெங்களூர் சிட்டி இருந்ததால் அங்கேயே திரும்ப அவனை சிகிச்சைக்கு அவர்களின் காரிலேயே கூட்டிசென்றனர்.

கார் நடு ரோடில் அனாதையாக கிடக்க அங்கே இருந்த ரோட்டோர டீக்கடையில் சொல்லி அவனின் போன் காரில் தென்படுகிறதா என்று பார்த்து எடுத்துக் கொண்டு சென்றனர்.

அங்கே ஹாஸ்பிடலில் சேர்த்து ஒரு அரை மணி நேரத்திற்கு எல்லாம் கார்த்திக்கிற்கு விழிப்பு வந்தது. உதவி செய்தவர்களுக்கு நன்றி கூறியவன்.

அவர்கள் உடனே தன்னை பார்த்துவிட்டார்களா இல்லை நடுவில் ஏதாவது நடந்ததா என்று கேட்டு அவர்கள் உடனே பார்த்து விட்டதாகவும் நடுவில் வேறு ஒன்றும் நடக்கவில்லை என்று கூறிய பிறகே நிம்மதியானான்.

செல்வத்துக்கும் மாரிக்கும் போன் செய்தான். மாரியை காரை பார்க்க சொல்லிவிட்டு செல்வத்தை தன்னிடம் வருமாறு பணித்தான்.

செல்வம் வருவதற்குள் அவனே டாக்டரிடம் பேசி, ''என்னென்ன டெஸ்ட் செய்ய வேண்டுமோ எல்லாம் செய்துவிடுங்கள்'' என்றான்.

அவன் வலி சொன்ன இடத்தில் எல்லாம் எக்ஸ்ரேவும், எம் ஆர் ஐ யும் எடுத்தனர். அங்கங்கே ஊமை அடி தான் பட்டிருந்தது. வெளியில் காயம் போலவோ எலும்பு முறிவு போலவோ எதுவும் இல்லை என்றாலும் அவ் வளவு வலியை உணர்ந்தான். அதுவும் கழுத்து பயங் கரமாக வலித்தது.

செல்வம் வந்து சேர்ந்த போதும் எம் ஆர் ஐ ஸ்கேன் ரிப்போர்ட்கள் வரவில்லை. ஒரு வழியாக ஸ்கேன் ரிப்போர்ட்டில் எதுவும் பெரிய பிரச்சனைகள் இல்லை, கழுத்தில் அதிக வலி உணர்ந்ததால் அங்கே மட்டும் ஒரு காலர் போட்டு அதிக அசைவை கொடுக்க வேண் டாம் என்று சொன்னார்.

ஒரு நாள் இருந்து அடுத்த நாள் டிஸ்சார்ஜ் ஆகும்படி சொன்னார். இதையெல்லாம் முடிக்கும் போது இரவு மணி பத்து.

இவ்வளவு நேரமாக கார்த்திக்கை காணாமல் வீரமணி அவன் எங்கே இருக்கிறான் என்று கேட்டு அப்போது தான் போன் செய்தார்.

கார்த்திக் அப்போது மருந்துகளின் உதவியால் உறக் கத்தில் இருந்தான். வீரமணியின் அழைப்பு என்பதால் செல்வம் அவனின் போனை எடுத்தவன் விவரத்தை கூறினான்.

''ஒன்றும் பயப்படும்படி இல்லை'' என்று தான் செல்வம் வீரமணியிடம் கூறினான். இருந்தாலும் அவருடைய

மனம் பதறி விட்டது. சக்தியிடமும் தெய்வானையிடமும் கூறினார்.

இருவரும் பதறினர் என்றாலும் சக்தி என்னவோ ஏதோவென்று அவளையும் மீறி பதறினாள் என்பது தான் உண்மை.

''அப்பா! நம்ம போகலாமப்பா?'' என்றாள் உடனே வீரமணியிடம்.

''இப்போ ரொம்ப ராத்திரி ஆகிடிச்சும்மா! காலையில் போகலாம். செல்வத்துக்கிட்ட தெளிவா கேட்டுட்டேன், பயப்படற மாதிரி ஒண்ணுமில்லைன்னு தான் சொன் னான். பிராக்ச்சர் எதுவும் இல்லையாம், காயம் மாதிரி கூட எதுவும் இல்லையாம்மா. கழுத்துல மட்டும் ஒரு காலர் போட்டு இருக்காங்களாம்'' என்றார்.

அப்போதும் மனம் சமாதானமாகாமல் அவளே செல்வத் துக்கு அழைத்தாள், அவன் சக்தியிடமும் அதையே கூறவும், அரை மனதாக போனை வைத்தாள்.

காலை ஐந்து மணிக்கெல்லாம் தந்தையை எழுப்பி விட்டாள், ஹாஸ்பிட்டல் போவதற்கு. காலை ஆறு மணிக்கு கிளம்பி எட்டு மணிக்கெல்லாம் ஹாஸ்பிட லில் இருந்தனர்.

கார்த்திக்கை பார்த்ததும், ''எப்போ நடந்துச்சு?'' என்று அவள் கேட்க.

அவன், ''நாலு மணி'' என்று சொல்லி மற்ற விவரங் களையும் சொன்னான்.

செல்வத்திடம், ''நீங்க எப்போ வந்தீங்க?'' என்று கேட்க. அவன் இரவு எட்டு மணி என்றான்.

''அவனுக்கு போன் பண்ணி வர சொல்ல முடியுது, எங்ககிட்ட சொல்லணும்னு உனக்குத் தோணலை இல்லை'' என்று கார்த்திக்கை காய்ச்சி எடுத்தாள்.

''இல்லை! அனாவசியமா பயப்படுத்த வேண்டாம்னு தான் சொல்லலை!'' என்று அவன் சொன்னதை காதி லேயே வாங்கவில்லை. பேசித் தள்ளினாள்.

வீரமணி கூட, ''என்ன சக்திம்மா? அவனை பார்க்க வந்தியா இல்லை திட்ட வந்தியா?'' என்று கேட்டார்.

''இவன் போன் பண்ணாததுக்கு திட்டாம, என்னை ஏன் திட்டுறீங்க?'' என்று அவரிடமும் பாய்ந்தவள்.

''எனக்கு நைட் முழுசும் தூக்கமே இல்லை. ஒரு பேசிக் கர்டசிக்கு கூட இவனுக்கு நம்ம கிட்ட சொல் லனும்னு தோணலை இல்லை'' என்று பொறிந்தவள்.

''நீங்க ஏன் சொல்லல'' என்று செல்வத்தையும் ஒரு வழியாக்கினாள்.

''விடுங்க மேம்'' என்று கார்த்திக் சற்று பெரிதாக அதட்டவும் தான் முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு அமைதியானாள்.

பின்பு சற்று நேரம் இருந்துவிட்டு வீரமணி கிளம்பி னார். ''நான் வரலைப்பா நீங்க போங்க! கார்த்திக் டிஸ்சார்ஜ் ஆகும் போது நானும் வர்றேன்!'' என்றாள்.

''வேண்டாம் மேம்! செல்வம் இருக்கான் போதும். மதியத்துக்கு மேல டிஸ்சார்ஜ் பண்ணிடுவாங்க! நான் வந்துடறேன்!'' என்று அவன் சொன்னாலும் சக்தி கேட்கவில்லை.

''நான் இருக்கேன்!'' என்றாள் பிடிவாதமாக.

கார்த்திக் எப்படியோ அதையும் இதையும் பேசி அவளை வீரமணியுடன் அனுப்பி வைப்பதற்குள் ஒரு வழியாகினான்.

அவனுக்குக் கோபமாக வந்தது, இந்த வீரமணி அவளை அழைத்து செல்லக் கூடாதா என்று.

வீரமணிக்கு சக்தியைப் பற்றி நன்றாகத் தெரியும், சக்தி கார்த்திக்குடனான திருமணத்திற்கு மறுத்து இருந்தாலும் கார்த்திக்கின் மீது அவளுக்கு ஒருவகையான பாசம் நட்பு இருந்ததை உணர்ந்திருந்தார். அதனால் அவர், ''அவள் நான் இருக்கேன் பா'' என்றபோது தடுக்கவில்லை.

கார்த்திக்கிற்கு எப்போதும் சக்தி தன்னிடம் அதிக உரிமை எடுத்துக்கொள்வதை பார்த்து ஒரு பயம். அவள் சென்றதும் தான் நிம்மதியாக மூச்சு விட்டான். சக்தியின் அருகாமையில் மூச்சு முட்டுவதாக உணர்ந்தான்.

இப்போதே இப்படி இருப்பவள் உண்மைகள் தெரிய வரும் போது. என்ன செய்வாளோ என்று பயமாக இருந்தது.

இனி வெகு காலத்திற்கு உண்மைகளையும் தள்ளிப் போட முடியாது என்று புரிந்தது, வாசுகிக்கு இன்னமும் அவனை இங்கே விட மனமில்லாமல் நான் இங்கே இந்த ஊருக்கே வந்திருப்பது புரிந்தது.

அவனுடைய தாத்தாவிற்கும் ஆரோக்கியம் சற்று மட்டுப்பட ஆரம்பித்தது. அதற்குள் அவனின் தந்தை தொலைத்த இந்த அவரின் சொத்தை ஒப்படைப்பது அவனின் கடமை.

ஏதாவது செய்தே ஆகவேண்டிய காலம் நெருங்கி விட்டதை உணர்ந்தான். அதுவுமில்லாமல் இன்று சக்தி தன்னிடம் காட்டிய அக்கறை கார்த்திக்கிற்கு பிடிக்க வில்லை.

அவனுக்கு சக்தி அவனை திருமணம் செய்ய மறுத்து விட்டது தெரிந்தது தான். அவனுக்குள் எப்போதுமே ஒரு கலக்கம் எங்கே சக்தி தன்னை பிடித்திருக்கிறது என்று சொல்லிவிடுவாளோ என்று.

அவனுக்கு அவள் தன்னுடனான திருமணத்திற்கு மறுத்ததும் தெரிந்தது தான், அதே சமயம், ''எனக்கு கார்த்திக் மாதிரி ஒரு மாப்பிள்ளை வேண்டும்'' என்று தந்தையிடம் கேட்டதும் தெரிந்தது தான்.

ஏதாவது செய்ய வேண்டிய நிலைமையில் இருந் தான். அவனுடைய குடும்பத்தை விட்டு பல வருடங்கள் பிரிந்து இருந்து விட்டான்.

அவனின் அம்மாவும் தான் என்ன செய்வார்.

கணவனின் ஆதரவு இல்லாமல் தனியாக எல்லா வேலைகளையும் அவரே பார்த்துக் கொண்டார். மக னான தான் தந்தைக்குரிய கடமையை செய்யப் பிரிந்து வந்துவிட்டான்.

தந்தை. அவனின் தந்தை. அவருக்காக அவன் எதுவும் செய்வானே! அவருக்கா அவன் செய்த செயல்?

அவனின் அம்மாவையும் கவனிக்க வேண்டும் தானே! இங்கேயிருந்து தான் போக வேண்டிய நேரம் வந்துவிட்டதை உணர்ந்தான்.

அதுவுமில்லாமல் வைஷ்ணவியின் திருமணத்திற்கு நிற்கிறாள். அண்ணனாக தான் அவளுக்கு கடமைகள் ஆற்ற வேண்டிய நேரமிது என்பதையும் உணர்ந்தான்.

அவளுக்கு மட்டுமல்ல அவனின் தாய்மாமன் மக்களான சுமித்ராவிற்கும், பிரபுவிற்கும் அவர்கள் வாழ்க்கையை நன்றாக அமைத்துக்கொள்ள வைக்க வேண்டிய கடமையும் அவனுக்கு இருக்கிறது.

சுமித்ராவை பற்றியும் தன்னைப் பற்றியும் அம்மாவிற்கு இருக்கும் ஆசைகளை அவன் அறியாதவனல்ல.

அவனுக்குப் பெரிதாக திருமணத்தை குறித்த எந்த எதிர்பார்ப்புமில்லை. வருவது எதுவாகினும் எதிர்கொள்ளத் தயாராக தான் இருந்தான். சுமித்ராவின் எண்ணம் என்ன என்பதும் அவனுக்குத் தெரியவில்லை.

அதுவுமில்லாமல் அவனின் தாத்தா சுமித்ராவை தனக்கு திருமணம் செய்ய விரும்புவாரா தெரியவில்லை. அவர் விரும்பாவிட்டால் பரவாயில்லை என்பதே கார்த்திக்கின் எண்ணமாக இருந்தது.

இந்த சக்திக்கு வீரமணி திருமணம் செய்து வைத்து விட்டால் பரவாயில்லை என்றும் தோன்றியது. மகளுடைய திருமணத்தை அவர் எதிர் நோக்க இருக்கும் சமயத்தில் அவருக்கு வாழ்க்கையில் அடி கொடுக்க விரும்பவில்லை. அது எந்த வகையிலாவது சக்தியின் வாழ்க்கையை பாதித்து விட்டால் என்ன செய்வது என்ற கவலையும் இருந்தது.

என்ன செய்யவேண்டும்? ஏது செய்யவேண்டும்? என்று வரையறுக்க ஆரம்பித்தான்.

முதலில் சக்தியின் திருமணம் அவனுக்கு முக்கியமாகப் பட்டது. வைஷ்ணவியும் சுமித்ராவும் அவனுக்கு எந்த அளவு முக்கியமோ அதற்கு சற்றும் குறையாமல் சக்தியும் அவனுக்கு முக்கியம்.

அவள் வாழ்க்கையில் அடுத்த கட்டத்திற்கு சென்று விட்டால் அவனுக்கு அவனின் வேலைகள் சுலபமாகி விடும் என்றே தோன்றியது.

வீரமணியிடம் இருந்து அவன் தொழிலை வாங்க வேண்டும் என்று நினைத்தாலும் அதற்காக அவர் ஒன்றுமில்லாமல் போக வேண்டும் என்பது அவனின் எண்ணம் கிடையாது.

அவரும் நன்றாக இருக்க வேண்டும். அவர் நன்றாக இருப்பது அவரின் மகள் நன்றாக இருப்பதால் மட்டுமே முடியும். செய்ய வேண்டும் ஏதாவது சீக்கிரத்தில் செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தான்.

முடிவெடுப்பது சுலபம்! ஆனால் செயல் படுத்துவது மிகவும் கடினம்! சில சமயம் முடியாமல் கூட போய் விடும் என்பதை அறிய இன்னும் கார்த்திக்கிற்கு நேரம் வரவில்லை. ஏனென்றால் இதுவரை அவன் முடி வெடுத்தது எல்லாம் செயல் படுத்தி இருந்தான்.

இப்போதைக்கு அவனுக்கு இருந்த ஒரே ஆறுதல் வீரமணியின் வார்த்தைகள் தான். அவர் சக்தியிடம் கூறிய, "அவர்கள் பணம் கொடுத்திருந்தால் நான் இதை அவர்களிடமே கொடுத்திருப்பேன்" என்று சொன்னது சற்று ஆறுதலாக இருந்தது.

வாழ்க்கை இன்னும் அவனுக்கான சோதனைகளை முடிக்கவில்லை என்பதும் அவன் அறியவில்லை.

அன்று மாலையாகிவிட்டது கார்த்திக் சக்தியின் வீடு வந்து சேர்வதற்கு.

இதற்குள் சில முறை அவளின் அம்மா வீட்டில் இருந்தும் அவனுக்கு அழைப்பு வந்தது. ஆனால் அவன் எடுக்கவில்லை. யார் அழைக்கிறார் என்றும் தெரிய வில்லை. யாராகினும் எடுத்தால் அவன் ஹாஸ்பிடலில் இருப்பதை மறைக்க முடியாது என்று அவன் எடுக் கவேயில்லை.

அவன் ஹாலில் வந்து அமரவும், தெய்வானை வேக மாக வந்தார். ''என்ன கார்த்திக் ஒரு போன் பண்ணி யிருக்க வேண்டாமா? இந்த வீட்ல தான் இருக்க, அதுக் காகவாவது தகவல் சொல்லி இருக்க வேண்டாமா'' என்று குறைபட.

''அது அப்படி இல்லைங்கம்மா! ஒண்ணுமில்லாததுக்கு வீணா பயப்படுத்த வேண்டாம்னு தான் சொல்லலை!'' என்று சமாதானப்படுத்தினான்.

''நீ ஈசியா சொல்லிட்ட! இவளை சமாளிக்கறதுக் குள்ள போதும் போதும்ன்னு ஆகிடுச்சு! நைட்டே உன்னை பார்க்கணும்னு ஒரே பிடிவாதம்! காலைல போகலாம்னு சொன்ன பிறகு தூங்கவேயில்லை போல!''

''இவளைப் பத்தி தெரிஞ்சு நான் வந்து எட்டி பார்க்கும் போது எல்லாம் முழிச்சிட்டு இருக்கா! அவங்கப்பாவை அஞ்சு மணிக்கு எல்லாம் எழுப்பி விட்டு கூட்டிகிட்டு வந்துட்டா. என்னவோ போ கலாட்டா பண்ணிட்டா!'' என்று குறை பட்டார்.

''அவங்களுக்கு வேலையே இல்லைம்மா! அதான் எல்லாரையும் பத்தியும் இழுத்து போட்டுட்டு அக்கறை பட்டுட்டு இருக்காங்க. அவுங்களை கவனிக்க இல்ல அவங்க கவனிக்கக் கூடிய மாதிரி சீக்கிரம் நாம ஆளை கொண்டு வரணும்'' என்றான் இரு பொருள் பட.

சக்தி, 'எல்லோரை பத்தியும் இழுத்து போடறனா? யாரை போடறேன்?'' என்று சண்டைக்கு வந்தாள்.

கார்த்திக் இரு பொருள்பட கூறியது சக்திக்கு திரு மணம் செய்ய வேண்டும் என்பது ஒன்று. மற்றொன்று அவள் சிவாவிற்கு, அவனின் சுமித்ராவின் மேல் உள்ள காதலுக்கு உதவி செய்ய நினைப்பது.

அது மற்றவர்களுக்குப் புரியவில்லை.

அவன் சீரியசாகப் பேசவும், ''என்ன கார்த்திக்?'' என்றார் தெய்வானை.

''மேம்க்கு சீக்கிரம் மாப்பிள்ளை பார்க்கனும்மா!'' என்று சொல்லியே விட்டான் கார்த்திக்.

''ஓஹ்! அதுக்கு தான் இவ்வளவு பில்டப்பா!'' என்று சொன்ன சக்தி. ''அதெல்லாம் ஏற்கனவே பேச்சை ஆரம்பிச்சிட்டாங்க'' என்றாள்.

அதோடு நிற்காமல், ''உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? எங்கம்மா உன்னை கல்யாணம் பண்ணிக்க சொன்னாங்க!'' என்று அசால்ட்டாக சொல்ல.

கார்த்திக்கிற்கு பயங்கர அதிர்ச்சி, நெஞ்சு துடிப்பு அதிகரித்தது. ஏற்கனவே ஒரு நாள் படுத்திருக்கும் போது அவர்களுக்குத் தெரியாமல் கேட்டது தான் என்றாலும் நேரடியாக கேட்பது அவலின் துடிப்பை அவனுக்கே கேட்க வைத்தது.

அவனின் அதிர்ச்சி முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது. அவனின் கண்களில் இன்னும் நன்றாகத் தெரிந்தது. அப்போது அவன் கண்ணாடி அணியவில்லை.

அவனின் கண்ணில் அவ்வளவு அதிர்ச்சியை பார்த்த சக்திக்கு சிரிப்பு வந்தது. "என்ன பேச்சு சக்தி இது!" என்று தெய்வானை கூட அதட்டினார்.

"நீங்க சொன்னதை தானேம்மா சொன்னேன்!" என்று சொன்னவள்.

கார்த்திக்கை பார்த்து, "பயப்படாதே கார்த்திக்! நான் வேண்டாம்னு சொல்லிட்டேன்!" என்று சொன்னவள்.

"நீதான் என்னைவிட சின்னவனாச்சே! அதான் வேண்டாம்னு சொல்லிட்டேன்!" என்று சொன்னாள்.

கார்த்திக்கிற்கு இதயத் துடிப்பு எகிறியது.

அப்போதும் தெய்வானை, "கார்த்திக் நீ சக்தியை விட சின்னவனா?" என்று கேட்டார்.

கார்த்திக் பதில் சொல்லும் முன்பே, "அதான் நான் சொல்றேனில்லை மா. நீங்க தான் அதை நம்பவே மாட்டேங்கறீங்க!" என்று சலித்தவள்.

"ஆனா வேற ஒரு விஷயமும் சென்னேன்" என்றாள்.

என்னவோ ஏதோ வென்று பயந்தபடி கார்த்திக் பார்க்க. "எனக்கு உன்னை மாதிரி தான் மாப்பிள்ளை வேணும்னு அப்பாகிட்ட சொல்லிட்டேன்" என்றாள் சீசியஸாக.

அந்த பேச்சை கார்த்திக் சற்றும் ரசிக்கவில்லை, அவனுக்கு மனதை பிசைந்தது.

''எனக்கு டையர்டா இருக்கு! நான் போய் தூங்கறேன்!'' என்று அவனின் ரூம் நோக்கி சோர்வோடு எழுந்து போனான். உடலின் சோர்வு, வலியை விட. மனதின் சோர்வு வலி இன்னும் அதிகமாக இருந்தது.

''இவள் ஏன் தன் மேல் இவ்வளவு நம்பிக்கை வைக்கிறாள்'' என்று சக்தியை நினைத்து கோபமாகவும் எரிச்சலாகவும் இருந்தது.

ஏற்கனவே செய்த பாவங்கள் போதாது என்று ஏமாற்றும் பாவத்தை வேறு செய்ய போகிறோம். இதில் நம்பிக்கை துரோகி என்ற பெயர் வேறு வாங்க போகிறோம். அவனின் மனம் துடித்தது.

உடல் வலியில் தூக்கமில்லை, மனதின் வலி தூக்கம் வர விடவில்லை. செல்வத்தை அழைத்து தூக்க மாத்திரை வாங்கி வர சொல்லி. இரண்டு மாத்திரையை போட்டு தூங்கினான்.

இரண்டு நாட்கள் எங்கும் செல்லவில்லை, யாருடனும் பேசவில்லை. தந்தையின் நினைவுகளும் செய்ய போகும் காரியங்களின் வீரியமும் அவனுக்குள் ஒரு பெரும் பிரளத்தையே உருவாக்கி இருந்தது.

வீரமணியுடன் ஒன்றிரண்டு வார்த்தைகள் சக்தியிடம் அது கூட இல்லை. அவள் வரும் போது எல்லாம் உறங்குவது போன்ற பாவனை.

அவளும் ரொம்பவும் முடியவில்லை போல என்று நினைத்து அவனைத் தொந்தரவு செய்யவில்லை. தெய்வானை அவனுக்குத் தேவையானது, உணவு எல்லாம் சரியான சமயத்தில் கிடைக்குமாறு பார்த்துக்கொண்டார்.

வீரமணி, சக்தி, தெய்வானை மூவருமே அவனை நன்றாகப் பார்த்துக் கொண்டனர். அது அவனின் குற்ற உணர்ச்சியை மேலும் மேலும் அதிகப்படுத்தியது.

ஒரு வாறு ஐந்து முழு நாட்களுக்குப் பிறகு கார்த்திக் இயல்பு வாழ்க்கைக்கும் இயல்பு நிலைக்கும் திரும்பி யிருந்தான்.

முயன்று மனதை பழைய நிலைக்குக் கொண்டு வந்திருந்தான்.

நடுவில் அழைத்த வைஷ்ணவியிடம், "உடம்பு சரியில்லை!" என்று மட்டுமே சொன்னான். அதற்கே வாசுகி பதறி விட்டார்.

அவனைப் பார்க்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார். அவனை எங்காவது வர சொன்னார். அவரை சமாளிப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது. ஆக்சிடென்ட் என்று சொல்லியிருந்தால் அவ்வளவு தன் வைராக்கியத்தை எல்லாம் விட்டு ஒரு வேளை தன்னை பார்க்கவே வந்திருப்பாரோ என்றே தோன்றியது.

கார்த்திக்கின் உடல் நிலை சரியில்லாததால் சுமித்ரா வின் விஷயம் சிவாவிடம் சொல்ல மறந்திருந்தாள் சக்தி.

சிவாவாக ஒரு நாள் போன் செய்யவும், "சுமித்ராக்கு அவளோட அத்தை பையனோட கல்யாணமாம்" என்று சக்தி அவனிடம் விஷயத்தை கூற. அவனுக்கு பயங்கர அதிர்ச்சி.

"எப்படி? எப்படி? எனக்குத் தெரியாம போச்சு! நான் தினமும் அவளை காலேஜ் போகும் போது எங்கே யாவது அவள் கண்ணில் பட்டுடுவேன். அவளும் என்னை கவனிக்கறா! என் மேல விருப்பம் இருக்கா

இல்லையான்னு தெரியலைன்னாலும். அவளுக்கு இப்படி கல்யாணம் பேசியிருப்பாங்கன்னு நான் நினைக்கவே இல்லை.''

மனதிற்குள் பேசியவன் என்ன செய்வது என்று தெரியமல் சமைந்து விட்டான்.

இப்படி ஒரு விஷயம் இருக்கக் கூடும் என்று அவன் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

சக்தி ஹாலில் நுழைவாயிலில் நின்று தான் போன் பேசிக்கொண்டு இருந்தாள். இவள் விஷயத்தை சொன் னதும் சிவாவிடம் இருந்து ஒரு பதிலும் வராமல் போகவே. ''சிவா! சிவா இருக்கீங்களா?'' என்று கத்த.

அது சிவாவிற்கு கேட்டதோ இல்லையோ ரூமில் இருந்த கார்த்திக்கிற்கு நன்றாகக் கேட்டது.

அவன், ''என்ன?'' என்பது மாதிரி வெளியே வந்து நிற்க. இவனைப் பார்த்ததும் சக்தி தடுமாறினாள். சும் மாவே இவன் பேசுவான், இப்போது என்ன பேசுவானோ என்பது போல பார்த்தாள்.

''என்ன மேம்? என்ன விஷயம்?'' என்று கேட்டான்.

சட்டென்று பொய் சொல்ல வராத சக்தி, ''சுமித்ராக்கு அவளோட அத்தை பையனோட கல்யாணம்ன்ற விஷ யத்தை சிவா கிட்ட சொன்னேன்'' என்று சொல்லிவிட.

கார்த்திக்கிற்கு பயங்கர கோபம்.

''உங்களுக்கு ஏன் இந்த அதிக பிரசிங்கித்தனம்! அவனே மறந்தாலும் அந்தப் பொண்ணை நீங்க மறக்க விட மாட்டீங்க போல இருக்கே!'' என்றான் ஆத்திரத்தை மட்டுப்படுத்தி கோபமாக.

அவனின் முகபாவனைகளைப் பார்த்த சக்தி, அவனின் கண்களில் தெரிந்த கோபத்தைப் பார்த்த சக்தி. அவனையே பார்த்து நின்றாள்.

யாரோ ஒரு பெண்ணைப் பற்றி பேசினால் இவனுக்கு ஏன் இவ்வளவு கோபம் என்று சக்திக்கும் சற்று ஆத்திரம் வர.

அவனின் கோபம் சக்தியை சீண்ட.

''உனக்கு ஏன் இவ்வளவு கோபம். ஏதோ நான் நீ கல்யாணம் பண்ணிக்க போற பொண்ணை யாரோடவோ கோர்த்து விடற மாதிரி'' என்று சக்தியிடம் இருந்து அவளை யறியாமல் வார்த்தைகள் உதிற.

''வாயை மூடுறியா நீ'' என்று ஒரு கதும்பு கதும்பி னான்.



# 8

உள்ள தெலாமோ ருயிரென்று தேர்ந்தபின்

உள்ளங் குலைவ துண்டோ? - மனமே!

வெள்ள மெனப்பொழி தண்ணரு ளாழ்ந்தபின்

வேதனை யுண்டோடா?

- பாரதி

''வாயை மூடுறியா நீ'' என்று கார்த்திக் கர்ஜித்ததும் ஒரு நிமிடம் அப்படியே அசைவு நின்றது சக்திக்கு.

இப்படி என்றுமே கார்த்திக். எந்த நிலையிலும் மரியாதை இல்லாமல் சக்தியை பேசியதே இல்லை.

கோபப்படுவான், திட்டுவான், ஆனால் மரியாதை பன்மையையோ, மேம் என்ற வார்த்தையையோ விடமாட்டான். கோபப்பட்டாலும் மரியாதை என்றுமே குறைந்தது இல்லை.

இன்று வாயை மூடுறியா நீ என்று ஒருமையில் கத்துகிறான். அசைவின்றி நின்ற சக்தி சில நொடிகளில் தேறினாள்.

அவளுக்கு கோபம் எல்லாம் வரவில்லை. கோபத் திற்கு பதில் ஒரு ஆராய்ச்சித் தன்மையே தோன்றியது.

சிவாவுடனான போன்கால் இன்னும் ஓடிக்கொண் டிருக்க. சக்திக்கு இதெல்லாம் சிவாவிற்கு கேட்டிருக் குமோ என்று கவலையாக இருந்தது. சிவா லைனில் இருக்கிறானா இல்லையா என்று சக்தி பார்க்கவில்லை.

சிவாவிற்கு சில நிமிடங்களுக்கு எதுவும் ஓடவில்லை. ''நீ கல்யாணம் பண்ணிக்க போற பொண்ணை'' என்றது மட்டுமே அவனின் கவனத்தில் பதிந்தது. அவன் என்ன பேசுகிறார்கள் என்று ஆராயும் முன், ''வாயை மூடுறியா நீ'' என்று கார்த்திக் கத்துவது போனில் நன்கு கேட்டது.

பின்பு பேச்சு எதுவும் கேட்கவில்லை. அவனும் ஆராயவில்லை. அவன் சுமித்ராவைப் பற்றிய நினைவு களிலேயே உளன்று கொண்டிருந்தான்.

''நான் அப்புறம் பேசறேன் சிவா'' என்று சக்தி போனை கட் செய்தாள்.

கார்த்திக்கின் முகத்தைப் பார்த்தாள். இன்னும் அது கோபத்தில் தகித்தது.

"என்ன பிரச்சனை உனக்கு?" என்றாள் நேரடியாக கார்த்திக்கை தீர்க்கமாக பார்த்தபடி.

அவனுக்கு சக்தியை ஒருமையில் திட்டியது உறைக்கவேயில்லை.

அவளின் பார்வையில் நிதானித்தான். இந்த சக்தியின் பார்வை அவனுக்கு புதிது.

எப்போதும் அவன் திட்டினால் பதிலுக்கு சண்டை யிடுவாள் அல்லது கோபித்து முகத்தை தூக்கி கொள் வாள் அல்லது அவன் சொல்வதை அப்படியே கேட்டு விட்டுக்கொடுத்து விடுவாள்.

இப்படி நின்று நிதானித்து பொறுமையாக எதிர் கொள்ள மாட்டாள்.

அவளின் பார்வை அவனை அணு அணுவாக ஆராய்ந்து கண்டுகொள்ள விழைந்தது.

அவளின் பார்வையில் தடுமாறினான். "என்ன? எனக்கு என்ன பிரச்சனை?" என்று அவளிடமே கேள்வி கேட்டான்.

கையை கட்டி நின்று அவனை ஒரு பார்வை பார்த்தவள். "அது உனக்கு தான் தெரியனும்" என்றாள்.

சிறு பெண்ணாக இதுவரை அவனின் கண்களுக்கு தெரிந்த சக்தி இப்போது பெரியவளாக தோன்றினாள்.

"இல்லை! எனக்கொண்ணும் பிரச்சனையில்லை!" என்றான் விறைப்பாக.

"இல்லைன்னா சந்தோஷம். ஆனா எனக்கென்னவோ இருக்குற மாதிரி தோணுது."

"சாதாரணமா நான் எது கேட்டாலும் செய்வ நீ. ஆனா அன்னைக்கு இந்த பொண்ணு போட்டாவை சிவா காட்டினப்ப. நான் எங்க கார்த்திக் ஹெல்ப் பண்ணு வான்னு சொன்னப்போ அதெல்லாம் முடியாது, நீங்க எப்படிச் சொல்லலாம்னு கோபப்பட்ட. இது என்னை மீறின விஷயம்ன்னு சொன்ன" என்றாள்.

அச்சு பிசகாமல் அன்று நடந்ததை சொன்னாள். மாட்டிக்கொள்வோமோ என்று பதட்டம் எகிற ஆரம்பித்தது. கோபம் மாறி பதட்டம் ஏறியது அவனின் முகத்தில். 'இவ ஞாபக சக்தில தீ வைக்க' என்று கார்த்திக் மனசுக்குள் பொறிந்தான்.

இருந்தாலும், "அப்படியா சொன்னேன், எனக்கு ஞாபக மில்லை" என்றான் வருவித்துக் கொண்ட அலட்சியத் துடன்.

"ஞாபமிருக்கோ? இல்லையோ? அதுக்கு தானே உன் டையலாக் டெலிவரிய திரும்ப சொல்றேன்" என்றாள் அவனை விடவும் அலட்சியத்துடன்.

கார்த்திக் அப்படியே நிற்க.

"அதுக்கப்புறமும் சிவாவோட காதலைப் பத்தி பேச்செடுத்தாலே உனக்குப் பிடிக்கலை."

"இன்னைக்கு என்ன சொன்னேன் நான்? நீ கல்யாணம் பண்ணப் போற பொண்ணையா அவனோட சேர்த்துப் பேசறேன்னு சொன்னதும். உனக்கு அவ்வளவு கோபம். உன்னையும் மீறி என்னைப் பார்த்து வாயை மூடுறியா நீன்னு மரியாதையில்லாம பேசின."

அப்போதுதான் அவளை மரியாதை இல்லாமல் பேசியதை கார்த்திக் உணர்ந்தான்.

''எனக்கு நீ வா போன்னு பேசறது பிரச்சனையில்லை. ஆனா உனக்குத் தெரியாம அவ்வளவு கோபத்துல யாரோ எவரையோ பேசற மாதிரி பேசியிருக்க. கொஞ்ச நாளாவே நீ சரியில்லை. என்கிட்ட கடுமை காட்டுற மாதிரி எனக்கொரு ஃபீல்.''

''இல்லை! அப்படியெல்லாம் இல்லை!'' என்று கார்த்திக் மறுத்துப் பேச வர. அவனைப் பேசவே விட வில்லை சக்தி.

''ஒண்ணு ஏதோ என்னோட செய்கை உனக்குப் பிடிக் காம இருக்கணும், இல்லை சிவா லவ் பண்ற பொண்ணை உனக்குப் பிடிக்குதா'' என்றாள்.

அவள் சொன்ன இரண்டுமே ஒரு வகையில் சரி, ஆனால் அதை ஒத்துக்கொள்ளமுடியாதே.

''உளறாதீங்க நீங்க சொல்ற மாதிரி எதுவுமில்லை'' என்றான்.

''அப்படியா? சரி நம்பிட்டேன்!'' என்றாள்.

''அப்போ நான் சொல்றதை நீங்க நம்பலையா?''

''நீ சொல்றது உண்மைன்னா சிவாவோட காதலுக்கு ஹெல்ப் பண்ணு'' என்றாள்.

''அதெல்லாம் முடியாது'' என்றான் அடுத்த நொடி.

''ஏன்?'' என்ற சக்தியின் ஒற்றை வார்த்தை கேள்விக்கு.

''அடுத்தவன் ஹெல்ப் எதிர்பார்க்குறவன் எல்லாம் காதலிக்கக் கூடாது'' என்றான் காட்டமாக.

''அது தான் விஷயமா?'' என்றாள் சக்தி.

''அது மட்டும் தான் விஷயம்'' என்றான் இன்னும் காட்டமாக கார்த்திக்.

அவனின் முகத்தை சில நொடிகள் உற்று பார்த்தாள் சக்தி. அவனும் சளைக்காமல் பார்த்தான்.

இரு கண்களுமே மோதி நின்றன.

அவனின் கண்களைப் பார்த்த சக்தியால் அவனை மீற முடியவில்லை.

அந்த நொடி அவளுக்கு தோன்றியது, ''சரியோ? தவறோ? அவன் எது செய்தாலும் சரி!'' என்பதே.

மீண்டும் சிறு பெண்ணாக மாறி. அவளையறியாமல், ''ஓகே, அஸ் யூ விஷ்!'' என்று ஒப்புகொடுத்து அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

என்ன கோபம் இருந்தாலும் சந்தேகம் இருந்தாலும் அவனுக்காக உடனே விட்டுக்கொடுத்தாள் சக்தி.

அது கார்த்திக்கிற்கு மிகுந்த சஞ்சலத்தை கொடுத்தது.

அவள் மேலும் மேலும் துருவினாள் என்ன சொல்வது என்று பதட்டத்தில் இருந்த கார்த்திக்கிற்கு. சக்தி விட்டுக் கொடுத்துச் சென்றது மிகுந்த நிம்மதியாக இருந்தது. இருந்தாலும் இந்த நிம்மதிக்கு ஆயுட்காலம் குறைவு என்று தெரியும்.

சோர்ந்துவிட்டான்.

அங்கே சிவாவிற்கு பொறுக்க முடியவில்லை. சுமித்ராவின் மேல் கோபமாக வந்தது. தான் இத்தனை நாட்களாக அவளை தொடர்வது தெரியாமலா இருக்கும்.

எந்த வகையிலும் ஒரு எதிர்ப்போ மறுப்போ இல்லையே.

ஏற்கனவே முடிவாகியிருந்தால் அது தனக்கு தெரியும்படி பார்த்துக் கொண்டிருக்க வேண்டியது தானே என்று கோபமாக வந்தது.

நாளை அவளைப் பார்த்து முடிவாகக் கேட்டு விட வேண்டியதுதான் என்று உறுதி எடுத்தான்.

எதற்கும் சக்தியிடம் அவள் சொல்வது எந்தளவிற்கு உண்மை என்று தெரிந்த கொள்ள விரும்பினான்.

சக்திக்கு திரும்பவும் போன் செய்தான். அப்போது தான் சக்தி கார்த்திக்கிடம் பேசி முடித்து உள்ளே நுழைந்தாள், போன் அடித்தது.

எடுப்பதா? வேண்டாமா? என்று சக்திக்கு குழப்பம். அவளுக்கு கார்த்திக்குடன் எந்தக் காரணத்திற்காகவும் சண்டையிட இஷ்டமில்லை.

அவள் எடுக்கவில்லை சிவாவும் விடவில்லை, தொடர்ந்து இரண்டு முறை அடிக்க வேறு வழியில்லாமல் எடுத்தாள்.

''சக்தி! பிஸியா.''

''ஆமாம், சிவா.''

''ஒரே ஒரு விஷயம் மட்டும் கேட்கட்டுமா'' என்றான்.

''கேளுங்க.''

''நீங்க சொன்ன விஷயம் நிஜமா! உங்களுக்கு நல்லாத் தெரியுமா!'' என்றான்.

“தெரியும்! ஒரு நாலஞ்சு நாள் முன்னாடி கல்யாணத்துல அவங்களை பார்த்தோம்! அவங்க குடும்பம் எங்க அப்பாவுக்கு தெரிஞ்சவங்க போல. பேசினாங்க, அப்போ தான் எனக்கு விஷயம் தெரிய வந்துச்சு!” என்று சொன்னாள்.

“ஓகே சக்தி! சொன்னதுக்கு தேங்க்ஸ்! நான் பார்த்துக்கறேன்!” என்று சொல்லி வைத்துவிட்டான்.

“என்ன பார்க்கப் போகிறான்” என்று சக்தி கேட்கவில்லை. இந்த கார்த்திக் தான் கோபப்படுகிறானே என்று நினைத்தவள். சிவா என்னவோ பண்ணிக் கொள்கிறான் என்று விட்டுவிட்டாள்.

அவளைப் பொறுத்தவரை கார்த்திக் தான் அவளுக்கு முக்கியம். அதன் பிறகு தான் எல்லோரும், அவனுக்கு பிடிக்காததால் பிரச்சனையை தூக்கித் தூரப் போட்டு விட்டாள்.

ஆனால் சிவாவிற்கு சுமித்ராவை தூக்கித் தூரப் போடும் எண்ணமெல்லாம் வரவில்லை. அவளைப் பார்த்துப் பேச வேண்டும் என்று மனம் முடிவெடுத்தது.

அடுத்த நாள் காலையிலேயே அவர்கள் வீட்டின் முன் போய் காரை நிறுத்தி காருக்குள்ளேயே அமர்ந்து கொண்டு பார்த்தான். அவள் வெளியே எதற்காகவாவது வருகிறாளா என்று.

ஏனென்றால் அவள் காலேஜ் வரும்பொழுது கூட வைஷ்ணவியும் வருவாள். அதனால் தனியாக எதற்காவது வருவாளா என்று விடியற்காலையில் வந்து நின்று கொண்டான்.

ம்கூம்! யாரும் வரவில்லை. கிட்டத் தட்ட இரண்டு மணி நேரம் நின்றான். வைஷ்ணவியும் சுமித்ராவும் காலேஜ் போக ஸ்கூட்டியை தள்ளிக் கொண்டு வெளியே வந்தனர்.

அப்போது தான் இருவரும் தங்களின் வீட்டின் எதிரில் நின்று கொண்டிருந்த காரைப் பார்த்தனர். கிட்டத் தட்ட இந்த ஊருக்கு வந்த சில மாதங்களாக இந்த காரை இருவரும் அவ்வப்போது பார்ப்பது தான், அதில் உள்ளவனையும் பார்ப்பது தான்.

அதற்கு முனபும் அதே காலேஜில் தான் படித்தார்கள். ஆனால் ஹாஸ்டலில் இருந்தார்கள். வாசுகி இங்கே வீட்டை மாற்றிக்கொண்டு வரவும் அவர்களும் வீட்டுக்கு வந்துவிட்டார்கள். அப்போது இருந்து அவன் எங்காவது கண்ணில் பட்டுக்கொண்டே தான் இருப்பான்.

ஆனால் இதுவரை தொடர்வான், பார்ப்பான், அவ்வளவே! பேச முயற்சி செய்தது இல்லை! எதுவும் கலாட்டா செய்தது இல்லை! சில சமயம் அவர்களை தான் பார்க்க வருகிறான் என்பது கூடத் தெரியாத மாதிரி இருக்கும்.

முதலில் அவன் யாரைப் பார்க்கிறான் என்பதே அவர்கள் இருவருக்கும் தெரியவில்லை. ஏனென்றால் எல்லா இடங்களுக்கு வைஷ்ணவியும் சுமித்ராவும் சேர்ந்தே செல்வார்கள்.

வைஷ்ணவி தான் ஒரு நாள் அவள் முன்னே போய் சுமித்ராவை சற்று நேரம் கழித்து வரச் சொன்னாள். யாரைப் பார்க்கிறான் என்று தெரிந்து கொள்வதற்காக.

அவன் வைஷ்ணவி சென்ற போது பின் வரவில்லை, சுமித்ராவின் பின் வந்தான். அதன் பிறகே அவன் சுமித்ராவின் பின் தான் வருகிறான் என்று கண்டு கொண்டனர்.

வைஷ்ணவி அவனிடம் கேள்வி கேட்க விழைந்த போது. சுமித்ரா அவளை அடக்கி விட்டாள். ''வேண்டாம் வைஷு! நம்மளா எதுவும் ஆரம்பிக்க வேண்டாம். அவன் எதுவும் நம்ம கிட்ட பேச வந்தா பார்த்துக்கலாம்'' என்றாள்.

''நான் கார்த்திக் கிட்ட சொல்லவா சுமி!'' என்பதற்கும் கூட.

''வேண்டாம்!'' என்று மறுத்து விட்டாள்.

''பார்த்தா மரியாதையான ஆளா தான் தெரியறாங்க! நம்ம பாட்டுக்கு உங்க அண்ணன் கிட்ட சொன்னா. அவங்க இவரை உண்டு இல்லைன்னு ஆக்கிடுவாங்க! வேண்டாம், விட்டுடலாம்! பிரச்சனை வந்தா பார்த்துக்கலாம்!'' என்று விட்டாள்.

வைஷ்ணவிக்கு இதில் உடன்பாடு இல்லை தான். இருந்தாலும் சுமித்ரா முடிவாகச் சொன்ன பின் விட்டு விட்டாள்.

இன்று வீட்டு வாயிலுக்கே எதற்கு வந்து நிற்கிறான் என்று புரியவில்லை. வைஷ்ணவி பாட்டிற்கு ஸ்கூட்டியை ஓட்ட. சுமித்ரா அவளின் பின்னால் அமர்ந்திருந்தாள்.

கார் அவர்களைத் தொடர்ந்தது.

ஒரு திருப்பத்தில் காரை அவர்களுக்கு அட்டைகட்டி நிறுத்தினான் சிவா. வேறு வழியின்றி வைஷ்ணவி ஸ்கூட்டியை நிறுத்தினாள்.

சுமித்ரா தான் சற்று டென்சன் ஆனாள். ''நம்ம சுத் திட்டு போகலாம் வைஷு'' என்று அவள் வைஷ்ணவி யிடம் சொன்னாள். அவள் அதை சொல்லிக்கொண்டு இருக்கும் போதே அதை கேட்டுக்கொண்டு சிவா காரை விட்டு இறங்கினான்.

பயமெல்லாம் வைஷ்ணவிக்கு சற்றும் இல்லை. சிவாவை பார்த்தவாறே ''இரு சுமி! சார் இவ்வளவு நாளா இல்லாம இன்னைக்கு தைரியமா நம்ம கிட்ட பேச வந்திருக்கார், என்னன்னு கேட்போம்'' என்றாள் கூலாக.

''வேண்டாம்! போவோம் வா!'' என்று சுமித்ரா பிடிவாதம் பிடிக்க.

''அட இருங்க! உங்க தோழி பெரிய மனசு பண்ணி என் தைரியத்தை பாராட்டி இருக்காங்க! ஒரு ரெண்டு வார்த்தை பேசிட்டு போயிடலாம்!'' என்றான் சிவாவும்.

''ஏய்! என்ன நக்கலா?'' என்றாள் வைஷ்ணவி.

''தோடா! நான் எவ்வளவு மரியாதையா என் ஆளை கூட வாங்க போங்கன்னு பேசறேன்! நீங்க ஏங்க துள்ளு றீங்க மரியாதையா பேசுங்க!'' என்று அதட்டினான்.

''யாருங்க உங்க ஆளு?'' என்று சுமித்ரா கேட்பதை அவன் காதிலேயே போடவில்லை.

''அப்புறம் நான் உங்களுக்கு சொந்தக்காரனாகும் போது வருத்தப்படுவீங்க'' என்றான் வைஷ்ணவியை பார்த்து.

''நீ'' என்று வைஷ்ணவி கோபமாக ஆரம்பிக்கும் போதே சுமித்ரா அவளை அடக்கினாள், ''பிரச்சனையை வளர்த்தாத மரியாதையா பேசு'' என்றவளின் காதை கடித்தாள்.

அவளை ஒரு பார்வை பார்த்து விட்டு. வைஷ்ணவி, ''என்ன விஷயம் சொல்லுங்க'' என்று நேரடியாக விஷயத்திற்கு வந்தாள்.

''எனக்கு இவங்க கூட ஒரு அஞ்சு நிமிஷம் பேசணும்'' என்றான் சுமித்ராவை காட்டி சிவா.

''என்ன பேசணும்?'' என்று வைஷ்ணவி கேட்க.

''எனக்கு அதை அவங்க கிட்ட தான் பேசணும்!'' என்றான் சிவா.

''நான் இங்க தான் இருப்பேன்! அவளை தனியா விட்டுட்டு எங்கேயும் போக முடியாது! இப்படியே பேசுங்க!'' என்றாள் வைஷ்ணவி.

சிவா சற்றும் அதற்கு மேல் தாமதிக்காமல். ''உங்களுக்கு உங்க அத்தை பையனோட கல்யாணமாமே. அப்படியா?'' என்றான்.

சுமித்ராவிற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை.

அவள் அப்படியே நிற்க. ''சொல்லுங்க, அது உண்மையா?'' என்றான்.

''ஆமாம்!'' என்றாள். சொன்னது சுமித்ரா அல்ல வைஷ்ணவி.

''நான் உங்களைக் கேட்கலை'' என்றான் சிவா.

அவனை எதிர்த்து பேச வாயை திறந்த வைஷ்ணவி. பின்பு பிரச்சனையை வளர்க்க விரும்பாமல், ''சொல்லு சுமி!'' என்றாள்.

''ஆமாம்!'' என்று சுமி ஆமோதிக்கவும்.

"ஏன் என்கிட்ட சொல்லலை?" என்றான்.

எதை இவனிடம் சொன்னோம், இதை சொல்லாமல் இருப்பதற்கு என்பது போல சுமி பார்த்தாள்.

வைஷ்ணவி ஏதோ பேச வர. "ப்ளீஸ்! கொஞ்சம் அமைதியா இருங்க! எனக்கு அவங்க கிட்ட பேசியே ஆகணும்" என்றான் பிடிவாதமான குரலில் சிவா.

என்ன தான் பேசிவிடுவான் பார்ப்போம் என்பது போல வைஷ்ணவியும் அமைதி காத்தாள்.

"சொல்லுங்க! நான் உங்க பின்னாடி சுத்தரேன்னு உங்களுக்கு இத்தனை மாசமா தெரியாதா. என்னை பார்த்தா உங்களுக்கு ரோட் சைட் ரோமியோ மாதிரியோ இல்லை டைம் பாஸுக்கு சுத்தற மாதிரியா தெரியுது."

"உங்களுக்கு கல்யாணம் வேற ஒருத்தரோட ஆகப்போகுதுன்னா என்கிட்ட சொல்லியிருக்கலாமே! நான் மனசுல ஆசையை வளர்த்து இருக்க மாட்டேனே!" என்றான் நேர் பார்வை பார்த்து.

வைஷ்ணவி சுமித்ராவை பார்த்து முறைத்தாள், "நான் அப்போவே சொன்னேனே கேட்டியா" என்பது போல.

வைஷ்ணவியின் குற்றம் சாட்டும் பார்வையை பார்த்தவள். சிவாவிற்கு பதிலளித்தாள்.

"கெஸ் பண்ணினோம்! ஆனா கன்ஃபார்மா தெரியாது" என்றாள் வேண்டுமென்றே சுமித்ரா. சொன்னதோடு நில்லாமல், "நீங்க என்கிட்ட பேசினதே இல்லை! நான் எப்படி சொல்ல முடியும்!" என்றாள் முயன்று வரவழைத்த தைரியத்தோடு.

''என்னங்க பேச்சு இது! உங்களுக்கு நிஜமா தெரியாதா நான் உங்களை விரும்பறேன், அதனால தான் பின்னால வர்றேன்னு! ஒரு தடவையாவது உங்களுக்கு கல்யாணம் உங்க சொந்தத்துல பேசிட்டாங்கன்னு சொல்லியிருக்கலாமில்லை.''

சுமித்ரா அமைதியாக நிற்க.

''சரி! இப்போ பேசறேன்! நான் உங்களை காதலிக்கிறேன்!'' என்றான்.

உடனே சுமித்ராவின் பார்வையில் பதட்டத்தை பார்த்தவன். ''எனக்கு உங்களை பிடிச்சிருக்கு. உங்களை கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறேன். நீங்க சரின்னு சொன்னீங்கன்னா எங்கப்பா அம்மாவை பொண்ணு கேட்க உங்க வீட்டுக்கு அனுப்பறேன்'' என்றான்.

வைஷ்ணவி இப்போது மிகவும் கோபப்பட்டாள், ''என்ன சார்? என்ன விளையாடறீங்களா? அவளுக்கு அத்தை பையனோட கல்யாணம்னு தெரிஞ்சும் இப்படி பேசறீங்களே.''

''அத்தை பையன்! மாமா பொண்ணுன்னு இருந்தா! இந்த பேச்செல்லாம் வர்றது சகஜம் தான். அதுக்காக அந்தக் கல்யாணம் தான் நடக்கணும்னு எந்த அவசியமும் கிடையாது'' என்றான்.

''உங்களுக்கு ஏன் இவ்வளவு கோபம் இதுல'' என்று வைஷ்ணவியை பார்த்து கேட்க.

''அவளுக்கு என் அண்ணனோட தான் கல்யாணம். இதுல பேச எதுவுமில்லை, நீங்க கிளம்புங்க'' என்றாள்.

''என்ன? உங்க அண்ணனா!'' என்றான்.

''ஆமாம்! என் அண்ணன் தான்! உங்க விருப்பம் நிறைவேறாது கிளம்புங்க!'' என்றாள்.

''என்னங்க? சும்மா நீங்க நிறைவேறாது அது இதுன்னு சொல்றீங்க! சொந்தம்னு இருந்தா ஆயிரம் சொல்லுவாங்க! அது பேச்சில்லை! எனக்கு உங்களோடவும் பேச்சில்லை! சுமித்ராவோட தான் பேச்சு!'' என்றான் சிவாவும் பதிலுக்கு கோபமாக.

அவள் பேசிக்கொண்டிருக்கும் போதே கார்த்திக்கின் கார் அங்கே வந்தது. அவனுக்கு சக்தி சிவாவிடம் சுமித்ராவின் திருமண விஷயத்தை சொல்லிவிட்டாள் என்று தெரிந்ததுமே, சிவா சுமித்ராவிடம் பேச முயற்சிப்பான் என்று தோன்றியது.

அதுதான் அவர்களின் கல்லூரி வாயிலில் அவர்களுக்காக கார்த்திக் காத்திருந்தான். அவர்கள் எப்போதும் வரும் நேரத்திற்கு வர காணோம் என்றதும் அவர்களைத் தேடி வர.

அவன் நினைத்தது சரி என்பதாக சிவா இவர்களிடம் பேசிக்கொண்டு இருந்தான்.

சிவாவின் கார் அருகில் ஒரு கார் வந்து நிற்கவும்.

மூவரும் யார் என்பது போல பார்க்க. கார்த்திக் இறங்கினான்.

வைஷ்ணவி மற்றும் சுமித்ராவின் முகத்தில் ஒரு பயம் வந்தது.

சிவா இவன் எங்கே இங்கே என்பது போல அதிர்ச்சியாகப் பார்த்தான்.



# 9

**நெஞ்சி லுரமுமின்றி**

**நேர்மை திறமுமின்றி**

**வஞ்சனை சொல்வாரடீ**

**கிளியே வாய்ச்சொல்லில் வீரரடி**

**கிளியே வாய்ச்சொல்லி வீரரடி**

- பாரதி

கார்த்திக் மூவரையும் பார்க்கவும், வைஷ்ணவி மற்றும் சுமித்ராவின் கண்களில் அப்பட்டமான பயம் தெரிந்தது.

சிவாவிற்கு கார்த்திக்கைப் பார்த்தது அதிர்ச்சி தான் என்றாலும் தன்னுடன் இருந்த பெண்களையும் பார்த்தான்.

அவர்களின் கண்களில் பயத்தைப் பார்க்கவும். சற்று பதட்டம் வந்தது சிவாவிற்கு.

கார்த்திக்கை, யாரோ ஒரு புதியவனை. அவனின் ஆஜானுபாகுவான தோற்றத்தை. பார்த்துப் பயந்து விட்டனர் என்று நினைத்தான்.

அவர்களுக்கு அவன் தெரிந்தவனாய் இருப்பான், உறவினனாய் இருப்பான் என்று சற்றும் சிவாவிற்குத் தோன்றவில்லை.

கார்த்திக்கை பார்த்ததும் பதட்டத்தை மறைத்து, ''ஹலோ கார்த்திக்'' என்றான்.

கார்த்திக்கும் கோபத்தை எல்லாம் காட்டவில்லை, 'ஹலோ சிவா'' என்றான்.

கார்த்திக் கோபத்தை காட்டாதது, இன்னும் பெண்கள் இருவருக்கும் பயத்தை அதிகப்படுத்தியது. கார்த்திக்கின் கோபம் அவர்கள் அறியாததா.

மீண்டும் அவர்களை பார்த்த சிவாவிற்கு அவர்களின் பயமும் பதட்டமும் புரிய. அவர்களை பார்த்தது, ''பயம் தேவையில்லை, சார் எனக்கு தெரிஞ்சவங்க தான்'' என்றான் வைஷ்ணவியையும் சுமித்ராவையும் பார்த்து.

பெண்கள் இருவருக்கும் கார்த்திக்கை தெரிந்த மாதிரி காட்டிக்கொள்வதா, இல்லை தெரியாத மாதிரி நிற்பதா என்று பயங்கர குழப்பம்.

கார்த்திக் அவர்கள் இருவரையும் பார்த்து, ''இங்க என்ன பண்றீங்க?'' என்றான்.

சிவா முகத்தில் குழப்பம், ''உங்களுக்கு இவங்களைத் தெரியுமா'' என்றான் கார்த்திக்கை பார்த்து.

''தெரியும்'' என்றான் கார்த்திக்.

''நான் அன்னைக்கு போட்டோ காட்டினப்ப நீங்க தெரிஞ்ச மாதிரி சொல்லலையே'' என்றான் சிவா.

''இல்லையே, நான் மேம்கிட்ட சொன்னேனே, உங்க எதிர்ல தானே சொன்னேன்!'' என்றான்.

என்ன சொன்னான் சிவா புரியாமல் பார்க்க.

''உங்க பிரண்ட்கிட்ட இந்த போட்டோவ டெலிட் பண்ண சொல்லுங்கன்னு சொன்னேனே'' என்றான்.

''அது அந்த பொண்ணுக்கு விருப்பமில்லாம அந்த போட்டோ வெச்சுக்கக் கூடாதுன்னு தானே சக்தி சொன்னாங்க.''

''அது அவங்க சொல்லியிருக்கலாம், ஆனா நான் அதுக்கு சொல்லலை'' என்றான்.

சிவா ஸ்தம்பித்து நின்றான். கார்த்திக் என்ன சொல்லவருகிறான் என்று புரியாமல் பார்க்க.

கார்த்திக் வைஷ்ணவியையும் சுமித்ராவையும் பார்த்து. ''உங்களுக்கு காலேஜ்க்கு டைம் ஆகலையா'' என்றான்.

உடனே வண்டியில் ஏறிய வைஷ்ணவி, ''கிளம்ப றோம் அண்ணா'' என்றுவிட்டாள்.

''என்ன அண்ணனா?'' என்று அதிர்ந்தான் சிவா.

''இவர் உங்க அண்ணனா?'' என்று மறுபடியும் வைஷ்ணவியை பார்த்து சிவா கேட்டான். ஏனென்றால் அவளின் அண்ணனை தானே சுமித்ரா திருமணம் செய்ய போவதாக வைஷ்ணவி கூறினாள்.

வைஷ்ணவி கார்த்திக்கை பார்க்க.

கார்த்திக் சிவாவை பார்த்து, 'ஆமாம் சிவா!'' என்றான்.

இதுவரை கார்த்திக் அவனின் உறவு முறைகளை யாரிடமும் சொல்லியதில்லை. இனி மறைப்பதாக எண்ணமுமில்லை.

சிவா இன்னும் அதிர்ந்தான். ''அப்போ சுமித்ராவை'' என்று சிவா இழுக்க.

''வீட்ல அம்மா அப்படி தான் பேசிக்கறாங்க'' என்றான் கார்த்திக்.

சிவாவிற்கு இது மிகுந்த அதிர்ச்சி. ''எவன் அவன்? அத்தை பையன்! என்னை மீறி எவன் கல்யாணம்

பண்ணிக்குவான்னு பார்த்துக்கறேன்!'' என்று இறுமாப்புடன் தான் இதுவரை சிவா இருந்தான்.

சத்தியமாக சிவா, கார்த்திக் அந்த அத்தை பையனாக இருப்பான் என்று எதிர்பார்க்கவில்லை.

கார்த்திக்கின் உயரம் அவனுக்கு நன்கு தெரியும். அவனுடன் மோதுவது என்பது சாமான்யமல்ல. சுமித்ராவின் சம்மதம் இருந்தால் பேச்சே வேறு.

அவளிடம் இன்று தான் பேசியேயிருக்கிறான். அவளும் அத்தை மகனை திருமணம் செய்து கொள்ளப் போகிறேன் என்பது மாதிரி தான் சொல்லியிருக்கிறாள்.

எங்கே யாருடன் போராடுவது அவன் காதலுக்காக. அவனுக்கு புரியவேயில்லை.

''உங்களுக்கு என் காதல் தெரிஞ்ச அன்னைக்கே சொல்லியிருக்கலாமே'' என்றான் கார்த்திக்கை பார்த்து.

''அதான் இப்போ தெரிஞ்சிடுச்சே'' என்றான் கார்த்திக்.

என்ன பதில் இது என்று சிவாவிற்கு புரியவில்லை.

அதோடு மட்டும் நிறுத்தாமல், ''மேடமோட நண்பர் அப்படிங்கற ஒரே காரணத்துக்காக தான் நான் உங்களோட பிரச்சனை பண்ணாம விடறேன். இனிமே சுமித்ராவை பார்க்காதீங்க'' என்றான்.

சிவாவின் பார்வை அனிச்சையாய் சுமித்ராவின் புறம் திரும்பியது.

நேற்று போனில் சக்தி இதை பற்றி தான் பேசிக் கொண்டு இருந்தாளோ?

என்னவோ தான் ஏமாற்றப்பட்டு விட்டதாகவே சிவாவிற்குத் தோன்றியது. ஒரு வார்த்தை இது போல

என்று என்று சுமித்ரா சொல்லியிருக்கலாமே என்று தோன்றியது. தினமும் தானே இவள் பார்வை படும் இடத்தில் இருந்திருக்கிறேன்.

கார்த்திக் அவன் கூட சொல்லவில்லையே.

சக்தி அவளுமா? நல்ல நட்பாய் எண்ணினேனே.

ஒன்றும் பேசாமல் காரின் கதவை திறந்து ஏறினான்.

கார்த்திக் அவனின் காரை எடுத்தால்தான். சிவா எடுக்க முடியும் என்ற நிலை. அப்போதும் அவனின் காரை எடுக்க சிவா சொல்லவில்லை. அப்படியே ரிவர்ஸ் எடுத்தால் கண்டிப்பாய் சுவரில் மோதும்.

இருந்தாலும் அப்படியே ரிவர்ஸ் எடுத்தான். கார் சுவரில் மோதி டேமேஜ் ஆனது. அப்படியே திருப்பி காரை கரன்ட் போஸ்டிலும் முன்னால் மோதினான், பின்பு வேகமெடுத்தான்.

அங்கிருந்த சுமித்ரா, வைஷ்ணவி, கார்த்திக் மூவருக்குமே அவனின் நிலை தெளிவாகப் புரிந்தது.

வைஷ்ணவிக்கு சுமித்ராவின் மேல் கோபமாக வந்தது. முன்பே இந்த விஷயத்தை அவள் சிவாவிடம் தெளிவு படுத்தியிருக்க வேண்டும் என்று.

கார்த்திக் அவர்களை முறைத்து பார்த்தவன், ''முதல்லயே என்கிட்ட சொல்றதுக்கு என்ன?'' என்றான்.

வைஷ்ணவி, ''இந்த அளவுக்கு போகும்னு நாங்க எதிர்பார்க்கலை'' என்று சமாளிக்க முயற்சிக்க.

என்னவோ சிவாவின் வருத்தம் சுமித்ராவிற்கும் வருத்தத்தை கொடுத்தது. அதுவும் சிவா அவளின் போட்டோ வைத்திருந்தது கார்த்திக்கிற்கு தெரியும்

என்றதும் அப்படி ஒரு கோபத்தை சுமித்ராவிற்கு கொடுத்தது.

"ஏன் வைஷு? உங்க அண்ணா தான் அவர் என் போட்டோவை வெச்சிருந்ததை பார்த்திருக்காரில்லை! என்ன செஞ்சாராம்?" என்றாள்.

இதை கார்த்திக் எதிர்பார்க்கவில்லை வாயடைத்து நின்றான்.

"ஒரு வேளை அவரோட மேம் இருந்ததால சொல்லி யிருக்க மாட்டார்! ஏன்னா எல்லோரையும் விட அவ ரோட மேம் அவருக்கு ரொம்ப முக்கியம்" என்றாள். அவள் குரலில் தெரிந்தது வருத்தமா, கோபமா, பொறா மையா, வரையறுக்க முடியவில்லை.

பின்பு சுதாரித்து, "நான் டெலிட் பண்ண சொன் னேன்" என்றான் கார்த்திக்.

"நான் யாருன்னு சொல்லியா டெலிட் பண்ண சொல்லியிருப்பாங்க வைஷு?"

அவளை ஒரு பார்வை பார்த்தவன், எதுவும் பேசாமல் காரில் ஏறினான். அவர்கள் கிளம்பும் வரை நின்றான்.

அவர்கள் கிளம்பியதும் கிளம்பிவிட்டான். இந்த பெண் களின் மேல் எரிச்சலாக வந்தது. நேற்று சக்தி அவனை நிற்க வைத்து கேள்வி கேட்டாள். இன்று சுமித்ரா?

"என்ன நடந்து கொண்டிருக்கிறது என்னைச் சுற்றி? இந்த பெண்கள் என்னை கொண்டு போக விடுவதா" என்று இறுமாப்பு எழுந்தது.

சக்தியின் திருமணம் வரை முதலில் பொறுப்போம் என்று நினைத்தவன். இப்போது முடிவை மாற்றினான்.

யாரையும் அவ்வளவு சீக்கிரத்தில் சக்தி எனக்கு பிடித் திருக்கிறது என்று சொல்லுவாள் என்ற அவனுக்குத் தோன்றவில்லை.

அவளுக்கு பிடிக்காமல் வீரமணி கட்டாயம் அவளுக்குத் திருமணம் செய்ய மாட்டார். அதுவும் அவனுக்குத் தெரியும். வீரமணி மகளுக்காக எதையும் செய்யக் கூடியவர்.

பின்பு தாமதிப்பானேன் என்று தோன்ற.

செய்யப் போகும் செயல்களின் தீவிரம் புரிந்தாலும்.

**உடனே செய். வருவதை எதிர்கொள். இனியும் தயங்காதே.** என்று முடிவெடுக்க வைத்தது.

விரோதமோ? துரோகமோ உடனே பாராட்டு, என்று முடிவெடுத்து விட்டான்.

இரண்டு மூன்று நாட்களாக கழுத்தில் வலியில்லை என்று அந்த காலரை எடுத்திருந்தான்.

நேற்று சக்தியிடம் அவனை மீறி தம் கட்டி கத்திய போதே சுளீரென்று ஆரம்பித்த வலி, இப்போது இங்கே வந்து வைஷ்ணவி, சுமித்ரா, சிவாவை பார்த்த பிறகு சற்று அதிகரித்து இருந்தது.

வலி குறையட்டும், பிறகு பார்த்துக்கொள்ளலாமா? என்று நினைத்தவன், வேண்டாம் என்று உடனடியாக முடிவெடுத்தான்.

தானாக சக்திக்கு விஷயங்கள் தெரிய வருவதற்கு முன்னால் சிவா சொல்லிவிடுவானோ என்றும் யோசனை யாக இருந்தது. ஆனால் எது வந்தாலும் பார்த்துக்கொள்ள லாம் என்பதே அவன் எண்ணமாக இருந்தது.

அன்று. அப்போது. அந்த நிமிடமே. வேலையை ஆரம்பித்தான். ஏற்கனவே எல்லா ஏற்பாடுகளும் செய்து வைத்தது தான். அதை செயல்படுத்தினான், அவ்வளவே!

யாருடைய போனும் எடுக்கவில்லை. வீரமணி அழைத் திருந்தார், சக்தி அழைத்திருந்தாள். வைஷ்ணவி அழைத் திருந்தாள், யாருடையதும் எடுக்கவில்லை.

வீட்டிற்கும் செல்லவில்லை.

செல்வம் வந்து வீரமணியிடம் தகவல் சொன்னான். ''ரெண்டு நாள் ஏதோ முக்கிய வேலை, வீட்டுக்கு வர மாட்டேன்னு உங்க கிட்ட சொல்ல சொன்னாங்க'' என்றான்.

''ஏன்? அவன் போன் என்னாச்சு?'' என்று சக்தி கூடக் கேட்டாள்.

''தெரியலை மேடம்'' என்று விட்டான்.

முழுதாக இரண்டு நாட்கள் வீட்டிற்கே வரவில்லை.

இரண்டு நாட்கள் கழித்து காலையிலேயே வீட்டிற்கு வந்துவிட்டான் கார்த்திக்.

அவன் வீட்டிற்குள் நுழையும் போது சக்தி தான் முதலில் அவனை பார்த்தாள். அவன் கையில் இரண்டு பெரிய பெட்டிகள் வேறு.

அவனை பார்த்ததும் சக்தி, ''ஹேய் கார்த்திக்!'' என்று ஆவலாக ஓடி வந்தவள். ''எங்கபோன ரெண்டு நாளா? ஒரு போன் கூடப் பண்ணலை! நாங்க பண்ணினாலும் எடுக்கலை, எங்கேயிருக்கன்னும் சொல்லலை! எங்க போன?'' என்றாள்.

கார்த்திக் அவளின் கேள்விகளுக்கு பதில் கொடுக் காமல். ''நான் அப்பாவையும் அம்மாவையும் பார்க் கணும் மேம், வர சொல்லுங்க'' என்றான்

"எதுக்கு?"

"கூப்பிடுங்க! சொல்றேன்!" என்றான். அவனின் குரலில் விலகல் தன்மை நன்றாகத் தெரிந்தது.

"என்ன கார்த்திக்? ஏதாவது பிரச்சனையா" என்றாள் அக்கறையாக.

"அதை நீங்க தான் முடிவு பண்ணனும்" என்றவன். "அவங்களை கூப்பிடறீங்களா" என்றான் சற்று அதட்டலாக.

ஏதோ அவனுக்கு டென்சன் போல என்று நினைத்த சக்தி. மேலும் அவனை டென்சனாக்காமல் "ஓகே! அஸ் யூ விஷ்!" என்று எப்போதும் போல அவனுக்கு ஒப்புக் கொடுத்தபடி அவர்களைக் கூப்பிடப் போனாள்.

இதுதான் தான் அவனிடம் கடைசியாக சொல்ல போகும், "ஓகே! அஸ் யூ விஷ்!" என்ற வாக்கியம் என்பதை அறியாமல்.

"அப்பா! கார்த்திக் கூப்பிடறான் பா!" என்று வந்தாள் சக்தி வீரமணியிடம்.

"அவன் வந்துட்டானாம்மா! எங்க போயிருந்தானாம்?" என்று அவர் கேட்க.

"தெரியலைப்பா! எதை கேட்டாலும் அப்பாவையும் அம்மாவையும் கூப்பிடுங்கங்கறான்! ஏதோ டென்சனா இருக்கான் போல! நான் அதிகம் கேள்வி கேட்கலை" என்றாள்.

இவள் கார்த்திக்கிற்கு டென்சன் என்றதும், என்னவோ ஏதோவென்று வீரமணியும் தெய்வானையும் அவசரமாக ரூமில் இருந்து வெளியே வந்தனர்.

''என்ன விஷயம் கார்த்திக்'' என்று வீரமணி கேட்டார்.

''உட்காருங்க அய்யா!'' என்றான்.

''என்னவோ நீ டென்சனா இருக்கேன்னு சக்தி சொன்னா! ஏதாவது பிரச்சனையா?'' என்றார்.

கார்த்திக் அமைதி காத்தான்.

''என்ன விஷயம்ன்னு சொல்லுப்பா! எதுவா இருந்தாலும் சமாளிச்சிக்கலாம்! நம்மால முடியாதது எதுவுமே கிடையாது!'' என்று அவனுக்குத் தைரியம் கொடுத்தார்.

கார்த்திக் அப்போதும் அமைதியாக இருக்க. ஏதோ சரியில்லை என்று தெய்வானையின் மனதுக்குத் தோன்ற ஆரம்பித்தது.

''சொல்லுப்பா'' என்றார் அவரும்.

''அது வந்துங்கம்மா'' என்று இழுத்தவன். பேச ஆரம்பித்தான்.

''உங்க சொத்து மதிப்பு இப்போ'' என்று அவன் சொல்ல ஆரம்பித்தான்.

''இப்போ எதுக்கு இது கார்த்திக்'' என்று வீரமணி கேட்டார்.

''உங்களுக்கு எந்தளவுக்கு தெரியும்னு எனக்குத் தெரியாது! சொல்ல வேண்டியது என் கடமை!'' என்று சொல்லி. அவன் விவரங்களைச் சொல்ல ஆரம்பித்தான்.

பாதி சொத்துக்களை பற்றி தான் வீரமணிக்கும் தெய்வானைக்கும் தெரிந்திருந்தது. மீதி அவர்களுக்கே தெரியவில்லை. கேட்க... கேட்க... இவ்வளவா என்ற பிரமிப்பு! அங்கிருந்த வீரமணி, தெய்வானை, சக்தி மூவருக்குமே ஏற்பட்டது.

''இது உங்க சுவிஸ் அக்கௌண்ட்'' என்று அவனின் லேப் டேப்பை திறந்து அதன் விவரத்தையும் சொன்னான்.

''இவ்வளவு பணமா? எப்படி?'' என்ற கேள்வி சக்திக் குள் எழ ஆரம்பித்தது. அதை கேட்கவும் செய்தாள்.

''நம்ம கிரானைட்ஸ ஃபாரின் கன்ட்ரீஸ்க்கு எக்ஸ் போர்ட் பண்றோம்! அதுல வந்தது தான் இது! என்ன? திஸ் இஸ் நாட் வைட் மணி, திஸ் இஸ் ப்ளாக்!'' என்றான்.

கடைசியா, ''சக்தி மேம் பேர்ல வாங்கின காலேஜ்!'' என்று அதன் விவரத்தையும் கொடுத்தான்.

''எதுக்குப்பா இதையெல்லாம் இப்போ சொல்ற?''

''நீங்க எப்படி ஃபீல் பண்றீங்க'' என்றான் வீரமணியிடம்.

''நீ கேட்கறது புரியலை'' என்றார் அவர்.

''உங்க சொத்து மதிப்பை பார்த்து நீங்க எப்படி ஃபீல் பண்றீங்கன்னு கேட்டேன்!'' என்றான்.

''இதென்னப்ப கேள்வி? ரொம்ப சந்தோஷம் தான். எனக்கு ஆரம்பத்துல இருந்த சொத்தை விட பல நூறு மடங்கு அதிகம்'' என்றார் உண்மையாக.

இந்த வார்த்தைக்காகத் தானே அவன் அந்தக் கேள்வியை கேட்டதே.

''ஒத்துக்கறீங்களா? உங்க முந்தைய சொத்தை விட இது பல நூறு மடங்கு அதிகம்ன்றதை.''

''தாராளமா. இதுல என்ன உனக்கு சந்தேகம்'' என்றார் வீரமணி.

''இந்த சொத்தை நான் தான் பெருக்கிக் குடுத்தேன்னு ஒத்துக்கறீங்களா'' என்றான்.

''ஒத்துக்கறேன்! அதுக்கு இப்போ என்ன?'' என்றார் வீரமணி.

தெய்வானைக்கு ஏதோ சரியில்லை என்று உள்ளுணர்வு அதிகமாகச் சொல்லியது, நடப்பது புரிந்தாலும், ஏன்? என்பது போல சக்தி பார்த்திருந்தாள்.

''நான்... நான்...'' என்று தடுமாறியவன்,

''வாசுகி குழுமத்தை என் தாத்தா பேருக்கு மாத்திட்டேன்'' என்றான்.

முதலில் வீரமணிக்கு ஒன்றும் புரியவில்லை.

அப்போதுதான் அங்கிருந்த வீரமணிக்கும், தெய்வானைக்கும், சக்திக்கும் உரைத்தது. இதுவரை அவன் சொன்ன சொத்துக்களில் வாசுகி குழுமம் வரவேயில்லை என்று.

''என்னப்பா சொல்ற?'' என்றார் சற்று உயர்ந்த குரலுடன் வீரமணி.

''ஐயா! நான் வாசுகி குழுமத்தை என் தாத்தா பேர்ல மாத்திட்டேன்'' என்றான் தெளிவாக.

''என்ன உளர்றே?'' என்று உட்கார்ந்திருந்தவர் பதட்டமாக எழுந்தார்.

சக்தியும் தெய்வானையும் உட்ச பட்ச அதிர்ச்சியில் இருந்தனர்.

''யார் சொத்தை, யார்டா மாத்துறது? என்னடா திரும்பத் திரும்ப உளர்ற?'' என்று கோபமாக அவனருகில் போனார்.

அவர் போன வேகத்தை பார்த்தால் எங்கே அவர் கார்த்திக்கை அடித்து விடுவாரோ என்று தெய்வானை பயந்துவிட்டார்.

"பொறுமையா இருங்க! என்னன்னு விசாரிப்போம்!" என்று அவரும் பதட்டமாக வீரமணியின் அருகில் வந்தார்.

சக்திக்கு நடப்பது ஒன்றுமே புரியவில்லை. என்ன நடக்கிறது என்று அவள் புரிந்து கொள்ள முயலவில்லை.

கார்த்திக்கா இப்படி என்ற எண்ணம் மட்டுமே ஓங்கி நின்றது.

"என்ன கார்த்திக் சொல்ற?" என்றார் தெய்வானை இழுத்து பிடிச்த பொறுமையுடன்.

மறுபடியும் கார்த்திக் அதையே சொன்னான். "வாசுகி குழுமத்தை என்னோட தாத்தா பேர்ல மாத்திட்டேன்" என்று.

பொறுமை மீறியவராக வீரமணி கார்த்திக்கின் சட்டையை கொத்தாய் பற்றினார்.

சக்தி மலங்க மலங்க விழித்தபடி நின்றாள்.

"விடுங்க! விடுங்க!" என்று தெய்வானை அவரை விலக்க முயல. அவர் விலக்கவில்லை. கார்த்திக்கும் விலக முற்படவில்லை, அசையாமல் நின்றான்.

தெய்வானைக்கு பயம் கார்த்திக் ஒரு தள்ளு தள்ளி னால் வீரமணி கீழே விழுந்து விடுவாரே என்று.

பற்றிய கையை விடாமல், "எப்படி? எப்படி மாத்தின?" என்றார் வீரமணி.

"உங்க கிட்ட நிறைய வெத்து பத்திரத்துல கையெழுத்து வாங்கி வெச்சிருந்தேன், அதை வெச்சு மாத்தினேன்" என்றான்.

''ஏன்டா? ஏன்டா இப்படி பண்ணின?'' என்ற நரம்பு புடைக்க ஆவேசமாக வீரமணி கத்த.

தெய்வானை, ''யாரு? யாரு உன் தாத்தா?'' என்று கேட்டார்.

''பத்ரிநாத்'' என்று கார்த்திக் சொல்ல.

வீரமணியும் தெய்வானையும் அதிர்ந்தனர்.

''என், என் சந்துருவோட பையனாடா நீ...'' என்றார் அவசரமாக உணர்ச்சி மிகுதியில் வீரமணி.

''ஆமாம்!'' என்று கார்த்திக் சொல்ல.

வீரமணியின் கைகள் தானாகத் தளர்ந்தது, உடலும் தளர்ந்தது... அப்படியே சோபாவில் அமர்ந்தார்.

சக்திக்கு சொத்து போனது அவளின் கருத்தில் பதியவில்லை.

''வாசுகி குழுமம் உங்களோடதா'' என்று அலட்சிய மாக கேட்ட வைஷ்ணவி ஞாபகத்திற்கு வந்தாள்.

அப்போது கல்யாணத்தில் பார்த்த வாசுகி, கார்த்திக் கின் அம்மா.

கார்த்திக்கிற்கு தான், அந்த பெண் சுமித்ராவை திருமணம் செய்யப் போவதாகச் சொன்னது. அதனால் தான் நேற்று கார்த்திக்கிற்கு, சுமித்ராவை பற்றி சிவாவிடம் பேசியதற்கு அவ்வளவு கோபம் வந்திருக்கிறது.

கார்த்திக் சொத்திற்காக இத்தனை வருடம் இந்த வீட்டில் இருந்து ஏமாற்றி இருக்கிறான்.

கார்த்திக் ஏமாற்றி இருக்கிறான்.

சக்தியால் அதைத் தாங்க முடியவில்லை.

# 10

நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்
கொஞ்சமோ பிரிவினைகள்-ஒரு
கோடி யென்றால்அது பெரிதாமோ?

- பாரதி

சக்தியால் கார்த்திக்கின் வார்த்தைகளை செயலை ஜீரணிக்கவே முடியவில்லை.

வீரமணி தளர்ந்து அமர்ந்துவிட்டார். தெய்வானை பேச்சற்று போய்விட்டார்.

மூவரும் சொல்லொணா வேதனையில் இருந்தனர். சொத்து என்பது அங்கே இரண்டாம் பட்சம் ஆகிவிட்டது. அவர்களுக்கெல்லாம் வருத்தம் கார்த்திக் மேல் வைத்த நம்பிக்கை பொய்த்து போனதே.

தன்னுடைய பெண்ணுக்கே அவனை மணமகனாய் வரிக்க நினைத்தவர் தெய்வானை. அந்தளவுக்கு அவன் மேல் நம்பிக்கை மட்டுமல்ல அன்பையும் வைத்திருந் தார். இந்த கார்த்திக்கின் செயல். எல்லாம் பொய்த்து போய்விட்டதே என்பதாக இருந்தது.

இங்கே கார்த்திக் பேசிக்கொண்டு இருக்கும் போதே மாரி ஆட்களோடு வந்து அவனின் ரூமில் இருந்த சாமான்களை எடுத்துக் கொண்டிருந்தான்.

"உங்ககிட்ட இல்லாத எல்லா பத்திரமும் இந்த பெட்டி குள்ள இருக்கு. நான் இங்க இருந்து எதையும் எடுத்துப் போகலை, வாசுகி குழுமத்தை மட்டும் தான் எடுத்துட்டு போகிறேன்."

"உங்க சொத்து மதிப்பை அதுக்காக தான் பல நூறு மடங்கு உயர்த்திட்டேன்" என்றான்.

யாரும் அவன் என்ன பேசுகிறான் என்று கேட்கும் மனநிலையிலேயே இல்லை.

வீரமணி, "என் சந்துருவோட பையனா நீ!" என்று கேட்டவர் தான். அதன் பிறகு வாயைத் திறந்து ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

அவரின் தோற்றம் மிகவும் ஓய்ந்து தெரிந்தது.

எல்லாவற்றையும் கார்த்திக், வீரமணியையும் தெய்வானையையும் பார்த்தே பேசினான். மறந்தும் சக்தியின் புறம் திரும்பவில்லை.

இவ்வளவு பேசிய கார்த்திக் மன்னிப்பு என்ற வார்த்தையை மட்டும் கேட்கவேயில்லை. தெய்வானையும் ஏதாவது அவன் சமாதானமாக பேசுவானா. உட்கார்ந்து பேசி தீர்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தார்.

ஆனால் கார்த்திக் அதற்கான வாய்ப்பை கொடுக்கவேயில்லை. "வாசுகி குழுமத்தை நான் எடுத்துகிட்டேன்! அதுக்குப் பதிலா உங்களுக்கு சொத்தை அதிகப்படுத்தி கொடுத்துட்டேன்!" என்பதாக தான் அவனின் நடவடிக்கை இருந்தது.

அவனும் அவர்கள் ஏதாவது பேசுவார்களா என்று காத்திருந்தான்.

"ஏன் கார்த்திக் இப்படி எங்களுக்கு தெரியாம பண்ணின? ஒரு வார்த்தை எங்ககிட்ட நீ யாருன்னு சொல்லியிருக் கலாமே! நாமளே சுமுகமா பேசித் தீர்த்திருக்கலாமே!"

"நீ ஏதாவது கேட்டா நாங்க இல்லைன்னு சொல் லிடுவோமா" என்றார் தெய்வானை.

"நீ கேட்டாலே நாங்க மறுக்க மாட்டோம்! அதுவும் நீ இவரோ நண்பனோட பையனா கேட்டிருந்தா இவர் கண்டிப்பா செஞ்சிருப்பார்."

"உங்கப்பா இந்த சொத்தை எங்களுக்கு குடுப்பார்ன்னு நினைச்சு. இவர் உங்கப்பாவுக்கு உதவி பண்ணலை! அதுக்கு முன்னாலேயே பண்ணினோம்."

"அவர் பணத்தை திருப்பி குடுக்க முடியாம எங் களுக்கு இதை குடுத்தப்போ. இதோட மதிப்பை விட நாங்க குடுத்த பணம் அதிகம்."

"அப்போவே உங்க தாத்தா நாலுல மூணு பங்கு பணத்தை குடுத்திருந்தா கூட நாங்க திரும்ப குடுத்திருப் போம்! ஆனா அவர் ஒத்துக்கவேயில்லை! கேஸ் போட்டார்."

"அந்த கேஸ் நடந்துட்டு இருந்த போது எங்களுக்கு எவ்வளவு மன உளைச்சல் தெரியுமா? நாங்க ஒண்ணு மில்லாம போயிடுவோமென்னு எவ்வளவு பயந்தோம் தெரியுமா."

"அப்போ கூட உங்கப்பாவுக்கு உதவுனதுக்காக இவர் வருத்தப்பட்டதே இல்லை! நானும் அவரை இது நமக்கு தேவையா? நீங்க ஏன் உதவி செஞ்சிங்கன்னு கேட்டதே இல்லை."

''ஆனா! எல்லாத்தையும் நீ ஒண்ணுமில்லாம பண்ணிட்ட கார்த்திக்'' என்றார். சொல்லும் போது அவரின் குரல் உடைந்தது. கண்களில் கண்ணீர் பெருகியது.

''உலகத்துல யாரையும் நம்பக்கூடாதுன்ற படிப்பினையை எங்களுக்கு குடுத்திருக்க. யாருக்கும் உதவி செய்யக் கூடாதுன்னு எங்களுக்குப் புரிய வெச்சிருக்க'' சொல்லிக்கொண்டு இருந்த தெய்வானை உடைந்தே விட்டார். கண்ணீர் பெருகியது.

அந்த அன்பான பெண்மணியின் கண்ணீருக்கு காரணமாகி நின்றான் கார்த்திக். இந்த பாவங்கள் என்றும் தனக்கு தீராது என்று அவனுக்குத் தெரியும்.

சக்தி அவளின் அம்மா உடையவும் தான் எழுந்தாள். ''அம்மா எழுந்திருங்க! உள்ள போங்க!'' என்று அவரை கைபிடித்து அழைத்து ரூமிற்குள் சென்று விட்டு வந்தாள்.

கார்த்திக் சக்தியை பார்ப்பதையே தவிர்த்தான்.

ஒரு பயம் அவனுள், அவனால் வீரமணியையும் தெய்வானையையும் எதிர்கொள்ள முடிந்தது. ஆனால் சக்தியை எதிர்கொள்ள முடியும் என்று தோன்றவில்லை.

அவளை அவன் தவிர்ப்பதை சக்தியால் உணர முடிந்தது.

தந்தை அமைதியாக அமர்ந்திருப்பதை பார்த்தவள், ''உங்களுக்கு ஏதாவது இவன் கிட்ட சொல்லணுமாப்பா'' என்றாள்.

அவனைப் பார்த்தவர், ''எனக்கு ஆம்பிளை பசங்க கிடையாது, ஒரு பொண்ணை தானே பெத்து வெச்சிருக்கேன், என்னால என்ன செய்ய முடியும்னு தானே நீ

என்கிட்ட விளையாடி பார்த்துட்ட'' என்று வீரமணி அவனைப் பார்த்து விரக்தியாகச் சொன்னார்.

''என்ன பேச்சுப்பா இது! நான் இருக்கேன் பா! நான் பார்த்துக்குவேன், இவன் என்ன செய்யறான்னு நான் பார்க்குறேன்பா!'' என்றாள் அவனை பார்த்தபடி தைரியமாக.

கார்த்திக் அசையாமல் நின்றான். மறந்தும் கண்கள் சக்தியின் புறம் திருப்பவில்லை.

''நீயே பார்த்துக்கோம்மா! எனக்கு இவன் கிட்ட பேசவே பிடிக்கலை!'' என்றார் வெறுப்பாக வீரமணி.

அவரின் வெறுப்பான பார்வை கார்த்திக்கை உயிரோடு பொசுக்கியது.

வீரமணி பின்பு எழுந்து தளர்ந்த நடையுடன் ரூமிற்குள் போகப் போனவர். கார்த்திக்கை பார்த்து, ''நீ எங்களுக்கு ஏதாவது நிஜமாவே செய்யணும்னு நினைச்சன்னா. இனிமே எங்க முகத்துல எப்பவுமே முழிக்காத'' என்றார்.

''ஏம்பா அதை மட்டும் சொல்றீங்க! நம்ம சொத்துப்பா அது! அதை நம்ம திரும்ப வாங்குவோம்னு சொல்லுங்கப்பா!'' என்றாள் ஆவேசமாக சக்தி.

''இல்லைம்மா! நமக்கு அது வேண்டாம். வேண்டவே வேண்டாம். இவன் எனக்கு இனிமே எந்த வகையிலும் பொருட்டு கிடையாது. ஆன என் சந்துருவோட குடும்பத்துக்கு நான் செய்ய கடமை பட்டிருக்கேன்மா.''

''போகட்டும்! எடுத்துட்டு போகட்டும்! இதுமட்டுமில்ல இன்னும் வேணும்னாலும் எடுத்துக்கச் சொல்லு! அவன் எதை கேட்டாலும் குடுத்துடு! இந்தச் சொத்து முழுசும் கேட்டாலும் குடுத்துடு!''

"நீ படிச்சிருக்க, உனக்கு வேலை கிடைக்காது! நீ எங்களை காப்பாத்த மாட்ட! இவனுங்க சங்காத்தமே எனக்கு வேண்டாம்மா. இவன் மட்டுமில்லை எவன் சங்காத்தமும் எனக்கு வேண்டாம்மா" என்றார் விரக்தியாக.

"ஆனா என் கண்ல மட்டும் எப்பவும் இனிமே பட வேண்டாம்னு சொல்லு."

"ஏன்னா இவன் என் கண்ல பட்டா இவன் என்னை ஏமாத்தினது ஞாபகத்திற்கு வரும். நான் இவன் நல்லா இருக்க கூடாதுன்னு நினைக்க நிறைய வாய்ப்பு இருக்கு. என் சந்துருவோட பையன் நல்லதான்மா இருக்கனும். இவனை இப்போவே இங்கேயிருந்து போகச் சொல்லு" என்று சொல்லிச் சென்றுவிட்டார்.

கார்த்திக் உயிரோடு இறந்தான்.

அவன் சந்திரசேகரின் மகன் என்று தெரிந்த பிறகு அவனுடன் வீரமணி சண்டை போடவில்லை, அவனை ஒதுக்கி அப்படியே தூக்கி தூரப் போட்டு விட்டார்.

அவ்வளவு பெரிய ஹாலில் இப்போது சக்தியும் கார்த்திக்கும் மட்டும் இருந்தனர்.

அவனைப் பார்க்கப் பார்க்க சக்திக்கு ஏமாற்றம் சூழ்ந்தது. "நீயா? நீயா இப்படி?" என்று அவளின் பார்வை அவனைக் குற்றம் சாட்டியது.

இருவர் மட்டுமே உள்ளனர் என்று தெரிந்தும் கார்த்திக் சக்தியின் முகம் பார்க்கவில்லை.

வீரமணியிடம் இருந்து வந்ததே அவனால் தாங்க முடியவில்லை இனி சக்தி பேசினாள்.

அவனருகில் வந்தாள் சக்தி.

''ஏன் கார்த்திக்? ஏன் கார்த்திக் இப்படி பண்ணின? நாங்க உனக்கு யாருமேயில்லையா கார்த்திக்? ஒரு தடவை எங்ககிட்ட பேசி பார்க்கணும்னு கூட தோண லையா கார்த்திக்? அப்படியா நான், அப்பா, அம்மா, உன்கிட்ட நடந்துகிட்டோம்.''

''நாமளாவது எப்பயாவது சண்டை போடுவோம்! ஆனா எங்கப்பாவும் அம்மாவும் நீ எது சொன்னாலும் கேட்பாங்களே கார்த்திக்! நானும் உன்கூட சண்டை போட்டாலும் கடைசியா நீ சொல்றதை தானே கார்த்திக் கேட்பேன்!'' என்று சொல்லும்போதே தேம்பல் வெடித்தது.

அப்போதும் கார்த்திக் வேறு புறம் தான் பார்த்து நின்றான்.

அவன் முன்னால் நிமிர்ந்து நிற்க வேண்டும், அழு கையை காட்டக் கூடாது என்று நினைத்தாலும் அவளால் முடியவேயில்லை.

கார்த்திக் அவளுக்குப் பதில் சொல்லாமல் திரும்பி நடக்க ஆரம்பித்தான்.

அவன் போவதையே பார்த்து நின்றாள் சக்தி. திடீ ரென்று அவளுக்கு ஒரு சந்தேகம் தோன்ற. கண்களை அவசரமாக துடைத்தபடி.

அவன் வாயிலை நெருங்கும் போது அவனிடம் வேகமாக ஓடிச் சென்று அவன் முன் நின்றாள் சக்தி.

மூச்சு வாங்க முன் நின்ற சக்தியை பார்க்காமல் வேறெங்கோ பார்த்தான் கார்த்திக்.

''என் முகத்தை பாரு கார்த்திக்!'' என்றாள் அழுகையை கட்டுப்படுத்தியவளாக.

கார்த்திக் பார்க்கவும், "உண்மையா சொல்லு, உன் வயசென்ன?" என்றாள்.

கார்த்திக்கிற்கு சக்தி கண்டுகொண்டாள் என்று புரிந்து விட்டது. பார்வையை வேறு புறம் திருப்பினான்.

அவன் பார்வை சென்ற புறம் அவன் முன்வந்து நின்ற சக்தி, "சொல்லு கார்த்திக்!" என்றாள்.

சொல்லும்வரை விடமாட்டாள் என்று புரிந்தவன், "உங்களை விட ரெண்டு வயது பெரியவன் மேம்" என்றான்.

சக்திக்கு இன்னும் அழுகை பொங்கியது.

"ஏன் கார்த்திக்? ஏன் கார்த்திக் பொய் சொன்ன?" உதடுகள் அழுகையில் பிதுங்கியது.

இவ்வளவு நேரம் கண்ணாடி போடாமல் இருந்த கார்த்திக் கண்களுக்கு கறுப்பு கண்ணாடியை மாட்டினான்.

சக்தியின் அழுகையை பார்க்கப் பார்க்க அவனுக்கு டென்சன் ஏறியது. அவனின் கழுத்து வேற, "விண்! விண்!" என்று வலித்தது. அவனையறியாமல் கைகள் கழுத்துக்கு சென்று அதனை அழுத்திக் கொடுத்தது.

சக்தியால் கார்த்திக் என்ற பெயரை சொல்லாமல் இருக்க முடியவில்லை. அவனோடு இப்போது சண்டை போடும்போதும், அவளுக்கு அழுகை அடக்க முடியாமல் வந்து கொண்டு இருந்த போதும், கார்த்திக் என்ற பெயர் ஒவ்வொரு வாக்கியத்திற்கும் வந்தது.

"சொல்லு கார்த்திக்! ஏன் கார்த்திக் பொய் சொன்ன? பொய் சொல்ல வேண்டிய அவசியம் என்ன கார்த்திக்?"

"நான் எங்கப்பா கிட்ட கார்த்திக் மாதிரி ஒரு மாப்பிள்ளை வேணும்னு கேட்கறதுக்கு பதிலா. கார்த்திக்

தான் வேணும்னு கேட்டுடுவேன்னு பயந்து இப்படி சொன்னியா கார்த்திக்'' என்றாள்.

அவனின் எண்ணங்களை அப்படியே சொன்னாள். கார்த்திக் அதிர்ந்து நின்றான். வார்த்தையால் அவனை வலிக்க வலிக்க அடித்தாள் சக்தி. அவனை விட அவளுக்கு இன்னும் வலித்தது.

''சொத்தை எங்களுக்கு தெரியாம எடுத்துக்கறதுல உனக்கு காரணம் இருக்கலாம், ஆனா வயசை கம்மியா சொல்ல வேண்டிய அவசியம் என்ன வந்தது கார்த்திக்.''

அவனால் அவள் முன்னால் நிற்கவே முடியவில்லை. தூர ஓடிப்போ என்று அவனின் மூளை கட்டளையிட்டது. ஆனால் அவளின் கேள்விகளில் ஆடிப் போயிருந்த மனதால், கால்களை அசைக்க முடியவில்லை. நடையை எட்டிப் போட முடியவில்லை.

''இந்த பொய்ய நீ இப்போ சொல்லியிருந்தா கூட பரவாயில்லை. ஆனா ரொம்ப முன்னமே. நீ இங்க வந்து கொஞ்ச நாள்ல. நான் உனக்கு பிரண்ட் ஆனவுடனேயே சொன்னியே கார்த்திக்! அப்போ எனக்கு ஒரு பதினேழு பதினெட்டு வயசு இருக்குமா?''

''அப்போவே நான் உன்னை என்ன பண்ணிடு வேன்னு பயந்த கார்த்திக்'' வார்த்தைகளை சாட்டையாய் சுழற்றி அவனை மட்டும் அடிக்கவில்லை சக்தி. அவளுக்கு அவளே அடித்துக்கொண்டாள்.

''நான் அப்போவே உன்கிட்ட விழுந்துடுவேன்னு நினைச்சியா கார்த்திக்! என்னை அவ்வளவு மோசமாவா நினைச்ச நீ! நான் அவ்வளவு மோசமான பொண்ணா'' கேட்கும் போதே தேம்பினாள்.

கார்த்திக் அவளுக்கு பதில் சொல்லும் மொழியையே மறந்து போனான்.

"நீ என்மேல இத்தனை நாள் காட்டின அன்பு, அக்கறை எல்லாம் பொய்ய கார்த்திக்."

"இல்லை! இல்லை!" என்று கத்த வேண்டும் போல கார்த்திக்கிற்குத் தோன்றினாலும் அவனால் முடியவில்லை.

"நீ இருந்தா என்னோட கார் கதவை கூட திறக்க மாட்டேனே கார்த்திக், நீதானே திறப்ப! நான் யார் கூட பேசணும். பேசக்கூடாது, எல்லாம் நீதானே முடிவு பண்ணுவ கார்த்திக்."

அவள் கேட்கக் கேட்க அவனின் உயிர் உருகியது.

"என்னை... என்னை... உனக்கு அடிக்ட் பண்ணிவெச்சிருக்குற கார்த்திக். நான் தனியா என்ன பண்ணுவேன்" என்றாள் அடிபட்ட குழந்தையாக.

"ஏன் கார்த்திக்? கீழ இருந்து தள்ளிவிட்டா எனக்கு அதிகமா அடிபடாது, எழுந்துக்குவேன்னு தெரிஞ்சு. நான் எழுந்துக்கவே கூடாதுன்னு என்னை மேல இருந்து தள்ளிவிட்டுட்டியா கார்த்திக்" என்றாள்.

சொல்லும்போதே கேவல் வெடித்தது சக்திக்கு. முகத்தை கைகளால் மூடிக்கொண்டு தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

**கண்ணன் முகமறந்து போனாள் - இந்தக்**

**கண்க ளிருந்துபய னுண்டோ?**

**வண்ணப் படமுமில்லை கண்டாய் - இனி**

**வாழும் வழியென்னடி தோழி**

- பாரதி

கார்த்திக்கினால் அதற்கு மேல் அங்கே நிற்கவே முடியவில்லை. ஏறக்குறைய எதிலிருந்தோ தப்ப நினைப்பவன் போல ஓடிக் காரில் ஏறி அமர்ந்தான்.

சக்தியின் மேலே இருந்து என்னை ஏன் தள்ளி விட்டாய் என்ற கேள்வியில் உயிர் வாழ தகுதியற்றவனாக உணர்ந்தான்.

சக்தி கேட்கும் எந்த கேள்விகளுக்கும் அவனால் பதில் சொல்ல முடியாது. ஏனென்றால் அவனிடம் அதற்கெல்லாம் பதிலே கிடையாது.

(அவரவற்கு. அவரவர் நியாயங்கள். அ;வரவர் தர்மங்கள்.)

**ஆராரிரோ பாடியதாரோ தூங்கி போனதாரோ**

**யாரோ யாரோ எனக்காரோ யாரோ**

**என் தெய்வமே இது பொய் தூக்கமா**

**நான் தூங்கவே இனி நாளாகுமா**

எப்போதும் அவனுள் ஒலிக்கும் பாடல் இப்போதும் ஒலித்தது. எதையோ பார்க்க விரும்பாதவன் போல கண்களை இறுக்க மூடிக் கொண்டான்.

இவன் வேகமாக வந்து காரில் ஏறி அமர்வதை பார்த்த மாரி, ''டேய் பசங்களா நீட்டா பேக் பண்ணி, ஒரு துண்டு சீட்டு கூட விடாம. பத்திரமா கொண்டு வாங்கடா'' என்று கார்த்திக்கின் சாமானை எடுக்க சொல்லி விரைந்து வந்து காரை எடுத்தான்.

சிறிது தூரம் போன பிறகே, ''எங்கே போகட்டும் சார்?'' என்றான் மாரி.

யாரும் வேண்டாம் எதுவும் வேண்டாம் என்று கத்தி சொல்லி. இங்கேயிருந்து எங்கேயாவது தொலைந்து

போய் விட வேண்டும் என்ற ஆவல் எழுந்தது கார்த்திக்கிற்கு.

ஆனால் முடியாதே. வீரமணியை மட்டும் தானே இது வரை எதிர்கொண்டு இருக்கிறான். இன்னும் அவனின் தாத்தா இருக்கிறாரே.

அவனின் தந்தையை எப்போதும் கேவலமாக பேசும் தாத்தா.

**மனிதனாகப் பிறந்துவிட்டால் எல்லோரும் வாழ்க் கையில் வெற்றி தான் அடைய வேண்டும் என்பது நியதியா என்ன? தோல்விகளை ஏற்று வாழ முடியாதா?**

அவனின் தாத்தாவை பொருத்தவரை வாழக்கூடாது. வெற்றி பெற்றே ஆக வேண்டும்.

எல்லோருக்கும் எல்லா நேரமும் அது சாத்தியமல்ல.

எல்லா நேரமும் தன் மகளின் வாழ்க்கை வீணாகி விட்டதே என்று அவனின் தந்தையை திட்டுவார். அது வும் கார்த்திக் தான் அந்த திட்டுகளை எல்லாம் வாங்கும் பிரதிநிதி. அவனின் தந்தை தனியாக இருந்தார்.

அவரை எதுவும் சொல்ல முடியாததால் அவன் ஸ்கூல் விடுமுறைக்கு வீட்டிற்கு வரும்போது அத்தனையும் கார்த்திக்கை நோக்கி பாயும். சில சமயம் ஸ்கூலுக்கு பார்க்க வந்து திட்டிவிட்டு போவார்.

ஏன் சாப்பிடும் போது கூட விடமாட்டார், ''உங்கப்பா இந்த சாம்பார்ல போடற கருவேப்பிலை மாதிரிடா. எல்லோரும் தூக்கி போட்டுடுவாங்க'' என்பார்.

பிறக்கும் போதே கனவானாக பிறப்பவர்கள் இறக்கும் போது சில சமயம் ஒன்றுமில்லாமல் ஆகிவிடுவார்கள்.

பிறக்கும் போது ஒன்றுமில்லாமல் இருப்பவர்கள சிலசமயம் இறக்கும் போது கனவான் ஆகிவிடுவார்கள்.

இதில் அவனின் தந்தை முதல் ரகம். அவரின் இறப்பு யாருக்கும் வரக்கூடாத இறப்பு. அந்த சாவை பற்றி நினைக்கும் போது கார்த்திக்கின் பற்கள் அரைபட்டன. பற்களை கடித்து வாயை கையில் பிடித்துக்கொண்டான். அவரை பற்றி நினைக்கும் போதே கண்கள் கலங்கின.

இன்னும் அவன் செய்ய வேண்டிய வேலை இருக்கிறது.

சினிமா தொழிலில் மிக மோசமாகத் தோற்றுப் போனவர் அவனின் தந்தை. அவர்கள் ப்ரொடக்ஷனை மீண்டும் உயிர்த்தெழச் செய்ய வேண்டும். அவனின் தந்தை பெயரை கட்டாயம் நிலை நாட்ட வேண்டும்.

பணமில்லாதவன் பணமில்லாமல் இருந்தால் ஒன்றுமில்லை. ஆனால் பணமுள்ளவன் பணமில்லாமல் போய்விட்டால் அவன் சந்திக்கும் அவமானங்கள் சொல்லில் அடங்காதவை. அதில் கடனும் சேர்ந்து கொண்டால். வாழ்க்கையே?

பணமில்லாதவன் பிணத்திற்கு சமம் என்பது முற்றிலும் உண்மை. அவனின் தந்தை அதனாலேயே அப்படியாகிப் போனார்.

சக்தியின் நினைவுகள் பின்னோடு போயின. அவனின் அம்மாவின் வீடு நோக்கி பயணப்பட்டான். பத்து வருடங்களுக்கு பிறகான பயணம். அவனின் தாத்தாவை பார்க்கப் போகிறான்.

எப்போதாவது வாசுகி. வைஷ்ணவி, சுமித்ரா மற்றும் பிரபுவை அழைத்துக்கொண்டு வந்து அவனை

எங்காவது வெளியில் சந்திப்பார். அவன் தான் வீடு செல்ல மாட்டானே.

ஆனால் அவன் வீட்டை விட்டுவந்த பிறகு அவனின் தாத்தாவை பார்க்கவேயில்லை அவரைப் பார்க்கப் போகிறான்.

இங்கே சக்தி அழுது அழுது ஓய்ந்தாள். அதுவும் பெற்றோர்களுக்குத் தெரியாமல் வேறு அழ வேண்டி இருந்தது. அவளின் அழுகை இன்னும் அவர்களை பாதிக் கும். இது அவர்களுக்கு அவள் நம்பிக்கை கொடுக்க வேண்டிய சமயம்.

தொழில் போனது ஒரு புறம் என்றாலும். அந்த தொழிலை வைத்து தான் இத்தனை சொத்துக்களும். அந்த தொழில் போய்விட்டது.

அதையெல்லாம் விட மோசடி. கார்த்திக் அவர்களை மோசம் செய்திருக்கிறான், நம்பிக்கைத் துரோகம் செய்திருக்கிறான். கூட இருந்தே குழி பறித்திருக்கிறான்.

அவன் விரோதி அல்ல அவன் துரோகி. அவன் ஏமாற்றினான் என்பது ஒரு புறம் இருக்க. இவர்களும் அவனை நம்பி மிக மோசமாக ஏமாந்து இருக்கிறார்கள்.

அவளின் அம்மாவையும் அப்பாவையும் தேற்றுவது பெரிய வேலையானது அவளுக்கு. அதில் அவளுடைய உணர்வுகளை வெளிப்படுத்த முடியாமல் எல்லாவற் றையும் அவளுள் போட்டு புதைத்தாள்.

அழுகையை அடக்கினாள். கண்ணைக் கட்டி காட் டில் விட்டது போல இருந்தது. சொத்துக்கள் இருந் தாலும், பணம் இருந்தாலும், அதைக் கட்டி மேய்க்க வேண்டாமா? அதை கட்டிக் காப்பாற்ற வேண்டாமா?

புதிதாக காலேஜ் தொழிலில் வேறு அவளை இறக்கி யிருக்கிறான்.

பார்க்க வேண்டும். எல்லாம் அவள் பார்க்க வேண்டும். கார்த்திக்கின் தயவு எதுவுமின்றி அவள் பார்க்க வேண்டும்.

முடியுமா?

''முடியும்'' என்று அவளுக்கு அவளே சொல்லிக் கொண்டாள்.

இதையெல்லாம் சமாளிக்கும் தைரியமும் தெம்பும் அவளுக்கு இருந்தது. அவளுடைய தந்தையும் சமான்ய ரல்ல அவரும் எல்லாமும் பார்ப்பார். ஆனால் கார்த் திக்கை நம்பி மோசம் போனது அவரை மனதளவில் வெகுவாக பாதித்து இருந்தது.

அவருக்கு சற்று அவகாசம் வேண்டும் என்று சக்திக்கு புரிந்தது. எல்லாம் அவள் பார்ப்பாள் தான். ஆனால் கார்த்திக் அவனின் வயதை பொய்யாகக் கூறித் தன்னை ஏமாற்றியதை நினைக்கும் போதெல்லாம் கண்ணில் நீர் பெருகியது.

அவளின் படுக்கையில் அமர்ந்து எதிரில் நிலைக்கண் ணாடியில் தெரிந்த அவளின் உருவத்தை பார்த்தாள். அதில் தெரிந்த அவளிடம் அவளே கேள்வி கேட்க ஆரம்பித்தாள்.

''அவன் ஏமாற்றினானா? நீ ஏமாந்தாயா?''

''என்ன நடக்கக் கூடாது என்று நினைத்தான்.''

''என்ன நான் செய்து விடுவேன் என்று நினைத்தான்.''

''ஏன் பொய்யுரைத்தான்.''

யோசிக்க யோசிக்க அவளின் மனம் சொல்லொணா வேதனையில் துடித்தது.

யாரிடம் சொல்ல முடியாத வேதனையும் இது.

''என்ன ஒரு அசிங்கம்! ஒரு ஆண்மகன் எனக்குள்ளும் அவனுக்குள்ளும் என்ன மாற்றம் வரும் என்று அவனின் வயதை என்னிடம குறைத்துக் கூறினான்.''

''நான் அவனிடம் மயங்கி விடுவேன் என்றா.''

''நானும் பையித்தியம் மாதிரி அவன் என்னை விட சிறியவன், அவன் எனக்கு மாப்பிள்ளையாக வேண்டாம்! அவனைப் போல ஒருவன் தான் மாப்பிள்ளையாக வேண்டும் என்று கூறியிருக்கிறேனே.''

''அவன் என்னை எவ்வளவு கேவலமாக நினைத்திருப் பான். இதற்கு தான் வயதை குறைத்துக் கூறினானா?''

''என்னிடம் வயதைக் குறைத்து கூறி என்ன நினைத்து என்னை பார்த்திருப்பான். இந்த பெண் என்னிடம் மயங்கிவிடுவாள். நான் தான் வேண்டும் என்று கேட் பாள். என்று நினைத்திருப்பானா?''

''சக்தி அவ்வளவு கேவலமான பிறவியா.''

கண்ணாடியில் அவளைப் பார்த்து அவளேக் கேட்டாள்.

''என்ன மாதிரி கேவலமான பிறவியா உன்னை நினைச்சிட்டான் சக்தி.''

அவளின் முகத்தை அவளுக்கே பார்க்கப் பிடிக்காமல். கையில் கிடைத்ததை தூக்கி கண்ணாடி மேல் எறிந்தாள்.

அது உடைந்து சில்லு சில்லானது. அவளின் இதயம் போல அதுவும் சுக்கு நூறானது.

கார்த்திக்கின் உயிரையே எடுக்க வேண்டும் போல ஒரு ஆவேசம் எழுந்தது.

நான் வீழ்வேனென்று நினைத்தானோ.



# 11

**எல்லா மாகிக் கலந்து நிறைந்தபின்**

**ஏழைமை யுண்டோடா? - மனமே!**

**பொல்லாப் புழுவினைக் கொல்ல நினைத்தபின்**

**புத்தி மயக்கமுண்டோ?**

- பாரதி

கிருஷ்ணகிரியின் மையப்பகுதியில் அந்த பெரிய பங்களாவின் முன் காரை நிறுத்தினான் மாரி. கார்த்திக் காரை விட்டு இறங்கினான்.

மனம் கனத்து இருந்தது. அந்த வீட்டை விட்டு அவன் வெளியேறிய தருணம் அவனுள் படமாய் ஓடியது.

மறக்க நினைக்காத தருணங்கள், அவை தானே அவனை இந்த ஓட்டம் ஓடவைத்தது.

''நீ இங்கயே இரு மாரி'' என்று சொல்லி அவன் கேட்டின் முன் செல்லவும்.

காவலாளி வந்து, ''யாரு நீங்க? உங்களுக்கு யாரை பார்க்கணும்'' என்றான்.

யாரை என்று சொல்லுவான். அவன் குடும்பம் அங்கே தானே இருக்கிறது. நானும் இந்த வீட்டில் ஒரு ஆள் என்றா சொல்லுவான்.

''தாத்தாவைப் பார்க்கணும்'' என்றான்.

''இருங்க கேட்கறேன்'' என்று அவன் அமரும் பகுதியில் இருந்த இன்டர்காமை எடுத்தவன். வீட்டிற்கு உள்ளே கனெக்ட் செய்து. ''உங்களை யாருன்னு சொல்றது சார்'' என்றான்.

''கார்த்திகேயன். சந்திரசேகரோட பையன்னு சொல்லுங்க'' என்றான்.

போன் எடுத்தது வாசுகி. ''அம்மா, நம்ம பெரியய்யாவை பார்க்க கார்த்திகேயன்னு ஒருத்தர் வந்திருக்கார்மா. உள்ள அனுப்பட்டுமாம்மா'' என்றான்.

''கார்த்திகேயன்'' என்றதும் நெஞ்சம் படபடக்க. ''யார்ன்னு சொன்னாங்க'' என்று வாசுகி கேட்டார்.

''சந்திரசேகர்ன்னு ஒருத்தரோட பையனாம்மா'' என்று அவன் சொல்லவும்.

காாத்திக். என் கார்த்திக் வந்துவிட்டானா? திரும்ப என்னிடம் வந்துவிட்டானா?

போனை வைத்தவர் விரைந்து வீட்டை விட்டு வெளியே வந்தார். வீட்டின் வாயிலுக்கும் கேட்டிற்கும் கொஞ்சம் தூரம் போக வேண்டும்.

அங்கேயிருந்து பார்த்தால் யார் என்று தெரியவில்லை. கார்த்திக் இன்னும் கேட்டிற்கு வெளியே தான் நின்றிருந்தான்.

''உள்ளே அனுப்பு'' என்பது போல சைகை செய்தார்.

''உள்ள போங்க சார்'' என்றான் காவலாளி.

கார்த்திக் உள்ளே வந்தான். அவன் உள்ளே வர வர வாசுகிக்கு நெஞ்சம் விம்மியது. அவரின் மகன். அவரின் மகன் என்று கூட யாரிடமும் சொல்ல முடியாதபடி அவரை வார்த்தையால் கட்டியிருந்தான். அவரின் மகன் எத்தனை வருடங்களுக்குப் பிறகு அவர் இருக்கும் வீட்டிற்கு வருகிறான்.

அவன் நடந்து வந்து அவரை நெருங்கும் வரை அவனை கண்களில் நிரப்பினார்.

அவனின் கம்பீரமான தோற்றத்தை அவன் நெருங்கும் வரை பார்த்து ரசித்தார். அப்படியே அவனின் அப்பாவை போல என்று அவரால் எண்ணாமல் இருக்க முடியவில்லை.

அவனருகில் வந்ததும், ''உங்கப்பாவோட பையன் தானா நீ! என் பையன் இல்லையா'' என்றார் குரல் தழு தழுக்க.

''அம்மா!'' என்றவன். ''நான் உன் பையன் தான்மா! அது தாத்தாக்காக சொன்னேன்'' என்றான் அவரை தோளோடு அணைத்து.

''நீ வர்றதுக்காக எத்தனை வருஷம் காத்திருக்கிறது! என் ஞாபகவே உனக்கு இல்லையா. கல்யாணத்துல பார்த்ததுக்கு அப்புறம் கூட நீ என்கிட்ட பேசவேயில்லை.''

''மறந்தாதானே அம்மா ஞாபகம் வர்றதுக்கு'' என்றான்.

''ஆமா! இந்த டையலாக் வேறையா?'' என்று சந் தோஷமாக புன்னகைத்தார்.

''காலைல சாப்பிட்டியா? இல்லையா? சோர்ந்து தெரியற!'' என்றார்.

அதுதானே அம்மா, முதலில் பிள்ளைகளின் வயிற்றை தானே கவனிப்பார். ''அதெல்லாம் வேணுங்கற அள வுக்கு சாப்பிட்டு இருக்கேன்'' என்றான்.

நிஜத்தில் அவன் சாப்பிடவில்லை. அவன் சொன்னது அவன் சக்தியிடமும், வீரமணியிடமும், தெய்வானை யிடமும் வாங்கிய பேச்சுக்கள்.

''எனக்கென்னவோ நீ சாப்பிட்ட மாதிரியே தோணலை?'' என்று சொல்லி,

சமையல் செய்யும் அம்மாவை, ''டீ கொண்டு வாங்க!'' என்று பணித்தவர். காலையில் வைஷ்ணவிக்கும் சுமித்ரா விற்கும் காலேஜ் கொண்டு செல்வதற்காக செய்திருந்த தேங்காய் சாதத்தை போட்டு கொடுத்தார்.

மறுக்காமல் வாங்கி உண்டான், பின்பு டீயை குடித் தான். அதன் பிறகே நிமிர்ந்தான்.

''பொய் தானே சொன்ன, சாப்பிட்டேன்னு?'' என்று அவன் அம்மா கேட்க. ஒரு சின்ன புன்னகை மட்டுமே பதில்.

''ஏன்? வீரமணி அண்ணா வீட்ல சாப்பிடலையா நீ'' என்றார்.

''இனிமே நான் அவர் வீட்ல சாப்பிட முடியாதும்மா.''

''ஏன்?''

''நான் யார்ன்னு அவர் கிட்ட சொல்லிட்டேன்.''

''என்ன? என்று அதிர்ந்தவர். அப்போ வாசுகி குழு மத்தை'' என்று அவர் இழுக்க.

''தாத்தா பேர்ல மாத்திட்டேன்!'' என்றான்.

என்ன நடந்திருக்கும் என்று வாசுகியால் யூகிக்க முடிந்தது. '' என்ன சொன்னார் வீரமணி அண்ணா.''

''என் முகத்துலயே முழிக்காத போன்னு விரட்டிட் டாங்க.''

''திரும்ப குடு அப்படின்னு எதுவும் சொல்லலையா?''

''இல்லை.''

''நான் தான் வேண்டாம்! விட்டுடலாம்! நமக்கிருக் கிறது போதும்னு சொன்னேனே!''

''இது என் அப்பாக்காக நான் செய்ய வேண்டிய தும்மா! எங்கே உங்கப்பா? அவர்கிட்ட முதல்ல இதை நான் சொல்லணும்!'' என்றான்.

''இன்னைக்கு சஷ்டி! அதான் பக்கத்துல இருக்குற முருகன் கோயிலுக்கு உச்சி கால பூஜைக்கு போயிருக் கார்! இப்போ வந்திடுவார்!'' என்றார்.

''அம்மா நான் இப்போ வாசுகி குழுமம் அவரோட துன்னு சொல்லிடுவேன். அவரோடதுதான்! ஆனாலும் நான் தான் பார்த்துக்குவேன்! என்னால அதை விட்டு விலக முடியாது. அதுல வர்ற லாபம் அவருக்குப் போகும். கம்பெனியும் அவரோடதுதான். ஆனா அங்கே நான் தான் இருப்பேன். என்னை மீறி எதுவும் நடக்காது!''

''இது எப்ப அவரோட பேருக்கு மாறினதுன்ற விவரம் அவருக்கு தெரியணும்னு அவசியமில்லை! நீங்க சொல்றதையும் நான் விரும்பலை!'' என்றான்.

''இல்லை! நான் சொல்லலை! என்று அவர் சொல்லும் போதே உள்ளே நுழைந்தார் பத்ரிநாத்.

''யாரும்மா வந்திருக்கா! நம்ம கேட்டுக்கு முன்னாடி கார் நிக்குது!'' என்று கேட்டுக்கொண்டே வந்தார்.

உள்ளே நுழைந்ததும் கார்த்திக் அங்கே இருப்பதை பார்த்தார். அவனும் அவரை பார்த்ததும் எழுந்து நின்றான்.

அவருக்கு கார்த்திக்கை தெரியவில்லை. வீட்டை விட்டு போய் ஏறக்குறைய பத்து வருடங்கள் ஆகிவிட்டன. அவருக்கு அடையாளம் தெரியவில்லை. அவன் இந்த வீட்டை விட்டு போகும்போது இருந்த தோற்றத்திற்கும் இப்போதைக்கும் கொஞ்சமும் சம்பந்தமில்லை.

அப்போதும் உயரம் தான் என்றாலும், அந்த வயதுக் குறிய லட்சணங்களோடு சின்ன பையனாகத் தெரிந்தவன். இப்போது தொடர்ந்து செய்யும் உடற்பயிற்சிகளாலும், வயதின் பரிமாணத்தினாலும், உடம்பை ஏற்றி ஒரு முழுமையான ஆண்மகனாக மாறியிருந்தான்.

அப்போது தான் மீசை முளைக்க ஆரம்பித்த வயது. இப் போது பெரிய தொங்கு மீசை வைத்து முகமே மாறியிருந்தது.

''யாரும்மா இது?'' என்றார்.

''நம்ம கார்த்திக் பா!'' என்றார்.

''என்ன கார்த்திக்கா'' என்றார் ஆச்சர்யமாக.

அவர் அவனை எதிர்பார்க்கவில்லை. அவரிடம் சண்டை போட்டு தான் கார்த்திக் வீட்டை விட்டுப் போனான்.

முதலில் அவன் என்ன செய்கிறான் எங்கே இருக் கிறான் என்ற விவரமே வாசுகிக்கு தெரியாது. அவ்வப் போது போன் செய்து தன் நலத்தை மட்டும் தெரிவிப்பான்.

அவருக்கு அவன் எங்கேயிருக்கிறான் என்று சொன்ன போது இரண்டு மூன்று வருடங்கள் கடந்திருந்தன.

அவரின் கையை விட்டு அவன் போயிருந்தான் என்பது தான் உண்மை.

அவனின் முடிவுகளை அவன் தான் எடுத்தான்.

அங்கே ஏன்? ஏன்? என்று கேட்டபோது பதிலே சொல்லவில்லை. யாரிடமும் அவன் யார் எங்கேயிருக் கிறான் என்று சொல்லக்கூடாது என்று ஆணையும் வைத்துவிட்டான்.

என்ன செய்யப் போகிறான். ஏது செய்யப் போகிறான் என்பதே பெரிய விஷயமாக அவரின் மனதை அரித்துக் கொண்டிருந்தது. ஆனால் அவர் செய்யக் கூடியது எதுவும் இல்லாமல் போய்விட்டது.

அவனை எப்போதாவது கண்ணால் பார்ப்பதே அவ ருக்கு பெரிய விஷயமாக இருந்தது. வாசுகி அவனிடம் ஏதாவது யோசனைகளை கூறும் ஒரு உரிமையை அவன் அவருக்கு குடுக்கவேயில்லை.

வீட்டை விட்டு போனதில் இருந்து அவரிடம் தள்ளியே இருந்தான். அவனாக பேசினால் பேசுவான், அவனாக பார்க்க வாருங்கள் என்று அனுமதி கொடுப் பான். எங்கேயாவது வெளியே வைத்து அவனை பார்த்து வருவார்.

எல்லாம் அவன் செயலாக இருந்தது.

இப்போது சில மாதங்களுக்கு முன் தான் அவன் செய்யப் போகும் வேலைகளை சொன்னான்.

இது தப்பு! வேண்டாம்! என்று வாசுகி எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை. அதற்காகவே இத்தனை நாட்கள் ஈரோட்டில் இருந்தவர், பெண்கள் இங்கே

கல்லூரி சேர்ந்த போது கூட வராதவர். இங்கே உடனே வீட்டை மாற்றிக்கொண்டு வந்தார்.

இதில் வீரமணியின் தவறு என்பது எதுவுமில்லை. ஆனால் பாதிக்கப்படப்போவது அவர் தான் என்று தெரியும்.

ஒன்றும் செய்ய முடியாதவராகவே இருந்தார் வாசுகி. அதனால் தான் அன்று திருமணத்தில் வீரமணியை பார்த்த போது தானாக சென்று அவரிடம் பேசினார்.

இந்த விவரங்கள் எதுவும் அவனின் தாத்தாவிற்கு தெரியாது. அவரை பொருத்வரை கார்த்திக் அவரிடம் சண்டை போட்டுக்கொண்டு அவரை எதிர்த்து பேசி வீட்டை விட்டு போய்விட்டான்.

எங்கிருக்கிறான் என்ன செய்கிறான் என்று அவருக்குத் தெரியாவிட்டாலும், எங்கோ நன்றாக இருக்கிறான் என்று தெரியும். ஏனென்றால் அவரின் மகள் அவனை தேடும் முயற்சியும் எடுக்கவில்லை. அவனை காணோம் என்று புலம்பவுமில்லை.

இப்போது அவனை நன்றாக பார்த்தார் பத்ரிநாத். இது கார்த்திக் என்று தெரிந்து பார்க்கும்போது அவரால் கண்டு கொள்ள முடிந்தது.

கார்த்திக் பேசட்டும் என்று அவர் காத்திருக்க. அவர் பேசட்டும் என்று கார்த்திக் காத்திருந்தான்.

ஒரு முழு நிமிடம் அமைதியாக கழிந்தது.

வாசுகி, ''நீ பேசு'' என்று கார்த்திக்கை பார்த்தும் சொல்லவில்லை. ''அப்பா பேசுங்கப்பா!'' என்று பத்ரி நாத்தை பார்த்தும் சொல்லவில்லை.

அவர்கள் பேசினாலும் எனக்கொன்றுமில்லை, பேசா விட்டாலும் எனக்கொன்றுமில்லை என்பது போல அவரும் அமைதியாகவே நின்றார்.

அவர்களின் சண்டைகளை அறிந்தவர் அவர், மன தளவில் நொந்து போயிருந்தார். அதனால் இருவருக்கும் இடையில் வர முற்படவில்லை.

இருவரும் பேச நினைத்து. ''எப்படி இருக்கீங்க'' என்று கார்த்திக்கும். ''எப்படிப்பா இருக்க'' என்று பத்ரிநாத்தும் ஒரு சேர கேட்டனர்.

அங்கே ஒரு லகுத்தன்மை உருவாகியது.

பத்ரிநாத் உட்கார. எதிரில் இருந்த சோபாவில் கார்த்திக்கும் அமர்ந்தான்.

''என்ன உன் சபதத்துல ஜெயிக்க முடியாம. உங்கம் மாவையும் பார்க்காம இருக்க முடியாம வந்துட்டியா?'' என்றார். முதுமை அவரின் குணத்தை எந்த விதத்திலும் மாற்றவில்லை என்று கார்த்திக்கிற்கு நன்கு புரிந்தது.

''வந்துட்டேன் தான்! ஆனா சொன்ன சொல்லுல நிக்காம எப்படி நான் வருவேன்னு நீங்க எதிர்பார்க்க றீங்க?'' என்றான்.

''உங்கப்பா கூட தான் இப்படி பல விஷயம் நான் செய்வேன், செய்வேன்னு பேசினார். ஆனா அவரால எதுவும் செய்ய முடியலையே'' என்றார்.

உருவான லகுத்தன்மை நொடியில் மறைந்தது.

கார்த்திக்கின் முகம் இறுகியது.

பத்ரிநாத் இதை பேசவேண்டும் என்ற எண்ணத் தோடு பேசவில்லை. ஆனால் அவரால் கார்த்திக்கிடம்

பேசும்போது அவனின் தந்தையை பற்றிப் பேசாமல் இருக்க முடியாது.

எவ்வளவு செல்லமாய் வளர்த்தார் பெண்ணை. எவ்வளவு ஆரடம்பரமாய் ஊரே மெச்சும்படி திருமணம் செய்து வைத்தார்.

ஒரு பத்து ஆண்டுகள் சந்திரசேகரோடு குடும்பம் நடத்தி இருப்பாள். அதுவும் பாதி நாட்கள் அம்மா வீட்டில் தான் கழியும். சினிமா தயாரிப்பாளர் என்பதால் சென்னையில் தான் சந்திரசேகரின் வாசம் அதிகம்.

இதில் எடுக்கும் படங்களில் எல்லாம் வெளிநாட்டு காட்சிகளோ, பாடல்களோ வேறு இருக்கும். அதனால் வெளிநாட்டு பயணம் வேறு அதிகம். அவர் தன் மனைவியை உடன் வரும்படி கூப்பிட செய்வார் தான். ஆனால் இரு பிள்ளை செல்வங்களையும் விட்டு வாசுகி செல்ல மாட்டார்.

வைஷ்ணவி சிறு குழந்தையாக இருக்கும் போது சற்று ஊட்டச்சத்து குறைந்த குழந்தை. அதனால் எப்போதும் ஏதாவது உடல் தொந்தரவுகள் அவளுக்கு இருந்து கொண்டே இருக்கும். அதனால் அவளை அழைத்துக்கொண்டும் போக முடியாது.

பெண் அடிக்கடி தனியாக இருக்கிறாளே என்று அவரின் குடும்ப தொழிலான வாசுகி குழுமத்தை வாசுகி பார்த்துக் கொள்ளும்படி செய்தார் பத்ரிநாத். ஏனென்றால் அவரின் மகனும், மருமகளும் டாக்டர்கள். இருவரும் மலேசியாவில் இருந்தனர்.

அவர்கள் இங்கே வந்தாலும் இந்த தொழிலை பார்ப்பார்கள் என்று சொல்ல முடியாது.

வாசுகியை தொழிலை பார்க்கச் சொன்ன போது, ''நான் மட்டுமாப்பா அவருக்கும் பவர் குடுங்க!'' என்று சந்திர சேகரின் பெயரில் பவரை மாற்றியது வாசுகிதான்.

மூன்று பெரிய படங்களை, பெரிய ஹீரோக்களை வைத்து சந்திரசேகர் தயாரித்த போது. அகல கால் வைக்க வேண்டாம் என்று எவ்வளவோ சொன்னார் பத்ரிநாத்.

ஆனால் அவரின் மருமகன் கேட்கவேயில்லை. எடுத்து ஒன்றுமில்லாமல் போய்விட்டான். இருக்கும் சொத்துக்கள் அனைத்தையும் இழந்தான். அது மட்டு மின்றி இன்னும் கடன் இருக்க. அதை தீர்க்க வாசுகி குழு மத்தையும் அவனின் நண்பனாக வீரமணிக்கு எழுதி கொடுத்து விட்டான்.

உதவி செய், உதவி செய் என்றால். செய்தால். விட்டதை பிடிக்கிறேன் என்று திரும்ப படம் எடுக்க கிளம்புவான்.

நான்கு பேரப்பிள்ளைகள் அவருக்கு. மக்களுக்கு செய்ய வேண்டியதை எல்லாம் செய்துவிட்டார்.

அவர்களின் பெற்றோர்கள் என்ன சேர்த்து வைப்பார்கள் என்று தெரியாது. பேரப்பிள்ளைகளுக்கும் சொத்து குடுக்க வேண்டும் என்று நினைத்தார். அதனால் சந்திர சேகரை நம்பி அவர் பணம் கொடுக்கவில்லை.

அவன் எழுதிக்கொடுத்த அவர்களின் குடும்ப சொத்தை மீட்க கோர்ட்டில் கேஸ் போட்டார். அதில் வாசு கிக்கும் சந்திரசேகருக்கும் பிரச்சனையானது.

பிரச்சனை பெரிதாகி வாசுகி முப்பத்தி மூன்று வய தில் கணவனை பிரிந்து. முப்பத்தாறு வயதில் அவனை இழந்தே விட்டாள். அந்த துக்கம் போதாது என்று அந்த

காரியத்திற்கு வந்த மகனையும் மருமகளையும் விமான விபத்தில் பத்ரிநாத் பறிகொடுத்தார்.

அடிமேல் அடி. நான்கு பிள்ளைகள் மட்டுமில்லை என்றால் வாசுகியும், பத்ரிநாத்தும் உடைந்தே போயிருப்பர். பிள்ளைகளுக்காக தேற்றிக் கொண்டனர்.

அவரின் மகனாவது, கணவன் மனைவி என இருவரும் போய்விட்டனர். இங்கே முப்பத்தியிரண்டு வயதில் இருந்து தன் மகள் தனியாக அல்லவா இருக்கிறாள்.

எப்போது தன் பெண்ணிற்கு நிம்மதி இருந்திருக்கிறது. அந்த கவலையில் எப்போதும் கார்த்திக்கின் தந்தையை பற்றி அவனிடம் திட்டி பேசிக்கொண்டே இருப்பார்.

இதில் அவளைப் பார்த்துக்கொள்ள வேண்டிய மகன் அவனின் தந்தையை பற்றி பேசியதும் கோபம் கொண்டு வீட்டை விட்டு போய்விட்டான்.

இப்போது அவனை பார்க்கவும் தானாக வந்துவிட்டது.

அவரின் பேச்சு கேட்டு, ''தாத்தா'' என்று சற்று குரலுயர்த்தியவன் ''நான் சொன்னதை செஞ்சிட்டு தான் வந்திருக்கேன்!'' என்றான்.

பத்ரிநாத் புரியாமல் பார்க்கவும். ''எங்கப்பா தொலைச்ச வாசுகி குழுமத்தை உங்ககிட்டயே கொண்டு வந்து சேர்த்துட்டேன்'' என்றான்.

பத்ரிநாத் நம்பாமல் பார்க்கவும்.

''நிஜமா தான் தாத்தா!'' என்றவன்,

மாரியை அழைத்து. ''நான் ஒரு பேக் வெச்சிருப்பேன் கார்ல! அதை எடுத்துட்டு வா!'' என்று சொன்னான்.

அவன் எடுத்து வந்து வாசலில் நிற்கவும். ''வா மாரி!'' என்று கார்த்திக் சொல்ல, உள்ளே வந்து அவனிடம் அந்த பையை நீட்டினான்.

அவன் நீட்டும் போது அவனின் உடல் மொழியை பார்த்த வாசுகியும், பத்ரிநாத்தும் வியந்து பார்த்தனர்.

அவ்வளவு பணிவு.

கார்த்திக் பத்ரிநாத்திடம் நீட்டினான்.

வாசுகி அவரின் கண்ணாடியை கொண்டு வந்து கொடுக்க. அவர் அதை அரைமணி நேரம் படித்தார். அதை படிக்க ஆரம்பிக்கும் போதே அவரின் வக்கீலையும் வர சொல்லிவிட்டார்.

அவரின் வக்கீல் வந்த அரைமணி நேரத்திற்குள்ளா கவே வந்துவிட்டார். வந்தவர் கார்த்திக்கை பத்ரிநாத் துடன் பார்த்ததும், பெரிதாக ஒரு வணக்கத்தை வைத்தார்.

வந்ததென்னவோ பத்ரிநாத்தை பார்க்க தான். ஆனால் கார்த்திக்குடன் பேச ஆர்வம் காட்டினார்.

''சார். இங்க'' என்று கார்த்திக்கை பார்த்து கேட்க.

''எங்க தாத்தா வீடு இது!'' என்று கார்த்திக் சொன்னான்.

வக்கீல் புரியாமல் பார்க்க. ''இவர் எங்கம்மாவோட அப்பா! இவங்க எங்கம்மா!'' என்றான்.

அவர்களின் உறவு முறையை வக்கீல் ஆச்சர்யமாக பார்த்தார், ''அப்படியா அம்மாவோ தாத்தாவோ சொன் னதே இல்லையேங்க சார்!'' என்றார் பவ்யமாக.

பத்ரிநாத்தும் உட்கார்ந்திருந்தார், கார்த்திக்கும் உட்கார்ந்திருந்தான். ''உட்காருங்க!'' என்று கார்த்திக் சொல்லும் வரையிலும் வக்கீல் உட்காரவில்லை.

அது பத்ரிநாத்தின் கவனத்தில் நன்கு பதிந்தது. கார்த்திக் சமுதாயத்தில் வளர்ந்து விட்டான் என்று புரிந்தது.

வக்கீலிடம் பத்ரிநாத் அந்த பத்திரத்தைக் கொடுத்து, ''இதோட சாராம்சத்தை சொல்லுங்க'' என்று கேட்கவும்.

பொறுமையாக அதை படித்துப் பார்த்த வக்கீல். ''வாசுகி குழுமம் இனிமே உங்களோடதுன்னு இது சொல்லுது சார்!'' என்றார் அதிர்ச்சியாக.

அதில் நடந்து கொண்டிருக்கும் வியாபாரம் அவருக்கும் தெரியும். ஆனால் ஏன்? இந்த மாற்றம். வீரமணி எப்படிக் கொடுத்தார். தேவை என்ன?

பத்ரிநாத்திடம் கேட்டிருப்பார். ஆனால் கார்த்திக் முன்னிலையில் கேட்கும் தைரியமில்லை, கார்த்திக்கிடமும் கேட்கும் தைரியம் இல்லை.

அவர் விடைபெற்று எழுந்து வெளியே வர. அவருடன் வந்த கார்த்திக் அவரிடம் விவரம் சொன்னான்.

''இவரோடது தான் முன்னால அது, அதுனால தான் வாசுகி குழுமம்ன்னு எங்கம்மாவோட பேர்ல இருக்கு!'' என்று தாத்தாவை காட்டினவன்.

''கொஞ்சம் பணம் செட்டில்மெண்ட்டுக்காக கை மாறிச்சு. இப்போ மறுபடியும் ஐயா இவர் பேருக்கே மாத்திட்டார்!'' என்று மிகவும் மரியாதையாக வீரமணியை பற்றி சொன்னான்.

''அப்போ ஐயா பேர்ல இருந்தது! இப்போ இவர் பேர்ல இருக்கு! அது மட்டும்தான் வித்தியாசம். ஆனா எப்பவும். நேத்தும். இன்னைக்கும். என்னைக்கும் கார்த்திக்கோடதுதான் அது'' என்றான்.

அவனுக்குத் தெரியும், அவரின் கிளையன்ட்களின் ரகசியத்தை அவர் எப்படி காப்பாரோ தெரியாது! ஆனால வெளியே போன அடுத்த நிமிஷம் இந்த விஷயத்தைப் பற்றி பேச ஆரம்பித்து விடுவார்! விஷயம் எல்லோருக்கும் பரவி விடும் என்று.

அவனுக்கு ஒரு நம்பிக்கை இருந்தது. அவன் என்ன தான் அவர்களுக்கு துரோகம் செய்திருந்தாலும், அதை அவர்கள் வெளியே சொல்ல மாட்டார்கள் என்று, யாராவது கேட்டால். ''நாங்க அவங்களுக்கு திரும்ப கொடுத்துட்டோம்!'' என்று தான் சொல்வார்கள் என்று.

அவன் நினைத்தது உண்மையானது. வக்கீல் வெளியே போய் இரண்டு நிமிடத்துக்குள் எல்லாம் போன் செய்து ஒருவரிடம் வாசுகி குழுமம் கை மாறிவிட்டது என்று கூற.

வியாபார உலகத்திற்குள் காட்டுத்தீயாக பரவ ஆரம்பித்தது. கிரானைட் உரிமையாளர்கள் இதை பற்றியே பேசினர். அப்போதும் என்ன விஷயம் என்று கார்த்திக்கிடம் கேட்கும் தைரியம் யாருக்கும் இல்லை.

ஆனால் வீரமணிக்கு போன் அடித்தனர். வீரமணி எந்த போனையும் எடுக்கவில்லை.

சக்தி பார்த்துகொண்டே தான் இருந்தாள். விடாமல் போன் கால்கள்.

''அப்பா! எடுத்து பேசுங்கப்பா!''

''என்னமா? என்ன பேசுவேன்?''

''நீங்க எடுத்து பேசினாலே, என்னவோ ஏதோன்னு தான் எல்லோரும் பேசுவாங்க! இதுல நீங்க எடுத்து பேசாம வேற இருந்தா இன்னும் பேசுவாங்கப்பா. நம்ம

ஏமாந்தது நமக்குள்ளேயே இருக்கட்டும், எடுத்து பேசுங்க!'' என்றாள்.

''என்னம்மா? என்னம்மா பேசச் சொல்ற?'' என்று அவர் கேட்க.

''சொல்லுங்கப்பா! சொல்லுங்க! அது அவங்களோடதுதான். ரொம்ப வருஷம் நம்மகிட்ட இருந்தது. திரும்ப கொடுத்துட்டோம்னு சொல்லுங்க!''

''நம்புவாங்களாம்மா.''

''நம்புனா நமக்கென்ன? நம்பலைன்னா நமக்கென்ன? அது உங்க பேர்ல இருந்தாலும் ஒண்ணுமில்லை. அது அவனோட தாத்தா பேர்ல இருந்தாலும் ஒண்ணுமில்லை. அது அப்பவும். இப்பவும். எப்பவும். கார்த்திக்கோடதுதான்பா'' என்று அச்சு பிசகாமல் அவனின் வார்த்தைகள் அப்படியே சக்தியிடம் இருந்தும் வந்தன.

''பொறுமையா பேசுங்கப்பா! அதுதான் உண்மைங்கற மாதிரி பேசுங்க!'' என்றாள்.

''நாம முடங்ககூடாது பா! நம்ம வாழ்க்கை எந்த தடங்கலும் இல்லாம தெளிவா போகணும். போனா போகுதுன்னு சொல்லிட்டீங்க இல்லை! ஆக வேண்டியதைப் பாருங்க.''

''சொத்து போனா போகுது! அவன் போயிட்டானேம்மா.''

சக்தியின் உள்மனது சொன்னது. என்னதான் அவன் சொத்தை தாத்தாவின் பேருக்கு மாற்றி இந்த வீட்டை விட்டு போனாலும். அவர்களை விட்டு அவ்வளவு

சீக்கிரம் போகமாட்டான். அவர்களின் ஒவ்வொரு அசைவும் அவனுக்கு தெரிய வரும் என்று தோன்றியது.

ஆனாலும் தந்தையை சமாதானப்படுத்துவதற்காக, "என்னப்பா நீங்க? அவன் போனா போறான்டா. அவனை நம்பி நாம இல்லைன்னு காட்டுவோம்."

"முடியலையேம்மா! உன் பேச்சை கூட கேக்க மாட்டேன்ம்மா. அவன் பேச்சை தானேம்மா கேட்பேன்."

"விடுங்கப்பா! நான் இருக்கேன்பா உங்களுக்கு!" என்றவள். "மணி மதியம் ரெண்டு தானே ஆகுது! நான் காலேஜ் கிளம்பறேன்பா!" என்றாள்.

"அம்மா! அப்பாவை கவனிங்க. ரெண்டு பேரும் முதல்ல சாப்பிடுங்க. நாளைல இருந்து அப்பாவும் என்னோடு வருவாங்க" என்று சொல்லிக் கிளம்பினாள்.

இருபத்தி ஐந்து வயதானாலும். இதுவரை சின்ன பெண்ணாக. செல்ல பெண்ணாக அந்த வீட்டில் வளைய வந்த சக்தி, தானாகவே பொறுப்பை எடுத்து பெரிய பெண் ஆக்கி கொண்டாள்.

மனதில் எவ்வளவு போராட்டம் நடந்து கொண்டிருந்தாலும் சக்தி அதை வெளியில் காட்டவில்லை.

அவளின் உள்ளுணர்வு சொல்லியது. வாழ்க்கையோடோ. மனதோடோ. அவளின் போராட்டங்கள் குறைவு தான். அவளின் போராட்டமெல்லாம் கார்த்திக்கோடு. இன்னும் அவர்களின் வாழ்க்கையின் முடிவுகளை எடுக்கும் தவறை அவன் தொடர்ந்து செய்வான் என்று தெரியும்.

அவர்களை விட்டு அவ்வளவு சீக்கிரத்தில் அவன் விலக மாட்டான். அவன் அவர்களை ஏமாற்றி இருந்தாலும், அவனின் அவர்கள் மீதான அக்கறை பொய்யாக இருக்க வாய்ப்பில்லை என்று தெரியும்.

அவனை இனி தங்கள் வாழ்க்கையில் வர விடக் கூடாது. சரியோ? தவறோ? எங்கள் வாழ்க்கை நாங்கள் தான் வாழ்வோம் என்று முடிவெடுத்தாள்.

ஜெயிக்க வேண்டும். கார்த்திக்கை ஜெயிக்க வேண்டும்.

''கருப்பண்ணா! காரை எடுங்க!'' என்று அவள் சொல் லவும் கார் காலேஜ் நோக்கி சென்றது. அவள் சொல்ல சொன்ன பதிலையே வீரமணி அவருக்கு அழைத்தவர் களுக்கு தன்மையாகவே சொன்னார். அதுவே நிஜம் போல காட்ட முயன்றார்.

கார்த்திகை சார்ந்து இருந்தவரை சக்தி சுயமாக சிந்தித்ததே இல்லை. இப்போது தான் சுயமாக சிந்திக்க ஆரம்பித்தாள்.

அவளின் கணிப்பு பொய்யாகவில்லை. சக்தி காலேஜ் போய் சேர்ந்த அடுத்த நிமிடம் கார்த்திக்கிற்கு தகவல் பறந்தது, ''மேம் இன் காலேஜ்'' என்று.



# 12

**காண்பார்தங் காட்சியாய்க் காண்பாராய்க் காண்பொருளாய்**

**மாண்பார்ந் திருக்கும், வகுத்துரைக்க வொண்ணாதே**

- பாரதி

காலேஜ் உள் வந்து அவளின் கேபினில் உள்ளே நுழைந்தாள் சக்தி. அவள் சேரினில் அமரவும் உள்ளே செல்வம் வரவும் சரியாக இருந்தது.

அவனை பார்த்தவள், "இவன் எங்கே இங்கே" என்ற யோசனையுடன். "நீங்க என்ன பண்றீங்க இங்க?" என்றாள்.

"நான் தான் மேடம் இங்க அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீசர்" என்றான்.

"என்ன, எப்பலேர்ந்து? எனக்குத் தெரியாம யார் உங் களை அப்பாயிண்ட் பண்ணினது" என்றாள் படபட வென்று. அவள் கார்த்திக்கின் விபத்திற்குப் பிறகு காலேஜ் வரவேயில்லை. அதனால் அவளுக்குத் தெரியவில்லை.

சற்று திணறியவன், "சார் தான் மேடம்!" சொன்னான்.

"எந்த சார்?"

"பிரின்சிபால் சார்!"

"எப்படி வாசுகி கிரானைட்ஸ்ல வேலை பார்த்துக் கிட்டு இருந்த உன் வீட்டுக்கு தேடி வந்து அப்பாயிண்ட் மெண்ட் குடுத்தாரா?" என்றாள் நக்கலாக.

"இல்லை! அது வந்து கார்த்திக் சார் என்னை அங்க வேலைய விட்டு எடுத்துட்டாங்க! இது உங்களோடது, உங்களுக்கு என்னை தெரியும்ங்கறதால இங்க வந்து வேலை கேட்டேன். நீங்க அப்போ இங்க இல்லை."

"உங்களுக்கு என்னை நல்லா தெரியும் உங்க கன்செர்ன்ல தான் வேலை பார்த்தேன்னு சொன்னேன். இங்க அந்த போஸ்ட் காலியா இருந்தது, என் படிப்பு இதுக்கு மேட்ச் ஆச்சு, இண்டர்வியூ பண்ணினாங்க, அப்புறம் தான் வேலை குடுத்தாங்க" என்றான்.

"உன்னைக் கார்த்திக் வேலையை விட்டு அனுப்பிட் டான். இதை நான் நம்பணும். இங்க போஸ்ட் காலியா இருந்தது இதையும் நான் நம்பணும்."

''சொல்லு! உன் பாஸ் கிட்ட சொல்லு! சக்தி இப்போதைக்கு அவன் கிட்ட மட்டும் தான் ஏமாறுவா. வேற யார்கிட்டயும் ஏமாறுற ஐடியா இல்லைன்னு சொல்லு!'' என்றாள் இன்னும் நக்கலாக.

செல்வத்துக்கு வேர்த்து ஊற்றியது.

''நீ இங்க இருந்தா என்ன நடக்குதுன்னு அவனுக்கு உடனுக்கு உடனே தெரியும். அதனால அவன் இங்க இருக்குற அட்மினிஸ்ட்ரேட்டரை அனுப்பிட்டு, உனக்கு அப்பாயிண்ட்மெண்ட் கொடுக்கச் சொல்லி பிரின்சிபால் கிட்ட சொல்லியிருப்பான்.''

நடந்ததை அப்படியே சொல்லும் சக்தியை ஆச்சர்யமாக பார்த்தான் செல்வம்.

''வேலை காலி. பேக் டு பெவிலியன்'' என்று அவன் நினைக்க.

''சொல்லு! இப்போ எதுக்கு உள்ள வந்த!'' என்றாள். மரியாதை எல்லாம் காற்றில் பறக்க விட்டிருந்தாள்.

''அது உங்ககிட்ட ரிப்போர்ட் பண்ண! அப்புறம்'' என்று அவன் ஒரு வேலையை பற்றிய விவரமும் கேட்டான்.

''இப்படி செய்ங்க'' என்று அவனுக்கு சொல்லிவிட்டு வேறு விவரங்களை கேட்டாள்.

அவன் புதிது என்பதால் அவனால் சொல்ல முடியவில்லை. அவன் முழிக்க.

''தோ பார்! நீ யார் சொல்லி வந்தியோ எனக்குத் தெரியாது! இங்க இருக்கணும்னா வேலையை ஒழுங்கா பார்க்கணும்! அப்போ தான் இங்க இருக்க முடியும்!'' என்றாள் அதிகாரமாக.

''அப்போ நீங்க என்னை வேலையை விட்டு அனுப்பலையா?'' என்று கேட்டே விட்டான்.

''உன்னை அனுப்பினா இன்னும் யாரையாவது புதுசா ஒருத்தனை பிடிப்பான். எவனாவது நான் என்ன பண்றேன்னு பார்த்துட்டு இருந்தான்னா எனக்கு டென்சன் ஆகும். அவனை கண்டுபிடிச்சு அவனை அனுப்பினா அடுத்தவனை அனுப்புவான்.''

''அவன் தான் என் உயிரை எடுக்கறதுன்னு முடிவு பண்ணி இருக்கானே. யாராவது நம்ம என்ன வேலையை செய்யறோம்னு பார்த்துக்கிட்டே இருந்தா எப்படி எப்படி நான் நிம்மதியா இருப்பேன்'' என்று அவளையும் மீறி கத்தினாள்.

''எவன் எந்த பார்வையில் என்னை பார்க்கறான்னு பார்த்துட்டே இருக்க முடியுமா'' என்றாள் குரலில் அவ்வளவு வலி.

டக்கென்று எமோஷனை கட்டுக்குள் கொண்டு வந்தவள்.

''அது எதுக்கு? தெரியாத பிசாசை விட தெரிஞ்ச பேயே மேல்! போ! போய் வேலையை பாரு!''

''மேடம்!'' என்று தயங்கித் தயங்கி நின்ற செல்வம் ''நீங்க என்னை நம்பலாம் மேடம்!'' என்றான்.

ஒரு நிமிடம் அவனை உற்றுப் பார்த்தாள். அவளின் பார்வை வீச்சை தாங்காமல் செல்வம் பார்வையை தழைக்க.

''அப்படியா உன் செல்லை குடு!'' என்றாள்.

''எதுக்கு?'' என்று அவன் தடுமாற.

''நீ அவன் கிட்ட எத்தனை தடவை பேசியிருக்கேன்னு பார்க்கிறேன்'' என்றாள்.

செல்வம் இன்னும் தடுமாறினான்.

கையை நீட்டினாள். அவன் அப்படியே நிற்க.

''ம்! குடு!'' என்று அதட்டினாள்.

வேர்த்து விறுவிறுக்க அதை எடுத்து நீட்டினான்.

இதுவரை கார்த்திக்கின் நம்பரில் இருந்து இரண்டு கால்கள் வந்திருந்தன. எல்லாம் மதியம் ஒரு மணியளவில்.

''வேலையை விட்டு அனுப்பிட்டான்னு சொன்ன. எதுக்கு போன் பண்ணினான்'' என்றாள் கூர்மையாக.

''கிரானைட் ஸ்டாக் டீடெயில் கேட்க'' என்று செல்வம் சொன்னான். சொல்லும்போதே இன்னும் வேர்த்து ஊற்றியது.

சக்தி அதை நம்பினது போல தெரியவில்லை.

அவள் மெசேஜ் போய் இன்பாக்ஸ் பார்க்க. ''மேம் இன் காலேஜ்!'' என்று கார்த்திக் நம்பருக்கு ஒரு மெசேஜ் போயிருந்தது. அதை வாய்விட்டு படித்தாள். செல்வம் பிடிப்பட்ட உணர்வுடன் நின்றான்.

அதை அவள் பார்த்துக் கொண்டிருந்த போதே கார்த்திக்கிடம் இருந்து போன்.

ஆத்திரம் தலைக்கேற போனை எடுத்து சுவரில் வீசினாள், அது பார்ட் பார்ட்டாக ஒடியது.

ஸ்தம்பித்து நின்ற செல்வம், பிறகு அமைதியாக அதையெல்லாம் பொறுக்கினான்.

பொறுக்கி எடுத்தபின்னும், ''சாரி!'' சொல்லிக்கொண்டு அங்கேயே நின்றிருந்தான்.

''கிளம்பு நீ முதல்ல! கீழ வீசுன மாதிரி எதையாவது எடுத்து உன்மேல வீசிட போறேன்! நீ முதல்ல கிளம்பு!'' என்றாள்.

செல்வம் அசையவேயில்லை, ''சாரி!'' சொல்லிக் கொண்டு அங்கேயே நின்றிருந்தான். ''ப்ளீஸ் மேடம்! இந்த மாதிரி இனி நடக்கவே நடக்காது! நிச்சயம் நான் உங்களுக்கு உண்மையா தான் இருப்பேன்! நம்புங்க மேடம்!'' என்றான்.

'முதல்ல நீ போ!'' என்று வெறுப்போடு சொன்னவள்.

''நான் முதல்லயே சொன்னது தான்! உன்னை வேலையை விட்டு அனுப்பமாட்டேன்! ஏன்னா நீ போனா இன்னொருத்தனை அவன் நிச்சயமா வைப்பான்'' என் றாள். அதை சொல்லும்போது அவளின் குரலில் அவ் வளவு வேதனை.

அது செல்வத்தின் மனதை பிசைந்தது.

''போ!'' என்று மறுபடியும் குரலுயர்த்தி சொல்ல.

''ப்ளீஸ் மேடம்! என்னை நம்புங்க! இனிமே செய்ய மாட்டேன்!'' என்றான் மன்றாடிய குரலுடன்.

''இனிமே நான் யாரையாவது நம்புவேனா. அதுக் கெல்லாம் வாய்ப்பேயில்லை. அந்த நம்பிக்கைத் துரோகி அவ்வளவு பெரிய பாடத்தை எனக்கு கத்துக் கொடுத் துட்டு போயிருக்கான்'' என்றாள் இன்னும் வெறுப்புடன்.

அவன் என்ன செய்வது, என்ன சொல்வது என்று அறியாதவனாக வெளியில் வந்தான்.

அதன் பிறகும் வெகு நேரம் இருந்தாள் சக்தி. யாராவது ஏதாவது கோரிக்கையை எடுத்து அவளைப்

பார்க்க போய் வந்து கொண்டே இருந்தனர். மறந்தும் செல்வத்தை எந்த வேலைக்கும் அழைக்கவில்லை.

அவள் வீட்டிற்கு கிளம்பும் போது மாலை மணி ஆறு. அவள் வெளியே வந்து காரில் ஏறப்போகும்போது செல்வம் அவளை பார்த்துக்கொண்டு தான் இருந்தான். கருப்பண்ணன் சக்திக்கு கார் கதவை திறந்து விட.

அது கார்த்திக்கின் செய்கையை அவளுக்கு ஞாபகப் படுத்தியது. மலுக்கென்று கண்களில் கண்ணீர் உதித்தது. கடகடவென்று கன்னத்தில் இறங்கியது. யாரும் கவ னிக்கும் முன் வேகமாக துடைத்தாள். செல்வம் பார்த்துக் கொண்டே தான் இருந்தான்.

''கருப்பண்ணா'' என்று தொண்டையை சரி செய்து அழைத்தவள். ''இனிமே இந்த தப்பை மறந்தும் செய் துடாதீங்க!'' அப்புறம் எனக்கு எப்பவுமே நீங்க கார் ஓட்ட மாட்டீங்க!'' என்றாள் கடுமையான குரலில்.

''சரிம்மா'' என்றார் நலிந்த குரலில் கருப்பண்ணன்.

பார்த்திருந்த செல்வத்திற்கு இதயம் கனத்து போனது.

கார்த்திக் செல்வத்தை தொடர்பு கொள்ள முயன்று முயன்று முடியாமல் என்னவோ ஏதோ வென்று ஒரு சஞ்சலத்தோடு இருந்தான்.

கார்த்திக்கை அவனின் அம்மா, இனி வீட்டில் தான் தங்க வேண்டும், வேறு எங்கும் தங்கக் கூடாது என்று விட்டார்.

மீறி அவன் எங்கு தங்கினாலும் தாங்கள் எல்லோரும் அவனுடன் வந்துவிடுவோம் என்று கூற. கார்த்திக்கிற்கு அங்கே தங்குவதைத் தவிர வேறு வழியில்லை.

ஏனென்றால் அவனின் தாத்தாவை இந்த வயதில் தனியாக விட்டு விட்டுப் போகமுடியாது. தாத்தா அவனுடன் வரமாட்டார்.

இங்கே இந்த பிரச்சனை ஓடிக்கொண்டிருக்க. அவன் மனம் முழுவதும் வீரமணியின் வீட்டில் என்ன நடந்து கொண்டிருக்கும் என்பதே.

செல்வம், ''மேம் இன் காலேஜ்'' என்று ஒரு மெசேஜ் அனுப்பியிருந்தான். அதன் பிறகு கார்த்திக் அவனை அழைத்த போது. இரண்டு ரிங் தான் சென்றது, அதன் பிறகு சுவிட்ச் ஆப் என்று வந்தது.

சரி சக்தி ஏதாவது கூட இருந்திருப்பாள். அதனால் சுவிட்ச் ஆப் செய்திருப்பான் என்று அவனுக்கு அவனே நினைத்துக்கொண்டு, அதன் பிறகு உடனே அழைக்காமல் மாலை ஆறுமணிக்கு தான் அழைத்தான்.

அப்போதும் போன் சுவிட்ச் ஆப் என்று தான் வந்தது.

அதற்குள் வெகு காலத்திற்கு பிறகு நேரடியாக பார்க்கும் அண்ணனிடம் பேச வைஷ்ணவிக்கு நிறைய விஷயங்கள் இருந்தது. லொட லொட வென்று பேசினாள்.

சுமித்ரா அவளைப் போல பேசவில்லை என்றாலும் தள்ளி எல்லாம் நிற்கவில்லை, சகஜமாக அவர்கள் இருக்கும் இடத்தில் தான் இருந்தாள்.

அவன் வீடு வந்துவிட்டான் என்பது அவர்கள் எல்லோருக்கும் உற்சாகத்தைக் கொடுத்தது.

பத்ரிநாத் வேறு கார்த்திக் எப்படி வாசுகி குழுமத்தை தக்க வைத்துக்கொண்டான் என்று கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

அதற்கெல்லாம் பதிலளிக்க கார்த்திக்கிற்கு நேரமில்லை. அவனின் வாசஸ்தலம் இடம் மாறியதை பலருக்கு சொல்ல வேண்டி இருந்தது. அவர்கள் எல்லாம் அடிக்கடி தொழில் விஷயமாக நேரம் காலம் பார்க்காமல் அவனை தேடுபவர்கள்.

சிலருக்கு அவனைப் பார்க்க வேண்டி இருக்க. விவரம் தெரிந்த உடனே இங்கே வந்தனர். இத்தனை காலம் அமைதியாக இருந்த பத்ரிநாத்தின் வீடு பரபரப்பானது.

வருபவர்கள் அவனிடம் காட்டும் பவ்யம் பத்ரிநாத்தை வியக்க வைத்தது. அவரின் சொந்த ஊர் இது என்பதால் அவருக்கு இங்கே அனேகம் பேர் பழக்கம்.

இங்கே திரும்ப வந்த பிறகும் அவ்வளவாக யாருடனும் பேசாமல் பழகாமல் இருந்தார் பத்ரிநாத்.

அன்று மெதுவாக அவர்களுக்கு எல்லாம் தொலை பேசி வாயிலாக அழைத்தவர் வாசுகி குழுமம் மீண்டும் தங்களுடையதாகிவிட்டதைப் பெருமை பேசியவர், அப்படியே கார்த்திக்கை பற்றியும் பேச.

அங்கே நிறைய பேருக்கு கார்த்திக்கை பற்றி தெரிந்திருந்தது. எல்லோரும் அவன் இத்தனை காலம் வீரமணியுடன் தான் இருந்தான் என்று சொன்னார். அதே சமயம் எல்லோரும் வீரமணியை பற்றி நல்ல விதமாக தான் பேசினர். ஆனால் கார்த்திக்கைப் பற்றிப் பேசவே தயங்கினர்.

கார்த்திக் சமூகத்தில் எல்லோருக்கும் தெரிந்த ஒரு இடத்தில் இருந்தான். அவனைப் பற்றி பேசவே எல்லோரும் பயந்தனர் என்ற பதரிநாத்தால் ஓரளவிற்கு அனுமானிக்க முடிந்தது.

இரவு வரை வேலைகள் சரியாக இருந்தாலும் கார்த்திக்கிற்கு ஏன் செல்வம் போன் எடுக்கவில்லை. திரும்ப ஏன் அழைக்கவில்லை. இப்படி செய்ய மாட்டானே. தான் செய்து முடி என்று வாக்கியத்தை முடிக்கும் முன்னே வேலையை முடிக்க நினைப்பானே. என்னவாயிற்று மனதிற்குள் ஒரு புறம் ஓடிக்கொண்டே இருந்தது.

சாப்பிட்டு உறங்கப் போகுமுன், "அம்மா நான் வெளியே போயிட்டு வர்றேன்!" என்று கிளம்பினான்.

"எங்க கார்த்திக் இந்த நேரத்துல?" என்று வாசுகி கேட்க.

"கிரானைட் லோடு ஒண்ணு அனுப்பணும்! அதுக்கு நான் இருக்கணும்!" என்று சொல்லி சமாளித்து கிளம்பினான்.

செல்வத்தின் வீட்டிற்கு வந்தான். வீதியே உறங்கியிருக்க. செல்வம் மட்டும் அவனின் வீட்டின் வாசலில் அமர்ந்திருந்தான்.

ஆம்! செல்வம் கார்த்திக்கை எதிர்பார்த்து அமர்ந்திருந்தான்! அவனுக்குத் தெரியும் கார்த்திக் கட்டாயம் தன்னைப் பார்க்க வருவான் என்று.

நான்கு நாட்களுக்கு முன் செல்வத்தை அழைத்த கார்த்திக், "நீ காலேஜ் போயிடு! நான் அவங்க வீட்டை விட்டுப் போகப்போறேன். வாசுகி குழுமம் இனி எங்களோடது!" என்று சொல்ல.

செல்வத்திற்கு அதிர்ச்சி. அவனுக்கு விளக்கம் குடுக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்றாலும் செல்வத்தை கார்த்திக் ஒரு நல்ல இடத்தில் வைத்திருந்ததால் விளக்கம் சொன்னான்.

"அது எங்கம்மாவோட அப்பாவோடதுதான் செல்வம்! எங்கப்பா கிட்ட பார்த்துக்க சொல்லி கொடுத்திருந்தாங்க. அதை அவர் வீரமணி அய்யாக்கு எங்க தாத்தாக்கு தெரியாம வித்துட்டார். அதை திரும்ப வாங்கிக்கொடுக்க தான் இங்கே வந்தேன்!" என்றான்.

செல்வத்திற்கு என்ன சொல்வது என்றே தெரிய வில்லை. அந்த வீட்டில் உள்ளவர்களை கார்த்திக் எப்படி பார்த்துக்கொள்வான். அவர்கள் அவனை எப்படி பார்த் துக்கொள்வார்கள் என்று அவனுக்குத் தெரியும்.

அதுவும் கார்த்திக் சக்தியின் உறவு என்ன மாதிரியான உறவு என்று பலமுறை வியந்து இருக்கிறான். கார்த்திக் சக்தியை எப்போதும் அவ்வளவு அக்கறை எடுத்து பார்த்துக்கொள்வான், சக்தி கார்த்திக் என்ன சொன் னாலும் கேட்டுக்கொள்வாள்.

இருவருமே மற்றவர் மேல் மிகுந்த அக்கறையும் அன்பும் வைத்திருப்பவர்கள் என்று செல்வத்திற்கு நன்றாகத் தெரியும்.

செல்வத்தின் மனம் இந்த உறவு இதற்கு மேல் ஒரு நல்ல அடையாளத்தை கொடுக்குமா என்று எதிர்பார்த் திருக்க?

இப்படி இருப்பவர்களை எப்படி கார்த்திக் ஏமாற்று கிறான் என்பதே செல்வத்திற்குப் புரியாதப் புதிராக இருந்தது.

கார்த்திக்கிற்கு சக்தி மேல் என்ன மாதிரியான அக் கறை என்று செல்வத்திற்குத் தெரிய வேண்டி இருந்தது. அதனால் தான் சிம்மை எடுத்து வேறு போனில் போடா மல். இவனாகவும் கார்த்திக்கை தொடர்பு கொள்ளாமல்

இருந்தான். கார்த்திக் இங்கே அவனைத் தேடி வருவான் என்பது அவனுக்கு நிச்சயம்.

''என்னடா இங்க உட்கார்ந்திருக்க'' என்று கார்த்திக் கேட்க.

''நீங்க வருவீங்கன்னு உங்களுக்காக தான் பார்த்து கிட்டு இருந்தேன்!'' என்றான்.

''நான் வருவேன்னு எப்படித் தெரியும்?''

'நான் போன் எடுக்கலை! சக்தி மேடம் பத்தி உங் களுக்கு தெரிஞ்சே ஆகணும்! அப்புறம் நீங்க வருவீங் கன்னு தெரியாதா?'' என்றான் விறைப்பாக செல்வம்.

இவன் ஏன் இப்படி பேசுகிறான் என்று புரியாமல். ''ஏன்டா போன் சுவிட்ச் ஆப்ன்னு வருது'' என்றான் அதட்டலாக.

''போன் உடைஞ்சா அப்படிதான் வரும்!''

''என்ன? உடைஞ்சிடுச்சா! சின்ன பையனாடா நீ. இப்படி பொறுப்பில்லாம போனை உடைச்சிருக்க!''

''நான் உடைக்கலை, சக்தி மேடம் உடைச்சிட்டாங்க!''

''அவங்க ஏண்டா உன் போனை உடைச்சாங்க.''

''நீங்க போன் பண்ணுனீங்க! அவங்க உடைச்சிட்டாங்க!''

''டேய்!'' என்று கோபமாக கத்தியவன். ''பிட்டு பிட்டா சொன்ன! உதை வாங்குவ! என்ன நடந்துதுன்னு ஒழுங்கா சொல்லு!'' என்று அடிப்பது போல வந்தான்.

கோபம் வந்தால் கார்த்திக் அடிக்கக் கூட தயங்க மாட்டான் என்று செல்வத்திற்குத் தெரியும். அதனால் தள்ளி நின்று பேசினான்.

"மாட்டிக்கிட்டேன்! என்னை அங்க பார்த்தவுடனே நீங்க தான் அனுப்பியிருக்கீங்கன்னு உடனே முடிவு பண்ணிட்டாங்க!"

கார்த்திக் கோபமாக முறைக்கவும்.

"நான் இல்லைன்னு சொன்னேன்! அப்படியான்னு சொல்லி போனை செக் பண்ணாங்க! மெசேஜ் பார்த் தாங்க! அப்போ பார்த்து நீங்க போன் பண்ணுனீங்க. போன் தூள் தூள் ஆகிடுச்சு."

"ஏன்டா ஒரு நாள் கழிச்சுக் கூட மாட்ட மாட்டியா! உடனே மாட்டுவியா. என்னை பிடிக்காம கார்த்திக் சார் வெளிய அனுப்பிட்டார்! இங்க வேலை காலி இருந்தது வந்தேன்னு சொல்ல வேண்டியது தானேடா."

"சொல்ல மாட்டீங்க!" என்று நொடித்தவன். "அதெல்லாம் தெளிவா இருக்காங்க!"

"என்னடா தெளிவா இருக்காங்க."

"உங்க கிட்ட மட்டும் தான் ஏமாறுவாங்கலாம்! வேற யார் கிட்டயும் ஏமாறுற ஐடியா இல்லைன்னு சொல்லிட் டாங்க!" என்றான் சக்தி சொல்லியதை போல நக்கலாக.

அந்த வார்த்தைகளில் சக்தியின் மனதின் காயம் புரிந்தது கார்த்திக்கிற்கு. யோசனையில் ஆழ்ந்த கார்த்திக், "வேலையை விட்டு அனுப்பிட்டாங்களா?"

"இல்லை! தெரியாத பிசாசை விட தெரிஞ்ச பேயே மேல்! நீயே இருன்னு சொல்லிட்டாங்க."

கார்த்திக் புரியாமல் பார்க்க.

"என்னை அனுப்பினா வேற யாரையாவது நீங்க அவங்களைக் கண்காணிக்க வைபீங்கன்னு உறுதியா நம்புறாங்க" என்றான்.

கார்த்திக் சக்தியின் இந்த பரிமாணத்தை எதிர்பார்க்க வில்லை. காலையில் தானே அவளை விட்டு வந்தோம், ஒரு நாளுக்குள் சக்தி எவ்வளவு என்னைப் பறறித் தப்பாக யோசித்து இருக்கிறாள். மனம் முழுவதும் ஒரு இனம் புரியாத வலி பரவியது.

கார்த்திக் யோசனையில் இருக்க. அதை சொல்லும் போது, ''அவங்க குரல்ல அவ்வளவு வேதனை. அவ் வளவு வலி பாஸ்'' என்றான் செல்வம்.

''எனக்கு ரொம்பக் கஷ்டமா இருந்துச்சு!'' என்று சொன்னவன் ''என்னால முடியாது பாஸ்!'' என்றான்.

கார்த்திக் அவனைப் பார்க்க ''நிஜமா என்னால இது முடியாது பாஸ்! என்னை உங்க கூட கூப்ட்டுகோங்க. இல்லை அவங்க கூட விட்டுடுங்க.''

''அவங்க என்ன பணறாங்கன்னு அங்க நடக்கறதை எல்லாம் என்னால சொல்ல முடியாது, என் மனசாட் சியே என்னை குத்தி கிழிச்சிடும்!'' என்றான்.

''என்னால இன்னைக்கு அவங்க முகத்தைப் பார்க் கவே முடியலை.''

''டேய் அது மேம் நல்லதுக்கு தான்டா! அவங் களுக்கு ஒரு கல்யாணம் ஆகட்டும் அப்புறம் அவங்கப் பாடு அவங்க கணவர் பாடு! அதுவரைக்கும் அவங்க எப்படியோ போறாங்கன்னு என்னால விட முடியாது.''

''என்ன பாஸ் கதையா இருக்கு இது! ஏன் அவங்க அப்பா பார்த்துக்க மாட்டாரா. அவரோட செல்லப் பொண்ணு அவங்க.''

''வீரமணி அய்யா பார்த்துக்குவார் தான்! ஆனாலும் நான் பார்த்தா தான்டா எனக்கு நிம்மதி!'' என்றான்.

சக்தியின் வார்த்தைகள் இன்னும் கார்த்திக்கின் காதுக்குள் ஒலித்தன, ''நீ என்னை உனக்கு அடிக்ட் பண்ணிட்ட கார்த்திக். நீ இல்லாம நான் என்ன செய்வேன்! கீழ இருந்து விழுந்தா அடிபடாதுன்னு மேல இருந்து தள்ளிவிட்டுட்டியா'' என்ற வார்த்தைகள், அவன் காலையில் கேட்டதில் இருந்து சம்மட்டியாய் அவன் மண்டையில் ஒரு புறம் அடித்துக்கொண்டே இருந்தது.

''அப்படி சொல்லுங்க! உங்களால மேடமை பார்க்க இருக்க முடியாதுன்னு சொல்லுங்க!'' என்றவன்.

''ஆனா என்னால முடியாது பாஸ்! அவங்க ரொம்ப புத்திசாலியா இருக்காங்க! என்னை நிமிஷத்துல கண்டுபிடிச்சிட்டாங்க. நீங்க என்ன செய்வீங்கன்னும் கெஸ் பண்றாங்க!'' என்றான் பிடிவாதமாக.

இவ்வளவெல்லாம் செல்வம் கார்த்திக்கிடம் பேசியதே இல்லை. கார்த்திக்கிற்கு கண்மண் தெரியாத கோபம் வந்தது.

''அப்போ நான் சொல்றதை கேட்க மாட்டே.''

''மாட்டேன்!'' என்று இன்னும் பிடிவாதமாக செல்வம் சொல்ல.

கார்த்திக் செல்வத்தின் முகத்திலேயே விட்டான் ஒரு குத்து. உதடு கிழிந்து ரத்தம் கொட்டியது.

செல்வம் வாயை பிடித்து கொண்டான்.

''கேட்க மாட்டியாடா நீ!'' என்று கார்த்திக் கர்ஜிக்க.

அந்த நிலையிலும் ''கேட்க மாட்டேன்'' என்றான் உறுதியாகச் செல்வம். கூடவே ''என்னால மேடமை கஷ்டப்படுத்த முடியாது பாஸ்!'' என்றான்.

அதற்கு இன்னும் ஆத்திரப்பட்ட கார்த்திக் "உனக்கென்னடா அக்கறை" என்று ஒரு உதை விட உருண்டு போய் விழுந்தான்.

ஆங்காங்கே சிராய்ப்புகள் காயங்கள். செல்வம் அடிபட்டான். இருந்தாலும் சிரமப்பட்டு எழுந்து நின்றான்.

செல்வம் சிறிதும் கோபப்படவில்லை. "ப்ளீஸ்! நான் சொல்றதை சரியா புரிஞ்சிக்கோங்க பாஸ்! அவங்க கஷ்டப்பட்டா நீங்க எவ்வளவு வேதனைப்படுவீங்கன்னு எனக்குத் தெரியும், நீங்க எனக்கு முக்கியம் பாஸ்" என்றான்.

"ஒண்ணு உங்க கூட இருக்கேன், இல்லை அவங்க கூட இருக்கேன்! அங்க நடக்கறதை இங்க என்னால கட்டாயம் சொல்ல முடியாது."

"தொழில்ல நீங்க என்ன சொன்னாலும் செய்வேன் பாஸ்! அது சரியோ தப்போ உங்க கூட நிற்பேன்! ஆனா இந்த விஷயத்துல முடியாது."

"அவங்களை விட்டுடுங்க" என்றான்.

இந்த வார்த்தைகளைச் சொன்னவுடன், சப்பென்று கன்னத்தில் அரை வாங்கினான். தன்னுடைய இயலாமையை எல்லாம் கார்த்திக் செல்வத்திடம் காட்டிக் கொண்டு இருந்தான்.

செல்வம் அப்போதும் அடங்கவில்லை.

"விட்டுடுங்கன்னு சொன்னா உங்களுக்கு ஏன் கோபம் வருது! நீங்க என்ன அவங்களைக் கல்யாணம் பண்ணிக்கப் போறீங்களா?" என்றான்.

அவன் சட்டையை பிடித்த கார்த்திக், டேய் அதிகமாப் பேசாத! என்கிட்ட உதை வாங்கியே ஒழிஞ்சிடுவ'' என்று கார்த்திக் கர்ஜிக்க.

சற்றும் அசராத செல்வம், ''அப்புறம் எதுக்கு அவங்க எங்க போறாங்க? எங்க வர்றாங்க? என்ன செய்யப் போறாங்கன்னு பார்க்க போறீங்க? சொல்லுங்க!'' என் றான் விடாமல்.

''அது இவ்வளவு நாளா நான் கூட இருந்தேன்! அவங்க ஏதாவது பிரச்சினையில மாட்டிகிட்டா!'' என்றான்.

''நீங்க நினைக்கிற அளவுக்கு அவங்க ஒண்ணும் விவரம் தெரியாதவங்க கிடையாது. நீங்க இப்படி அவங்க பின்னாடி ஒரு வகையில் இருக்கீங்கன்னு தெரிஞ்சா. அவங்க உங்களை ஏதாவது ஒரு வகையில் நினைப் பாங்க. அப்புறம் எப்படி அவங்க வேற யாரையாவது கல்யாணம் பண்ணி சந்தோஷமா இருப்பாங்க'' என்று கேள்வி எழுப்பினான்.

மண்டை வலித்தது கார்த்திக்கிற்கு.

''எனக்குத் தெரியும் அவங்க உங்களுக்கு ரொம்ப முக் கியம்னு. நான் இருக்கேன் அவங்க கூட. நான் பார்த்துக் கறேன். எந்த பிரச்சனையும் வராது. என்னால பார்த்துக்க முடியாதுன்னு தோணினாலோ. ஏதாவது பிரச்சனைன் னாலோ. அடுத்த நிமிஷம் உங்களுக்கு தகவல் கொடுக் கறேன்.''

''இப்போதைக்கு அவங்களை ஃப்ரீயா விடுங்க! உங் களுக்காக தான் பாஸ் இதைச் சொல்றேன்! உங்களைப்

பத்தி பேசும்போது அவ்வளவு கோபம். அவ்வளவு வெறுப்பு. அவங்க முகத்துல. நீங்க இப்படி செஞ்சீங் கன்னா இன்னும் அதிகமாகும் பாஸ்'' என்றான்.

கார்த்திக் யோசிக்கவும்.

''நீங்க தான் ஃபிலிம் லைன் இப்போ போகப் போறீங்க தானே, அதை பாருங்க!'' சக்தி மேடமை நான் பார்த்துக் கறேன்'' என்றான்.

செல்வம் மீண்டும் மீண்டும் நான் பார்த்துக்கறேன் எனவும் கார்த்திக் அவனை சந்தேகமாக பார்க்க.

''ஏன் பாஸ் இந்த லுக்கு? அஞ்சு பொண்ணுங் களோட பொறந்தவன் நான். மூணு பேருக்கு உங்க தயவுல கல்யாணம் பண்ணி வெச்சு சீரும் சிறப்புமா இருக்காங்க. இன்னும் ரெண்டு பேருக்கும் நீங்க தான் முன்ன நின்னு கல்யாணம் பண்ணனும்.''

''எனக்கு எந்த பொண்ணை பார்த்தாலும் தங்கச்சி ஃபீல் தான் வரும், டோன்ட் வொர்ரி!'' என்றான் லகுவாக.

கார்த்திக் அவனை மேலும் கீழும் அளவெடுக்க.

''என்ன பாஸ்?''

''மேம் டேஸ்ட் இவ்வளவு மட்டம் இல்லைடா'' என்றான்.

''ஏன் பாஸ்? உடம்புல தான் அடி வாங்கினேன்னா! நெஞ்சுலையும் அடிக்கறீங்க!'' என்று வராத கண்ணீரை துடைக்கப் போக. கைகள் அடிபட்ட உதட்டில் பட்டு

அவனையும் மீறி, ''ஷ். ஆ.'' என்று வலியில் முன் வைக்க.

''சாரிடா!'' என்றான் கார்த்திக்.

''விடுங்க பாஸ்! இதெல்லாம் ஒண்ணுமில்லை'' என்றவன்.

''அவங்களை விட்டுடுங்க! நான் பார்த்துக்கறேன்! சின்னப் பிரச்னைனாலும் சமாளிக்க முடியாதுன்னு தோணினா உடனே சொல்றேன்'' என்று மறுபடியும் மறுபடியும் சொல்லி. வெகுவாக கார்த்திக்கை சமாதானப்படுத்தி அனுப்பினான்.

கார்த்திக் குழம்பிக்கொண்டே சென்றான். ''சக்தியை விடுவதா? என்னால் முடியுமா?'' என்று.

கார்த்திக்கின் உண்மையான விசுவாசி செல்வம்.

சக்தியை கார்த்திக் கவனிக்கும் விதம் பார்த்து, அக்கறை பார்த்து சக்தியையும் செல்வம் மிக உயரத்தில் வைத்திருந்தான்.

இன்னுமே கார்த்திக் சக்தியின் உறவு என்ன மாதிரியானது என்று செல்வத்தினால் வரையறுக்க முடியவில்லை என்றாலும்.

கார்த்திக்கை அவனின் நடவடிக்கைகளை பார்த்த செல்வத்திற்கு உறுதியாயிற்று, கார்த்திக்கினால் எப்போதும் சக்தியை விட முடியாது என்று.

ஆனால் சக்தி? இதை அவர்கள் விரும்பவே மாட்டார்கள் என்று தான் தோன்றியது.

காலம் வைத்திருக்கும் கோலம் மனிதனால் கணிக்க முடியாது என்பதே உண்மை.

# 13

**இன்னுமொரு முறைசொல்வேன், பேதை நெஞ்சே,**

**எதற்குமினி யுளைவதிலே பயனொன் றில்லை;**

**நினையாத விளைவெல்லாம் விளைந்து கூடி**

**நினைத்த பயன் காண்பதவள் செய்கை யன்றோ?**

- பாரதி

செல்வத்தின் வீட்டில் இருந்து வந்த கார்த்திக்கிற்கு ஒரு பொட்டு தூக்கமில்லை. செய்த செயலின் வீரியம் அவனுக்குத் தெரியும். தெரியாதென்றெல்லாம் சொல்ல முடியாது. இருந்தாலும் நிறைய வலித்தது.

என்றுமே தனக்கு நிம்மதி என்பதே இல்லையா. ஏன் தனக்கு மட்டும் இப்படி. நேர்மை என்ற ஒரு விஷயம் அவனுக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. ஆனால் என்று அவன் இந்த வீட்டை விட்டு வெளியேறினானோ அன்றிலிருந்து அவன் அதைக் கடை பிடித்ததே கிடை யாது.

அதற்கு முன்பே மாபாதகமான செயலை வேறு செய்திருக்கிறான்.

வீட்டை விட்டு வெளியேறியது என்பது தன் தந்தை தொலைத்த சொத்தைத் திரும்ப பெற என்றாலும். அதையும் விட கார்த்திக் அவன் செய்த மாபாதகமான

செயலுக்கு அவனுக்கு அவனே தண்டனை கொடுத் துக்கொள்ள விரும்பினான். அவன் செய்த செயல்?

கண்ணின் ஓரம் நீர் துளிர்த்தது. எப்போதும் போல சக்தி நினைவுகளில் பின்னால் போக அவன் செய்த செயலின் நினைவுகள் முன்னால் வந்தன.

"கடவுளே! நான் உன்னிடம் கேட்பது நிம்மதியான உறக்கம் மட்டுமே அதை என்றாவது நீ எனக்கு கொடுப் பாயா?" என்று மனமுருக கடவுளிடம் கேட்டான்.

ஆனால் கடவுள் அவனுக்கு அதை இப்போதைக்கு கொடுப்பதாய் இல்லை.

காலையில் செல்வம் அடிவாங்கி வீங்கிய முகத்துடன் தான் காலேஜ் வந்தான். காலையில் பத்து மணிக்கே சக்தி காலேஜ் வந்துவிட்டாள், வீரமணியை அழைத்துக் கொண்டு.

செல்வத்தை பற்றி சக்தி வீரமணியிடம் ஒன்றும் கூற வில்லை. அவனைப் பார்த்தும் வீரமணி இவன் எங்கே இங்கே என்பது போல பார்க்க. "ஒரு பத்து நாளைக்கு முன்னாடியே இவனை காலேஜ் மாத்தி விட்டுடேன்பா" என்று மட்டும் சொன்னாள்.

"என்னப்பா முகமெல்லாம் வீங்கியிருக்கு, உதட்டுல காயம், என்ன ஆச்சு?" என்று வீரமணி செல்வத்தை பார்த்துக் கேட்டார்.

"வண்டில இருந்து விழுந்துட்டேன் ஐயா" என்றான் செல்வம். சக்தி அதை நம்பவில்லை என்று அவளின் முகமே சொல்லியது. அவள் செல்வத்தை பார்த்த பார் வையில் நிஜமாகவே செல்வத்துக்குள் ஒரு பயம்

பதட்டம் தோன்றியது. கார்த்திக்கிடம் கூட அவன் இப்படி உணர்ந்தது கிடையாது.

ஏன் நேற்று அடிவாங்கிய போது அவனுக்கு இந்த பயம் பதட்டம் இல்லை. பார்வையால் கூட மிரட்ட முடியும் என்பதை சக்தி அவனுக்கு காட்டினாள்.

பதட்டத்தில், ''சாரி மேடம்!'' என்று செல்வம் ஆரம் பிக்க. வீரமணி என்ன என்பது போல் பார்க்க. செல் வத்தை மேலே பேச விடாமல்.

''நேத்து ஒரு வேலை சொன்னேன்பா, இன்னும் முடிக் காமல் இருப்பானா இருக்கும், போ! போய் வேலையை பார்!'' என்றாள்.

என்ன வேலையை பார்ப்பது? அவனுக்கு தான் எந்த வேலையும் சக்தி கொடுக்கவேயில்லையே. அவனாகவும் எதுவும் வேலை பார்க்க முடியாது. ஏனென்றால் இது செல்வத்திற்காக உருவாக்கப்பட்ட போஸ்ட். இதற்கு என்ன வேலை என்பது அங்கிருப்பவர்களுக்கு தெரிய வில்லை.

அவன் யாருக்கு கீழே வருவான், யார் அவனிடம் என்ன வேலை சொல்வது, என்பது தெரியவில்லை.

செல்வம் சோர்வுடன் அவனின் இடத்திற்கு திரும்ப. சக்தி அவளின் தந்தையை அவளின் கேபின் உள் அனுப்பிவயள், ''ஒரு நிமிஷம்பா!'' என்று வெளியே வந்தாள்.

''செல்வம்'' என்றவளின் குரல் கேட்டு வேகமாக வந் தான். ''அப்பா முன்னாடி மறந்தும் கார்த்திக் பத்தியோ, அவனை ஞாபகப்படுத்துற எந்த விஷயத்தையும் பேச வேண்டாம்'' என்றாள் கடுமையாக.

''சரிங்க மேடம்'' என்று அவன் சொல்ல.

''ஆமா இது என்ன காயம்? முகமெல்லாம் வீங்கி கிடக்கு! வண்டில இருந்து விழுந்துட்டன்னு சொல்ற. நம்பற மாதிரி இல்லையே.''

''கார்த்திக் சார் அடிச்சார்'' என்றான்.

''ஓஹ்! இது அடுத்த புது டிராமா வா?''

''இல்லை மேம்! சத்தியமா இல்லை. இங்க நடக் கறதை அங்க சொல்ல மாட்டேன்னு சொன்னேன், கோவத்துல அடிச்சிட்டார்.''

''இதை நான் நம்பணும்'' என்று இளக்காரமாக சக்தி கேட்க.

''நீங்க நம்பினாலும் நம்பலைன்னாலும் இது தான் உண்மை மேடம், நிச்சயமா நான் சொல்ல மாட்டேன்'' என்றான்.

நேற்று இருந்த தடுமாற்றம். பார்வை தவிர்த்தல். அதுவும் செல்வத்திடம் இல்லை. நேர் பார்வை பார்த் தான். அவன் சொல்வது உண்மை என்று சக்தியின் மன திற்கு தோன்றினாலும் அதை ஒப்புக்கொள்ள சக்தியின் மனம் மறுத்தது.

இரண்டு காரணங்கள், ஒன்று இனி வாழ்க்கையில் அவளால் யார் மேலாவது நம்பிக்கை வைக்க முடியுமா என்று தெரியவில்லை. இரண்டாவது அவளுக்கு கார்த்திக் செல்வத்தின் உறவு தெரியும்.

செல்வம் கார்த்திக்கை ஏதோ தெய்வத்தை பார்ப்பது போல பார்ப்பான். என்ன சொன்னாலும் செய்வான். அதனால் அவளால் இதை நம்ப முடியவில்லை.

சக்தி செல்வத்தை பார்க்க. அவன் பார்வை, "நான் சொல்வது உண்மை" என்ற செய்தியை தாங்கியது. ஆனால் அதையெல்லாம் யோசிக்க சக்திக்கு விருப்பம் இல்லை. அவள் செய்ய வேண்டிய வேலைகள் அனேகம் இருந்தன.

செல்வத்திற்கு பதில் சொல்லாமல் திரும்ப நடந்தாள்.

மதியம் வரை சக்திக்கு பார்க்க நிறைய வேலைகள் இருந்தன. ஆனால் மறந்தும் செல்வத்தை அழைக்க வில்லை.

அவள் பாட்டிற்கு வேலை செய்தது மட்டுமில்லாமல் இருக்கும் வேலைகளையும் எல்லோருக்கும் சொன்னவள், அவனிடம் மட்டும் எந்த வேலையும் சொல்லவில்லை.

மாலைவரை இருந்தே வீட்டிற்கு கிளம்பினாள். இதுவே தொடர்ந்து ஒரு வாரம் வாடிக்கையானது.

இந்த ஒரு வாரமாக கார்த்திக் செல்வத்தை தொடர்பு கொள்ள முயலவேயில்லை. செல்வத்திற்கு ஆச்சர்யம், ஆனால் அதே சமயம் வருத்தம் கூட. கார்த்திக்கும் தொடர்பு கொள்ளவில்லை. சக்தியும் ஒரு பொருட்டாய் கூட மதிக்கவில்லை, எந்த வேலையும் கொடுக்கவும் இல்லை.

கார்த்திக் நிஜமாகவே சக்தியை கவனிப்பதை விட்டு விட்டானா என்றும் தெரியவில்லை.

அவசரமாக உணவை அள்ளி போட்டுக்கொண்டு. கிடைக்கும் நேரத்தில் உறங்கி. இப்படி வேலை, வேலை என்று ஓடிக்கொண்டிருந்த செல்வத்தினால் இப்படி சோம்பி உட்கார முடியவில்லை.

சக்தி வேலை கொடுப்பதாக இல்லை என்றானவுடன் செல்வம் அவனாக வேலை உருவாக்கி கொண்டான். காலேஜ் முன் சில இடங்கள் பராமரிக்கப் படாமல் ஒழுங் கில்லாமல் இருந்தது.

அந்த இடங்களை ஆட்களை கொண்டு சுத்தப் படுத்த ஆரம்பித்தான். அன்று முழுவதுமே அந்த வேலையை செய்தான். காலேஜில் பணம் கேட்காமல் சொந்த பணத்தை கொடுத்து வேலையாட்களுக்க டீ வாங்கி கொடுத்தான்.

சற்று கடுமையான வேலை என்பதால் மதிய உண வும் வாங்கி கொடுத்தான். காலையில் வரும்போதே சக்தி இந்த வேலையை பார்த்துக்கொண்டு தான் வந்தாள்.

ஏன்? எதற்கு? என்னைக் கேட்காமல் யார் செய்வது? என்பது போன்ற எந்த கேள்விகளும் இல்லை. செல்வம் அந்த இடத்தில் இருப்பதால் அது அவன் வேலை என்பதும் புரிந்தது. தான் வேலை சொல்லாததால் அவனாக ஏற்படுத்திக் கொண்டான் எனவும் புரிந்தது.

சக்தி தொடர்ந்து இப்போது காலேஜ் வருவதால். என்ன நடக்கிறது காலேஜில் என்று உடனுக்குடன் அவளுக்கு தெரியும்படி பார்த்துக் கொண்டான். வேலை செய்கிறான் சரி! ஆனால் அவன் காசை செலவு செய்தது சக்திக்கு கோபத்தை ஏற்படுத்த.

அவனை அழைத்தவள். ''ஏன்? இந்த காலேஜ்ல வேலை பார்க்கறவங்களுக்கு ஒரு நாள் சாப்பாடு கூட வாங்கி கொடுக்க முடியாத அளவுக்கு என் மேனேஜ் மென்ட் இருக்கா என்ன?'' என்றாள் கூர்மையாக.

செல்வமும் தைரியமாக பதில் சொன்னான், ''யார் கிட்ட கேட்கறதுன்னு தெரியலை. யார் எனக்கு மேலதிகாரி, யார் கிட்ட நான் ரிப்போர்ட் பண்ணனும்னு தெரியலை, நீங்க என்னை இங்கயிருக்குற டேபிள் சேர் மாதிரி கூட மதிக்கிறது இல்லை'' என்றான் ஆதங்கமாக.

''அவங்களுக்கு வேலை ரொம்ப அதிகம். அதான் வாங்கி கொடுப்போம், அப்புறம் பில் கொடுத்து கிளைம் பண்ணிக்கலாம்னு நினைச்சேன்'' என்றான்.

''உனக்கு என்ன போஸ்ட்? நீ யார் கிட்ட ரிப்போர்ட் பண்ணனும், எதுவும் சொல்ல பயமாயிருக்கே! உன்னை வெச்சு கார்த்திக் அப்புறம் இதையும் பிடிங்கிட்டான்னா! இல்லை நீயே அவன் சிஷ்யன் தானே! நீயே பிடிங்கிட்டன்னா?'' அதான்பா யோசனையா இருக்கு!'' என்றாள் சீரியசாகவே.

செல்வத்தை சக்தியின் வார்த்தைகள் காயப்படுத்தினாலும். ''எல்லா நேரமும் எல்லா மனுஷங்களும் தப்பா போயிட மாட்டாங்க மேடம்'' என்று பதிலும் கொடுத்தான்.

''அப்போ. இப்போ போச்சே! அதுக்கென்ன சொல்ற?'' என்றாள் வாசுகி குழுமத்திற்கு நடந்ததை நினைத்து.

''அவங்களுக்கு என்ன சந்தர்ப்பமோ, சூழ்நிலையோ? சில சமயம் தப்பை நாம செய்ய வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகிடுறோம் மேடம்'' என்றான் வருத்தமான குரலில்.

''அப்போ கார்த்திக்கை நீ விட்டுக் குடுக்க மாட்ட. அப்படிதானே!''

என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் செல்வம் நிற்க.

சக்தி மேலும் பேசினாள். ''உனக்கு அந்த மாதிரி சந்தர்ப்பமோ, சூழ்நிலையோ அமையாதுன்னு என்ன நிச்சயம்'' என்றாள்.

செல்வம் தளராமல், ''நம்பிக்கை தானா வரணும் மேடம்! நம்புங்க நம்புங்கன்னு சொல்லி நம்பிக்கையை வர வைக்க முடியாது!'' என்றான்.

அவன் வார்த்தையிலும் பார்வையிலும் நேர்மை தெரிந்தது சக்திக்கு, அதற்கு மேல் வார்த்தையை வளர்க்காமல், ''கிளைம் குடுத்து வாங்கிக்கோ'' என்றாள்.

அப்போதும் செல்வம் அசையாமல் நிற்கவும். ''இன்னும் என்ன?'' என்பது போல சக்தி ஒரு பார்வையை பார்க்க.

''நான் யார் கிட்ட ரிப்போர்ட் பண்ணனும், எனக்கு என்ன வேலை'' என்றான்.

''அப்போ நீ இங்கேயிருந்து போகமாட்ட.''

செல்வம் அசையாமல் நின்றான், பதிலும் பேசவில்லை.

''காலேஜ் அகாடெமிக் சைட்னா பிரின்சிபல்கிட்ட பண்ணனும்! நீ அட்மினிஸ்ட்ரேஷன் சைட், யார்கிட்ட ரிப்போர்ட் பண்ணனும்?'' என்று கேள்வியை அவனிடமே திருப்பினாள்.

''உங்ககிட்ட மேடம்!'' என்று செல்வம் சொல்ல.

''இனிமே அதை செய் போ!'' என்றாள் அதிகாரமாக.

''ஹப்பா!'' என்று செல்வம் ஒருவழியாக சற்று நிம்மதி பெருமூச்சு விட்டு வேலையைப் பார்க்கச் செல்ல. அந்த நிம்மதிக்கு ஆயுட்காலம் குறைவாக இருந்தது.

ஆம்! அந்த ஒரு நாளிலியே அவ்வளவு வேலை கொடுத்தாள் சக்தி. செல்வம் வேலை செய்பவன் தான். கார்த்திக்கும் அவனிடம் அவ்வளவு வேலை வாங்கு வான் தான், ஆனால் கார்த்திக்கிற்கு இணையாக சக்தி வேலையை கொடுக்கவும் செல்வமே சற்று அசந்து தான் போனான்.

மணி இரவு ஏழு என்றது, சக்தி உட்கார்ந்த இருந்தாள் என்று அந்த பிரின்சிபாலும் இன்னும் பலரும் அங்கே இருந்தனர்.

செல்வம் சக்திக்கு தெரிந்தவன் போல அங்கே முதலி லேயே ஒரு செய்தி பரவியிருந்தது. அதனால் அங்கே வந்த மற்ற ஊழியர்கள், கிளம்பலாமா கேளுங்களேன் சார்!" என்று செல்வத்திடம் சொல்ல.

இன்று தான் என்னை நம்பி சில வேலைகளை கொடுத்து இருக்கிறார்கள், இன்றே போய் எப்படி கேட்பது என்று யோசித்தபடியே செல்வம் நின்றான்.

அதுவுமில்லாமல் அவனுக்கு பயங்கர யோசனை வேறு. என்ன தெரியும் இந்த பெண்ணிற்கு, இத்தனை நாட்கள் கார்த்திக் சக்தியை பொத்தி பொத்தி பாதுகாத் தான் என்பது தான் உண்மை.

ஒரு நாள் தான் வீரமணி சக்தியுடன் கல்லூரி வந்தார். அதன் பிறகு அவர் வரவில்லை. இந்த ஒரு வாரமாக சக்தி கல்லூரிக்கு தனியாக தான் வந்தாள். காலையில் பத்து மணிக்கு வந்தால் மாலையில் ஐந்து மணிவரை இருந்தாள். இன்று அதையும் மீறி ஏழுமணி ஆகிவிட்டது.

என்ன செய்கிறாள் என்று செல்வத்திற்கு புரியவில்லை. எப்போதும் கம்ப்யூட்டரில் இருந்தாள், இல்லை போன்

பேசிக்கொண்டு இருந்தாள். மொத்தத்தில் பிசியாக இருந்தாள்.

ஊருக்குச் சற்றுத் தள்ளி இருந்தது கல்லூரி. செல்வம் போய், "மேடம்! வண்டியிருக்கிறவங்களுக்கு பிரச்சனை இல்லை, பஸ்ல போறவங்களுக்கு இந்த நேரத்துக்கு மேல இந்த ஸ்டாப்பிங்ல பஸ் நிக்கறதே கஷ்டம்!" என்றான்.

உடனே கிளம்பிய சக்தி. "நீ மட்டும் நேரா எங்க வீட்டுக்கு வா!" என்று சொல்லி கிளம்பிவிட்டாள்.

"வீட்டிற்கா! எதுக்கு? மறுபடியும் திட்டா!" என்றபடி நொந்துகொண்டு செல்வம் சக்தியின் வீட்டிற்கு சென்றான்.

சக்தியின் கார் வருவதற்கு முன்பே செல்வம் அங்கே போய்விட்டான். அவன் வீட்டின் உள்ளே போகாமல் அந்த பிரமாண்டமான கேட்டின் முன் தான் நின்றிருந்தான்.

ஆங்காங்கே ஆட்கள் இருந்தனர். எல்லோரும் செல்வத்திற்கு தெரிந்தவர்கள் தான் என்றாலும் செல்வம் உள்ளே போகவில்லை. அந்த வீட்டிற்கு கார்த்திக்கை பார்க்க அடிக்கடி வருவான். அவனுக்கு அது புது இடமல்ல.

சக்தியின் கார் வீட்டிற்குள் நுழைய. செல்வமும் அவனுடைய டூ வீலரை உள்ளே விட்டு நிறுத்தினான்.

நிறுத்தி வீட்டைப் பார்த்தவன். அதிர்ந்தே விட்டான்.

பங்களாவின் முன் புறம் ஒரு சைடில் இருந்தது கார்த்திக்கின் ரூம். இப்போது அங்கே ஒரு ரூம் இருந்ததற்கான

அடையாளமே இல்லை. இதை இடித்து ஏதோ ஆர்ச் போல வடிவமைத்து இருந்தனர்.

ஒரு வாரத்தில் இந்த வேலை நடந்திருக்கிறது என்றால் இரவு பகல் பாராமல் வேலை நடந்திருக்க வேண்டும்.

அதையும் விட அதிர்ச்சி. கார்த்திக்கின் ரூம் இருந்த இடத்தில் கட்டி வைக்கப்பட்டிருந்த நாய்கள்.

மூன்று நாய்கள் இருந்தன. எல்லாம் கட்டி வைக்கப் பட்டு இருந்தன.

காரை விட்டு இறங்கிய சக்தியைப் பார்த்ததும் அதில் ஒரு நாய் குலைக்க. "டாமி!" என்ற அவளின் அதட்டலுக்கு அது கட்டுப்பட்டது. அதனருகில் சென்று இரண்டு பிஸ்கட் போட்டு அதனை தடவிக் கொடுத்தாள். இது இரண்டு காலில் நிற்க. அது சக்தியின் உயரத்திற்கே வந்தது.

செல்வத்திற்கு அந்த நாயை பார்த்தால் பயமாக இருந்தது. இப்போ அந்த நாய்கள் செல்வத்தைப் பார்க்க மூன்றும் ஒருங்கே பெரும் குரலெடுத்து குரைத்தது மட்டுமல்லாமல் சங்கிலியை பிய்த்துக் கொண்டு வருவது போல முன்னும் பின்னும். போக செல்வம் இன்னும் பயந்து விட்டான்.

சக்தி ஒரு அதட்டு அதட்ட, அவளின் குரலுக்கு மீண்டும் கட்டுப்பட்டு அமைதி காத்தது. சக்திக்கு நாய்கள் என்றால் மிகவும் இஷ்டம். ஆனால் கார்த்திக்கிற்கு நாய்களை கண்டாலே பிடிக்காது.

கார்த்திக் சக்தியின் வீட்டிற்கு வருவதற்கு முன்பிருந்தே அவளின் வீட்டில் பெரிய அல்சேஷன் வகை நாய் ஒன்று இருந்தது.

சக்திக்கு அதன் மேல் மிகவும் பிரியம். கார்த்திக் வந்த சில மாதங்களில் அது இறந்து போக. அதன் பிறகு சக்தி வாங்கிய ஒன்றிரண்டு நாய்களும் வந்த சில நாட்களி லேயே இறந்து போனது.

அதற்குள் சக்திக்கும் கார்த்திக்கிற்கும் இடையில் ஒரு நல்ல புரிதல் வந்திருக்க. அதன் பிறகு கார்த்திக் எந்த நாயையும் வாங்க அனுமதிக்கவேயில்லை.

"உள்ளே போ செல்வம்!" என்று சக்தி சொல்ல. வீட்டிற்கு உள் நுழைந்தான் செல்வம். சக்தி வந்தவள் நேரே அவளின் ரூம் போய்விட்டாள். "உட்காருங்க" என்று கூட சொல்லவில்லை.

செல்வமும் அவனாக உட்காரவில்லை நின்று கொண்டே தான் இருந்தான்.

அங்கே வந்த வேலையாளிடம், "அய்யா இல்லை" என்று; கேட்டான்.

"அய்யாவும் அம்மாவும் வெளில போய் இருக்காங்க!" என்று அவன் சொன்னான். சக்தியின் மென்மையான குணம் கடுமையாக மாறிவிட்டது போல தோன்றியது.

இப்படி யாரையும் மரியாதை இல்லாமல் பேச மாட் டாள். கார்த்திக்கை ஒருமையில் அழைத்தாலும் அவனை மட்டுமே அப்படி அழைப்பாள். மற்றபடி வேறு யாரை யும் அழைக்க மாட்டாள். இப்போது?

முன்பெல்லாம் செல்வம் வீட்டிற்குள் வந்தாலே, "உட்காருங்க!" என்று சொல்லி அடுத்த நிமிடம் குடிக்க தண்ணீர் வரும். பின்பு காபியோ, டீயோ, குளிர்பானமோ, எதுவே ஒன்று குடிக்க வரும். இப்போது அவனை உட்கார் என்று கூடச் சொல்லவில்லை.

சக்தியின் இயல்பு குணங்கள் பின்னுக்கு தள்ளப்பட்டு விட்டதாக செல்வத்திற்கு தோன்றியது.

ஒரு ஐந்து நிமிடத்திலேயே சக்தி வந்து விட்டாள்.

அமர்ந்தவள். செல்வத்தை பார்த்து, ''அவனுக்கு போன் பண்ணு!'' என்றாள்.

''அவன்'' என்றதுமே, ''எவன்'' என்று செல்வத்திற்கு புரிந்தது. செல்வத்திற்கு பதட்டம் ஆனது. என்ன வரப் போகிறதோ தெரியவில்லையே. இந்த பெண்ணானால் வார்த்தையால் என்னைக் குத்தி கிழிக்கிறது.

பாஸ்ஸானால் அடிப் பின்னி எடுக்கிறார். ''வாங்குன அடியில ஒரு வாரமா ஒரு லெக் பீஸ் கூட கடிக்க முடியமா, நேத்து தான் ஒன்னை கடிச்சேன்! அது பொறுக்கலையா இவங்களுக்கு!'' என்பது போல சக்தியை பார்க்க.

அவனின் பாவமான பார்வையை பார்த்து எல்லாம் சக்தி இளகவில்லை. ''போன் பண்ணு!'' என்றாள் அதிகாரமாக.

செல்வம் கார்த்திக்கிற்கு போன் செய்த நேரம் தான். இரவு உணவு சாப்பிட அங்கே வாசுகியின் வீட்டில் எல்லோரும் அமர்ந்த இருந்தனர்.

பத்ரிநாத், கார்த்திக், வைஷ்ணவி, சுமித்ரா, வாசுகி என்று எல்லோரும் டைனிங் டேபிளில் இருந்தனர்.

வாசுகி எப்போதும் அந்த பழக்கத்தை கடைபிடித்தார். காலை நேரம் பரபரப்பானது ஒன்றுகூட முடியாது. மதியம் எல்லோருக்கும் அவரவர் வேலை இருக்கும் இல்லை கல்லூரியில் இருப்பார்கள்.

அதனால் இரவு உணவு சேர்ந்து தான் உண்பது. இதை வந்த நாளில் இருந்து கார்த்திக்கிடம் சொன்னாலும் அவன் எப்போதும் அதை கடைப்பிடிக்க மாட்டான். வேலை ஏதாவது வந்துவிடும் இல்லை பசியில்லை அப்புறம் உண்ணுகிறேன் என்று விடுவான்.

இன்றைக்கு தான் அவன் வந்து உட்கார்ந்தான். அவன் முன் ப்ளேட் வைக்கப்பட்ட நேரம் செல்வத்தின் போன் வந்தது. ஒரு வாரமாக தன்னை எதற்கும் கூப்பிடாதவன் இப்போது கூப்பிடுகிறான் என்றதுமே பதட்டம் தொற்றிக்கொண்டது.

அதற்குள் வாசுகி, ''என்ன வைக்கட்டும் கார்த்திக்'' என்று கேட்க.

''அம்மா! கொஞ்சம் அமைதியா இருங்க!'' என்றான் பட்டென்று. வாசுகிக்கு முகம் சுருங்கிப் போயிற்று. அங்கிருந்த எல்லோரும் அதைப் பார்த்து இருந்தனர்.

உடனே போன் எடுத்தவன், ''சொல்லுடா!'' என்றான்.

''மேடம் உங்க கூட பேசணுமாம்'' என்றான் செல்வம்.

சக்தியா? தன்னிடம் பேசுகிறாளா? இன்னும் குழப்பம் முகத்தில் படிய ''சக்தி மேமா?'' என்றான் உறுதி படுத்திக்கொள்ள.

''ஆமாம்'' என்று செல்வம் சொல்ல.

''குடு'' என்று சொல்லி அந்த இடத்தை விட்டு எழுந்து போனான்.

அங்கிருந்தவர்களுக்கு அவன், ''சக்தி மேமா'' என்று கேட்டது காதில் நன்றாக விழுந்தது. வைஷ்ணவியின் முகத்தில் கடுமை பரவ. சுமித்ராவின் முகத்தில் பிடித்தமின்மை பரவியது.

பத்ரிநாத்திற்கு சக்தி யாரென்பது எல்லாம் தெரிய வில்லை. அவர் பாட்டிற்கு உணவு உண்ண ஆரம்பித் தார். வைஷ்ணவியும் சுமித்ராவும் வாசுகியும் கார்த்திக் வரு வதற்காக அவர்களும் உணவு உண்ணாமல் காத்திருந்தனர்.

அங்கே செல்வத்திடம் இருந்து போனை வாங்கினாள் சக்தி.

''சுவிஸ் அக்கௌண்ட்ல எவ்வளவு பணம் இருக்கு?'' என்றாள் எடுத்தவுடனே.

கார்த்திக் அதற்கு பதில் சொல்லாமல், ''எப்படி இருக்கீங்க மேம்'' என்றான்.

சக்தி அவனின் அந்த கேள்விக்கு பதில் சொல்ல வில்லை. மீண்டும் ''அக்கௌண்ட்ல எவ்வளவு இருக் குன்னு கேட்டேன்'' என்றாள் கடினமாக.

இந்த முறை கார்த்திக் எவ்வளவு இருக்கிறது என்று சொல்ல.

''அந்த பணம் ஃபுல்லா எனக்கு இங்க இண்டியால வேணும்'' என்றாள்.

''ஏன்? எதற்கு?'' என்று கார்த்திக் அதிர்ச்சியாக கேட் டான். நிறைய பணம். பல நூறு கோடி பணம்.

''எதுக்குன்னு உனக்கு நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை'' என்றாள்.

மூச்சுக்கு முன்னூறு தரம் கார்த்திக் என்ற வார்த் தையை சொல்லும் அவள், இப்போது மிகவும் கவனமாக இருந்தாள் அந்த பேரை சொல்லக் கூடாது என்று.

கார்த்திக்கும் கவனித்தான் சக்தி அவன் பேரை சொல் லவே இல்லை என்பதை.

''எதுக்கு?'' என்றான் மறுபடியும் குரலுயர்த்தி கார்த்திக்.

''உன்கிட்ட சொல்லணும்னு அவசியமில்லை. எனக்கு இங்க பணம் வேணும். அது வைட் மணியா இருந்தா பேங்க் ட்ரான்ஸ்ஷாக்ஷன் நானே பண்ணிடுவேன். அது வைட் மணியா இருக்கும்னு எனக்கு தோணலை'' என்றாள்.

''ஆமாம், அந்த மணிக்கு எந்த அக்கௌண்ட்டும் கிடையாது!'' என்றான் கார்த்திக்.

''அது தான் உன்கிட்ட கேட்கறேன், எனக்கு அந்த பணம் இங்க வேணும்'' என்றாள்.

''எதுக்குன்னு சொல்லாம பணம் கண்டிப்பா இங்க வராது'' என்றான் கார்த்திக்கும் உறுதியான குரலில்.

சக்திக்கு கண்மண் தெரியாத கோபம் வந்தது. ''எங்க பணம், நாங்க என்ன வேணா செய்வோம், உன்கிட்ட சொல்ல முடியாது.''

கார்த்திக் அசரவேயில்லை. ''நான் இல்லாம அந்த பணம் உங்களுக்கு வரலை.''

''நானும் அதையே திருப்பிச் சொல்வேன், எங்க கம்பெனி இல்லாம உனக்கும் பணம் வரலை.''

''எதுக்குன்னு சொல்லாம கண்டிப்பா இங்க வராது!'' என்றான் மீண்டும் உறுதியுடன்.

அவனின் குரலில் இருந்த உறுதியைப் பார்த்தவள் முயன்று கோபத்தை அடக்கி. ''ப்ளாக் மணி எல்லாம் வைட் ஆக்கணும். அந்த மணிய அக்கௌண்ட்ல கொண்டு வரனும். அதுக்கு டாக்ஸ் பே பண்ணனும்'' என்றாள்.

அவளின் பேச்சைக் கேட்ட கார்த்திக்கிற்கு கோபம் கட்டுக்கடங்காமல் வந்தது. ''முட்டாளா நீங்க'' என்று சீறினான். ''அவ்வளவு பணத்தை வைட் பண்ணினா எங்கிருந்து வந்ததுன்னு கேள்வி வரும். எல்லோரும் மாட்டுவோம்'' என்றான்.

''நான் வராம பார்த்துக்கறேன்'' என்றாள் சக்தியும் பதிலுக்கு சற்றும் சீற்றம் குறையாமல்.

''எப்படி? எப்படி பார்த்துக்குவீங்க? என்ன பண்ணப் போறீங்கன்னு சொல்லுங்க?'' என்றான் அதட்டலாக கார்த்திக்.

''சொல்ல முடியாது! எனக்கு பணம் வேணும்!''

''சொல்லாம என்னால இங்க கொண்டு வர முடியாது.''

''நானே பார்த்துக்குவேன், வீணா தேவையில்லாம ரிஸ்க் வேண்டாம்னு பார்க்குறேன்.''

''என்ன? என்ன பார்ப்பீங்க? நீங்க எப்படி கொண்டு வருவீங்க?'' என்றான் அவளுக்கு ஒன்றும் தெரியாது என்று நினைத்து.

''ஏன்? ஏன் கொண்டு வர முடியாம? அங்க இருக்குற ஆளுங்க கிட்ட பணம் கொடுத்தா அவன் இங்க இருக்குற அவன் ஆளு கிட்ட சொல்லி எனக்கு பணம் கொடுக்க சொல்ல போறான். அதுக்குன்னு சில பேர் இருக்காங்க. யாருன்னு கூட லோகேட் பண்ணிட்டேன். என்ன தெரியாதவங்கன்னு அநியாயத்துக்கு கமிஷன் எடுப்பாங்க அவ்வளவு தானே!'' என்றாள்.

கார்த்திக் வாயடைத்து போனான். நிஜம்! அதுதான் நிஜம். ஹவாலா மூலமாக பணம் பரிவர்த்தனை இப்படியும் நடக்கும்.

''தேவையில்லாம ஏதாவது பண்ணி மொத்தமா அழிச்சிடாதீங்க! அழிக்கறது ரெண்டாவது விஷயம்! பிரச்சனையாச்சு நிறைய சிக்கல்ல மாட்டிக்குவோம். தோண்டத் தோண்ட வந்துக்கிட்டே இருக்கும்'' என்று நிதர்சனத்தை புரிய வைக்க முயன்றான்.

அவள் காதிலேயே போட்டுக்கொள்ளவில்லை, ''இதைத்தான் எங்கப்பாவும் சொல்லுறார். தேவை யில்லாம ரிஸ்க் எடுக்க வேண்டாம், பிரச்சனை ஆகிடுச் சுன்னா மொத்த பணமும் போயிடும்னு பயப்படறார். அதான் உன்கிட்ட பேசறேன்'' என்றாள் சக்தி மீண்டும்.

''என்ன பண்ணப்போறீங்கன்னு சொல்ற வரைக்கும் பணம் இங்க வராது. ஏதாவது தப்பாச்சுன்னா வீணா எல்லோரும் மாட்டிக்குவோம்'' என்றான் கார்த்திக் மீண்டும் மீண்டும்.

''சொல்ல முடியாது'' என்றாள் பிடிவாதமான குரலில்.

''அப்போ பணம் வராது!'' என்றான் கார்த்திக்கும் பிடிவாதமான குரலில்.

''கார்த்திக்!'' என்று கத்தினாள். அவளையும் மீறி அவன் பேர் வந்தது. கோபம் மண்டையின் உச்சி வரை ஏறியது சக்திக்கு.

''நான் என்ன பண்ணுவேன்னு உனக்குத் தெரியாது கார்த்திக்!'' என்றாள்

''என்ன பண்ணுவீங்க?'' என்று கார்த்திக்கும் திரும்ப கேட்க.

''அதை நீ செல்வத்துக்கு கிட்ட கேளு'' என்று போனை செல்வத்திடம் கொடுத்தாள்.

செல்வம் இந்த காரசாரமான விவாதத்தை ஒருவித பயத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனிடம் போனை கொடுத்த சக்தி. கண்ணி மைக்கும் நேரத்தில் ஹாலின் டீபாயில் ஒரு ஆப்பிளும் அதை கட் செய்ய ஒரு கத்தியும் இருக்க. அதை எடுத்து தன் கையில் ஒரே கிழியாக கிழித்தாள்.

ரத்தம் கொட்டியது.

''ஐயோ! என்ன பண்றீங்க? ரத்தம் கொட்டுது'' என்று செல்வம் கத்த.

அங்கே கார்த்திக் பதறினான், அவனையும் மீறி. போன் என்பதையும் மறந்து கத்தினான், ''டேய்! என் னடா? என்னடா நடக்குது?'' என்று. கார்த்திக்கின் கத் தலை கேட்டு பத்ரிநாத்தை தவிர எல்லோரும் அவனரு கில் என்னவோ ஏதோவென்று விரைந்து வந்தனர்.

''பாஸ் கையை கிழிச்சுக்கறாங்க!'' என்று செல்வம் அலறினான். அவன் சொல்லும் போது பக்கத்தில் இன் னொரு இடத்தில் கிழித்தாள் சக்தி.

''மேடம் செய்யாதீங்க'' என்று போனை பிடித்துக் கொண்டே செல்வம் பதறி அவளருகில் போக.

''கிட்ட வராத! அங்கயே நில்லு. அவன் கிட்ட சொல்லு அவன் சரின்னு சொல்ற வரைக்கும் கிழிச்சிக்கிட்டே இருப்பேன்னு சொல்லு!'' என்றாள்.

மீண்டும் கிழிக்க போக.

''ஐயோ! இருங்க மேடம்!'' என்று கத்தினான் செல்வம். வீட்டில் இருந்த வேலையாட்கள் ஓடி வந்தனர்.

கார்த்திக்கிற்கு உயிரே போனது.

''பாஸ் சரின்னு சொல்ற வரைக்கும் இப்படித்தான் செய்வாங்களாம்! ரத்தம் கொட்டுது பாஸ்!'' என்று பதற.

''சரின்னு சொல்லுடா!'' என்று கார்த்திக் சொல்லும் போதே கார்த்திக் காரில் அமர்ந்து அவனின் வீட்டின் கேட்டை தாண்டி இருந்தான்.

கார்த்திக் பதட்டமாக ஓடுவதை அவனின் குடும்பமே வேடிக்கை பார்த்தது.

''ஐயோ மேடம்! கையை தூக்கி பிடிங்க!'' என்று செல்வம் பதறினான். துணியை கொண்டு கட்டலாம் என்றால் அவள் செல்வத்தை அருகில் வர விடவில்லை. ரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது.

அங்கே சக்திக்கு உயிர்போகும் வலி இருந்தாலும். வலியை பொறுத்துக்கொண்டு நின்றிருந்தாள். அவளின் முகத்தில் வலியையும் மீறிய கடினத்தன்மை தென் பட்டது. நான் நினைத்ததை செய்தே தீருவேன் என்ற உறுதி தெரிந்தது.

சக்திக்கு தெரியும், கார்த்திக்கை வேறு எந்த செய்கை யாலும் பணிய வைக்க முடியாது. கெஞ்சினாலும் வேலைக்காகாது, மிஞ்சினாலும் வேலைக்காகாது.

சக்தி அவனின் பலவீனம் என்ன? எங்கே அடித்தால் அவனுக்கு வலிக்கும் என்று பலமுறை இந்த ஒரு வாரமாக யோசித்து விட்டாள்.

அவளுக்கு கிடைத்த விடை அவள் தான்! அவளே தான்!

# 14

தூண்டிற் புழுவினைப்போல் - வெளியே
சுடர் விளக்கினைப்போல்,
நீண்ட பொழுதாக - எனது
நெஞ்சந் துடித்ததடீ.
கூண்டுக் கிளியினைப்போல் - தனிமை
கொண்டு மிகவுநொந்தேன்
வேண்டும் பொருளையெல்லாம் - மனது
வெறுத்து விட்டதடீ.

- பாரதி

செல்வம் அவளைப் பார்த்து பதறிக் கொண்டிருக்க. கார்த்திக் காரில் வேகமாக வந்து கொண்டிருக்க. அசையாமல் நின்றிருந்தாள் சக்தி.

“என்ன சொன்னான் அவன்?” என்றாள்.

“சரின்னு சொல்லிட்டாங்க மேடம்! கையை ரத்தம் வராம கட்டுங்க மேடம்!” என்று செல்வம் கெஞ்சலாகச் சொல்ல.

“ஒண்ணும் ஆகாது கொஞ்சம் ரத்தன் தான் போகும்” என்றபடி அவள் அமர்ந்தாள்.

சமையல் வேலை செய்யும் முனியம்மா, ஒரு ஈரத் துணியை விரைவாக கொண்டு வந்தார். சக்தி மறுக்காமல் கையை நீட்டினாள்.

அவள் கிழித்துக்கொண்ட இடம் மணிக்கட்டிற்கும் முழங்கைக்கும் நடுவில் இருந்த இடம். அந்த இடத்தில் துணியை சுற்றினார்.

கையை தூக்கியும் பிடித்தாள். சுற்றிலும் வேலை யாட்கள் நிற்பதை பார்த்தவள், ''ஒண்ணுமில்லை போங்க! நான் பார்த்துக்கறேன்!'' என்றாள்.

அவளிடம் பேசும் தைரியம் அங்கே யாருக்கும் இல்லை. செல்வம் சொல்வதை அவள் கேட்பதாய் இல்லை. கருப்பண்ணன் தான் பேசினார். ''ஹாஸ்பிடல் போகலாம்மா'' என்று சொன்னார்.

''போகலாம்! அப்பா வந்துடட்டும்!'' என்று சக்தி சொல்ல.

''அப்பாவும் அம்மாவும் காரியத்துக்கு போயிருக் காங்க! அவங்க எடுத்ததுக்கு அப்புறம் தான் வருவாங்க. உங்க பெரியப்பா வீட்டோட சம்பந்தி. நாம சத்தமில் லாம போயிடலாம்.''

''போகலைன்னா அப்பா ஏன் போன் பண்ணலைன்னு கேட்பாங்க. இப்போ போன் பண்ணினா அவங்க பத றிடுவாங்க, அங்க விஷயம் தெரியறதுக்கு வாய்ப் பிருக்கு. கேள்விப்பட்ட என்னவோ ஏதோன்னு எல்லோரும் நினைப்பாங்க, நாம போகலாம்'' என்று பொறுமையாக விளக்கம் சொன்னார்.

சக்தி போகலாமா? வேண்டாமா? என்று யோசிக்கும் போதே கார்த்திக்கின் கார் உள்ளே நுழைந்திருந்தது.

அவன் காரை விட்டு இறங்கவும், அவனுக்கு மிகுந்த அதிர்ச்சி. அவன் இருந்த ரூம் இல்லாதிருந்தது

மட்டுமல்ல. அங்கே நாய்கள் கட்டி வைக்கப்பட்டிருந்தது இன்னும் அதிர்ச்சி.

''என்ன ஒரு அவமானம்? நானும் நாயும் இவர் களுக்கு ஒன்றா. இதற்கு அவர்களால் முடியாவிட்டாலும் என்னை ஆள் வைத்தாவது அடித்திருக்கலாம். எதை வைத்து அவமானப்படுத்தியிருந்தாலும் எனக்குப் பிரச்சனை யில்லை. அசிங்கமாகத் திட்டியிருந்தால் கூட கேட்டுக் கொண்டிருப்பேன். நாய் எனக்குப் பிடிக்காத ஒன்று.

யாருக்கு இது தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் சக்திக்கு நன்றாகத் தெரியும். ஏன் இப்படிச் செய்தாள்.''

முகம் கோபத்தில் ஜொலித்தது.

உள்ளே வாவென்று சொல்ல வேண்டும் என்று அவன் யாரையும் எதிர்பார்க்கவில்லை. அவனைத் தடுக்கும் தைரியமும் யாருக்கும் இல்லை. அவன் வீட்டிற்குள் நுழைந்தான்.

அங்கே ஹாலில் சக்தி அமர்ந்திருக்க, அவளைச் சுற்றி செல்வம், கருப்பண்ணன், முனியம்மா மூவரும் நின் றிருந்தனர்.

செல்வம் தான் முதலில் கார்த்திக்கை பார்த்து, ''பாஸ்'' என்றான்.

சக்திக்கு அவன் இங்கே வருவான் என்று மனம் ஒரு புறம் சொன்னாலும். அவன் செய்த காரியம் அவனை இங்கே வீட்டிற்கு வராமல் தடுக்கும் என்று நினைத் திருந்தாள். அப்படியெல்லாம் கார்த்திக்கிற்கு ஒன்று மில்லை போல. அவன் வந்தான்.

அவன் முகம் அவ்வளவு இறுக்கமாக இருந்தது. கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தான்.

அவளுக்கு என்னவோ ஏதோவென்று பதட்டமாக ஓடி வந்தவன். நாய்களைப் பார்த்ததும் முற்றிலும் மாறி யிருந்தான். கோபம் உள்ளுக்குள் கனன்று கொண் டிருந்தது. பதட்டம் நிதானமாக மாறியிருந்தது.

சக்தி கையில் கட்டு போடப்பட்டிருப்பதையும். அவள் கையை தூக்கி பிடித்திருப்பதையும் பார்த்தான். அவன் பார்க்கப் பார்க்க கையை சுற்றியிருந்த வெள்ளை துணி செந்நிறமாக மாறிக் கொண்டிருந்தது. ரத்தம் நிற்கவில்லை என்று புரிந்தது.

நேராக அங்கே சென்றவன், கருப்பண்ணனிடம், ''எங்கே அய்யாவும் அம்மாவும்'' என்றான்.

''ஒரு காரியம் போயிருக்காங்க'' என்றார் அவர்.

''எழுந்திருங்க ஹாஸ்பிடல் போகலாம்'' என்றான் சக்தியை பார்த்து.

''இல்லை நான் வரலை'' என்று சக்தி.

ரத்தம் நிற்காமல் வந்து கொண்டிருந்தது சுற்றி இருந்த துணியை பார்த்தாலே தெரிந்தது. அவளின் நிலை பார்த்து கோபம் மட்டுப்பட, ''ப்ளீஸ், அடம் பிடிக்காதீங்க வாங்க!'' என்றான்.

சக்தி அவன் பதறுவான் என்று நினைத்ததற்கு மாறாக அவன் நிதானமாக இருந்தது. கையின் வலியை விட அதிக வேதனையைக் கொடுத்தது. இவ்வளவு நேரமாக இருந்த தைரியமெல்லாம் குறைந்து சோர்வைக் கொடுத்தது.

''எனக்கொன்றென்றால் இவனுக்கு ஒன்றுமேயில் லையா? என் கணிப்பு பொய்யா?'' கண்களில் நீர் நிறைந்தது. மற்றவர்கள் முன் அழுதுவிடுவோமோ என்று கழிவிரக்கத்தால் எழுந்து உள்ளேப் போனாள்.

அவள் ஹாலை தாண்டியதுமே. அவள் பின்னே போன கார்த்திக். "ஹாஸ்பிடல் போகலாம்னு சொன்னேன்" என்றான்.

எல்லோருக்கும் அவர்கள் இருக்கும் இடம் கண்ணுக்கு தெரிந்தது, ஆனால் பேசுவது கேட்கவில்லை.

அமைதியாக நின்றிருந்தாள்.

''கையை தூக்கிப் பிடிங்க'' என்று அவன் சொல்ல. கேட்காமல் கையை கீழேயே விட்டிருக்க ரத்தம் அதிகமாக வர ஆரம்பித்தது. டென்ஷனானவன் அவனே கையை தூக்கி பிடித்தான். இதுவரை அவன் சக்தியை எதற்காகவும் தொட்டதில்லை என்பது தான் உண்மை.

விளையாட்டுப்போல கை கொடுத்து உதவியது கூட கிடையாது. ஒரு முறை திருமணத்திற்கு போன போது அவள் கொலுசு புடவையில் மாட்டிக்கொள்ள அதை எடுத்து விட்டிருக்கிறான். அப்போதும் மிகவும் ஜாக்கிரதையாக புடவை கொலுசு இவற்றில் தான் கை பட்டது.

''விடு'' என்று சொல்லி அவனிடமிருந்து உடனே கையை விலக்கியவள். அவளே தூக்கிப் பிடித்தாள்.

''ப்ளீஸ்! போகலாம் வாங்க!'' என்று சற்று கெஞ்சலான குரலிலேயே கேட்டான். அவளுக்கு அழுகையை அடக்க முடியவில்லை. சிறு விம்மல் அவளையும் மீறி வெளிப்பட்டது.

''இப்போ வரலைன்னா தூக்கிட்டுப் போவேன்'' என்று சற்று அதட்டலாகச் சொல்லவும், வலி வேறு அதிகமாகவும் கிளம்பினாள்.

கருப்பண்ணன் காரை எடுக்க. சக்தி பின்னால அமர. கார்த்திக் முன்னால் அமர்ந்தான்.

செல்வம் அங்கேயே இருந்தான்.

எல்லோரும் அவர்கள் கிளம்பும் வரை வாசலிலேயே தான் இருந்தனர்.

கார்த்திக் ஹாஸ்பிடலில் சக்தியுடனே தான் இருந்தான். அவளை விட்டு நகரவில்லை. டாக்டர் கார்த்திக்கிடம், ''நான் ஸ்டிச் போடனும்! வெளில இருங்க சார்!'' என்று சொன்னார்.

அப்போது கூட போகவில்லை. ''நான் இங்கேயே இருக்கேன்!'' என்று விட்டான்.

அவளை உட்கார வைத்து, கையில் மரத்துப் போக ஸ்ப்ரே அடித்து. தையல் போட ஆரம்பிக்க. சக்தி விடாமல் அவர்கள் தையல் போடுவதை பார்த்து இருந்தாள்.

சதையை பிடித்து இழுத்து தையல் போடுவது கார்த்திக்கிற்கே ஒரு மாதிரி இருந்தது. இரண்டு இடத்தில் வேறு தையல் போட வேண்டும். அதுவும் பக்கத்தில் பக்கத்தில் இருப்பதால் நடுவில் இருக்கும் தோல் இருபுறமும் இழுபடும்.

தானாக இழுத்துக்கொண்ட வேதனை, சக்தியை பார்த்து அவனையறியாமல் ஒரு பெருமூச்சு வெளியேறியது.

அங்கே மும்முரமாக டாக்டர் தையல் போட்டு கொண்டிருப்பதால். பேசி திசை திருப்ப விரும்பாமல். சக்தியின் முகத்தில் கைவைத்து, அவள் அந்த தையல் போடுவதை பார்க்காத வணணம் முகத்தை வேறு புறம் திருப்பி விட்டான்.

அவன் கை எடுத்தவுடன் திரும்பவும் சக்தி அதன் புறம் முகத்தை திருப்ப. இப்போது முகத்தை திருப்பி

பிடித்தவன், கையை எடுக்கவேயில்லை. சக்தி திரும்ப முயன்றாலும் திரும்ப முடியாதபடி இறுக்கமாகப் பிடித்துக் கொண்டான்.

சற்று நேரம் முயன்று பார்த்த சக்தியும் விட்டுவிட்டாள்.

டாக்டர் முடித்து நிமிர்ந்த போது தான் அவன் முகத்தை விட்டான். அவன் முகத்தை பிடித்திருந்த இடம் கன்றிச் சிவந்திருந்தது.

காரில் திரும்ப வரும்போது நடுவழியில் ஒரு ஓரமாக காரை நிறுத்த சொன்னவன். "கருப்பண்ணா கொஞ்சம் வெளிய நில்லுங்க!" என்றான்.

கருப்பண்ணன் சக்தியைப் பார்க்க. அவள், "சரி" என்பது போல தலையசைக்க. அவர் இறங்கியதுமே, "ஏன் இப்படி பண்றீங்க?" எதுக்கு இவ்வளவு வலியை தேடிக்கறீங்க" என்று சற்று அதட்டலாகக் கேட்டான்.

"நீ எனக்கு குடுத்த வலியை விட இது அதிகமில்லை."

"ப்ச்! அதைப் பேசி பிரயோஜனமில்லை. என்கிட்ட அந்த வழியைத் தவிர வேற இல்லை. என்னை நான் நியாயப்படுத்தலை. ஜஸ்ட் சொல்றேன்! அவ்வளவுதான்!"

"என்ன சொல்ற நீ? என்ன சொல்ற நீ? சொத்துக்காக தான் வந்தேன்னா அதை மட்டுமே பார்த்து இருக்கணும்! என்னை அவ்வளவு அக்கறையாக கவனிச்சி இருக்கக் கூடாது!" என்றாள்.

"நீங்க எங்கப்பாவோட பிரண்டோட பொண்ணு. அவர் மேல எனக்கு ரொம்ப மரியாதை இருக்கு. அவர் பொண்ணா யாராயிருந்தாலும் இப்படி தான் பார்த்திருப்பேன்."

''அப்போ நான் உனக்கு யாருமேயில்லை. உங்கப்பா வோட பிரண்டோட பொண்ணுன்னு தான் என்னை பார்த்த. ஆமா எப்படி பார்த்துகிட்ட? அக்கா மாதிரியா? இல்லை தங்கச்சி மாதிரியா?''

''ஏன்? எப்பவாவது நான் உங்ககிட்ட ஏதாவது வகை யில் தப்பா நடந்துகிட்டு இருக்கேனா'' என்று அவன் கோபமாகக் கேட்டான்.

பிறகு அவனே, ''தேவையில்லாததைப் பேசவேண் டாம்'' என்று முடித்து விட்டான்.

''எனக்கு இது தான் தேவை! என்ன நினைச்சு என் கிட்ட வயசை கம்மியா சொன்ன! நான் என்ன பண் ணிடுவேன்னு அப்படி ஒரு முன்னெச்சரிக்கை நட வடிக்கை எடுத்த!'' என்று அவள் கோபத்தோடு கூடிய வருத்தமாகக் கேட்டாள். அவளையும் மீறி குரல் தழுதழுத்தது.

''அதையேன் நீங்க அப்படி எடுக்கறீங்க. உங்களுக் காக சொல்லலை! எனக்காகதான் சொன்னேன் நினைக் கலாம் இல்லையா!'' என்றான்.

''உனக்கு பேசவா கார்த்திக் கத்துக்கொடுக்கணும்! பேசிய எங்களை மயக்கி வெச்சிருந்தியே!''

கார்த்திக் அதைப் பற்றி மேலே பேசவில்லை.

''அதென்ன புதுசா நாய்?'' என்று அவன் கேட்கும் போதே அவன் முகம் இறுகியது.

''எனக்கு பிடிக்கும்! அதனால!'' என்று அவள் சொல் லும்போதே இடைமறித்தான்.

''பிடிக்கக் கூடாது'' என்று.

''எனக்கு பிடிக்கும்!''

''பிடிக்கக் கூடாது!'' என்று ஆக்ரோஷமாக கத்தியவன்.

''அது நாளைக்கு உங்க வீட்ல இருக்கக் கூடாது. மீறி இருந்தது. மூணு நாய்ங்களை கொன்ன புண்ணியம் உங்களை தான் சேரும்'' என்றான். சொல்லும்போது அவன் குரலில் இருந்த வெறி சொன்னதைச் செய்வேன் என்று நிச்சயம் சொன்னது.

''என்ன உளர்ற?'' என்றாள்.

''உளறலை! நான் வந்த போது உங்க வீட்ல இருந்த நாய் கொஞ்ச மாசத்துல எப்படி செத்தது. அதுக்கப் புறமும் வந்த நாய் ஒண்ணு கூட ஏன் தங்கல, எல்லாமே ஏன் செத்தது'' என்று கேள்வி கேட்டான்.

அவன் கேட்டதிலேயே தெரிந்தது. அது என்னால் தான் என்று.

மிகுந்த அதிர்ச்சி சக்திக்கு, ''என்ன?'' என்று ஒரு வார்த்தை கேட்டவள் அப்படியே கல்லாய் சமைந்து விட்டாள்.

பிறகு இருவருக்குள்ளும் பேச்சே இல்லை.

வீடு வந்த போது வீரமணியும் தெய்வானையும் வந்து சக்திக்காக வாசலிலேயே காத்திருந்தனர். செல்வம் அவரிடம் விவரத்தை சொல்லியிருந்தான்.

சக்தி இறங்கியதும் இருவரும் அவளையேப் பார்த் தனர். அவர்களால் விரைந்து கூட வரமுடியவில்லை. அவளின் செய்கையால் ஓய்ந்துப்போயிருந்தனர்.

''சாரிப்பா'' என்று வீரமணியின் அருகில் போனாள். தெய்வானை, ''என்ன சக்தி இப்படி பண்ணிட்ட'' என்று கண்கலங்க கேட்டார்.

''சும்மா மா ஒண்ணுமில்லை'' என்று சிரிக்க முயன்றாள்.

''பட்டதெல்லாம் போதாதுன்னு நீயேன் சக்திம்மா புதுசா இழுத்துவிடற!'' என்று வருத்தமான குரலில் கேட்டார் வீரமணி.

அவரருகில் வந்தான் கார்த்திக். அவனைப் பார்த்ததும் வீரமணி முகத்தைத் திருப்ப. அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாத கார்த்திக், ''அய்யா நான் உங்க கிட்ட பேசணும்! நீங்க இப்போ இவங்களை கவனிங்க! நான் காலைல வர்றேன்!'' என்று அவரின் பதிலைக் கூட எதிர்பார்க்காமல் சென்று விட்டான்.

வீரமணியும் தெய்வானையும் கார்த்திக் சென்ற பிறகு மாறி மாறி வருத்தப்பட. அவர்களைச் சமாளிப்பது பெரும் பாடாக இருந்தது சக்திக்கு. பேசாமல் வேறு ஏதாவது ஸ்டன்ட் செய்திருக்கலாமோ என்று யோசிக்கும் அளவிற்கு வந்துவிட்டாள்.

ஒரு வழியாக தூங்கப் போனாள். அவள் சென்ற ஐந்து நிமிடத்திலேயே தெய்வானை அவளின் ரூமிற்கு வந்து விட்டார், 'ஏன் சக்தி இப்படி பண்ணின?'' என்ற கேள்வியோடு.

''சும்மா அம்மா, அவனைப் பயப்படுத்தறதுக்காகச் செய்தேன்.''

''உன்னை வருத்திக்கிட்டு அவனைப் பயப்படுத்தணும்னு என்ன அவசியம் சக்தி.''

''அவன் வேற எதுக்கும் பயப்பட மாட்டானேம்மா'' என்று சொன்னவளின் முகத்தை அப்போதுதான் நன்றாகப் பார்த்த தெய்வானை.

"இது என்ன கன்னத்துல இப்படி சிவந்து இருக்கு" என்று கேட்டார்.

"என்ன சிவந்திருக்கு" என்று பதிலுக்கு கேட்ட சக்தி. கண்ணாடியில் பார்க்க தாடையின் மேல் பகுதியில் சிவந்திருந்தது. அப்போதுதான் கார்த்திக் அசையாமல பிடித்தது ஞாபகத்திற்கு வர.

"அம்மா தையல் போடும்போது கார்த்திக் முகத்தை அசைய விடாம பிடிச்சிருந்தான்" என்றாள் சிறு முகக் குன்றலுடன்.

சிறிது யோசனையோடு அவளை பார்த்தவர். "சக்திம்மா நான் ஒண்ணு சொன்னா கேட்பியாடா" என்றார்.

"சொல்லுங்கம்மா."

"கார்த்திக் நம்மளை விட்டுப் போயிட்டான். அவனை பிடிச்சு வெக்க ட்ரை பண்ணாத! விட்டுடு! அவனை கோவப்படுதறதுக்காகவோ வருத்தப்படுத்தறதுக் காகவோ உன்னை நீ கஷ்டப்படுத்திக்காத சக்திம்மா" என்றார்.

"சாரிம்மா இனிமே இப்படி பண்ண மாட்டேன்" என்றாள் கமறிய குரலில்.

"சக்தி, அவனுக்காக உன்னை நீ கஷ்டப்படுத்திக்கு வியா. யார் சக்தி அவன் உனக்கு? எங்களுக்கு நீ ரொம்ப முக்கியம்டா! உன்னை விட்டா எங்களுக்கு வேற யார் இருக்கா. காயப்படுத்திக்கறதுக்கு முன்ன எங்களை நீ ஒரு நொடி கூட நினைக்கலையா.

அவளின் அம்மாவின் வார்த்தையில் உடைந்தவள். அவரின் மடியில் முகம் புதைத்துக் கொண்டாள். உடல் அழுகையில் குலுங்கியது.

''அம்மா! ஐ மிஸ் கார்த்திக் மா!'' என்று தேம்பித் தேம்பி அழுதாள்.

''அவன் கூட இருந்தவரைக்கும் ஒண்ணும் தெரியலை! அவன் போன பிறகு எனக்கு நானே எவ்வளவு சமாதானப்படுத்தினாலும், மனசு அவன் தான் வேணும்னு கேட்குது. அவன் நம்மளை ஏமாத்திட்டு போயிட்டான்னு அறிவுக்கு தெரியறது, மனசுக்குத் தெரியலைம்மா'' என்று அழுகையில் கரைந்தாள்.

அவளின் அழுகை தெய்வானையை கலங்கடித்தது. அவருக்கும் அழுகை வரும் போல இருந்தது. ஒற்றை பெண்ணை பெற்று, சீரும் சிறப்புமாய் வளர்த்தது, இதை பார்க்கவா?

''நான் அவன் கிட்ட பேசட்டுமாடா?''

அவசரமாக தலைநிமிர்ந்து, ''என்ன பேசமுடியும் மா'' என்றாள். அப்போதும் பேச வேண்டாம் என்று சொல்லவில்லை.

''என்ன பேசட்டும்?'' என்று அவளிடமே திருப்பிக் கேட்டார்.

''எனக்குத் தெரியலைம்மா'' என்று இன்னும் அழுதாள்.

''இப்படி அழாத சக்தி!'' என்று அவளை கடிந்தவர்.

''இப்படி நீ அழறதுக்கா உன்னை நாங்க அவ்வளவு செல்லமா வளர்த்தோம். நான் கார்த்திக் கிட்ட பேசறேன்.''

''என்ன பேசுவீங்க?'' என்று கண்களில் எதிர்பார்ப்போடு அவரின் செல்ல மகள் பேச அவர் உருகிப் போனார்.

''ஏதோ பேசறேன்! ஆனா பதில் நமக்கு சாதகமா இல்லைன்னா. அவனை நீ விட்டுடணும்! சம்மதமா?'' என்றார்.

"சரி" என்று தலையாட்டியவள். "ஆனா, நான் உன்னை பேச சொன்ன மாதிரியோ, நீ எனக்கு தெரிஞ்சு பேசற மாதிரியோ, அவனுக்குத் தெரியவே கூடாதும்மா" என்றாள் சக்தி.

"தெரியவராது!" என்று அவளுக்கு உறுதி கொடுத் தவர். தன்னுடைய மடியிலேயே அவளை தூங்க வைத் துக்கொண்டார்.

"நான் அப்பாகிட்ட சொல்ல மாட்டேன்! நீயும் அப்பா கிட்ட சொல்லாத! அவர் இதை விரும்ப மாட்டார்" என்று சக்தியிடம் சொன்னார்.

தெய்வானைக்கு தோன்றியது அவருக்கு சாதகமான பதில் கார்த்திக்கிடம் இருந்து வராது என்று. இருந்தாலும் நூற்றில் ஒரு பங்காக வந்துவிட்டால். தன்னுடைய பெண்ணிற்காக இந்த முயற்சியை எடுத்தே ஆக வேண் டிய கட்டாயத்தில் இருந்தார்.

தானும் அவனோடு திருமணத்தைப் பற்றி பேசி அவ ளின் மனதை கலைத்து விட்டோமோ என்று மருகினார்.

அங்கே கார்த்திக்கிற்காக, வாசுகி, சுமித்ரா, வைஷ்ணவி என்று முவருமே காத்திருந்தனர்.

கார்த்திக் அவர்கள் மூவரையும் எதிர்பார்க்கவில்லை. மனதளவில் சோர்ந்து இருந்தான். ரத்தம் நிற்காமல் வந்து கொண்டிருக்க. எப்படியும் கை வலி அதிகமாக இருக்கும் அந்த நிலையிலும் சக்தி தைரியமாக தான் அங்கே அமர்ந்திருந்தாள்.

இவனை பார்த்ததும் அவளின் கண்கள் கலங்க ஆரம்பித்ததையும், அவளின் தைரியம் குறைந்ததையும்

நன்கு உணர்ந்தான் அழுகையை மறைக்க தான் அவள் உள்ளே எழுந்து போனாள் என்று தெரியாதிருக்க அவன் சக்தியை அறியாதவனள்ளவே!

வரும் வரையிலும் அவள் எந்த விஷயத்திற்காக கையறுத்துக் கொண்டாளோ, அதைப் பற்றி பேசவே யில்லை. கார்த்திக்கை பார்த்ததும் அவளின் மனம் வேறெ துவும் சிந்திக்கவில்லை என்பதும் அவனுக்கு நன்கு புரிந்தது.

இப்படி சக்தியை பற்றியே அவன் யோசித்துக் கொண் டிருந்த போது. இவர்கள் மூவரும் அவனை எதிர்ப்பார்த் திருக்கவும் சற்று எரிச்சலாக வந்தது கார்த்திக்கிற்கு.

"ஏன் ரெண்டு பேரும் இங்க உட்கார்ந்திருக்கீங்க. நாளைக்கு காலேஜ் இல்லையா?" என்றான் வைஷ்ண வியையும் சுமித்ராவையும் பார்த்து. அவன் கேட்ட த்வனியே உள்ளே போ என்பதாக தான் இருந்தது.

அவன் அப்படி கேட்கவும் இரண்டு பேருக்குமே வார்த்தை வரவில்லை. வாசுகி தான், "நீ ரொம்ப அவசரமா போனியா! என்னவோ ஏதோன்னு பயந்துட்டோம்!" என்றார்.

"நான் என்ன சின்ன பையனாம்மா. பயப்படற துக்கு?" ஒரு அவசரமான வேலை போனேன்."

"என்ன அவசரமான வேலை."

"தெரிஞ்சே ஆகணுமா."

"ஏன் தெரியக் கூடாத விஷயமா."

"தெரிய வேண்டிய அவசியமில்லைன்னு நினைக் கிறேன்."

''எப்போ இருந்து கார்த்திக் என்கிட்ட இப்படி எடுத் தெரிஞ்சு பேச ஆரம்பிச்ச'' என்றார் சொல்லும்போதே அவரின் கண்களில் நீர் நிறைந்தது.

''அம்மா! ஏன் இப்படி என்னை எல்லோரும் எமோ ஷனல் ப்ளாக்மெயில் பண்றீங்க? இப்படி ஏன் எல்லோரும் அழுது அழுதே என்னை சாவடிக்கறீங்க'' என்று கத்தினான்.

கத்தியவன் தலையை பிடித்துக்கொண்டு அமர்ந்து விட. வாசுகி மௌனமாக அவரின் அறைக்கு போனார்.

''யாரோடு என்னைச் சேர்த்து பேசுகிறான், என்ன இவனின் உயிரை எடுக்கிறேன்'' அவரின் கண்களிலும் கண்ணீர் பெருகியது.

அம்மா அழுதுக்கொண்டு போவது பிடிக்காமல் வைஷ்ணவி கார்த்திக்கிடம் சண்டை போட. ''அண்ணா!'' என்று ஆரம்பிக்க.

கார்த்திக்கின் முகத்தை பார்த்த சுமித்ரா அவளிடம், ''அப்புறம் பேசலாம்!' என்று இழுத்து போனாள்.

கார்த்திக்கிற்கு சக்தியின் வீட்டில் அவனிருந்த இடத்தில் நாய்களை கட்டி வைத்திருந்தது சொல்லொணா வேதனையையும் மன அழுத்தத்தையும் கொடுத்தது.

சக்தி ஒரு புறம். அம்மா ஒரு புறம். அவனின் நினைவு கள் ஒருபுறம். அவன் செய்த செய்கைகள் ஒருபுறம். எல்லாமுமாக சேர்ந்து அவனை கொல்லாமல் கொன்றது.

''அப்பா!'' என்று அவனின் வாய் முணுமுணுக்க. தலை சோபாவில் சாய. கண்களை மூடிக்கொண்டான். கண்களில் நீர் வழிந்தது.

நெஞ்சே நெஞ்சே மறந்துவிடு
நினைவினை கடந்துவிடு
நெஞ்சே நெஞ்சே உறங்கிவிடு
நிஜங்களை துறந்துவிடு

என்மேல் யாரும் கல் எறிந்தால்
சிரிக்கவும் பழகிக்கொண்டேன்
உள்ளத்தை மறைத்தேன்
உயிர்வலி பொறுத்தேன் என்
சுயத்தை எதுவோ
சுட்டதடி வந்தேன்.



# 15

சென்றதினி மீளாது, மூட ரேநீர்
எப்போதுஞ் சென்றதையே சிந்தை செய்து
கொன்றழிக்குங் கவலையெனும் குழியில் வீழ்ந்து
குமையாதீர்!

- பாரதி

காட்சி ஒன்று :

''கார்த்திக்'' என்ற அப்பாவின் குரலை கேட்டதும் ஓடி வந்து அவர் மீது தாவி ஏறினான் ஊட்டி கான் வென்டில் ஆறாவது படிக்கும் கார்த்திக்.

''அப்பா'' என்று அவரை கழுத்தோடு அணைத்துக் கொண்டான். நல்ல உயரம் இருந்தான் கார்த்திக் இருந்தாலும் சிறுபையன் போல அப்பாவின் கழுத்தைப் பிடித்து தொங்கினான்.

''அம்மா எங்கே அப்பா'' என்ற அவனின் ஆர்வமான விசாரிப்பிற்கு.

''வரலை கார்த்திக்! வைஷு பாப்பாக்கு உடம்பு சரியில்லை. அதான் அப்பா மட்டும் வந்தேன்'' என்றார்.

''போங்கப்பா! நீங்க வந்தா அம்மா வரமாட்டேங் கறாங்க, அம்மா வந்தா நீங்க வரமாட்டேங்கறீங்க'' என்று சலித்தான்.

''நெக்ஸ்ட் டைம் கண்டிப்பா சேர்ந்து வர்றோம்'' என்றார்.

பிறகு மீட்டிங் அட்டென்ட் செய்து பையனின் ஆக்டி விடீஸ் பற்றிக் கேட்க. கார்த்திக்கை பாரபட்சம் இல்லாமல் அத்தனை பேரும் புகழ்ந்தனர்.

தந்தையாகிய சந்திரசேகருக்கு அதைவிட என்ன வேண்டும். ஒரு பதினோரு வயது சிறுவன் எல்லோர் மனதிலும் இருந்தான் என்பது தான் நிஜம். எல்லோரை யும் கவரும் தன்மை கார்த்திக்கிடம் இருந்தது. அவனைச் சுற்றி பெரிய நண்பர் கூட்டம் இருந்தது.

அவருடைய விலையுயர்ந்த காரில் ஒரு ரவுண்ட் கூட்டி போக. ''அப்பா, மை பிரண்ட்ஸ் டூ'' என்றான் கார்த்திக்.

''சுயூர் கார்த்திக்'' என்று அவனின் அப்பா சொல்ல. தன் நண்பர்களோடு சென்று. அவருடன் ஊரை சுற்றி. ஹோட்டல் போய் என்று நன்றாக என்ஜாய் செய்தான்.

அவனைத் திரும்ப ஸ்கூல் ஹாஸ்டலில் இறக்கி விடும்போது. ''அப்பா மறுபடியும் எப்போ வருவேன்னு சொல்ல முடியாது கார்த்திக். நாம இப்போ மூணு பெரிய பட்ஜெட் படம் பெரிய ஹீரோக்களை வெச்சி பண்றோம். அதனால அப்பா பிஸி, டைம் கிடைக்கும் போது அப்பா வருவேன். அதுவரைக்கும் அம்மாவை வந்து பார்க்கச் சொல்றேன் கார்த்திக்'' என்றார்.

''சரிப்பா'' என்றவன். ''ஆனா போன்ல நீங்க என் கூட அடிக்கடி பேசனும்'' என்று சொல்லி, அதற்கான வாக்குறுதியை வாங்கிக்கொண்டு. ''ஐ வில் மிஸ் யூ பா'' என்று ஒரு அழுகை அழுத பின்னே தான் விட்டான்.

''மை கார்த்திக் இஸ் பிரேவ் பாய். அவன் எதுக்கும் அழமாட்டான். அப்பா பேரை அவன் தானே காப் பாத்தனும். இப்படி சின்னச் சின்ன விஷயத்துக்கு அழு வாங்களா. அப்பாவோட மனசெல்லாம் எப்பவும் கார்த்திக் கூட இருக்கும்''என்று அவனை ரொம்ப சமாதானம் செய்த பிறகே தெளிந்தான்.

அவன் ஹாஸ்டல் ரூம் வந்ததும் அவனின் நண்பர்கள் எல்லாம், ''ஹேய், கார்த்திக்! உங்க அப்பாவை இங்க ஷூட்டிங் வைக்க சொல்லுடா, உங்கப்பாவே ஹீரோ மாதிரி இருக்கார்டா அவர் நடிக்கலியா?''

''ம்! எங்கப்பாக்கு இன்ட்ரெஸ்ட் இல்லை. என்னை தான் ஹீரோவா பெரியவனானதும் நடிக்க வைக்க போறார்'' என்றவன், பெருமையாக ''அதுக்கென்னடா நான் சொன்ன எங்கப்பா உடனே செய்வார்'' என்றான்.

**காட்சி இரண்டு :**

''நம்ம ஒரு பாட்டு ஷூட்டிங்கை ஊட்டில வைக்க லாம்'' என்று சந்திரசேகர் டைரக்டரிடம் சொல்ல.

''சார்! படம் இன்னும் பாக்கி இருந்தாலும். ஹீரோ ஹீரோயின் சீன்ஸ், பாட்டு எல்லாம் முடிஞ்சது.''

''என் பையன் அவன் ஸ்கூல் பிரண்ட்ஸுக்கு எல்லாம் காட்ட ஆசைப்படரான்யா, புதுசா எதையாவது ஒண்ணு ரெண்டு சீனாவது அங்க எடு!''

''சார்! ஹீரோ ஹீரோயின் கால்ஷீட் முடிஞ்சிடுச்சு! மறுபடியும் ஷூட்டிங்குனா எக்ஸ்ட்ரா பேமென்ட் கேட்பாங்க!''

''பரவாயில்லை குடுத்துடலாம்! என் பையன் ஆசைப்படறான்! அதை நிறைவேத்தலைன்னா அப்புறம் நான் என்ன அப்பா.''

''சரிங்க சார் பண்ணிடுவோம்.''

''சந்தோஷமா கார்த்திக்.''

''சூப்பர் பா! சூப்பர்! சூப்பர்! மொதல்லயே எல் லோரும் எனக்கு பிரண்ட் தான்பா! இப்போ இன்னும் பிரண்ட் ஆகிட்டாங்க! என் சீனியர்ஸ் கூட எனக்கு பிரண்ட் ஆகிட்டாங்க!! என்று குதித்தான் கார்த்திக்.

''எவ்வளவு நஷ்டமானால் என்ன? என் மகனின் சந்தோஷத்திற்காக எதையும் செய்வேன்.''

**காட்சி மூன்று :**

''அம்மா! அப்பா ஏன் மா என்னை ஸ்கூலுக்கு பார்க்க வரலை! நான் போன தடவை வீட்டுக்கு வந்தபோதும் வீட்ல இல்லை'' என்றான் எட்டாவது படிக்கும் கார்த்திக்.

என்ன சொல்வாள் வாசுகி, ''நாம் படமெடுத்து மிகுந்த நஷ்டமாகிவிட்டது. உன் அப்பா அவரிடமிருந்த எல்லா சொத்தையும் இழந்துவிட்டார். மேலும் கடன்

தொல்லையால் யார் கண்ணிலும் படாமல் எங்கே ஓடி ஒளிந்து கொண்டிருக்கிறார். அதனால் தான் உன்னைப் பார்க்க வரவில்லை'' என்றா சொல்ல முடியும்.

என்ன ஆகுமோ தங்களின் வாழ்க்கை இனி என்று வேதனையில் கண்மூடி திறந்தாள் வாசுகி. இவர்களுக்கு எல்லா செலவையும் இப்போதே ஒரு ஆறு மாதமாக அவளின் தந்தை பத்ரிநாத் தான் செய்கிறார்.

''வருவார் கார்த்திக்! வருவார்! நெக்ஸ்ட் டைம் கண்டிப்பா வருவார்!'' என்று அவனை தேற்ற முற்பட.

''போம்மா இப்படி தான் நிறைய நாளா சொல்றீங்க! நோ! ஐ டோண்ட் டிரஸ்ட் யூ!'' என்றான்.

வாசுகியும் மிகுந்த துயரத்திலும், மன அழுத்தத்திலும் இருந்ததால் உண்மை நிலவரத்தை சொல்லாவிட்டாலும் அதற்கு மேல் கார்த்திக்கிடம் சப்பை கட்டு கட்டவில்லை. ''நல்லா படிக்கணும், நெக்ஸ்ட் டைமும் நீதான் ஃபர்ஸ்ட் வரணும்'' என்றார்.

ஆம்! கார்த்திக் மிகவும் பிரில்லியண்ட் ஸ்டூடண்ட்.

''கார்த்திக்! உங்கப்பாவோட போன்!'' என்ற குரல் கேட்டதும் படிகளில் வேகமாக ஓடி இறங்க... தடுமாறி விழுந்து படியிலேயே உருண்டான் கார்த்திக், முட்டியில் அடிப்பட்டு சற்று காயமானது.

அதை பொருட்படுத்தாமல் வேகமாக போன் இருந்த இடத்திற்குப் போனவன். ''அப்பா!'' என்று ஆர்வமாக கூப்பிட்டான், மூச்சு வாங்கியது.

''ஓடி வந்தியா கார்த்திக், மூச்சு வாங்குது!'' என்று அவனின் தந்தை கேட்க. அதிலெல்லாம் அவனின்

கவனம் இல்லை. எப்போதும் கம்பீரமாக கேட்கும் அவனின் தந்தையின் குரல் இப்போது அந்த மாதிரி இல்லாதது போல அவனுக்குத் தோன்றியது.

''ஏன்பா ஒரு மாதிரியா இருக்கு உங்க வாயஸ்.''

''அது லேசா கோல்ட் கார்த்திக்.''

''என்னையும் ரொம்ப நாளா பார்க்க வரவேயில் லையே, ஏதாவது ப்ராப்ளமாப்பா, நம்ம ஃபில்ம் கூட சரியா போகலைன்னு அம்மா சொன்னாங்க.''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை கார்த்திக்! அப்பா பார்த்துக்குவேன்! நீ இருக்கும் போது எனக்கென்னடா கவலை? என் பையன் இருக்கான்டா எனக்கு! எத்தனை ப்ராப்ளம் வந்தாலும் அப்பா சமாளிப்பேன்.''

அதன் பிறகு நீண்ட நேரம் அவனின் அப்பாவிடம் சொல்ல கார்த்திக்கிற்கு நிறைய கதைகள் இருந்தன.

**காட்சி நான்கு:**

''நாம ஏம்மா தாத்தா வீட்லயே இருக்கோம்! நாம ஏன் நம்ம வீட்டுக்கு போகலை! இந்த தாத்தா ஏன் உன்னையும் அப்பாவையும் திட்டிட்டே இருக்காங்க!'' என்றான் எட்டாவது முடிந்து லீவிற்கு வந்திருக்க கார்த்திக்.

''நமக்கு வீடில்லை கார்த்திக்!''

''ஏன்மா? நம்ம அப்பாவோட போயிடலாம்.''

''நாம அந்த வீடு சேல் பண்ணிட்டோம் கார்த்திக்! அப்பா இப்போ ஒரு ரூம் எடுத்து தான் தங்கியிருக் காங்க! நாம அங்க போக முடியாது!''

''அந்த வீடு சேல் பண்ணினா என்ன? நாம வேற வீட்டுக்கு போகலாம்.''

''முடியாது கார்த்திக்! அதுக்கு நம்மகிட்ட பணம் வேணும்! நம்மகிட்ட இல்லை!''

''நேத்து கூட உங்க பீரோல நிறைய பணம் பார்த்தே னேம்மா.''

''அது நம்மளது இல்லை கார்த்திக்! தாத்தாவோடது!''

''தாத்தா! உங்ககிட்ட தான் நிறைய பணம் இருக்கே! எங்கப்பாவோட நாங்க இருக்குற மாதிரி வீடு பார்த்து குடுங்க!'' என்று கார்த்திக் பத்ரிநாத்திடம் போய் நின்றான்.

''வாடா வா! நான் கஷ்டப்பட்டு சம்பாதிச்சது எல்லாம் உங்களுக்கே குடுத்துட்டா, என் பையனுக்கு நான் என்னடா குடுப்பேன். உங்கப்பன் என் சொத்தை அழிக் கறதுகுன்னே பொறந்திருக்கான்டா.''

''எங்கப்பாவை பத்தி தப்பா பேசாதீங்க தாத்தா!'' என்று கார்த்திக் அவரை முறைக்க.

''தப்பு பண்ணினது உங்கப்பா கார்த்திக்! நீ என்னை என்னவோ வில்லன் மாதிரி பார்க்குற!'' என்றவர், ''வாசுகி!!!!!!'' என்று ஒரு சத்தம் போட.

என்னமோ ஏதோவென்று ஓடி வந்தார் வாசுகி, என்னப்பா.''

''உன் பையன் என்னை பார்த்து எப்படி முறைக்கிறான் பாரு, அவங்கப்பனோட லட்சணத்துக்கு?''

சந்திரசேகரை தன் தந்தை பேசும் வருத்தம் இருந் தாலும், ''என்ன கார்த்திக்'' என்றாள்.

''அப்பாவை தப்பா பேசறார், பேச வேண்டாம்னு சொல்லுங்க.''

''அப்பா நீங்க என்னப்பா சின்ன பையன்கிட்ட போய்.''

''என்ன சின்ன பையன்? அவனுக்கு எல்லாம் விவரம் தெரியற வயசு தான்! அவங்கப்பன் பண்ணின காரியத்தை சொல்லு. அப்புறம் விஷயம் தெரியாம அவங்கப்பனை ஹீரோவா நினைச்சு இவனும் அவனை மாதிரி உருப் படாம போயிட போறான்.''

''நான் அப்புறம் சொல்லிக்கறேன்பா.''

''வேண்டாம்! இப்போவே என் கண்முன்னாடியே சொல்லு! என்னவோ அவங்கப்பாவை பத்தி பேசினா உன் பையனுக்கு அவ்வளவு ரோஷம் வருது.''

வாசுகி கண்ணில் நீர் முட்ட நிற்க.

''சொல்லுங்கம்மா'' என்றான் கார்த்திக்.

''தாத்தாவோட கம்பெனியை, அப்பாகிட்டையும் அம்மாகிட்டையும் பார்த்துக்க சொல்லி குடுத்திருந்தார் கார்த்திக்! அப்பா அதை யாருக்கும் தெரியாம அதை அவரோட பிரண்ட்டுக்கு வித்திட்டார்!'' என்றார் வாசுகி குரல் கமற.

''என் உழைப்புடா அது! அதை அடுத்தவங்களுக்கு கொடுக்க உங்கப்பாக்கு என்ன உரிமை இருக்கு.''

''அப்பா எதுக்கு வித்தாங்கன்னு தெரியாது! நான் அப்பாகிட்ட சொல்லி அதை உங்களுக்குத் திரும்ப வாங்கி கொடுக்கறேன்'' என்றான் ரோஷமாகக் கார்த்திக்.

''உங்கப்பன் கிழிப்பான்! என் சொத்துடா அது! எனக்கு அதை எப்படி வாங்கணும்னு தெரியும்! கேஸ் போட்டிருக் கேன். கண்டிப்பா என் பக்கம் தான் தீர்ப்பாகும்.''

''அப்படியே தீர்ப்பாகலைன்னாலும், நான் உங்களுக்கு வாங்கி கொடுப்பேன்'' என்று சிறுவனான அவன் சொல்ல.

''அப்பா போய் மகன் வந்திருக்கியா! உங்கம்மாவுக் காக பார்க்கிறேன்! இல்லைன்னா உங்கப்பாக்காக இவ்வளவு பேசற உன்னை உங்கப்பாவோட அனுப்பிடு வேன்! கஷ்டப்பட்டா தான் இந்த தாத்தாவோட அருமை உனக்குத் தெரியும்'' என்று அவர் சொல்லி அந்த இடத்தை விட்டு போக.

''அம்மா! நாம இங்க இருக்க வேண்டாம்! அப்பா வோட போயிடுவோம்!'' என்று மீண்டும் அடம் பிடித் தான் கார்த்திக்.

''அந்த சொத்து திரும்ப கைக்கு வரும் வரைக்கும் உன் புருஷனை நீ பார்க்கக் கூடாது, பார்த்தேன்னா அப்படியே போயிடு. யார் சொத்தை, யாரு. யாருக்கு எழுதி கொடுக்கிறது எவ்வளவு சொத்து இது வரைக்கும் குடுத்தேன். அத்தனையும் தொலைச்சது இல்லாம. இப்போ இந்த சொத்தையும் சேர்த்து தொலைச்சிருக் கான்.

''கேஸ் ஜெயிச்சு சொத்து வந்ததுக்கு அப்புறம் தான் நீ அவனோட பேசணும். அப்போ தான் அவனுக்கு வருத்தம் தெரியும். பொண்டாட்டியும் பிள்ளைகளும் எப்பவும் போல பேசினா இருந்தா அவனுக்கு வருத்தமே தெரியாது'' என்ற தந்தையின். கூற்றை வாசுகி எப்படி கார்த்திக்கிடம் கூறுவாள்.

மௌனமாக அங்கிருந்து நகர்ந்தார்.

**காட்சி ஐந்து:**

கார்த்திக்கும் அவன் தந்தையை காண அந்த லீவில் எவ்வளவோ முயன்றான். அவன் போகும்போதெல்லாம் அவரின் ரூம் பூட்டியே இருக்கும்.

நாளை ஸ்கூல் போக வேண்டும் என்ற நிலையில் இன்று எவ்வளவு நேரமானாலும் அப்பாவை பார்த்து விடுவது என்று அந்த ரூமின் வாசலிலேயே அமர்ந்து கொண்டான்.

அவனுக்கு தெரியாதது. அவன் கூட போகும் தாத் தாவின் வீட்டு டிரைவர். இவன் போவதற்கு முன்கூட் டியே சந்திரசேகருக்கு தகவல் தெரிவித்து விடுவார். அவரும் இப்படி ஒரு தோற்ற நிலையில் மகனை எதிர்கொள்ள தயங்கி எங்காவது சென்று விடுவார். அந்த டிரைவர் மூலமாக தான் வாசுகி சந்திரசேகருக்கு செல விற்கு பணம் கொடுத்து விடுவார்.

ஆம் அவருடைய அன்றாட ஜீவனத்திற்கே மனைவி கொடுக்கும் பணம் தான் அவருக்கு. மனதளவில் மிகவும் நொந்து இருந்ததால் மகனைப் பார்க்கவே தயங்கினார்.

அன்று அவன் பிடிவாதமாக இருக்க வேறு வழியில் லாமல் அவர் திரும்ப வந்தார். "அப்பா!" என்று அவரை பார்த்ததுமே கட்டிக் கொண்டே கார்த்திக் உணர்ந்தது ஒரு கெட்ட வாசம் தந்தையிடமிருந்து.

"என்னப்பா ஸ்மெல்."

"காலையில இருந்து பைப்ல தண்ணி வரலை! இன்னும் குளிக்கலை அதான்!" என்று சமாளித்தார்.

ஆனால் அந்த கெட்ட வாசம் அவர் மது அருந்தி யிருந்ததால் வந்துக் கொண்டிருந்தது. முன்பெல்லாம்

எப்போதோ ஒரு முறை அவரிடம் இருந்த பழக்கம் இப்போது தினமும் என்ற அளவில் இருந்தது.

''அப்பா! ஏன்ப்பா என்னைப் பார்க்கவே வரலை! தாத்தா தினமும் திட்டுறார்! நாம வேற வீடு பார்த்து போயிடலாம்ப்பா!'' என்றான் சிறுவனான கார்த்திக்.

''தாத்தா பேசினா கோவப்படாத கார்த்திக்! அப்பா பெரிய தப்பு பண்ணியிருக்கேன். அதான் அப்படி பேசுறார்.''

''நீங்க ஏம்பா அப்படி பண்ணுனீங்க'' என்றான் வருத்தமாக.

''நான் கஷ்டத்துல இருந்தப்போ அவன் சொத்து முழுசையும் என் பிரண்ட் வீரமணி வித்துக் குடுத்தான் கார்த்திக்! அவனை நான் ஏமாத்த முடியாது, அவனை ஏமாத்தினா அவன் ஒண்ணுமில்லாம போயிடுவான். அப்பாவால அதை செய்யவே முடியாது.''

''இப்போ என்னப்பா நாம அதை திரும்ப வாங்கி குடுத்திடுவோம்'' என்று கார்த்திக் சொல்ல.

''அப்பாவால இனிமே அது முடியுமான்னு தெரியலை, கார்த்திக் ஒரு வேலை அப்பாவால முடியலைன்னாலும் நீ பெரியவனானதும், அதை செய் கார்த்திக்! அது உங்க மாமாக்கு சேர வேண்டிய சொத்து, நீ வீரமணி அவர்கள் கிட்ட பணம் குடுத்தா கட்டாயம் அதைத் குடுத்துடுவான். ரொம்ப நல்லவன் அவன்.''

''என்னோட கஷ்டத்துல கூட நின்னது அவன் மட்டும் தான். இப்பவும் என் நிலைமை தெரிஞ்சா உதவி பண்ண வருவான். நான் விரும்பலை. எனக்கு இது வரைக்கும்

பண்ணின உதவிக்கே கோர்ட்டு கேசுன்னு அலைஞ்சிட்டு இருக்கான்'' என்றார் உருக்கமாக.

''கண்டிப்பா அப்பா! நான் அதை வாங்கிகொடுப்பேன்!'' என்றான் கார்த்திக்.

''நாளைக்கு ஊட்டி ஸ்கூலுக்கு ரகளை பண்ணாம போகணும், நல்லா படிக்கணும். அப்பா எப்பவும் உன் நினைப்பா தான் இருப்பேன். நீ அடுத்த லீவுக்கு வரும் போது பார்க்கலாம்'' என்று அவனை கொஞ்சி அனுப்பி வைத்தார்.

அவர் அவனை தெளிவாக கடைசியாகப் பார்த்தது அப்போது தான், அதற்குப் பிறகு. நடந்தவைகளை நினைக்கவே பிடிக்கவில்லை.

அந்த சில நாட்கள் அவனுடைய வாழ்க்கையில் கறுப்பு பக்கங்கள்.

நினைவலைகள் விடைபெற கார்த்திக் கண்களை திறந்தான். மனம் கனத்திருந்தது.

நேரம் அதிகாலை மணி மூன்று என்றது. அப்படியே குவாரிக்கு கிளம்பி விட்டான். அங்கே இருட்டில் அந்த பாறைகளை பார்த்தபடி அமர்ந்திருந்தான். திரும்ப அவன் காலையில் வீடு வந்த போது மணி எட்டு. வைஷ்ணவியும் சுமித்ராவும் காலேஜ் கிளம்பிக் கொண்டு இருந்தனர்.

''அம்மா பசிக்குது!'' என்று அப்படியே நேராக டைனிங் டேபிள் முன் வந்து அமர்ந்தான். கோபம் மனதில் இருந்தாலும் பசி என்று மகன் வந்து நிற்கும் போது என்ன செய்வார் வாசுகி, அவனை அமரச் சொல்லி பரிமாற.

வைஷ்ணவி இப்போதும் சண்டை போட போனாள். சுமித்ரா மறுபடியும் அவளை அடக்கினாள், "சாப்பிடும் போது பேசாத" என்று.

வைஷ்ணவி அவன் சாப்பிடும் வரை பொறுமையாக இருந்தவள், "நீ ஏன் அம்மா கிட்ட அப்படி பேசின! யாரோ ஒருத்திக்காக அம்மா கிட்ட சண்டை போடுவியா நீ!" என்று சண்டைக்கு போனாள். அவளுக்கு என்ன விஷயம்? என்ன நடந்தது என்றே தெரியாது இருந் தாலும் சக்தியை இழுத்தாள்.

அவளின் சண்டை கார்த்திக்கிற்கு ஒரு பொருட் டல்ல. ஆனால் யாரை சொல்லுகிறாள் என்று புரியாமல், "யாரை சொல்ற நீ?" என்று கார்த்திக் கேட்க.

"அதான் உன் மேடம், அவ போன்ல பேசினதும் தானே அப்படி நீ ஓடின! வந்ததுக்கு அப்புறம் அம்மாவையும் பேசின!" என்று வைஷ்ணனி நீட்டி முழங்க.

சட்டென்று கோபம் பொங்கியது கார்த்திக்கிற்கு. "This is your limit Vaishu " என்று கோபமாக கர்ஜித்தான்.

அவளும் கார்த்திக்கின் தங்கை தானே! அவனுக்குச் சற்றும் குறையாமல் பதில் கொடுத்தாள். "என் அண்ணாகிட்ட பேச எனக்கு என்ன லிமிட்" என்றாள் வைஷ்ணவி.

"உன் அண்ணாகிட்ட அவனைப் பத்தி பேச உனக்கு லிமிட் கிடையாது! ஆனா அடுத்தவங்களை பேச உனக்கு உரிமை கிடையாது. அதுவும் சக்தியை பத்தி நீ பேசவேக்கூடாது! நம்ம அப்பாக்கு அவங்க எப்பா எவ்வளவு உதவி பண்ணியிருக்கார் தெரியுமா?"

''அதுக்கு நன்றியோட இருக்க வேண்டிய நான். நன்றி என்ற வார்த்தைக்கே அர்த்தம் இல்லாம பண்ணிட்டு வந்திருக்கேன். அதுக்கு அவங்க என்னை எதுவுமே பண்ணலை! எதுவும் கேட்கலை! ஏன் அவரால என்னை எதுவும் செய்ய முடியாதுன்னு நினைச்சியா. முடியும். ஆனா நான் மறுபடியும் போராட வேண்டிய அவசியம் இல்லாம என்னை அப்படியே விட்டுட்டார். ஏன் நான் அவரோட சந்துருவோட பையன்ற ஒரே காரணத்துக்கா.''

''அதுக்காக அவங்க பொண்ணை நீ பார்த்துப் பார்த்து பார்த்துக்கணும்னு ஏதாவது இருக்கா'' என்றாள்.

வாசுகியோ சுமித்ராவோ இதில் தலையிடுவர். வைஷ்ணவி பேசுவதை நிறுத்துவர் என்று பார்த்தால் இருவரும் வேடிக்கை பார்த்தனர்.

அது இன்னும் கோபத்தை கிளப்பியது கார்த்திக்கிற்கு.

''உனக்கு என்ன பிரச்சனை இதுல! நானும் ரெண்டு மூணு தடவை பார்த்துட்டேன்! சக்தியை பார்க்கும் போது எல்லாம் நீ கோவமா பார்க்குற! அலட்சியப்படுத்தற மாதிரி பேசுற! சொல்லப் போனா நான் பண்ணின காரி யத்துக்கு அவங்க தான் அப்படி நம்மளை பார்க்கணும்!''

''அது நம்மளோடது நம்ம வாங்குனோம்.''

''அப்படி தான் சப்பை கட்டு கட்டி நான் செஞ்ச காரியத்தை நான் நியாயப்படுத்தறேன். ஆனா என்ன காரணம் இருந்தாலும் தப்பு தப்புத்தான் நான் செஞ்சது ஏமாத்து வேலை. நம்பிக்கைத் துரோகம். இனி ஒரு தரம் நீ சக்தியைப் பத்தி பேசக்கூடாது.''

''எனக்கும் சக்திக்கும் பிரச்சனை தான். அது சரியாகற வாய்ப்பை நான் அவங்களுக்கு கொடுக்கவே

போறதில்லைன்றது தான் உண்மை. அதுக்காக அவங்க எனக்கு முக்கியமில்லைன்னு ஆகிட மாட்டாங்க. அவங்க எனக்கு ரொம்ப முக்கியமானவங்க அவங்களைப் பத்தி இனிமே பேசாத.''

''என்னை விட முக்கியமா அண்ணா.''

''அவங்க அவங்க இடம் அவங்க அவங்களுக்கு இருக்கு.''

''மீறிப் பேசினா என்ன பண்ணுவ?''

''அண்ணான்னு ஒருத்தன் வேணும்னா... பேசாத... வேண்டாம்னா பேசு!'' என்றான் ஒரே வார்த்தையாக.

இந்த வார்த்தைகளை யாரும் எதிர்பார்க்கவுமில்லை, யாரும் விரும்பவுமில்லை.

''கார்த்திக்!'' என்று வாசுகி அதட்ட.

''நான் அவங்க எனக்கு முக்கியம்னு சொல்றேன்! நான் அப்படியே பேசுவேன்னு இவ சொல்றா. அப்போ நான் இவளுக்கு முக்கியமில்லையா. நான் இவளுக்கு முக்கியமில்லாத போது இவ எப்படிம்மா எனக்கு முக்கியமாவா'' என்று கார்த்திக் எதிர் கேள்வி கேட்க.

அதற்கு யாராலும் பதில் சொல்லமுடியவில்லை.

''நம்புனவங்களை ஏமாத்தறது எவ்வளவு பாவம் தெரியுமா. நான் அதை செஞ்சிருக்கேன். எனக்கு நிம்மதி எப்பவாவது கிடைக்குமான்னு கூடத் தெரியாது. இதுல நீங்க வேற என் நிம்மதியை இன்னும் கெடுக்காதீங்க.''

''இது விஷயமா இனிமே யாரும் என்கிட்ட பேசாதீங்க. சக்தியை பத்தியோ அவங்க குடும்பத்தை பத்தியோ யாரும் பேசறதை நான் விரும்பலை'' என்று

முடிவாக சொல்லி அந்த இடத்தை விட்டு போய்விட்டான்.

"சக்தியோடு எனக்கு சண்டை இருந்தாலுமே அவள் எனக்கு முக்கியம்" என்ற வார்த்தை சுமித்ராவின் காதுகளில் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டே இருந்தது.



# 16

**சாத்திரங்கள் பல தேடினேன் - அங்கு**

**சங்கையில் லாதன சங்கையாம் - பழம்**

**கோத்தி ரங்கள்சொல்லு மூடர்தம் - பொய்மைக்**

**கூடையி லுண்மை கிடைக்குமோ?**

- பாரதி

**காட்சி ஆறு :**

பத்தாவது அரையாண்டு தேர்வு விடுமுறைக்கு கார்த்திக் ஊருக்கு வந்திருந்தான். பத்தாவது என்பதால் இரண்டு நாட்களே விடுமுறை. நாளை அவன் ஊட்டி திரும்ப வேண்டும். இருந்தாலும் தந்தையைப் பார்க்க வேண்டி அவன் அங்கே வந்திருந்தான்.

"அம்மா" என்றழைத்தவன், "அப்பாவை பார்த்தே ரொம்ப நாள் ஆச்சும்மா" என்றான் கார்த்திக்.

"நானும் தான் கார்த்திக்" என்றவர்" என்னவோ மனசே சரியில்லை கார்த்திக், நீ அப்பாவை பார்த்துட்டு வர்றியா" என்றார்.

"நேத்துக் கூட போனேனேம்மா, ஆனா ரூம் பூட்டி தான் இருந்தது."

"எப்படியாவது பார்த்துட்டு வாடா, எனக்கு என்னன்னு சொல்லத் தெரியலை! பயமா இருக்கு! ரொம்ப குடிக்கிறாராம். நம்ம டிரைவர் சொல்றார்" என்றார் கவலையாக.

கார்த்திக்கிற்கு கோபம் வந்தது. "அவரைத் தனியா விட்டுட்டீங்க தானே! இப்போ என்ன? கவலையா இருக்கு அது இதுன்னு ஏன் சொல்றீங்க?" என்று அம்மாவிடம் கோபப்பட்டான்.

டீன் ஏஜ் வயதில் இருக்கும் கார்த்திக்கிற்கு பயம் என்ற ஒன்று இப்போதெல்லாம் பழக்கமில்லாத விஷயமாக ஆகியிருந்தது.

மனதில் ஏற்கனவே ஏதாவது செய்திருக்க வேண்டுமோ, அவரைத் தனியாக விட்டிருக்கக் கூடாதோ என்ற குற்ற உணர்ச்சியில் இருந்த வாசுகிக்கு கார்த்திக் இப்படி சொன்னதும் அழுகை பொத்துக் கொண்டு வர தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தார்.

"நான் என்ன பண்ணுவேன் கார்த்திக்! எங்கேயாவது வீட்ல அவர் இருந்திருந்தா கூட அவர் கூட போய் இருந்திருப்பேன். பசங்க தங்கற மேன்ஷன்ல ரூம் எடுத்து தங்கியிருக்கறவர் கூட நான் எப்படி போக முடியும். போக முடியும்ன்றது கூட அப்புறம், என்னால அவரை அங்க போய் பார்க்கக் கூட முடியாது."

"நீயே என்னை இப்படி பேசினா எப்படி கார்த்திக்" என்று தேம்ப கார்த்திக்கிற்கு மனதுக்கு கஷ்டமாகப் போய்விட்டது.

''நான் தாத்தா கிட்ட கூட பேசிட்டேன் கார்த்திக், அவரை இங்கே கூட்டிட்டு வர்றேன்னு அவரும் சரின்னு சொல்லிட்டார். ஆறு மாசமா இப்போ உங்கப்பாவை கூப்பிடறேன் வர மாட்டேங்கறார்'' என்று தேம்பலோடு பேச.

கார்த்திக்கிற்கு மனதிற்குள் உருகியது. அவர் இதை தாத்தாவிடம் எவ்வளவு கெஞ்சி கேட்டிருப்பார் என்று அவனால் அனுமானிக்க முடிந்தது.

''சாரி மா'' என்றவன். ''நான் இன்னைக்கு அவரை எப்படியாவது பார்க்கிறேன்'' என்றான்.

இரவு பத்து மணிவரை ரூமின் வாசலில் அமர்ந்திருந் தான். அவர் வரவே இல்லை. டிரைவர் வேறு அவ னோடு கூடவே இருக்க. அவருக்கு வீட்டுக்கு போக வேண்டும் என்பதை உணர்ந்து எழுந்து நடந்தான்.

''அவர் எங்கே குடிப்பார்ன்னு உங்களுக்கு தெரியுமா?'' என்றான் கார்த்திக்.

''தெரியும்'' என்பது போல அவர் தலையாட்ட. ''அங்கே போகலாம்!'' என்றான்.

''அங்க எல்லாம் நீங்க வேண்டாம் தம்பி'' என்று அந்த டிரைவர் சொல்ல.

''அவரை பார்க்காம என்னால போக முடியாது'' என்று பிடிவாதமாக அங்கே அழைத்து செல்லும்படி சொன்னான்.

அங்கே செல்லும் வழியிலேயே ஒரு இடத்தில் நான் கைந்து ஆட்கள் நின்று அங்கே சாக்கடை தேங்கியிருந்த இடத்தை பார்த்துக் கொண்டிருந்தனர். ஏதோ தோன்ற. ''நிறுத்துங்க'' என்று சொன்ன கார்த்திக். அங்கே போய்.

''என்ன அண்ணா'' என்று அங்கே இருந்த ஒருவரை கேட்டான்.

''யாரோ நடந்து வந்தாங்கப்பா. நாய் துரத்திச்சு, வேகமா வந்தவர் இதுல தவறி விழுந்துட்டார். மயக்க மாய்ட்டார் போல. கூப்ட்டா அசைவேயில்லை.''

ஒருக்களித்த நிலையில் கிடந்த அந்த மனிதனை பார்த்தான். முகம் தெரியவில்லை. ஆனால் அவன் தந்தையை போல இல்லை.

அவன் திரும்பி நடக்க, அதற்குள் வண்டியை நிறுத்திவிட்டு வந்திருந்த டிரைவர் எட்டி பார்த்துவிட்டு. ''தம்பி, நம்ம அய்யா போல தான் இருக்கு'' என்றார்.

''இல்லை! இவர் ஒல்லியா இருக்கார்! இவரை பார்த்தா அப்பா மாதிரியில்லை!'' என்று சொல்லி கார்த்திக் நடக்க.

''இல்லை தம்பி! இப்போ அப்பா உடம்பு இளைச்சு தான் இருக்கார். இந்த உடுப்புல நான் அய்யாவை பார்த்திருக் கேன்! இது அவர் தான்!'' என்று டிரைவர் உறுதியாக.

சாக்கடையில் தள்ளி விழுந்திருந்தார். இரண்டு மூன்று அடிகள் எடுத்து சாக்கடையில் வைத்த பிறகே அவரை நெருங்கி யார் என்று பார்க்க முடியும். அவனின் அப்பாவாக இருக்கும் என்ற வார்த்தையை கேட்ட பிறகு கார்த்திக் சற்றும் யோசிக்கவில்லை. அந்த சாக்கடையில் இறங்கினான்.

### காட்சி ஏழு :

அந்த கெட்ட வாடையில் மயக்கமே வரும் போல இருந்தது கார்த்திக்கிற்கு. ஆனால் அவனின் அப்பாவாக இருக்குமோ என்ற விஷயம் அவனை அதையும் மீறி செயல்பட வைத்தது.

அவரை அந்த இடத்தில் இழுக்க முடியாமல் தூக்கிப் பார்க்க. அது அவனின் அப்பா தான்.

அவன் உறைந்தது ஒரு நொடியே. அப்படியேத் தூக்கி அவரை தோள் மேல் போட்டு ரோடில் கொண்டு வந்து போட்டான்.

பதினைந்து வயது சிறுவன் அவரைத் தூக்கி கொண்டு வந்து போட பார்த்தவர்கள் பார்த்தபடி நின்றனர். உடல் வலிமையை விட அங்கே மன வலிமையே அதிகமாக இருந்தது.

அழுகை வரும் போல இருந்தது. டிரைவரிடம், ''யார்கிட்டயாவது தண்ணி வாங்குங்க'' என்றான்.

''யாரும் குடுக்க மாட்டாங்க தம்பி!'' என்று அவர் சொல்ல.

''போங்க. அங்க ஒரு டீக்கடை இருக்கு. பணம் குடுத்து வாங்குங்க!'' என்று பாக்கெட்டில் இருந்த பணத்தை அப்படியே எடுத்து அவரிடம் கொடுத்து அவரை விரட்டினான்.

அதன் பிறகு அவர் குடம் குடமாக தண்ணி கொண்டு வர ஊற்றிகொண்டே இருந்தான். அவனின் தந்தை யிடம் அசைவு தெரிந்தது.

இன்னும் என்னவோ அந்த சாக்கடையின் அழுக்கு களை எல்லாம் தந்தையிடமிருந்து சுத்தம் செய்வது போல ஊற்றிக் கொண்டே இருக்க.

''போதும் தம்பி, இன்னும் ரூம்க்கு போய் பார்த்துக் கலாம்'' என்றார் டிரைவர், பிறகு அவன் அணிந்திருந்த சட்டையை தூக்கி தூர போட்டவன்... பனியனுடனே நின்றான்.

அந்த நேரத்திற்கு அவரின் டூ வீலரில் தான் அவரை அமர்த்தி சென்றாக வேண்டும். "நீங்க ஓட்டுங்க, நான் இவரை பின்னாடி உட்கார வெச்சி பிடிச்சிருக்கிறேன்" என்றவன்.

"உங்களுக்கு ஒண்ணும் அருவருப்பா இல்லையே" என்றான் குரல் கமற.

எப்படி இருப்பவன் கார்த்திக். உடை சற்றும் கலையாமல், நுனி நாக்கு ஆங்கிலம் பேசிக் கொண்டு. ஊட்டி கான்வென்ட்டில் படிக்கும் சிறுவன். நிமிஷமும் யோசிக்காமல் சாக்கடையில் இறங்கி அவனின் தந்தையை அப்படியே தூக்கி தோளில் போடுகிறான். அவருக்கே கண்களில் நீர் வந்தது.

"என்ன தம்பி இப்படி சொல்லிட்டீங்க" என்றவர். உடனே அமர்ந்து வண்டியை எடுத்தார். இப்போது அவர் மேல் தண்ணியை ஊற்றி சுத்தம் செய்துவிட்டதால் ஒன்றிரண்டு பேர் உதவி செய்ய அவரை பைக்கில் அமர்த்தி பிடித்துக் கொண்டான்.

"ம்! யாரு? யாரு?" என்று சந்திரசேகர் முனக.

"அப்பா நான் தான்!" என்ற கார்த்திக்கின் குரலுக்கு.

"வந்துட்டியா" என்று சொல்லி கண்மூடிக் கொண்டார். அவர் மிகுந்த போதையில் இருக்கிறார் என்று புரிந்தது.

ரூமிற்கு வந்து அவனே அவரை குளிக்க வைத்து, உடை மாற்றி படுக்க வைத்தான். போதையில் சுய நினைவு இல்லாமல் இருக்கும் அவரை குளிக்க வைப்பது என்பது சாதாரண விஷயமல்ல. ஒற்றை ஆளாய் செய்தான்.

"நான் காலையில வர்றேன்னு அம்மாகிட்ட சொல்லிடுங்க" என்று டிரைவரிடம் சொல்லி விட்டவன். தந்தையோட தங்கிக்கொண்டான். அந்த ரூமும் அங்கே இருந்த நெடியும் கார்த்திக்கினால் அவனையும் மீறி கூட கண்ணயர முடியவில்லை.

ஒரு பொட்டுத் தூக்கமின்றி மேலே சுத்தும் ஃபேனின் சத்தத்தை கேட்டுக் கொண்டு. உடல் மெலிந்து நலிந்து தெரிந்த தந்தையைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

காட்சி எட்டு :

காலையில் தான் சந்திரசேகர் விழித்தார். "கார்த்திக்" என்றவர்.

"நீ எப்போ வந்த?" என்று கேட்டார்.

அவர் கேட்ட விதத்திலேயே அவருக்கு இரவு நடந்தது ஒன்றும் தெரியவில்லை என்று தெரிந்தது.

கார்த்திக் அவனாக ஒன்றும் சொல்லாமல், "என்ன நடந்துதுப்பா" என்று அவரிடமே கேட்டான்.

"ஒரு நாய் துரத்திச்சு. ஓடினேன். அப்புறம்." என்று யோசித்தவர். "விழுந்துட்டேன்" என்றார். அவருக்கு இரவு இருந்த போதை மயக்கத்தில் என்ன நடந்தது என்றே தெரியவில்லை.

கார்த்திக்கும் அவர் சாக்கடையில் விழுந்து கிடந்தார் என்று சொல்லவில்லை.

"ரோட்ல விழுந்து கிடந்தீங்க. தூக்கிட்டு வந்தேன். விட்டுட்டுப் போக மனசில்லை" என்று மட்டும் சொன்னவன்.

''ஏன்பா சுயநினைவு இல்லாத அளவுக்கு குடிக்கறீங்க.'' என்றான் வருத்தமாக.

சந்திரசேகர் அதற்கு எந்த பதிலும் சொல்லவில்லை.

''தொழில்ல நஷ்டம் வர்றது சகஜம் தான். அதுக்காக ஒரு மனுஷன் இப்படியாப்பா ஆகிடுவாங்க. மொதல்ல நீங்க அம்மாவை விட்டுட்டு தனியா இருக்கறதே தப்பு. அம்மாவோட இருந்திருந்தா இப்படி ஆகியிருக்க மாட்டீங்க.''

தனக்கு புத்தி சொல்லும் தகப்பன் சாமியை கண் ணிமைக்காமல் பார்த்தார் சந்திரசேகர்.

''ஓகே பா! இனிமே நடந்ததை பேச வேண்டாம். என் னோட டென்த் எக்ஸாம் இன்னும் த்ரீ மந்த்ஸ்ல முடிஞ் சிடும். அதுக்கப்புறம் நான் இங்கேயே வந்துடறேன். நீங்க இனிமே எங்க கூட தான் இருக்கீங்க. உங்களால உங்க ப்ரெஸ்டீஜை விட்டுட்டு வேலைக்கு போக முடியாதுன்னா ஐ வில் மேனேஜ். ஐ வில் டூ சம்திங்.''

''இவ்வளவு நாள் சின்ன பையன். நத்திங் வாஸ் இன் மை ஹாண்ட். பட் ஸ்டில் ஐ கான்ட் சிட் லைக் தட். வில் டூ சம்திங். ஆனா நான் என்ன சொன்னாலும் நீங்க கேட்கணும்'' என்றான்.

அவனின் தந்தை சந்தோஷமாக தலையாட்ட. அவ ருக்கு வாழ்க்கையின் மீது இன்னும் நம்பிக்கை கொடுத்து நான் இருக்கிறேன் என்று சொல்லிக் கிளம்பினான்.

''அப்பா கீழ விழுந்ததுல காயமா இருக்கு. எதுக்கும் ஒரு டீடீ போட்டுக்குங்க அப்பா!'' என்று சொல்லிச் சென்றான்.

அவர் அடிக்கடி இப்படி போதை மயக்கத்தில் கீழே விழுவதும் காய் ஆவதும் சகஜம் என்பதால் அவர் அதை ஒரு பொருட்டாய் ஏற்கவில்லை.

அவனுக்கு தெரியாதது. ஏன் அவருக்கும் தெரியாதது. இரவு ஒரு நாயை மிதித்ததால் தான் நாய் அவரை துரத்தியது. அது மட்டுமல்ல அது அவரை கடித்தும் விட்டது என்று. அது கடிக்கவும் அவர் சாக்கடையில் தவறி விழவும் சரியாக இருக்க. அது யாருக்கும் தெரியவில்லை. அந்த நாயும் திரும்ப சென்று விட்டது.

சாக்கடையில் விழுந்திருந்தால் வந்த காயமாக அவரை குளிக்க வைத்த கார்த்திக்கின் கண்களுக்கு பட. ஏதோ காயம் என்பதாக சந்திர சேகரால் கவனிக்க படாமல் விடப்பட்டது அந்த காயம்.

நினைவலைகள் கார்த்திக்கிடம் இருந்து விடை பெற மீண்டும் நிகழ்காலத்திற்கு வந்தான். இன்று வீரமணியை காலையில் பார்ப்பதாக சொல்லியிருந்தது ஞாபகத்திற்கு வந்தது.

உடனே குளித்துக் கிளம்பினான்.

அவன் அங்கே சென்ற போது மணி ஒன்பது. அவனின் பார்வை முதலில் நாய்கள் கட்டி வைத்திருந்த இடத்தில் தான் சென்றது. அங்கே அந்த நாய்கள் இல்லை. அதன் பிறகே சற்று தெளிவான மனநிலையோடு உள்ளே சென்றான்.

வீரமணி இவனை எதிர்பார்த்துக் காத்திருந்தது போல தான் இருந்தது. அவர் ஹாலில் அமர்ந்திருக்க இவன் போனவுடன் தெய்வானையும் சக்தியும் வந்தனர்.

யாரும் அமர சொல்ல வேண்டும் என்றெல்லாம் எதிர் பார்க்கவில்லை. அவனே அமர்ந்து கொண்டான். சக்தியின் முகத்தை பார்ப்பதை முடிந்த வரை தவிர்த்தான்.

அவனையே பார்த்திருந்த சக்திக்கு அவன் தன்னை தவிர்ப்பது நன்கு புரிந்தது. நெஞ்சில் சுருக்கென்று ஒரு வலி. கண்களில் அதை விட ஒரு வலி, தன் மகளின் மீது கவனத்தை வைத்திருந்த தெய்வானைக்கு நன்கு புரிந்தது.

கார்த்திக் நேரடியாக விஷயத்திற்கு வந்தான். "ஐயா, மேம் சுவிஸ் அக்கௌண்ட்ல இருக்குற பணத்தை இங்க அவங்க கைக்கு கிடைக்கற மாதிரி செய்ய சொல்றாங்க."

"ஏன்னு கேட்டா, அந்த கணக்குல வராத பணத்தை கணக்குல வர வைக்கப் போறேன்னு சொல்றாங்க" என்று அவன் பேசி முடிக்கும் முன்னரே.

"ஏன்னு நீயேன் கேட்கற" என்று அலட்சியமாகவே எதிர்க் கேள்வி கேட்டார் வீரமணி.

"கேட்காம வேற என்ன பண்ணுவாங்க? பெரிய ப்ரச்சனையாகிடுங்க ஐயா! இது விளையாட்டில்லை!"

"உன்னை எங்க வாழ்க்கையில விளையாட விட்டு டோம்ங்ற ஒரே காரணத்துக்காக நாங்க விளையாட்டு தனமாகவே இருப்போம்னு நீ எப்படி நினைக்கிற கார்த்திக்" என்றார்.

'பொண்ணு போய் அப்பன் வந்திருக்கான்டா' என்று மனதிற்குள் திட்டியவன் வெளியில் முகம் மாறாமல் காத்தான்.

"ப்ளீஸ்! இது நாம நம்ம மனஸ்தாபங்களை காட்டுற இடமில்லை, சின்ன பிரச்சனை கூட பெருசாகிடும்."

"எதுவா இருந்தாலும் நாங்க பார்த்துக்கறோம்! அவ கேட்கறதை நீ செஞ்சி குடு!" என்றார் கறாராக.

''என்ன ஐயா? அவங்க தான் புரியாம பேசறாங் கன்னா நீங்களுமா! ஏற்கனவே உங்களை ஏமாத்திட்டு போயிட்டேன்றதுதான் நிஜம்'' என்று பயமில்லாமல் சொன்னவன்.'' இப்போ ஜெயிலுக்கும் அனுப்பிட்டா'' என்றான்.

அங்கே ஓர் அமைதி நிலவியது.

''சொல்றதை புரிஞ்சிக்கவே மாட்டேங்கறீங்களே. அவங்க பணத்தை அக்கௌண்ட்ல கொண்டு வரப் போறேன்னு சொல்றாங்க. ஒரு ரூபாயா, ரெண்டு ரூபாயா, சட்டுனு கணக்குல கொண்டு வர்றதுக்கு. கிட்ட தட்ட சில நூறு கோடி பணம்! உங்ககிட்ட இருக்கிற சொத்து மதிப்பு இல்லாம இந்த பணம். எப்படி வந்ததுன்னு கேள்வி வந்தா.?''

''குவாரியை தான் நோண்டுவாங்க. இப்போ தான் என் கைக்கு மாறியிருக்கு. முன்னையும் நான் தான் பார்த்து கிட்டேன்னாலும் உங்க பேர்ல தானே இருந்தது. நீங்க தான் மாட்டுவீங்க. அதுக்கு என்னால விட முடியாது'' என்றான் கறாராக.

''என்ன பண்ணப் போறீங்கன்னு தெரியாம பணத்தை இங்க கொண்டு வர முடியாது'' என்றான் உறுதியாக.

''என்னன்னு பேசிட்டு சொல்லுங்க. நீங்க எப்போ கூப்பிட்டாலும் நான் அடுத்த நிமிஷம் உங்க முன்னாடி இருப்பேன்'' என்று சொல்லி எழுந்து சென்று விட்டான்.

அவன் வாசல் நெருங்கும் போது அவனின் பின்னே தெய்வானை வருவதை பார்த்தவன் நின்று, ''என்னங் கம்மா?'' என்றான்.

அவனிடம் பேசுவதற்கு ஏனோ மனதேயில்லை. தெய்வானைக்கு, என்ன இல்லை என் பெண்ணிடம்? இவனிடம் நான் ஏன் பேச வேண்டும்? என்ற யோசனை இருந்தாலும் தன் பெண்ணின் பார்வை இன்னும் ஆர்வமாய் தன்னைத் துளைப்பதை பார்த்தவர்.

பேச ஆரம்பித்தார். "கார்த்தி! நீ என்ன சொன்னாலும் நாங்க கேட்கிறோம்! ஆனா அது நீ என் பொண்ணோட வாழ்க்கையில வருவேன்னு இருந்தாத்தான்!" என்றார்.

அவர் என்ன சொல்ல வருகிறார் என்று புரிந்தவன் அதிர்ந்து நின்றான். அவன் இதை எதிர்பார்க்கவில்லை என்பதை அவனின் முகமே காட்டிக்கொடுத்தது. எவ்வளவு பெரிய துரோகத்தை செய்திருக்கிறோம் மறுபடியும் இப்படி கேட்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் சக்தி என்பது நன்கு புரிந்தது.

அவன் மௌனமாக நின்றான். அவனின் மௌனமே அவனுக்கு இஷ்டமில்லை என்பதாக தெய்வானைக்குத் தோன்ற.

"அப்படி இல்லாத பட்சத்தில இதை இப்படியே விட்டுடு கார்த்திக்! நீ விலகிடு! அவ கண்ல பட்டுட்டே இருக்காத! சொத்து போனா பிரச்சனையில்லை! ஆனா எங்க பொண்ணு எங்களுக்கு வேணும்! அவ சந்தோஷம் எங்களுக்கு வேணும்!

"உன்னை பயமுறுத்தறதுக்காக கையை வெட்டிட்டு நிக்கறா பாரு" என்ன செய்யப் போகிறாய் நீ. என் பெண்ணின் வாழ்க்கையில் வருவாயா? மாட்டாயா?" என்பது போல அவர் நிற்க.

''அவங்க கண்ல படாம இருக்க பார்க்கிறேன்'' என்றான்.

தெய்வானையின் முகம் கடினமாகியது. ''அப்போ சரி! பணத்தை இங்கே கொண்டு வந்து எங்ககிட்ட சேர்த்துடு! என்னவோ நாங்க பார்த்துக்கறோம்!'' என்றார்.

''அம்மா ப்ரச்சனையாயிட போகுது'' என்று அவன் ஆரம்பிக்கும் போதே.

''இப்போ நீ எங்களுக்கு குடுத்திருக்குற பிரச்சனையை விட அதிகம் இல்லை. நாங்க சக்தியை எப்படி பழைய மாதிரி கொண்ட வரபோறோம்னு தெரியலை. ஆனா என்ன ஆனாலும் நீ அவ கண்ல பட்டிடாத'' என்றார்.

''அம்மா!'' என்று அவன் மறுபடியும் பேச வர.

''முடிவா சொல்றேன்! வாழ்வோ. சாவோ. நாங்க பார்த்துக்கறோம் கார்த்திக்! நீ எங்க வாழ்க்கையை விட்டு விலகிக்கோ'' என்ற சொல்லி அவர் திரும்பி நடந்தார்.

அந்த வார்த்தைகள் அவனை மிகவும் காயப்படுத்தின.

கேட்டை நெருங்கியவன், ''எங்க இங்க இருந்தது'' என்று வாயில் காவலாளியிடம் அங்கிருந்த நாய்களைப் பற்றிக் கேட்டான். நிறைய நாட்களாக அந்த வீட்டில் இருப்பவன்தான்.

''காலையிலயே சின்னம்மா அதை எங்கயோ அனுப்பிட்டாங்க'' என்றான்.

''என் போன் நம்பர் இருக்கு தானே!''

''இருக்குங்க சார்.''

''இந்த வீட்டுக்குள்ள நாய்ன்னு ஒண்ணு வந்தா அடுத்த நிமிஷம் எனக்கு தெரியணும். தெரியலைன்னு

வெச்சிக்கோ! அடுத்த நிமிஷம் நீ காலிடா!'' என்று மிரட்டலாக சொன்னான். மீண்டும் தன் மேல் இருக்கும் கோபத்தில் அவர்கள் நாயை வரவழைத்துக் கொள்வார் களோ என்று பயம்.

''சொல்லிடறேன் சார்!'' என்று அவன் சொல்லவும் சுற்றிலும் பார்வையை ஓட்டினான். தெய்வானை உள்ளே சென்று விட்டார் என்பதை உறுதிப் படுத்திக் கொண்டு அவன் கையில் ஒரு ஐநூறு ரூபாய் கட்டை திணித்தான்.

''ஒழுங்கா தகவல் சொல்லணும், மறந்துட்டேன் அது இதுலன்னு சொல்லாம இருந்த. இந்த மாதிரி பணத்தை எவன்கிட்டயாவது கொடுத்தேன்னு வெச்சிக்கோ அடுத்த நிமிஷம் உன்னை போட்டுடுவாங்க'' காவலாளி இவனை மிரட்சியோடு பார்க்கவும்.

''என்ன சொல்லணும்.''

''நாய் வந்தா'' என்று காவலாளி சொல்ல. ''ம்!'' என்றபடி கிளம்பினான்.



## 17

**மகனே, ஒன்றை யாக்குதல் மாற்றுதல்**

**அழித்திட லெல்லாம் நின்செய லன் றுகாண்;**

**தோற்றே னெனநீ உரைத்திடும் பொழுதிலே**

**வென்றாய்:**

- பாரதி

## காட்சி ஒன்பது:

மூன்று மாதங்களுக்குப் பிறகு பரீட்சை முடித்து கார்த்திக் வந்த போது... விஷயம் கை மீற ஆரம்பித்து இருந்தது.

கார்த்திக் வந்தவுடனே பார்க்கச் சென்றது அவனின் தந்தையை. அவர் படுத்திருந்தார்.

அவன் அருகில் போகவும் அவர் உடனே தூர விலகினார்.

அவர் அதிவேகமாக விலகியதை பார்த்து, ''என்னப்பா'' என்றான்.

''ஏன்'' மலங்க மலங்க விழித்தார். அவர் நகர வேண்டும் என்று நகரவில்லை. அனிச்சை செயலாய் நடந்தது அது.

''அது எனக்கு உடம்பு சரியில்லை'' என்றார் சோர்வாய்.

''என்ன பண்ணுதுப்பா.''

''தொண்டை வலி எதையும் சர்ப்பிட முடியலை.''

''ஏன் ஒரு மாதிரி அழுக்கா இருக்கீங்க.'' அவன் இந்த கேள்வியை கேட்ட போதே ஒரு கெட்ட வாடையை ரூம் முழுவதுமே உணர்ந்தான்.

''அது இன்னும் குளிக்கலை'' என்றார் பேசும் போதே அவரின் வாயில் இருந்து லேசாக ஜொள்ளு ஒழுகியது.

அவருக்கு தண்ணீரை பார்த்தாலே பயமாக இருந்தது ஏன் என்று தெரியவில்லை.

''முதல்ல போய் குளிங்க'' என்றவன். ''டாக்டர் கிட்ட போகலாம்ப்பா'' என்றான்.

''நாளைக்கு போகலாம். இன்னைக்கு எனக்கு எங்கயும் வர பிடிக்கலை. எனக்கு தொண்டை வலிக்கு

மாத்திரை வாங்கி குடு'' என்றார். அவர் பேசுவதே ஏதோ சிறு பையன் பேசுவது போல இருந்தது. ஒரு பெரியவர் பேசுவது போல இல்லை.

''போங்க! போய் குளிங்க!''

''அப்புறம்'' என்றவர் மறுபடியும் சுருண்டு படுத்துக் கொண்டார். இன்னமும் நலிந்து தெரிந்தார்.

அவன் பக்கத்தில் இருந்த ஹாஸ்பிடல் அட்டாச்டு மெடிக்கல் ஷாப்பில் போய் தொண்டை வலிக்கு மருந்து கேட்டான்.

''அண்ணா, என்ன மருந்து கொடுக்கட்டும்'' என்று கடைப்பையன் உள்ளே ஒரு குரல் கொடுக்க.

வெள்ளை சட்டை வெள்ளை பேண்ட் போட்டு கொண்டிருந்த ஒருத்தன் வந்து மருந்தை சொன்னான்.

அவன் சொன்ன ஹோதாவை பார்த்ததும், ''அவர் டாக்டரா?'' என்றான் கார்த்திக்.

''இல்லை!'' என்ற கடைப்பையன்.'' இங்க கம்பௌன்டரு, ஆனா பயங்கர எக்ஸ்பீரியன்ஸ். நல்லா பார்ப்பாரு!'' என்றான்.

''வீட்டுக்கு வந்து பார்ப்பாரா'' என்றான் கார்த்திக்.

''வருவாரு! ஆனா அதுக்கு எக்ஸ்ட்ரா பீசு ஆவும்'' என்று அவன் சொல்ல.

நாளையும் தந்தைக்கு இப்படி இருந்தால் இவரை அழைத்து போயாவது காட்ட வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

மாத்திரையை வாங்கி கொடுத்த கார்த்திக். வாட்ச் மேனிடம் சொல்லி அவருக்கு உடம்பு சரியில்லை.

"சாப்பாடு வாங்கி கொடுத்துடுங்க" என்று சொல்லிச் சென்றான்.

ஏற்கனவே இந்த ஒரு பத்து நாட்களாகவே சந்திரசேகர் எங்கும் வெளியில் செல்லவில்லை. சாப்பாடில் இருந்து சரக்கு வரைக்கும் வாட்ச்மேன் தான் வாங்கிக் கொடுத்தார்.

**காட்சி பத்து :**

வீட்டிற்கு வந்ததும் அப்பாவைப் பற்றி அம்மாவிடம் பேசலாம் என்றால் அவர்கள் உறவுக்குள் அப்போது ஒரு திருமணம், அதற்காக சில உறவினர்கள் வீட்டில் தங்கியிருக்க அவனால் பேச முடியவில்லை.

' என்ன வாசுகி, உன் வீட்டுக்காரர் இந்தக் கல்யாணத் துக்காவது வருவாரா?" என்று உறவு பெண்மணி அவளிடம் கேட்க.

"அவரு ஒரு சினிமா தயாரிக்கறது விஷயமா ஊருக்கு போயிருக்காங்க சித்தி!" என்று கூறி வாசுகி சமாளித்துக் கொண்டிருந்தாள்.

"அது தான் ஏற்கனவே நஷ்டமாகிடுச்சுல்ல. அப்புறம் ஏன் அதையே செய்யணும்."

"அவருக்கு அதை விட்டா வேற எதுவும் தெரியாது சித்தி!" என்று ஏதோ தன் கணவா தன் கூடவே இருப்பது போலவும், இப்போது வேலை விஷயமாய் வெளியூர் சென்றிருப்பது போலவும் ஒரு தோற்றத்தை வாசுகி கொடுத்துக் கொண்டிருக்க.

அதை உடைக்க விரும்பாது. அமைதியாக இருந்து விட்டான்.

அடுத்த நாள் அவனின் தந்தையை அவன் பார்க்கப் போனபோது இன்னும் மோசமாக இருந்தார். ரூமினுள்

நுழைந்தாலே கெட்ட வாடை பயங்கரமாக அடித்தது. எங்கேயிருந்து வருகிறது. அவர் மேலா. ரூமினுள்ளா. அவனுக்குத் தெரியவில்லை.

எங்கேயிருந்து ஆரம்பிப்பது. எங்கே சுத்தம் செய்வது தெரியவில்லை. "வாங்கப்பா குளிக்கலாம்" என்றால் இடத்தை விட்டு அசைவேனா என்றார்.

அவரை ஒரு சேர் போட்டு வெளியே அமரவைத்து ஒரு ஆளை கூப்பிட்டு ரூமை சுத்தம் செய்தான்.

சுத்தம் செய்த ஆள் எப்போதும் அந்த லாட்ஜில் சுத்தம் செய்பவன் தான். "அவருக்கு மூளை சரியில்லைன்னு நினைக்கிறேன். எதுக்கும் டாக்டர் கிட்ட காமிங்க, எனக்கு கொஞ்ச நாளா அவரை பார்க்கும் போது அப்படி தான் தெரியுது. ஒரு சமயம் நல்லா பேசறார் ஒரு சமயம் உளர்றார்" என்று சொல்லி போனான்.

அவன் மேல் கோபத்தைக் காட்ட முடியாது. அதட்டி உருட்டி மிரட்டி அவரை குளிக்க வைத்தவன். அவரின் தோளில் புரையோடிப்போயிருந்த ஒரு காயத்தை பார்த்தான்.

சீழ் வடிந்து கொண்டிருந்தது. துர்நாற்றம் அவனால் தாங்க முடியவில்லை. இது வலிக்குமே எப்படி இவர் பொறுக்கறார் என்பதாகவும் இருந்தது. ஒரு வழியாக குளிக்க வைத்தான்.

உடனே முன் தினம் பார்த்த அந்த கம்பௌண்டரை கூட்டிக் கொண்டு வந்து காட்டினான். அந்தப் புண்ணை யும் காட்டினான். சிறிது நேரம் சந்திரசேகரின் நடவடிக்கை களை பார்த்த அவர். அவனைத் தனியாக அழைத்து, தம்பி" என்று வெகுவாக தயங்கியவர்.

"எதுனாலும் சொல்லுங்க சார். என்ன செலவானாலும் ட்ரீட்மென்ட் பார்த்துக்கலாம்" என்று அவன் சொல்ல, அவனைப் பரிதாபமாக பார்த்தார்.

"அவருக்கு மெண்டல் டிப்ரெஷனா, யாராவது சைக் கியாடிரிஸ்ட் கிட்ட காட்டணுமா?" என்று கேட்டவனுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் பார்த்தார்.

பிறகு சொல்லி தானே ஆக வேண்டும் என்ற ரீதியில்.

"அவருக்கு நாய் கடிச்சிருக்கணும், ஊசி போடாம விட்டிருக்கணும். அவருக்கு ரேபிஸ் தாக்கியிருக்குன்னு நினைக்கிறேன்" என்றார்.

"என்ன பண்ணனும்?" என்று மனம் பதைத்து கார்த்திக் கேட்க...

"ஒண்ணும் பண்ண முடியாது" என்றார்.

"ஒண்ணும் பண்ண முடியாதுன்னா?" என்று அவன் கேட்டபொழுது அவனின் நெஞ்சம் துடிக்கும் ஓசை அவனுக்குக் கேட்டது.

"ஒண்ணும் பண்ண முடியாது தம்பி! ரொம்ப நிலைமை மோசமாகும் போது சில பேருக்கு கோமா மாதிரி வரும்னு சொல்வாங்க. சில பேர் அப்படியே இறந்து போவாங்க! நாய் மாதிரியான செய்கைகள் அதிகமா இருக்கும். சொல்லப் போனா சில சமயம் அந்த மாதிரி செய்கைகள் அதிகமாகி கடிக்கக் கூட செய்வாங்க" என்றார்.

"எதுக்கும் நீ அவரை கவர்மென்ட் ஹாஸ்பிடல் கூட்டிட்டுப் போ!" என்றார்.

அவரின் கையைப் பிடித்து கொண்டவன், "அண்ணா! எனக்கு எதுவும் தெரியாது! நீங்க ஹெல்ப் பண்ணுங்

களேன்! எவ்வளவு பணம்னாலும் நான் தர்றேன். ப்ளீஸ்!'' என்றான் கெஞ்சுதலாக. அவனின் கண்கள் கலங்கி இருந்தன.

சிறுவன் என்றும் சொல்ல முடியாமல், இளைஞன் என்றும் சொல்ல முடியாத வயதில் இருந்த அவனைப் பார்க்க அந்த மனிதருக்கும் பாவமாக இருந்தது.

''வீட்ல பெரியவங்க யாரும் இல்லையா. உங்கம்மா எங்க?'' என்றார்.

''ம்கூம். அம்மா தாங்க மாட்டாங்க! நான் சொல்ல மாட்டேன்'' என்றான்.

''தம்பி இது பெரிய விஷயம்! அப்படியே விட முடியாது! பெரியவங்க கிட்ட சொல்றது தான் பரவாயில்லை!''

''இல்லை வேண்டாம்! எங்கப்பா ரொம்ப பெரிய ஆள்! நல்லா இருந்தவங்க! இந்த மாதிரின்னு வெளில தெரிஞ்சா அசிங்கம் வேண்டாம்!''

''யாருப்பா உங்கப்பா. என்ன பேரு என்னவா இருந்தாரு'' என்றவரிடமும் விவரம் சொல்ல மறுத்துவிட்டான்.

**காட்சி பதினொன்று :**

பிறகு அவரின் உதவியுடன் அவரை அரசாங்க மருத்துவமனைக்கு அதற்கென்று இருக்கும் பிரிவிற்கு கூட்டிச் சென்று காட்டினான்.

அவர்களும் அதையே உறுதி செய்யவும். இடிந்துப் போனான், என்ன செய்வது என்று தெரியவில்லை.

எப்படியும் இறந்து போவார். செய்யக்கூடியது எல்லாம் அப்போதைக்கு என்ன தொந்தரவோ அதற்கு மருந்து அவ்வளவே என்றனர்.

அவனின் அப்பாவுக்கு இது தெரிந்த மாதிரியும் இருந்தது தெரியாத மாதிரியும் இருந்தது. கார்த்திக்

திரும்பத் திரும்ப அவனின் அப்பாவைப் பார்க்க. அவர் விழி முழுவதுமே நிராசை.

அவனின் அம்மாவிடம் வெளியூரில் இருக்கும் நண் பனின் வீட்டிற்கு தங்கப் போகிறேன் என்று சொல்லி வந்து தந்தையுடன் தங்கினான். அந்த கம்பௌன்டர் வேறு. ''அப்பா ஜொள்ளெல்லாம் ஒழுக்குறார் தம்பி. எனக்கு இது எந்த அளவுக்கு பரவும்னு தெரியாது. ஜாக்கிரதையா இரு'' என்றார்.

ஒரு நாள் இரவு கூட அவனால் அவருடன் தாங்க முடியவில்லை. ஏதேதோ சத்தங்கள் செய்தார்.

அடுத்த நாள் அவரை குளிக்க வைக்க பார்க்கும் போது, உடல் சில்லிட்டு நின்று விட்டான்.

அவனுடைய பற்கள் நறநற வென்று கடிபட்டது.

வாயை இருக்கமாக மூடி வந்து அமர்ந்து கொண்டான்.

அவன் கண்டது, அவருக்கு இருந்த புண்ணில். புழுக்கள். மூன்று நான்கு புழுக்கள் நெளிந்துக் கொண்டிருந்தன.

அவர் எந்நேரமும் போதையிலும் இருப்பதாலோ என்னவோ அவர்க்கு வலி தெரியவில்லையா இல்லை அந்த இடம் மரத்து விட்டதா.????

என்ன செய்வது என்று தெரியவில்லை. அழுகை அவனை மீறிக் கொண்டு வர தேம்பித் தேம்பி அழுதான்.

நேற்று டாக்டர் சொன்ன வார்த்தைகள் வேறு காதில் ஒலித்தது. ''என்ன மாதிரி வேணா ஆகலாம். சில சமயம் நாய் மாதியே செய்வாங்க. கடிப்பாங்க. ஊளையிடு வாங்க.'' ஏதேதோ சொன்னார்.

தன் தந்தை எல்லோர் முன்னிலையிலும் அவ்வளவ கேவலப்பட்டு இறப்பதா? எப்படியும் இறப்பு உறுதி! ஆனால் என்ன மாதிரி? எவ்வளவு நாட்கள்? தெரியாது.

அதுவும் அவரின் உடம்பில் புழுவைப் பார்த்ததில் இருந்து. அவனால் முடியவில்லை.

அவன் உடல் முழுவதுமே ஏதோ ஊர்வது போலவே இருந்தது.

அதிகம் யோசிக்கவில்லை. முடிவெடுத்தான்.

வீட்டிற்கு சென்றான். வீடு முழுவதும் உறவு ஜனம் இருக்க அவனுக்கு வசதியாயிற்று. வீட்டில் தாத்தாவிடம் இருந்த பணத்தில் அவருக்கு தெரியாமல் ஒரு லட்ச ரூபாய் திருடிக் கொண்டு வந்து அந்த கம்பௌண்டரிடம் கொடுத்தான்.

ஒரே ஒரு ஊசி.

அதுவும் அந்த கம்பௌன்டர், "ஊசி மட்டும் தான் கொடுப்பேன். என்னால போட முடியாது" என்று விட்டார்.

"யாருக்கும் தெரிய வராது" என்று அவன் எவ்வளவோ சொல்லியும் அவர் மறுத்து விட்டார்.

வேறு வழியில்லாமல் அந்த செய்கையை அவன் கையில் எடுத்தான். அவனே தான் அதை அவனின் தந்தைக்கு போட்டான்.

நிறைய அவரை குடிக்க வைத்து, அவரை உணர்வற்று விழ வைத்து.

கைகள் நடுங்க.

ஒரே குத்து அவரின் தொடையில்.

அடங்கி விட்டார் அவன் தந்தை.

ஆம், வரப்போகும் இறப்பை இவனாக அவருக்கு வரவழைத்து கொடுத்து விட்டான்.

அவனுடைய தந்தைக்கு நிம்மதியாக இந்த உலக வாழ்க்கையில் இருந்து விடுதலை கொடுத்தது.

அவனுக்குத் தெரியவில்லை. அவன் கொலைகாரானா என்று?

ஆனால் அவன் செய்தது கொலையே.

கருணையில் கொடுக்கப்படும் இறப்பை கூட கருணைக் கொலை என்று தானே சொல்கின்றனர்.

கார்த்திக்கிடம் பேசிவிட்டு உள்ளே வந்த தெய்வானை யின் நிராசையான முகத்தை பார்த்ததுமே சக்திக்கு புரிந்து விட்டது கார்த்திக் அவளை நிராகரித்து விட்டான் என்பது.

புரிந்த விஷயம் மனதை எப்போதும் இனி கொல்லப் போகும் விஷயம் என்றாலும், இனி எதற்காகவும் வாழ்க்கையின் ஓட்டத்தை நிறுத்த அவள் தயாராக இல்லை.

தெய்வானை என்ன பேசினார். அதற்கு கார்த்திக் என்ன சொன்னான், எதையும் அவள் கேட்கவில்லை. அவ்வளவு எதிர்பார்ப்போடு இருந்த அவளின் பேசும் விழிகள் இப்போது அதன் மொழியை தொலைத்து இருந்தது.

''அம்மா நான் காலேஜ் போறேன்'' என்று எழுந்தாள்.

''கைல கட்டு இருக்கே சக்தி, வலிக்கும். ஒரு ரெண்டு மூணு நாள் வேண்டாம்'' என்றார்.

''இல்லைமா! என்னால சும்மா இங்க உட்கார்ந்து இருக்க முடியாது!'' என்றவள் ஐந்தே நிமிடத்தில் கிளம்பி விட்டாள்.

தடுக்க நினைத்த வீரமணியிடம், "அவ போகட்டும்" என்ற சொன்ன தெய்வானை. "இங்க இருந்தா கண்டதையும் நினைச்சு மனசை குழப்பிட்டு இருப்பா! போகட்டும்!" என்று விட்டார்.

வீரமணிக்கு சக்தியின் ஆசையோ. தெய்வானை கார்த்திக்கிடம் பேசியதோ எதுவுமே தெரியாது.

காலேஜ் சென்றதும் செல்வத்தை அழைத்த சக்தி, "நம்ம காலேஜ் பக்கத்துல இருக்குற இடமெல்லாம் யாருதுன்னு விசாரிக்கணும். உங்களால முடியுமா?" என்றாள்.

"நிச்சயமா மேடம்."

"எத்தனை நாள் ஆகும்?"

"இப்போ காலையில மணி பன்னிரண்டு! நைட்குள்ள சொல்ல ட்ரை பண்றேன்!" என்றான்.

"புரோக்கர்ஸ் யாரும் நடுவுல வேண்டாம்! முடிஞ்ச வரைக்கும் அடுத்தவங்களுக்குத் தெரியாம பார்த்துக்கோங்க!" என்றாள்.

"கண்டிப்பா மேடம்."

செடியில் இருக்கும் பூ வேண்டும் என்றால் செடியையே வேரோடு பிடிங்கி வரும் ஆசாமி செல்வம். சக்தி ஒரு வேலையைக் கொடுத்தால் அதை செய்யாமல் விடுவானா? இரவு எட்டு மணிக்கு வீட்டிற்கு வந்துவிட்டான்.

காலேஜ் சுற்றி பத்து கிலோ மீட்டர் வரை இருக்கும் இடங்களில் விவரம் அவன் கையில். நிலம் யாருடையது. எவ்வளவு விலை அது போகும். எவ்வளவு விலை என்

றால் கொடுப்பார்கள். யார் யார் கொடுக்க மாட்டார்கள். என்ற அத்தனை விவரமும் அவன் கையில்.

சக்திக்கு அவன் கொண்டு வந்த விவரங்களைப் பார்த்து ஆச்சர்யம், ''நான் யாருதுன்னு கேட்க தானே சொன்னேன்.''

''எதுக்கு, மேடம் கேட்க சொல்வீங்க. வாங்க தானே! அதான் ஃபுல்லா விசாரிச்சிட்டேன்'' என்றான் பணிவாக. கார்த்திக்கிடம் இருந்து இருக்கிறான் என்றால் சும்மாவா என்ற நினைவு சக்திக்கு எழுவதை அவளால் தவிர்க்க முடியவில்லை.

''அப்பா!'' என்று வீரமணியை அழைத்து உடன் வைத்துக் கொண்டவள். அம்மாவையும் கூட வைத்து கொண்டாள்.

''நான் காலேஜ் பெருசு படுத்தலாம்னு இருக்கேன்பா'' என்றாள். வீரமணி மேலே சொல்லு என்பது போல பார்க்கவும்.

''நம்ம கிட்ட இன்ஜினியரிங் காலேஜ் மட்டும் தான் இருக்கு. இப்போ இந்த வருஷத்திற்கு மேனேஜ்மென்ட் ஸ்டடீஸ் கொண்டு வர சொல்லியிருக்கேன். இப்போ இந்த அகாடெமிக் இயர் முடியப் போகுது. இன்னும் த்ரீ மந்த்ஸ்ல நெக்ஸ்ட் அகாடெமிக் இயர் ஆரம்பிக்கப் போகுது. அப்போ நாம அட்மிசன் போடறோம்!''

''அதுக்கு முன்னாடி நாம இந்த பக்கத்துல இருக்குற இடத்தை வாங்கி பில்டிங் கன்ஸ்ட்ரக்ஷன் ஆரம்பிக்கணும். ஒரு சிக்ஸ் டு எய்ட் மந்த்ஸ்ல முதல்ல ஒரு பெரிய ஃப்ரீ ஹாஸ்பிடல் கட்டி ரன் ஆக ஆரம்பிக்கணும். அப்போ

தான் நாம அதுக்கப்புறம் மெடிக்கல் காலேஜுக்கு பெர்மிஷன் வாங்க முடியும்'' என்றாள்.

''வேற சில காலேஜசும் ஆரம்பிக்கணும், உடனே எதுவும் முடியாதுப்பா. இது சில வருஷங்கள் ஆகும். நாம நிறைய இன்வெஸ்ட் பண்ணனும், ரிடர்ன்ஸ் இதுல பெரிய அளவுல கொண்டு வர முடியும்னாலும். எனக்கு அந்த மாதிரி எந்த ஐடியாவும் இல்லை.''

''பெஸ்ட் எஜுகேஷன், அட் லோ காஸ்ட் நோ கேபி டேஷன், ஒன்லி மார்க்ஸ் ஓரியன்டெட்! ஒன்லி பீஸ்! நாம செய்யலாமாப்பா'' என்றாள்.

அவர் பதில் சொல்லும் முன்னேயே, ''ஆனா இப்போவே சொல்றேன். கைல இருக்குற பணம் பூராவும் இதுல போடற மாதிரி வரும். போட்டதுக்கு நாம எடுக்கப் போறது நான் போகப் போற வழில ரொம்ப கம்மியா தான் இருக்கும்! பராவாயில்லையா?'' என்றாள்.

''சரியாப் பண்ணுவேன்னு எனக்கு முழு நம்பிக்கை இருக்கு! தப்பாப் போனாலும் ஒண்ணும் பண்ண முடியாது! நஷ்டமாகிடும்!'' என்றாள்.

''என்ன நஷ்டம் வந்தாலும் நாம ஒண்ணுமில் லாம போயிடப் போறது இல்லை. சரியா போகும் நீ செய்மா'' என்றனர் அவளின் அம்மாவும் அப்பாவும் முழு மனதோடு.

செல்வம் அவள் பேசப் பேச வாயைப் பிளந்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

# 18

**நெஞ்சு பொறுக்குதில்லையே – இதை**

**நினைத்து நினைத்திடினும் வெறுக்குதிலையே**

**கஞ்சி குடிபதற்கிலார் – அதன்**

**காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்**

- பாரதி

**காட்சி பன்னிரெண்டு :**

சிறிது நேரம் அவனின் தந்தையுடன் இல்லை யில்லை தந்தையின் உடலுடன் அமர்ந்திருந்தான். பயம் என்ற ஒரு உணர்வு சுத்தமாக அற்றுப் போயிற்று கார்த்திக்கிற்கு.

பதினைந்தே வயதான சிறுவன் அவன். அவனின் அப்போதையை மனநிலமை. அவன் உறுதி, ஒரு வளர்ந்த ஆண்மகனுக்கான நிலையில் இருந்தது என்றுகூடச் சொல்ல முடியாது. அவர்கள் கூட இந்த சூழ்நிலையில் கலங்கித் தான் போவர்.

அவன் செய்த செயல் அவன் அறிந்திருந்தான். ஆனால் அவனுக்கு அதில் வருத்தமில்லை. அவன் தந்தை எந்த வகையிலும் கஷ்டப்படுவதையோ யார் முன்னிலையிலும் கேவலப்படுவதையோ அவன் விரும்பவில்லை.

இப்படி ஒரு சிறுவன் எங்கோ ஒருவன் தான் இருப்பான். யாராலும் கணிக்க முடியாது கார்த்திக்கை.

அவனை போல ஒரு பிள்ளையைப் பெற்றெடுத்த சந்திர சேகருக்கு இந்த முடிவு மிகவும் அதிகம். இன்னும் சிறிது நாட்கள் விட்டிருந்தால் கூட அவன் அவரைப் பார்த்துக் கொண்டிருப்பான். இந்நிலை அவ்ருக்கு வராமல் கூடப் போயிருக்கலாம்,

ஆனால் வருவதை அவனன்றி வேறு யார் அறிவார்.

அமைதியாக ஒரு கால் மணி நேரம் தந்தையைப் பார்த்து அமர்ந்திருந்தான்.

பிறகு அந்த கம்பௌன்டரை அழைத்து உறுதி செய்து ஒரு அம்புலன்சை வைத்துக் கொண்டு அவன் புறப்படும் பொழுது மணி இரவு ஏழு.

வீட்டில் யாருமில்லை எல்லோரும் உறவினரின் திருமணத்திற்கு மண்டபத்திற்கு சென்றிருந்தனர். காவலாளி மட்டுமே இருந்தான்.

காவலாளி விரைந்து சென்று காதோடு காதாக பத்ரிநாத்திற்கு தெரிவிக்க. வாசுகியும் அவரும் விரைந்து வந்தவர்கள். அதிர்ச்சியில் உறைந்து நின்றனர். பிரிந்திருக்கிறார் என்பது வேறு. இல்லாமல் போய்விட் டார் என்பது வேறு.

அதுவும் வாசுகியை விட்டு கம்பீரமாக பிரிந்து சென்ற அவரின் கணவர் இப்படி யார் எவர் என்று கூட அடை யாளம் கண்டுபிடிக்க முடியாமல் நலிந்து மெலிந்து வந்திருப்பது. தான் காரணமோ. சந்திரசேகரை எப்பாடு பட்டாவது இழுத்துப் பிடித்து இருக்க

வேண்டுமோ என்ற உணர்வு வாசுகியை பலமாகத் தாக்கியது.

வாசுகி ஒய்ந்து அமர்ந்து விட்டார். அதிர்ச்சியில் அழுகை கூட வரவில்லை.

எப்படியாகிற்று என்று பத்ரிநாத் கார்த்திக்கிடம் துருவ. ''அப்பாவைப் பார்க்கப் போனேன் நெஞ்சு வலின்னு சொன்னார். உடனே பக்கத்துல இருக்க ஹாஸ்பிடல் கூட்டிட்டுப் போனேன். அங்க போனா இறந்துட்டார்ன்னு சொல்லிட்டாங்க'' என்றான்.

மூளைக்குள். ''நீ தான் உன் தந்தையின் இறப்புக்கு காரணம்'' என்ற விஷயம் ஓடிக்கொண்டே இருந்தாலும் அது யாருக்கும் தெரியவில்லை. அன்று தந்தை சாக் கடையில் விழுந்திருந்த போது தான் நாய் கடித்திருக்க வேண்டும் என்ற அனுமானத்திற்கு வந்திருந்தான்.

அவன் சரியாகக் கவனிக்காததால் தான் இப்படி யாகிற்று. எப்படியாகினும் அவனின் தந்தையின் சாவிற்கு அவன் பொறுப்பே என்ற விஷயம் மூளைக்குள் பதிந்தது.

போராட்டாம் கார்த்திக்கின் மனம் முழுவதும் போராட்டம்.

மேலே யாருடைய கேள்விக்கும் எதற்கும் கார்த்திக் பதில் சொல்லவில்லை.

பத்ரிநாத் உடனே மலேசியாவில் இருக்கும் தன் னுடைய டாக்டர் மகனுக்கு தகவல் சொன்னார். அவ ருடைய மகன் அவசரமாக கிளம்பியதால் மகனையும் மகளையும் அங்கேயே தெரிந்தவர்கள் பொறுப்பில்

விட்டு மனைவியுடன் அடுத்து இருந்த விமானத்தில் உடனே கிளம்பினார்.

அந்தோ அவர்களின் சோதனைக் காலம் முடிய வில்லை.

அவர்கள் வந்த விமானம் விபத்துக்குள்ளாகி கடலுக் குள் விழ. அதிலிருந்த அத்துணை பேரும் மாண்டனர். உயிர் என்ன உடல் கூட மிஞ்சவில்லை.

செய்தி கிடைத்து இன்னும் ஓய்ந்துப் போயினர் குடும்பத்தினர். எப்படியோ ஈமக்ரியைகள் முடிய.

கார்த்திக்கின் போராட்டம் அவனுக்குள்ளேயே அமுங் கியது. அவன் மற்றவர்களிடம் இருந்து மனதளவில் விலகினான்.

கார்த்திக் பணம் எடுத்தது. பத்ரிநாத்தின் கவனத்திற்கு வராமலேயே போயிற்று.

வாசுகியின் அண்ணன் மக்களான பிரபுவையும் சுமித்ராவையும் தங்கள் கூட வரழைத்துக் கொண்டார் அவர்களின் தாத்தாவான பத்ரிநாத்.

யாரை யார் தேற்றுவது என்று யாருக்குமே புரிய வில்லை. குடும்பமே நிலைக்குலைந்தது. வாசுகிக்கு கணவன் இறந்ததற்கு தனிமையில் மட்டுமே அழ முடிந்தது. நான்கு குழந்தைகள் அவரை நம்பி இருக் கின்றனரே என்று அவர் நினைக்க அது மூவர் என்று அவருக்குப் புரியவில்லை.

கார்த்திக் தானாகவே பெரியவனாகிக் கொண்டான். அவனின் தந்தையின் ரகசியத்தை அவனோடு புதைத்துக் கொண்டான்.

பத்ரிநாத் அங்கே இருக்கப் பிடிக்காமல் வீரமணியின் மேல் போட்ட கேசை கூட அப்படியே விட்டு ஈரோ டிற்கு பக்கத்தில் இருக்கும் அவரின் பூர்வீக இடத்திற்குக் குடிப்பெயர்ந்தார்.

கார்த்திக் பொறுப்பாக இருந்தான். மீண்டும் ஹாஸ்பிடலுக்கு போகவில்லை. அவனை விட ஒரு வயது இளையவனான பிரபு அவனிடம் நன்கு ஒட்டி கொண்டான்.

ஆனால் அம்மாவிடம் இருந்தும் தாத்தாவிடம் இருந்தும் விலகி விட்டான். ஏனோ தந்தையின் முடி வுக்கு அவர்கள் அவரை ஆதாரிக்காததும் காரணம் போல அவன் மனதுக்குள் ஒரு தோற்றம்.

வாசுகி அவனை எவ்வளவு இழுத்துப் பிடித்தாலும் கேட்கிற கேள்விக்கு பதில் சொல்வானே தவிர அவனாக அவசியமான வார்த்தைகளைத் தவிர வேறு பேசமாட் டான்.

வாசுகி பரிதாபத்திற்குரிய ஜீவனே!

இளம் வயதில் கணவனைப் பிரிந்து. பின்னர் அவரையும் இழந்து, இப்போது மகனும் விலகி விலகிப் போனான்.

கார்த்திக் பத்ரிநாத்திடம் சுத்தமாகப் பேசமாட்டான். எப்போதாவது அதிசயமாக ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசினால் அதிசயம்.

வருடங்கள் இப்படியே ஓடின.

## காட்சி: பதின்மூன்று

கார்த்திக் ப்ளஸ் டூ பரிட்சை முடித்திருந்த சமயம். ரிசல்டிற்காக காத்திருந்த போது வீட்டில் இருந்தான்.

ஐ ஐ டீ என்ட்ரன்ஸ் எக்சாம் எழுதியிருந்தான். அண்ணா யுனிவர்சிட்டி என்ட்ரன்ஸ் எக்ஸாமிற்காக காத்திருந்தான். எப்படியும் முதன்மையான கல்லூரியில் இடம் கிடைத்து விடும் என்று நம்பினான். கார்த்திக் படிப்பில் மிகவும் கெட்டி. படிப்பு அவனுக்கு மிகவும் இஷ்டமான ஒன்று.

வீட்டில் இருக்கும் போது பதினோரு வயது வைஷ்ணவியும் சுமித்ராவும், பதினாறு வயது பிரபுவும் அவனையே சுற்றி வருவர்.

சுமித்ரா கேட்கவே வேண்டாம். வாசுகி "இவன் உனக்கு மாமா" என்று அடையாளம் காட்டிக் கொடுத் திருக்க. "மாமா, மாமா" என்று அவனையே சுற்றி வருவாள்.

ஏதோ ஒரு வயதான உறவு பாட்டி அவர்களின் வீட்டிற்கு வந்திருக்க இதை பார்த்தவர், "உனக்கு உன் பையனுக்கு பொண்ணு பார்க்க வேண்டிய அவசியமே யில்லை வாசுகி, சுமித்ராவே போதும், பெரிய பசங்களா ஆன பிறகு ஜோடிப் பொருத்தமும் நல்லா இருக்கும்" என்று சொல்ல.

அதைக் கேட்டு வாசுகி பூரிப்படைய. அது கொடுத்த தைரியத்தில் வாசுகி. "ஆமாம் பெரியம்ம! அப்படி தான் மனசுல நினைச்சிருக்கேன்" என்று சொல்ல.

அது அந்த பக்கமாக வந்த பத்ரிநாத்தின் காதில் விழ.

வெடித்தது பூகம்பம்.

வாசுகியை ஒரு மாதிரி நிற்க வைத்து கேள்வி கேட்டார். அங்கே தான் பிள்ளைகள் நால்வரும் இருந்தனர்.

''யாரை கேட்டு வாசுகி நீ அப்படி ஒரு வார்த்தையை சொன்ன. ஏன் உன் புருஷனுக்கு உன்னை கட்டிக் கொடுத்து நான் பட்டது போதாதா. சொத்தை இழந்து, பெத்தப் பையனை இழந்து, வாழ்ந்த ஊரை விட்டு, பழகின ஜனங்களை விட்டு, இப்படி வந்து உட்கார்ந்திருக்கேன்'' என்று கோபமாக கத்தினார்.

''அவனோட வாரிசுக்கு மறுபடியும் என் வீட்டு பொண்ணை கட்டிக் குடுப்பேன்னு எப்படி நினைக்கலாம் நீ.''

''அப்பா! அவன் என்னோட பையன்!''

''இருந்துட்டு போகட்டும்! என்ன ஆனாலும் உன் பையனுக்கு என் பேத்தியைக் குடுக்க மாட்டேன். அவனும் அவங்கப்பா மாதிரியே ஆகிட்டான்னா.''

''அப்படி சொல்லாதீங்கப்பா, என் பையன் நல்லா இருப்பான்.''

இவர்கள் பேசுவதை கார்த்திக் கேட்டுக் கொண்டு தான் அமர்ந்திருந்தான். ''இவங்க பேத்தியை நான் என்னவோ கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொன்ன மாதிரி எதுக்கு இவங்க ரெண்டு பேரும் சண்டை போட்டுகறாங்க. இவரே கல்யாணம் பண்ணிக் கொடுத்தாலும் எனக்கு வேண்டாம்'' என்பது மாதிரியாக அதை வேடிக்கை பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தான்.

''உன் பையன் நல்லா இருப்பான். இல்லை. வேற விஷயம். அவனுக்கு நான் பொண்ணை குடுக்க

முடியாது. உன் புருஷன் லட்சணத்துக்கு நீ பேசாத! அவன் பொழப்பெல்லாம் நாய் பொழப்பு!'' என்ற வார்த்தையை பத்ரிநாத் உச்சரித்தது தான் போதும்.

இத்தனை நேரம் யாரோ என்னவோ பேசுகிறார்கள் என்பது போல அமர்ந்திருந்த கார்த்திக். ''நாய் பொழப்பு'' என்ற வார்த்தையில் பொங்கி விட்டான்.

''எங்கப்பாவை பத்தி பேசற வேலை வெச்சிக்காதீங்க.'' என்று அவன் குரலுயர்த்த.

''ஏன் பேசக்கூடாது? ஏன் பேசக்கூடாது? எப்படி என் பொண்ணை கல்யாணம் பண்ணி குடுத்தேன் தெரியுமா? எத்தனை நாள் உங்கப்பாவோட சேர்ந்து வாழ்ந்திருப்பா. எத்தனை சொத்து குடுத்திருக்கேன். அத்தனையும் அழிச்சிட்டான்.

''அது மட்டுமா. என் பையனுக்கு வெச்சிருந்த சொத்தையும் அடுத்தவனுக்கு திருட்டுத்தனமா எழுதி கொடுத்துட்டான்.

''அட வசதி வாய்ப்பு இல்லைன்னா போகுது. கல்யாணம் பண்ணின பொண்ணைக் கூட வெச்சு குடும்பம் நடத்தினானா. பாதி நாள் எங்க வீட்ல தான் இருந்தா.

''இதுல உங்கம்மாவுக்கு உனக்கு என் பேத்தியை கட்டிக்கொடுக்கணுமா. உங்களுக்கு சொத்தையும் கொடுக்கணும். பொண்ணையும் கொடுக்கணும். உங்கப்பனுக்கு அடுத்ததா நீ கிளம்பியிருக்கியா?'' என்று அவர் மூச்சைப் பிடித்துக் கொண்டு கத்த.

''உங்களுக்கு என்ன உங்க சொத்துத் தானே வேணும். எங்கப்பா தொலைச்சதை நான் வாங்கிக் கொடுக்கறேன்'' என்று அவன் சொல்ல.

''நீ சொத்தை வாங்கி கொடுப்ப?'' என்று அவர் இளக்காரமாக கேட்டார்.

''நான் வாங்கிக் கொடுக்கறேன்'' என்று அவன் உறுதி பூண.

''அப்போவும் என் பேத்தியை உனக்குத் தரமாட்டேன்'' என்று அவர் சொல்ல.

''நீங்க என்ன தரமாட்டேன்னு சொல்றது! நான் சொத்தை வாங்கி குடுக்கறேன்! உங்க பேத்தியை தான் கல்யாணம் பண்றேன்! நீங்க இருக்கும் போதே இது நடக்கும்!'' என்று ஏறக்குறைய சூளுரைத்தான்.

வார்த்தையில் அத்தனை அழுத்தம் எதிராளியை மறுபடியும் பேச வைக்காத த்வனி.

அவனிடம் பதில் பேச முடியாமல் பத்ரிநாத் அந்த இடத்தை விட்டே அகன்று விட்டார்.

இளம் கன்று பயமறியாது. அதுவும் கார்த்திக்கிற்கு பயம் என்பதே கிடையாது.

அவனுக்கு சுமித்ராவை திருமணம் செய்ய வேண்டும் என்ற எந்த எண்ணமும் இல்லை. அந்த வயதில் அதற்கான எண்ணங்களும் அப்போது அவனிடத்தில் இல்லை.

ஆனால் சொல்லிவிட்டான். அவளை தான் திருமணம் செய்வேன் என்று சொல்லி விட்டான்.

அதுவும் அந்த சிறுமியின் முன்னிலையிலும் சொன்னான். கூட நின்ற சுமித்ரா வைஷ்ணவி பிரபு என்ற மூன்று பிள்ளைகளும் அதை கேட்டு நின்றனர்.

அங்கே ஒரு கனமான அமைதி அதன் பிறகு.

அடுத்த நாளே வீட்டை விட்டுப் போய் விட்டான்.

வாசுகி எவ்வளவு தடுத்தும் கேட்கவில்லை. ''கார்த்திக்! எங்கப்போவ? என்ன பண்ணுவ? உன் படிப்பு அது கெட்டுடும்! என்ன செய்யப் போற?'' என்று சொல்லியும் கேட்கவில்லை.

அழுது பார்த்தார். கெஞ்சி பார்த்தார். மிஞ்சி பார்த்தார். மிரட்டி பார்த்தார். அவரின் மகன் எதற்கும் அசையவில்லை.

''படிச்சி. சம்பளம் வாங்கி. வாசுகி குழுமத்தை விலைக்கு வாங்க முடியுமா என்ன?'' என்றவனின் கேள்விக்கு வாசுகியால் பதில் சொல்ல இயலவில்லை.

''அதுக்காக படிப்பை.'' என்று அவர் ஆரம்பிக்கும் போதே.

''விட்டுடப் போறேன்!'' என்று முடித்து விட்டான். மீறி எதையும் கேட்காதே என்பது போன்ற குரல்.

கார்த்திக், ''அம்மா வேணும்னா, நான் சொல்றதை கேளு கார்த்திக்! படிப்பை நிறுத்தாதே!'' என்று மகனின் வாழ்க்கை வீணாகிவிடக் கூடாதே என்ற அக்கறையில் வாசுகி ஏறக்குறைய ப்ளாக் மெயில் செய்ய.

''நீயே வேண்டாம்!'' என்பது போல கார்த்திக் வீட்டை விட்டு வெளியேறினான்.

அவன் மனதில் இருந்ததெல்லாம். நாய் கடித்ததை சரியாகப் பார்த்து அவன் அப்பா மயங்கி கிடந்த அன்றே நாய்கடி ஊசி போட்டிருந்தால். அவன் தந்தை இந்த உலகத்தை விட்டு. இப்படி மகனாலேயே அனுப்பி வைக்கப்பட்ட சாவை அடைந்திருக்க மாட்டார்.

அவனுக்கு அவனின் தந்தையின் அடையாளம் வேண்டும். அவர் இந்த உலகில் இல்லாவிட்டாலும் அதை மீட்டெடுக்க வேண்டும். அதற்கு பணம் வேண்டும். கேவலமாக பேசும் தாத்தாவிடம். "இந்தா உன் சொத்து" என்று தூக்கிப் போட வேண்டும்.

அதற்கான பாதையைத் தேடிக் கிளம்பினான்.

இதற்கிடையில் சிறுமியான சுமித்ராவின் மனதில் பதிந்தது தன்னைத் திருமணம் செய்வதற்காக அவளின் மாமாவான கார்த்திக் வீட்டை விட்டுப் போனான் என்பதே.

நினைவலைகள் விடுபட நிகழ்காலத்தில்.

கார்த்திக் சக்தியைப் பற்றி அதன் பிறகு அதிகம் யோசிக்கவில்லை. செல்வம் தான் கூட இருக்கிறானே. ஏதாவது பிரச்சனையான விஷயம் என்றாலோ. பிரச் சனையாகக்கூடிய விஷயம் என்றாலோ உடனே சொல்லிவிடுவான் என்று தெரியும். அவனும் சக்தியின் செயல்பாடுகளை கவனித்துக் கொண்டு தான் இருந்தான்.

செல்வத்தையும் மீறி இன்னுமொரு ஆளையும் முடிந்த தகவல் சொல்லும்படி வைத்திருந்தான்.

அதனால் தைரியமாக வீரமணியும் சக்தியும் சொன்ன மாதிரி அவர்களின் பணத்தை ஒரு வாரத்தில் அவர் களிடம் சேர்ப்பித்து விட்டான்.

சக்தி பேச்சில் மட்டுமல்ல செயலிலும் கெட்டி என் பதை நிரூபித்தாள் என்று சொல்லும் அதே சமயம். அவள் செய்ய நினைப்பதை ஒரு கோடாக சொல்ல. அதில் ரோடே போட்டுக் கொடுத்தான் செல்வம்.

செல்வத்தின் செயல்பாடுகளைப் பார்க்கும் போது கண்டிப்பாக அவனை மெச்சாமல் சக்தியால் இருக்க முடியவில்லை. அவனை மெச்சினாலும் இது கார்த் திக்கின் ட்ரைனிங் என்பதும் அவளுக்குள் ஓடிக் கொண்டே இருந்தது.

அதாவது கார்த்திக் அவளுக்குள் ஓடிக் கொண்டு தான் இருந்தான். எண்ணத்திலோ, நினைவிலோ, யாராவது ஏதாவது செய்யும் போது அதன் தாக்கத்திலோ, அவன் அவளுள் இருந்தான்.

சக்தியும் அவனின் நினைவுகளை ஒதுக்க முயல வில்லை. அதனோடே வாழ கற்றுக் கொண்டாள். அப்போது தான் அவளால் இயல்பாக இருக்க முடிந்தது, நடமாட முடிந்தது.

அவன் மீது கோபத்தையோ, வெறுப்பையோ, ஏக்கத்தையோ இழுத்துப் பிடிக்கவில்லை. வேலைகளில் கவனத்தைத் திருப்பினாள்.

''அப்பா ஒரு டிரஸ்ட் மாதிரி ரெஜிஸ்டர் பண்ணி, நம்ம காலேஜை அதுக்கு கீழ கொண்டு வந்துடலாம்.

''நம்ம கார்த்திக் இப்போ நம்ம கிட்ட கொடுத்த பணத்தை கணக்குல கொண்டு வர முடியாது. அதனால நம்ம பணம் கொடுத்து வாங்கப் போற இந்த சொத்தை யெல்லாம் அவங்க நம்ம டிரஸ்ட்டுக்கு தானமா கொடுத்த மாதிரி. அதாவது ப்ரீயா கொடுத்த மாதிரி கொடுக்க சொல்வோம்.

''நாம அவங்களுக்கு பணம் கொடுத்து தான் வாங்கு வோம். ஆனா சொத்தை அவங்க டிரஸ்ட்டுக்கு தானமா

கொடுக்கறாங்க. சொத்து நம்ம டிரஸ்ட்டுக்கு தானமா வந்த மாதிரி வந்துடும். நம்ம குடுக்கற பணம் அவங்க கணக்குல வராது. நமக்கு சொத்தா மாறிடும்'' என்றாள்.

நல்ல யோசனை தன் மகளுக்கு. இவ்வளவெல்லாம் யோசிக்கத் தெரியுமா? என்பது போலப் பார்த்தார்.

பெண்கள் எல்லாம் யோசிக்க தெரியாதவர்களோ இல்லை செயல்பட தெரியாதவர்களோ கிடையாது. அவர்களுக்கு அதற்கான சந்தர்ப்பமோ வாய்ப்புகளோ அமைவதில்லை என்பது தான் நிஜம்.

என்ன தான் நாம் பெண்ணியம் பேசினாலும் இது ஆணாதிக்க சமுதாயமே.

பெண்ணியம் பேசும் அதிகமான பெண்களும். உடைகளிலும், பழக்க வழக்கங்களில், ஆண்கள் போல வெளியே ஊர் சுற்றுவதில், இவன் என் நண்பன் என்று தாங்கள் ஆண்களோடு சரிக்கு சமமாக பழகுவதில். இப்படித்தான். இதை தான். பெண்ணியம் என்று நினைக்கின்றனர்.

இதுவல்ல பெண்ணியம்.

ஆண்கள் நமக்கு கொடுக்கும் முக்கியத்துவம். அவர்கள் நமக்கு கொடுக்கும் மரியாதை. சொத்தில் நமக்கு கொடுக்கும் பங்கு. நம் மேல் அவர்களின் கருத்தைத் திணிக்காத தன்மை. நீ எனக்குக் கீழே என்று எண்ணாத தன்மை. உன்னால் என்ன செய்ய முடியும் என்று பெண்களை இளக்காரமாக நினைக்காத தன்மை. இதுவே பெண்ணியம்.

மாற்றம் பெண்களிடம் மட்டுமல்ல. பெண்களை பார்க்கும் ஆணின் பார்வையில் வர வேண்டும்.

பெண்களுக்கு அமையும் சந்தர்ப்பங்களையும் அவர்கள் சரியாக பயன்படுத்திக் கொள்ள ஆண் வர்க்கம் நிறைய சமயம் விடுவதில்லை என்பதையும் விட. பெண்களும் விடுவதில்லை.

என்ன தான் நாம் சுதந்திரம் பேசித் திரிந்தாலும் நாம் அடிமைகளே.

அதுவும் அடக்கு முறைகளையும் விட அன்பு என்னும் ஆயுதத்துக்கு நாம் மிகவும் அடிமை.

இந்த மாதிரி எந்த ஆயுதமும் இப்போதைக்கு சக்தியை அடக்கும் நோக்கம் இல்லாததால் சக்தியால் சுதந்திரமாகச் செயல்பட முடிந்தது.

அவளின் யோசனைகள் வடிவம் பெற்றன. ஆனால் ஒரு இணுக்கு கூட கார்த்திக்கின் பார்வையில் இருந்து தப்பவில்லை. கார்த்திக்கிற்கே சக்தியின் செயல்பாடு குறித்து ஆச்சர்யம், செம்மையாக செயல்பட்டாள்.

ஆனால் கவனிப்பதோடு நிறுத்திக் கொண்டான். வேறு எதிலும் தலையிடவில்லை. தலையிடும் அவசியமும் அவனுக்கு வரவில்லை. செல்வம் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டான்.

கார்த்திக்கும் அவனின் அப்பாவின் தயாரிப்பு நிறுவனம் பேரில் படம் தயாரிக்க முயற்சி எடுத்துக் கொண்டிருந்தான்.

சக்தி டிரஸ்ட் ஆரம்பித்தாள். அன்னையும் தந்தையுமே அதிலே மேனேஜிங் டிரஸ்ட்டீ. செயல்பாடு எதுவாகினும் எல்லாம் அவள் தந்தையின் பெயராலேயே.

அதில் வீரமணி தெளிவாக இருந்தார். எல்லாம அவர் பெயரில், அவர் மூலமாக இப்படி பார்த்துகொண்டார்.

யாரும் தன் பெண்ணை அவ்வளவு சுலபமாக நெருங்க விடவில்லை. இன்னொன்று நாளை எப்படி இத்தனை சொத்துக்கள் என்ற கேள்வி வந்தாலும் தன் பெண்ணின் பெயர் இதில் வருவதை விரும்பவில்லை

அது மட்டுமல்லாமல் கார்த்திக்கின் தேவையை சக்தி உணராமல் பார்த்துக் கொண்டனர். எந்த வேலைக்கு எல்லாம் கார்த்திக்கை தேடுவாளோ சக்தி அந்த வேலைகள் எல்லாம் தடையின்றி நடக்குமாறு பார்த்துக் கொண்டனர்.

அதனால் ஆக்கம். சொல். எல்லாம் சக்தியுடையதாக இருக்க. சொன்ன செயலை அச்சு பிசகாமல் செல்வம் வடிவம் கொடுக்க. வீரமணி மேற்பார்வை பார்த்தார்.

எப்போதும் அரசியலில் மிகுந்த ஆர்வம் கொண்ட வீரமணி இப்போது அதிலும் தீவிரமாக கவனம் செலுத்தினார்.

சக்தி மட்டுமல்ல கார்த்திக் இல்லாததால் வீரமணியும் பிசியானார்.

நாட்கள் வேகமாக ஓடின. நிலங்கள் வாங்கி முடித்து. கட்டிட வேலைகளும் ஆரம்பமாகின. இது சக்தியின் தரப்பாக இருக்க.

அங்கே சென்னையில் தன் அப்பா ஏற்கனவே வைத்திருந்த தயாரிப்பு நிறுவனத்தின் பேரில் கார்த்திக் மிகவும் பிரமாண்டமாக ஒரு புதிய திரைப்படத்தை தொடங்கினான்.

முற்றிலும் புதுமுகங்களை வைத்து தொடங்கினான். அவன் நினைத்திருந்தால் எந்த முன்னணி நடிகரையோ நடிகையையோ நடிக்க வைத்திருக்க முடியும். ஆனால் அது அந்த நடிகரின் படமாகவோ நடிகையின் பட மாகவோ தான் அடையாளம் காணப்பட்டிருக்கும். தயாரிப்பு நிறுவனம் பெரிதாக வெளியே தெரியாது.

ஆனால் அவன் அப்பாவின் தயாரிப்பு நிறுவனம் மீண்டும் உயிர்த்தெழச் செய்ய புதுமுகங்களை போட்டு மிகவும் பிரமாண்டமாக தொடக்க விழாவை செய்ய திரையுலகமே திரும்பிப் பார்த்தது.

அதை விடவும் அங்கே அவன் அப்பாவின் மகனாக. அதாவது சந்திரசேகரின் மகன் கார்த்திக்காக அடை யாளம் காணப்பட்டான். அது தானே அவன் வேண்டியது.

அவன் அப்பாவின் பெயர் அந்த திரையுலகில் கோலோச்ச வேண்டும். குறைந்த பட்சம் அவன் உயிருடன் இருக்கும் வரையிலாவது.



# 19

சோலைமல ரொளியோ - உனது

சுந்தர புன்னகைதான்?

நீலக்கடலலையே - உனது

நெஞ்சி லலைகலடி!

**கோலக்குயி லோசை - உனது**

**குரலி னிமையடீ!**

**வாலைக் குமரியடீ - கண்ணம்மா!**

**மருவக் காதல்கொண்டேன்.**

- பாரதி

**காட்சி பதினான்கு :**

வீட்டை விட்டு வெளியேறிய கார்த்திக் சென்றது கிருஷ்ணகிரி. கையில் ஒரு ஐந்தாயிரம் ரூபாய் வைத்திருந்தான். நான்கைந்து செட் உடைகள். அவனை சாதாரண தோற்றத்தில் காட்டக்கூடிய உடைகளை வைத்திருந்தான். பணம் எப்படியும் சாப்பாட்டிற்கு ஒரு இரண்டு மாதத்திற்கு வரும் என்று தெரியும்.

அதன் பிறகு ???

அன்றாட ஜீவனத்தை பார்ப்பது அவன் நோக்கம் அல்லவே.

என்ன செய்வது என்று தெரியவில்லை. எந்த வகையில் அவன் சம்பாதித்தது குவாரியை வாங்குவது. பணம் எப்படி சம்பாதிப்பது என்பது ஒரு புறம். அதை விடவும் அப்படி சம்பாதித்தாலும் வீரமணி அந்த உரிமத்தை தருவாரா என்பது ஒரு புறம்.

அவனிடம் இருந்தது தைரியம் மட்டுமே! என்னால் முடியும் என்ற தைரியம்!

முதலில் வீரமணியின் வீட்டிற்குள் நுழைந்து அவரை நெருங்க முடிவு செய்தான்.

வீரமணியின் குவாரி ஊரை விட்டுத் தள்ளி இருந்தது. அங்கே போய் திடீரென்று எப்படி வேலை கேட்பது என்று தெரியவில்லை.

எப்படியோ அவரின் வீட்டை கண்டுபிடித்து இரண்டு மூன்று நாட்கள் அவரின் வீட்டுக்கருகில் போய் அடிக்கடி என்ன நடக்கிறது யார் யார் வீட்டில் இருக்கிறார் என்பது போல வேவு பார்த்தான்.

யாரையும் பார்க்க முடியவில்லை. ஏன் வீரமணியைக் கூட பார்க்க முடியவில்லை.

அவரின் வீட்டின் வேலைக்காரன் சற்று பக்கத்தில் இருக்கும் மளிகை கடைக்கு அடிக்கடி சாமன் வாங்க வருவதை பார்த்தான். இவ்வளவு பெரிய வீட்டில் எப்படி இப்படி சில்லரையாக சாமான் வாங்குகிறார்கள் என்று அவன் யோசிக்க. அவனுக்குப் புரிந்தது. அவன் சாமான் வாங்கும் சாக்கில் தம் அடிக்க வருகிறான் என்று.

வேண்டுமென்றே ஒரு நூறு ரூபாயை கீழே போட்டு, "அண்ணா உங்க நூறு ரூபாய் கீழ விழுந்திருக்கு!" என்று கார்த்திக் அவன் வேலையாளிடம் எடுத்து கொடுக்க.

"என்னோடதா. இல்லையே! என்கிட்ட அவ்வளவு பணம் இல்லையே!" என்றான் அந்த வேலையாள்.

"பரவாயில்லை வெச்சிகோங்க" என்று அந்த வேலை யாளிடம் பேச ஆரம்பித்தான். சிறிது நேரத்திலேயே வேலையாள் சற்று வெகுளி என்பதைப் புரிந்து கொண் டவன், அவனை ஸ்நேகிதமாக்க பேசத் தொடங்கினான்.

அவனும் இவனுடன் ஒரு ஐந்து நிமிடம் பேசிவிட்டு செல்ல. இப்படியே ஒரு மூன்று நாள் அவனுடன்

அவ்வப்போது எதிர்பாராமல் அங்கே பக்கத்தில் வேலை செய்பவனை போல பேசி நன்கு ஸ்நேகிதமாக்கி கொண்டான் கார்த்திக்.

பெரிய வீட்டு பையனை போல இருக்கும் கார்த்திக் தன்னை மதித்து பேசுவது அந்த வேலையாளுக்கு அவ்வளவு பிடித்து இருந்தது.

அதுவும் கார்த்திக்கின் ஆங்கிலம் கலந்த தமிழ் அவனை ஒரு பெரிய பணக்கார வீட்டுப் பிள்ளையாகவே காட்டும்.

இதற்குள் ஓரளவு அந்த வேலையாள் மூலமாக வீட்டினரைப் பற்றி ஓரளவு விஷயங்கள் தெரிந்து கொண்டிருந்தான் கார்த்திக்.

வீட்டில் வீரமணி, அவரின் மனைவி, ஒரு மகள் என்பது புரிந்தது. மகள் பத்தாவது பரீட்சை எழுதித் தேர்வு முடிவுக்காகக் காத்திருப்பது புரிந்தது. தற்போது யாரும் வீட்டில் இல்லை நான்கு நாட்கள் மைசூர் டூர் சென்று இருப்பது தெரிந்தது.

எப்படியாவது அவர்கள் வீட்டில் ஒரு வேலை வாங்கி உள்ளே நுழைந்து விட வேண்டும் என்ற யோசனை யோடே அவனின் அன்றைய இரவு கழிந்தது. ஒரு ஆண்கள் தங்கும் விடுதியில் தங்கியிருந்தான்.

காலை டீ குடிக்க அவன் விடுதியை விட்டு நடந்து வந்து கொண்டிருந்த போது. ஒரு சிறுபெண் அவளுடைய ஸ்கூட்டியில் அவனைக் கடந்து சென்றாள். அவள் வெகுதூரத்தில் இருந்து அவன் பார்வை வட்டத்தில் தான் எதிரில் வண்டி ஓட்டிக் கொண்டு

வந்தாள். ஆனால் ஏதோ யோசனையில் இருந்ததால் கார்த்திக் அவளை கவனிக்கவில்லை.

அவனைக் கடக்கும் சமயம் தான் பார்த்தான். அந்த முகம் அவனை கவர்ந்தது. ஆனால் நிமிடத்தில் அவனைக் கடந்து விட்டாள். இன்னும் சற்று முன்பாக அவளைப் பார்த்திருந்தால் நன்றாகப் பார்த்திருக்கலாமோ என்று கார்த்திக்கிற்குத் தோன்றியது.

பொதுவாகக் கூட கார்த்திக் இது வரை எந்தப் பெண் ணையும் திரும்பிப் பார்த்தது இல்லை. அவனுடைய வயதுக்கு உண்டான எந்த செய்கைகளும். பெண்களின் மீதான சிறு ஆர்வம் கூட அவனிடம் இருந்தது இல்லை.

முதன் முதலாக ஒரு இளம்பெண்ணின் முகம் அவனைக் கவர்ந்தது.

அவனையறியாமல் திரும்பித் திரும்பிப் பார்த்தான். அவள் சென்று விட்டாள். டீ குடித்து திரும்பி வரும் போது இப்போது எதிரில் நீளமாக இருந்த ரோட்டைப் பார்த்துக் கொண்டே வந்தான்.

ஒரு வேளை திரும்ப வருவாளோ என்ற ஒரு சிறு நப்பாசை, பார்வை ரோடை அளக்க அவனை ஏமாற் றாமல் அந்த இளம் பெண் வந்தாள். இப்போது நன்றாகப் பார்த்தான். இளம்பெண் என்றும் சொல்ல முடியாது சிறுமி என்றும் சொல்ல முடியாது. கண்டிப்பாக ஸ்கூல் படிக்கும் பெண் தான்.

அவன் விடாமல் அவளைப் பார்த்துக்கொண்டே நடக்க. சற்று தூரத்தில் இருந்து அவள் வருவதை பார்த்துக்கொண்டே வந்தான்.

அவள் மிகவும் மெதுவாக தான் ஸ்கூட்டி ஓட்டிக் கொண்டு வந்தாள். அதற்குள் கிளை சாலையில் இருந்து ஒரு சிறுவன் சைக்கிளில் வேகமாக வந்தான். ஸ்கூட்டி யில் வந்தவள் அவனுடன் மோதினாள். மோதலை தவிர்த்திருக்க வாய்ப்பில்லை.

ஏனென்றால் தவறு அந்தச் சிறுவன் மீது வேகமாக குறுக்காக வந்து விட்டான்.

ஸ்கூட்டி மோதியது தான் போதும் அந்தப் பையன் சைக்கிளில் இருந்து தூக்கி எறியப்பட்டு சற்று தள்ளி விழுந்தான். விழுந்தவன் எழுந்திருக்கவேயில்லை.

இவளும் வண்டியோடு விழுந்தவள், சட்டென்று எழுந்து நின்று கொண்டாள்.

அப்போது சாலையில் ஆள் அரவம் கம்மியாக இருந்த தால் ஒன்றிரண்டு பேரே பார்த்தனர்.

வேகமாக அவர்கள் அருகில் செல்ல கார்த்திக்கும் வேகமாக அந்த இடத்தை அடைந்தான். தடுமாறி எழுந்து அவள் நின்று கொண்டிருந்தாள்.

விழுந்த அந்த சிறுவனையே பயத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த சிறுவன் எழவேயில்லை. எல்லோர் கவனமும் சிறுவன் மேலேயே இருந்தது.

அவளின் பயந்த முகத்தை பார்த்த கார்த்திக் வண் டியைத் தூக்கி நிறுத்திப் பிடித்துக் கொண்டவன். "your just get out of this place immediately before others see you" என்றான்.

கான்வென்ட் படிப்பு, ஆங்கிலம் அழைப்பில்லாமல் அவனுடைய வாயில் நுழைந்து கொள்ளும். அவள் மலங்க மலங்க விழித்துக் கொண்டு நின்றாள்.

அதற்குள் ஆட்களின் பார்வை இவர்களின் புறம் திரும்ப, ''சீக்கிரம் போ!'' என்றான். வண்டி கார்த்திக் கையில் இருந்ததால் அவர்களின் பார்வை கார்த்திக் புறம் திரும்பியது.

அவள் தயங்க, ''போ'' என்று கத்தினான். கூட்டம் கூடினால் மாட்டிக் கொள்வாள். விழுந்த சிறுவன் இன்னும் எழுந்துக் கொள்ளவில்லை. அவனின் தலையில் வேறு அடிபட்டு ரத்தம் வந்தது.

அந்தப் பெண் பயந்துக்கொண்டே உடனே அந்த இடத்தை விட்டு விரைவாகச் சென்று விட்டாள்.

அவன் அந்த ஏரியா பையன் போல யாரோ தகவல் கொடுக்க திபு திபு வென்று பத்து பதினைந்து பேர் வந்தனர்.

கார்த்திக் இடித்தானா இல்லையா என்றுக் கூட தெரியாது. இவன் வண்டியை பிடித்துக்கொண்டிருக்கவும் அந்த சிறு பெண் வேறு வேகமாக செல்லவும். ஏதோ பெண்ணுடன் வண்டியில் வந்தவன் இடித்து விட்டதாக தோற்றம் கொடுத்தது.

''ஏன்டா, பொண்ணு கூட வந்தா உனக்கெல்லாம் கண்ணு தெரியாதா?'' என்று சொல்லி வண்டியை பிடித்துக் கொண்டு நின்ற அவனை உடனே அடிக்க ஆரம்பித்தனர்.

விழுந்த அதிர்ச்சியில் அந்த சிறுவன் மயக்கமாகியிருக்க. ரத்தம் வேறு வர. அவனை ஹாஸ்பிடல் கொண்டு செல்லக் கூட முயலாமல் இவனை அடிக்க ஆரம்பித்தனர்.

பின்னர் ஒரு சிலர் சிறுவனை தூக்கி ஹாஸ்பிடல் செல்ல. கூடிய கும்பலில் இருந்த சிலர் என்ன ஏதென்று தெரியாத போதிலும் கூட சேர்ந்து அடிக்க. கார்த்திக்கின் ''வேண்டாம், விட்டுடுங்க!'' என்ற கத்தல் அங்கே யாருக்கும் கேட்கவில்லை.

அப்போதும் வேண்டாம் என்று தான் கத்தினான். அந்தப் பொண்ணு தான் இடித்தது என்ற வார்த்தையைச் சொல்லவில்லை.

அவனின் நேரமோ என்னவோ சராமரியாக அடி வாங்கினான். அவனுடைய வாழ்வின் மோசமான தருணம் அது. வந்தவன் போனவன் என்று அவனவன் அடிக்க சிறிது நேரத்தில் கார்த்திக் மயக்கமாகி விட்டான். ஆங்காங்கே ரத்தக் காயங்கள்.

அப்போது தான் அவனை விட்டனர்.

அவன் மயக்கமாகி விட்டான் என்று தெரிந்ததுமே ஆளாளுக்கு பறந்துவிட. கார்த்திக் அடிபட்டு ரோடில் அனாதையாகக் கிடந்தான்.

**காட்சி பதினைந்து :**

அவன் போ என்று சொல்லிய சிறு பெண் வீட்டிற்கு சென்று தந்தையிடம் விஷயத்தைக் கூற. அவர் உடனே கிளம்பி வந்தார்.

அவர்கள் அந்த இடத்திற்கு வந்த போது கார்த்திக் ரோட்டில் நினைவிழந்த நிலையில் உடைகள் கிழிபட்டு அனாதையாகக் கிடந்தான்.

''அப்பா! இந்த அண்ணா தான் என்கிட்ட இருந்து வண்டியை வாங்கிகிட்டு, என்னை போன்னு சொன்னாங்க'' என்றாள்.

நடந்ததை உடனே புரிந்துக் கொண்டார். அந்த பெண்ணின் தந்தை. அவன் இடித்து விட்டதாக நினைத்து எல்லோரும் அந்தப் பையனை போட்டு அடித்திருக்கிறார்கள் என்று. உடனே அவனைத் தூக்கிக் கொண்டு ஹாஸ்பிடல் சென்றார்.

கார்த்திக் இரண்டு நாட்கள் கண் திறப்பதும் மூடுவதுமாக இருந்தான். தெளிவில்லாமல் இருந்தான். அவனால் அவன் பெயரை மட்டுமே சொல்ல முடிந்தது. அந்த அடிப்பட்ட சிறுவனும் சீரியஸாக இருந்தான்.

அவனை ஹாஸ்பிடல் பொறுப்பில் வீட்டு அந்த பெண்ணின் தந்தை அடிக்கடி வந்து பார்த்துக் கொண்டார்.

அந்த சிறு பெண் அவளின் தந்தையை விட்டு அகலவில்லை. ஒரு வித பயத்தோடே இருந்தாள். “அப்பா, ரெண்டு பேருக்கும் ஒண்ணும் ஆகாதில்லை” என்று அடிக்கடி தந்தையைக் கேட்டுக் கொண்டாள்.

அவள் இடித்ததாக யாருக்கும் தெரியவில்லை. கார்த்திக் இடித்ததாக நினைத்து அவன் மேல் கம்ப் ளைண்ட் வேறு கொடுத்தனர்.

அவன் மேல் எப் ஐ ஆர் பதிவு செய்ய முயன்று கொண்டிருந்தனர். அப்படியாகாமல் பார்க்க அந்த சிறு பெண்ணின் தந்தை முயன்று கொண்டிருந்தார். அவர் என்ன சமரசம் பேசியும் எதிர் தரப்பினர் ஒத்துக் கொள்ளவில்லை.

சீரியசாக இருக்கும் சிறுவன் நன்றாக ஆனபின் தான் பிரச்சனை ஓயும் என்று புரிந்த அவர் அந்த சிறுவனின்

நலத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து விட்டு அமைதியானார்.

இந்த பெண் ஆண்பிள்ளையாக இருந்தால் கார்த்திக்கை இந்த பிரச்சனையில் இருந்து விடுவித்து அந்த பெண்ணின் தந்தை ஏதாவது செய்திருப்பார். ஆனால் பெண்ணாக போய்விட்டதால் ஒன்றும் செய்ய இயலாமல் கார்த்திக் மேல் இருந்த குற்றத்தை அப்படியே அதன் படியே விட்டார்.

கார்த்திக்கிற்கு இரண்டு நாட்களுக்குப் பிறகு நன்றாக நினைவு வர. கண்களைத் திறந்து சுற்றத்தைப் பார்த்தான். உடம்பு முழுவதும் அப்படி ஒரு வலி, தனக்கு என்ன நேர்ந்தது என்று ஆராய முற்பட்டான்.

அவன் ஹாஸ்பிடல் ரூமில் படுத்துக் கொண்டிருந்தான்.

யார் இருக்கிறார் என்று பார்த்தால் யாருக்காக அடி வாங்கினானோ எந்த பெண் அமர்ந்திருந்தாள். அவளைப் பார்க்க வலி குறைவது போல இருந்தது. அவளுக்காக அந்த அடியை வாங்கியது கொஞ்சமும் பெரிதாகத் தெரியவில்லை.

அவளையேப் பார்த்துக் கொண்டிருந்தான். இது கார்த்திக்கின் இயல்பும் அல்ல. வயதும் அல்ல. அவளுமே பருவ வயதில் இருக்கும் மங்கை. மிஞ்சிப் போனால் பதினைந்து பதினாறு வயதே இருக்கும். ஆனால் நினைவுகள் அவளையே வட்டமிட்டன.

அவன் வீட்டை விட்டு எதற்கு வந்தான். என்ன சொல்லி வந்தான் எல்லாம் மறந்தது. ஒரு மாயை அவனைச் சூழ்ந்தது.

அது கொடுத்த மயக்கத்தில் அவளையே விழி சிமிட்டாது பார்த்துக்கொண்டிருந்தான்.

திடீரென்று கதவு திறக்கப்பட ஒரு போலீஸ்காரர் உள்ளே வந்தார். போலீசை பார்த்தும் கண்களை மூடிக் கொண்டான்.

அந்த போலீஸ்காரர் இவனைப் பார்க்க இவன் இன்னும் மயக்கத்தில் இருப்பது மாதிரி தான் இருந்தது.

அவர் அந்த பெண்ணிடம், ''பேர் என்னம்மா?'' என்றார் அவள் பேரை சொல்லவும் பிறந்த தேதி என்று கேட்டார்..

அவள் சொல்லவும். எல்லாம் கார்த்திக் கேட்டுக் கொண்டிருந்தான்.

இவனோட முழு பேரும், ''சக்தியா?'' என்று அவர் கேட்க.

''அச்சோ! அது என் நேம். சார்'' என்றாள்.

''உன் பேரை கேட்கலைம்மா. இவன் பேரு?''

''கார்த்திக்.''

மற்ற விவரங்களை கேட்க.

''தெரியாது'' என்று அவள் சொல்லிக் கொண் டிருக்கும் போதே அவளின் அப்பா வந்தவர் அந்த கான்ஸ்டபிளை வெளியே கூட்டிச் சென்றார்.

இப்போது கார்த்திக் கண்களைத் திறக்க அந்த பெண் இவனைப் பார்த்தவள் அருகில் வந்தாள்.

''சாரி! என்னால நீங்க அடி வாங்கிட்டீங்க அண்ணா!'' என்றாள்.

வாங்கின அடியை விட அண்ணா என்ற வார்த்தை கார்த்திக்கிற்கு அதிக வலியைக் கொடுத்தது.

''இட்ஸ் ஓகே'' என்றவன். ''உனக்கு ஒண்ணும் பிரச்சனையில்லையே! அந்த பையன் எப்படி இருக்கான்?'' என்றான்.

''அவனுக்கும் இப்போ பரவாயில்லை போல அண்ணா!'' என்றாள்.

மறுபடியும் அண்ணாவா என்று நொந்த கார்த்திக்.

''அண்ணான்னு கூப்பிடாத'' என்றான்.

''ஏன்? பெரியவங்களை அண்ணான்னு தானே கூப்பிடனும் அண்ணா!'' என்று மீண்டும் இரண்டு அண்ணா போட்டாள்.

சட்டென்று இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை கார்த்திக்கிற்கு. ஜெட் வேகத்தில் மனம் யோசிக்க. அவளின் பெரியவங்க என்ற வார்த்தையை பிடித்துக் கொண்டு. ''இல்லை! நான் உன்னை விட சின்னவன்!'' என்றான்.

அவள் நம்பாமல் பார்க்க. இப்போது தானே அவளின் பிறந்த தேதியை கேட்டிருந்தான். அதை கொண்டு ஒரு பத்து நாட்கள் கம்மியாக சொன்னான்.

அதிகம் குறைத்து சொல்லவில்லை. ஒரே மாதிரி சமவயதாக காட்ட விரும்பினான். அண்ணா என்ற வார்த்தையையும் தவிர்க்க விரும்பினான்.

''பார்த்தா பெரியவங்க மாதிரி தெரியறீங்க அண்ணா!'' என்று அவள் மறுபடியும் சொல்ல.

நொந்தே விட்டான் கார்த்திக். அவளின் அண்ணா என்ற அழைப்பில் வாங்கின அடியெல்லாம் வீண் போலவே தோன்ற. ''அண்ணா சொல்லாதீங்க! நான் உங்களை விட சின்னவன் தான்!'' என்று மரியாதை பன்மைக்கு தாவினான்.

''என்ன படிச்சிருக்கீங்க?'' என்று அவள் துருவ.

''நீங்க'' என்று அவன் பதிலுக்குக் கேட்டான்.

அவள் ''டென்த் எக்ஸாம் எழுதியிருக்கேன்'' என்று சொல்ல.

''மீ. டூ'' என்று இவனும் முடித்தான்.

அவளிடம் பேச்சை வளர்க்க விரும்பி, ''உங்க பேரு'' என்று கேட்டான்.

''சக்தி, சக்தி பிரியதர்ஷினி'' என்றாள்.

''சக்தி'' என்று அவனின் வாய் மிகவும் பிரியத்துடன் அந்த பெயரை கூட வேகமாக சொன்னால் அவளுக்கு வலிக்குமோ என்பது போல மெதுவாக உச்சரித்தது. அதற்குள் அவளின் தந்தை வந்து விட்டார்.

''யாருப்பா நீ?'' என்று அவர் கேட்க. கார்த்திக் அவனின் பெயரை மட்டும் சொல்லி அனாதை. அனாதை ஆசிரமத்தில் வளர்ந்தவன் என்று சொன்னான்.

அவன் மேல் பதியப்போகும் கேசை சொன்னவர். ''முடிஞ்சவரைக்கும் உன் மேல கேஸ் ஆகாம பார்த்துக்கறேன். என் பொண்ணு பேர் இதுல வர வேண்டாம். சின்ன பொண்ணு லைசென்ஸ் எதுவும் கிடையாது. இப்போ தான் டென்த் எழுதியிருக்கா'' என்றார்.

அவரின் வார்த்தைக்காக என்று இல்லாவிட்டாலும் சக்திக்காக அவளின் பெயரைக் கண்டிப்பாக இழுக்கும் எண்ணம் கார்த்திக்கிற்கு கிடையாது. அதற்கா இவ்வளவு அடி வாங்கி. அதற்காக கொஞ்சமும் வருத்தப்படாமல். வருத்தப்படாத வாலிபர் சங்கத் தலைவன் போல படுத்து கிடக்கிறான்.

ஒரு சில நொடிகளே பார்த்த அவளின் முகம் அவனை ஈர்க்க. மீண்டும் அவளைத் தேட. அவள் இடித்ததை உணர்ந்து அடுத்த நொடி ஓடி. அவள் யார் எவர் என்று தெரியாத போதே வண்டியை வாங்கி, அவளை அனுப்பி. அவளுக்காக அடி வாங்கி. ஹாஸ் பிடலில் படுத்துக் கொண்டிருந்தான்.

அவளின் அண்ணா என்ற விழிப்பில் மனம் பதைத்து பொய் சொல்லி அவளின் அண்ணா என்ற அழைப்பை நிறுத்தி இருந்தான்.

அவனாவது சக்தியின் பேரை இழுப்பதாவது. நெவர்.

''இல்லை, சொல்ல மாட்டேன்!'' என்றான்.

அந்தப் பெண்ணின் அப்பாவுக்கு அவனைப் பிடித்து விட்டது. அவன் ஹாஸ்பிடலில் ஒரு வாரம் இருந்தான். ஒரு வாரமும் சக்தி தினமும் வந்தாள். கூட அவளின் அம்மாவும் கூட சில சமயம் வந்தார்.

கார்த்திக் தன் அப்பாவிற்கு ஒரு முடிவை கொடுத்த பிறகு இந்த இரண்டு வருடமாக கார்த்திக் சிரித்தது கூடக் கிடையாது என்பது தான் உண்மை. எப்போதும் ஒரு இறுக்கமான மனநிலையிலேயே இருப்பான்.

இந்த ஒரு வாரமாக சக்தியுடன் பழகும் போது அவனின் மன இறுக்கம் தளர்ந்து இருந்தது. உடல் வலி இருந்த போதும். மன வலி இருந்த போதும். முகம் ஒரு புன்னகையை பூசி இருந்தது.

கண்களில் சற்று வாலிப வயதின் கனவுகள் கூட எட்டிப் பார்த்தது.

அவன் எதற்கு வீட்டை விட்டு வந்தான். என்ன சொல்லி வந்தான் எதுவும் அவனின் ஞாபகத்தில் இல்லை. சொத்தை அடைய என்ன செய்யலாம் என்ற அவனின் எண்ண ஓட்டத்தை கூட ஒத்தி வைத்தான்.

அவன் ஞாபகத்தில் இருந்ததெல்லாம் சக்தி. அந்த வயதிற்குறிய இனிய நினைவுகள். பேசினான். பேச விட்டுக் கேட்டான். சக்தியின் பேச்சில் எந்த கல்மிஷமோ அசட்டுத்தனங்களோ இல்லவே இல்லை. அது கார்த்திக்கை சக்தியின் புறம் ஈர்த்தது. இவ்வளவு பேசியும் அவளின் தந்தையைப் பற்றிய விவரங்கள் பெயர் போன்றவற்றைக் கேட்கவில்லை.

அவரின் விவரங்கள் எல்லாம் கேட்க வேண்டும் என்று கார்த்திக்கிற்கும் தோன்றவில்லை. சக்தியும் சொல்லவில்லை.

**காட்சி: பதினாறு**

அவன் நாளை ஹாஸ்பிடலில் இருந்து டிஸ்சார்ஜ் ஆக வேண்டும் என்ற சூழலில். ''எங்கப்பா போகப்போற'' என்று அவளின் தந்தை கேட்டார்.

''வேலை தேடணும்ங்க'' என்றான்.

''படிக்கிறியா நான் ஹெல்ப் பண்றேன்!'' என்றார்.

என்ன படிச்சிருக்க என்று கேட்டு விட்டால் சக்தியின் முன் அவனின் பொய் தெரிந்து விடும் என்பதால் அவசரமாக, "இல்லை வேலைக்குப் போறேன்" என்றான்.

"என்கிட்டயே வேலைக்கு சேர்ந்துடேன். நானே குடுக்கறேன்!" என்றார்.

அவனால் சரியென்று உடனே சொல்ல முடியவில்லை. சக்தியோடு பழக இது நல்ல வாய்ப்பு என்று புரிந்தாலும் அவனுக்கு வாசுகி குழுமத்தை அடைய வேண்டுமே.

சமாளிப்பதற்காக, "நான் இருந்த ஆர்ஃபநேஜ்ல சொல்லணும்!" என்றான்.

அவர், "எங்கே இருக்கு அது" என்று கேட்க அவனால் தயங்காமல் பதில் சொல்ல முடிந்தது. ஏனென்றால் அவன் முன்பு ஊட்டியில் படித்த கான்வென்டில் அடிக்கடி ஒரு ஆர்ஃபநேஜிக்கு அழைத்து செல்வர். அதன் பெயரை சொல்ல முடிந்தது. அவன் படித்த பள்ளியில் பெயரையும் சொல்ல முடிந்தது. அந்த மிசினரியில் இருந்து சில பையன்கள் அவனின் பள்ளியில் படித்தனர். அதை வைத்து சொல்லிவிட்டான்.

ஏனென்றால் அவனின் ஆங்கிலம் அவனை பெரிய இடத்து பையனாக தான் உருவகப்படுத்தும்.

"சரி" என்று சொல்லி சக்தியும் அவளின் அப்பாவும் கிளம்பினர்.

வீட்டிற்கு வந்ததுமே சக்தியின் அப்பா அப்படி ஒரு ஆர்ஃபநேஜ் இருக்கிறதா என்று விசாரித்து அறிந்தார்.

ஆனால் கார்த்திக் அங்கே இருந்தானா என்பது போல கேட்கவில்லை. கேட்கத் தோன்றவில்லை.

என்ன சொல்லியும் நிறைய பணம் தருவதாக சொல் லியும் அந்த அடிபட்ட சிறுவன் பிழைத்துக் கொண்ட போதும் கார்த்திக் மீது எப் ஐ ஆர் பதிவு செய்யப்பட்டு விட்டது. அவர்கள் நிறைய பணம் எதிர்பார்க்கிறார்கள் என்று புரிந்தது. சற்று விட்டு தான் சமாதானம் பேச வேண்டும் என்று நினைத்து அந்த பெண்ணின் தந்தையும் விட்டு விட்டார்.

தான் கேட்டுக் கொண்டதற்காக தான் கார்த்திக் இவ்வளவு பெரிய ரிஸ்க் எடுத்திருக்கிறான் என்பது போல சக்தியின் அப்பாவுக்கு தோன்ற. அது சக்திக்காக என்பது அவருக்குப் புரியவில்லை.

அடுத்த நாள், ''என்ன முடிவு பண்ணியிருக்கப்பா. என்கிட்ட வேலைக்கு வர்றியா?'' என்பது போல சக்தியின் அப்பா கேட்டார்.

இப்போதைக்கு வேலைக்குப் போகலாம். பிறகு வாசுகி குழுமதுக்குள் எப்படியாவது நுழையலாம் என்பது போல கார்த்திக் யோசித்து வைத்திருந்தான். அவனுக்கு சக்தியை விட மனதில்லை.

''சரிங்க சார்'' என்றான்.

''வா'' என்று அவனை டிஸ்சார்ஜ் செய்து அவனை வீட்டுக்கு அழைத்துப் போனார்.

கார் நிற்கவும் வீட்டைப் பார்த்தவன் அதிர்ந்தான்.

''சார்! உங்க நேம்? உங்க கம்பெனி நேம்?'' என்று அவன் கேட்க.

''என் பேரு வீரமணி! என் கம்பனி பேரு வாசுகி குழுமம்!'' என்ற அவர் சொல்ல.

இந்த ஒரு வாரமாக கார்த்திக் சக்தியை வைத்து தன்னைச் சுற்றி பின்னிக்கொண்டிருந்த மாயவலல அறுந்தது.

அதற்குள் கார் நிற்கும் அரவம் கேட்டு உள்ளே இருந்து வந்த சக்தி, ''வா! வா! கார்த்திக்'' என்றாள். வந்தவள் கையில் ஒரு கறுப்புக் கண்ணாடியை சுற்றிக் கொண்டே வந்தாள்.

அவனின் முகம் ஒரு மாதிரி இருக்கவும். எப்போதும் தன்னைப் பார்த்தால் காணப்படும் உற்சாகம் அவனிடத்தில் இல்லாமல் இருக்கவும், ''என்ன கார்த்திக்?'' என்றாள்.

என்ன சொல்வது என்று தெரியாமல், ''வலிக்குது'' என்றான்.

கண்களில் அவ்வளவு வலி. அடிப்பட்ட தினத்தன்று கூட கார்த்திக்கின் கண்கள் இவ்வளவு வலியை பிரதி பலித்ததாக சக்திக்குத் தோன்றவில்லை. இந்த ஒரு வார பேச்சு சக்திக்கு கார்த்திக்கின் மேல் ஒரு தோழமையை வளர்த்து இருக்க. ''எங்கே?'' என்று பதறினாள்.

''எங்கே?'' என்ற அவளின் கேள்விக்கு அவனால் பதில் சொல்ல முடியவில்லை. அவள் அவன் முகத்தில் அதற்கான பதிலைத் தேடி அவனின் கண்களைப் பார்க்கவும்.

அவனால் சக்தியின் கண்களைப் பார்க்க முடியவில்லை. அந்தக் கண்கள் காதலில்லாமல் அவளைப் பார்க்குமா. தெரியவில்லை.

அவள் புறம் கையை நீட்டினான்.

"என்ன?" என்பது போல பார்த்த சக்தியிடம். "கண் ணாடி!" என்று கேட்டான்.

என்னவென்று புரியாத போதும் சக்தி அவன் கையில் கொடுக்க.

அதை கண்களில் மாட்டினான்.

"எதுக்குக் கண்ணாடி?" என்று அவள் கேட்க ஒரு பெரிய புன்னகை. அதுவே அவன் திருவாயில் மலர்ந்த பெரிய புன்னகை.

அதன் பிறகு கார்த்திக் அந்தக் கண்ணாடியை கண் களில் இருந்து கழற்றுவதே இல்லை. புன்னகைப்பதும் இல்லை. சக்தி இருக்கும் போது சில சமயம் அவளின் கேள்விகளுக்கு பயந்து போடாமல் இருப்பான். ஆனால் மற்றவர்கள் முன் கண்டிப்பாக போட்டு கொள்வான்.

அவனின் கண்கள் சக்தியின் மேல் காதலை பிரதி பலிக்காது என்று அவனால் நிச்சயமாகச் சொல்ல முடி யாது.

கறுப்புக் கண்ணாடி அவனின் சக்தியின் மேலான காதலை யாருக்கும் அடையாளம் கட்டாமல் மறைத்தது.

அதை மறக்க வைக்கவும் முடிவெடுத்தான்.

அவனுக்கு முதன்மையான தேவை வாசுகி குழுமமே! அவன் அவன் அப்பாவின் பெயரை நிலை நாட்ட வேண்டும்!

சக்தியிடம் சொன்ன பொய் அப்படியே தொடர அவன் காதலை மறைத்து மறக்கப் பழக ஆரம்பித்தான்.



# 20

**அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் - அதை**

**அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன் :**

**வெந்து தணிந்தது காடு : தழல்**

**வீரத்திற் குஞ்சென்று மூப்பென்று முண்டோ?**

**தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்.**

- பாரதி

**நிறைவுக் காட்சி :**

கார்த்திக் வீரமணியின் வீட்டிற்கு அது வீரமணியின் வீடு என்று தெரியும் முன்பே வந்து விட்டான். வந்தது சக்திக்கா. சக்திக்காக மட்டுமே.

வந்த பின் தான் சக்தி வீரமணியின் பெண் என தெரிய. அவன் கனவுகளை கானல்நீராக அவனே மாற்றினான்.

என்ன செய்வது என்ற சக்தியமாக புரியவில்லை.

முதலில் இங்கே நிலைப்போம் பிறகு யோசிக்கலாம் என்று நினைத்தவன். வீரமணி சொல்லும் வேலையை செய்யத் துவங்கினான்.

சக்தியிடம் ஒரு பொய்யை ஆரம்பித்து விட்டதால் அதையே பிடித்துக் கொண்டு பத்தாவது தான் அவனது

படிப்பு என்று சொன்னான். ஆனால் பெரிய கான்வென்ட் படிப்பாக இருந்ததால் மொழி அவனுக்கு ஒரு பிரச்சனையாக இருக்கவில்லை.

வீரமணிக்கு ஆங்கிலமும் சற்று தடுமாற்றம், ஹிந்தி கேட்கவே வேண்டாம் தெரியாது. இது இரண்டு கார்த்திக்கிற்கு தண்ணீர் பட்ட பாடாக இருக்க. அவன் நடை உடை பாவனை எல்லாவற்றிலும் ஒரு அழுத்தம், பெரிய மனித தோரணை தானாக இருந்தது கார்த்திக்கினுள்.

மற்றவர்களிடம் பேசி வேலை வாங்குவதில் கெட்டிக் காரானா இருந்தான் கார்த்திக்.

அந்த வயதிற்குரிய அசட்டுத்தனங்கள் எதுவும் இல்லாமல் மிகவும் பொறுப்பாக இருக்கும் அவனை வீரமணிக்கு இன்னும் பிடித்துப் போயிற்று. முதலில் அவன் வீரமணியுடன் வேலையை ஆரம்பித்தது மொழி பெயர்ப்பாளராக மட்டுமே.

ஆர்டர் வரும் போது சற்று அவருக்கு புரிந்த கொள்ளச் சிரமமாக இருக்கும மொழியை அவனிடம் கொடுத்து விடுவார். அவரை நிழல் போல தொடர்ந்தான்.

வீரமணியும் கார்த்திக் மேலே கேஸ் ஆகாமல் பார்த்துக் கொண்டார். கேஸ் ஆகியிருந்தாலும் சக்திக்காக அதை எந்த முகசுணக்கமும் இல்லாமல் கார்த்திக் அதை எதிர்கொண்டு இருப்பான் என்பது வேறு.

சக்தியை முடிந்த மட்டும் தவிர்த்தான். இவன் சக்தியுடன் ஆர்வமாக பேசியிருந்தால் கூட சக்தி ஒன்றிரண்டு வார்த்தைகள் தான் பேசியிருப்பாள். இவன் தள்ளித் தள்ளி போகவும் நெருங்கி வந்தாள்.

சற்றும் எந்தக் கலப்படமோ தடுமாற்றமோ இல்லாத ஆர்வமான பேச்சுக்கள். கார்த்திக்கிற்கு கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்பது போலத் தோன்றிய பேச்சுக்கள். ஆனாலும் பின் வாங்கினான்.

காதல் என்ற உணர்வைக் கார்த்திக் மறைக்க முடி வெடுத்து இருந்தாலும். இப்படி பேசும் சிறு பெண் ணிடம் காதல் பார்வையை ரகசியமாக பார்ப்பது கூடத் தவறாகவே பட்டது.

முதலில் சக்தியிடம் கார்த்திக்கிற்கு அந்த ஒதுக்கம் தான் வந்தது. நம்பி பழகும் பெண்ணிடம் வேறு எந்த பார்வையும் பார்க்கக் கூடாது, அது போன்ற எண்ணத் தையும் விதைக்கக் கூடாது என்பதாக.

கார்த்திக்கின் இயல்பு அதுவாகவே இருந்தது. ஒரு நொடி கூட சொத்தை அடையும் வழியாக சக்தியை அவன் நினைக்கவில்லை. சக்தியை அதற்குப் பயன்படுத் தலாம் என்ற எண்ணமும் வரவேயில்லை.

இரண்டு வருடங்கள் நிமிடங்களாக ஓட. சக்தி பிளஸ் டூ படிப்பை முடித்து காலேஜ் போகும் நேரம். அவள் சென்னை காலேஜில் சேர சற்று நிம்மதியாகப் பெருமூச்சு விட்டான்.

இனி எதற்கும் சக்தி தன்னைத் தேடமாட்டாள் என்று. ஆம், இந்த இரண்டு வருடங்களிலேயே எதற்கும் சக்திக்கும் கார்த்திக் வேண்டும். சின்னச் சின்ன விஷயம் என்றாலும் அவள் கார்த்திக்கை கூப்பிடுவாள்.

இந்த இரண்டு வருடங்களாக கார்த்திக்கிற்கு தன் மனதோடு போராடவே நேரம் சரியாக இருந்தது. அங்கே

சுற்றி இங்கே சுற்றி என்று எங்கே சுற்றினாலும் அவனின் எண்ணம் முழுவதும் சக்தியே.

விடலை பருவம், செய்ய வேண்டாம். நினைக்க வேண்டாம். என்று மனம் நினைக்க மனம் அவளிலேயே நின்றது.

ஒரு வழியாக அவள் படிப்பிற்கென்று விலகிப் போகவும் தான் அவன் மேலே என்ன செய்வது என்று யோசித்தான்.

இந்த இரண்டு வருடங்களிலேயே வீரமணியின் நம்பிக்கைக்கு பாத்திரமாகி இருந்தான். குவாரி வேலை களும் சற்றுப் பிடிப்பட்டு இருந்தன.

அதன் பிறகு என்ன செய்வது என்று யோசித்தான். முதலில் தொழில் தன்னுடைய கட்டுப்பாட்டில் கொண்டு வரலாம் பிறகு யோசிக்கலாம் என்று தள்ளிப் போட்டான்.

இப்போது தான் அவனின் அம்மாவுடன் தொலை பேசியில் பேச ஆரம்பித்து இருந்தான்.

ஒரு மாதிரி வீரமணியும் தெய்வானையையும் பார்க் கும் போது கார்த்திக்கிற்கு பொறாமையாக இருக்கும்.

இப்படி ஒரு வாழ்க்கையை தன் அம்மாவும் அப்பாவும் வாழவில்லையே என்று, யார் மேல் தவறென்று சொல்ல முடியவில்லை. சில சமயம் அம்மாவின் மேல் கோபம் வந்தது. சில சமயம் தாத்தாவின் மேல் கோபம் வந்தது. சில சமயம் அப்பாவின் மேல் கோபம் வந்தது.

தொழிலில் தோல்வி என்பது அவ்வளவு பெரிய விஷயமா என்ன? தன் அம்மாவை இப்படி ஒரு நிலையில் வைத்து விட்டாரே என்று.

சக்திக்கும். குடும்ப ஞாபகத்திற்கும் இடையில் தடு மாறினான்.

அதுவும் சில வருடங்களுக்குப் பிறகு அவனின் அம்மாவை பார்க்கும் போது அவரின் தோற்றத்திலேயே முற்றிலுமாக வீழ்ந்து விட்டான்.

தலையெல்லாம் நரைத்து, கண்களில் ஜீவனில் லாமல். சுமித்ராவையும் வைஷ்ணவியையும் அவர் அழைத்துக் கொண்டு ஒரு மாதிரியான நிராதரவான தோற்றத்துடன் அவனைக் காண வந்த போது நொறுங்கித் தான் போனான்.

என்னவோ அவன் கண்ணில் பட்ட அவனின் அம்மாவின் வயதிற்குரிய பெண்களோடு அவனின் அம்மாவை அவன் மனம் ஒப்பிட்டது.

எல்லோரும் சந்தோஷமாக இருப்பது போலத் தான் தோன்றியது. என்றுமே அப்படி எந்த வகையிலும் அவன் அம்மா சந்தோஷமாக இருந்தது போலத் தோன்ற வில்லை.

எல்லோருக்கும் வாழ்க்கையைச் சரியாக அமைத்துக் கொள்ளத் தெரிவதில்லை. இருக்கும் வாழ்க்கையை சில சமயம் தொலைத்தும் நிற்பர்.

அம்மா அவனை மனதளவில் அசைத்தார்.

பிரபு அப்போது மருத்துவம் இரண்டாம் வருடம் பயின்று கொண்டிருந்தான்.

''வீட்டுக்கு வந்துடு கார்த்திக்! நமக்கு எதுவும் வேண் டாம்! உங்கப்பா தான் என் பேச்சை கேட்கவேயில்லை. நீயும் என் பேச்சை கேட்க மாட்டியா?'' என்று அவர்

முகத்தை மூடிக்கொண்டு தேம்பித் தேம்பி அழவும். அவர் அழுவதைப் பார்த்து சுமித்ராவும் வைஷ்ணவியும் அழுதனர்.

எப்பவும் எல்லா விஷயத்தையும் நான் தனியாவே பார்த்துக்கறேன். உங்கப்பா தான் எதுக்கும் வரலை. நீயும் என்னை விட்டுடாத கார்த்திக்! வீட்டுக்கு வந்துடு!'' கண்களில் நீர் நிறைய அழைக்கவும். அவன் உருகிப் போனான்.

''அம்மா! நான் உங்க பேச்சை தான் கேட்பேன்! நான் உங்க பையன்! நீங்க சொல்றதை தான் கேட்பேன்! சீக்கிரம் உங்ககிட்ட வந்துடுவேன்! ப்ளீஸ் மா அழாதீங்க!'' என்று அவரைத் தேற்ற தான் முடிந்தது.

கார்த்திக்கின் மனதிற்குள் எப்பொழுதும் போராட்டம். தன் தந்தையின் முடிவு. அம்மாவின் நிலைமை. எல்லாமாக சேர்ந்த அவனுக்கு சக்தியின் மீது காதல் இருக்கிறதா இல்லையா என்று யோசிக்கக் கூட முடியவில்லை.

அதன் பின் அவனுக்கு சக்தி மீது இருந்தது அக் கறையே. வருடங்கள் ஓட ஆரம்பிக்க வாசுகி குழுமமும் கார்த்திக்கின் வசமாக ஆரம்பித்தது.

ஒரு முறை பேச்சு வாக்கில் வீரமணி சந்திரசேகர் இந்த சொத்தை அவருக்குக் கொடுத்தது பற்றியெல்லாம் சொன்னார். தந்தை சொன்னதும் அவர் சொன்னதும் ஒன்றே.

அப்போதும் அவனுக்கு தான் சந்திரசேகரின் மகன் என்று சொல்ல வரவில்லை. அப்போதைய நிலையில் வாசுகி குழுமம் லாபம் ஈட்டும் ஒரு தொழில்.

அதைக் கொடுங்கள் என்று கார்த்திக்கினால் கேட்க முடியாது. ஏனென்றால் அதை வாங்கும் அளவுக்கு பணம் கிடையாது.

அதனால் கார்த்திக் இப்போது அநியாயங்களை விட்டு பணத்தை பெருக்குவதில் ஈடுபட ஆரம்பித்தான். குவாரி ராஜ்ஜியத்தின் முடிசூடா மன்னனாக ஆக்கிக் கொண்டான்.

எந்த விதிமுறைகளையும் பின் பற்றவில்லை. அரசாங்கம் ஒதுக்கிய இடங்களை மட்டுமன்றி அவன் கண்களில் பட்ட இடங்களை எல்லாம் அவன் வச மாக்கினான். யாரும் அவனிடம் நெருங்கக் கூட முடிய வில்லை.

நெருப்பாக சுட்டான். வெப்பம் யாரையும் நெருங்க விடவில்லை.

ஏன் வீரமணி கூட அவனை வேடிக்கைத் தான் பார்த்தார். வேண்டாம் என்று சொல்லும் துணிவு அவருக்கு இல்லை.

அவன் ஒரு பக்கம் பெருக்குவதில் இருக்க. சுமித்ரா வின் மனதில் அவள் வளர வளர கார்த்திக் தன்னைத் திருமணம் செய்வதற்காக தான் வீட்டை விட்டுப் போனான் என்ற எண்ணம் வேரூன்ற ஆரம்பித்தது.

தாய் தந்தையை இழந்த பிறகு வாசுகியே எல்லாமு மாக ஆகிப்போனார் சுமித்ராவிற்கும் பிரபுவிற்கும். சுமித்ராவின் ஒவ்வொரு செய்கையும் கார்த்திக் வருவான் என்பது போலவே இருக்கும்.

அவள் மறைத்து எதுவும் செய்ய மாட்டாள். அவளின் பேச்சில் எப்போதும் கார்த்திக் இருப்பான்.

பிரபு தன் எம் பி பி எஸ் முடித்து மேல் படிப்பிற்காக வெளிநாடு போக. போகும் முன்னே கார்த்திக்கை வந்து பார்த்தவன்: அப்போது தான் கல்லூரியில் அடியெடுத்து வைத்திருக்கும் சுமித்ராவின் மனதை தெளிவாகக் கார்த்திக்கிடம் சொன்னான்.

வைஷ்ணவியும் சுமித்ராவும் கார்த்திக்கின் கண் பார்வையில் இருக்க வேண்டி பொருட்டே அவர்கள் இருவரையும் கிருஷ்ணகிரி காலேஜில் சேர்த்திருப்பதாகச் சொல்லி அங்கே விட்டுச் சென்றான்.

அதன் பிறகு இரண்டு வருடம் கழித்து சக்தி யு ஜி. பி ஜி என்று எல்லா படிப்பையும் முடித்துக் கொண்டு வீடு திரும்பி வர.

வாசுகியும் தன் தந்தையுடன் கிருஷ்ணகிரிக்கே குடி பெயர்ந்தார்.

கார்த்திக்கின் மனதின் போராட்டங்கள் அதிகமாயின. அவனுக்கு சக்தி மேல் காதல் வேண்டாம் என்று அவனே உருப் போட்டுக் கொண்டான். சக்தியும் அந்த எண்ணத்தோடு அவனுடன் பழகவில்லை. ஆனாலும் சக்தி தன்னை எதற்கும் தேடுவாள் என்று உணர்ந் திருந்தான்.

இப்போது சொத்தை எப்படி வீரமணியிடம் இருந்து வாங்குவது. எல்லாம் அந்த தொழிலில் வந்த பணம் தான். எல்லாம் அவன் உழைப்பு தான்.

''உங்ககிட்ட தான் பணம் இருக்கே வெச்சிக் கோங்க. நான் சந்திரசேகரோட பையன் எங்கப்பா குடுத்ததை திருப்பி குடுங்க'' என்று அவனால் கேட்க முடியவில்லை.

கேட்டால் அவர் குடுத்திருக்க வாய்ப்புகள் அதிகம். அவன் சந்திரசேகரின் மகன் என்பதற்காக மட்டும் அல்ல. அவன் கார்த்திக் என்பதற்காகக் கூட அவர் கொடுத் திருக்கலாம்.

அப்படி ஒரு பிரியம் அவன் மீது வீரமணிக்கு. அவருக்கு மட்டுமல்ல தெய்வானைக்கும், எந்த அள விற்கு என்றால், யார் எவன் என்று அடையாளம் காட்டிக்கொள்ளாமல் அனாதை என்ற போர்வையில் இருக்கும் போது கூட அவனுக்கு சக்தியைத் திருமணம் செய்து கொடுக்கலாமா என்று நினைத்தவர்.

அப்படி அவர்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு அசைவிலும் கார்த்திக் இருந்தான்.

அவனால் நல்லதனமாகப் பேசி அவர்களிடம் சுமுக மாக விடை பெற முடியவில்லை.

காரணம் சக்தி. சக்தி அவனை அந்த அளவிற்குத் தேடினாள். ஏதோ. எப்போதோ. எதற்கோ. கார்த்திக் சொன்ன பொய்யான அவன் அவளை விட சிறியவன் என்ற ஒன்றே சக்தியை வேறு யோசிக்க விடாமல் செய்து கொண்டிருப்பது தெரிந்தது.

எப்போதும் ஒரு பயம் கார்த்திக்கிற்கு, எங்கே சக்தி தன்னைப் பிடித்திருக்கிறது என்று சொல்லி விடுவாளோ என்று.

' சுமித்ராவைத் தான் திருமணம் செய்து கொள்வேன் என்று தாத்தாவிடம் சொல்லி விட்டு வந்தது ஒரு புறம் இருந்தாலும், சுமித்ராவின் ஆசையை நிறைவேற்று வதும் அவனின் கடமையாகவே பட்டது கார்த்திக்கிற்கு

அந்த ஆசை சுமித்ராவிற்கு வரக் காரணம் அவன். அது மட்டுமல்ல அவனின் தந்தையின் இறப்புக்கு வந்த போது தான் அவளின் அம்மாவும் அப்பாவும் இறந்தனர்.

அது மட்டுமல்லாமல் அப்போது அந்தக் கால கட்டங்களில் சக்தியின் மனதில் அப்படி ஒரு எண்ணம் இருந்ததே இல்லை.

சுற்றிலும் தளைகள். எங்கே போனாலும் கார்த்திக் கிற்கு இறுக்கிப் பிடித்தன. எங்கே திரும்பினாலும் அவனின் அம்மாவைப் பார்க்க வேண்டியதே அவனின் முதன்மையான கடமையாகப் பட. அவர் நிச்சயம் சுமித்ராவை தான் தனக்குத் திருமணம் செய்து வைக்க இஷ்டபடுவார் என்பது புரிய.

வீரமணியிடம் பேசிப் பாப்போம் என்ற விஷயத் தையே விட்டான். ஏமாற்றி ஒரு துரோகத்தை செய்து. அவர்களின் வாழ்க்கையில் இருந்து நிரந்தரமாக வெளியே வர முடிவெடுத்தான்.

எப்படியிருந்தாலும் என் தந்தை கொடுத்தது. என் தாத்தாவின் சொத்து, கொடுத்து விடுங்கள் என்று யாரிட மும் கெஞ்சுவது என்பது அவனால் உயிர் போனாலும் முடியாத ஒன்று.

எனக்குத் தேவை. நான் எடுத்தக்கொண்டேன் என்பத தாக அவனின் செய்கை இருந்தது.

முடிவெடுத்து விட்டான். செயல்படுத்தி விட்டான்.

காரண காரியங்கள் எல்லாம் பின்னுக்குச் சென்றன. எதையும் யாரிடமும் சொல்லவில்லை. எதையும் நியாயப் படுத்த முயற்சிக்கவில்லை.

ஆனால் சக்தியை அவன் வாழ்க்கையில் இருந்து அவனால் விலக்கி வைக்க முடியவில்லை. சக்தி வேண்டும் போலவும் இருந்தது. அவளிடம் சென்று விடு மன்னித்து விடுவாள் என்றும் மனம் சொன்னது.

ஆனால் அம்மாவையோ சுமித்ராவையோ அவனுக்கு மீற விருப்பமில்லை.

சக்தியிடம் இருந்து தள்ளி வந்து விட்டாலும் அவள் மேல் இருந்த அவனின் கவனம் திரும்பவில்லை.

அதுவும், ''அந்த வயதிலேயே நீ ஏன் வயதை குறைத்துக் கூறினாய்'' என்று அவள் மனமொடிந்து கேட்ட போது கூட அவனால் அதை விளக்க முடியவில்லை.

என்ன சொல்லுவான், ''நான் உன்னை அப்போதே விரும்பினேன்! நீ அண்ணா என்று கூப்பிட்டது பொறுக்காமல் சட்டென்று யோசிக்காமல் சொல்லிவிட்டேன்'' என்றா சொல்ல முடியும்

அது இன்னும் பெரிய துரோகம் ஆயிற்றே. ஒரு பொய்யைச் சொல்லி இத்தனை வருஷம் அதை நிஜம் போலவே நம்ப வைத்து.

கார்த்திக் சொத்தை ஏமாற்றினான் என்பது வேறு. பெண்ணை ஏமாற்றினான் என்பது வேறு.

இப்போதும் கார்த்திக் ஏமாற்றினான் தான். அது நம்பிக்கைத் துரோகமாக தான் பார்க்கப்பட்டது.

காதலித்து ஏமாற்றியது போல தோன்றுவதில் அவனுக்கு விருப்பமில்லை.

மறைத்தே விட்டான். சக்தியின் மீதான அவன் காதலை மறைத்தே விட்டான்.

இத்தனை வருடங்களில் மேம் என்ற வார்த்தையை தவிர்த்து சக்தியின் பெயரைக் கூட அவன் வாய் உச் சரித்தது இல்லை.

ஆனால் சக்தியின் பார்வை மாறுபடும் என்று அவ னுக்குப் புரியவில்லை. ஏன் வயதை குறைத்துக் கூறினான்? என்ன நடந்து விடும் என்று கூறினான்? என்பதாக அவள் எண்ணம்.

சமவயதாக இருந்தால் அண்ணா என்ற பேச்சையும் தவிர்த்து விடலாம். சமவயதினர் காதலிப்பதும் திரு மணம் செய்வதும் சகஜமே. ஒரே கிளாசில் படிப்பவர்கள் காதலிப்பது இல்லையா. அதைக் கொண்டே ஒரு பத்து நாள் மட்டும் குறைத்துக் கூறினான்.

அவன் ஒன்று நினைக்க அது வேறொன்றாக ஆகிப்போனது மட்டுமல்லாமல். அது வருடக்கணக்கான நீடித்து வாழ்க்கையில் ஒரு முக்கிய காரணமாகவும் ஆகி. சக்தியை மனதளவில் உடைத்து விட்டது.

எதுவாகினும் சக்தி கார்த்திக்கிற்கு முக்கியம். அதில் எப்போதும் எந்த மாற்றமும் அவனுக்குக் கிடையாது.

ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால் என்று இருந் தான்.

போராட்டம். போராட்டம்.

எல்லாவற்றையும் தூக்கி தூர வைத்துவிட்டு தந்தை யின் பேரை தூக்கி நிறுத்த சினிமா உலகை நோக்கி தன் பயணத்தைத் திருப்பினான்.

அவன் சினிமா உலகை தன்னை திரும்பிப் பார்க்க வைக்க.

சக்தி எதிலும் கவனத்தை திருப்பாமல் கல்லூரி அதன் முன்னேற்றம் என்று ஓட.

இருவரும் கிட்ட தட்ட ஒரு ஆறு மாதம் சந்திக்கும் சந்தர்ப்பமோ சூழ்நிலையோ வரவே இல்லை. இதற்கிடையில் பிரபு படிப்பை முடித்து ஊருக்கு வரவும் கார்த்திக் - சுமித்ரா, பிரபு - வைஷ்ணவியின் திருமண பேச்சை எடுத்தார்.



# 21

**வார்த்தை தவறிவிட்டாய் கண்ணம்மா**

**மார்பு துடிக்குதடி**

**பார்த்த இடத்திலெல்லாம் உன்னைப் போல்**

**பாவை தெரியுதடி**

- பாரதி

''கார்த்திக், நாளைக்கு பிரபு விடியற் காலை ரெண்டு மணிக்கு பெங்களூர் ஏர்போர்ட் வர்றான். நீ போய் கூப்பிட்டுக்கிறியா'' என்றார் வாசுகி.

''பிரபு'' என்ற வார்த்தையைக் கேட்டதும் கார்த்திக்கின் முகம் புன்னகையை பூசியது. சிறு வயதில் கார்த்திக் இருந்தால் அவன் பின்னேயே சுத்திக் கொண்டிருப்பான்

கார்த்திக்காக அவனை தவிர்ப்பான் இருந்தாலும் அட்டை போலத் தான் ஒட்டிக்கொள்வான் பிரபு. இவனும் வீட்டை விட்டுப் போனான். பிரபு மருத்துவம் படிக்கப் போனான். தொடர்புகள் விட்டுப் போயின என்றும் சொல்லலாம் கார்த்திக் அதைத் தொடரவில்லை என்றும் சொல்லலாம்.

''சரிமா, நான் போறேன்'' என்றான் கார்த்திக்.

''அண்ணா, நானும் வர்றேன்!'' என்று வைஷ்ணவி உடனே ஒரு கோரிக்கையை வைக்க. கூடவே ''நானும்'' என்றபடி சுமித்ராவும் வந்து நின்றாள்.

''வேண்டாம், நான் மட்டும் போறேன்!'' என்று கார்த்திக் சொல்லியும் இருவரும் கேட்கவில்லை. ''நாங்களும் தான் வருவோம்'' என்று பிடிவாதமாய் நின்றனர்.

கார்த்திக் கிளம்ப வெளியே வந்த போது இருவரும் வாசலில் இருந்தனர். கார்த்திக் காரை எடுக்க வைஷ்ணவி பின்னால் அமர சுமித்ரா முன்னால் அமர்ந்தாள்.

கார்த்திக் இதை எதிர்பார்க்கவில்லை. முன்னால் உட்காருவது ஒரு சாதாரண செயல் தான். ஆனால் அது ஒரு உரிமையான செயலாக அந்த நேரத்தில் சுமித்ரா செய்வதாகவே பட்டது.

''நீ பின்னால் உட்காரு'' என்றும் சொல்ல முடியாது. அது அவளை அவமானப்படுத்துவது போல ஆகும்.

கார்த்திக் வழி நெடுகிலும் அமைதியாகவே வந்தான். ஒரு வார்த்தை கூட தானாகப் பேசவில்லை. வைஷ்ணவி வள வள வென்று பேசிக் கொண்டே வந்தாள்.

சுமித்ராவும் வைஷ்ணவியோடு பேசிக்கொண்டே வந்தவள் கார்த்திக்கை பேச்சில் இழுக்க முற்பட. அவனாக கலந்துக் கொள்ளவேயில்லை. அவர்கள் கேட்கும் கேள்விக்கு பதில் அவ்வளவே.

கார்த்திக்கின் ஒதுக்கம் இரு பெண்களுக்குமே புரிந்தது. இது அவன் வீட்டிற்கு வந்த நாள் முதாலக அவர்கள் உணருவது தான். ஆனால் அவர்களுக்குப் புரியவில்லை. கார்த்திக் அவர்களிடம் மட்டுமல்ல எல்லோரிடமும் இப்படித் தான் என்று. அவர்கள் சிறு வயதில் பார்த்த கார்த்திக்கை தேட அவன் தான் மாறி இருந்தானே.

என்னவோ தன்னை அவன் ஒதுக்குவது போல சுமித்ராவிற்குள் ஒரு தோற்றம். கார்த்திக் வீட்டிற்கு வந்த நாள் முதலாக அவள் அதைத் தான் உணருகிறாள்.

கார்த்திக் பேசாமல் போனாலும் வாசுகியாலும் வைஷ்ணவியாலும் அவனை இழுத்து வைத்துப் பேச முடிந்தது. ஆனால் அது போல சுமித்ராவால் முடியவில்லை. இருந்தாலும் அவன் பதில் கொடுக்காவிட்டாலும் பேசும் சந்தர்ப்பங்களை முடிந்த வரை உருவாக்கி பேசிக் கொண்டு இருந்தாள்.

அது போலத் தான் இப்போது காரில் போகும் போதும் பேசினாள். ஆனால் அவனிடம் அதற்கான சரியான பிரதிபலிப்பு இல்லாததாகவே தோன்றியது.

மனதினுள் ஒரு கோபம் முளைவிட ஆரம்பித்தது. அதன் பிறகு சுமித்ரா யாரிடமும் அதிகம் பேசவில்லை.

ஏர்போர்ட் உள்ளே நுழைந்து பிரபுவிற்காக காத்திருந்த போது அங்கே ஒரு கனமான அமைதி நிலவியது.

வைஷ்ணவி மட்டுமாக எவ்வளவு நேரம் தான் பேசுவாள், சுமித்ராவும் பதில் சொல்லவில்லை. கார்த்திக் காதில் வாங்கவேயில்லை. அமைதியாகி விட்டாள்.

வந்த பிறகு தான் ப்ளைட் இரண்டு மணி நேரம் லேட் என்று தெரிய. கார்த்திக் அங்கேயே உட்கார்ந்த வாக்கில் எதை பற்றியும் கவலைப்படாமல் ஒரு கர்ச்சீப்பை முகத்தில் போட்டு கொண்டு உறங்க ஆரம்பித்தான்.

அவனுக்கு இது பழக்கமே, குவாரியில் எத்தனையோ நாட்கள் ஆரம்ப காலத்தில் அவன் இப்படி தான் உறங்குவான்.

ஆழ்ந்த உறக்கமும் அல்லாமல் விழிப்புமல்லாமல் இருக்கும் ஒரு நிலை. பல நாட்கள் அவன் உறக்கம் அப்படியே.

கால் மணி நேரத்திற்கு ஒரு முறை விழித்து வைஷ்ண வியையும் சுமித்ராவையும் கண்ணில் பார்த்து உறங்கி னான்.

சுமித்ராவும் வைஷ்ணவியும் அப்படி அல்லவே மிகவும் சொகுசாக வளர்ந்தவர்கள். ஏர்போர்டை சுற்றி ரவுண்டு அடித்துக் கொண்டிருந்தனர்.

இவன் தங்களை கால் மணிநேரத்திற்கு ஒரு முறை தேடுவதை பார்த்து வந்து பேசாமல் அமர்ந்து கொண் டனர்.

பிரபு வந்த போது விடியற்காலை மணி ஐந்து.

வந்தவன் கார்த்திக்கை எதிர்பார்ப்போடு பார்த்தான். அவர்கள் சந்தித்துப் பல வருடங்கள் ஆகிவிட்டன.

"கார்த்திக்!" என்று ஆவலோடு பிரபு கார்த்திக்கை தழுவினான்.

"ஹேய் பிரபு! பெரிய டாக்டர் ஆகிட்ட நீ!" என்று சொல்லிக் கொண்டே ஆர்வமாக தழுவிய பிரபுவை விலக்கி வைத்து பார்த்த கார்த்திக், அவனின் தோற்றத்தை எடை போட்டான்.

ஏற்கனவே சிவந்த நிறத்தில் இருக்கும் பிரபு, இப்போது அமெரிக்க வாசத்தில் இன்னும் சிவந்து இருந்தான். மீசையில்லாத, வசீகரிக்கும் கலையான முகம், ஒரு சாக்லெட் பாய் அப்பியரேன்ஸ். கார்த்திக்கின் உயரத்திற்கு ஈடு கொடுத்தான்.

"ஏற்கனவே ஹாண்ட்சம் தான். இப்போ இன்னும் கலக்குறடா நீ. பொண்ணுங்க எல்லாம் உன் பின்னாடியே சுத்தறாங்களா என்ன?" என்றான் கார்த்திக்.

கார்த்திக் இப்படி இயல்பாக பிரபுவிடம் பேசியது அவன் வீட்டை விட்டு வெளியேறுவதற்கு முன் தான்.

அதன் பின்னும் பேசுவான் தான் ஆனால் ஒரு ஒதுக்கம் இருக்கும். அதற்கெல்லாம் இன்று தான் நன்றாகப் பேசினான்.

"அப்படி எல்லாம் தப்பா எடை போடாத... ஹாண்ட்சம்மா இருக்குறவங்களை எல்லாம் எட்ட நின்னு சைட் தான் அடிப்பாங்க! ஆனா ஒண்ணும் படியாது! உன்னை மாதிரி மேன்லியா இருக்கறவங்களுக்கு தான் ஈசியா படியும் டா!" என்று சொல்லிக்கொண்டே பிரபு சுமித்ராவை தோளோடு அணைத்து தன் அன்பை வெளிப்படுத்தினான்.

வேண்டுமென்றே வைஷ்ணவியை கண்டுகொள்ள வில்லை.

இடுப்பில் கைவைத்து முறைத்த வைஷ்ணவி, "பொண்ணுங்க உங்களுக்கு படியலைன்னு ரொம்ப வருத்தம் போல இருக்கு'' என்று பிரபுவிடம் சண்டைக்கு போக.

''அட! நீ இங்க தான் இருக்கியா! அதான் என்னடா ஏர்போர்ட்ல இவ்வளவு வெளிச்சம் இருந்தாலும் இந்த இடம் மட்டும் இன்னும் ப்ரைட்டா தெரியுதேன்னு பார்த்தோன்!'' என்று வைஷ்ணவிக்கு முகஸ்துதி வைக்க.

''இந்த பேச்சுக்கெல்லாம் யாரும் இங்க மசிய மாட்டாங்க'' என்று வைஷ்ணவி உதட்டை சுளித்து சொல்ல.

சுளிக்கும் அவளின் உதடுகளை ரசனையோடு பார்த்தவன், ''ஓஹ்! நீ அவ்வளவு பெரிய பருப்பா. மசியிர அளவுக்கு'' என்று குரலை தாழ்த்தி அவளுக்கு மட்டும் கேட்குமாறு கண்ணடித்து சொன்னான்.

வைஷ்ணவியின் முகம் வெட்கத்தில் சிவந்தாலும் முகத்தை மறைப்பது போல வைக்க. ''சரி, சரி உண்மை தெரிஞ்சிடுச்சா, நீ இருந்தா அந்த இடமே டல் ஆகிடும்னு'' என்று பிரபு அதற்கும் வார.

''உங்களை'' என்று வைஷ்ணவி பிரபுவை அடிக்க வர.

''சுமித்ரா! எப்படி இந்த பிசாசோட இருக்க நீ!'' என்று தங்கையின் பின் சென்று நின்றான் பிரபு.

எல்லாம் ஒரு புன்னகையோடு கார்த்திக் ரசித்திருந்தான். பிரபு எந்த இடத்தில் இருக்கிறானோ அந்த இடமே கலகலப்பாக இருக்கும்.

வைஷ்ணவியை ஒரு புறம் ரசனையோடு கண்களால் தழுவிக் கொண்டு இருந்தாலும் சுமித்ராவை பிரபுவின் கண்கள் அளவெடுத்தது.

என்னவோ அவளின் முகத்தில் குறைவது போல ஒரு தோற்றம் பிரபுவிற்கு. அடுத்த நிமிஷம் கார்த்திக்கிடம், ''லக்கேஜ் என்ன ஸ்டேடஸ்ன்னு பாரு கார்த்திக்!'' என்று அவனிடம் சொல்ல.

கார்த்திக் அதைப் பார்க்கச் செல்ல. வைஷ்ணவி அங்கேயே இருந்தாள்.

''சுமி எல்லாம் நான் எங்க போனாலும் பின்னாடியே வருவா'' என்றான் பிரபு.

வைஷ்ணவியும் புரியாமல் பார்க்க.

''ஏய், ட்யூப் லைட் உங்கண்ணன் பின்னாடி போன்னு சொன்னேன்'' என்றான்.

அப்போதும் வைஷ்ணவி ''எதுக்கு'' என்றபடி அங் கேயே நிற்க.

''போடி'' என்றான் பிரபு.

''வா சுமி! நம்ம போகலாம்!'' என்று வைஷ்ணவி அவளை இணை சேர்க்க.

கடுப்பான பிரபு. ''இப்போ தான் வந்து இறங்கி யிருக்கிறேன்! இப்போவே என்கிட்ட உதை வாங்காத. நீ மட்டும் போ'' என்றான், அவன் வார்த்தை பலிக்கப் போவது தெரியாமல்,

''போடா'' என்று திருப்பி திட்டியபடி வைஷ்ணவி கார்த்திக்கை தேடிச் செல்ல.

''என்னடா ஏதாவது பிரச்சனையா, ஒரு மாதிரி இருக்க'' என்று சுமித்ராவிடம் பிரபு கேட்டது தான் போதும். பொல பொல வென்று சுமித்ராவின் கண்களில் இருந்து நீர் இறங்கியது.

''என்னாடாம்மா'' என்று பிரபு பதற.

''தெரியலைண்ணா! சொல்லத் தெரியலை! ஆனா எனக்கு மனசு சரியில்லை. என்னவோ மாதிரி இருக்கு! ஐ மிஸ்ட் யூட எ லாட்!'' என்றாள்.

''அண்ணா கிட்ட எதுனாலும் சொல்லுடா'' என்று பிரபு கனிவாக கேட்க.

''எனக்கே தெரியாத போது உன்கிட்ட எப்படி சொல் வேன்'' என்று கண்ணீரோடு புன்னகைத்தாள் சுமித்ரா.

''இதுக்கு தான் நான் இங்கேயே படிக்கறேன்னு சொன் னேன். நீயும் அத்தையும் தான் என்னைத் துரத்தி விட் டீங்க.''

''அதான் நீ வந்துட்ட இல்ல! இனிமே ஐ வில் பீ ஆல் ரைட் அண்ணா!'' என்று சுமித்ரா கண்களை துடைத்தபடி சொல்லி பிரபுவின் தோள் சாய. ஆதராவாக பிரபு அவளின் தோளை அணைத்து பிடித்தான்.

அவர்களை முறைத்தபடி எதிரில் வந்து நின்றாள் வைஷ்ணவி. ''உங்களை பாச மலர் படத்தை ஓட்ட ணும்னா ஓட்டுங்க! நான் என்ன வேண்டாம்னா சொன் னேன்! அதுக்கு ஏன் என்னைத் துரத்துனீங்க!'' என்று பிரபுவிடம் சண்டை போட்டவள்.

''நான் உங்களுக்கு நடுவுல வர்றேன்னு நினைக்கிறீங் களா'' என்று குரல் கமற கேட்க.

''ஏய், லூசு'' என்றபடி வைஷ்ணவியின் அருகில் பிரபு போய் அவளை தோளோடு அணைத்து அவளை சமாதானப்படுத்த.

''டேய், அண்ணா!'' என்று பிரபுவை அழைத்த சுமித்ரா.

''உன் தங்கச்சி தோள் மேல நீ கை போட்டா அவங் கண்ணா சும்மா இருப்பாங்க. ஆனா அவங்க தங்கச்சி மேல கையை போட்டா என்ன பண்ணுவாங்கன்னு சொல்ல முடியாது'' என்று சுமித்ரா சிரிப்போடு ஒரு பஞ்ச் டைலாக்கை சொல்லிக் கொண்டிருக்கும் போதே கார்த்திக் வர. அவசரமாக வைஷ்ணவியை விட்டு விலகி நின்றான் பிரபு.

அது ஒரு கவிதைத்துவமான காட்சி. அதை ஒரு இயலாமையோடு பார்த்திருந்தது இரு கண்கள்.

அது சக்தியின் கண்கள்.

அவளுடன் பீ ஜி படித்த அவளுடைய தோழி ஒருத் தியும் தோழன் ஒருவனும் காதலித்து மிகுந்த எதிர்ப்பு கிடையில் திருமணம் செய்திருந்தனர்.

படித்த படிப்புக்கு வேலை கிடைத்தாலும் அதை செய்ய விடாமல் ஏதோ ஒரு வகையில் இரு வீட்டின ருமே அவர்களுக்குத் தொந்தரவு கொடுத்துக் கொண் டிருக்க.

சக்தியிடம் உதவி வேண்டி வந்து நின்றனர் இருவரும். இருவரும் வெளிநாடு செல்ல விருப்பப்பட, அவர் களுக்கு அதற்குத் தேவையான பண உதவிகள் செய்து. விசா எடுப்பதிலும் உதவி செய்து.

ஆறு மாத கைக் குழந்தையோடு இருக்கும் அவர்களை வழியனுப்ப வந்திருந்தாள் சக்தி.

அவர்கள் செல்லவும் வெளியே வர திரும்பும் போது. ''கார்த்திக்'' என்ற அழைப்பு செவிகளில் விழ.

அவசரமாகத் திரும்பி பார்த்தாள்.

பார்த்தால் அது கார்த்திக் தான்.

அவன் யாரையோ அணைத்து விடுவித்து அவனை பார்வையால் ஆராய்ந்து அவனுடன் ஒரு புன்னகையோடு பேச ஆரம்பிக்கவும்.

ஆறு மாதத்திற்குப் பிறகு கார்த்திக்கை பார்த்த அவளால் அந்த இடத்தை விட்டு விலக முடியவில்லை. அதுவும் கறுப்பு கண்ணாடி இல்லாத கார்த்திக்கின் முகமும் கண்களும் அவனின் உணர்வுகளைப் பிரதிபலிக்க. அவள் அங்கேயே ஒரு இருக்கையில் அமர்ந்து கொண்டாள். அவர்களின் பார்வையின் வட்டத்தில் தான் இருந்தாள்.

ஆனால் சுமித்ராவோ, வைஷ்ணவியோ, கார்த்திக்கோ கவனிக்கவில்லை. ஆறு மாதமாக சக்தியின் கண்களில் கார்த்திக்கோ. கார்த்திக்கின் கண்களில் சக்தியோ பட வில்லை. இப்போது இருவரையும் விதி பார்க்க வைத்தது.

அவர்களுக்குள் நடந்த எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தாள். என்னவோ ஒரு இயலாமை, ஒரு ஏமாற்றம், அந்த இடத்தை விட்டு அசைய முடியாமல் அவர்களைப் பார்க்க வைத்தது.

கார்திக் வரவும். ''சட்டுன்னு திரும்பிடாத கார்த்திக்! ஒரு ஃபிகர் ரொம்ப நேரமா நான் வந்ததுல இருந்து லுக்

விடுது. பொண்ணுன்னா அது பொண்ணு! பார்க்கவே அவ்வளவு சாஃப்ட்டா, அழகா இருக்குது'' என்றான்.

அப்போதும் கார்த்திக் பார்க்கவில்லை. ''டேய்! இப்போ தான் இண்டியால வந்து லேண்ட் ஆகியிருக்க! இப்போவே யார் கிட்டயாவது அடி வாங்கி அடுத்த ஃப்ளைட் பிடிக்காத'' என்று சொன்னபடி கார்த்திக் நிற்க.

வைஷ்ணவி முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு நின்றிருந்தாள்.

''இவங்களை வெச்சிட்டு சைட் தான் அடிக்க முடியாது'' என்று சுமித்ராவையும் வைஷ்ணவியையும் காட்டியவன்.

''அட்லீஸ்ட் ஒரு பிரண்ட்டாவாவது ஆகறேன். ரொம்ப நேரமா பார்க்குறா. ஒரு ஹாயாவது சொல்லிட்டு வர்றேன்! இவ்வளோ பியூட்டி எல்லாம் மிஸ் பண்ணக் கூடாது'' என்று பிரபு திரும்ப.

''யாருக்குடா இவ்வளவு பில்ட் அப்பு'' என்பது போல சுமித்ராவும் வைஷ்ணவியும் திரும்பினர். அப்போதும் கார்த்திக் அங்கே பார்க்கவில்லை.

அவர்கள் மூவரும் தன்னைப் பார்ப்பதை உணர்ந்தாள் சக்தி.

பார்த்த சுமித்ராவின் முகத்திலும் வைஷ்ணவியின் முகத்திலும் ஒரு அதிர்ச்சி, சுமித்ரா பார்த்தபடி நிற்க. வைஷ்ணவியின் முகத்தில். ''இவள் எங்கே இங்கே'' என்பது போல சட்டென்று ஒரு எரிச்சல் தோன்ற.

சற்று ஏளனமான குரலில் ''அது உங்களைப் பார்க்கலை, கார்த்திக் அண்ணாவை பார்த்திருக்கும்'' என்றாள்.

கார்த்திக் உடனே திரும்பினான். அங்கே சக்தி அமர்ந்திருக்கவும். ஒரு ஆச்சர்யம், ஒரு அதிர்ச்சி அவன் முகத்தில், முதலில் கவனித்தது அவளின் கூட யார் இருக்கிறார் என்பது போல தான்.

யாரும் அருகில் இல்லை என்பதை உணர்ந்து அருகே செல்லத் துவங்கினான்.

''யார் அது'', என்று பிரபு கேட்க.

''ம்! அண்ணனோட மேடம்! அப்படி தான் அவன் சொல்லிட்டு திரியறான்'' என்றாள் கோபமான குரலில் வைஷ்ணவி.

அவள் பதில் சொன்ன விதத்திலேயே, பிரபு மேலே அவளிடம் விவரம் கேட்கவில்லை. அவர்களைக் கவனிக்க துவங்கினான்.

''இங்கே எங்கே மேம் நீங்க தனியா?'' என்று கார்த்திக் அருகில் சென்று கேட்க.

''அவங்கல்லாம் உன் பாமிலியா கார்த்திக்!'' என்றாள்.

கார்த்திக் அதற்குப் பதில் சொல்லாமல். ''நீங்க எங்க இங்க தனியா'' என்று மறுபடியும் அதையே கேட்டான்.

சக்தி பதில் சொல்லவில்லை. என்னவோ துக்கம் தொண்டையை அடைக்க. அருகே இருந்த காபி ஷாப்பை நோக்கித் திரும்பியவள், ஒரு காபி ஆர்டர் செய்து நிற்க. கார்த்திக் பொறுமையாக அவளுடன் நின்றான்.

''நீ போ கார்த்திக்!'' என்றாள்.

அவன் அப்போதும் அங்கேயே நிற்க. ''ப்ளீஸ், நீ போ!'' என்றாள்.

''உங்களை இப்படி தனியா விட்டுட்டுப் போக முடியாது. எதுக்கு இங்க வந்தீங்க?''

''சொல்ல முடியாது!''

''சரி! எப்படி வீட்டுக்கு போவீங்க! கூட யாரு இருக்காங்க! தெரியாம இடத்தை விட்டு நகர மாட்டேன்!'' என்றான்.

ஆர்டர் செய்த காபி வர அதை கையில் வாங்கிக் கொண்டே. ''கருப்பண்ணன் வெளியே நிக்கறார்! போதுமா! நீ கிளம்பு!'' என்று பல்லை கடித்துக் கொண்டு அவள் வார்த்தைகளை துப்ப.

மனமேயில்லாமல் அந்த இடத்தை விட்டு நகர்ந்தான். கார்த்திக்.

சக்திக்கு அந்த காபியை பருக கூட விருப்பமில்லாமல் கையில் வைத்துக் கொண்டே நின்றிருந்தாள்.

கார்த்திக் அருகில் வரவும், ''யார் கார்த்திக் அது, உனக்கு ரொம்பத் தெரிஞ்சவங்களா?'' என்று பிரபு கேட்க.

''ம்!'' என்று சொல்லி. தலையை மட்டும் ஆட்டியவன். ''கிளம்பலாம்'' என்றபடி இருந்த லக்கேஜ்ஜை ட்ராலியில் வைத்துத் தள்ள.

சக்தி வேறு புறம் பார்த்து நின்றிருந்தாள்.

விடு விடு வென்று சுமித்ராவை இழுத்துக் கொண்டு சக்தியின் அருகே சென்றாள் வைஷ்ணவி.

அவர்கள் செல்வதை பார்த்த கார்த்திக், பிரபுவிடம் ட்ராலியை தள்ளி வேகமாக அவனும் போனான்.

''வைஷு'' என்றவன் அழைக்க, அழைக்க சக்தியின் அருகில் சென்ற வைஷ்ணவி சுமித்ராவை காட்டி. ''இது தான் எங்க அண்ணா கல்யாணம் பண்ணிக்க போற பொண்ணு'' என்றாள்.

அதற்குள் அருகில் வந்திருந்த கார்த்திக். ''வைஷு'' என்று கோபமாக அவளை அடக்க முற்பட.

அவன் புறம் திரும்பிய சக்தி, ''நீ வாயை மூடு! ஒரு வார்த்தை கூடப் பேசக்கூடாது!'' என்று அவனை அடக்கியவள் வைஷ்ண:வியின் புறம் திரும்பினாள்.

அப்போதும் ''ப்ளீஸ் மேம்! அவ தெரியாம பேசறா!'' என்று கார்த்திக் இடைப்புக.

''அவ என்ன கார்த்திக் தெரியாம பேசறா. இவளை தானே நீ கல்யாணம் பண்ணிக்கப் போற'' என்று சொன் னவள்.

வைஷ்ணவியை நோக்கி பார்வையைத் திருப்பினாள். அதற்குள் பிரபுவும் அருகில் வந்திருந்தான்.

''நீ வா போகலாம்!'' என்று கார்த்திக் வைஷ்ணவி யின் கையைப் பிடித்து இழுக்க.

''விடு கார்த்திக் அவ கையை!'' என்றாள் சக்தி.

பிரபு பார்த்துக் கொண்டே தான் இருந்தான். பார்க்க இவ்வளவு மென்மையாக இருக்கும் பெண்ணின் குரலில் இத்தனை வலிமையா, அதுவும் எல்லோரும் பார்த்து பயப்படும் கார்த்திக்கை எப்படி அதட்டுகிறாள். பிரபு என்ன நடக்கப்போகிறதோ என்றபடி பார்க்க.

''ம்! இப்போ சொல்லு!'' என்றாள் வைஷ்ணவியை பார்த்து.

கார்த்திக்கின் முகத்தில் பயம். ஆம் பயமே தான். மறந்து வந்த கண்ணாடி இல்லாததால் பயம் அப்பட்டமாகத் தெரிந்தது.

சக்திக்கு கோபம் வந்தாள் வலிக்க, வலிக்க, பேசுவாள். ஒன்று அவளுக்கு வலிக்கும், இல்லை எதிராளிக்கு வலிக்கும். இங்கே எதுவாகினும் அவனுக்கு வலியே.

தவிப்புடன் சக்தியை பார்க்க.

''இவ தான் என் அண்ணா கல்யாணம் பண்ணிக்க போற பொண்ணு!'' என்றாள் மறுபடியும் வைஷ்ணவி.

''வைஷு!'' என்று ஒரு அதட்டல் போட்ட கார்த்திக் அவர்கள் இருவருக்கும் நடுவில் வந்து நின்றான்.

''சாரி மேம்! சாரி! அவளுக்காக நான் உங்ககிட்ட மன்னிப்புக் கேட்கறேன்'' என்று வைஷ்ணவியின் கையை பிடித்துக் கூட்டிச் செல்லப் பார்க்க.

''உன் தங்கச்சியில்ல, அதான் ப்ரோடக்ட் பண்ற! நான் யாருமில்லைல உனக்கு!'' என்றாள். அதை சொல்லும் போது அவள் முகத்திலும் குரலிலும் அவ்வளவு வலி. ஒரு நொடியில் அதை மாற்றியவள்.

''நகரு கார்த்திக்!'' என்று அவனின் கையைப் பற்றி தள்ளி நிறுத்தியவள். நேருக்கு நேராக வைஷ்ணவியை பார்த்தாள். பார்வையில் அத்தனை சீற்றம்.

''உங்க அண்ணன் கல்யாணம் பண்ணினா என்ன? இல்லை, என்ன கருமம் பண்ணினா தான் என்ன? அதை ஏன் நீ என்கிட்ட சொல்ற.''

அவளின் வார்த்தையில் பதைத்தார்கள் எதிரில் நின்றவர்கள். கார்த்திக் இனிமேல் அவளாக நிறுத்தினால்

தான் உண்டு, அவளை நிறுத்த முடியாது என்பதாக ஒரு இயலாமையோடு பார்த்தான்.

சுமித்ரா பிரபுவின் பக்கத்தில் சென்று நின்று கொண் டாள்.

ஒரு நிமிஷம் அதிர்ந்து நின்ற வைஷ்ணவி, "ஏய், என்ன கருமம் கிருமம்னு பேசற?" என்று எகிற.

"ஏய், ஏய் கீய்ன பல்லெல்லாம் பேத்துருவேன். என்ன மொத்த குடும்பமும் என்னோட விளையாடிப் பாக்கறீங்களா."

"நான் கேட்டனா? நான் வந்து உன்கிட்ட கேட்டனா? நீயா வர்ற! நீயா கல்யாணம்னு சொல்ற! வேற எப்படி பேசுவாங்க.?" என்று வைஷ்ணவியிடம் கத்தியவள்.

கார்த்திக்கை நோக்கி பார்வையை திருப்பினாள். "ஏன் கார்த்திக்? உன் தங்கச்சி ஏன் வந்து என்கிட்ட இதை சொல்றா.?" என்று நிறுத்தியவள்.

அவனருகில் வந்து வார்த்தையை கடித்து துப்பினாள். "ஒரு வேளை நான் இப்படி கேட்பேன்னு நினைச்சிருப் பாறோ." என்று நிறுத்தினாள்.

என்ன வரப்போகிறதோ என்று கார்த்திக் பதைத்துப் பார்க்க.

தயவுதாட்சண்யமேயில்லாத குரலில், நீ எனக்கு மாப்பிள்ளையா வர்றியா கார்த்திக்" என்றாள்.

அங்கிருந்த நால்வரின் இதயம் துடிக்கும் ஓசையும் வெளியே கேட்டது.

அவனையே சில நொடிகள் பார்வை எடுக்காமல் பார்த்தவள், "முடியாதில்ல" என்றவள் கையில் இருந்த

காபியை, அவன் முகத்தில் அப்படியே ஊற்றி கப்பை தூக்கி தூர எறிந்தாள்.

யாரும் எதிர்பார்க்கவில்லை.

எல்லோரும் கார்த்திக்கை பார்க்க அவன் முகத்தில் எதுவுமில்லை. கோபம், வெறுப்பு, வருத்தம் மாதிரி எதுவுமில்லை. அவள் என்ன செய்தாலும் வாங்க கடமை பட்டவன் போல முகத்தில் வழிந்த காபியை துடைத்துக் கொண்டு நின்றான்.

சுமித்ராவிற்கு வெறுத்தே விட்டது.

பிரபு, ''என்ன பண்றீங்க'' என்று கார்த்திக்கிற்கும் சக்திக்கும் நடுவில் வர.

''தூர போ நீ! எனக்கும் இவனுக்கும் நடுவுல யாரும் கிடையாது!'' என்றவள். ''என்னவோ நீங்கல்லாம் ரொம்ப யோக்கியம் மாதிரி இந்த பொண்ணு வந்து பேசறா!'' என்று வைஷ்ணவியை காட்டியவள்.

''இவங்கண்ணன் கல்யாணம் பண்ண போறானமா. இவங்கண்ணன் ஒரு திருட்டு பய! எங்க வீட்ல வந்து. இருந்து. எங்க சொத்தை. எங்க நம்பிக்கையை. திருடி இருக்கான்.''

''இவங்கப்பா சிரமப்பட்டு நடுத்தெருவுல நின்னப்போ எங்கப்பா உதவி செஞ்சார். கொஞ்மா மதிப்பு இருக்குற சொத்தை நிறைய பணம் போட்டு வாங்கினார். பதிலுக்கு இவன் என்ன செஞ்சான்? எங்க வீட்ல வந்து திருடினான். வெளில இது யாருக்காவது தெரியுமா?''

''யாருக்கும் தெரியாது! எங்கப்பா அப்போ கூட நண்பனோட பையன்னு யாருக்கும் சொல்லலை!''

''எங்கப்பா மட்டுமில்ல விஷயம் தெரிஞ்ச யாரும் இதை வெளில சொல்லலை.''

''நாய்களுக்கு கூட நன்றியிருக்கும். ஆனா உங்க குடும்பத்துக்கே அது கிடையாது.''

''நாய்'' என்ற வார்த்தையைக் கேட்டதும் நொறுங்கியே போனான்.

''ஒவ்வொரு தடவையும் இந்தப் பொண்ணு என்னைப் பார்க்கும் போது இன்சல்ட் பண்றா! அவங்கண்ணன் பெரிய திருட்டுப்பயன்றது தான் நிஜம். இதுல வாசுகி குழுமம் எங்களோடதுன்னு நான் சொன்னதுக்கு அவ்வளவு கேவலமா என்னைப் பார்த்தா. உங்களோட தான்னு நக்கலா கேட்டா.''

''நீங்க தான் கேவலமானவங்க.''

''கார்த்திக்! இன்னொரு தடவை என்னை யாராவது இப்படி சீண்டினாங்க. நீயும் உங்கப்பா மாதிர நடுத் தெருவுல நிப்ப கார்த்திக். நடுத்தெருவுல நிற்ப. இல்லை நான் நிற்க வைப்பேன்!'' என்ற சக்தியின் வார்த்தைகளில் அவன் இறந்தே போனான்.

சொன்ன சக்தி சொன்ன வார்த்தையின் வீரியம் உணர்ந்து... ''சே! சே! என்னை எவ்வளவு கீழ இறங்க வெச்சிட்ட கார்த்திக். இன்னும் கொஞ்ச நேரம் நான் இங்க இருந்தா என்னையே எனக்கு பிடிக்காம செஞ்சிடுவ நீ!'' என்று சொன்னவள் விடு விடுவென்று வெளியேறினாள்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பிரபு ஆத்திரமிகுதியில் வைஷ்ணவியை ஓங்கி ஒரு அறை விட. வைஷ்ணவி தூரப் போய் விழுந்தாள்.

''மனுஷங்கன்னா கொஞ்சமாவது வாயை அடக்கனும். அந்த பொண்ணை பேசப் போய் உங்கண்ணனை எவ்வளவு அசிங்கப்படுத்திட்ட நீ'' என்று அவன் கத்த. ஏர்போர்ட்டே வேடிக்கை பார்த்தது.

''ப்ளீஸ் அண்ணா! என் மேல இருக்குற அன்பால இப்படி பண்ணிட்டா'' என்று சுமித்ரா வந்து வைஷ்ண வியை தூக்கி விட்டாள்.

சக்தியின் பின்னால் போன கார்த்திக். ''ப்ளீஸ்! ப்ளீஸ் சக்தி! சாரி!'' என்று கெஞ்சினான்.

''சாரியா'' என்று ஆத்திரமானாவள். ''சொத்தை கொள்ளையடிச்சிட்டு போனப்போ கூட ஒரு சாரி சொல்லாதவன் இப்போ எதுக்கு சொல்ற.''

''நீ ஒரு பொய்யைச் சொல்லி. அதை நிஜம் போல நம்ப வெச்ச.''

''நான் உன்னை இஷ்டப்பட்டேன், அதான் அந்த பொய் சொன்னேன்'' என்று கத்த வேண்டும் போல கார்த்திக்கிற்கு இருந்தது. ஆனால் முடியவில்லை.

''உன் தங்கச்சி. இது தான் எங்கண்ணன் கல்யாணம் பண்ணிக்கப் போற பொண்ணுன்னு சொல்றா. நான் என்ன பண்ணிடுவேன் உன்னைன்னு அப்படி சொல்றா.''

''ஒரு வேளை எங்கம்மா உன்கிட்ட பேசினதை நீ எல்லார்கிட்டயும் சொல்லிட்டியா?'' என்று சந்தேகமாகக் கேட்க.

அவள் கையை அவனறியாமலேயே பற்றிக் கொண்டான். ''இல்லை சக்தி! இல்லவே இல்லை! நான்

அதைப் பத்தி யார்கிட்டயும் பேசலை! இனிமேயும் பேச மாட்டேன்! என்னை நம்பு!'' என்றான்.

''மேம்'' என்ற அழைப்பு நின்றதோ. அவளை, ''சக்தி'' என்று பெயர் சொல்லி ஒருமையில் அழைத்ததோ. எல்லாம் தானாக நடந்தது.

''நம்பறதா? உன்னையா?'' என்றவள். பிடித்திருந்த கையை வெறுப்போடு உதறினாள்.

அவள் கையை உதறவும். இவர்கள் மூவரும் வரவும் சரியாக இருந்தது.

''you know karthick, every war is personal'' என்றாள். அது மூவர் காதிலும் விழுந்தது. வைஷ்ணவி சுமித்ராவின் கையை பயத்தோடு பிடித்தாள்.

அவள் கருப்பண்ணனுடன் காரில் ஏறுவதை பார்த்த பிறகே திரும்பினான்.

கார் சாவியை பிரபுவின் கையில் குடுத்த கார்த்திக். ''நீங்க கிளம்புங்க'' என்றான்.

''நீ கார்த்திக்.'' என்ற பிரபுவிற்கு பதில் சொல்ல வில்லை.

விடிந்தும் விடியாத அந்த பொழுதில் ரோடில் கால் போன போக்கில் நடக்க துவங்கினான்.

விடியல் எல்லோருக்கும் விடியலா என்ன? கார்த் திக்கின் காதுகளில், every war is personal என்ற சக்தியின் வார்த்தைகளே மீண்டும் மீண்டும் ஒலித்தது.



# 22

**திக்கு தெரியாத காட்டில் - உனை**

**தேடித் தேடி இளைத்தேனே**

- பாரதி

**கா**ல் போன போக்கில் நடந்தான் கார்த்திக். எவ்வளவு நேரம் என்றே தெரியாது. கால்கள் துவள ஆரம்பிக்கும் போது கண்ணில் ஒரு பஸ் ஸ்டாப் தெரிய, அங்கே சேர் போடப்பட்டிருக்க அங்கே அமர்ந்தான். இலக்கின்றி வெறித்து அமர்ந்திருந்தான்.

கழுத்து விண் விண் என்று வலித்தது. சற்று டென்சன் ஆனாலும் வலித்தது. போன மாதம் கூட டாக்டரிடம் கம்ப்ளீட் செக் அப் செய்தான். ஒரு பிரச் சனையுமில்லை. ஆனால் வலி விடுவேனா என்றது.

மனம் மட்டும் வலியை தாங்க வேண்டும் என்பது என்ன? உன் உடலும் தாங்கட்டும் என்று கடவுள் நினைத்து விட்டாரா என்ன?

சக்தியின் வார்த்தைகள் அவனை சாட்டையாய் சுழற்றி அடித்தன.

''நீ மாப்பிள்ளையா வர்றியா கார்த்திக்.''

''எப்படி ஏமாற்றி விட்டு வந்தோம். இந்த சில மாதங்களாக பார்க்கக் கூட இல்லை. என்னைத் தூக்கி போடாமல் என்ன செய்துக் கொண்டிருக்கிறாள்.''

''என்னை நடுத்தெருவில் நிற்க வைப்பாளாம்.'' அவனையறியாமல் ஒரு கசந்த முறுவல் தோன்றியது.

''அவளால் முடியுமா என்ன?''

முடியும், முடியாது என்பது காலத்தின் கையில்.

சக்தி, சக்தி, சக்தி, சர்வம் சக்தி மயம். அவன் எண்ணத்துள்.

நிறைய தொலைபேசி அழைப்புகள் வர ஆரம்பிக்கவும் தான் உணர்விற்கு வந்தான். எதிரில் ஒரு கண்ணாடி கடை தெரிய அங்கே போய் ஒரு கறுப்புக் கண்ணாடியை வாங்கி முதலில் அணிந்தான்.

கண்ணாடியை கடைக்காரன் கொடுத்தாலும் அவனை ஒரு மாதிரி பார்ப்பது போலத் தோன்ற அங்கே இருந்த கண்ணாடியில் தன் தோற்றத்தைப் பார்த்தான்.

அவன் ஒரு வெள்ளை சட்டை அணிந்திருக்க அதில் திட்ட திட்டாய் காபியின் கறைகள். முகம் பிசுபிசுவென்று இருந்தது. பரவாயில்லை காபி மதிமான சூட்டில் இருந்ததால் கார்த்திக்கின் முகம் தப்பித்தது.

ஒரு பக்கம் மனம் சக்தியிடம் பேசு. என்று சொன்னது. இன்னொரு பக்கம் இல்லையென்றான பிறகு அவளை விட்டுவிடு, உன்னை நிரூபிக்க முயற்சிக்காதே. அவளின் மனம் வேறு புறம் திரும்பட்டும். அவள் நன்றாக இருக்கட்டும். நீ அவளுக்கு நம்பிக்கைத் துரோகியாகவே இருந்து விடு என்று சொல்ல.

நிலை பிறழ்ந்த மனதை நிலைபடுத்தினான்.

''நம்புவதா? உன்னையா?'' என்ற சக்தியின் வார்த்தைகள் அவனுள் ஓடிக்கொண்டே இருந்தன. மனம் இறுகியது.

அது மட்டுமா. ''திருடன்.'' இது சக்திக்குத் தெரிந்தது.

தெரியாதது, ''நான் கொலைகாரன்.''

அழ வேண்டும் போல இருந்தது. வலி அதிகரித்தது. ஆனால் ஆண்கள் அழக்கூடாது என்று அவனுக்கு அவனே விதித்துக் கொண்டவன்.

''இது நான் தளரும் சமயம் அல்ல'' பல முறை சொன் னான்.

''கலங்காதே. துணிந்து நில். இது மாயா லோகம். மாயை எல்லாம் மாயை. பெண்ணும் மாயை. சக்தியும் மாயை. உன்னை கொண்டு போக விடாதே.''

தன் தந்தையின் கடைசிக் காலங்களை கண் முன் கொண்டு வந்தான். அம்மாவை நினைத்தான். சக்தியை புறம் தள்ளினான். அவன் முதல் முதலில் பார்த்த அவ ளின் முகம் கண் முன் நிழலாட. அதை விட்டு இப்போது இருக்கும் சக்தியின் முகத்தை கொண்டு வந்தான்.

''மேம்'' என்று உச்சரித்தான். வலி சற்று குறைந்தது.

புறப்பட்டு விட்டான்.

நேரே ஒரு ஹோட்டலில் ரூம் எடுத்தான். அவன் எப்போதும் பெங்களூரில் துணி எடுக்கும் ஷோரூமிற்கு போன் செய்து அவனுக்கான துணிகளை வரவழைத் தான்.

அணிந்தான். தோற்றம் இப்போது திருப்தியாக இருக்க.

பிறகு தான் தொலைபேசியை எடுத்து பார்த்தான். பார்த்தால் வாசுகியிடமிருந்து நிறைய அழைப்புகள்.

அவனுடைய சினிமா வேலைகளை பார்க்கும் மேனேஜரிடமிருந்து நிறைய அழைப்புகள்.

வாசுகிக்கு முதலில் அழைத்தான். "சொல்லுங்கம்மா."

"எங்கப்பா போன! ஏதோ அவசர வேலையா போனேன்னு இவங்க மூணு பேரும் சொல்றாங்க. எல்லாம் ஆளுக்கு ஒரு மூலையில் உட்கார்ந்து இருக்காங்க. ஏதாவது பிரச்சனையா."

"இல்லைம்மா ஒரு சின்ன வேலை. முடிஞ்சிடுச்சு. வந்துடறேன்."

பிறகு மேனேஜருக்கு அழைக்க. "சார்! இன்னைக்கு நம்ம படம் ரிலீஸ். காலையில இருந்து நீங்க கூப்பிடுவீங்கன்னு பார்த்தேன். இப்போ நான் முதல் காட்சி. சென்னையில இருந்தா, தியேட்டர்ல படம் பார்த்தா ரசிகர்களோட கருத்தை தெரிஞ்சிக்கலாம்."

"இங்க கொஞ்சம் அவசர வேலை! என்னால வர முடியாது! நீங்களே பார்த்துட்டு சொல்லுங்க" என்றவன் அருகில் இருந்த கோவிலுக்குச் சென்று வாசலில் நின்றான்.

"எங்கப்பாவோட இந்த ப்ரொடசஷன் கம்பெனி நல்லா வரணும். கடவுளே! படம் ஹிட் ஆகணும்" என்று உளமார வேண்டிக்கொண்டான்.

அவனோடு சுத்தும் ஆட்களுக்கு அழைத்தவன், "டேய்! படம் ரிலீஸ் கலக்கனும்டா" என்றான்.

நேற்றே அவர்களிடம் சொல்லி அவர்களை சென்னைக்கு அனுப்பியிருந்தான். இன்று காலையில் நடந்த விஷயங்களினால் அது ஞாபகத்தில் இல்லை.

இப்போது கார்த்திக் பேக் டு ஃபார்ம். அழுது வடிந்து கொண்டு வாழ்க்கை முடிந்தது போல உட்கார்ந்து இருந்தால் அது கார்த்திக் அல்லவே.

அவன் போராட்டங்கள் அவனோடு. அதுவும் வெளியே தெரியாது.

கிருஷ்ணகிரி திரும்ப வேண்டும். நேரே ஒரு கார் ஷோ ரூம் சென்றவன் பிடித்த காரை எடுத்தான். ப்ளாக் கலர் jaquar car கிட்ட தட்ட ஒன்றரை கோடி, இவன் போன் செய்த பத்து நிமிஷத்தில் பணம் வந்தது.

''சர். ரெஜிஸ்டரேஷன்'' என்று இழுத்த பணியாள ரிடம்.

''என் சொந்த ரிஸ்க்ல எடுத்துட்டு போறேன். எல்லா ப்ரோசீஜரும் கிருஷ்ணகிரி வந்து பண்ணுங்க'' என்று சொன்னவன் அடுத்த பத்து நிமிடங்களில் ஹைவேசில் இருந்தான்.

கார் பறந்தது கிருஷ்ணகிரியை நோக்கி. நேரே வீடு தான் சென்றான்.

இவனை பார்த்ததும் பிரபுவிற்கு ஆச்சர்யம், இவனா ஒரு பெண்ணிடம் காபி அபிஷேகம் வாங்கினான் என்று.

அவன் முகத்தில் இருந்து எதுவும் தெரியவில்லை என்பதை விட எதுவும் நடந்திருக்க வாய்ப்பேயில்லை என்பது மாதிரி இருந்தது அவனின் முகம்.

பிரபுவிடம் கார் சாவியை நீட்டியவன், ''இது உனக்கு'' என்றான்.

காரின் சாவி என்பது பிரபுவிற்கு புரிந்தது. "எதுக்கு?" என்றான்.

"உனக்கு கார் வேண்டாமா."

"அது தான் வீட்ல ஒரு கார் இருக்குதே" என்றான். அது கார்த்திக் வீட்டிற்கு வருவதற்கு முன் அவர்கள் உபயோகித்து கொண்டிருந்த கார்.

"என்ன அந்த பத்து வருஷத்திற்கு முன்னாடி வாங்கின காரா? அதெல்லாம் வேண்டாம் இதை யூஸ் பண்ணு" என்றான்.

என்ன கார் என்று பிரபு பார்க்க. கறுப்பு jacuar நிற்க. "இவ்வளவு விலையா" என்று பிரபு தயங்கினான்.

"நீ இது தான் யூஸ் பண்ற" என்று பேச்சு முடிந்தது என்பது போல வெளியே செல்லக் கிளம்ப.

"கார்த்திக், ஏர்போர்ட்ல." என்று பிரபு ஆரம்பிக்கும் போதே.

"அதை மறந்திடு!" என்று ஒரே வார்த்தையில் சொல்லிச் சென்று விட்டான் கார்த்திக். பிரபுவிற்குக் கவலையாக இருந்தது.

அந்த பெண் காலையில் தான் அவ்வளவு பேசியது. இவன் அசால்டாக எதுவுமே நடக்காதது போல கோடிக்கும் மேல் விலை இருக்கும் காரை வாங்கிக் கொண்டு வந்து நிறுத்துகிறான். என்ன நடக்கிறது என்று புரியவில்லை.

மெதுவாக அத்தையிடம், தாத்தாவிடம் என்று பேச்சுக் கொடுக்க. அவன் குவாரி காண்ட்ராக்ட் எடுத்திருக் கிறான். கிரானைட்ஸ் எக்ஸ்போர்ட் செய்கிறான் என்பது வரை தான் தெரிந்தது.

அதை சக்தியின் வீட்டினரிடம் இருந்து எப்படி வாங்கினான் என்பது தெரியவில்லை. இப்படி கோடியை நிமிஷத்தில் செலவு செய்யும் அளவுக்கு அந்த தொழில் அவ்வளவு லாபம் மிக்கதா என்றும் தெரியவில்லை. அது மட்டுமில்லாமல் அவன் திருடிக் கொண்டு வந்து விட்டான் என்ற சக்தியின் வார்த்தைகளைக் கேட்ட பிறகு அந்தக் காரை உபயோகிக்க பிடிக்கவில்லை.

இதை யாரிடம் சொல்வது! யாரிடமும் சொல்ல முடியாது! பாதிக்கப்பட்டவர்களே அவனைப் பற்றி ஒரு வார்த்தை வெளியே தெரிய விட்டிருக்கவில்லை என்னும் போது அவன் ஆராய்ந்து என்ன பயன்.

மெதுவாக கார்த்திக்கிடம் பேசி விஷயங்களை சரி செய்ய வேண்டும் என்று நினைத்தான்.

யார் சொல் பேச்சையும் கேட்கும் நிலையை கார்த்திக் எப்போதோ தாண்டி விட்டான் என்று புரியவில்லை.

அவனால் இனி திரும்பியும் பார்க்க முடியாது.

காலையில் அடிவாங்கியதில் இருந்து வைஷ்ணவி யாரிடமும் பேசவில்லை. நடந்தது எதுவும் வாசுகிக்கு தெரியாது.

பிரபுவும் சமாதானப்படுத்த முயற்சிக்கவில்லை.

சுமித்ராவும் அமைதியாக இருந்தாள். வெளியில் எதுவும் சுமித்ரா காட்டிக்கொள்ளாவிட்டாலும் மனதில் எரிமலை வெடித்துக் கொண்டிருந்தது.

அவள் முதலில் கார்த்திக்கிடம் பேசுவோம் தெளிவு படுத்திக் கொள்வோம் என்று நினைத்தாள். ஆனால் என்ன தெளிவு படுத்துவது என்று புரியவில்லை. ''என்னைத் திருமணம் செய்வாயா'' என்று கேட்பதா?

அதைத்தானே சக்தியும் கேட்டாள்.

''செய்வேன் என்று சொல்லி விட்டால், நீ செய்து கொள்வாயா'' என்று மனம் கேட்டது. ஆம்! இன்றைய சக்தியின் செய்கைகள் அவளை முற்றிலும் கார்த்திக் கிடம் இருந்து விலக்கி விட்டது என்று தான் சொல்ல வேண்டும்.

சக்தி கார்த்திக்கின் முகத்தில் காபியை ஊற்றிய போது சில நொடிகள் எல்லோரும் அதிர்ந்து நின்றனர். அதுவும் கார்த்திக் முகத்தில் எதையும் காட்டாமல் அதை துடைத்தான்.

அதைத் தொடர்ந்து பிரபு இடையில் போக. ''தூர போ நீ! எனக்கும் இவனுக்கும் நடுவுல யாரும் கிடையாது!'' என்று சக்தி சொன்ன போது கார்த்திக்கின் கண்களில் தோன்றி மறைந்த சந்தோஷம். கார்த்திக் தனக்கு வேண் டாம் என்று உடனடியாக சுமித்ராவை முடிவு எடுக்க வைத்தது.

திருமணம் செய்த பிறகு, ''என் புருஷன் தான்! எனக்கு மட்டும் தான்!'' என்று கத்திக் கொண்டா திரிய முடியும். நினைத்த போது சுமித்ரா முகத்தில் ஒரு புன்னகை. ஆச்சர்யமாக சுமித்ரா இப்படி முடிவு எடுத்த பிறகு அவளுக்கு அவளே உற்சாகமாக உணர்ந்தாள்.

இத்தனை நாட்கள் இருந்த ஒரு மனதை அழுத்தும் பாரம் இல்லை.

அதுவும் காலையில் பிரபு வந்தவுடனே, ''இவன் எப்பவும் இப்படி தான் பிரபு எப்போ போறான். எங்க போறான். எப்ப வருவான். எதுவும் சொல்ல முடியறது

இல்லை. கேட்டா சில சமயம் தன்மையா பதில் சொல்றான். சில சமயம் பேசறது கூட இல்லை.''

''நீ வர்றதுக்காக தான் காத்திருந்தேன். சீக்கிரம் அவன் கல்யாணம் முடிக்கணும். ரெண்டு கல்யாணத்தையும் சேர்ந்து வைக்கலாமா? இல்லை தனித் தனியா பண்ண லாமா?'' என்று வாசுகி உடனேயே கேட்டது சில முடிவுகளை உடனடியாக சுமித்ராவை எடுக்க வைத்தது.

பிரபு வேறு வாசுகி திருமணத்தை பற்றி பேசியதும் அவளுடன் பேச வர. அவள் காது கொடுக்கவில்லை. பிரபு எப்படியும் வேண்டாம் என்று சொல்லுவான் என்பது தான் அவளின் அனுமானம். ஆனால் இனி யார் பேச்சையும் கேட்பதாய் இல்லை. முடிவுகளை அவளே எடுக்க நினைத்தாள்.

பிரபு சொல்லி இவள் செய்தாள் என்றாள் வாசுகிக்கு இவள் மேலும் வருத்தம் வரும் பிரபு மேலும் வருத்தம் வரும்.

என்ன இருந்தாலும் அப்பா அம்மாவின் குறை சற்றும் தெரியாமல் வளர்த்த அத்தை, அவருக்கு அதிக சங்கடத்தைக் கொடுக்க விரும்பவில்லை.

''நான் கொஞ்சம் திங்க்ஸ் வாங்கணும்! வெளில போயிட்டு வர்றேன் அத்தை!'' என்று கிளம்பினாள்.

அப்போது தான் பிரபு அவனின் ரூமின் உள் சென்று இருந்தான்.

வைஷ்ணவி, ''தனியாவாப் போற! நானும் வர்றேன்!'' என்று வந்து நிற்க.

"என்னை கொஞ்சம் தனியாத் தான் விடேன்" என்று எரிந்து விழுந்தாள். வீடே திரும்பிப் பார்த்தது. வாசுகி வந்தார். பத்ரிநாத் வந்தார், பிரபுவும் வந்தான்.

இப்படி என்றுமே சுமித்ரா பேசியதே இல்லை. வைஷ்ணவியின் கண்களில் நீர் தளும்ப.

என்ன? என்ன? என்று எல்லோரும் கேட்க. "ஒண்ணுமில்லை! எனக்கு கடைக்கு போகணும்! இவ வர்றேன்னு சொல்றா! நான் வேண்டாம்னு சொல்றேன்!" என்றாள் சுமித்ரா.

"ஏன் சுமி மா" என்று வாசுகி கேட்கவும்.

"எனக்கு தனியாத் தான் அத்தை போகணும்" என்றாள் பிடிவாதமாக.

"என்ன சுமித்ரா இது!" என்று பத்ரிநாத் அதட்ட முகத்தை திருப்பினாள்.

"விடுங்கத்தை அவ என்ன சின்னப் பொண்ணா! கடைக்கு தானே போறா! போகட்டும்!" என்றான் பிரபு.

சுமித்ரா அவளின் ஸ்கூட்டியில் ஏறி அவள் நினைத்த இடத்திற்கு வந்து விட்டாள். ஆனால் அதற்கு மேல் என்ன செய்வது என்று தெரியவில்லை.

அவள் வந்தது சிவாவின் வீடு. ஓரிருமுறை அந்தப் பக்கம் போகும் போது அவனின் வீட்டைப் பார்த்து இருக்கிறாள். ஆனால் உள்ளே யார் இருப்பார். எப்படி சிவாவை பார்ப்பது, பார்த்து என்ன சொல்வது, ஒன்றும் தெரியவில்லை.

அதுவுமில்லாமல் சிவா இந்த நேரத்தில் வீட்டில் இருப்பானா என்றும் தெரியாது.

ரோடில் நிற்கவும் முடியாது. வீடுகள் மட்டும் இருக்கும் இடமல்ல அது. வீடுகள் கடைகள் என்று இருக்கும் சற்று மெய்னான இடம். அவள் தடுமாறி நிற்கும் போதே அந்த ரோட்டில் ஏதோ வேலையாக வந்த மாரி இவளைப் பார்த்ததும் உடனே கார்த்திக்கிற்கு அழைத்து தகவல் சொன்னான்.

''நம்ம பாப்பா இங்க நிக்குதுங்களே முதலாளி'' என்று.

''நம்ம பாப்பா'' என்றதும் ச்க்தி ஞாபகம் தான் கார்த்திக்கிற்கு வந்தது.

''எங்க நிக்கறாங்க?''

சிவாவின் கிரானைட்ஸ் பெயரை சொன்னவன், ''அவங்க வீட்டு முன்னாடி'' என்றான்.

சிவா வீட்டுக்கு முன்னாடி எதுக்கு இவங்க நிக்கறாங்க என்று யோசித்தவன்.

''எங்க நிக்கறாங்க?''

''ரோட்ல ஒரு ஓரமா வண்டியை பிடிச்சிட்டு நிக்குதுங்க.''

வண்டியா? சக்தி டூ வீலர் ஒட்டவே மாட்டாள். கார்த்திக் அவளை முதன் முதலில் பார்த்தது வண்டி இடித்த போது தானே. அதன் பின் அவளை வண்டி எடுக்க விட்டதே இல்லை.

''எந்த பாப்பா சரியா சொல்லு!'' என்று எரிந்து விழுந்தான்.

''நம்ம சுமி பாப்பா!'' என்று அவன் சொல்லவும், யோசனையான கார்த்திக்.

"சும்மா பேச்சு குடுத்துட்டு அங்கேயே நில்லு. கொஞ்ச நேரத்துல அங்க ஆள் வருவாங்க! தனியா விட்டுட்டுப் போகாத! அவளையும் போக விடாத!" என்றான்.

அவனிடம் சொன்னவன், அடுத்த நொடி சிவாவின் நம்பரை அழுத்தினான். கார்த்திக்கின் நம்பரை பார்த்ததும் சிவாவிற்கு குழப்பம் எடுப்பதா வேண்டாமா என்று.

அன்று சுமித்ராவையும் கார்த்திக்கையும் பார்த்து வந்ததில் இருந்து அவன் கார்த்திக்கை பல இடங்களில் சந்தித்து விட்டாலும் பேசவில்லை. ஒரு கோபத்தில் சக்தியிடமும் பேசவில்லை.

அதனால் நடந்த பிரச்சனைகள் அவனுக்குத் தெரியாது. அவனுக்குத் தெரிந்தது எல்லாம் சக்தி வீட்டினர் காலேஜ் பக்கம் சென்று விட்டனர். கார்த்திக் குவாரி பொறுப்பை ஏற்றுக் கொண்டான் என்பதாகத் தான்.

தொழில் முறையில் எல்லோரும் அப்படித்தான் நினைத்து இருந்தனர். ஏனென்றால் வீரமணியோ தெய்வானையோ சக்தியோ கார்த்திக்கை பற்றி யாரிடமும் பேசவே இல்லை. அதனால் இப்படித் தான் தெரிந்தது.

இப்போது எதற்கு கார்த்திக் கூப்பிடுகிறான். எடுப்பதா? வேண்டாமா? என்று யோசித்தவன். எடுத்தே விட்டான்.

"சிவா."

"சிவா இருக்கீங்களா?"

"ம்."

"உங்க வீட்டு முன்னாடி சுமித்ரா நிக்கறா! எதுக்குன்னு எங்களுக்குத் தெரியாது! உங்களுக்குப் போய்

பார்க்கணும்னா பாருங்க! இப்போதைக்கு நான் சொன்னேன்னு அவளுக்குத் தெரிய வேண்டாம்!'' என்று சொல்லி போனை வைத்து விட்டான்.

சில நொடிகள் சிவாவிற்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் அதிகம் யோசிக்கவில்லை, காரை எடுத்திருந்தான் பத்தாவது நிமிடம் அங்கே இருந்தான்.

சுமித்ரா மாரியிடம். ''நீ போ. நான் கிளம்பறேன்'' என்று சொல்லியும் விடாமல் நின்று பேசிக் கொண்டு இருந்தான். ''எதற்கு இவன் இப்படி ரம்பம் போடுகிறான். இவனும் போகமாட்டேன் என்கிறான் என்னையும் போகவிடமாடேன் என்கிறான்.''

கார்த்திக், ''ஆள் வரும் வரை வேறு ஏதாவது பேசிக் கொண்டு இரு'' என்று சொல்ல. மாரிக்கு கார்த்திக்கை விட்டு என்ன தெரியும். அவன் கார்த்திக்கின் புகழ் பாடிக்கொண்டிருக்க. சுமித்ரா எரிச்சலின் உச்சியில் இருந்தாள்.

சிவாவைப் பார்த்ததும் ''அப்பாடா'' என்று இருந்தது சுமித்ராவிற்கு. மாரி உடனே கிளம்பவிட்டான்.

''பயங்கர அறுவை, பரவாயில்லை வந்தீங்க'' என்றாள் சுமித்ரா சிவாவை பார்த்து.

அவன் கார்த்திக்கின் ஆள். அவன் இருக்கச் சொல்லி தான் அங்கே இருந்திருப்பான் என்று சிவாவிற்கு புரியாதா என்ன?

ஆனால் சுமித்ராவின் இந்த இயல்பான பேச்சு சிவா எதிர்பாராதது.

எப்படி பதில் சொல்வது என்று கூட அவனுக்குத் தெரியவில்லை.

''இங்க ஏன் நிக்கறீங்க'' என்றான் மரியாதை பன்மையில்.

''உங்களைப் பார்க்கத் தான் வந்தேன்!''

''ஏன்? எதுக்கு?'' என்று அவன் கேட்கவும்.

''அது.'' என்று இழுத்தாள். வந்து விட்டாள். எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை.

அவள் தடுமாறுவதைப் பார்த்து. ''வீட்டுக்குள்ள வாங்கப் போகலாம்'' என்று அவன் அழைக்க.

''இல்லையில்லை! வேண்டாம்!'' என்று அவசரமாக மறுத்தாள்.

''இங்க ரோட்ல நின்னு பேச வேண்டாமே! வேற எங்கயாவது போவமா?''

''இல்லை, ஜஸ்ட் ஒரு நிமிஷம் தான் பேசணும்!'' என்றாள்.

''சரி சொல்லுங்க!''

''என்னை. என்னை. பொண்ணு கேட்டு எங்க வீட்டுக்கு வர்றீங்களா.'' என்றாள் தயங்கித் தயங்கி.

சத்தியமாக இதை சிவா எதிர்பார்க்கவில்லை.

அவன் அப்படியே நின்று விட்டான். கற்பனையாகக் கூட அவள் இந்த மாதிரி தன் மேல் இஷ்டம் கொண்டு வந்திருப்பாளோ என்று அவன் வரும் போது கூட நினைக்கவில்லை. இன்னொரு ஏமாற்றத்தைத் தாங்கும் சக்தி அவனுக்குக் கிடையாது.

அவன் அப்படியே நிற்கவும், ''நீங்க வரலையா?'' என்றாள் குரலில் ஏமாற்றத்தோடு.

மென்மையாக புன்னகைத்தவன், ''நான் வேற யோசிச்சிட்டு இருந்தேன். இப்போவே வரலாமா இல்லை சாயந்தரமா வரலாமான்னு யோசிச்சிட்டு இருந்தேன். எப்போ வரட்டும்'' என்றான்.

மலர்ந்த சுமித்ராவின் முகம். ''நான் உங்ககிட்ட சொல் லிட்டேன்! நீங்க எப்போ வந்தாலும் எனக்கு சரி தான்.''

''வீட்ல கேட்டுட்டு சொல்றேன்! உன் நம்பர் குடு.'' என்றான், மரியாதை பன்மை எல்லாம் மறைந்து இருந்தது.

அவள் கொடுத்து விட்டு, ''ஏன் இந்த முடிவுன்னு கேட்கலையா'' என்றாள்.

''அவசியமில்லை! நீ கிளம்பு! இங்க ரொம்ப நேரம் நின்னு பேசவேண்டாம்! இது பிசியான ஏரியா!'' என்றான்.

''பொண்ணு குடுக்கலைனா என்ன பண்ணுவீங்க?''

''என்ன பண்ணனும்?''

''எனக்கு உங்களை தான் கல்யாணம் பண்ணனும்.''

''கண்டிப்பா நடக்கும்'' என்று சொல்லிவிட்டாலும். மனதில் ஒரு பயம் கார்த்திக்கை நினைத்து ஓடியது.

ஏன்? என்ன பிரச்சனை? அப்படி சொன்னவள் ஏன் இப்படி தன்னைத் தேடி வந்திருக்கிறாள் என்றெல்லாம் யோசிக்கவில்லை.

அவன் சுமித்ராவை உண்மையாக விரும்பியிருந் தான். விரும்பியிருந்தாள் தான். கார்த்திக்கிற்கும் அவளுக்கும் திருமணம் என்ற ஒரு பேச்சு காதில்

விழுந்ததில் இருந்து சுமித்ராவின் நினைப்பை ஒதுக்கி யிருந்தான்.

என்ன தான் காதலியாக இருந்தாலும் அடுத்தவன் மனைவியை நோக்குவதை விட வேறு பாவம் உலகில் இல்லை.

சுமித்ரா விஷயம் சொல்லி விட்ட திருப்தியில் கிளம்பி விட்டாள். எப்படி கரெக்டாக சிவா அங்கே வந்தான் என்று யோசிக்கவில்லை.

அவள் சென்ற உடனே கார்த்திக்கிற்கு அழைத்த சிவா, ''சுமித்ரா என்னை பொண்ணு கேட்டு வரச் சொன்னாங்க'' என்று சொல்லவும்.

ஒரு நிம்மதிப் பெருமூச்சு கார்த்திக்கிட மிருந்து எழுந்தது. எப்படி உணர்ந்தான் என்று அவனாலேயே சொல்ல முடியவில்லை. மனம் மிகவும் லேசானது.

அவனின் இத்தனை நாள் பிரச்சனை இப்படி ஒரு அரை நாளில் முடிவுக்கு வரும் என்று அவன் எதிர்பார்க்கவேயில்லை.

சிவா அவனின் பதிலுக்காக் காத்திருப்பது புரிய, ''எப்போ வர்றீங்க?'' என்றான் கார்த்திக்கும்.

இப்போது தான் சிவாவிற்கு சற்று உற்சாகம் வர ஆரம்பித்து. ''நிஜமாத் தான் சொல்றீங்களா'' என்றான்.

''உங்களுக்கு சந்தேகமே வேண்டாம்! வாங்க! உங்க அப்பா கிட்ட நான் பேசவா!'' என்றான் கார்த்திக்.

''நான் சொல்றேன்! முடியலைன்னா நீங்க பார்த்துக் கங்க! அப்பா கொஞ்சம் நம்ம ஆளுங்களான்னு பார்ப்

பாரு! அது ஒண்ணு தான் பிரச்சனை!'' என்றான் உள்ளதை உள்ளபடி.

''உங்க வீட்ல பிரச்சனை வருமா'' என்றும் கேட்டான்.

கார்த்திக்கிற்கு தன் அம்மாவின் ஞாபகமும், தாத் தாவின் ஞாபகமும் வந்தாலும். ''எல்லாம் பார்த்துக்கலாம்! நான் இருக்கேன்! இன்னும் மூணு மாசத்துல கல் யாணம்!'' என்று கார்த்திக் வாக்குறுதி கொடுத்தான்.

காலையில் இருந்ததற்கு மனம் சற்று ஆசுவாசப் பட்டது.

என்ன இருந்தாலும் சக்தி தன் வாழ்க்கையில் வருவ தற்கு வாய்ப்பே கிடையாது என்று தான் தோன்றியது. அவளின் மனம் புரிந்தும் தான் ஒன்றும் செய்யவில்லை. அவளின் அம்மா கேட்டும் தான் ஒன்றும் செய்யவில்லை.

அவன் சக்தியை மறுக்கவில்லை. அவன் சக்தியை நிராகரித்து இருந்தான். இரண்டிற்கும் மிகுந்த வித்தி யாசம் இருந்தது.

''சுமித்ரா என்னுடைய வாழ்க்கையில் இல்லை நீ வந்துவிடு என்ற சக்தியிடம் கேட்க முடியாது. பிறகு அதை விட அவமானம் அவளுக்கு தான் தேடிக் கொடுக்க முடியாது'' என்று நினைந்தவனாக கண்களை மூடிக் கொண்டான்.

சக்திக்காக அவன் தேங்க முடியாதே அவன் ஓட வேண்டுமே.

ஞாபகம் வந்தவனாக நேரத்தை பார்த்தவன். உடனே மானேஜரை அழைத்து, ''படம் எப்படி போகுதுன்னு சொல்றாங்க'' என்று கேட்டான்.

''நல்லா இருக்குன்னு சொல்றாங்க'' என்று அவர் சொன்னாலும் அவரின் குரல் சுரத்தில்லாமல் ஒலிப்பது போன்று தோன்ற.

அவன் அனுப்பிய ஆட்களுக்கு போன் அடித்தான். ''டேய் படம் எப்படிடா'' என்றான்.

''ஒண்ணும் தெரியலைண்ணா, ஒருத்தன் நல்லா யிருக்குன்னு சொல்றான்! இன்னொருத்தன்னு சுமார்ன் றான்! இன்னொருத்தவன் சகிக்கலைன்றான்!''

பிறகு தேர்ந்த ஒரு சினிமாவை தெரிந்த ஒருவரை கூப்பிட்டு கேட்டான்.

''படம் நல்லாத்தான்ங்க இருக்குது! ஆனா இதை நீங்க கம்மி பட்ஜெட் படமா எடுத்திருந்தா லாபம் கொடுத் திருக்கும்! ரொம்ப பணம் செலவு பண்ணி எடுத்ததால அந்தளவுக்கு லாபம் கிடைக்குமான்னு தெரியலை!'' என்றார்.

இதனால் கார்த்திக்கிற்கு இழப்பொன்றுமில்லை. இது போல இன்னும் பத்து, இருபது படங்கள் தோல்வி அடைந்தாலும் அசையாமல் இருப்பான் என்றாலும்.

நியாயமோ, அநியாயமோ, அவன் வீட்டை விட்டு வந்ததில் இருந்து பண விஷயத்தில் அவன் பார்த்தது வெற்றியே.

தந்தையின் பெயரை. பெரிய பேனர் என்ற ஒரு அடையாளத்தைக் கொடுக்க முயற்சித்துக் கொண்டிருந் தான்.

இது அவனின் பண வகையில் முதல் லாபமில்லாத செயல். கார்த்திக்கின் முதல் சறுக்கல் தொடங்கியது.

# 23

**நின்னையே ரதியேன்று**

**நினைக்கிறேன்டி கண்ணம்மா**

**தன்னையே சகியென்று**

**சரண மெய்தினேன்**

- பாரதி

சுமித்ரா சிவாவிடம் பேசிய பிறகு தான் வீட்டில் சொல்ல வேண்டும் என்று இருந்தவள் வீட்டிற்கு வந்ததும். நேரே பிரபுவின் ரூமிற்கு போனாள். தாத்தாவின் முன்னிலையில் பேச முடியாது.

பிரபுவின் ரூமிற்கு சென்றவள். அங்கே இருந்து கொண்டே ''அத்தை'' என்று வாசுகியை அழைத்தாள். வாசுகி வரவும். ''உங்க கிட்ட பேசணும் அத்தை!'' என்றாள்.

''என்ன சுமி.''

''வைஷு எங்கே அத்தை?''

''நீ அவகிட்ட சண்டை போட்டியா அழுதுட்டு தூங்கிட்டா.''

''அழுதாளா, நான் என்ன சண்டை போட்டேன்! ஜஸ்ட் வெளியே போறேன். நீ வராதேன்னு சொன்னேன்.''

“அது அவளால தாங்க முடியலை! நீ எதுக்குமே இதுவரைக்கும் அவகிட்ட கோபப்பட்டது கிடையாது இல்லையா. அது தான். காலையில் பிரபுவோட சண்டை போல. என்னன்னு கேட்டா சொல்ல மாட்டேங்கறா! இப்போ உன்னோட அது தான் ஒரே அழுகை தூங்கிட்டா.”

அவர் பேசிக் கொண்டு இருக்கும் போதே புயல் போல கார்த்திக் உள்ளே நுழைந்தான்.

அவன் ரூமினுள் நுழைந்ததும் ஒரு அமைதி.

“அம்மா! நீங்க எனக்கு ஒரு காபி போட்டு தர்றீங்களா” என்றான்.

அவர் எழுந்து போக.

அவனுக்கு சுமித்ரா சிவாவை சந்தித்தது தெரியாத மாதிரி பிரபுவிடம். “பிரபு, எனக்கு தெரிஞ்சவங்க ஒருத்தர் சிவான்னு. அவங்களுக்கும் குவாரி பிசினஸ் தான். சுமித்ராவை பொண்ணு கேட்கறாங்க. வரச் சொல்லட்டுமா” என்றான்.

பிரபுவிற்கு ஒரு நிமிடம் என்ன பேசுவது என்று தெரியவில்லை. காலையில் சக்தி கார்த்திக்கிடம் நடந்து கொண்ட விதத்தை பார்த்தே இருவருக்குள்ளும் பிரச்சனையிருந்தாலும் அதையும் மீறி ஏதோ ஒரு இணைப்பு இருந்ததாகவே தோன்றியது.

எப்படி சுமித்ராவை இவனுக்குத் திருமணம் செய்து வைப்பது என்று பிரபு யோசித்து கொண்டு இருந்த போதே இப்படி கார்த்திக் சொல்லவும். பிரபு சுமித்ராவைப் பார்த்தான்.

அவனுக்கு கவலையெல்லாம் சுமித்ரா கார்த்திக்கை தான் திருமணம் செய்து கொள்வேன் என்று சொல்லி

விடக் கூடாதே என்பது தான். சிறுவயதில் இருந்தே அப்படித் தான் பேசி வந்திருக்கிறார்கள்.

சுமித்ரா ஒத்துக்கொள்வாளா என்பது போல பிரபு பார்க்க. ''அண்ணா! நான் தான்.'' என்று சுமித்ரா ஆரம் பிக்கும் போதே. அவள் தான் சிவாவை வர சொன்னாள் என்று சொல்ல வருகிறாள் என்று புரிந்த கார்த்திக்.

அவளிடம் கண்களாலேயே பேசாதே என்பது போல சொல்ல.

சிவாவை பார்த்தது கார்த்திக்கிற்குத் தெரியும் என்று அவளுக்குத் தெரியுமா என்ன.? இவன் எதைச் சொல்ல வேண்டாம் என்று சொல்கிறான் என்று குழம்பினாள்.

ஒரு நிமிடம் சுமித்ரா தடுமாற. ''நீ எதுவும் சொல்ல வேண் டியது இல்லை சுமித்ரா. சிவாவை வர சொல்லட்டுமா. வேண்டாமா. அதை மட்டும் சொல்லு'' என்றான் கார்த்திக்.

''வர சொல்லுங்க'' என்றாள் சுமித்ரா.

''உனக்கு அவரை முன்னாடியே தெரியுமா சுமி.''

''தெரியும்'' சொன்னது கார்த்திக்.

பிரபு. ''எப்படி'' என்பது போல பார்க்க.

''சிவாக்கு சுமித்ராவை ரொம்பப் பிடிக்கும். காலேஜ் வரும் போதும் போகும் போதும் பார்த்திருப்பான் போல. ஒரு தடவை விருப்பத்தை சுமித்ரா கிட்ட சொல்ல வந்த வந்த போது. என் தங்கச்சி தான் ஒருத்தி இருக்காளே, சின்ன வயசுல ஏதோ வாய் வார்த்தைக்காக பேசற அத்தை பையன் மாமன் மகள் கல்யாணம்ன்றதை அவன் கிட்ட சொல்ல அவன் விலகிட்டான்.''

''ஏன்னு தெரியலை இப்போ திடீர்ன்னு பொண்ணு கேட்டு வரட்டுமான்னு கேட்கிறான். மறுக்கற அளவுக்கு எந்த குறையும் அவன்கிட்ட கிடையாது. வர சொல் லட்டுமா.''

''அப்போ இவ்வளவு நாளா உங்க கல்யாணம் பேசினது'' என்று பிரபு இழுக்க.

இதற்கு எந்த பதிலும் கார்த்திக் சொல்லவில்லை.

''அண்ணா! எனக்கு கார்த்திக் மாமா வேண்டாம்'' என்றாள் தெளிவாக சுமித்ரா எந்தத் தயக்கமும் பயமும் இல்லாமல்.

அவள் அந்த வார்த்தைகளைச் சொல்லும் போது சரியாக வாசுகி வர. அவர் கையில் இருந்த காபி கப் நழுவியது.

தரை முழுவதும் காபி சிதற அவர் மனமும் சிதறியது. சட்டென்று சுதாரித்தவன் பிரபு தான். ''அத்தை. என்ன இது'' என்றபடி அவர் அருகில் வர. அவர் கண்களில் இருந்து கண்ணீர் இறங்கியது.

''இவளைத் திருமணம் செய்வேன் என்று தானே கார்த்திக் வீட்டை விட்டுப் போனான். இப்போது இவள் திருமணம் வேண்டாம் என்கிறாளே! மறுபடியும் வீட்டை விட்டு போய் விடுவானோ'' என்ற பயம் தான் முதலில் அவருக்கு வந்தது.

''அம்மா!'' என்றபடி அருகில் வந்தான் கார்த்திக்.

''நீ வீட்டை விட்டு போயிடுவியா'' என்றார்.

அதற்கு, ''இல்லை'' என்ற பதிலை கார்த்திக் சொல் லாமல். ''போனாலும் உன்னை கூட்டிட்டு தான் போவேன் சரியா'' என்றான்.

''ஏன் சுமி? ஏன் இந்த முடிவு?'' என்று சுமித்ராவை சமாதானப்படுத்த வாசுகி விரைந்து வர.

கார்த்திக் ஒரே வார்த்தையில் நிலைமையை கட்டுக் குள் கொண்டு வந்தான். ''அவளோட இந்த முடிவுக்கு நான் தான்மா காரணம். அதனால அவளைக் கல்யாணத் துக்காக கன்வின்ஸ் பண்ணாதீங்க. நீங்க அவ கிட்ட பேசி மனம் மாறி அவ கல்யாணத்துக்கு சம்மதிச்சாலும். என்னைக் கல்யாணம் பண்ணினா அவ சந்தோஷமா இருக்க மாட்டா.''

''உங்க பொண்ணா இவ்வளவு நாள் வளர்த்து.'' என்று அவன் சொல்லும் போதே.

''நான் அவங்க பொண்ணு தான்.'' என்று இடை புகுந்தாள் சுமித்ரா.

''ம்! உங்க பொண்ணு வாழ்க்கையை சந்தோஷம் இல்லாம நீங்களே செஞ்சிடாதீங்க. என்னை பார்க்காதீங் கம்மா. அவளைப் பாருங்க!'' என்றான்.

சுமித்ரா அவர் அருகில் வந்து அமர்ந்து அவர் தோள் சாய்ந்து கொண்டாள்.

''ப்ளீஸ் அத்தை! இந்தக் கல்யாணத்துனால யாருமே சந்தோஷமா இருக்க முடியாது! எனக்கும் சந்தோஷ மில்லை! கார்த்திக் மாமாவுக்கும் சந்தோஷமில்லை! இதை பார்த்து பிரபுண்ணா சும்மா இருப்பாங்களா! அதை வைஷ்ணவி மேல காட்டுவாங்க! அவங்க வாழ்க்கையும் பிரச்சனையாகும்! இதைப் பார்த்து நீங்க நிம்மதியா இருப்பீங்களா? நீங்க இருக்கறதே எங்களுக் காகத் தானே!'' எனவும்.

வாசுகிக்கு அழுகை அதிகமாகியது.

''அம்மா! இது அழற நேரமில்லை! சந்தோஷமா வேலைகளைச் செய்ய வேண்டிய நேரம்! சாயந்தரம் என் நண்பர் ஒருத்தர் சுமித்ராவை பொண்ணு பார்க்க வர்றார்.''

''பெரிய குடும்பம். பெரிய ஆளுங்க. வசதி வாய்ப்பும் அதிகம் தான். இதையெல்லாம் விட பையன் ரொம்ப நல்லவன். சுமித்ராவை ரொம்ப நல்லா வச்சிருப்பான். நம்பி குடுக்கலாம்.''

''வைஷ்ணவியோட வாழ்க்கை '' என்று வாசுகி கேட்க.

''அதுக்கென்னத்தை உங்களுக்கு அதுல எந்த சந்தேகமும் வேண்டாம்! என் பொண்டாட்டி அவ தான்! அவ மட்டும் தான்! அவ இல்லைன்னா யாருமே இல்லை! உங்க பொண்ணே என்னை வேண்டாம்ன்னு சொன்னாலும் நான் அவளை விடறதா இல்லை!'' என்றான் பிரபு.

''சுளீர்.'' என்ற கார்த்திக்கின் கழுத்தில் வலி. எல்லோருக்கும் இருக்கும் உறுதி ஏன் தனக்கு இல்லாமல் போனது! சக்தியோடான எனது வாழ்க்கையை நான் யோசிக்கக் கூட இல்லையே.!

எதற்காக ஓடுகிறேன் என்று தெரியாமல் ஓடிக் கொண்டு இருக்கிறேன்.

என்ன ஓடினாலும் நான் இளைப்பாறும் இடம் அவள் தானே.!

அப்போது அதை நினைக்க அவனுக்கு நேரமில்லை. ''தாத்தா கிட்ட நீங்க தான் பேசனும் அம்மா!'' என்றான்.

''இவ்வளவு சீக்கிரம் எப்படி கார்த்திக் ஒத்துக்குவாங்க'' என்று வாசுகி கேட்டதிலேயே அவருக்கு சம்மதம் என்று தெரிந்து விட்டது.

''சொல்லுங்கம்மா! நான் மாப்பிள்ளையில்லை வேற மாப்பிள்ளைன்னு தெரிஞ்சாலே பாதி சம்மதம் குடுத் துடுவார். மீதி நீங்க தான் பேசணும். உங்க வாழ்க்கை மாதிரி இல்லாம அவ நல்லா இருக்கட்டும்னு சொல் லுங்க உடனே சம்மதிச்சிடுவார்.''

''தினம் தினம் உங்களைப் பார்த்து அவர் எவ்வளவு வருத்தப்பட்டு இருப்பார்'' என்றான்.

''முயற்சி பண்றேன்!'' என்று சொல்லித் தளர்வாக அவர் எழுந்து சென்றார்.

வாசுகி தன் அப்பாவிடம் சொல்ல. கார்த்திக் இதில் முன்னால் வராமல் பிரபுவிடம் சொல்லி மாப்பிள்ளை வீட்டார் விவரம் சொல்லி வைக்க.

அவர்கள் இனம் இல்லாவிட்டாலும் அவர்கள் பெரிய ஆட்களே என்று தெரிந்த பத்ரிநாத் உடனே சம்மதம் சொன்னார்.

யோசித்து! யோசித்து!. விசாரித்து! விசாரித்து!. தேடி! தேடி!. சீரும் சிறப்புமாய் திருமணம் செய்து வைத்து. முப்பது வயதில் இருந்த கணவனை பிரிந்து வாழும் தன் மகளை கண் முன் கண்டவர் அல்லவா. ''மாப்பிள்ளை பையன் இஷ்டப்பட்டு பொண்ணு கேட்டு வரவான்னு கேட்கறாங்க'' என்று சொன்னதும் பத்ரிநாத் உடனே சம்மதம் தெரிவித்தார்.

சிவாவிற்கு தவகல் பறக்க. ''நான் அப்பா கிட்ட பேசிட்டேன். கொஞ்சம் தயங்கறார்'' என்ற வார்த்தையைக் கேட்டதும்.

பிரபுவை அழைத்துக் கொண்டு கார்த்திக் மாப்பிள் ளையின் தந்தையையே போய் பார்த்தான்.

கார்த்திக் அவருக்கு நன்கு அறிமுகம் என்றாலும் கார்த்திக் வீரமணியை விட்டுத் தனியாகப் பிரிந்து வந்தது. தொழில் முறையில் சற்று சலசலப்பு தான்.

தப்பாக யாரும் எதுவும் பேசவில்லை என்றாலும் இத்தனை லாபம் கொடுக்கும் தொழிலை கார்த்திக்கிற்கு அவர் ஏன் விட வேண்டும் என்ற கேள்வி சிவாவின் தந்தையினுள் இருக்க. ஏதாவது பிரச்சனையிருக்குமோ என்று அவர் அந்த வீட்டில் சம்மந்தம் செய்யத் தயங்கி னார்.

''எனக்கு திருப்தி தான் கார்த்திக்! இருந்தாலும் வீட்ல கலந்து பேசிட்டு தவகல் இன்னும் கொஞ்ச நேரத்துல சொல்றேன்'' என்றார்.

சிவாவை பார்த்ததும் பிரபுவிற்கு வெகு திருப்தி! இருந்தாலும் அவனுக்கு ஒன்றும் புரியவில்லை!'' அவங்க தானே வந்தாங்கன்னு சொன்ன கார்த்திக்! இப்போ தகவல் சொல்றேன்னு சொல்றாங்க.''

''நிச்சயமா மாப்பிள்ளை சிவா தான் வந்தான்! உனக்கு சந்தேகம் வேண்டாம்!'' என்று பிரபுவை சமாதானப்படுத் தினான்.

கார்த்திக்கிற்கும் என்ன அவர் யோசிக்கிறர் என்று புரியவில்லை. எல்லாம் நல்ல படியாக நடக்க வேண்டும் என்று கவலையாக இருந்தது. சுமித்ராவே சொன்ன பிறகு என்ன வானாலும் சிவா விட மாட்டான் என்பதில் எந்த சந்தேகமும் கார்த்திக்கிற்கு கிடையாது.

இருந்தாலும் எல்லோர் சம்மதமும் கிடைத்து திரு மணத்தை நன்றாக செய்ய வேண்டும் அல்லவா.

கார்த்திக்கிற்கு தெரியாதது சிவாவின் தந்தை வீரமணியுடன் பேசியது. அவர்கள் வீட்டில் சம்மந்தம் வைத்து கொள்ளலாமா என்று கேட்டது.

வீரமணி பெண்ணை அவர்களுக்கு பிடித்திருந்தால் தாராளமாக சம்மந்தம் வைத்து கொள்ளலாம் என்று சொன்னது. பேச்சு கார்த்திக்கை பற்றியே சிவாவின் அப்பா வீரமணியிடம் சுத்த விட.

''எங்க வீட்ல எங்க பையன் மாதிரி இருந்தவன்! அவங்கப்பா என்னோட உயிர் நண்பன்! தாராளமா சம்மந்தம் பண்ணலாம்! அதுவுமில்லாம கார்த்திக் பத்தி நீங்க அதிகம் பார்க்க வேண்டியதேயில்லை. அவங்கம்மா வோட அண்ணன் பொண்ணை கட்டுறீங்க. பொண்ணு தானே உங்க வீட்டுக்கு வருது!'' என்று முடித்து விட்டார்.

வீரமணி தான் உணமையான பெரிய மனிதர் என்பதை மீண்டும் நிரூபித்தார். மனைவி மகளிடம் கூட இதைச் சொல்லவில்லை.

வைஷ்ணவி எழும்போதே மணி நான்கு. அன்றே நல்ல நாள் என்பதால் பெண் பார்க்க ஆறு மணிக்கு வருவதாக ஏற்பாடு. சிவாவின் பெற்றோரும் சம்மதம் கொடுத்து இருந்தனர்.

எழுந்து வந்தவளுக்கு வீடு ஏதோ பரபரப்பாக இருப்பது போலத் தோன்ற. சுமித்ராவிடம் வந்தாள். ''என்ன சுமி? வீட்டை இத்தனை பேர் சுத்தம் பண்றாங்க!'' என்றபடி.

அவள் பதில் சொல்லும் முன்பே, ''அவளைப் பொண்ணு பார்க்க வர்றாங்க'' என்று வாசுகி பதில் சொல்ல.

''என்ன'' என்றாள் புரியாமல். வாசுகி ஏதோ வேலையாய் செல்ல.

''அவளைப் பொண்ணு பார்க்க வர்றாங்க'' என்று பிரபுவும் சொன்னான்.

''யாரு? யாரு வர்றா?'' என்று வைஷ்ணவி கேட்க.

''சிவா'' என்றாள் சுமித்ரா.

''யாரு? டெய்லி நீ போகும் போதும் வரும் போதும் ஒருத்தன் நிப்பானே அவனா!'' என்றாள் வைஷ்ணவி.

''மரியாதையா பேசு வைஷ்ணவி'' என்றாள் சுமித்ரா உடனே.

ஒரு நிமிடம் ஒன்றுமே புரியவில்லை வைஷ்ணவிக்கு. ''எப்படி? எப்படி? இத்தனை நாளா கார்த்திக் அண்ணாவை கல்யாணம் பண்ணிக்க போறதா நினைச்சி இருந்துட்டு உடனே எப்படி? எப்படி? மாறின!'' என்றாள் வைஷ்ணவி.

சுமித்ராவின் முகம் ஏதோ தப்பு செய்து விட்டவள் போல கூம்பி விட்டது.

''நீ அவளை குழப்பாத?'' என்று பிரபு சண்டைக்கு வந்தான்.

''என்ன குழப்பறேன்?''

''அதெல்லாம் சின்ன வயசுல பேசினது அதையே பிடிச்சிட்டு தொங்காத.''

"சின்ன வயசுல எங்க பேசினது. இப்போவும் அதைத் தானே பேசினோம்! காலையிலயும் அதைத் தாமே பேசினோம்."

"காலையில பேசினியே என்ன ஆச்சு? ஒரு பொண்ணு உங்கண்ணா முகத்துல காபிய கொட்டுவா! ஒண்ணுமே நடக்காத மாதிரி உங்கண்ணா அதை வாங்கிட்டு நிப்பாங்க! என்னை அவங்களைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்றியா?"

"ஏன் பண்ணிக்கிட்டா என்ன? இத்தனை நாளா பேசினது தானே. அது அந்த பொண்ணு மரியாதையில்லாம நடந்துக்குது! அதுக்கு எங்கண்ணா என்ன பண்ணுவான்?"

"அந்த பொண்ணு மரியாதையில்லாம நடந்துகிட்டப்போ உங்கண்ணன் சும்மாத் தானே இருந்தாங்க. நீ பண்ணிக்குவியா? நீ பண்ணிக்குவியா? பிரபுண்ணாக்கு இப்படி யார் மேலயாவது அஃபெக்ஷன் இருக்குன்னு தெரிஞ்சா நீ பண்ணுக்குவியா?"

"காதல்ன்னா வார்த்தையில் சொல்லனும்னு அவசியம் இல்லை! அது பார்த்தாலே தெரியும்! எனக்கென்ன மோவ அது அவங்களுக்குள்ள இருக்குற மாதிரி தான் தெரியது!"

"அப்படி ஒருத்தர் எனக்கு வேண்டாம்" என்றாள் தெளிவாக சுமித்ரா.

"கண்டிப்பா! நீ சொல்ற மாதிரி பிரபு அத்தான் இருந்தார்னா நான் பண்ணிக்க மாட்டேன்! ஆனா வேற யாரையும் பண்ணிக்க மாட்டேன்."

''நீ சிவா மாதிரி யாரையும் பார்த்திருக்க மாட்ட!'' என்றாள் சுமித்ரா பட்டென்று.

''இவ்வளவு நாளா இல்லாம. என்ன நீ இப்படி பேசற. எனக்குப் புரியவேயில்லை.''

''என் ஃபீலிங்க்ஸ் என்னோட!. அதை நான் யார்கிட்டயும் ஷேர் பண்ண முடியாது! நான் இவ்வளவு உன்கிட்ட பேசினதே நீ உனக்காக கூட எதையும் பார்க்க மாட்ட. எனக்காகத்தான் அதிகம் பார்ப்ப! அதனால தான்! ப்ளீஸ் வைஷு இதை இதோட விட்டுடு!'' என்றாள்.

பிரபு வந்து அவளை ஆதரவாக அணைத்துக் கொண்டான்.

''நமக்குன்னு சில ரொம்ப பெர்சனல் ஃபீலிங்க்ஸ் இருக்கும். அதை யார்கிட்டயும் ஷேர் பண்ண முடியாது. என்னை புரிஞ்சுக்கோ'' என்றாள் அண்ணன் தோள் சாய்ந்தவாரே.

வைஷ்ணவிக்கு இதில் மிகுந்த கோபம், வருத்தம், எல்லாம் இருந்தாலும். இது சுமித்ராவின் வாழ்க்கையில் வரும் சந்தோஷமான தருணங்கள். தான் இதில் முகத்தை தூக்கி வைத்திருந்தால் அது அவளை பாதிக்கும் என்பதால்.

''நான் என்ன ட்ரெஸ் போடட்டும் புடவையா, சுடிதாரா'' என்றாள்.

சுமித்ராவின் முகம் மலர்ந்தது. ''நான் போய் உனக்கு செலக்ட் பண்றேன்'' என்று சந்தோஷமாகச் சென்றாள்.

''ஏதோ ஒண்ணை போட்டா சரி'' என்று பிரபு வைஷ்ணவிக்கு மட்டும் கேட்குமாறு சொன்னான்.

''ஏன் உங்களுக்கு என்ன?'' என்று வைஷ்ணவி சண்டைக்கு வர.

''நீ போடாம இருந்து பார்த்தாத் தான் எது போட்டா நல்லா இருக்குன்னு சொல்ல முடியும். அதான்!'' என்று பிரபு சொல்ல.

முதலில் வைஷ்ணவிக்குப் புரியவில்லை. புரிந்த பிறகு, ''அடிங்க'' அவனை அடிக்க வர. அவன் கார்த்திக்கை தேடி அவன் இருக்கும் இடம் சென்று நின்றான்.

வைஷ்ணவி ஒன்றும் செய்ய இயலாதவளாக அவனை முறைத்து விட்டு போனாள்.

பெண் பார்க்கும் வைபவம் மிகவும் சிம்பிளாக நடந்தது. இரு வீட்டு ஆட்கள் மட்டுமே. பெண்ணைப் பார்த்ததும் வீட்டுனருக்கு மிகவும் திருப்தி.

சுமித்ராவின் அழகு. அவளுடைய தோற்றத்தில் தெரிந்த அடக்கம். பேச்சில் தெரிந்த மென்மை அவர்கள் வீட்டினரை கவர்ந்தது. அண்ணனும் வெளிநாடு சென்று படித்து வந்திருக்கும் டாக்டர், சுமித்ராவின் அம்மா வழி குடும்ப பாரம்பர்யமும் மிகவும் திருப்தியே.

பத்ரிநாத்தும் பெயர் சொல்லும் படி வாழ்பவரே. என்ன அவர்கள் இனம் இல்லை என்ற குறை இருந்தாலும். அவர்கள் இனத்தில் தேடினாலும் சிவாவிற்கு இப்படி ஒரு பெண்ணோட சம்மந்தமோ கிடைப்பது கஷ்டம். அதுவுமில்லாமல் சிவாவிற்கு இதில் மிகவும் இஷ்டம் என்பதால் எல்லாம் நல்ல படியாக நடந்தது.

திருமணமும் வெகு சீக்கிரமாக வைப்பது என்றே முடிவு செய்யப்பட்டு முகூர்த்த தேதியைக் குறிக்க. அது இன்னும் ஒன்றரை மாதத்தில் இருந்தது.

வேலைகள் மளமளவென்று நடந்தது.

இந்த ஒன்றரை மாதமும் கார்த்திக்கின் ஞாபகம் முழுக்க சக்தியே. அவள் வேண்டாம் என்று நினைத்த நினைவுகள் எல்லாம் காற்றோடு கலந்தன.

சுமித்ரா தன்னை வேண்டாம் என்று சொன்னதால் சக்தி பின் போன மாதிரி இருக்க வேண்டாம் என்று ஞாபகப்படுத்தி அமைதி காத்தான்.

அவனால் தொழிலிலும் முழு கவனத்தோடு இருக்க முடியவில்லை. கிரானைட்ஸ் அவன் ராஜ்ஜியம் அது தானாக நடந்தது. ஆனால் சினிமா அவன் கண்ட் ரோலில் இல்லை.

அவனின் தந்தையின் கனவு. அவன் லட்சியம். அவனால் அதிகம் அதைப் பற்றி சிந்திக்க முடிய வில்லை, ஏனெனில் அவன் சிந்தையில் இருந்தது சக்தி மட்டுமே.

இத்தனை வருடங்கள், சக்தியை முதன் முதலில் பார்த்த போது தோன்றிய ஒரு வார நினைவுகள் வராமல் இருந்த அவனின் மனதில் இப்போது சக்தியைத் தவிர வேறு ஞாபகங்களே இல்லை.

சக்தியை மாயை என்று நினைத்த மனம் அந்த மாயையை விட்டு வெளியே வர முடியாமல் தவித்தது, என்பதை விட அதை விட்டு வெளியே வர விரும்பவே யில்லை.

இத்தனை நாட்கள் இருந்த கடமையின் கட்டுக்கள் அவனை வேறு எதுவும் யோசிக்க விடாமல் செய் திருந்ததுப் போல. இப்போது அது இல்லை என்றான

பிறகு அவன் மனதை அவனால் அடக்கவே முடிய வில்லை.

எடுத்த முடிவுகள் எல்லாம் செயல் படுத்த முடியாமல் இருந்தான் என்பதை விட என்ன முடிவுகள் எடுத்தான் என்பது அவன் ஞாபகத்திலேயே இல்லை என்பது தான் உண்மை.

மீண்டும் அவன் எண்ணம் முழுதும் எங்கும் சக்தி! எதிலும் சக்தி.!

சக்தி எனும் மாயப் பிசாசு அவனை ஆட்டிப் படைத்தது. இத்தனை வருடங்கள் அவனுள் இருந்த கட்டுப்பாடு எங்கே காணமல் போனது என்று அவனுக்கே தெரிய வில்லை.

சக்தி! சக்தி! சக்தி!... "கடவுளே எனக்கு அவளைக் கொடுத்து விடு" என்று ஓயாமல் வேண்டுதலை கடவுள் முன் வைக்க ஆரம்பித்தான் கார்த்திக்.

ஆனால் சக்தி ??????



# 24

கனவு கண்டதிலே - ஒரு நாள்
கண்ணுக்கு தோன்றாமல்,
இனம் விளங்கவில்லை - எவனோ
என்னகந் தொட்டு விட்டான்.

- பாரதி

அவனுக்கு நேர் மாறான மனநிலையில் இருந்தாள் சக்தி. அன்று ஏர்போர்ட்டில் அவனைச் சந்தித்து வந்த பிறகு மிகவும் சய இரக்கத்தில் இருந்தாள். கார்த்திக்கை பார்த்ததும் தடுமாறும் தன் மனதை அவளே வெறுத்தாள்.

தான் அவனை பார்த்ததும் ஏர் போர்ட்டில் உட்காராமல் இருந்திருந்தால் இவ்வளவு பிரச்சனைகள் வந்திருக்காது என்றுப் புரிந்தது.

அதுவும் காபியை வேறு அவன் முகத்தில் எல்லோர் முன்னிலையிலும் கொட்டி எவ்வளவு அவமானம் அவனுக்கு. அதைவிட அவன் தன்னை திருப்பி திட்டியிருந்தாலோ அல்லது கோபம் மீற அடித்து இருந்தாலோ அது தனக்கு எவ்வளவு கேவலம்.

அப்படி என்ன அ்வன் தான் வேண்டும் என்று உனக்கு. உனக்கு அவன் வேண்டாம் என்று மறுபடியும் உருப் போட ஆரம்பித்தாள்.

கடவுளிடம் இடைவிடாத பிரார்த்தனை அவன் எனக்கு வேண்டாம் என்பதாக.

ஒன்றரை மாதமாக கார்த்திக் சக்தி வேண்டும் என்று கடவுளிடம் வேண்டுதல் வைக்க. அவன் வேண்டாம் என்று சக்தி வேண்டுதல் வைத்துக் கொண்டிருந்தாள்.

வாசுகி பிரபுவை அழைத்துக் கொண்டு நேரில் வந்து வீரமணியை அழைத்து இருந்தார். வீரமணியோ தெய்வானையோ எதையும் முகத்தில் காட்டவில்லை. அவர்களை நன்கு உபசரித்து அனுப்பினார்.

''அந்த பொண்ணு திருடிட்டான்னு அவ்வளவு கேவலமா கார்த்திக்கை பேசிச்சு. இவங்க இவ்வளவு

நல்லா உபசரிக்கறாங்க'' என்பதே பிரபுவின் எண்ணமாக இருந்தது.

இந்தப் பக்கம் சிவாவின் தந்தையும் தாயும் வந்து வீரமணியை அழைத்துச் சென்றனர்.

இன்னொரு பக்கம் சிவா சக்தியை காலேஜ் போய் தனியாகப் பார்த்து அழைத்தான்.

சக்திக்கு அவனைப் பார்த்ததும் தான் அவன் ஒருத்தன் இருக்கிறான் என்பதே ஞாபகம் வந்தது. நடுவில் நடந்த பிரச்சனைகளில் அவளுக்கு சிவாவின் ஞாபகமே இல்லை.

''சாரி சக்தி! கொஞ்சம் பிசியா இருந்தேன்! அதான் இத்தனை நாளா போன் கூட பண்ணலை'' என்றான். அவன் கூப்பிடாதக் காரணம் சக்தியின் மீது அவனுக்கு இருந்தக் கோபம். சுமித்ரா கார்த்திக்கைப் பற்றி அவளும் தன்னிடம் சொல்லாமல் விட்டு விட்டாளே என்ற கோபம்.

கார்த்திக் சக்தியிடையே நடந்தது எதுவும் அவனுக்குத் தெரியாது அல்லவா.

''இட்ஸ் ஓகே சிவா'' என்றாள் சம்ப்ரதாயமாக.

''எனக்குக் கல்யாணம் சக்தி!''

''கங்க்ராட்ஸ்'' என்றாள் சந்தோஷமாக. ''பொண்ணு யாரு.''

''இது என்ன கேள்வி! என் காதலி தான்! நான் உங்ககிட்ட போட்டோவுல காட்டுன அதே காதலி, நீங்க தான் உங்க பாடிகார்ட்கிட்ட நடத்தச் சொல்லிச் சொல்லி யிருந்தீங்களே'' என்றான்.

''இதில் கார்த்திக் எங்கே?'' என்று மனதிற்குள் ஓடினாலும் வெளியே காட்டாமல். ''காட்டுங்க!'' என்றாள் இன்னும் உறுதி செய்ய.

அவன் காட்ட பார்த்தால் சுமித்ரா தான். மனதில் ஒரு குரூர திருப்தி எழுவதை சக்தியால் தடுக்க முடியவில்லை.

எப்படி? எப்படி? இது நடந்தது!

சிவாவிற்கு சக்தியிடம் மறைக்க எதுவுமில்லை. கார்த்திக் அவனுக்கு போன் செய்தது. சுமித்ரா அவனைப் பார்த்து அவள் பெண் கேட்கச் சொன்னது. பின்னர் தான் கார்த்திக்கிடம் பேசியது. கார்த்திக் பிரபுவை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்து தந்தையுடன் பேசியது. என்று எல்லாம் கதையாக சொன்னான்.

அதில் சக்திக்கு புரிந்தது எல்லாம் ஒன்றே ஒன்று தான். சுமித்ராவாக சிவாவிடம் வந்து பேசியிருக்கிறாள். அவள் தொடங்கி வைத்ததை கார்த்திக் முடித்து வைத்திருக்கிறான் அவ்வளவே.

அப்போதும் அவனாக எதுவும் ஆரம்பிக்கவில்லை. இது சக்தியின் மனதில் ஆழப் பதிந்தது.

இதற்கிடையில் திருமணத்திற்கு சீர் செய்வதில் பிரபு தெளிவாக இருந்தான். என் தங்கை நான் தான் செய்ய வேண்டும் என்று விட்டான். கார்த்திக்கை எதுவும் செய்ய விடவில்லை.

''நான் போய் சிவாவோட அப்பாகிட்ட சம்மந்தம் பேசியிருக்கேன். கண்டிப்பா எதுவும் கம்மியா செய்ய முடியாது. செய்யவும் கூடாது'' என்று கார்த்திக் சொல்ல.

''நீ என்ன செய்யலாம்னு நினைச்சிருந்த சொல்லு. அதை நானே செய்யறேன்!'' என்றான் பிரபு.

''எப்படி செய்வ?''

''நான் இன்னும் சம்பாதிக்க ஆரம்பிக்கலைன்னாலும் எங்கப்பா அம்மா சொத்து வெச்சிட்டு போயிருக்காங்க கார்த்திக்! அம்மாவோட நகை இருக்கு! இங்க தாத்தா நகை செஞ்சு வெச்சிருக்கார்! எங்க அம்மா வகை பாட்டியோட நகை இருக்கு! இதுவே நிறைய வரும்.''

''அது மட்டும் போதாது. மேல செய்யணும்.''

''செய்யலாம்! இப்போவே செய்யணும்ங்கறது கிடையாது! கல்யாணம் முடிஞ்சவுடனே நம்ம வீட்டோட அவ பந்தம் முடிஞ்சிடுமா என்ன? கொஞ்ச கொஞ்சமா செய்யலாம்!'' என்றான் பிடிவாதமாக.

பிரபுவால், ''கார்த்திக் எங்க வீட்ல இருந்து திருடிட்டு வந்துட்டான்'' என்றான் சக்தியின் வார்த்தைகளை மறக்க முடியவில்லை.

அப்படி ஒரு பணத்தில் அவனுக்கு எதுவும் வேண்டாம் என்பதாக அவன் எண்ணம். அது கார்த்திக்கின் உழைப்பு என்று அவன் ஒத்துக்கொள்ள தயாரில்லை. அதே சமயம் அதை வெளியிலும் சொல்ல முடியவில்லை.

என்னவோ பிரபுவின் மனதில் இருக்கிறது என்று கார்த்திக்கிற்கு புரிந்தாலும் அப்போதைக்கு தள்ளி வைத்தான். அவன் தான் எந்தப் பிரச்சனையும் எதிர் கொள்ளத் தயாரில்லையே அவன் எண்ணம் முழுவதும் சக்தி தானே இருந்தாள்.

திருமண நாளும் வந்தது. திருமணத்தை சிவா வீட்டினர் ஏதோ வேண்டுதல் என்று கோவிலில் வைத்திருக்க. மிக நெருங்கிய சொந்தம் மட்டுமே அதில்

கலந்து கொண்டு அதன் பிறகு மிக பிரமாண்டம்மாய் ரிசெப்ஷன் வைத்திருந்தனர்.

பிரபு சொல்வது மாதிரி கார்த்திக்கினால் விலகியிருக்க முடியவில்லை. பிரபுவிடம் கலந்து ஆலோசிக்காமல் நேரடியாக மாப்பிள்ளையின் அப்பாவிடம் பேசி அவர் செய்வதாக இருந்த திருமண செலவு முழுவதையும் கார்த்திக் ஏற்று இருந்தான்.

சொல்லப் போனால் மாப்பிள்ளை வீட்டாருக்கு எந்தா செலவும் இல்லை. அவர்கள் பெண்ணுக்கு செய்யும் சீர் வகைகளே செலவு.

அது மட்டுமல்லாமல் திருமணத்தில் சிவாவிற்கு கிஃப்ட்டாக கொடுப்பது மாதிரி பல கோடி மதிப்புள்ள கேரளாவில் இருக்கும் ரப்பர் தோட்டம் ஒன்றை அவன் பெயரிலும் சுமித்ரா பெயரிலும் ரெஜிஸ்டர் செய்திருந் தான். அதையும் பிரபுவிடம் கார்த்திக் தெரிவிக்கவில்லை.

ரிசெப்ஷன் மிகவும் கிராண்டாக நடந்து கொண் டிருந்தது. பத்ரிநாத்திற்கு மிகவும் திருப்தி. பிரபுவும் கார்த்திக்கும் பம்பரமாய் சுழன்று வேலை பார்த்துக் கொண்டிருந்தனர்.

கூட செல்வமும் எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தான். மூன்று நாட்கள் முன்பே பாஸ் வீட்டு திருமணம் என்று சொல்லியே விடுமுறை கேட்டிருந்தான், சக்தியும் கொடுத்திருந்தாள்.

பெண்ணும் மாப்பிள்ளையும் எல்லோர் கண்களையும் கவர்ந்தனர். ஜோடிப் பொருத்தம் நன்றாக இருப்பதாக பார்த்தவர்கள் அனைவருமே பாரபட்சம் இல்லாமல் சொன்னார்.

நடக்காது என்று நினைத்த ஒன்று நடந்து விட்ட திருப்தியில் இருந்தான் சிவா. இன்னுமும் அவ்வப்போது தன்னையே கிள்ளிப் பார்த்துக் கொண்டான்.

அவனின் ஆர்வமான பார்வைகளில் ஆசையான பேச்சுக்களில் சுமித்ராவும் தன் திருமணத்தில் மிகுந்த ஈடுபாட்டுடன் இருந்தாள். சிவாவின் உற்சாகம் அவளையும் உற்சாகத்துடன் எல்லாவற்றையும் செய்ய வைத்தது.

வைஷ்ணவி சொல்லவே வேண்டாம் மணப்பெண் கூட கம்மியாக நகை அணிந்திருந்தாள். இவள் நகைக் கடை ஊர்வலம் தான்.

''எதுக்குடி இவ்வளவு நகை'' என்று பிரபு கூட முகம் சுளித்தான்.

''எல்லாம் பெருசு பெருசா இருக்கு! வேற யார் கல்யாணத்திலையும் போட முடியாது! வாங்கினதுக்கு ஒரு தடவையாவது போடணும் தானே!'' என்று பிரபுவிடம் விளக்கம் சொன்னாள்.

''உன் கல்யாணத்துல போட வேண்டியது தானே!'' என்று பிரபு சொல்ல.

''உங்களுக்கு லேட் ஆகும்னு தான்'' என்றாள்.

இப்போது பிரபு புரியாமல் பார்க்கவும்.

''கழற்றதுக்கு லேட் ஆகாது'' என்று ரகசியமாக மெதுவாக அவனிடம் கிசுகிசுக்க.

பிரபுவின் கை தானாக அவனின் வாயை அடப்பாவி என்ற வார்த்தையுடன் மூடியது.

''ஏன் நீங்க தான் பேசுவீங்களா? நாங்க பேச மாட்டோமா?'' என்று கண்ணடித்தாள்.

''அம்மா! தாயே! ஆளை விடும்மா! ஆளை விடு! என் தங்கச்சி கல்யாணம், நான் நிதானமா நல்ல பையனா இருக்கணும்'' என்று இடத்தை விட்டு நகர்ந்தான்.

வீரமணி தன் மனைவியுடன் வந்திருந்தார். இரு வீட்டாரும் தனித்தனியாக அழைத்திருக்க அதுவுமில் லாமல் சிவா வேறு அழைத்திருக்க. வந்திருந்தார். ஆனால் சக்தியை கூட காணோம்.

அவர் வந்தவுடன் கார்த்திக்கின் கால்கள் வேறு திசை செல்லவில்லை. எப்போதும் போல அவர் பின்னால் சென்று நின்று கொண்டான். ''வாங்கய்யா, வாங்கம்மா'' என்ற அவனின் அழைப்புக்கு ஒரு தலையசைப்பு மட்டுமே வீரமணியிடம் அவர் வேறு எதுவும் பேச வில்லை.

அவனும் அதையெல்லாம் கண்டு கொள்ளவில்லை. அவர் பின் சென்று நின்றுக் கொண்டான்.

கார்த்திக்கிற்கு சக்தி ஏன் வரவில்லை என்று தவிப்பாய் இருக்க. செல்வத்தை கண்களால் அழைத்து, ''மேம்! ஏன் வரலைன்னு கேளு!'' என்றான் மெதுவான குரலில்.

''ஐயா! மேடம் வரலைங்களா!'' என்றான்.

''எங்க கூடத் தான் கிளம்பினா. காலேஜ்ல ஏதோ அவசர வேலைன்னு போயிட்டா இப்போ வந்துடுவா'' என்றார்.

''காலேஜ்ல அவசர வேலை'' என்றதும். என்ன என்று தெரிந்து கொள்ள செல்வம் போன் பேசப் போனான்.

கார்த்திக்கிற்கு வேண்டிய விவரம் கிடைத்தது. எப் போது வருவாள் என்று வழி மேல் விழி வைக்க ஆரம்பித்தான்.

அவள வரும்பாடாகக் காணோம்.

வீரமணி தெய்வானையுடன் மேடை ஏறி. மணமக்களை வாழ்த்தப் போனார். அவர்களை வாழ்த்தி பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் வெள்ளியில் கனமான வேலைப்பாடு அமைந்த குத்து விளக்கை பரிசளித்து திரும்ப.

''ஐயா! ஒரு நிமிஷம்!'' என்று சொன்ன கார்த்திக். ஒரு பத்திரங்கள் அடங்கிய பைலை போன்ற பையை அவரிடம் நீட்டி.

''இது பொண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் நான் வாங்கியது! நீங்க உங்க கையாள குடுத்தா சந்தோஷப் படுவேன்!'' என்று நின்றான்.

எல்லோரும் பார்க்க தர்ம சங்கடமான நிலை வீரமணிக்கு. யாருக்கும் கார்த்திக்கிற்கும் அவருக்கும் பிரச்சனை என்று தெரியாது. அதுவும் மாப்பிள்ளையின் அப்பா போன் செய்த போதும் அவர் சொல்லவில்லை.

அதனால் மௌனமாக அவர் வாங்கவும். கேரளாவில் இருக்கும் ஒரு ஊரின் பெயரை சொன்னவன் அங்கே இருக்கும் ரப்பர் தோட்டம் என்றான்.

அதை மனைவியுடன் சேர்ந்து வீரமணி கொடுக்க. விவரம் அறிந்த மாப்பிள்ளை வீட்டினருக்கு முகம் கொள்ளா சந்தோஷம்.

சிவா தான் எதற்கு இவ்வளவு பெரிய சொத்து என்று நினைத்தவன். ''என்ன கார்த்திக் இது'' என்று தயங்க.

''வாங்குங்க சிவா! இது என்னோட சின்னப் பரிசு தான்!'' என்றான். சிவா தன் தந்தையின் முகம் பார்த்தான். அவர் உன் விருப்பம் என்பது போல நிற்க.

சுமித்ராவை பார்த்தான். அவளும் உங்கள் விருப்பம் என்பது போல தான் இருந்தாள். அவளின் பிரபு அண்ணா விற்கு இது பிடிக்காது என்று தெரிந்ததால் அவள் எந்தக் கருத்தையும் சொல்லவில்லை.

பின்பு வீரமணி தயங்கும் அவர்களை கண்டு, ''வாங்குங்க தம்பி. வாங்கிக்கங்க'' என்றார். ஆனாலும் தயங்கித் தயங்கி தான் சிவா வாங்கினான். மற்ற பரிசுகள் என்றால் திருப்பி செய்து சமம் செய்து விட முடியும். இவ்வளவு பெரிய சொத்து தன்னால் திருப்பிச் செய்ய முடியாது என்ற தயக்கம் அவனுக்கு.

பிரபு நடப்பவைகளை பார்த்துக் கொண்டு தான் இருந்தான். அவனாலும் ஒன்றும் செய்ய முடியாத சூழ்நிலை. சபையில் கொடுப்பதை மறுக்க முடியாது. அதுவுமில்லாமல் இது மாப்பிள்ளை வீட்டினருக்கு கொடுப்பது தான் மறுக்க முடியாது.

''இந்த கார்த்திக்!!!!!'' என்று பல்லை கடிப்பதை தவிர பிரபுவால் ஒன்றும் செய்ய முடியவில்லை. சொல் பேச்சு கேட்பவன் அல்ல கார்த்திக் என்று அவனுக்கு இன்னும் தெரியவில்லை.

வீரமணி மேடையை விட்டு இறங்கவும் சக்தி வரவும் சரியாக இருந்தது. சக்தி உள்ளே நுழைவதை மிகவும் ஆசையுடன் தழுவின கார்த்திக்கின் கண்கள். அவனின் கண்களில் கண்ணாடியும் இல்லை.

ரோஜா நிற பட்டு அவளை பாந்தமாய் தழுவி இருந்தது. திருமணத்திற்கு வருவதால் தோற்றத்தில் சற்று அதிக அக்கறை எடுத்திருக்க. அவளை மிகவும் அழகாக காட்டியது அது.

பிரபு நேரே சென்று, ''வாங்க! வாங்க!'' என்று வரவேற்க. வைஷ்ணவி ஒரு நிமிடம் தயங்கியவள், ''வாங்க'' என்று கூடச் சென்று வரவேற்றாள்.

சக்தி அப்போது, அந்த நேரம் வீரமணியின் பெண் என்பதை நிரூபித்தாள். இருவரையும் பார்த்து ஒரு சிநேகமான புன்னகை.

பின்பு அப்பாவுடன் சென்று அமர்ந்துக் கொண்டாள். கண்கள் கார்த்திக்கை கவனித்தது.

அவன் கண்கள் தன்னை ஒரு புதிய பார்வையில் பார்ப்பதை உணர்ந்தாள். கார்த்திக்கை பார்த்தாலும் தான் அமைதியாக இருக்க வேண்டும். தன்னைக் கொண்டு போக விடக் கூடாது என்ற அவளின் முடிவு ஆட்டம் காணத் துவங்கியது.

அவனின் பார்வை ஒரு கோபத்தைக் கொடுத்தது. இத்தனை நாட்கள் இல்லாமல் எதற்கு இந்தப் பார்வை என்று கோபம் கொள்ள வைத்தது.

''வாங்க'' என்ற அவனின் வார்த்தைக்கு அவளிடம் எந்த பிரதிபலிப்பும் இல்லை.

சிவா மேடையில் இருந்து சக்தியை வருமாறு அழைக்க, ''வரவில்லை'' என்று சொல்லி அம்மா அப்பாவுடனே அமர்ந்திருந்தாள்.

''நீங்க வரலைன்னா நான் கீழே இறங்கி வருவேன்'' என்ற சிவாவின் செய்கையை பார்த்து வேறு வழி யில்லாமல் மேலே ஏறினாள்.

''சுமி, இவங்க சக்தி என்னோட ரொம்ப முக்கியமான பிரின்ட்...'' என்று அறிமுகப்படுத்தி வைத்தான்.

சுமித்ராவிற்கு ஆச்சர்யம் சக்தி இவனுக்குத் தோழியா என்று.

ஒரு புன்னகை. அது மட்டுமே பதிலாய் வந்தது சக்தியிடம். சுமித்ராவும் எந்தத் தயக்கமும் இல்லாமல் இப்போது சக்தியைப் பார்த்து புன்னகைத்தாள்.

அந்த புன்னகை சில நொடிகள் கூட நீடிக்கவில்லை. ''நான் இவங்க கிட்ட தான் என் காதலை முதல் முதலா சொன்னேன்'' என்றான் சக்தியை காட்டி சுமித்ராவிடம்.

கேட்ட சுமித்ராவின் முகத்தில் ஒரு அதிர்ச்சி, பயம். சக்திக்கு எங்கேப் போய் முட்டிக் கொள்வது என்றே தெரியவில்லை. ''லூசு, சொதப்புது'' என்று மனதிற்குள் சிவாவை திட்டியவள். என்னவோ சுமித்ராவின் பயத்தைப் போக்க வேண்டும் போலத் தோன்ற.

''பேச்சிலர்ஸ் பார்ட்டில அடிச்சது இன்னும் இறங் கலையா'' என்றாள்.

''நான் பார்ட்டி குடுத்து ரெண்டு நாள் ஆச்சே உங்களுக்கு எப்படித் தெரியும்.''

''அது தான் நான் ஸ்டாப் என்ஜாய்மென்டா எவன் வேணா உங்க பேரை சொல்லி குடிக்கலாம்னு சொல்லி கிருஷ்ணகிரியையே கலக்குனீங்களே.''

''உங்களுக்கு எப்படித் தெரியும் இதெல்லாம்'' என்று கேட்க.

''கிளி ஜோசியக்காரன் சொன்னான்'' என்றாள்.

''சக்தி உண்மையைச் சொல்லணும்.''

''உங்க பிரண்ட் பண்ற அலம்பல் தாங்கலைன்னு செல்வம் சொன்னான்'' என்றவள்.

''அதை விடுங்க தெளிவா சொல்லுங்க.''

''எதை.''

''நீங்க ஏதோ காதல்னு சொன்னீங்களே அந்த ஸ்டேட்மெண்ட்டை.''

''ஆமா! நான் இவளைக் காதலிக்கறதை முதல் முதலாக உங்ககிட்டத் தானே சொன்னேன்'' என்று சிவா சொல்ல சுமித்ராவின் முகம் மலர்ந்தது.

''நான் வேற இவ போட்டோவை என் மொபைல்ல வெச்சு, அந்த பொண்ணுகிட்ட லவ் சொல்லி அது சம்மதிக்காம ஏன் வெச்சிருக்கீங்கன்னு நீங்க சண்டை போட்டு டெலிட் பண்ண வெச்சீங்களே'' என்று சிவா குறைப் பட..

சுமித்ராவின் முகத்தில் புன்னகை பெரிதாக விரிந்தது.

''கொஞ்ச நேரத்துல உன்னை டென்சன் பண்ணிட் டாங்க இல்லை, என் சார்பா ஒரு அடி, அடி'' என்று சக்தி சுமித்ராவிடம் சொல்ல.

சுமித்ரா யோசிக்காமல் அவன் தோளில் தட்டினாள்.

''யார் சொன்னாலும் ரூம்ல தனியா தான் அடிக்கணும் செல்லம். இப்படி பப்ளிக்ல அடிக்கக் கூடாது! உன மாமன் ஒரு ஹீரோ இமேஜ் மெயின்டெயின் பண்ணிட்டு இருக்கேன்'' என்று சீரியஸாக சிவா சுமித்ராவை பார்த்துக் கோரிக்கை வைக்க.

"என்னது ஹீரோ வா? யாரது? எங்க?" என்று சக்தி சுற்றும் முற்றும். மேலே கீழே.. சிவாவின் பின்னால் என்று எட்டிப் பார்த்து. பின் சுமித்ராவின் பின்னும் எட்டி பார்த்து ''யாரோ ஹீரோவாமே சுமித்ரா நீ பார்த்தியா'' என்றாள்.

''ங்கே'' என்று சிவா விழிக்க.

''உங்க மானத்தை நாங்க தான் வாங்கணும். நீங்களே வாங்கிககக் கூடாது'' என்று சக்தி சொல்ல.

சுமித்ரா வாய் விட்டுச் சிரித்தாள். சுமித்ரா அப்படியெல் லாம் எல்லோரும் பார்க்கச் சத்தமாகச் சிரிப்பவள் அல்ல. அவள் வீட்டினர் அவளை அதிசயமாகப் பார்த்தனர்.

எல்லோர் பார்வையும் அவர்கள் மேல்.

''தெய்வமே விட்டுடுங்க. தெரியாம சொல்லிட்டேன்! நான் தானே இங்க இன்னைக்கு ஹீரோ!'' என்றான் பாவம் போல சிவா.

''என்ன சுமித்ரா, ஹீரோன்னு ஒத்துக்கலாமா'' என்றாள்.

சுமித்ராவிற்கு சிரிப்பு பொங்கியது. சக்தியின் பேச் சுக்கள் அவ்வளவு பிடித்தது அவளுக்கு.

''என்ன பண்ணட்டும்'' என்று சக்தியிடம் அவள் திரும்பிக் கேட்க.

தங்கை திருமணத்திற்கு சம்மதம் சொல்லிவிட் டாலும் அவள் மனதில் ஏதாவது இருக்குமா என்று அவளையேப் பார்த்துக் கொண்டிருந்த பிரபுவிற்கும் சுமித்ராவின் இந்த மலர்ந்த சிரிப்பு. வெட்கத்தை பூசிக் கொண்டிருக்கும் முகம் மிகுந்த திருப்தியை கொடுத்தது.

ஒரு ரெட் ரோஸ் கையில் எடுத்த சிவா. சுமித்ராவின் முன் மண்டியிட்டு அதை நீட்டி. ''சொல்லிடேன்'' என்றான்.

''இவர் தான் என் ஹீரோ'' என்று சுமித்ரா சொல்ல.

''அது'' என்று சக்தி புன்னகைத்து கைத் தட்ட.

சுற்றி நின்ற பொடுசுகளும் கைத் தட்டி ஆர்ப்பரித்தனர்.

முன்பெல்லாம் சக்தி இருக்கும் இடம் இப்படி தான் கலகலப்பாக இருக்கும். இப்போது இயல்பை விட்டு மாறிக் கொண்டிருந்தவள் இன்று சற்று வெளியே வந்திருந்தாள்.

அவளையே கவனித்து இருந்தனர் வைஷ்ணவியும், பிரபுவும், கார்த்திக் என்ன பேசுகிறார்கள் என்று கேட்காத போதும் சக்தியின் முகபாவனைகளை கண்களால் படம் பிடித்துக் கொண்டிருந்தான்.

''சக்தி போதுங்க'' என்று சிவா சொல்லவும் நிறுத்திய சக்தி. ''உங்க மொபைலை குடுங்க'' என்று அவனின் மொபைலை வாங்கி.

''சுமித்ரா அவங்க கையைப் பிடிங்க. அவங்க தோள் சாஞ்சிக்கோங்க'' என்று சுமித்ராவிடம் சொல்ல. சுமித்ரா தயங்கினாள்.

''ப்ளீஸ்! பார்க்கும் போதெல்லாம் உங்க போட்டோவை நான் டெலிட் பண்ண வெச்சிட்டேன்னு சொல்றாங்க! ஒரே ஒரு போஸ்!'' என்று கேட்டு. சுமித்ராவை அவன் கை பிடித்து தோள் சாய வைத்து. அதை சிவாவின் மொபைலில் எடுத்து ''போதுமா'' என்று அவனிடம் கேட்டாள்.

''இப்போதைக்கு இது போதும். எங்க குழந்தையோட எங்களை முதல் போட்டோவும் நீங்க தான் எடுக்கணும்'' என்று சிவா சொல்ல, சுமித்ராவின் முகம் வெட்கத்தை பூசியது.

அதையும் மொபைலில் அடக்கிய சக்தி. சுமித்ராவின் வெட்கத்தை திருப்தியாக பார்த்தபடி. இன்னும் நிறைய

பேர் வெயிட் பண்ணுவதைப் பார்த்து. அவர்களை வாழ்த்தி கீழே இறங்கினாள்.



# 25

**ஆசை முகமறந்து போச்சே – இதை**

**ஆரிடம் சொல்வேனடி தோழி?**

**நேச மறக்கவில்லை நெஞ்சம் – எனில்**

**நினைவு முகமறக்க லாமோ?**

- பாரதி

வீரமணி கிளம்பினார். அவருக்கு மதியம் டெல்லி போக வேண்டி இருந்தது. கட்சி விஷயமாக இப்போது அவர் தீவிர அரசியலில் இருந்தார்.

சக்தியும் கிளம்பவும், ''இப்போ தானே வந்தாங்க! இன்னும் சாப்பிடக்கூட இல்லை'' என்று கார்த்திக் முன் வந்தான்.

''இல்லை! பரவாயில்லை கார்த்திக்! அவ எங்களோட வரட்டும்!'' என்று தெய்வானை அவளைக் கிளப்ப முயல.

''இப்போதானே சக்தி வந்தா! சாப்பிடாம கிளம்பினா அது மரியாதையா இருக்காது. நாம போகலாம்! அவ கொஞ்ச நேரம் கழிச்சு வரட்டும்!'' என்று வீரமணி சொல்லி முன் செல்ல.

அப்போதும் தெய்வானைக்கு மனம் இல்லை.

''நீங்க போங்கம்மா. உடனே கிளம்பினா சிவா தப்பா எடுத்துக்குவாங்க. கொஞ்ச நேரத்துல வந்துடறேன்.''

அப்போதும் தெய்வானை நிற்க.

''நீங்க போங்கம்மா'' என்று பிடிவாதமாக நின்றாள் சக்தி.

தெய்வானை, கார்த்திக்கையும் சக்தியையும் மாறி மாறிப் பார்க்க.

கார்த்திக்கிற்காக தன் அன்னை தயங்குகிறார் என்று புரிந்தவள்.

அவனை ஒரு அலட்சியமான பார்வை பார்த்தவாறே, ''இவன் என்னை என்ன தூக்கிட்டாப் போயிடுவான்! என்னை ஒண்ணும் பண்ணமாட்டான்! பயப்படாம போங்க!'' என்றாள்.

ஒரு வாரமாக திருமணத்திற்கு போனோமா, வந்தோமா என்று இருக்க வேண்டும். தேவையில்லாமல் யாரிடமும் பேசக்கூடாது. கார்த்திக்கை பார்த்தால் தன் நிதானத்தை இழக்கக்கூடாது என்ற முடிவை அவளால் செயல்படுத்த முடியவில்லை. தன் கட்டுப்பாட்டை இழக்க ஆரம்பித்தாள்.

அவர் சென்றதுமே, ''என்ன கார்த்திக் பொண்ணு பிச்சி கிச்சு போல'' என்றாள் முகம் கொள்ளாச் சிரிப்போடு.

சக்தியை அவ்வளவு சிரிப்பான முகத்தோடு வெகு நாள் கழித்துப் பார்க்கிறான். அந்த சிரிப்பு எப்படி வந்திருந்தாலும் அவனுக்கு சந்தோஷமே. ''அதுல உங்

களுக்கு அவ்வளவு சந்தோஷம் போல'' என்றான் இயல்பாக.

''ரொம்ப சந்தோஷம்! சந்தோஷம் இல்லைன்னு எல்லாம் பொய் சொல்ல மாட்டேன்! நிச்சயா நீ வேண்டாம்னு சொல்லியிருக்க மாட்ட. அதுவா புத்திசாலி பொண்ணு பிச்சிக்கிட்டு இருக்கும்.''

''என்னை வேண்டாம்னு சொன்னதுக்கு இதுவும் ஒரு காரணம் இல்லையா'' என்றாள் அவளையும் மீறி. இந்த மாதிரிப் பேசக்கூடாது என்ற மனதை ஒருநிலைப்படுத்தி வைத்தது எல்லாம் கை கொடுக்கவில்லை.

''என்னைப் பத்தி உனக்கு என்ன தெரியும்! எதுவுமே தெரியாது!'' என்றான் கார்த்திக் அவளை யாரென்று தெரியும் முன்பே அவள்ள தன் மனதுக்கு பிடித்ததை வைத்து சொன்னான்.

''என்ன தெரியுமா? எதுக்குத் தெரியணும்? இல்லை எதுக்குத் தெரியணும்! தெரியவேண்டிய அவசியமே யில்லை!'' என்றாள் அலட்சியமாக.

''என்னவோ அம்மாகிட்ட இவன் என்னை என்ன தூக்கிட்டுப் போயிடுவானான்னு சொன்னீங்க. ஏன் செய்ய மாட்டேனா?''

''செய்வே! செய்வே! ஏன் செய்ய மாட்ட'' என்றாள் இன்னும் அலட்சியமாக.

''இது மட்டுமா செய்யவேன்! தாலி கூடக் கட்டு வேன்!''

''ஏன்? நீ இந்தப் பொண்ணை கல்யாணம் பண்ணிக் கலைன்னா நான் ஏதாவது உனக்கு வாழ்க்கை தர்றேன்னு சொல்லியிருக்கேனா'' என்றாள் கிண்டலாக.

''சக்தி!'' என்று பல்லைக் கடித்தான்.

அவனின் கோபம் அவளுக்கு உற்சாகத்தைக் கொடுக்க. ''ஓஹ்! அப்படியில்லையா சக்தியை உனக்கு நேர்ந்து விட்டிருக்காங்களா'' என்றாள் இன்னும் நக்கலாக.

கார்த்திக் மிகவும் உறுதியோடு, ''நீ தான் என் மனைவி சக்தி'' என்றான்.

அந்த வார்த்தையில் சக்தியை உசுப்ப. அவளும் கோபத்தில் சீற ஆரம்பித்தாள்.

''உன் மனசுல அந்த மாதிரி ஒரு எண்ணம் இருந்தா அழிச்சிடு கார்த்திக்! நீ அந்த மாதிரி ஏதாவது செஞ் சேன்னு வெச்சிக்கோ! அடுத்த நிமிஷம் என் உடம்புல உயிர் இருக்காது'' என்றாள் உறுதியோடு,

அவளின் வார்த்தைகள் தந்த காயம் கார்த்திக்கிற்கு கழுத்தில் சுளீர் என்று ஒரு வலி ஆரம்பிக்க. கழுத்தை பின் புறம் கொண்டு சென்று மறுபடியும் கொண்டு வந்தவன் பிறகு எதுவும் பேசாமல் நகர.

''ஒரு ட்ரை தான் குடுத்து பாரேன் கார்த்திக்! நடக்குதா இல்லையான்னு!'' என்றாள் அவனைச் சீண்டும் விதமாக.

வார்த்தைகளில் கூட ஒரு வரைக் கொல்ல முடியும் என்று சக்தி நிரூபித்தாள்.

''நீங்க நல்லாயிருக்கணும் மேம்'' என்றான் சக்தி என்ற வார்த்தையை தவிர்த்து.

''ஒஹ்! நோ செண்டிமென்ட்ஸ். இன்னும் என்னை செண்டிமென்டல் ஃபூல்னா நினைச்சிருக்க.''

''இல்லை! இது உண்மையான வார்த்தை.''

''நீ சொல்றது எப்படியிருக்கு தெரியுமா. நீயே கடல்ல தள்ளிவிட்டுட்டு கடல்ல மூழ்கி செத்துட்டு இருக்குறவே கிட்ட தாகமா இருந்தா தண்ணிக் குடின்னு சொல்ற மாதிரி இருக்கு'' என்றாள்.

தான் பார்த்த, தனக்குத் தெரிந்த சக்தியா இவள். கல்லாய் சமைந்து நின்றான். இவளுக்கு இவ்வளவு பேசத் தெரியுமா என்பது போல கார்த்திக் பார்த்துக் கொண்டு நிற்க.

''எனிவே உன் கல்யாணம் நின்னதுல எனக்கு ரொம்ப சந்தோஷம் கார்த்திக்! சந்தர்ப்பம் கிடைச்சாலும் என் கண்ல படாத'' என்று சொல்லிச் சென்றாள்.

அதைச் சொல்லும் போது உடம்பின் ஒவ்வொரு அசைவிலும் திமிர்.

மண்டப வாயிலில் தெய்வானையை வழியனுப்ப வந்த போது இந்த பேச்சுக்கள் நடக்க அப்படியே வெளியேப் போக ஆரம்பித்தாள்.

அந்த திமிர் கார்த்திகை உசுப்ப. சென்றவள் முன் சென்று நின்றவன். ''நீங்க என் முகத்துல காபி ஊத்தினதுக்கு பதிலா ஆசிட் ஊத்தியிருக்கலாம்'' என்றான்.

ஒரு பார்வை பார்த்தவள், ''காபி ஊத்தற அளவுக்கு என்னை நீ தான் மாத்தி இருக்க. ஆசிட் ஊத்த வெச்சிடாதா'' என்றாள் கடினமான குரலில்.

''சக்தி'' என்றான் அடிப்பட்ட குரலில்.

சக்தி நிற்கவே இல்லை. செல்ல ஆரம்பித்தாள்.

''நான். நான் என்ன பண்ணினேன் உன்னை. இந்தள வுக்குப் பேசற'' என்றான் திரும்பவும் ஓடி அவள் முன் சென்று நின்று.

''அது தான் கார்த்திக் நானும் யோசிச்சிட்டு இருக்கேன்! தெரிஞ்சா சொல்றேன்!'' என்றாள் இன்னும் திமிராக.

''வேண்டாம் சக்தி'' என்றான் கோபமாக.

''என்ன வேண்டாம்!'' என்று பதிலுக்கு அவளும் சீற.

தூரமாக நின்று இவர்களை கவனித்துக் கொண்டிருந் தான் செல்வம்.

கார்த்திக் மிகவும் இறங்கி வந்து, ''ப்ளீஸ்! எனக்கு உன் வாழ்க்கையில வர ஒரு வாய்ப்பு கொடு'' என்றான்.

''என்னது வாய்ப்பா'' என்று நக்கலாக கேட்டவள்.

''இந்த மாதிரி இனிமே உளறாத கார்த்திக். அப்புறம் அவசரத்துக்கு மாப்பிள்ளை கிடைக்கலைன்னா கூட பரவாயில்லைன்னு எவனையாவது கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்து நிற்பேன்.''

''எவன் வருவான் என்னை மீறி எவனும் வரமாட் டான்.''

''ஏன் வர மாட்டான்? யாரும் வரலைன்னா தோ அங்கே நிக்கறானே உன் விசுவாசி. அவனைக் கூட கல்யாணம் பண்ணுவேன்'' என்று செல்வத்தைக் காட்டினாள்.

ஒரு நிமிடம் அதிர்ந்து நின்றவன். கோபத்தில் ஒரு காரின் பின்புறம் யார் பார்வையிலும் விழாதவாறு நகர்ந்தவன் அவளையும் இழுத்தான். இழுத்த இழுப் பிற்கு அவன் மேலேயே வந்து விழுந்தாள் சக்தி.

அவள் இடையில் கை கொடுத்து அணைத்து இறுக்கி பிடித்தான். பிறகு நிதானமாக தெளிவாக சொன்னான். ''என்னைத் தவிர எவன் தாலி கட்டினாலும் அடுத்த நிமிஷம் அவன் உயிரோட இருக்க மாட்டான்'' என்று.

சக்தியும் அவன் அணைப்பில் இருந்து திமிறவோ. விடு! விடு! என்று கத்தவோ இல்லை. அசையாமல் நின்றவள், அவனுக்கு சற்றும் மாறாத குரலில், ''நீ லிவிங் டுகெதர் பத்தி கேள்வி பட்டதில்லையா கார்த்திக்'' என்றாள் சுற்றும் அசராத குரலில்.

கார்த்திக்கின் பிடி தளர்ந்தது.

''நீ என்னோட வாழ்க்கையில வரணும்னு நினைச்சு, எனக்கு ஒரு வாழ்க்கையே இல்லாம ஆக்கிடாத'' என்றாள் சற்றும் தயவு தாட்சன்யமே இல்லாமல்.

''வலிக்குது சக்தி!'' என்றான். இதே வார்த்தைகளை சக்தியின் வீட்டிற்கு வந்த முதல் நாள் கார்த்திக் சொல் லும் போது ''எங்கே'' என்று பதறி அவனை கவனித்த சக்தி இப்போது அதற்கு நேர் மாறாக.

''வலிக்கட்டும்! நல்லா வலிக்கட்டும்! எனக்கு வலிச்சதை நீ அனுபவிக்கனும்! எத்தனை நாள் ராத்திரி நீ ஏன் இப்படி பண்ணின. நடந்துகிட்டன்னு யோசிச்சிக் கிட்டே இருப்பேன் தெரியுமா'' என்று ஏதோ பேச வந்தவள் அப்படியே நிறுத்திக் கொண்டாள்.

''நீ என்ன நினைக்கிற எனக்குள்ள வலி இல்லைன்னா.''

''இருக்கலாம்! ஆனா அது நான் குடுத்தது இல்லையே! உன்னை வலிக்க வலிக்க அடிக்கணும் போல எனக்கு ஆத்திரமா வருது! ஆனா என்னால அது முடியாதே!''

''நான் என்ன செஞ்சேன் அப்படி? எதுவா இருந் தாலும் என்னை மன்னிக்கக் கூடாதா'' என்றான் மன் றாடிய குரலில்.

கார்த்திக்கின் பிடி தளர்ந்து இருந்தாலும். அவன் அதை விலக்காமல் சக்தியை அணைத்தே பிடித்திருந்தான்.

சக்தியும் விலகவில்லை. ஆனால் அவளின் வார்த்தை கள் அவனைத் தானாக விலக வைத்தது.

''ஏய்! என்னை என்ன உன்னோட விளையாட்டு பொம்மைன்னு நினைச்சியா. நானா வந்தா வேண் டாம்னு சொல்லுவ. நான் வேண்டாம்னு சொன்னா நீ தான் வேணும்னா சொல்லுவ. என்கிட்ட விளையாடிப் பார்க்கிறதை தான் உன்னோட முதன்மையான வேலையா வெச்சிருக்கியா'' என்றாள் ஆத்திரத்தில் சற்றுக் குரல் உயர்ந்தாலும் குரல் கமறியது.

''வேண்டாம்! நீ எனக்கு வேண்டாம்! நான் உன் வாழ்க்கையில் கண்டிப்பா வர மாட்டேன்! நீ என்னைத் தொந்தரவு செய்யாம இருக்குற வரைக்கும் என்னோட வாழ்க்கையாவது நல்லா இருக்கும்! நீ தொந்தரவு செய்ய நினைச்ச என்னோட வாழ்க்கையை நானே. நானே அழிச்சுக்குவேன்!''

தளர்ந்த கார்த்திக்கின் பிடி இப்போது முற்றிலும் விலகியது.

அவனால் எந்த வகையிலும் அணுக முடியாத வேலியை தன்னைச் சுற்றிப் போட்டு கொண்டாள் சக்தி.

அவன் அழிவுக்கு அஞ்சுபவனல்ல. சக்தி அவனை அழிப்பேன் என்று சொன்னால் நீயா நானா என்று விடுவான். ஆனால் அவள் தன்னை அழித்துக் கொள்வேன் என்றல்லவா சொல்லுகிறாள்.

''உன்னால முடிஞ்சதை நீ செஞ்சா. என்னால முடிஞ்சதை நான் செய்வேன் கார்த்திக்!'' என்று சொல்லி அவள் காரைத் தேட.

அவளின் பார்வையின் கட்டளையை உணர்ந்து. அடுத்த நிமிடம் காருடன் வந்தான் செல்வம்.

கார்த்திக்கின் கைகள் தானாக சக்தியின் கார்க் கதவை அவளுக்காக திறந்து விட்டது.

அவள் ஏறவும். கார் நகர.

செல்லும் அவளை எதுவும் செய்ய இயலாமல் கண் களில் நீரோடு பார்த்திருந்தான். கண்ணாடி அணியாமல் இருந்த முகத்தில் மீண்டும் கண்ணாடி ஏறியது.

**செஞ்சோற்று கடன் தீர்க்க**

**சேராத இடம் சேர்ந்து**

**வஞ்சகத்தில் வீழ்ந்தாயடா கர்ணா**

**வஞ்சகன் கண்ணனடா கர்ணா**

**வருவதை எதிர் கொள்ளடா**

**உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காதென்பது**

**வல்லவன் வகுத்ததடா கர்ணா**

**வருவதை எதிர் கொள்ளடா.**

கார்த்திக்கிடம் பேசி சக்தி வந்துவிட்டாலும் அவளுடைய கண்களிலும் நிற்காமல் நீர் வழிந்துக் கொண்டிருந்தது. அதைத் துடைக்கக் கூட முற்படவில்லை.

ஏன் இவ்வளவு கோபம். ஏன் இவ்வளவு ஆத்திரம். ஏன் இவ்வளவு பேச்சுக்கள்.

யோசித்தாலும் அவளுக்குள் விடை இல்லை.

ஒரு புற நானூற்று பாடல் உண்டு

**ஈயென இரத்தல் இழிந்தனறு அதனெதிர்**

**ஈயேன் என்றல் அதினினும் இழிந்தன்று**

**கொள்ளனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்**

**கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று**

ஒருவர் பிச்சை கேட்பதே கேவலமான செயல். அதிலும் எதிர் நிற்பவர் பிச்சை போடமாட்டேன் என்பது அதையும் விடக் கேவலமாகன செயல்.

ஒருவர் ஒன்றை வைத்துக் கொள் என்று கொடுப்பது உயர்ந்த செயல். அது எதிர் நிற்பவருக்கு தேவையாயிருந்தும் அதை வேண்டாம் என்று மறுப்பது அதனினும் உயர்ந்த செயல்.

இது பொருட் செல்வத்தை கொண்டு சொல்லப்பட்ட ஒரு உயர்ந்தக் கருத்து.

சக்தி அப்படி ஒரு மனநிலையில் இருந்தாள்.

அவள் கார்த்திக்கிடம் அவனை யாசகமாக கேட்க, அவன் மறுத்து விட்டான்.

இப்போது அவனாக தன்னைக் கொடுக்க, இவள் மறுத்து விட்டாள்.

**உன்கண்ணில் நீர் வழிந்தால் - என்னெஞ்சில்**

**உதிரங் கொட்டுதடீ;**

**என்கண்ணில் பாவையன்றோ? - கண்ணம்மா**

**என்னுயிர் நின்னதன்றோ?**

இரண்டாம் பாகத்தில் தொடரும்.....

மேலும் மின்நூல்களுக்கு

www.tamilnesan1981.blogspot.in


மல்லிகா மணிவண்ணனின்
வீழ்வேனென்று நினைத்தாயோ
பாகம் - 2

# வீழ்வேனென்று நினைத்தாயோ

(பாகம் - 2)

மல்லிகா மணிவண்ணன்

நாகம்மை நிலையம்
43/18, எஸ்.பி.எஸ். முதல் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

# நூல் விவர அட்டவணை


| | |
|---|---|
| நூலின் பெயர் | : வீழ்வேனென்று நினைத்தாயோ (பாகம் - 2) |
| ஆசிரியர் | : மல்லிகா மணிவண்ணன் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : ஜனவரி, 2015 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 428 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : நாகம்மை நிலையம்<br>43/18, எஸ்.பி.எஸ். முதல் தெரு,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.180.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : பா.குணாளன் |
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ்,<br>சென்னை-14. |



# வீழ்வேனென்று

# நினைத்தாயோ

(பாகம் - 2)

மேலும் மின்நூல்களுக்கு

www.tamilnesan1981.blogspot.in

# வீழ்வேனென்று நினைத்தாயோ

## (பாகம் - 2)



## 26

**சின்னஞ் சிறுகிளியே, கண்ணம்மா!**

**செல்வக் களஞ்சியமே!**

**என்னை கலிதீர்த்தே - உலகில்**

**ஏற்றம் புரிய வந்தாய்!**

- பாரதி

கார்த்திக்கிடம் சக்தி பேசி வந்துவிட்டாலும் அதன் பிரதிபலிப்பை எதிலும் காட்டவில்லை சாதாரணமாக தான் இருந்தாள்.

திருமணத்தில் இருந்து மகள் திரும்பி வந்த பிறகு அவள் முகத்தில் ஏதாவது வருத்தம், கோபம் தெரிகிறதா

என்று தெய்வானை தேட அவள் எப்பொழுதும் போல தான் இருந்தாள்.

சக்தி தான் மண்டபத்தில் இருந்து நேரே காலேஜிற்கே சென்று தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு தானே திரும்பியிருந்தாள்.

காலேஜில் யாரும் அவளை எந்தத் தொந்தரவும் செய்யாமல் பார்த்து கொண்டான் செல்வம். சிறிது நேர தனிமையில் தன்னை கட்டுக்குள் கொண்டு வந்திருந் தாள் சக்தி.

மனதில் அப்படி ஒரு நிம்மதி... கார்த்திக் தன்னை மணக்க கேட்டான்... தான் மறுத்து விட்டோம்... என்பது உலகையே வென்று விட்ட திருப்தி...

ஒருவாறான மன நிம்மதியில் இருந்தாள். தன்னை அவன் நிராகரித்தது போய் தான் அவனை நிராகரித்து விட்டோம் என்பது அப்படி ஒரு திருப்தியை அவளுக்கு கொடுத்திருந்தது.

அவளின் தாயினால் சக்தியை சிறிதும் இனம் காண முடியவில்லை. திருமணத்திற்கு போய் வந்ததில் இருந்து தெய்வானைக்கு மனதிற்குள் ஏக்கமாக இருந்தது. எப்போது தன் மகளுக்கு இப்படி சீரும் சிறப்புமாய் திருமணம் செய்து பார்ப்பது என்று.

வீரமணி வந்தவுடன் தெளிவாக பேசி சீக்கிரம் பொருத்தமாய் மாப்பிள்ளை பார்க்க சொல்ல வேண் டும்... மகளுக்கு வயதும் ஏறுகிறது என்று அந்த தாய் மனம் கவலை கொள்ள ஆரம்பித்தது.

இந்த முறை வீரமணி வருவதற்கு ஒரு வாரத்திற்கும் மேல் ஆக தவித்துப் போனார் தெய்வானை. எடுத்த முடிவை செயல்படுத்த வேண்டும் என்பது போல ஒரு உந்துதல். என்னவோ சரியில்லாதது போல மனம் அடித்துக் கொண்டது.

சக்தியை கவனித்துக் கொண்டே தான் இருந்தார். சிரித்த முகத்துடன் தான் வளைய வந்தாள்... உற்சாக மாகவும் இருந்தாள்... ஆனால் பழைய விளையாட்டுத் தனம் இல்லை... ஒரு பதவிசு வந்திருந்தது நடத் தையில்...

தானே எல்லாவற்றையும் முடிவெடுத்து செய்வது ஒரு கம்பீரத்தை கொடுத்தது.

இந்தப் புதிய தோற்றம் எல்லோரையும் அவளை மிகவும் மரியாதையாக பார்க்க வைக்கும். அது அன் னைக்கு பிடித்திருந்தாலும் ஆட்டம் பாட்டம் கொண் டாட்டமாய் இருக்கும் சக்தி இல்லையே. விளையாட்டுத் தனம் தானே அவள் இயல்பு.

நொடிக்கொரு தரம் அடுத்தவர்களை சிரிக்க வைக்கும் அவளின் பேச்சு மிஸ்ஸிங்.

தெய்வானை வீரமணிக்காக காத்திருந்தார்.

இங்கே சக்தியும் வீரமணிக்காக காத்திருந்தாள். அவள் கட்டிக் கொண்டிருந்த ஹாஸ்பிடல் வேலைகள் ஏறக்குறைய முடிந்துவிட்டது.

பெயருக்கு அதன் திறப்பு விழாவை நடத்தி... பின் டாக்டர்சை வேலைக்கு சேர்த்து... பின் தேவையான வசதிகளை செய்யலாம்... பின் அது செயல் பட

ஆரம்பித்த பின்... அதற்கு நோயாளிகளின் வருகை அதிகரித்த பின் தான் அவள் மெடிக்கல் காலேஜ் ஆரம்பிக்க அப்ளை செய்ய முடியும்.

இப்படி பல பின்களை வைத்திருந்ததால் சற்று டென்ஷனாக இருந்தாள்.

வீரமணி வந்ததும் முதல் வேலையாக அதன் திறப்பு விழாவிற்கு நாளை குறித்தாள்.

அது இன்னும் ஒரு வாரத்தில் என்றிருந்தது.

அந்த வேலையில் தந்தையும் மகளும் மும்முரமாய் இருந்ததால் தெய்வானையால் திருமணத்தைப் பற்றி பேச்செடுக்க முடியவில்லை.

அழைப்பிதழ் அச்சடிக்க... யார் யாரை அழைக்க... என்று வேலை ஆரம்பிக்கலாம் என்றால், மீண்டும் ஒரு நாள் பயணமாக வீரமணி டெல்லி சென்றார். அவர் ஹாஸ்பிடலை கட்சியின் தலைமை கொண்டு திறந்து வைக்க விரும்பினார்.

அதனால் நாள் தோதுபடுமா என்று கேட்க விரும்பி நேரில் சென்றார். அவர் எப்போது நாள் கொடுப்பார் என்பதாக சற்று டென்ஷனாக இருந்தாள் சக்தி.

எதற்கு இந்த பெண்ணிற்கு இப்படி ஒரு கஷ்டம் என்பதாக இருந்தது தெய்வானைக்கு... கணவன் சம்பாதிக்க வீடு குடும்பம் மக்கள் என்று வாழ்ந்தவர் தெய்வானை... அதுவும் கார்த்திக் வந்த பிறகு அவரின் கணவருக்கு கூட அதிக வேலைகள் இல்லை.

இப்படியிருக்க தன் மகள் ஓயாமல் கட்டிட வேலைகள் முடிந்து விட்டதா என்று பார்ப்பதும்... யார் யாரை

வேலைக்கு சேர்க்கலாம்... யாரை பொறுப்பில் போட லாம் என்று குழம்புவதுமாக இருக்க... தன் மகளை பார்க்க அவருக்கு கவலையாக இருந்தது.

ஓயாமல் வேலை இருந்தது சக்திக்கு... காலேஜிலும் அவளை பார்ப்பதற்கு ஆட்கள் காத்திருக்க வீட்டிற்கு வந்த பிறகும் வேலைகள் அதிகம் இருந்தன.

செல்வம் அவளின் நிழல் போல இருந்தான். அவள் உறங்க செல்லும் வரை அவள் வீட்டில் தான் இருப்பான். காலையிலும் எட்டு மணிக்கு வந்துவிடுவான். அவனாக செய்வான் என்றாலும்...

கார்த்திக் என்ன நடக்கிறது ஏது நடக்கிறது என்று செல்வத்திடம் கேட்காவிட்டாலும்... சக்திக்கு இப்போது வேலைகள் அதிகம் என்று புரிந்து அவளின் நிழலாய் இருக்க சொல்லியிருந்தான்.

வீரமணி கட்சி தலைமையிடம் பேசி அவரின் சம் மதத்தை வாங்கி அந்த நாளிலேயே திறப்பு விழா வைத்துக் கொள்ளலாம் போல கூற...

அழைப்பிதழ் அடித்து அழைக்கும் வேலை ஆரம்ப மானது. செல்வத்திற்கு வேலை முதுகு நிமிர்த்தியது. அவனால் முடியவில்லை. சொல்லும் வேலையை செய்து பழக்கப்பட்டவன் அவன்... அவனாக யோசித்து செய்யும் போது தப்பாக போய் விடுமோ என்று பயமாக இருந்தது.

சக்தி வேறு இந்த வேலையை செஞ்சிடுங்க அந்த வேலையை செஞ்சிடுங்க என்று சொன்னாள். எப்படி செய்வது என்று குழம்பிப் போனான்.

அன்று, "அழைப்பிதழ் யார் யாருக்கு குடுக்கனும்னு லிஸ்ட் போட்டுடுங்க, அப்பா காலையில வந்ததுமே வேற யாரை சேர்க்கணும்னு கேட்டுக்கலாம், நாளைக்கு காலையில் கூப்பிட ஆரம்பிக்கணும். இன்னும் ஒரு வாரம் தான் இருக்கு... எனக்கு கொஞ்சம் தலை வலிக்குது... நான் ரெஸ்ட் எடுக்கறேன்" என்று சொல்லி செல்ல போக...

யாரை லிஸ்ட் போடுவது என்று தெரியாமல் விழித் தவன்... "மேடம், நீங்க சொல்லிட்டு போங்க! நான் லிஸ்ட் ரெடி பண்ணிடறேன்!" என்றான்.

"இல்லை செல்வம், எனக்கு ரொம்ப தலைவலி... என்னால முடியாது! நீங்களே பண்ணிடுங்க!" என்று சொல்லி சென்று விட்டாள்.

தெய்வானை சண்டைக்கு வந்தார்... "மணி பார்த் தியா? நைட் பதினொண்ணு... அவ தலை வலிக்குதுன்னு சொல்றா... நீ செய்ய மாட்டியா? பாவம் புள்ள ஓயாம உழைக்குது... நீ எதுக்கு அப்புறம் சம்பளம் வாங்கற," என்றார்.

செல்வத்துக்கு மனதுக்குள் கோபம்தான், 'என் வீட்டு வேலையா இது... இந்தம்மாவுக்கு என்னை திட்றதே பொழப்பா போச்சு! இருங்க என்ன பண்றேன்னு பாருங்க!' என்று மனதிற்குள் கறுவிக் கொண்டவன்... வேகமாக சென்று நின்ற இடம் கார்த்திக்கின் வீடு.

அங்கிருந்து போன் அடித்தான், "பாஸ்! நான் வாசல்ல நிக்கறேன்!" என்று.

என்னவோ ஏதோவென்று பதறி விரைந்து கார்த்திக் வந்தான்.

''என்னடா,'' என்றவனின் கேள்விக்கு...

''கண்டேன் சீதையை'' என்பது மாதிரி... ''பிரச் சனையில்லை மேடம்க்கு'' என்று முதலில் சொன் னான்...

கார்த்திக்கின் முகம் தெளியவும்...

''என்னால முடியலை பாஸ்! என்னால அங்க வேலை பார்க்க முடியலை!'' என்று புலம்ப ஆரம்பித்தான்.

''ஏன்டா?''

''சொல்ற வேலை எவ்வளவு கஷ்டமானதுன்னாலும்... இப்படி செய்ன்னு சொன்னா செய்வேன். என்னை யோசிச்சு செய்னா, நான் எதை செய்வேன்'' என்றான் பரிதாபமாக.

''உள்ள வாடா இம்சை... அறிவு கெட்டவனே...'' என்று இன்னும் கெட்ட வார்த்தையால் அவனை திட்டிய கார்த்திக்... ''என்னவோ ஏதோன்னு பயந்து போயிட் டேன்.''

''வா'' என்று அவனை வீட்டிற்குள் அழைத்து போனான்.

''இப்போ சொல்லு!'' என்று கார்த்திக் சொல்ல...

''பசிக்குது'' என்றான்.

கார்த்திக்கிற்கு டென்சன் ஏறி விட்டது.

''ஏன்டா என்னடா உன் பிரச்சனை. என்கிட்ட மாத்து வாங்கி நாளாகிடுச்சு போல.''

''வேலை முடிச்சிட்டு சாப்பிடலாம்னு இருந்தேன். சக்தி மேடம் இருந்திருந்தா சாப்பிடாம அனுப்ப

மாட்டாங்க. அவங்க தலைவலினு படுக்கப் போனாங்க. அவங்க அம்மா என்னை திட்டுனாங்களா... கோவத்துல சாப்பிடாம வந்துட்டேன்! மதியம் ஒரு மணிக்கு சாப் பிட்டது! சாப்டா தான் என்னால பேசவே முடியும்!'' என்றான் சோர்வாக.

சமையலறையில் போய் கார்த்திக் பார்க்க அங்கே ஒன்றுமில்லை. மீதமிருந்த சாதத்தில் தண்ணீர் ஊற்றி வைக்கப்பட்டு இருந்தது.

''வாடா, ஹோட்டலுக்கு போகலாம்.''

''மணி பன்னிரண்டு... இப்போ யார் தொறந்து வெச் சிருப்பா.''

''டேய்! இங்க ஒண்ணும் இல்லைடா! தண்ணி ஊத்தின சாப்பாடு தான் இருக்கு.''

''அதை கொஞ்சம் தயிரோட குடுங்க பாஸ்.. அதுவே போதும்'' என்றான்.

அந்த சாதத்தை... தயிரை... ஊறுகாயை... என்று கார்த்திக் கொடுத்து அங்கே அமர...

''நான் சாப்பிட்டுட்டு வர்றேன் பாஸ்! நீங்க போங்க!'' என்று அவனை அனுப்ப முற்பட.

''ஏன்டா, நான் இங்க இருந்தா என்ன?''

''என்னவா? சாப்பிடறது பழைய சாதம்.. அதையும் என்னை சாப்பிட விடாம மேடம் பத்தி கேள்வியா கேட் பீங்க... எனக்கு தெரியாதா... போங்க!'' என்று அவனை அனுப்பினான்.

உண்மையில் கார்த்திக் அதற்காகதான் அமர்ந்தான்.

சக்தியிடம் மண்டபத்தில் பேசி வந்ததில் இருந்து மனதே சரியில்லை கார்த்திக்கிற்கு. எப்போதும் யாரிடமும் தன் உணர்வுகளை பகிர்ந்து பழகப்பட்டிராதவன். இப்போது புதிதாக என்ன செய்வான். மனதை எப்போதும் ஒரு துக்க பந்து அடைத்தது.

பிரபு வேறு அவனிடம் சுமித்ராவிற்கும் சிவாவிற்கும் எஸ்டேட்டு வாங்கி கொடுத்தது தொடர்பாக சண்டை போட்டான்.

பிரபுவிற்கும் சீக்கிரம் செட்டில் செய்து விட வேண்டும் என்று முடிவெடுத்து இருந்தான் கார்த்திக். இப்படி பிரச்சனைகளில் உழன்று கொண்டிருந்தான்.

சிறிது நேரத்தில் கார்த்திக்கின் முன் வந்து நின்றான் செல்வம்.

''உட்காருடா, இப்போ சொல்லு. என்ன விஷயம்?''

''ஹாஸ்பிடல் திறப்பு விழா இன்னும் ஒரு வாரத்துல... காலையில தான் ஐயா டெல்லில கட்சி தலைமை கிட்ட பேசி டேட் வாங்கினார். உடனே இங்க தகவல் சொல்லவும். நான் அழைப்பிதழ் அடிக்கிற வேலையை பார்க்க போயிட்டேன். மேடம் அங்க சைட்ல இருந்தாங்க.

''இப்போ எட்டு மணிக்கு அழைப்பிதழ கையில வாங்கிட்டு வீட்டுக்கு போனேன். வேலையை பத்தியே மேடம் ரெண்டு மணி நேரம் பேசறாங்க... பேசறாங்க சரி.. ஆனா எந்த முடிவுக்கும் வரமாட்டேங்கறாங்க. ஏன்னா பேசறது ஹாஸ்பிடல் பத்தி. எனக்கும் தெரியாது! அவங்களுக்கும் தெரியாது!

''ஹாஸ்பிடல் கட்டுறதை அதுக்குன்னு ஸ்பெஷலா இருக்குற ஆளுங்க கிட்ட விட்டோம். அவனுங்க நீட்டா பண்ணி குடுத்துட்டாங்க. ஆனா அதுக்கு அப்புறம் என்ன பண்றது?

''ஃபர்ஸ்ட் கட்டடத்தை திறப்போம்! அப்புறம் எல்லாம் பண்ணலாம்ன்னு சொல்றாங்க. கட்டிடத்தை திறக்கறதா பெருசு! ஹாஸ்பிடலை திறக்க வேண்டாமா. அதுக்குன்னு டாக்டர்ஸ்.. மத்த லேப் ஃபெசிலிடீஸ்... என்ன என்ன டிபார்ட்மென்ட்ஸ்... எத்தனை பொருட்கள் வாங்கணும்... யோசிக்கும் போதே தலையை சுத்துது.

''ஒரு கிளினிக்கே எவ்வளவு வேலை பார்க்கணும். இது 500 பெட்டட் ஹாஸ்பிடல். எவ்வளவு பெரிய வேலை. நம்ம கிட்ட பணம் இருந்தாலும் வேலை நல்லபடியா சரியா நடக்க வேண்டாமா.

''ஏதாவது தப்பாச்சுன்னா நீங்க என்னை கொன்னுட மாட்டீங்க.''

''இல்லையில்லை... நீயே சாகற மாதிரி பண்ணிடு வேன்'' என்றான்.

''பாஸ்'' என்றான் பரிதாபமாக.

அவனின் தோளில் தட்டிய கார்த்திக், ''விட்றா... விட்றா.. மேல சொல்லு.''

''யாரையாவது டாக்டர்ஸ் இன்சார்ஜ் போடலாம்னா... யாரை சொன்னாலும் நம்ப மாட்டேங்கறாங்க. எல்லாம் ஃபாஸ்டா நடக்கணும்னு சொல்றாங்க. ஆனா யோசிச் சிட்டே இருக்காங்க. எதுவும் முடிவு எடுக்க மாட் டேங்கறாங்க.

''ஐயா கிட்ட சொன்னா மேடம் சொல்ற மாதிரி செய்ன்னு சொல்றாங்க. மேடம் யாரையும் நம்ப மாட்டேங்கறாங்க. எவ்வளவு பணத்தை இதுல கொட்டி வெச்சிருக்கோம். இன்னும் கொட்டணும் கவலையா இருக்கு பாஸ்.

''இதுல நேர்மையா அட்மிஷன் பண்ணனுமா... அதை விட நேர்மையா இருந்தா நம்ம பெர்மிஷன் எப்படி வாங்குவோம். மெடிக்கல் காலேஜ் அப்ரூவல் வாங்கறதுக்குள்ள எத்தனை பேரை கவனிக்கணும். எவ்வளவு செலவாகும்'' என்றான் கவலையாக.

''இன்னும் நிறைய வேலை இருக்கு பாஸ்'' என்றான் மிகவும் கவலையாக.

''என்ன பண்ணலாம்'' என்று கார்த்திக் அவனை யோசனை கேட்க.

''தெரியலை பாஸ்'' என்றான்.

அவன் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே போன் வர... யாரென்று பார்த்தால் சக்தி.

மணி ஒன்றை தொட்டுக் கொண்டு இருந்தது.

'இவள் எதற்கு இந்த நேரத்தில் இவனுக்கு போன் பண்ணுகிறாள்?' என்று சற்று எரிச்சலாக எண்ணிய கார்த்திக்... ''போனை ஸ்பீக்கர்ல போட்டு பேசுடா'' என்றான்.

செல்வம் ஸ்பீக்கரில் போடவும்...

எடுத்தவுடனேயே சக்தி, ''லிஸ்ட் ரெடியா செல்வம்'' என்றாள்.

''காலையில தானே மேடம் கேட்டீங்க. இப்போ தான் ரெடி பண்றேன்'' என்றான்.

''ஓஹ்! இப்போ மணி என்ன?''

''ஒண்ணு''

''ப்ச்! சாரி! மாத்திரை சாப்பிட்டிட்டு தூங்கினேன். இப்போ முழிப்பு வந்துச்சா டைம் பார்க்காம கூப்பிட்டுட்டேன். காலையில் பார்க்கலாம். லேட் பண்ணிடாத! சீக்கிரம் வந்துடு!'' என்று சொல்லி போனை வைத்தாள்.

உடனே மறுபடியும் அடித்தது. செல்வம் எடுக்கவும்... ''லிஸ்ட் மறக்காம கொண்டு வந்துடு! சொதப்புன தொலைச்சிடுவேன்!'' என்று சொல்லி போனை வைத்தாள்.

கார்த்திக்கிற்கு இப்படி அவள் வேலையை தூக்கி தலையில் போட்டுக் கொண்டு உளப்புவது கவலையாக இருந்தது. தூக்கத்தில் கூட அதே நினைவாக இருக்கிறாள்.

''நிஜமாவே எங்கயாவது தொலைஞ்சு போனா பரவாயில்லைன்னு இருக்கு பாஸ்! ஏதாவது வேலை குடுத்துட்டே இருக்காங்க! என்னால முடியலை! ஏதாவது தப்பாயிடுமோன்ற டென்சன்லயே என்னால சரியா வேலை செய்ய முடியலை. இப்போவே பாருங்க மணி ஒண்ணு! நான் எப்போ லிஸ்ட் பண்ணி, எப்போ தூங்கி எப்படி சீக்கிரம் போவேன்.''

''இதுல காலையில் எட்டு மணிக்கு ஐயாவை கூப்பிட ஏர்போர்ட் போகணும்னு பெரியம்மா சொல்லி அனுப்பினாங்க. கருப்பண்ணன் ஏதோ அவசர

வேலையா ஊருக்கு போயிருக்கார். என்னால முடியலை பாஸ்'' என்றான்.

''என்னடா சும்மா முடியலை, முடியலைன்னு, ஆயிரத் தெட்டு தடவை அதையே சொல்லிட்டு இருக்க... எல்லாம் உன்னால முடியும்'' என்று அவனை சத்தம் போட்டான் கார்த்திக்.

செல்வம் அமைதியாக இருக்கவும், ''இப்போ என்ன லிஸ்ட் தானே வேணும், நான் எழுதறேன் குடு.''

''உங்களுக்கு தெரியுமா?''

''டேய்! மொக்க பீஸ் மாதிரியே பேசாதடா! நான் அய்யாவை விட்டு வந்து கொஞ்ச மாசம் தான் ஆகுது. என்னை விட அவங்க வீட்டை பத்தி தெரிஞ்சவங்க யாரு?''

''சாரி பாஸ்! என் டென்சன் எனக்கு! நீங்க ரெடி பண்ணுங்க! நான் இப்படியே ஒரு ஓரமா தூங்கறேன்!'' என்று அப்படியே கீழே தூங்கினான்.

''டேய்! சோபால படுடா!''

''அதெல்லாம் வேண்டாம்!'' என்று கையை தலைக்கு கொடுத்து வெற்று தரையில் தூங்கினான்.

கார்த்திக் தான் கட்டாயப்படுத்தி ஒரு போர்வையும் தலைகாணியும் கொடுத்தான்.

பின்னர் லிஸ்ட் ரெடி செய்த கார்த்திக்... அந்த இரவு நேரத்தில் பிரபுவை எழுப்பி பேசினான்.

காலையில் செல்வத்தை ஐந்து மணிக்கு உலுக்கி எழுப்பினான் கார்த்திக்.

பதறி எழுந்த செல்வம், ''அய்யாவுக்கு கார் கொண்டு போகணும். லிஸ்ட் எங்க? ஐயா வீட்டுக்கு போய் குடுத்துட்டு... கார் எடுத்துட்டு போகணும்'' என்று பதறி னான்.

அவன் பதறிக் கொண்டு இருக்கும்போதே... தெய்வானை செல்வத்திற்கு போன் செய்து, ''ஐயாவை கூப்பிட் கிளம்பிட்டியா இல்லையா! இன்னும் கார் எடுக்க வரலை!'' என்றார்.

''இதோ வர்றேன் மா!'' என்று ஏகத்துக்கும் செல்வம் பதற... கார்த்திக்கிற்கு அவனை பார்த்தால் பாவமாக இருந்தது.

வேலை செய்பவர்களின் நிலை இது தான்.

''டேய்! ஃப்ரீயா விட்றா!'' என்று அவனை அதட்டிய கார்த்திக். அவனே காரை எடுத்து, ''ஏறுடா போகலாம்'' என்றான்.

''பாஸ்! நீங்களா!'' என்றான் பயந்தவனாக செல்வம். ''மேடம் என்னை தொலைச்சிடுவாங்க பாஸ்.''

''நான் இருக்கேன் வாடா! எனக்கு ஐயாவை பார்க்கணும்! வீட்டுக்கு போக முடியாது! இங்க பார்த்துக்கறேன்!'' என்று சமாதானப்படுத்தி, கிளப்பி சென்றான்.

தலையிட வேண்டாம்... சக்தி செய்வதை செய் யட்டும் என்று தான் நினைத்தான். இதுவரை அவள் செய்ததை குறை சொல்ல முடியாது. ஹாஸ்பிடலின் கட்டுமான பணிகள் எல்லாம் மிகவும் நன்றாக வந் திருந்தது.

ஆனால் இப்படியா இரவிலும் அதையும் இதையும் நினைப்பாள்.

அவளை அப்படி கஷ்டப்பட விட்டு நான் இங்கே தூங்குவதா..??? அதுவும் இரவில் வேலையென்றாலும் செல்வத்தை என்றாலும் அவள் அப்படி தூக்கத்தில் விழிக்கும் வேளையில் அழைத்தது கார்த்திக்கிற்கு பிடிக்கவேயில்லை.

சக்தி அவனை பக்கத்தில் கூட விட மாட்டாள் என்று தெரியும். அதனால் வீரமணியை பார்க்க கிளம்பினான்.

அவள் போ என்று சொன்னால் போய்விடுவானா கார்த்திக்.

சொல் பேச்சு கேட்பவன் கார்த்திக் இல்லைதான்.

ஆனால் இங்கே சொல்லவே மறுப்பவளிடம் என்ன செய்வான்.



# 27

**சென்றதனைக் குறித்தல் வேண்டா**

**இன்றுபுதி தாய்ப்பிறந்தோ மென்று நீவிர்**

**எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு**

**தின்றுவினை யாடியின்புற் றிருந்து வாழ்வீர்;**

**தீமையெலாம் அழிந்து போம், திரும்பி வாரா.**

- பாரதி

வீரமணி கார்த்திக்கை ஏர்போர்டில் செல்வத்துடன் எதிர்பார்க்கவில்லை.

அவரின் நிழல் போல கிட்ட தட்ட பத்து வருடங்கள் இருந்தவன். சக்தி மட்டும் கார்த்திக்கை மிஸ் செய்ய வில்லை. வீரமணியும் அவனை மிகவும் மிஸ் செய்தார்.

அவன் சொல்வதை செய்வதையே பழக்கமாக வைத்திருந்தார். அவராக எதையும் செய்ய மாட்டார். அவ்வளவு நம்பிக்கை அவன் மேல்.

அதனால் அவனால் சொத்தை எளிதாக கைபற்ற முடிந்தது.

அவன் ஏமாற்றி சென்ற போது கூட அவரால் அவன் மேல் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை. காரணம் அவர் அவன் மேல் வைத்த அன்பு ஒரு புறம்... மற்றொரு புறம் அவரின் உயிர் நண்பனின் மகனாக போய்விட்டான்.

இதையெல்லாம் விட முக்கிய காரணம் சொத்து... அவரிடம் பெருகியிருந்த சொத்து. எல்லாம் அவன் மூலம் வந்தது. இப்போது போய் கம்ப்ளைண்ட் அது இது என்று பிரச்சனை செய்தால்... எப்படி இத்தனை சொத்துக்கள் என்று தேவையில்லாமல் கேள்விகள் வந்தால்... சிக்கலாகும்.. அமைதியாக இருப்பது தான் உத்தமம் என்று அறிந்தே அமைதியாக இருந்தார்.

இப்போது எதற்கு இங்கே வந்து இருக்கிறான் என்று யோசனையாக நின்றார்.

''எங்கே நம்ம கார்?'' என்று செல்வத்திடம் கேட்க.

''பாஸ், நான் தான் ஐயாவை கூப்பிடுவேன்னு சொல்லி வந்துட்டார்'' என்று சொல்லியபடி கார்த்திக்கை பார்த்தான்.

இது என்ன புதிதாக என்பது போல பார்த்தார். அவன் கார், ஏறுவதா வேண்டாமா என்ற யோசனையுடன் நின்றார். செல்வம் பக்கத்தில் இருந்தவன் கார்த்திக்கின் ஒரு பார்வையில் தூர போனான்.

''வாங்கய்யா'' என்றான்.

வீரமணி அமைதியாக நிற்க.

''ஹாஸ்பிடல் திறப்பு விழாவுக்கு இன்விடேஷன் எல்லாம் கொடுக்கணும். நிறைய வேலை இருக்கு போல. நான் கொடுக்கட்டுமா'' என்றான் எடுத்த எடுப்பி லேயே.

அவன் பேசிய விதத்தை பார்த்த வீரமணி 'இவ னுக்கும் எனக்கும் சண்டை தானே. இவன் என்ன இப்படி ஒண்ணுமே நடக்காதது போல பேசறான்' என்று வியந்து போனார்.

''அதையெல்லாம் நான் பார்க்கலை. சக்தி பார்க்குறா. அவ தான் சொல்லணும்.''

''அவங்க சொல்ல மாட்டாங்கன்னு தானே நான் உங்ககிட்ட கேட்கறேன். நான் உங்க கூட இருக்கேன்.''

''இனிமே அதெல்லாம் சரிவராது.''

''சரி வந்தாலும்.. வராட்டாலும்... நான் உங்க கூட தான் இருப்பேன்'' என்றான் பிடிவாதமாக.

''நானாடா உன்னை போக சொன்னேன்.''

''ஆமா. நீங்க தான் சொன்னீங்க இவன் என் முகத்து லயே முழிக்கக் கூடாதுன்னு.''

''நீ செஞ்ச வேலைக்கு வேற என்ன சொல்வாங்க. சொத்தை ஏமாத்தி வாங்கியிருக்க.''

''நிஜமா சொல்லுங்க. நான் உங்களை ஏமாத்தி னேனா'' என்றான் பிடிவாதமான குழந்தை போல.

அவன் கேட்ட விதத்தில் வீரமணிக்கு கோபம் வரவில்லை சிரிப்பு தான் வந்தது. இருந்தாலும் அதை முகத்தில் காட்டாமல், ''பின்ன நீ செஞ்சதுக்கு பேர் என்ன.''

அமைதியாக நின்றவன், ஏன் செய்தான், எதற்கு செய்தான், என்று எந்த விளக்கமும் சொல்லவில்லை, மன்னிப்பும் கேட்கவில்லை.

''என்ன பிரச்சனைன்னு சொல்லியிருந்தா உட்கார்ந்து பேசி தீர்த்திருக்கலாமே.''

''சொல்ற மாதிரி இருந்தா உங்ககிட்ட சொல்லாம வேற யார்கிட்ட சொல்ல போறேன். எனக்கு உங்க கூட இருக்கணும்.''

''ம்கூம்! அதெல்லாம் இனிமே சரி வராது!''

''இல்லை நான் உங்க கூட தான் இருப்பேன்! எனக்கு என்ன வேலை செய்யணும்னு தோணுதோ செய்வேன்!''

''வீட்ல அம்மாவோ சக்தியோ விட மாட்டாங்க.''

''நான் வீட்டுக்குள்ள வரலை.''

''எங்க ரோட்ல நிக்க போறியா.''

''ம்! நிக்கறேன்! எனக்கு பிரச்சனையில்லை. நீங்க போன்னு துரத்தினாலும் போக மாட்டேன்'' என்றான் உறுதியான குரலில்.

இந்த கார்த்திக்கின் குரல் சொல்வதை செய்வான் என்று வீரமணிக்கு தெரியப்படுத்தும் குரல்.

அதுவுமில்லாமல் நீ தெருவில் தான் நிற்க வேண்டும் என்று அவர் சொல்லியும் கொஞ்சமும் கூச்சப் படாமல் நிற்கிறேன் என்று சொல்பவனிடம் என்ன சொல்வது.

''வீட்ல பேசுவாங்க உனக்கு தான் கஷ்டம்.''

''எனக்கு ஒரு கஷ்டமும் இல்லை. என்ன பேசினாலும் வாங்கிக்குவேன். நான் தான் வீட்டுக்கு உள்ளயே வரலைன்னு தானே சொல்றேன்.''

''சக்தி ஒத்துக்க மாட்டா.''

''அவங்க ஒத்துக்க மாட்டாங்கன்னு தான் உங்க கிட்ட வந்திருக்கேன். நான் உங்க கூட தான் இருப்பேன்.''

''நீ என்கிட்ட சம்மதம் வாங்குறியா இல்லை தகவல் சொல்றியா.''

''சம்மதம் கொடுத்தா சம்மதம் வாங்குறேன்! இல்லைன்னா தகவல் சொல்றேன்!'' என்றான் சற்றும் அசராமல்.

''தெய்வா என்னை பேசுவாடா.''

''நான் சொன்னேன் அவன் கேட்கலைன்னு சொல்லுங்க.''

''ஆகற காரியத்தை பேசு கார்த்திக்.''

''எல்லாம் ஆகும். நான் உங்க கூட தான் இருப்பேன்.''

''வா! உன் நேரம் நல்லாயில்லை போல. வீணா தெய்வாவும் சக்தியும் உன்னை பேசுவாங்க. பேசுவாங்க என்ன பேசுவாங்க? அவமானப்படுத்துவாங்க சொன்னா கேளு வேண்டாம்.''

''அதெல்லாம் ஏற்கனவே நிறைய வாங்கிட்டேன்!''

''அதெல்லாம் கம்மி தான் உனக்கு தெரியாது... சக்தி ரொம்ப பேசுவா.''

''எல்லா பேச்சும் வாங்கிட்டேன்! ஏன் காபி அபி ஷேகமே வாங்கிட்டேன்!'' என்றான் உணர்ச்சிவசப் பட்டு தன்னை நிரூபிக்கும் பொருட்டு.

''என்ன காபி அபிஷேகமா...'' இது என்ன புதிய விஷயம் என்பது போல பார்த்தார்.

அப்போது தான் உளறிவிட்டதை உணர்ந்தவன், ''மேம் கிட்ட கேட்டுறாதீங்க. அப்புறம் அது இன்னும் பிரச்சனையாகும்'' என்றான்.

''சக்தி அந்தளவுக்கு கோபப்படற அளவுக்கு நீ என்ன பண்ணின'' என்று சரியான இடத்திற்கு வந்தார்.

''ப்ளீஸ் நான் சொன்னதை மறந்துடுங்க. இதை தயவுசெஞ்சு மேடம் கிட்ட கேட்டுடாதீங்க. அவங் களோட இருக்குற பிரச்சனையே எனக்கு போதும்! இப் போதைக்கு புதுசா என்னால எதையும் பார்க்க முடியாது'' என்று நிறுத்தியவன்.

''முடிவா சொல்றேன்! நான் உங்க கூட தான் இருப் பேன். ஏறுங்க!'' என்றான்.

அவனை மறுத்து பேச முடியாத குரல்... மறை முகமாக மிரட்டுகிறானோ என்பது போலவும் தோன் றியது. உரிமையில் பேசுகிறான் என்றும் தோன்றியது.

அவன் பேச்சு உரிமையாய் இருப்பதும் மிரட்டலாய் இருப்பதும் அவர் கையில் தான் என்று புரிந்தவர் அமைதியாக ஏறிக் கொண்டார்.

வீட்டில் அவரை விட்டவன் கேட்டுக்கு உள் போனான். ஆனால் வீட்டுக்கு உள் போகவில்லை. இறங்கி அங் கிருந்த லானில் தான் இருந்தான்.

''வா'' என்ற வீரமணியின் அழைப்பிற்கு, ''இங்கேயே இருக்கேன்'' என்று விட்டான். அவரும் வற்புறுத்த வில்லை.

வீட்டுக்கு வெளியில் யார் நிற்கிறார்கள் என்பது போல சக்தியும் பார்க்கவில்லை தெய்வானையும் பார்க்க வில்லை.

வீரமணி உள்ளே வந்தவுடன் சக்தியும் தெய் வானையும் அவருடன் பேசிக் கொண்டு இருந்தவர்கள்... செல்வம் வரவும், ''லிஸ்ட் ரெடியா'' என்று கேட்ட சக்தி. அதை பார்வையிட்டு கொண்டே... ''அப்பா! இதுல யார் யாரை சேர்க்கணும்'' என்றாள்.

அவரிடம் லிஸ்டை நீட்டும் போது தான் கவனித்தாள், அது கார்த்திக்கின் கையெழுத்து என்பதை.

''லிஸ்ட் யார் எழுதினா செல்வம்'' என்றாள் அதட்ட லாக.

சில நொடிகள் தடுமாறிய செல்வம் உண்மையை சொன்னான். ''பாஸ் தான் எழுதினாங்க.''

அடுத்த நிமிடம், ''மேடம்'' என்று செல்வம் பதற பதற அந்த லிஸ்டை கிழித்து போட்டாள். வீரமணியும் தெய்வானையும் பார்வையாளர்கள் ஆனார்கள்.

''அவன் எப்படி இந்த லிஸ்டை எழுதினான். நீ என்ன பண்ணின?'' என்று கேள்வியை செல்வத்தை நோக்கி அடுக்க போக...

''அவன் வெளில தான் நிக்கறான் சக்திம்மா'' என்றார் வீரமணி.

''என்னப்பா சொல்றீங்க'' என்றாள் அதிர்ச்சியாக சக்தி.

''அவன் தான் என்னை ஏர்போர்ட்ல இருந்து கூட்டிட்டு வந்தான்.''

''என்ன அவன் உங்களை கூட்டிட்டு வந்தானா?'' என்று தெய்வானை கேட்க.

''என்னப்பா? என்ன சொல்றீங்க? மறுபடியும் எதுக்கு அவனை நம்ம விஷயத்துல தலையிட விடறீங்க'' என்றாள் சக்தி.

செல்வத்தை, ''நான் கூப்பிடறேன் நீ கொஞ்சம் வெளில இரு'' என்று வெளியே அனுப்பினார்.

சக்தியையும் தெய்வானையையும் பார்த்தவர், ''உங்க கூட தான் நான் இருப்பேன்னு வந்து நிக்கறான்... நான் என்ன செய்யட்டும்'' என்றார்.

''இது என்னப்பா கதையா இருக்கு. அவன் சொன்னா நீங்க விட்டுடுவீங்களா. முதல்லயே நீங்க அவனை ஒண்ணும் செய்யாம விட்டுட்டீங்க! அதான் தைரியமா மறுபடியும் வந்து நிக்கறான்!''

''என்ன சக்திம்மா அவனை செஞ்சிருக்க முடியும்னு நீ நினைக்கிற!''

இதற்கு சக்தியிடம் பதிலில்லை.

''நம்மளை ஏமாத்திட்டான்னு ஒரு கம்ப்ளைண்டாவது கொடுத்திருக்கலாம் தானே'' என்றார் தெய்வானை.

''குடுத்து? குடுத்து என்ன ஆகும்? ஒண்ணு அவன் ஈஸியா வெளிய வந்துடுவான். இல்லை நம்ம பிரஷர் குடுத்து ப்ரோசீட் பண்ணினம்னா என்ன ஏமாத்தினான்ற கேள்வி வரும். எந்த சொத்தை? வாசுகி குழுமத்தை. அது பெரிய பிரச்சனை. ஏன்னா அதுல வந்த வருமானம் அப்படி.''

''நாமளே பிரச்சனையை இழுத்து விட்டுக்க முடியாது. ஏன்னா இப்போ நம்ம கிட்ட இருக்கிற சொத்தெல்லாம் அது மூலமா வந்தது தான். ரொம்ப சிக்கலாகிடும்.''

''அதுக்காக அவனை மறுபடியும் வீட்டுக்குள்ள சேர்க்க போறீங்களா'' என்றார் தெய்வானை.

''இல்லை! வீட்டுக்குள்ள வரமாட்டான். நான் சொல்லிட்டேன் சக்திக்கும் தெய்வாக்கும் பிடிக்காதுன்னு.''

''அப்போ உங்களுக்கு பிடிக்குமா. நீங்க அவன்கிட்ட நல்லவங்க ஆகிடுவீங்க. எனக்கும் இவளுக்கும் மட்டும் பிடிக்காதுன்னு சொல்வீங்களா'' என்றார் தெய்வானை.

வீரமணி விழித்தார். இந்த அம்மா என்ன பேசுகிறார் என்பது போல அவரை முறைத்த சக்தி, ''அப்படி அவன் நம்மளோட இருக்க வேண்டிய அவசியமென்ன'' என்றாள் வீரமணியை பார்த்து.

''நான் கூப்பிடலை மா அவன் வர்றான்.''

''உங்க மறுப்பு இதுல அதிகமா இருக்குற மாதிரி தெரியலையே'' என்று சரியாக கணித்தாள் சக்தி.

''அதிகமா மறுப்பு இல்லைன்னா காரணம் அவன் சொன்ன பேச்சை கேட்க மாட்டான். நம்மளை விட அவனை அதிகம் தெரிஞ்சவங்க யாரு? செய்யணும்னு நினைச்சா செஞ்சே தீருவான். நான் உங்க கூட தான் இருப்பேன்ங்கறான். சம்மதம்னா ஒகே இல்லைன்னா இது ஒரு தகவல்ங்கறான்.''

''அவ்வளவு பேசறானா அவன்'' என்று சக்தி கோப மாக எழுந்தாள்.

''உட்காரும்மா'' என்று அவளின் கையை பிடித்து உட்கார வைத்த வீரமணி. ''பொறுமையா நான் சொல் றதை கேளு! நாம அவனை வர சொல்லலை அவனா வந்திருக்கான். இருக்கட்டும்.

''இவ்வளவு சொத்தும் கவர்மென்ட் சொன்ன ரூல்ஸ் ஃபால்லோ பண்ணி வந்தது இல்லை. அதை மீறி வந்தது. கார்த்திக் இருக்கான் அவன் பார்த்துக்குவான்ற தைரியத்துல தான் நான் எதையும் கண்டுக்கலை. சொல்லப் போனா எனக்கு இவ்வளவு ரிஸ்க் எடுக்கற அளவுக்கு தைரியம் கிடையாது.

''இப்போ அவன் நம்ம கூட இல்லை. ஏதாவது பிரச் சனை வந்தா யார் பார்ப்பா... எனக்கு இதையெல்லாம் பார்க்குற அளவுக்கு திறமை கிடையாது.''

''நான் பார்க்கிறேன் பா.''

"நீ பார்ப்ப நான் இல்லைன்னு சொல்லலை. ஆனா எனக்கு அதுல இஷ்டமில்லை. தானா பிரச்சனை வந்தா பரவாயில்லை பார்க்கலாம். நானா உன்னை பிரச் சனையில இழுத்து விட முடியாது."

"அப்போ அவன் மாட்டிக்கட்டும்ன்றீங்களா."

"அவன் மாட்ட மாட்டான் மா! அவன் மாட்டவே மாட்டான்! எனக்கு தெரியும்."

"போங்கப்பா! எனக்கு ஒண்ணும் புரியலை."

"அவன் இருந்துட்டு போறான் விடும்மா! ஆனா வீட்டுக்குள்ள வரமாட்டான்!"

"என் வேலைகள்ள அவன் தலையிட கூடாது!" என்று சக்தி சொல்ல ஆரம்பிக்கும் போதே...

"அவன் தான் இன்விடேஷன் கொடுப்பானாம்!"

"அப்பா! என்னப்பா இது? அவன் இஷ்டத்துக்கு என்னால ஆட முடியாது! மறுபடியும் அவனை இங்க நுழைக்காதீங்க."

"அவன்லாம் புலிவாலை பிடிச்ச கதைதான்மா."

"என்னப்பா விட்டா அவனுக்கு ரசிகர் மன்றம் ஆரம்பிக்கற அளவுக்கு பேசறீங்க" என்றாள் எரிச்சலாக.

"அவனை ஒண்ணுமே பண்ண முடியாதா! நம்ம கிட்ட வேலைக்கு இருந்தவன் பா!"

"இருந்தான்மா! நான் இல்லைன்னு சொல்லலை! அவன் நான் பார்த்து வளர்ந்த பையன்.. என்கிட்ட வளர்ந்த பையன் தான்மா.. ஆனா நான் வளர்த்து விட்ட பையன் இல்லை... தானா தான் வளர்ந்தான்...

என்னையும் சேர்த்து அவன் தான் வளர்த்து விட்டான்."

"நான் போய் கூப்பிடலை! அவன் வர்றான் இருக்கட்டும்!"

"எதுக்கு இருக்கணும், இன்னும் நம்மளை ஏமாத்தவா" என்றாள் விடாமல்.

"மா, அவன் நினைச்சிருந்தா எல்லாத்தையும் சுருட்டி இருக்க முடியும். அவன் செய்யலைமா. நமக்கு சொத்துல எந்த குறையும் வைக்கலை. அதையெல்லாம் நாம ஒத்துக்கணும்."

"என்னவோ போங்க! என் வேலைல அவன் தலையிட கூடாது!"

"அதிகம் தலையிடாம நான் பார்த்துக்கறேன்."

"அவன் இன்விடேஷன் குடுக்க கூடாது. நான் அவன் கையில அதை குடுக்க மாட்டேன். நீங்க சரி வர மாட்டீங்க. நான் அவன்கிட்ட பேசிக்கறேன்" என்று சொல்லி விடு விடு என்று வெளியே வந்தாள்.

கூட போக போன தெய்வானையை நிறுத்தினார் வீரமணி. "சண்டை போட்டா போட்டுக்கட்டும் விட்டுடு. ரெண்டு பேருமே யார் பேச்சையும் கேட்காதவங்க."

"ஏய்! என்ன இது புது டிராமா" என்று கேட்டபடி சக்தி கார்த்திக்கின் அருகில் வர செல்வம் அவசரமாக அந்த இடத்தை விட்டு அகன்றான்.

காா்த்திக் சக்தியை எதிர்பார்த்துதான் இருந்தான். "என்ன டிராமா?" என்றான் சீரியஸாக கார்த்திக்கும்.

''ம்! நான் உங்க கூட இருப்பேன்ங்கறது. நான் இன்விடேஷன் குடுப்பேங்கறது.''

''ஜஸ்ட் எ ஹெல்ப்.''

''நான் ஒண்ணும் உங்கிட்ட கேட்கலையே.''

''ஆனா நான் செய்வேன்.''

''நான் உன்கிட்ட இன்விடேஷன் குடுக்க மாட்டேன்.''

''பரவாயில்லை! நான் புதுசா அடிச்சு குடுத்துக் கறேன்.''

''என்ன கொழுப்பா?''

''பின்ன பத்து வருஷம் உங்க வீட்ல சாப்பிட்டு இருக் கேன்ல. கொழுப்பு இருக்காதா'' என்றான் அலட்சிய மாக.

''ப்ச்! பிரச்சனை பண்ணாத கார்த்திக்!'' என்று இறங்கி வந்தாள் சக்தி. ''நல்லவிதமாவே சொல்றேன்! எனக்கு நீ எந்த வேலையும் செய்ய வேண்டாம்.''

''நானும் நல்லவிதமாவே சொல்றேன். செய்யலை. நீங்க செய்யற வேலையை செய்யலை. வேற தான் செய்யறேன்.''

எரிச்சலான சக்தி, ''ஏன்? ஏன் இப்படி பண்ற? இன்னும் எங்ககிட்ட என்ன இருக்கு நீ புடுங்கறதுக்கு'' என்று ஏறக்குறைய கத்தினாள்.

''சொத்தை தானே புடிங்கியிருக்கேன். இன்னும் நீங்கயிருக்கீங்களே'' என்றான் கூலாக.

''அது நான் செத்தா கூட முடியாது.''

''செத்து தான் பாருங்களேன். உங்களுக்கு முன்னாடி உங்களை வரவேற்க நான் அங்க இருப்பேன்'' என்றான் தீவிரமான குரலில்.

அவன் வார்த்தைகளை கேட்ட சக்தி அசையாமல் நிற்க...

செல்வத்தை பார்த்து குரல் கொடுத்தான். ''டேய்! இன்விடேஷன் வாங்கிட்டு வாடா! டைம் ஆகுது. சும்மா வெட்டியா பேசினதையே திரும்ப திரும்ப பேசிக்கிட்டு.''

சக்தி பார்க்க பார்க்க... செல்வம் இன்விடேஷனை தூக்கி கொண்டு வர...

''கார்ல வை'' என்றவன்... ''போ! உங்க மேடமை போய் மத்த வேலையை பார்க்க சொல்லு! நீ அவங்க கூட இரு. முக்கியமான ஆளுங்களுக்கு நான் குடுத்துடறேன்! மீதி இருக்குறவங்களுக்கு நீதான் குடுக்கணும்!'' என்று சொன்னவன் சக்தியை பார்த்து...

''இதோட நம்ம வாய் சண்டையை நிறுத்திக்கணும். சும்மா பேசிட்டே இருக்கக் கூடாது. நானா எதையும் செய்ய மாட்டேன். நீங்க செய்ய நினைக்கறதை தான் செய்வேன்! எந்த வகையிலும் உங்களுக்கு தொந்தரவு குடுக்க மாட்டேன்! நீங்க உங்க வேலையை பாருங்க! நான் என் வேலையை பார்க்கிறேன்.''

''என்னை உங்களால போக வைக்கவே முடியாது. வீணா முயற்சி பண்றதை விட்டுட்டு ஆகற வேலையை பாருங்க'' என்று சொல்லி அவன் கிளம்பினான்.

சக்தி கார்த்திக்கை ஒன்றும் செய்ய முடியாமல் பார்வையாலேயே செல்வத்தை எரித்தாள்.

# 28

**நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்**

**நிறைந்த சுடர்மணிப் பூண்;**

**பஞ்சுக்கு நேர்பல துன்பங்க ளாம் இவள்**

**பார்வைக்கு நேர்பெருந்தீ;**

- பாரதி

கார்த்திக்கின் தலைமீட்டுக்கு பிறகு வேலைகள் இன்னும் சூடு பிடித்தன. கார்த்திக் அழைப்புக்களை பார்க்க ஆரம்பித்தான்.

சக்தி கட்டிட வேலைகயை பார்த்து விட்டு... காலேஜ் வரவும் சிவாவின் தொலைபேசி அழைப்பு...

''சொல்லுங்க சிவா.''

''சக்தி உங்களை பார்க்கணுமே எங்க இருக்கீங்க. இப்போ பார்க்கலாமா?''

''வாங்க காலேஜ்ல இருக்கேன்.''

''என்னோட என் மச்சான் பிரபுவும் வர்றாங்க.''

'பிரபுவா' என்று மனதிற்குள் நினைத்தவள், அவனை மனதில் கொண்டு வர நினைத்து முடியாமல்... ''ம், கூட்டிட்டு வாங்களேன்'' என்றாள்.

சொன்ன ஒரு அரைமணி நேரத்திற்கு எல்லாம் சிவாவும் பிரபுவும் அங்கே இருந்தனர்.

பிரபுவை பார்த்ததும் இப்போது சக்திக்கு நன்கு அடையாளம் தெரிந்தது. ஏர்போர்ட்டிலும் பார்த்து இருக்கிறாள், திருமணத்திலும் பார்த்து இருக்கிறாள்.

''வாங்க'' என்று உபசரித்து அமர வைத்தவள்...

''எப்படி இருக்கீங்க சிவா? திருமண வாழ்க்கை எப்படி போகுது? சுமித்ரா எப்படி இருக்காங்க...? எங்கயும் அவங்களை ஊருக்கு கூட்டிட்டு போகலையா?'' என்று அவள் கேட்க...

''இருங்க எழுதிக்கறேன்'' என்றான்.

''எதை?''

''இவ்வளவு கேள்வி கேட்டா முதல்ல கேட்ட கேள்வியெல்லாம் மறந்து போயிடும் அதான்.''

சக்தியின் முகத்தில் புன்னகை விரிந்தது. ''இருங்க, டைப் பண்ணி குவஷன் பேப்பர் குடுக்க சொல்றேன்'' என்றாள்.

''காலேஜ் ஓனர்ன்னு நிரூபிக்கறீங்க...''

இரண்டு பேரும் மிகவும் சகஜமாக பேசிக் கொள்வதை பிரபு ஆச்சர்யத்துடன் பார்த்தான்.

அதற்குள் வாசலில் இருந்த அட்டெண்டர் இருமுறை வந்து எட்டி பார்க்க...

''என்ன'' என்றாள் சக்தி.

''ஒரு அர்ஜென்ட் வேலை உங்க கிட்ட சைன் வேணும்ன்னு பிரின்சிபல் சார் கேட்க சொன்னார்.''

''வாங்கிட்டு வா.''

''அவர் நேர்ல வரவான்னு கேட்க சொன்னார்...''

''நாங்க வெயிட் பண்றோம் சக்தி'' என்று சிவா எழ...

''நீங்க இருங்க!'' என்று சொன்னவள், ''ஒரு பைவ் மினிட்ஸ்ல நானே வந்துடறேன்'' என்று எழுந்து போனாள்.

பிரபுவை சக்தியின் செயல் கவர்ந்தது. அவர்களையும் வெளியே போக சொல்லவில்லை. அவர்கள் முன் னிலையில் பிரின்சிபலை கூப்பிட்டு பேசி அவருக்கும் தர்ம சங்கடம் கொடுக்கவில்லை. முதலாளி என்ற கர்வம் இல்லாமல் அவளே எழுந்து உடனே சென்றது ஆச்சர்யத்தை கொடுத்தது.

ஆனால் ஏர்போர்டில் அவளின் நடவடிக்கையை பார்த்தவன் அல்லவா, குழம்பினான்.

''உங்களுக்கு ரொம்ப நல்லா இவங்களை தெரியுமா'' என்றான் சிவாவை பார்த்து...

''ம்! தெரியும்! பழகறதுக்கு ரொம்ப இனிமையான பொண்ணு... எல்லோரோடையும் நல்லா சட்டுன்னு பழகிடுவாங்க. ஆனா இவங்க பாடி கார்ட் ஆளுங்களை அப்படியே ஃபில்டர் பண்ணி இவங்களை விட்டு தூர நிறுத்திடுவான். ரொம்ப சில பேரை அவனுக்கு சரின்னு தோன்ற ஆளுங்களை தான் பழக விடுவான்.''

''மொதல்ல என்னை கூட பேசவே விடமாட்டான். அப்புறம் கொஞ்ச நாளைக்கு பிறகு தான் அனுமதிச் சான். இவங்களும் அவனை மீறி எதுவும் செய்ய மாட்டாங்க.''

''பாடி கார்டா, யார் அது?''

''கார்த்திக்... வீரமணி அய்யாவோடையும் சக்தி கூடவும் நிழல் போல கூடவே தான் இருப்பான்.''

பிரபு யோசனையில் ஆழ்ந்தான்.

''ரொம்ப கோபம் வரும் போல இவங்களுக்கு.''

''என்ன கோபமா? சக்திக்கா? சான்சே இல்லை. நான் இதுவரைக்கும் சக்தி கோபப்பட்டு பார்த்ததே இல்லை.''

சக்தியின் கோபத்தை ஏர்போர்டில் பார்த்தவன் தானே பிரபு. யோசனைகள் ஓடும்போதே சக்தி வந்துவிட்டாள்.

அவள் வந்தவுடனேயே சிவா நேரே விஷயத்திற்கு வந்தான். ''சக்தி! பிரபு உங்களோட பேசணுமாம்'' என்று...

''என்ன?'' என்பது போல சக்தி பார்க்க...

பிரபுவிற்கு தயக்கமாக இருந்தது. சக்தியை எப்படி அழைப்பது என்று. மொட்டையாகவே பேச்சை ஆரம் பித்தான்.

''நான், டாக்டர் பிரபு!'' என்று அறிமுகப்படுத்திக் கொண்டு பேச்சை ஆரம்பித்தான்.

அவன் டாக்டர் என்பது சக்தியின் கவனத்தில் இல்லை. ''ஓஹ்! நீங்க டாக்டரா!'' என்று ஆர்வமாக கேட்டாள்.

''ம்! யு ஜி இங்க சென்னையில பண்ணினேன். பீ ஜி யு எஸ் ல பண்ணினேன்...''

''எதுல பண்ணியிருக்கீங்க?''

"ஜெனரல் மெடிசின்."

"என்ன விஷயம்? சொல்லுங்க!" என்றாள்.

"ஹாஸ்பிடல் கட்டிட்டு இருக்கீங்க போல. அதை மெயின்டைன் பண்ண நல்ல மெடிக்கல் காலேஜ் அட்மினிஸ்ட்ரேடிவ் நாலெட்ஜ் இருக்குற மாதிரி டாக்டர்ஸ் பார்க்க சொன்னான் கார்த்திக்."

"ஆரம்பிச்சிட்டானா அவன் வேலையை" என்று சலிப்பாக இருந்தது சக்திக்கு. இருந்தாலும் முகத்தில் காட்டவில்லை. மேலே சொல்லு என்பது போல பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அதான் பார்க்கட்டுமா? வேண்டாமான்னு? உங்களை கேட்க வந்தேன்."

"உங்களுக்கு இஷ்டமிருந்தா பாருங்க! இல்லை விட்டுடுங்க! என்னை ஏன் கேட்கறீங்க. கார்த்திக் தானே சொன்னான்."

"அது.. அது... கார்த்திக்கும் உங்களுக்கும் பிரச்சனை. அதான் பார்க்கிறதா வேண்டாமான்னு" என்று பிரபு இழுக்க.

"எனக்கு அவனுக்கு ஆயிரம் பிரச்சனை இருக்கும். அதை எதுக்கு நீங்க கன்சிடர் பண்றீங்க. கார்த்திக்காக உங்களுக்கு பண்ணனும்னு தோணினா பண்ணுங்க. இல்லைன்னா விட்டுடுங்க."

"கார்த்திக்காக நான் என்ன வேணாலும் பண்ணு வேன்றது வேற விஷயம். இது அப்படி கிடையாது. நீங்க தானே அப்பாயின்ட் பண்ண போறீங்க. அவன்

சொன்னான்னு நான் கூட்டிட்டு வந்துட்டு. அப்புறம் வேண்டாம்னு சொன்னா நல்லா இருக்காது. எனக்காக நான் சொல்லலை. அவ்வளவு எக்ஸ்பீரியன்ஸ் இருக்குற ஒரு டாக்டரை நம்ம கூட்டிட்டு வந்துட்டு அப்புறம் போன்னு சொல்ல முடியாது.. அதான்.''

அவன் சொல்வதில் இருந்த நியாயத்தை புரிந்தவள்... ''நாங்களே பேப்பர்ல நாளைக்கு காலையில டாக்டர்ஸ் வான்டட் குடுக்கலாம்னு இருந்தோம்'' என்றாள்.

''என் பிரண்ட்டோட அப்பா கவர்மென்ட் மெடிக்கல் காலேஜ்ல டீன்னா இருந்து இப்போ தான் ரிடையர் ஆனார். அவர் கிட்ட பேசட்டுமா'' என்றான்.

''பேசுங்களேன்! எனக்கு ஒண்ணும் அப்ஜெக்ஷன் இல்லை! எனக்கு தேவை திறமையானவங்க! அதே சமயம் நேர்மையானவங்க! அதுல எந்த காம்ப்ரமைசும் பண்ண மாட்டேன்.''

''என்ன எல்லோரும் சாலரியா குடுக்கறாங்களோ, நான் அதை விட அதிகமா குடுக்கறேன். எனக்கு தேவை திறமை, நேர்மை, அதை விட பேஷண்ட்ஸ் அப்ரோச் பண்ற மாதிரி இருக்கணும். கனிவா பேசணும். எரிஞ்சு எரிஞ்சு விழக் கூடாது. இப்படி சில கண்டிஷன்ஸ் மட்டும் தான்.''

''எந்த டாக்டரும் எரிஞ்சு விழணும்னு கட்டாயமா வெச்சிருக்க மாட்டாங்க. வேலை பளு, ஓய்வில்லாம தொடர்ந்து நோயாளிகளை பார்க்கும் போது... சில சமயம் அப்படி ஆகறது உண்டு, அவ்வளவு தான்!'' என்று தன் இனத்தை விட்டு கொடுக்காமல் பேசினான் பிரபு.

''உங்களுக்கு உங்க ப்ரச்சனைங்க பிரபு. அதை நான் தப்புன்னு சொல்லலை! ஆனா ஒரு சாதாரண மனித னோட பார்வையில இருந்து தான் பேசறேன். எனக்கு எப்பவும் இதுவரைக்கும் வி ஐ பி ட்ரீட்மெண்ட் தான்... ஆனா நான் என்னை வெச்சு அடுத்தவங்களை பார்க்க முடியாது.''

''என்னோட ஹாஸ்பிடலுக்கு வர்ற ஆளுங்க எப்படி திரும்ப போனாலும்... உதாசீனத்தால வர்ற வருத்தத்தை சுமந்து போகக் கூடாது. இது நிஜமான ஒரு ப்ரீ ஹாஸ்பிடலா இருக்கணும்.''

''எனக்கு இதுல லாபமே அவசியமில்லை'' என்றாள் தெளிவாக.

''சொல்றது ஈசி... ஆனா செயல்படுத்தறது ரொம்ப கஷ்டம். ஹாஸ்பிடல்னா சாலரி மட்டும் கிடையாது. அதை மெயின்டைன் பண்றதுக்கே நிறைய செலவாகும். எல்லாமே ஃப்ரீனா கண்டிப்பா முடியாது. மே பீ உங்களுக்கு மெடிக்கல் ஃபில்டை ஒரு பார்வையாளரா தான் தெரியும். இன் அண்ட் அவுட் தெரியாது.''

''எஸ், நீங்க சொல்றது சரிதான். ஆனா எத்தனையோ அநியாயமான விஷயங்கள்னால நாம கஷ்டப்படும் போது நியாயமான விஷயத்துக்கு கஷ்டப்பட்டா என்ன... யோசிச்சு பாருங்க! ஒரு கோடி ரூபாய்க்கும் மேல செலவு பண்ணி ஒரு யு ஜியும் பீ ஜியும் முடிக்கிற டாக்டர் கிட்ட நீ இலவசமா சிகிச்சை பண்ணுன்னு சொல்றது அபத்தம்... அவங்க போட்ட பணத்தை எடுக்கணும்னு தான் நினைப்பாங்க.''

''அதனால நான் இங்க கண்டிப்பா கவர்மென்ட் காலேஜ்ல என்ன பீஸ்ஸோ அதுக்கு மேல ஒரு பைசா கூட வாங்க மாட்டேன். கண்டிப்பா மதிப்பெண்கள் அடிப்படையில் மட்டுமே செலக்ஷன். நாம ஒரு விஷயத்தை நியாயமா செய்யும் போது தான் அடுத்தவங்க கிட்ட அதை எதிர்பார்க்க முடியும்.''

''இப்படி படிச்சு வர்ற டாக்டர்ஸ்லயும் ஒரு சில பேர் அப்படி முழுசும் சேவை மனப்பான்மையோட இருந்தாலே பெரிய விஷயம். அதை நான் இப்போதைக்கு செஞ்சாலே போதும்'' என்றாள்.

''ப்ராக்டிகலா இது ரொம்ப கஷ்டம்! இதையெல்லாம் செய்யறதுக்கு பணம் வேண்டாமா...?''

''இப்போதைக்கு அது எனக்கு பிரச்சனையில்லை! ஆனா பிரச்சனை வரும்னு நான் பீல் பண்ற பட்சத்துல... வேற ஏதாவது லாபம் வர்ற தொழிலா ஆரம்பிச்சு அதை இதுல போடறேன்.''

பிரபு ஏதோ பேச வரவும்... தடுத்து பேசியவள்... ''இப்படி எல்லாம் பேசறவங்களை பைத்தியக்காரங்க, பொழைக்க தெரியாதவங்க இப்படி பல பெயர்னால சொல்லப் படுவோம் தான்...''

''இருந்தாலும் எடுத்த உடனே எந்த வேலையும் முடியாதுன்னு சொல்ல கூடாது. நம்மளால முடிஞ்ச வரைக்கும் ஒரு முயற்சியாவது பண்ணி பார்க்கணும் இல்லையா...''

''நீங்க சொல்ற மாதிரி நடைமுறை சிக்கல்கள் இருக்கு. ஆனா என்னோடது hard and fast rules கிடையாது.

நான் இப்படிதான்னு நானும் இருக்க மாட்டேன். அடுத்தவங்களையும் இருக்க சொல்ல மாட்டேன். அடுத்தவங்களை பாதிக்காத சில மீறல்கள் வரும்போது பார்த்துக்கலாம்'' என்றாள்.

பிரபு அவளின் பேச்சுக்களினால் வாயடைத்து போய் நின்றான். அவனுடைய சக்தியை பற்றிய கணிப்பு... ஒரு பணக்கார, மரியாதை தெரியாத, எதையும் யோசிக்காமல் பேசுகிற பெண்ணாகவே சித்தரித்து இருந்தான்.

அன்று ஏர்போர்ட்டில் அவன் கண்ட சக்தி அப்படி... கார்த்திக்கிடம், நீ எனக்கு மாப்பிள்ளையா வர்றியா என்று கேட்டது... அவன் மேல் காபியை ஊற்றியது... இந்த மாதிரி செயல்கள் அவளை அப்படித்தான் உருவகப்படுத்தி இருந்தன.

அது மட்டுமில்லாமல் சக்தி காபியை ஊற்றிய போது எப்படி இப்படி கார்த்திக் வாங்கிக் கொண்டு நிற்கிறான். ஒரு அப்பு விட வேண்டும் போல ஏன் தோன்றவில்லை. எதற்கு இவன் இப்படி பின்னால் கெஞ்சிக் கொண்டு போகிறான் என்பது போல தான் அப்போது தோன் றியது...

இப்படிப்பட்ட பெண்ணிடம் கெஞ்சிக் கொண்டு நிற்பதில் தப்பில்லை என்று இப்போது தோன்றியது.

கார்த்திக் அவனிடம் இரவு பேசிய போது கூட.... இது எதுக்குடா நமக்கு இந்த தொல்லை என்பது மாதிரி தான் இருந்தான். கார்த்திக்கிற்காக வந்தான். இப்போது சக்தியின் பேச்சு அவனை மிகவும் ஆகர்ஷித்தது. அவளை வியந்து பார்த்தான்.

''எதுக்குடா இப்படி ஒரு பேச்சுன்னு பார்க்கறீங்களா. நீங்க இப்போதான் உங்க வேலையை ஆரம்பிக்க போறீங்க. கண்டிப்பா இலவச சேவை செய்யுங்கன்னு சொல்ல மாட்டேன். ஆனா குடுக்க வசதியில்லாத மனுஷங்க கிட்ட கொஞ்சம் கருணை காட்டலாமேன்னு தான்'' என்றாள்.

இவ்வளவு நேரமாக சக்தி பேசியதை வாய் திறந்து கேட்டிருந்த சிவா... ''சூப்பர்ங்க சக்தி'' என்று மெதுவாக கை தட்டினான். ''நீங்க அரசியல்ல நுழையலாம். இப்படி சிந்தனை இருக்குறவங்க நம்ம நாட்டுக்கு தேவை'' என்றான் அவனின் வாய் முகூர்த்தம் பலிக்க போவது தெரியாமல்.

பிரபு வேறு டாக்டர்சை இங்கே கூப்பிட்டுக் கொண்டு வந்து விடுவதே தேவையில்லாத வேலை போல நினைத்தவன். இப்போது சக்தியை பார்த்து, ''எனக்கு உங்க ஹாஸ்பிடல்ல வேலை செய்ய ஒரு வாய்ப்பு குடுப்பீங்களா மேடம்! இந்த மாதிரி சிந்தனையுள்ளவங்க கீழ வேலை பார்க்க ஆர்வமா இருக்கேன்'' என்றான்.

''நிச்சயமா, அப்படின்னு சொல்ல தான் ஆசை! ஆனா நான் சில பேசிக் கிரைட்டீரியா வெச்சிருக்கேன். ரொம்ப பேசிக்ஸ். அதை ஃபுல்பில் பண்ணுனீங்கன்னா நாளைக்கே கூட வந்துடுங்க. இங்க எங்களுக்கு ஒரு டாக்டர் கூட இருந்தா பரவாயில்லை தான். ஏன்னா நீங்க சொல்ற மாதிரி எனக்கு இன் அண்ட் அவுட் தெரியாது'' என்றாள்.

''என்ன பேசிக்ஸ் அது?''

செல்வத்தை இன்டர் காமில் அழைத்தவள், அவன் வந்ததும், ''சார்! நம்ம கிட்ட ஜாயின் பண்ண போறார். நம்ம ரிக்குவயர்மென்ட்ஸ் சொல்லுங்க'' என்றாள்.

இருவரும் பேசிக் கொள்வதை வேடிக்கை தான் பார்த்தாள். தலையிடவில்லை. ''சார்! இப்போவே கூட சேரட்டும்'' என்றான் செல்வம்.

''நீங்க சொன்ன டாக்டர்ஸ் எங்க இருக்காங்க!'' என்றாள்.

''சென்னை.''

''எப்போ பேசறீங்க?''

''போன்ல மரியாதையா இருக்காது! நேர்ல போகணும்! நான் அதை என்னன்னு பார்க்கிறேன்'' என்றான்.

''ஒகே சக்தி! நாங்க கிளம்பறோம்!'' என்று எழுந்த சிவா, ''என்னோட மேரேஜ்க்கு எனக்கு ஒரு ட்ரீட் கொடுக்கணும்னு ஆசை, நீங்க வரணும்.''

''இப்போ முடியாதே! ரொம்ப வேலை! ட்ரீட்ன்னு வந்துட்டு அங்கயும் போனை பிடிச்சிட்டு பேசிட்டே இருக்குறதுல எனக்கு இஷ்டமில்லை. இந்த திறப்பு விழா முடியறவரைக்கும் நான் பிசி. இன்னும் ஒரு வாரம் இருக்கு.''

''ஒரு வாரம் தானே. ஒண்ணும் பிரச்சனையில்லை! நாம அதுக்கப்புறம் போகலாம்! ஆனா அப்போ எந்த காரணமும் சொல்லக் கூடாது!'' என்று சொல்லியபடி சிவாவும் பிரபுவும் விடை பெற்றனர்.

விடை பெறும் முன், "நல்ல சிந்தனைகள் உங்களுக்கு" என்று பிரபு புகழ...

"அது ஒண்ணும் பெரிய விஷயம் இல்லை. நிறைய பெண்களுக்கு இது இருக்கறது தான். என்ன அவங்களுக்கு வாய்ப்பு கிடைக்கலை! எனக்கு கிடைச்சு இருக்கு! அவ்வளவு தான்!" என்று இன்முகத்தோடு விடை கொடுத்தாள்.

"Beautiful smile" என்று சொல்ல வேண்டும் போல பிரபுவிற்கு தோன்றியது. சாதாரண நேரமாக இருந்தால் நிச்சயமாக சொல்லியிருப்பான். இப்போது அவளுக்கு கீழே வேலை பார்க்க போகிறான் என்பதால் சொல்லாமல் வெளியே வந்தான்.

பிரபுவின் நினைவு முழுக்க சக்தியிருந்தாள். நிஜமாகவே அவள் சொல்லும் பெண் மட்டுமல்ல செயலிலும் காட்டுவாள் என்றே தோன்றியது.

அவன் அந்த சிந்தனையோடு இருக்கும் போதே... கார்த்திக் அவனை அழைத்தான்.

"சொல்லு கார்த்திக்"

"நீ எதுக்கு சக்தியை பார்த்த."

"சக்தியை நான் பார்த்தது உனக்கு எப்படி தெரியும்?"

"நீ எத்தனை மணிக்கு உள்ள போன... இப்போ எத்தனை மணிக்கு வெளிய வந்த எல்லாம் தெரியும். சக்தியோட ஒவ்வொரு அசைவும் எனக்கு தெரிய வரும். அதில்ல இப்போ பேச்சு! அவங்களை எதுக்கு பார்த்த."

"நீ சொன்ன வேலையை செய்யறதுக்கு முன்னால அவங்க கிட்ட கேட்க வேண்டாமா?"

"சக்தி கிட்ட எதுக்கு கேட்கணும்?"

"உனக்கும் அவங்களுக்கும் ப்ரச்சனைன்னு எனக்கு தெரியும். அப்புறம் பார்க்காம..."

"எனக்கும் அவங்களுக்கும் ஆயிரம் பிரச்சனை இருக்கும்! அதுக்கு உனக்கு என்ன வந்தது! செய்ய முடியும்னா முடியும்னு சொல்லு! முடியாதுன்னா முடியாதுன்னு சொல்லு!" என்றான் சண்டை பிடிப்பவன் போல்...

"புரியாம பேசாத! நான் டாக்டரை கூட்டிட்டு வந்த பிறகு சக்தி வேண்டாம்னு சொல்லிட்டா. அவருக்கு மரியாதையில்லாம போயிடாது."

"அப்படி எல்லாம் சக்தி பண்ண மாட்டாங்க."

"பண்ண மாட்டாங்கன்னு எனக்கு என்ன ஜோசியமா தெரியும். நான் பார்க்கிறப்போல்லாம் உன்கூட சண்டை போட்டாங்க! அப்புறம் எப்படி நம்பி வேலையை செய்யறது!"

"விடு, சக்தி என்ன சொன்னா."

"சரின்னு சொல்லிட்டாங்க! நானும் நாளையில் இருந்து ஜாயின் பண்றேன்."

"நீயா? நான் சொன்னப்போ அங்கல்லாம் வேலை பார்க்க மாட்டேன்னு சொன்ன. எவ்வளவு நேரமா உன்னை கன்வின்ஸ் பண்ணினேன். நீ ஒத்துக்கவே யில்லையே" என்று குறை பட்டான்.

"அப்போ எனக்கு சக்தியை பெர்சனலா தெரியாதே! இப்போ எனக்கு அவங்க கிட்ட வேலை பார்க்கணும் போல இருக்கு. Such an admirable personality" என்றான் உண்மையாக.

இது என்னடா புது வம்பு. பெர்சனலா தெரியுமா என்று நொந்து கொண்டான் கார்த்திக்.

"என்னடா அப்படி ஒரு மணி நேரத்துல பெர்சனலா தெரியும்" என்றான் கார்த்திக். அவன் குரலில் அப் பட்டமான பொறாமை.

"ம்! எவ்வளவு பெர்சனலாவா. நல்ல சிந்தனைகள் இருக்கு! அதை செயல்லையும் காட்டணும்னு பிரிய படறாங்க! அது எனக்கு பிடிச்சு இருக்கு. அதனால அவங்களோட வேலை செய்ய பிரியப்படறேன்."

"இதுல என்ன பெர்சனல்?"

"அதுவா கார்த்திக்கும் எனக்கும் ஆயிரம் இருக்கும்! நீ அதுல தலையிடாத... உன் வேலையை மட்டும் பார்ன்னு சொன்னாங்க! அந்தளவுக்கு பெர்சனலா தெரியும்!" என்றான் பிரபு கார்த்திக்கின் மனம் புரிந்தவனாக.

கார்த்திக்கிற்கு அவனையறியாமல் பெருமூச்சு கிளம்பியது.

கூட்டத்திலே கோவில் புறா யாரை இங்கு தேடு தம்மா...

# 29

**துன்பமில்லாத நிலையே சக்தி**

**தூக்க மிலாக்கண் விழிப்பே சக்தி**

**அன்பு கனிந்த கனிவே சக்தி**

**ஆண்மை நிறைந்த நிறைவே சக்தி**

- பாரதி

சக்தியின் ஹாஸ்பிடல் திறப்பு விழா மிகவும் கோலா கலமாக நடைபெற எல்லா விஷயங்களும் கை தேர்ந்து நடந்தது. ஆம், அவள் பின் பின் என்று வரிசைப்படுத்தி வைத்திருந்த வேலைகள் எல்லாம் சேர்ந்தே ஒரு வடிவம் பெற ஆரம்பித்து.

திறப்பு விழாவோடு ஹாஸ்பிடல் ஒரு யூனிட்டும் செயல்பட ஆரம்பிக்க வேலைகள் நடந்தன. பிரபு சொன்ன டாக்டர் பெரியநாயகம் ஹாஸ்பிடல் பொறுப்பை எடுத்துக் கொள்ள வேலைகள் மிகவும் ஜரூராக நடை பெற்றன.

பெரியநாயகம் மிகவும் நேர்மையான மனிதர். தான் செய்யும் டாக்டர் தொழிலை தெய்வம் என்று நினைக் கும் மனிதர். முக்கியமாக முன்னால மிகுந்த மரியாதை கொடுக்கப்பட்டு பின்னால், ''இவனும் பொழைக்க மாட்டான். நம்மளையும் பொழைக்க விட மாட்டான்.

எப்பவும் நீதி நேர்மை நியாயம்னு பேசிக்கிட்டு'' என அடையாளம் காணப்பட்டவர்.

பிரபுவும் அவருக்கு உதவியாக இருந்தான். அவர்கள் மட்டுமல்லாது இன்னும் நான்கைந்து டாக்டர்களும் அன்றே பொறுப்பெடுத்துக் கொண்டனர்.

சக்தியை மீறி எதுவும் நடக்கவில்லை. அவள் என்ன செய்ய வேண்டும் என்று நினைத்தாளோ அதை ஒழுங்குபடுத்தி மற்றவர் கவனத்தை கவராமல் அவள் பின் நின்று நடத்திக் கொடுத்தான் கார்த்திக்.

சக்தியால் இதை தனியாகவும் செய்திருக்க முடியும் தான். ஆனால் நிறைய டென்சனாகியிருப்பாள். செய்ய வேண்டிய வேலைகளும் நேரம் எடுத்திருக்கும்.

இப்போது வேலைகள் அதன் அதன் பாட்டிற்கு நடந்தன. சக்தியும் உற்சாகமாக இருந்தாள். ஆனால் அன்று வீட்டில் பார்த்து இன்விடேஷன் எடுத்துக் கொண்டு போன கார்த்திக் அதன் பிறகு அவள் கண் ணில் படவேயில்லை.

அவன் யார் யாரை அழைத்திருக்கிறான் என்ற விவரம் கூட தெரியவில்லை. அதன் பிறகு அவன் வீர மணியையும் பார்க்கவில்லை. அவருடன் மட்டும் அவ்வப்போது தொலைபேசியில் பேசிக் கொண்டான்.

யாரிடம் வேலை சொல்கிறான். எப்படி நடத்திக் கொள்கிறான் என்று சக்திக்கு தெரியவில்லை. ஹாஸ் பிடல் வேலைகளை பொருத்தவரை பிரபுவிடம் எல்லா வேலைகளையும் சக்தி தான் சொன்னாள். என்ன செய்ய

வேண்டும் என்ற யோசனைகளையும் பிரபு சக்தியிடம் நேரடியாக சொன்னான்.

பெரியநாயகம் வந்த பிறகு அந்த அவசியம் கூட இல்லை. பிரபுவும் அவருமே பேசிக் கொண்டனர். அவர்கள் முடிவெடுத்த பிறகு செயல்படுத்தும் முன் அவளின் கவனத்திற்கு வந்தது. அதற்கான முழு சுதந்திரத்தையும் பெரியநாயகத்திற்கும் பிரபுவிற்கும் கொடுத்து இருந்தாள்.

பிரபுவை விட சீனியர் டாக்டர்ஸ் நிறைய பேர் வருவார்கள். அப்போது எதுவும் பிரச்சனை வந்து விடக்கூடாது என்பதற்காக பிரபு ஒரு மானேஜ் மெண்ட்டின் ஆளாகவே சக்தியால் அடையாளம் காட்டப் பட்டான்.

விழா ஏற்பாடுகள் முழுவதும் கார்த்திக்கினதே. கட்சி தலைமை வேறு வருவதால் விழா சிறப்பாக இருக்க வேண்டும் என்று வீரமணி பிரியப்பட செலவுகள் மிகவும் அதிகம் ஆகின.

நிறைய கட்சி காரர்களின் தலையீடு வேறு. எல்லோரையும் திருப்தி படுத்த வேண்டியிருந்தது. கூட்டம் சேர்ப்பதற்காக... ஆட்களும் பணம்... அவர்களுக்கு பிரியாணி, தண்ணி என்று விழாவையும் மீறி ஏதோ கூட்டம் போல எக்கச்சக்க செலவு.

அவர்கள் தங்க மண்டபம் பார்த்து கொடுத்து... வரும் வி ஐ பி க்கள் தங்க ரூம் போட்டு கொடுத்து...

சக்தி கொடுக்கிறாள் என்று வீரமணி நினைத்திருக்க... வீரமணி கொடுக்கிறார் என்று சக்தி நினைத்திருக்க... கொடுத்தது எல்லாம் கார்த்திக்.

எல்லா வேலைகளையும் அவனே சொல்வதால் எல்லோரும் பணத்திற்கு அவனிடமே சென்று நின்றனர். கார்த்திக்கும் கணக்கு பார்க்கவில்லை. பணத்தை தண்ணீராய் செலவழித்தான்.

விழா அன்று காலை. வீரமணி கட்சி தலைமையை அழைக்க சென்று விட. சக்தி மட்டும் தான் தனியாக முதலில் வந்தாள். தெய்வானை சிறிது நேரம் கழித்து வருவதாக இருந்தது.

ஒரு கிலோமீட்டர் முன்பிலிருந்தே கட்சித் தலைமையின் வரவேற்பிற்கு ஆட்கள் நின்று கொண்டிருந்தார்கள். மிகவும் பிரமாண்டமான பேனர்கள். பேண்ட் வாத்தியம். அது இது என்று தூள் கிளப்பியிருந்தார்கள்.

நான் நேற்று போகும்போது கூட இதெல்லாம் இல்லையே என்ற யோசனையோட சக்தி காரில் அதை கடந்தவள், அவள் ஹாஸ்பிடலுக்கு அருகில் வர வர அங்கே இருந்த கூட்டத்தை பார்த்து மனதிற்குள் சற்று படபடப்பாக இருந்தது.

இதுமட்டுமல்லாமல் எத்தனை பேர் வந்தாலும் உண்ணக் கூடிய பிரமாண்ட விருந்து. அது ஒரு பக்கம் நடந்து கொண்டே இருந்தது.

''கருப்பண்ணா! என்ன இவ்வளவு கூட்டம்?'' என்று சக்தி கேட்க.

''அரசியல்வாதிங்க வந்தாலே, அப்படிதான்மா!'' என்றார்.

பந்தோபஸ்திற்கு நின்ற போலீஸ்காரர்கள். இவர்கள் காரையும் யார் எவர் என்று விசாரித்தே உள்ளே அனுமதித்தனர். சற்று டென்ஷனாக இருந்தது சக்திக்கு.

ஹாஸ்பிடல் வாசலில் கருப்பண்ணன் கார் நிறுத்த. சக்தி கதவை திறக்க முற்படும் முன்பே கதவு திறந்தது. கதவை திறந்தவன் கார்த்திக்.

அவள் இறங்குவதற்காக கதவை திறந்து பிடித்து வைத்திருக்க... கார்த்திக்கை கண்டதும் இருந்த படபடப்பு டென்ஷன் எல்லாம் மாயமாய் மறைந்தது சக்தியிடமிருந்து.

''என் கண்ல படாத'' என்று அவ்வளவு வெறுப்பாக கார்த்திக்கிடம் சொன்ன சக்தி... இப்போது அவன் கண்ணில் பட்டதும் தான் நிம்மதியாக உணர்ந்தாள்.

சக்தி இறங்கவும்... அப்போது தான் அவர்களை பார்த்த செல்வம் விரைந்து வந்தான்.

கார்த்திக் செல்வத்தை பார்த்து, ''மேம் கூட்டிட்டு போய் உட்கார வை. இங்க எல்லோரும் வந்த பிறகு சொல்றேன். அப்போ அவங்களை வரவேற்க வந்தா போதும். பொக்கே இவங்க கைல குடுத்து அனுப்பு'' என்றான்.

கார்த்திக்கும் சக்தியிடம் ஏதும் பேசவில்லை. சக்தியும் எதுவும் பேசவில்லை. செல்வம் கூட்டிச் சென்றான்.

செல்வத்திடம் பேச்சுக் கொடுத்தபடியே சென்றாள். ''நேத்து நான் பார்த்தப்போ கூட இத்தனை ஏற்பாடு இல்லையே? எப்போ செஞ்சீங்க?'' என்றாள்.

செல்வம் தயங்கி தயங்கி, ''எனக்கே தெரியாது மேடம். நான் நைட் பத்து மணிவரைக்கும் இங்க தான் இருந்தேன். அப்போ கூட எதுவும் இல்லை. காலையில் ஆறு மணிக்கு வந்துட்டேன் வந்து பார்த்தா, இடமே மாறிபோச்சு.''

''எல்லாம் பாஸோட ஏற்பாடு போல'' என்றான்.

''நீயெல்லாம் இங்க அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபீசர்ன்னு சொல்லாத'' என்று கோபப்பட்டாள் சக்தி.

''நான் கேட்டேன் பாஸ்கிட்ட என்ன செய்யறதுன்னு? நான் பார்த்துக்கறேன்னார்! என்ன செய்ய போறீங்கன்னு கேட்டேன்? என்னை கேள்வி கேட்கற அளவுக்கு பெரிய ஆள் ஆயிட்டியா? வேலையை பாருடான்னு திட்டிட் டார்!'' என்றான் பரிதாபமாக.

''பணம் நம்ம தானே குடுக்கறோம்!'' என்றாள்.

''நான் குடுக்கலை. ஐயா கிட்ட வாங்கறாரான்னு தெரியலை'' என்றான்.

சக்திக்கு கட்டுக்கடங்காமல் கோபம் வந்தது. ''இதை யெல்லாம் பார்க்காம என்ன கிழிக்கற நீ இங்க'' என்று செல்வத்திடம் எரிந்து விழுந்தவள், ''எனக்கு அப்பா இவ்வளவு செலவு செய்வார்ன்னு தோணலை'' என்றாள் யோசனையாக.

அதற்குள் பிரபு வந்து, ''வாங்க மேடம்! அங்க யூனிட்ல வந்து அரேஞ்மென்ட்ஸ் பாருங்க'' என்றான்.

அங்கே சென்றாள். சில நோயாளிகள் அமர்ந்திருந் தார்கள். அன்றிலிருந்து மருத்துவமும் தொடங்க இருந்தது.

அது மட்டுமல்லாமல் ஒரு ரத்த தான முகாமிற்கு வேறு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இன்னொரு பக்கம் கண் தானம், உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வு முகாமும் இருந்தது. அவர்களின் பொறியியல் கல்லூரியின் மாணவர்கள் அதில் பங்கெடுக்க இருந் தார்கள்.

''இது நல்ல ஐடியா'' என்று சக்தி பாராட்ட.

பிரபு அவளை சற்று புன்னகையோடு பார்த்தவன், ''உங்க யோசனையை நீங்களே பாராட்டிக்குவீங்களா'' என்றான்.

சட்டென்று நூல் முனை பிடிபட, ''கார்த்திக் சொன் னான், நான் செய்ய சொன்னேன்னு'' என்றாள்.

''ம், நீங்க சொல்லலையா'' என்றான் யோசனையாக பிரபு.

அந்த நேரம் பார்த்து ஏற்பாடுகள் சரியாக இருக்கிறதா என்று பார்க்க கார்த்திக் வர, அவர்களின் பேச்சை கேட்டவன்...

''அவங்க தான் சொன்னாங்க பிரபு'' என்றான்.

சக்தி மறுத்து சொல்லவில்லை. அமைதியாக நின்று விட்டாள்..

அவன் ஏற்பாடுகளை பார்த்துவிட்டு செல்லவும் அவன் பின் சென்றவள், ''இந்த செலவெல்லாம் நீதான் செய்யறியா'' என்றாள்.

அவன் அமைதியாக நிற்கவும், ''சொல்லு நீதான் செய்யறிய்ா?''

''யார் செஞ்சா என்ன?'' என்றான்.

''நீயேன் செய்யணும்? சொன்னா நான் குடுக்க மாட்டேனா! எவ்வளவு ஆச்சுன்னு சொல்லு நான் குடுக்கறேன்.''

''இல்லை! இருக்கட்டும்! தேவைங்கறப்போ நானே வாங்கிக்கறேன்!''

''இல்லை! அப்பப்போ செட்டில் பண்ணிக்கலாம்!''

''நமக்குள்ள செட்டில்மென்ட் தேவையில்லை!''

''செட்டில்மென்ட் ஆரம்பிச்சது நீதான் நாங்க இல்லை'' என்று சற்று கடுமையான குரலில் சக்தி சொல்ல.

''ப்ளீஸ் சக்தி! மறுபடியும் ஏதாவது பேசிடாத! என்னால நிச்சயமா தாங்க முடியாது! நீ பேசினா எனக்கு பயமாயிருக்கு!'' என்றான் நைந்த குரலில்.

சொன்ன அவனின் குரல் சக்தியை உயிர்வரை உலுக்கியது.

கார்த்திக்கிற்கு பயமா??? அதை போக்கியேயாக வேண்டும் போல ஒரு உந்துதல். வேறு எதுவும் சக்தியின் ஞாபகத்தில் இல்லை.

அவனை தேற்ற வேண்டும் போல தோன்றியது. அது நேரடியாக அவளால் முடியாது என்பதால்,

''ஹேய்! என்ன நீ, நான் என்னவோ உன்னை கொடுமைப்படுத்துற வில்லி மாதிரி பேசற?'' என்றாள் முயன்று வரவழைத்த லகுத்தன்மையோடு.

அவள் இயல்பாக பேச முயற்சிப்பதை உணர்ந்த கார்த்திக், ''நீ எப்பவுமே ஹீரோயின் தான்'' என்றான்.

அதை கவனியாதவள் மாதிரி, ''பணம் வாங்கிக்கோ'' என்றாள்.

''வாங்கிக்கறேன்! நிச்சயம் வாங்கிக்கறேன். ஆனா இப்போ வேண்டாம் ப்ளீஸ்.''

சக்தி ஏதோ சொல்ல வர,

''நிறைய வேலையிருக்கு, அதை பார்க்கணும்'' என்றபடி விரைந்து விட்டான்.

மனம் முழுக்க கார்த்திக் மேல் கோபமும் வருத்தமும் இருந்தாலும், சக்தி நிறைய முறை அவனை காயப்படுத்தி விட்டாலும், ''எனக்கு பயமாயிருக்கு'' என்ற கார்த்திக்கின் வார்த்தை அவளை மிகவும் அசைத்தது.

அவளுக்கு தெரியும் யாரிடமும் கார்த்திக் எப்போதும் இந்த வார்த்தையை சொல்ல மாட்டான் என்று.

அவனறியாமல் அவனை கவனிக்க ஆரம்பித்தாள். எப்போதும் இறுக்கமாக இருக்கும் அவனின் முகம் இப்போது இன்னும் இறுக்கமாக இருப்பது போல தோன்றியது.

இவனாக இழுத்து விட்டு கொண்டது தானே இது நானா இழுத்து விட்டேன் என்று முயன்று மனதை வேலைகளில் திசை திருப்பினாள்.

அதன் பிறகு எதை பற்றியும் நினைக்க நேரமில்லாமல் கட்சி தலைமை வந்து விட, அவரை சக்தி பொக்கே கொடுத்து இன்முகத்தோடு வரவேற்றாள்.

கட்சி தலைமை மட்டும் வரவில்லை. தமிழ்நாட்டில் அவர் கட்சியில் இருந்த எம் பிக்கள், கட்சி பிரமுகர்கள், சில அரசு அதிகாரிகள் என்று அந்த இடமே வி ஐ பிக்களால் நிரம்பி வழிந்தது.

"My daughter sakthi priyadarsini" என்று வீரமணி அவளை அறிமுகப்படுத்த,

"She has got indra maa's half name priyadarsini" என்றார் அந்த தலைமை. இந்திரா காந்தியின் பெயர் இந்திரா பிரியதர்சினி அவர் அதை தான் சொன்னார்.

அவரின் வார்த்தையை ஏற்று மரியாதையாக அவரை பார்த்து புன்னகைத்தாள் சக்தி. அதன் பிறகு அவளின் அந்த புன்னகை குறையவும் இல்லை மறையவும் இல்லை. இப்போது கூட்டத்தை பார்த்து பயமும் இல்லை.

திறப்பு விழா சிறப்பாக நடந்தது.

மருத்துவமும் தொடங்கியது. ரத்த தான முகாமும் தொடங்கியது. கண் தான உறுப்பு தான முகாமும் தொடங்கியது.

"Execellent idaes and arrangements, able to coordinate with this many youngsters, good," என்றார் சக்தியை பார்த்து.

எல்லாம் கார்த்திக்கின் ஐடியா என்று சொல்ல சக்தியின் வாய் துடித்தது. இந்த மாதிரி ஏதாவது செய்துவிடுவாள் என்று அவளின் பார்வை வட்டத்தில் இருந்த கார்த்திக், கண்ணாடியை கழட்டி கண்களால் அவளை அடக்கினான்.

அவர்கள் கல்லூரியின் மாணவர்கள் மட்டுமல்லாமல் வேறு சில கல்லூரியின் மாணவர்களும் அங்கே வரவைக்கப்பட்டு இருந்தனர்.

முகாம்கள் சிறப்பாக நடந்தது.

எல்லாம் பார்வையிட்ட பிறகு கட்சியின் தலைமை இரண்டு நிமிடம் அமர்ந்தார்.

"உங்க அப்பா வர்ற எலெக்ஷன்ல உனக்கு சீட் கேட்கறாரேம்மா, குடுத்துடலாமா?" என்றார் நேரடியாக கட்சியின் தலைமை சக்தியை பார்த்து ஆங்கிலத்தில்.

அவள் என்ன சொல்வது என்று யோசிக்க, வீரமணி ஆர்வமாக தன் மகளை பார்த்தார்.

"உங்க அப்பா கேட்கறதுக்காக மட்டும் கேட்கலை, I can judge people, something says me you have the capacity... we need more youngters to be actively participating in politics... this is the time where more youngters should come to develope our country."

அப்போதும் சக்தி யோசித்தாள். இது விளையாட்டு போல பதிலளிக்கும் விஷயம் அல்ல கண்கள் அவளையும் மீறி கார்த்திக்கை தேடியது.

அந்த சூழ்நிலையை கார்த்திக் ஆராய்ந்து கொண்டிருந்தான். கட்சியின் தலைமை ஆர்வமாக இருப்பதையும், வீரமணி இன்னும் ஆர்வமாக சக்தியின் பதிலுக்காக காத்திருப்பதையும்.

சக்தி ஏதாவது மறுப்பாக சொல்லிவிட்டாள் அதை வீரமணி ஜீரணிக்க மாட்டார் என்று அவனுக்கு தெரியும். சக்தியை பற்றிய அவரின் ஆசை லட்சியம் கனவு எல்லாம் அதுதான்.

அதுவுமில்லாமல் அவர் கேட்ட ஒரு வார்த்தை கார்த்திக்கின் ஞாபகத்தில் என்றும் இருந்தது, "பொண்ணை பெத்து வெச்சிருக்கேன் இவனால என்ன செய்ய முடியும்னு தானே இப்படி பண்ணிட்ட கார்த்திக்" என்ற அவரின் வார்த்தை.

சக்தி என்பதையும் மீறி அவரின் பெண்ணை ஆளாக்க வேண்டிய கடமை அவனுக்கு இருக்கிறது.

சக்தியின் கண்கள் அவனை தேடுவதை உணர்ந்தவன், அவளின் பார்வையில் நின்றான்.

சக்தி அவனை பார்த்தாள்! பார்த்தாள் மட்டுமே! சரியென்று சொல்லவா? வேண்டாமா? என்ற எந்த கேள்வியும் அதில் இல்லை.

கார்த்திக் தானாக மீண்டும் அணிந்திருந்த கண்ணாடியை கழற்றி, ஒத்துக்கொள் என்பது போல கண் மூடி திறந்தான்.

"Sure sir will do whatever my best is possible" என்றாள்.

அந்த வார்த்தையை சக்தி சொன்ன பிறகே வீரமணி சரியாக மூச்சு விட்டார். அதன் பிறகு அவரிடம் கரை காணாத உற்சாகம். என்னவோ தன் மகள் இப்போதே எலெக்ஷனில் நின்று ஜெயித்து விட்ட மாதிரி.

அதன் பிறகே அங்கே இருந்த தெய்வானையை கூட கூப்பிட்டு தலைமையிடம் அறிமுகப்படுத்தி வைத்தார். அருகில் இருந்த கார்த்திக்கையும் கூப்பிட்டு, "My friends son" என்று அறிமுகப்படுத்தியவர், "todays arangements for party people, all were taken care by him... all including banners everything..." என்றார்.

Good work என்று அவள் தோளில் தட்டி கொடுத்த கட்சியின் தலைமை உடனே கிளம்பிவிட்டார். வீரமணியும் அவரோடு சென்றுவிட்டார்.

அவர்கள் சென்றதும், "எனக்கு அவசர வேலை நான் கிளம்பறேன்! பார்த்துக்கோ செல்வம் எந்த பிரச்சனையும் வரக்கூடாது. சும்மா சில்ர செட்டில்மென்ட் ஏதாவது இருந்தா பணம் குடு! பெருசு எதுனாலும் நான் வர ணும்னு சொல்லிடு! யாருக்கு எவ்வளவு குடுத்தேன்னு உனக்கு தெரியாது."

சக்தியிடம் வந்தவன், "இனிமே நீங்க பார்த்துக் கோங்க" என்று சொல்லி பிரபுவிடமும் சொல்லி சென்றான்.

அவன் செயல்களில் ஒரு அவசரம் தெரிந்தது.

எங்கே இவ்வளவு அவசரமாக செல்கிறான் என்று தெரிந்து கொள்ளாவிட்டால் மண்டையே வெடித்து விடும் போல இருந்தது சக்திக்கு.

"எங்க போறான் இவ்வளவு அவசரமா?" என்று சக்தி கேட்க.

"தெரியலைங்க மேடம்" என்று செல்வம் சொன் னான்.

"உனக்கு என்ன தான் தெரியுது! இங்க நடக்கறதும் தெரியலை! அவன் என்ன செய்யறான்னும் தெரியலை! பெருசா பாஸ்ன்னு கூப்பிட்டா ஆச்சா. கொஞ்சமாவது உனக்கு அவன் மேல அக்கறை இருக்கா" என்று அவனிடம் எரிந்து விழுந்தாள்.

"எதையும் தாங்கும் இதயம்" என்பது போல போஸ் கொடுத்து செல்வம் நிற்க. அதில் இன்னும் எரிச்ச லானவள்," அவன் என்ன பண்றான்னு நீ சொல்ற!" என்றாள்.

"தெரிஞ்சா சொல்றேன்!" என்று செல்வம் சொல்ல.

"டையலாக்லாம் அடிச்சு பிச்சிடுவேன். தெரிஞ்சு சொல்ற!" என்றாள்.

"சரி" என்று சொல்வதை தவிர வேறு ஆப்ஷன் செல்வத்திடம் இல்லை.

கார்த்திக் விரைந்தது சென்னைக்கு. அவனின் அடுத்த படம் இரண்டு நாட்களுக்கு முன்பு தான் ரிலீஸ் ஆகி யிருந்தது.

முதல் படம் புதுமுகங்களை வைத்து மிகவும் பிரமாண்டமாய் எடுத்தான். லாபம் என்று எதையும் பார்க்கவில்லை. சுமாருக்கும் குறைவான மதிப்பையே பெற்றது.

அடுத்த படம் மிகப் பெரிய இயக்குனர். ஸ்டார் நடிகர் நடிகையை வைத்து இன்னும் பிரமாண்டமாய் தயாரித் தான். படம் எடுக்க ஆன செலவை விட. நடிகர். நடிகை, இயக்குனர் மற்றும் காமெடி நடிகரின் சம்பளமே ஆளை சாப்பிட்டது.

போன படத்தை சொந்தமாக வெளியிட்டான். இந்த படத்தை விநியோகஸ்தர்களின் வசம் விட, பெரிய நடிகர், இயக்குனர் என்பதால், படமும் நல்ல வியாபாரம் ஆகிற்று தான்.

ஆனால் படம் படு ப்ளாப். இப்போது விநி யோகிஸ்தர்கள் இயக்குனரின் வீட்டின் முன்பு பணத்தை கேட்டு தகராறு செய்து கொண்டிருந்தார்கள்.

அதை முன்னிட்டே இந்த அவசர பயணம்.

காலையில் இருந்து அவனுக்கு தொலைபேசி அழைப்பு வந்த வண்ணம் தான் இருந்தது. இங்கே திறப்பு விழாவை விட்டு செல்ல மனமில்லாமல் அது முடியும் வரை காத்திருந்து சென்றான்.

அவன் சென்ற போது அங்கே சத்தமாக இருந்தது.

அவனை தனியாக கூட்டிக் கொண்டு போன இயக் குனர், அவனிடம், ''காம்பென்சேஷன் குடுக்க வேண் டிய அவசியமில்லை. என்னுடைய மத்த படத்துல லாபம் பார்த்தாங்கதான, இப்போ மட்டும் லாபம் வந்திருந்தா எனக்கா குடுத்திருப்பாங்க. நஷ்டம் வந்தா நாம என்ன பண்றது'' என்றார்.

கார்த்திக், ''நான் குடுத்துடறேன்'' என்று சொல்லிய போதும்,

''தேவையில்லை. அப்படியே குடுக்கணும்னு நினைச்சா உட்கார்ந்து பேசி ஏதாவது ஒரு அமௌண்ட் செட்டில் பண்ணலாம். முழுசா வேணாம்'' என்றார்.

''இல்லைங்க. நான் முழுசும் குடுத்துடறேன்! என் னால ஒருத்தன் வாழ்ந்ததாதான் இருக்கணும். வீழ்ந்ததா இருக்கவே கூடாது!'' என்றான் முடிவாக கார்த்திக்.

# 30

**சாத்திரம் பேசுகிறாய் - கண்ணம்மா!**

**சாத்திர மேதுக்கடீ?**

**ஆத்திரங் கொண்டவர்க்கே - கண்ணம்மா!**

**சாத்திர முண்டோடீ?**

- பாரதி

எல்லோருக்கும் பணத்தை செட்டில் செய்து கார்த்திக் முடிக்க இரண்டு நாட்கள் ஆகிவிட்டது. செய்தி கசிந்ததும் பிரச்சனை செய்யாத விநியோகஸ்தர்களும் வந்து விட்டனர்.

எல்லோருக்கும் முகம் சுளிக்காமல், அவர்களுக்கு நஷ்டம் ஏற்படாத வகையில் செட்டில் செய்தான்.

இப்படியும் ஒரு மனிதனா, இவன் ஒரு வேளை ஏமாளியா என்று எண்ணத் தோன்றியவர்களுக்கும், அவனின் பேச்சு நடை உடை பாவனை மிகவும் பெரிய மனிதனாக காட்டியது.

கடைசியில் அவனை வியந்தே சென்றனர்.

கார்த்திக்கிற்கு பணம் பிரச்சனையில்லை. ஆனால் [illegible] தோல்வி மனதிற்கும் என்னவோ மாதிரி [illegible]

அவனுக்கு படம் எடுக்க வேண்டும், லாபம் பார்க்க வேண்டும் என்ற எண்ணமெல்லாம் இல்லை. அவனின் தந்தையின் பேனர் மீண்டும் உயிர்த்தெழ வேண்டும். அவர் பெயர் நிலைக்க வேண்டும்.

''நடக்க வேண்டும். நடத்தியே ஆக வேண்டும். அது எத்தனை தோல்விகளை சந்தித்தாலும் செய்வேன் செய்தே தீருவேன்'' உள்ளுக்குள் கனன்றது.

அதுமட்டுமல்லாமல் இன்னொரு வேலையும் பாக்கி இருந்தது. உன் சொத்து உன்னிடம் திருப்பி விட்டேன் என்பது மாதிரி பத்ரிநாத்திடம் சொல்லியிருந்தான். அவர் அங்கே வந்து என்ன என்று பார்ப்பதற்கு ஆர்வம் காட்டவில்லை. அவனும் வாருங்கள் என்று அழைக்க வில்லை.

அவர் தந்தையை சொல்லி சொல்லி காட்டி இருந்த தால், திருப்பிவிட்டேன், உங்களிடம் சேர்த்து விட்டேன் என்று சொல்லியிருந்தான். ஆனால் அவருக்கு எதுவும் செட்டில் செய்யவில்லை. செய்து விட்டால் பரவா யில்லை என்று தோன்றியது.

பிரபுவிடமும் பேச வேண்டும் என்று முடி வெடுத்தான்.

வருவதற்கு இரண்டு நாட்கள் ஆகும் என்று வீட்டிற்கு தகவல் சொல்லியிருந்தான்.

இங்கே சக்திக்கு அவன் எதற்கு அவ்வளவு அவசர மாக போனான் என்று தெரிந்தே ஆக வேண்டி... செல்வத்திடம் தெரிந்து சொல்லுமாறு சொல்லியிருந் தாள்.

செல்வமும் நேரடியாக கார்த்திக்கிற்கே அழைத்திருந் தான்.

''என்னடா அங்க வேலையெல்லாம் நல்ல படியா முடிஞ்சதா.''

''முடிஞ்சது பாஸ். ஆளாளுக்கு புதுசு புதுசா பில் குடுக்கறானுங்க.''

''நீயென்ன பண்ணின?''

''ஒண்ணும் பண்ணலை! நீங்க வரணும்னு சொல் லிட்டேன்! எப்போ வர்றீங்க?''

''தெரியலை! ஒண்ணு ரெண்டு நாள் ஆகும்!''

''அங்க என்ன வேலை?''

''என்னடா கேள்வி எல்லாம் பலமா இருக்கு.''

''கேட்க சொல்லியிருக்காங்க.''

''அது யாருடா என்னை கேட்க சொன்னது.''

''மேடம்.''

''என்னவாம் அவங்களுக்கு'' கேட்கும் போதே அத்தனை பிரச்சனைகளுக்கிடையிலும் கார்த்திக்கின் முகத்தில் புன்னகை.

''அதை அவங்களை தான் கேட்கணும்.''

''கேளேன்.''

''நான் அவங்களை கேள்வி கேட்கறதா. என்னை தொலைச்சிட மாட்டீங்க.''

''ஓஹ்! தெளிவா இருக்கியா நீ.''

''அதான் தெளிய வெச்சு, தெளிய வெச்சு, அடிக் கறீங்களே. அதை விடுங்க என்ன விஷயம். எதுக்கு அவசரமா போனீங்க.''

''ம், படம் மறுபடியும் ப்ளாப்! அதான் எல்லோருக்கும் செட்டில் பண்ண வந்தேன்.''

''என்ன பாஸ் சொல்றீங்க?'' என்றான் கவலையாக.

''விடுடா பார்த்துக்கலாம். அப்புறம் கூப்பிடறேன்'' என்று சொல்லி போனை வைத்தான்.

சக்தியிடம் அட்சரம் பிசகாமல் விவரத்தை சொன் னான்.

''என்ன பண்றான் அவன்?'' என்று சக்தி விவரம் கேட்டாள்.

பட தயாரிப்பை சொன்னான். நிறைய பேருக்கு அது தெரியாது. அதுவுமில்லாமல் கார்த்திக்கின் பெயரும் அதில் வராது. அவனின் அப்பாவின் பெயர்தான் இருக்கும்.

''என்ன படம் தயாரிக்கறானா? என்னென்ன படம்?''

முதலில் எடுத்த படம், இப்போது எடுத்த படம் இரண்டையும் சொல்ல...

புதுமுகங்களை வைத்து எடுத்த படத்தை பற்றி சக்திக்கு அதிகம் ஒன்றும் தெரியவில்லை. ஆனால் அந்த படத்திற்கு நிறைய விளம்பரம் என்ற அளவில் தெரிந்தது.

ஆனால் இந்த படத்தை பற்றி நன்கு தெரிந்திருந்தது. ''படம் பெரிய ப்ளாப்ன்னு சொல்றாங்களே செல்வம்'' என்றாள் கவலையாக.

''ஆமாம் மேடம். அதான் இவரால யாரும் நஷ்டம் ஆகக்கூடாதுன்னு எல்லோருக்கும் பணத்தை திருப்பி கொடுக்கிறார்.''

''அது அவன் அவன் பிசினெஸ். அடுத்தவங்க நஷ்டத்துக்கு நம்ம எப்படி பொறுப்பெடுத்துக்க முடியும். அப்படி இருக்குறவன் தொழில் பண்ண கூடாது. ஏன் இப்படி படம் எடுக்கணும்னு என்ன?''

''அவங்கப்பா பேர் தான் மேடம் போடறார்! என்னோட கணிப்பு என்னன்னா திரும்ப அவர் பேர் கொண்ட வர இப்படி செய்யறார்னு நினைக்கிறேன்'' என்றான்.

வீட்டில் உடனே வீரமணியிடம் விவரம் கேட்டாள் சக்தி. பேப்பரில் படத்தின் விளம்பரத்தை பார்த்தவர், ''ஆமாமா இது சந்திரசேகரோட பேனர் தான்மா. டெய்லி பேப்பர் பார்க்கிறேன். ஆனா என் கவனத்தை இது கவரலை பாரேன்'' என்றார்.

''படம் எப்படி போகுது'' என்று சக்தியிடம் விவரம் கேட்டார்.

''இந்த படமா இது நல்லாயில்லைன்னு சொன்னாங்களே'' என்று தெய்வானை குரல் கொடுத்தார்.

''அம்மா'' என்றாள் சக்தி.

''உள்ளதை தானே சொன்னேன்'' என்றார் தெய்வானை.

''அப்போ அவன் படம் தயாரிக்கறது உனக்கு முன்னமே தெரியுமா?''

''தெரியும்''

''எப்படி தெரியும்?''

''அப்பப்போ கருப்பண்ணன் கிட்ட விசாரிச்சுக்கு வேன்.''

''நீயேன் விசாரிக்கற?''

அதற்கு ப்தில் சொல்லாமல் தெய்வானை வீரமணியை பார்த்து, ''ஹாஸ்பிடல் கட்டியாச்சு. பொண்ணுக்கு சீட்டும் கேட்டாச்சு. அவளுக்கு எப்போ கல்யாணம் பண்ண போறீங்க. வயசு ஏறுதில்ல. இப்போவே இருபத்தியாறு வயசாச்சு'' என்றார்.

வீரமணி பதில் சொல்லும் முன்பே சக்தி, ''அம்மா! எனக்கு இப்போ கல்யாணம் பண்ற எண்ணம் இல்லை!'' என்றாள்.

அவளருகில் வந்த தெய்வானை, ''அவனை பத்தி எதுக்கு விசாரிக்கிறன்னு நீ கேட்டயில்லை. இதுக்கு தான்'' என்றார் அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில்.

''அம்மாவும் பொண்ணும் என்ன பேசறீங்க?'' என்று வீரமணி கேட்டார்.

''சக்திக்கு யாரையாவது பிடிச்சிருக்கான்னு கேட்க றேன்'' என்றார் தெய்வானை.

சக்தியின் முகம் சுருங்கி விட்டது.

''என் பொண்ணுக்கு என்னடி? யோக ஜாதகம். அவ தொட்டதெல்லாம் துலங்கும். அவ ஆளப் பிறந்தவடி. பெரிய ஆளா வருவா.''

"அவ பெரிய ஆளா வர்றது இருக்கட்டும். அவ கல் யாணம் பண்ணி குழந்தை குட்டின்னு வாழ வேண் டாமா."

"ஏன் வாழ மாட்டா. என் பொண்ணு கண்ணிறைஞ்ச கணவனோட மனசு நிறைஞ்ச வாழ்க்கை வாழுவா."

"கல்யாணத்துக்கே இன்னும் அடி எடுத்து வைக்க மாட்டேங்கறீங்க."

"இது சத்தியமான வார்த்தை தெய்வானை. நான் சொல்லலை, இப்போ டெல்லி போனப்போ அங்கிருந்த ஒரு பெரிய சுவாமிஜிகிட்ட ஜோசியம் பார்த்தேன். எல்லா அரசியல்வாதிங்க, விளையாட்டு வீரர்ன்னு அவர்கிட்ட கியூ கட்டி நிக்கறாங்க."

"அவர் சொல்றது அப்படியே நடக்குதாம். அவளை கட்டிக்க போறவன் அத்தனை யோகக்காரனா இருப் பானாமா. அவ வாழ்க்கை ரொம்ப நல்லா இருக்கும்னு சொன்னார்."

"சரி, அவர் சொல்றது எல்லாம் இருக்கட்டும். அவளுக்கு எப்போ மாப்பிள்ளை பார்க்க போறீங்க."

"அப்படி அவசரப்பட வேண்டாம்னு சொல்லி யிருக்கார். அவளுக்கு கங்கன பொருத்தம் இருபத்தி ஏழுல தான் வருதாம். அப்போ தான் பார்க்க சொன் னார்."

"உங்களுக்கு அறிவு ஏதாவது இருக்கா? நல்லா என் வாயில வந்துடும்" என்று எகிறினார் தெய்வானை.

"ஏன் தெய்வா திட்டுற."

"ம், பின்ன கொஞ்சுவாங்களா? நம்ம பொண்ணுக்கு என்ன குறை? இப்போவே இருபத்தி ஆறு ஆகிடுச் சுன்னு சொல்றேன். இன்னும் ஒரு வருஷம் போகட் டும்னு சொல்றீங்க. அந்த வயசுல எல்லா பொண் ணுங்களும் ரெண்டு குழந்தையே பெத்திருப்பாங்க" என்று வீரமணியிடம் சண்டை போட்டார்.

"அந்த சுவாமிஜி தான் சொன்னார். அதுக்கு முன்னாடி நம்ம முயற்சி எடுத்தாலும் அமையாதுன்னு."

"அவர் ஆயிரம் சொல்வார். அதுக்காக நம்ம முயற்சி எடுக்கக் கூடாதுன்னு இல்லை. நம்ம செய்யறதை செய்யலாம். அப்புறம் கடவுள் விட்ட வழி."

இதையெல்லாம் கேட்டு கொண்டிருந்த சக்தியின் மனதில் ஓடியது ஒன்று தான். "என்னை தவிர யாரும் உன் கழுத்துல தாலி கட்ட விட மாட்டேன்னு சொன் னானே! நிஜமா சொன்னானா? இல்லையா?"

"நான் வேற இப்படி பேசினா எவனை வேணா கல் யாணம் பண்ணிக்குவேன்னு சொன்னேனே!"

"மறுபடியும் என்கிட்ட கேட்பானா? மாட்டானா? கேட்டா நான் என்ன சொல்லுவேன்!" என்ற யோசனை யிலேயே இருந்தாள்.

அதே எண்ணத்தில் இருந்தவள் நேரே ரூமிற்கு சென்று விட்டாள்.

அவள் போவதையே யோசனையோடு பார்த்த தெய் வானை வீரமணியிடம் இன்னும் எகிறினார். "எல்லாத் தையும் அவ முன்னாடியே பேசணுமா. நான் மாப்

பிள்ளை பார்க்கணும்னு சொன்னா. உடனே பார்க்க றேன்னு சொல்ல வேண்டியது தானே!''

தெய்வானைக்கு தன் மகளின் வாழ்க்கையை நன்றாக இருக்க வேண்டும் என்று மனது சஞ்சலமாக இருந்தது.

என் மகள் வாழ்க்கையில் வருவதாக இருந்தால் வீட்டிற்கு வா இல்லையென்றால் வராதே என்று கார்த்திக்கிடம் சொல்லியிருந்தார்.

இத்தனை நாட்களாக வராதவன் இப்போது தானாகவே வந்து எல்லா வேலைகளையும் செய்கிறான். அவன் மனதில் என்ன இருக்கிறது என்று தெரியவில்லை. எதுவாகினும் இவருக்கு திரும்பவும் கேட்கும் எண்ணமில்லை. வருவது என்றால் அவன் தான் வர வேண்டும். என் பெண் கிடைக்க அவன் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்பதாக தான் தெய்வானையின் எண்ணமிருந்தது.

சக்தியின் எண்ணமும் தெரியவில்லை. இறைவனை நாடுவதை தவிர அவருக்கு இப்போதைக்கு வேறு வழியில்லை.

இரண்டு நாட்கள் வேலைகள் இயந்திர கதியில் நடந்தாலும், ''நான் தான் அவனை வேண்டாம்னு சொல்லிட்டேனே, மறுபடியும் இப்படி ஏன்? நான்... எனக்கு.. என்ன பண்றேன்?'' என்று பயங்கரமான குழப்பத்தில் இருந்தாள்.

அவள் அவளின் குழப்பத்தில் இருந்ததால் கார்த்திக்கின் தற்போதைய நிலையை அலசி ஆராய்ந்த அவளின் மனது பின்னுக்கு சென்றது.

''அவன் என்னை ஏமாற்றியதை நான் மறந்து விட்டேனா'' இரண்டு நாட்களாக இதே யோசனை.

அன்று சிவா இரவு ட்ரீட்டிற்கு கண்டிப்பாக வர வேண்டும் என்று சொல்லியிருந்தான். இவளும் சரி என்று சொல்லியிருந்தாள். வெளியே போயே நிறைய நாட்கள் ஆகிவிட்டன.

ஒரு மாற்றம் அவளுக்கே தேவையாயிருந்தது.

போவோம் என்று கிளம்பினாள்.

கருப்பண்ணன் ஏதோ வேலை என்று சென்றிருந்தார். அதனால் செல்வத்தை தான் துணைக்கழைத்து கிளம்பினாள். எத்தனை ஆட்கள் இருந்தாலும் வீரமணியோ, செல்வமோ, கருப்பண்ணனோ இல்லாமல் செல்ல மாட்டாள். இது அவளுக்கான கார்த்திக்கின் எழுதப்படாத விதி.

கார்த்திக்கோடு பிரச்சனைகள் வந்த போதும், அவனை எரிச்சல் படுத்தவென்று அவள் செய்த ஒரே காரியம் நாய்களை வீட்டுக்குள் கொண்டு வந்தது தான். அதுவும் இரண்டு மூன்று நாட்களே. அவன் திட்டிய பிறகு அனுப்பி விட்டாள்.

அவன் இல்லாத போதும் அவன் சொற்களை மீறி நடந்ததில்லை.

ஒரு ஹோட்டலின் மொட்டை மாடியில் இவர்களுக்காக ஸ்பெஷல் அரேஞ்ச்மென்ட்ஸ் செய்யப்பட்டு இருந்தது.

ஜீன்ஸ் குர்தாவில் இருந்தாள். அது அவளை காலேஜ் படிக்கும் ஒரு பெண்ணின் தோற்றத்தை தான்

கொடுத்தது. அழகாக இருந்தாள் சக்தி. கண்ணை கவரும் அழகு என்பதை விட இது கண்ணுக்கு குளிர்ச்சியான அழகு.

அங்கே அவள் சென்ற போது, சிவா, சுமித்ரா, பிரபு, வைஷ்ணவி இருந்தனர். இவள் தூரத்தில் இருந்து வரும்போது பார்த்த சுமித்ரா, ''தேவதை மாதிரி இருக் காங்க'' என்றாள்.

சுமித்ராவே சொல்லவும், சக்தி பக்கத்தில் வந்ததும், ''வெல்கம் ஏஞ்சல்'' என்றான் சிவா.

''ஏன்? என்னை அண்ணான்னு சொல்ல வெச்சே தீருவேன்னு சபதம் எடுத்திருக்கீங்களா?'' என்றாள் சக்தி.

''என்ன அண்ணாவா? எத்தனை பேரை நான் கல் யாணம் பண்ணினாலும் உங்க வாயில இருந்து என்னை பார்த்து அந்த வார்த்தை வரலாமா'' என்று சிவா நியாயம் கேட்க.

''பின்ன நீங்க ஏஞ்சல் சொன்னா, நான் அண்ணா சொல்லுவேன்னு முன்னமே சொல்லியிருக்கேன்'' என்றாள்.

''அது உங்க பாடி கார்ட் கூட இருக்கும் போது.''

''இது மட்டும் அவன் காதுல விழுந்திச்சி, எங்கிருந் தாலும் அடுத்த நிமிஷம் இங்க இருப்பான்'' என்று சக்தி சொல்லிக் கொண்டு இருக்கும் போதே அங்கு கார்த்திக் வர, எல்லோர் முகத்திலும் சிரிப்பு.

கார்த்திக்கை பார்த்தும் பார்க்காதவள் போல திரும்பிக் கொண்டாள். இருந்தாலும் அகத்தின் உற்சாகம் முகத்தில் பிரகாசமாக தெரிந்தது.

''ஏஞ்சல்ன்னு நான் சொல்லலை சுமித்ரா தான் சொன்னா'' என்று உடனே பல்டி அடித்தான் சிவா.

''அது... அந்த பயம் இருக்கணும்'' என்று சக்தி மறு படியும் சிவாவை வார...

''நீங்க நிஜமாவே ஏஞ்சல் மாதிரி தான் இருக்கீங்க'' என்றான் கிடைத்தது சாக்கென்று பிரபுவும்.

''அடங்குங்க மச்சான். பாடிகார்ட் காதுல விழுந்தது, நம்மளை துவைச்சு காய வெச்சுருவார்'' என்றான் சிவா.

''இருங்க, அவன்கிட்டயே கேட்கறேன்'' என்ற பிரபு,

கார்த்திக் அவர்களை நெருங்கியவுடன், ''என்ன கார்த்திக், மேடம் ஏஞ்சல் மாதிரி தானே இருக்காங்க.''

கார்த்திக் அங்கே வந்து எல்லோரையும் பார்த்ததும் ஒரு உற்சாகம் தொற்ற. என்ன ஏதென்று தெரியாத போதும் சக்தியை பார்த்து, ''அதென்ன ஏஞ்சல் மாதிரி இருக்காங்க. அவங்க ஏஞ்சல் தான்'' என்றான்.

சக்தியால் அவளின் முக சிவப்பை மறைக்கவே முடியவில்லை.

''கார்த்திக்க்க்க்கு... நீயா பேசினா?'' என்று பிரபு வாய் திறந்து கேட்க, மற்றவர்கள் வாய் திறக்காவிட் டாலும் எல்லோர் முகத்திலும் அதுதான் இருந்தது.

''இதென்ன எல்லோரும் என்னை இன்னைக்கு ஓட்டணும்னு முடிவெடுத்து வந்திருக்கீங்களா. இதெல் லாம் விவரமான பசங்களுக்கு அழகே கிடையாது. மூணு பொண்ணுங்க இருக்கும் போது யாராவது ஒரு பொண்ணை இப்படி புகழ்ந்தா, அந்த பொண்ணுங்

களுக்கு உங்க மேல கோபம் வருதோ இல்லையோ என்னை பிடிக்காம போயிடும்'' என்றாள் சக்தி.

''இது பாயிண்ட்! என்ன வைஷ்ணவி உனக்கு கோபம் வருமா?'' என்று பிரபு வம்பிழுக்க.

''இல்லை, இல்லை, வராது'' என்று அவசரமாக மறுத்தாள்.

''அதானே பொண்ணுங்களுக்கு தானே கோபம் வரும்! உனக்கு ஏன் வருது?'' என்று பிரபு அவளை வார.

வைஷ்ணவி கார்த்திக்கிடம், ''அண்ணா! இவங்களை நீ எதுவும் கேட்க மாட்டியா?'' என்று கார்த்திக்கிடம் குறைபட.

''அதொண்ணுமில்லை. நீயும் ஏஞ்சல்ன்னு சொல்றான் வைஷு'' என்றான் கார்த்திக்.

பிரபு உடனே, ''எப்போ நீ ஃப்ரீ'' என்றான்.

''எதுக்குடா கேட்கற.''

''இல்லை. உன்கிட்ட டியூஷன் வரலாம்னு இருக்கேன்'' என்றான் சிரிக்காமல்.

எல்லோரும் சிரிக்க, ''இவன்கிட்ட டியூஷன், விளங்கும்'' என்றாள் வாய்விட்டு சக்தி.

அதை கவனியாதவன் போல கார்த்திக் சுற்றிலும் கண்களை ஓட்ட, செல்வமும் அங்கே தான் இருந்தான்.

அதன் பின்னர் எல்லோரும் அமர்ந்தனர். செல்வம் இருக்கவா போகவா என்பது போல நிற்க.

''கீழ வெயிட் பண்ணுங்க செல்வம்'' என்று சக்தி சொல்ல,

''எங்களோட ஜாயின் பண்ணுறியாடா'' என்றான் கார்த்திக்.

அவன் அருகில் வந்த செல்வம், அவனை பார்த்து திரும்பி, அவனுக்கு மட்டும் தெரியுமாறு கண்களை சிமிட்டியவன், பின்பு முகத்தை சீராக்கி எல்லோரும் பார்க்குமாறு நின்று, ''நோ பாஸ்'' என்றவன்,

''அக்கா ஊர்ல இருந்து வந்து இருக்காங்க. ரெண்டு சின்ன பசங்களை கூட்டிட்டு வந்திருக்காங்க'' என்றான் சம்பந்தமில்லாமல்.

''சரி, அதுக்கு.''

''நான் தான் அவங்களை ஊருக்கு கொண்டு போய் விடணும்.''

''கொண்டு போய் விடுடா.''

''எனக்கு இப்போ போனா பரவாயில்லை.''

''இதை ஏன்டா என்கிட்ட சொல்ற.''

''மேடமை வீட்டுக்கு கொண்டு போய் விடணும்.''

அவன் சொல்ல வருவது அங்கிருந்த எல்லோருக்கும் புரிந்தது.

''இப்போ நான் என்ன செய்யணும்.''

''அவங்களை டின்னர் முடிஞ்சவுடனே வீட்ல விட்டுடறீங்களா.''

''அவங்க வந்தா விடறேன்'' என்றான் கார்த்திக் சக்தியை பார்த்தவாறு.

சக்தி இதில் தலையிடவேயில்லை. பதிலும் சொல்ல வில்லை. வேடிக்கை மட்டுமே பார்த்தாள்.

''அப்போ அவங்க வரலைன்னா கூட்டிட்டு போக மாட்டீங்களா. சரி நான் அக்காகிட்ட குழந்தைங்களை கூட்டிட்டு பஸ்ல போக சொல்லிட்றேன்.''

''என்னடா ப்ளாக்மெயில் இது'' என்றான் கார்த்திக். எல்லோர் முகத்திலும் புன்னகை.

''ஒண்ணு இடுப்புல, ஒண்ணு கையில, இதுல பையை எங்க தூக்கிட்டு போகும் எப்படியோ போகட்டும். நான்லாம் தம்பின்னு இருந்து என்ன பிரயோஜனம்'' என்று செல்வம் பெருமூச்சு விட.

''இங்க இத்தனை பேர் இருக்காங்க. யாராவது உங்க மேடமை பத்திரமா கொண்டு போய் விட்டுடுவாங்க'' என்று கார்த்திக் சொல்ல.

''நீங்க கொண்டு போய் விடுவீங்களா? மாட்டீங் களா? அதை மட்டும் சொல்லுங்க. அவங்க கிட்ட கேட்கணும்னா நானே கேட்க மாட்டேனா. நீங்க என்ன சொல்றது?''

''டேய்'' என்று கடுப்பான கார்த்திக். ''நீ பாஸா? நான் பாஸா?''

''நீங்க என் பாஸா இருக்கலாம். ஆனா நம்ம ரெண்டு பேருக்கும் அவங்க தானே மேடம். நீங்க அப்படி தானே அவங்களை கூப்பிடறீங்க'' என்றான் செல்வம்.

சக்தியால் என்ன முயன்றும் சிரிப்பை அடக்கவே முடியவில்லை. கார்த்திக்கை இவ்வளவு பேச வைக்கும் செல்வத்தை பார்த்து எல்லோருக்கும் சிரிப்பு.

''டேய்! எல்லோர் முன்னாடியும் அடி வாங்காத'' என்றான் நிஜமான கோபத்தோடு கார்த்திக்.

''நீங்க போங்க செல்வம், நான் வந்துடுவேன்'' என்றாள் சக்தி.

''சாரி மேடம்! என் பாஸ் என்னை, கருப்பண்ணனை தவிர வேற யாரோடயும் நீங்க போக கூடாதுன்னு சொல்லி யிருக்கார்'' என்றான்.

வேகமாக எழுந்து கார்த்திக் அவன் அருகில் வர, சக்தியின் அருகில் போய் நின்று கொண்டான் செல்வம்.

அங்கே சிரிப்பு எல்லோரிடமும் வெடித்து கிளம் பியது. கார்த்திக்கின் முகத்திலும் புன்னகை.

''போடா டேய் போடா. உங்க மேடம் என் கூட வரலைன்னா கூட நான் அவங்களை கூட்டிட்டு தான் போவேன்'' என்றான் கோபத்தையெல்லாம் கை விட்டு கார்த்திக்.

''இப்போ தான் பாஸ், நீங்க என் பாஸ்'' என்ற செல்வம், எல்லோரிடமும் விடை பெற, சக்தி ஏதோ சொல்ல வாயெடுத்தாள்.

அவளை பேசவிடாமல், ''மேடம் காலையில நான் சீக்கிரம் வீட்டுக்கு வந்துடறேன்'' என்றான் செல்வம்.

''எதுக்கு?''

''நீங்க திட்றதெல்லாம் தனியா அங்க திட்டிக்கங்க'' என்று சொல்லியபடி நிற்காமல் ஓடியே விட்டான்.

எல்லோரையும் அவன் செயல் இன்னும் கலகலப்பாக்கியது.

கார்த்திக்கை பார்த்த பிரபு, "உன்கூட எப்படிடா இப்படி ஒரு ஜாலியான ஆளு" என்றான்.

"ரொம்ப நல்ல பையன், எங்க கூட ரொம்ப வருஷமா இருக்கான். போடான்னு நாங்களே துரத்தி விட்டாலும் போக மாட்டான். இந்த மாதிரி ஆளுங்க கிடைக்கறது அபூர்வம்" என்றான்.

சக்தி சுமித்ராவை பார்த்து, "எப்படி இருக்கு லைஃப்" என்றாள்.

"இதை விட லைஃப் நல்லா இருக்கும்னு தோணலை" என்றாள் சிவாவை பார்த்து மனமார்ந்து.

"என்ன சிவாவை பார்த்து இப்படி ஒரு காம்ப்ளிமெண்டா" என்று போலியாக சக்தி ஆச்சர்யப்பட.

"வொய் சக்தி? வொய்?" என்றான் சிவா.

"பின்ன எத்தனை பேரை கல்யாணம் பண்ணிக்கிட்டாலும்ன்னு கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி டையலாக் அடிக்கறீங்க."

"அது ஒரு டைமிங்க்ல ரைமிங்கா வர்றது."

"என்னது டைமிங் ரைமிங். பொண்ணுங்க இந்த மாதிரி சொன்னா நல்லாயிருக்குமா."

"நல்லாயிருக்காதுதான்."

"அப்போ நீங்களும் சொல்ல கூடாது. என் சார்பா ஒரு ரெண்டு அடி அடிங்க சுமித்ரா" என்றாள் சக்தி.

இதுதான் சாக்கென்று சுமித்ரா தோளில் ஒரு அடி வைக்க.

''என்ன வைஷ்ணவி உனக்கு கேட்டுச்சா. கேட்கலை தானே. இன்னும் பலமா ஒரு அடி குடு சுமித்ரா'' என்றாள் சக்தி.

தன்னிடமா சக்தி பேசினார்கள் என்பது போல வைஷ்ணவி விழிவிரித்து பார்க்க...

''எதுக்கு இப்படி முழிக்கற, இப்படி பார்வையாலேயே ஆளை முழுங்கிடுவோம்னு தான் உங்கண்ணன் கண்ணாடியை போட்டுட்டே சுத்தறானோ'' என்றான் பிரபு.

''என்னை ஏன்டா இழுக்கற'' என்றான் கார்த்திக்.

''நீயும் உங்கண்ணாடியும் சகிக்கலை. ஏன் மேடம் இதை போட்டா தான் இவன் அழகா இருக்கான்னு சொன்னீங்களா'' என்றான் பிரபு சக்தியை பார்த்து.

''நீங்க சொல்றது தான் ஒருவகையில் நிஜம். அவன் பார்வை யாருக்கும் தெரியக்கூடாதுன்னு தான் இதை போட்டுட்டு சுத்தறான்'' என்றாள் சக்தி.

அடுத்த நிமிடம் கார்த்திக் அதை கழட்டி கீழே வைக்க...

''அதை அவன் தலையை சுத்தி தூக்கி வீசுங்க பிரபு,'' என்றாள் சீரியஸாக சக்தி. மனதினில், ''அதை போட்டு போட்டு தான் என்னை ஏமாத்தியிருக்கான். என்னால அவனை கண்டுபிடிக்க முடியாம போயிடுச்சு'' என்று நினைத்துக் கொண்டே.

# 31

**நின்னைச் சரணடைந்தேன் - கண்ணம்மா!**

**நின்னைச் சரணடைந்தேன்!**

**பொன்னை உயர்வை புகழை விரும்பிடும்**

**என்னைக் கவலைகள் தின்னத் தகாதென்று...**

- பாரதி

கண்ணாடியை தலையை சுற்றி வீசுங்கள் என்று சொன்ன சக்தியின் குரலில் அத்தனை கோபம்.

சில நொடிகளே கட்டுக்குள் வந்தாள். தன் பிரச்சனையை அடுத்தவர் மத்தியில் கொண்டு வருவதில் விருப்பமில்லை. அதே சமயம் அவர்கள் மகிழ்ச்சியையும் கெடுக்க விருப்பமில்லை.

முகத்தை புன்னகைக்கு மாற்றியவள், ''என்கிட்ட குடுங்க பிரபு'' என்று கார்த்திக்கின் கண்ணாடியை வாங்கிக் கொண்டாள்.

பிறகு பேரர் வர தேவையானதை சொல்ல, வேறு பேச, என்று பொழுது இனிமையாக கழிந்தது.

சக்தி எல்லோரிடமும் கலகலப்பாக பேச, கார்த்திக் எண்ணி ஒன்றிரண்டு வார்த்தைகளே, அவனாக எதுவும் பேசவில்லை, யாராவது பேச்சில் இழுத்தாலும் முடிந்த வரை புன்னகையை மட்டுமே பதிலாக கொடுத்தான்.

இருவர் பார்வையும் ஒருவரை ஒருவர் நிமிஷத்துக்கு நிமிஷம் மற்றவர் கவனம் கவராமல் இயல்பு போல தழுவி மீண்டது.

சக்தி இப்போது அவனை சைட் அடித்துக் கொண் டிருந்தாள் என்பது தான் நிஜம். முன்பு அவனை தன்னக்குரியவன் கோலத்தில் பார்க்கவில்லை. அவன் தனது தேவை என்றுணர்ந்த போது அவன் விலகி யிருந்தான். அவன் தேடி வந்த போது கோபம் மட்டுமே பிரதானமாயிருந்தது.

இப்போது தான் சற்று இயல்பாக இருந்தாள். அதனால் கார்த்திக்கின் தோற்றத்தை ரசித்துக் கொண்டிருந்தாள்.

நன்றாக தான் இருக்கிறான். ரசித்து பார்த்தாள். கம்பீரமாக இருந்தான். எப்போதும் கார்த்திக்கிடம் எந்த அசட்டுதனங்களும் காண முடியாது. பேச்சில் நடை உடை பாவனைகளிலும் எப்போதும் ஒரு பெரிய மனித தோரணை இருக்கும்.

அவனுடைய முகம் லட்சணம் எல்லோரையும் மரியாதையாக தான் பார்க்க வைக்கும். கார்த்திக்கின் மீசை இப்போது சக்தியை அதிகம் கவர்ந்தது. எப்போதும் இருப்பதை விட இன்னும் அதிகம் இறக்கி சற்று தொங்கு மீசையாக வைத்திருந்தான்.

அவளை பொறுத்தவரை மீசை புருஷ லட்சணம்.

பெண் பார்க்கும் படலம் என்று யாராவது சொன்னால் சக்திக்கு கோபம் வரும். ''ஏன் பொண்ணை மட்டும் தான் பார்க்கணுமா. மாப்பிள்ளையை பார்க்கக் கூடாதா?'' என்று.

அது போல அவளின் மாப்பிள்ளையை அவள் பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் அதை வெளிப்படுத்தும் எண்ணம் அவளுக்கு சற்றும் இல்லை.

விருந்து முடிந்து அதன் பிறகும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தனர். ''கிளம்பிட்டியா சக்தி பத்து மணிக்கு மேல ஆச்சு'' என்று தெய்வானையிடம் இருந்து போன் வர.

''லேட் ஆச்சு'' என்றபடி எழுந்தாள்.

''தேங்க்ஸ் ஃபார் தி ட்ரீட் சிவா.''

''நீங்க எப்போ இந்த மாதிரி ட்ரீட் குடுக்க போறீங்க மேடம்'' என்று பிரபு சொல்ல.

''அது கார்த்திக் கூட இருக்குற வரை கஷ்டம் தான்'' என்றான் சிவா.

சக்தியும் கார்த்திக்கும் ஸ்தம்பித்து நிற்க.

''என்ன சிவா சொல்றீங்க?'' என்று பிரபு கேட்க.

''கார்த்திக் கூட இருந்தா யாருக்கும் சக்தியோட பேச பயம். அப்புறம் எப்படி அவங்க கல்யாணம் நடக்கும். வர்ற மாப்பிள்ளைங்க எல்லாம் கார்த்திக்கோட ஒரு பார்வையில கிரேட் எஸ்கேப் ஆகிடுவாங்க'' என்று உடைத்தே சொன்னான்.

கார்த்திக் ஒரு மென் நகையோடு, ''பேசினாலும் பேசலைன்னாலும் காதல் வரணும்னா வந்து தான் ஆகும்'' என்றான் கார்த்திக்.

''அப்போ உங்களுக்குள்ள ஒரு பெரிய காதல் கதை இருக்குன்னு சொல்லுங்க! உங்க குரலை பார்த்தா அப்படிதான் தெரியுது.''

அதற்கும் ஒரு புன்னகை கார்த்திக்கிடம் இருந்து.

அவனின் புன்னகையை பார்த்த சக்திக்கு எரிச்சலாக இருந்தது. ''இவனுக்கா லவ்வா'' என்று சக்தி கிண்டலாக கேட்டாள்.

''இவனுக்கா'' என்று சக்தி கேட்டது வைஷ்ணவிக்கு ஒரு மாதிரி இருந்தது. அவன் இவன் என்று ஏன் பேசுகிறார்கள் என்பது மாதிரி.

வைஷ்ணவியின் இயல்பு குணம் தலை தூக்க, ''ஏன் அண்ணாவை அவன் இவன்னு பேசறீங்க'' என்று கேட்டே விட்டாள்.

எல்லோருடைய பேச்சும் அப்படியே நின்றது. நன்றாக போய் கொண்டிருந்ததில் ஏதோ அபஸ்வரம்.

பிரபு வைஷ்ணவியை முறைத்தான். ''இல்ல, அண்ணா பெரியவங்க, அதான்'' என்று வைஷ்ணவி இழுத்தாலும், என்னவோ தப்பாக பேசிவிட்டோம் என்று பிரபுவின் முறைப்பிற்கு பயந்து சுமித்ராவிடம் போய் நின்று கொண்டாள் வைஷ்ணவி.

''என்ன பேசற வைஷ்ணவி, கார்த்திக் சக்தி வீட்ல நிறைய வருஷமா இருக்கார். அவங்க கிட்ட வேலை'' என்று சிவா சொல்லிக் கொண்டு இருக்கும் போதே,

''அண்ணா... பெரியவங்க'' என்ற வார்த்தை சக்தியை உசுப்ப, கோபம் வந்தே விட்டது. இனி நின்றால் ஏர் போர்ட் போல ஏதாவது பேசி விடுவோம் என்று தோன் றியது.

அப்போதும் வைஷ்ணவியை பார்த்து, ''அவன் பெரியவன்னு எனக்கு தெரியவே தெரியாது. அவன்

என்னை விட சின்னவன்னு சொல்லியிருந்தான். இப்போ தான் பெரியவன்னு தெரியும். திடீர்ன்னு என்னால மாத்த முடியலை. ட்ரை பண்றேன்'' என்றாள் சொல்லும் போதே குரல் கமறியது.

ஏமாற்றப்பட்டது போல தோன்ற...

நின்றால் உடைந்து விடுவோம் என்று பயந்து, வேகமாக படியை நோக்கி போகப் போனாள்.

கொஞ்ச தூரத்திற்கு மேல் நகர முடியவில்லை. கார்த்திக் அவளின் கையை பிடித்து நிறுத்தியிருந்தான்.

''கையை விடு கார்த்திக்'' என்று சொல்லியபடி கையை இழுக்கப் பார்த்தாள். சக்தியால் முடியவேயில்லை.

''என்னோட லவ் ஸ்டோரியை கேட்டுட்டுப் போ'' என்றான் ஒரு முடிவோடு.

''அதை கேட்டு நான் என்ன பண்ண போறேன்.''

''என்ன பண்றதுன்னு அப்புறம் டிசைட் பண்ணு, வா.''

''வேண்டாம் கார்த்திக்! நான் போறேன்!'' சொல்லும் போது குரல் உடைந்தே விட்டது.

''சாரி! சாரி! நான் உங்களை ஹர்ட் பண்ணனும்னு சொல்லலை!'' என்று வைஷ்ணவி ஏறக்குறைய கெஞ்சினாள். ''தானா வந்துடுச்சு'' என்று சொல்ல.

சட்டென்று சுதாரித்தவள், ''இட்ஸ் ஓகே'' என்றாள்.

பிடிவாதமாக சக்தியை இழுத்து போய் அமர வைத்தான் கார்த்திக். அவள் முன் மண்டியிட்டு அமர்ந்து அவளின் முழங்கால்களுக்கு மேல் அழுத்தி பிடித்து அவள் எழுந்து கொள்ள முடியாமல் செய்தான்.

"கேளு ப்ளீஸ்" என்றான் கெஞ்சலான குரலில்.

அவன் குரலும் அவளை எழ விடாமல் செய்தது.

எல்லோரும் அவர்களை பார்த்து அவர்களை விட்டு சற்றே தள்ளி நின்றிருந்தனர்.

"அப்போ நான் பிளஸ் டூ முடிச்சிருந்தேன். என் தாத்தா கூட சண்டை போட்டுட்டு வீட்டை விட்டு அந்த ஊரை விட்டு வந்துட்டேன்."

"இங்க இருக்குற ஒரு லாட்ஜ்ல தங்கியிருந்தேன். என் அப்பாவோட பிரண்டை தேடிட்டு இருந்தேன். ஒரு நாள் காலையில் டீ குடிக்க போனேன். போகும் போது ஒரு பொண்ணு என்னை க்ராஸ் பண்ணி போனா."

"ஏஞ்சல் மாதிரி இருந்தா."

"என்னை அவளோட முகம் அவ்வளவு கவர்ந்துச்சு. ஜஸ்ட் ஒரு சில நொடி தான் பார்த்தேன். அந்த பொண்ணு போயிட்டா."

"மறுபடியும் டீ குடிச்சிட்டு திரும்ப வரும்போது, அந்த பொண்ணு வருமான்னு பார்த்துக்கிட்டே வந்தேன். அப்போ எதிர்ல அந்த பொண்ணு திரும்ப வந்துட்டு இருந்தா."

"வண்டில வந்துட்டு இருந்தா. அவ வரும் போது ஒரு பையன் சைக்கிள்ல வேகமாக ஒரு கட் ரோட்ல இருந்து வந்தான்."

"அந்த பொண்ணு கண்ட்ரோல் பண்ண முடியாம இடிச்சிட்டா. அந்த பையன் வேகமா வந்ததால இடிச்சவுடனே அந்த பையனை தூக்கி எறிஞ்சிடுச்சு."

''பையன் மண்டை உடைஞ்சு ரத்தம் கொட்டுது. அவ முகத்துல அப்படி ஒரு பயம். உடனே ஓடிப்போய் வண்டியை வாங்கிட்டு அவளை அனுப்பி விட்டு டேன்.''

சக்திக்கு அப்போது தான் கார்த்திக் அவளை பற்றி தான் பேசுகிறான் என்று புரிந்தது. ஒரு கலவையான உணர்வோடு அவன் பேசுவதை ஊன்றி கேட்க ஆரம்பித்தாள்.

''அது மட்டும் தான் எனக்கு தெரியும். அங்க கும்பல் கூட ஆரம்பிச்சது. நான் தான் அந்த பையனை இடிச்சிட்டேன்னு நினைச்சு வாங்குனேன் பாரு அடி, வந்தவன் போனவன்னு அத்தனை பேரும் அடிச்சாங்க.''

''தர்ம அடி. வலி உயிர் போச்சு.''

''மயங்கிட்டேன்னு நினைக்கிறேன்.''

அவன் சொல்ல சொல்ல அந்த நாளின் ஞாபகத்திற்கு போனாள் சக்தி.

''கண்முழிச்சு பார்த்தா ஹாஸ்பிடல்ல இருக்கேன். என்ன நடந்திச்சுன்னு கூட எனக்கு தெரியாது. பக்கத்துல பார்த்தா என் ஏஞ்சல், எனக்கு எதுவும் ஞாபகத்துக்கு வரலை. நான் எதுக்கு வீட்டை விட்டு வந்தேன்னு என் ஞாபகத்துலயே இல்லை. அங்க எப்படி வந்தேன்னு கூட தெரியாது.''

''ரெண்டு நாள் அடிபட்டு மயக்கமாகவே இருந் திருக்கேன். உடம்பு முழுக்க இருந்த வலி, எனக்கு அவளைப் பார்த்ததும் தெரியவேயில்லை.''

சக்தியை பற்றி ஏதாவது சொல்லுவான் என்று பார்த்தால் இவன் யாரை பற்றி சொல்லுகிறான் என்பது போல பிரபுவும் சிவாவும் பார்த்திருக்க,

வைஷ்ணவி, ''மறுபடியும் நான் இன்னைக்கு அத்தான் கிட்ட அடி வாங்க போறேன் போல'' என்று பயந்து நிற்க.

''என்னை திருமணம் செய்வேன் என்று வீட்டை விட்டு போய் அப்பொழுதே ஒரு பெண்ணிற்காக இவ்வளவு செய்திருக்கிறானா'' என்பது போல சுமித்ரா நினைத்திருக்க.

சட்டென்று சிவாவை பார்த்து திரும்பியவன், ''நான் எப்படி ஹாஸ்பிடல் வந்தேன்னு கேட்க தோணலை உங்களுக்கு, கேளுங்க சிவா'' என்றான்.

கார்த்திக் எதற்கு அப்படி கேட்கிறான் என்று புரியாத போதும், ''எப்படி வந்தீங்க'' என்றான் சிவா.

''எனக்கே தெரியலை. கண்முழிச்சப்போ என் முன்னாடி ஏஞ்சல் இருந்ததனால எனக்கு கேட்கணும்னு தோணலை. நான் எப்படி வந்தேன்'' என்று அவனுக்கு அவனே கேட்பது போல கேட்க,

''என்னடா பேசறான் இவன்'' என்பது போல் சுமித்ரா, வைஷ்ணவி, பிரபு, சிவா பார்த்திருக்க.

''நான் போய் அப்பாவை கூட்டிட்டு வந்தேன். அங்க பார்த்தா நீ மட்டும் ரோட்ல அடிபட்டு மயக்கமா இருந்த. நான் இடிச்ச பையன் அங்க இல்லை. அப்பாவும் கருப்பண்ணனும் உன்னை தூக்கிட்டு போய் ஹாஸ் பிடல்ல சேர்த்தாங்க'' என்றாள்.

எல்லோர் முகத்திலும் அப்படி ஒரு சந்தோஷமான புன்னகை.

''என்ன சிவா ஏஞ்சல் தானே இவங்க.''

''நிச்சயமா.''

''ஆனா பாருங்க இந்த ஏஞ்சல் நான் கண் முழிச்ச உடனே ஏதோ பேசும்போது என்னை அண்ணான்னு கூப்பிட்டிச்சு.''

''என் மனசு தாங்குமா சொல்லுங்க. இவங்க யாரு என்னன்னு தெரியாது. ரொம்ப நேரம் பார்த்தது கூட கிடையாது. சில நிமிஷம் பார்த்திருந்தாலே அதிகம். அப்போவே அவ்வளவு அடி வாங்கி படுத்திருக்கிறேன்.''

''அடிபட்ட பையன் சீரியசா இருக்கான். நான் தான் இடிச்சேன்னு நினைச்சு என் மேல கேஸ் ஆகிடுச்சு. அப்போ கூட நான் இடிக்கலைன்னு சொல்லலை. அந்த பையனுக்கு ஏதாவது ஒன்னு ஆச்சுன்னா நான் கண்டிப்பா ஜெயில் போற சூழ்நிலை.''

சக்தியிடம் திரும்பி, ''இப்படி இருந்த என்னை பார்த்து நீ அண்ணான்னு சொல்ற.''

''எனக்கு சட்டுன்னு என்ன சொல்றதுன்னு தெரி யலை. நீ அண்ணான்னு கூப்பிடக் கூடாதுன்னு நினைச்சு, நான் உன்னை விட சின்னவன்னு சட்டுன்னு சொல்லிட்டேன், அதும் ஜஸ்ட் பத்து நாள்ன்னு சொன் னேன்.''

''அப்போ தானே பிரண்ட்ஸ் ஆக முடியும். மேல டெவலப் ஆனாலும் பத்து நாள் ஒரு பெரிய விஷயமா

தெரியாது இல்லியா, ஒரே கிளாஸ் மாதிரி தானே வரும்.''

சக்தியின் மனதின் பாரங்கள் எல்லாம் பனி போல விலகியது. ''இதற்காக தான் வயதை குறைத்து கூறி னானா. எனக்காக அப்போதே அவ்வளவு அடி வாங்கி யிருந்தானா.''

சக்தியின் முகம் செம்மையை பூச.

''என் டேட் ஆப் ஃப்ர்த் உனக்கு எப்படி தெரியும்.''

''அப்போ தான் நீ என்னை விசாரிக்க வந்த போலீஸ் கிட்ட எனக்கு பதிலா மாத்தி உன் டீடைல்ஸ் சொல் லிட்டு இருந்த, அதை வெச்சு சொன்னேன்.''

''அப்போவே நீ பெரிய கிரிமினல்ன்னு சொல்லு.''

''ம், உன்னை பார்த்த உடனே ஆகிட்டேன்.''

''ஒரு வாரம் கோல்டன் டேஸ் இன் மை லைஃப். அப்புறம் ஒரு நாள் உங்கப்பா என்னை உங்க வீட்டுக்கு கூட்டிட்டு போனார். அப்போ தான் அது நான் தேடி வந்த வீரமணி அய்யாவோட வீடுன்னு தெரியும்.''

''அதுக்கப்புறம் இந்த விஷயத்தை என்னால சொல்ல முடியலை.''

''ஏன்?''

சிறு பிள்ளைக்கு சொல்வது போல் வேறு விஷ யங்கள் அவள் ஞாபகத்தில் அப்போது வரக்கூடாது என்ப தற்காக...

''பதினஞ்சு வயசு பொண்ணுகிட்ட யாராவது காதல் சொல்வாங்களா. அது தப்பு.''

''அப்போ இப்போ சொல்லு'' என்றாள் சிறு பிள்ளையை போல அவளும். அவளுக்கும் வேறு விஷயங்கள் ஞாபகத்தில் வரவில்லை.

பார்த்துக் கொண்டிருந்த சிவா, சுமித்ரா, வைஷ்ணவி, பிரபு எல்லோரும் சத்தம் போட்டே சிரித்தனர்.

''என்ன சிவா என்னோட லவ் ஸ்டோரி எப்படி இருக்கு?''

''நிச்சயம் சூப்பர் தான். ரெண்டு நிமிஷம் பார்த்து, அவங்களுக்காக ரெண்டு நாள் மயக்கமா இருக்குற அளவுக்கு போயிருக்கீங்க.''

''கோபம் போயிடுச்சா.''

''நீ ஏன் வயசை குறைச்சு சின்னவன்னு சொன்னேன்ற விஷயத்துக்கு போயிடுச்சு. மத்தது அப்படியே தான் இருக்கும்.''

''அதுக்கும் காரணம் சொல்லிடேண்டா. அதுவும் போகட்டும்'' என்று பிரபு எடுத்து கொடுக்க.

''அது என்னால இப்போ மட்டுமில்லை, எப்போவுமே முடியாது'' என்றான் ஒரு கசந்த முறுவலுடன். அவன் தந்தை அவன் ஞாபகத்தில் வந்தார்.

அவன் குரலில் இருந்த கனம் அங்கே ஒரு கனமான அமைதியை உலவ விட்டது. யாருக்கும் என்ன பேசுவ தென்று தெரியவில்லை.

எல்லோரும் நிற்க...

எந்த விளக்கமும் கார்த்திக் சொல்லாத போதும், சகதிக்குள் அது ஏன் என்ற கேள்வி இருந்த போதும்,

அவன் செய்தது ஒத்துக் கொள்ள முடியாத போதும், அது துரோகம் என்று தெரிந்த போதும், அவள் மனதின் அவன் மேலான சஞ்சலங்கள் அப்படியே இருந்த போதும்,

எதுவாகினும் அவனை மன்னிக்க தயாராக இருந்தாள். அந்த க்ஷணத்தில் ஒரு பயம் இது நடக்குமா என்று.

''பாஸ்!'' என்றபடி மூச்சு வாங்க வந்து நின்றான் செல்வம். அவன் வந்து நின்ற கோலம், ஃபார்மல்சில் இல்லாமல் காசுவல்சில் ஷார்ட்ஸ் டீ ஷர்ட்டில் இருந் தான்.

''என்னடா, இங்க வந்து நிக்கற.''

''என்ன...டா...வா... நான் என்ன சொன்னேன். மேடமை வீட்ல விட சொன்னேனா இல்லையா.''

''ஆமா! சொன்ன! நானும் விடறேன்னு சொல் லிட்டேனேடா.''

''ஆனா எப்போ விடுவீங்கன்னு சொல்லலையே'' என்றான் சிவாஜி பாணியில்.

எல்லோரும் சிரித்தனர்.

''அங்க மேடமோட அம்மா என்னை தாளிச்சு எடுக்கறாங்க.''

''என்கூட இருக்காங்கன்னு சொல்ல வேண்டியது தானேடா.''

''தெரியாத்தனமா அதை வேற சொல்லி தொலைச் சிட்டேன். சொன்னதுக்கப்புறம் கொஞ்ச நேரம் சும்மா இருந்தவங்க, நீங்க ரெண்டு பேரும் சண்டை

போட்டுக்குவீங்கன்னு என்னை போ போன்னு ஒரே நொச்சு.''

''நானும் கதவை திறந்துட்டேன், வண்டியை எடுத்துட்டேன், ஸ்டார்ட் பண்ணிட்டேன், ஹோட்டல்ல இருக்கேன்னு, எவ்வளவு நேரம் சமாளிக்கறது, முடியலை.''

''முதல்ல கிளம்புங்க.''

''அதுக்குன்னு டிரஸ் கூட சேஞ் பண்ணாம இப்படியா வருவ'' என்று சொல்லி கார்த்திக் சிரிக்க.

''ம், கிண்டலு, ஏன் பண்ண மாட்டீங்க. நான் போறேன், கதவை தொறந்துட்டேன், வண்டில ஏறப்போறேன்னு எனக்கும் மேல அவங்க ப்ளாக்மெயில் பண்றாங்க, அலறி அடிச்சிட்டு ஓடி வர்றேன்.''

சக்தி அவளின் அம்மாவை அழைத்தவள், ''அம்மா வந்துடறேன் மா! கார்த்திக் கூட தான் இருக்கேன். இங்கே தான் இன்னும் எல்லோரும் இருக்காங்க. இங்க என்னை பேச விடாம வீட்டுக்கு போகலாம்னு செல்வம் டிஸ்டர்ப் பண்றான்'' என்று சொல்ல...

''போச்சுடா!'' என்று தலையில் கை வைத்து அப்படியே தரையில் உட்கார்ந்தான் செல்வம்.

''போனை அவன்கிட்ட குடு!'' என்று தெய்வானை சொல்ல,

''அம்மா உன் கிட்ட பேசணுமாம்'' என்று சக்தி அவனிடம் நீட்ட,

''இதுக்கு நீங்க என்னை ரெண்டு அடி அடிச்சிருக் கலாம்'' என்று முனகியபடியே செல்வம் போனை வாங்கினான்.

''ரெண்டு பேரும் சண்டை போடலையே.''

''பார்த்தா அப்படி தெரியலைங்கமா.''

''அப்போ நீ வந்துடு.''

''சரிம்மா'' என்று சக்தியிடம் போனை கொடுத்தவன்,

அப்போதுதான் சூழ்நிலையை கவனித்தான். சக்தி சேரில் அமர்ந்திருக்க, அவள் முன் மண்டியிட்டு கார்த்திக் அமர்ந்திருந்தான். அவனின் கைகள் சக்தியின் மடியில் அவளை எழுந்து கொள்ள விடாமல் அழுத்தி பிடித் திருந்தது.

எழ முயற்சித்தால் அழுத்தி பிடிக்கலாம். ஆனால் சக்தி தான் எழ முயற்சிக்கவேயில்லையே.

செல்வத்தின் முகத்தில் ஒரு குறும்பு புன்னகை. போனை கொடுத்தவன் எதற்கு இப்படி சிரிக்கிறான் என்று பார்த்த சக்தி, அவனின் பார்வையை உணர்ந்து, மெதுவாக கார்த்திக்கின் கையை விலக்கினாள்.

கார்த்திக்கும் அதை உணர்ந்தவனாக கையை எடுத் தான்.

இருவரையும் ரசனையோடு பார்த்த செல்வம், அந்த குறும்பு புன்னகையோடே, ''கிளம்புங்க, கிளம்புங்க'' என்றான்.

''அம்மா சொன்னாங்க தானே, நீங்க போங்க'' என்று சக்தி சொல்ல,

''அம்மா சொல்வாங்க, ஆனா என்னால விட முடியாது. பசங்க எவ்வளவு நேரம்னாலும் வெளில இருக்கலாம். பொண்ணுங்க இருக்க முடியாது. யார் கூட இருந்தாலும் என்னால விட முடியாது.''

''அஞ்சு அக்கா தங்கச்சியோட பொறந்தவன் நான். இங்க மூணு பொண்ணுங்க இருக்காங்க. முதல்ல கிளம்புங்க'' என்றான் எல்லோரையும் பார்த்து.

சக்திக்கு கிளம்ப மனமேயில்லை. ''இப்போ தான் வாய் திறந்து கார்த்திக் லவ் ஸ்டோரிய சொல்லி இருக்கான். அப்போவும் லவ் சொல்லலை. அதுக்குள்ள இவன் வேற'' என்று செல்வத்தை பார்த்து முறைக்க,

''நீங்க என்னை பார்த்து முறைக்கவே கூடாது. சொல்லப் போனா எனக்கு அஞ்சு சிஸ்டர் இல்லை, ஆறு சிஸ்டர், அந்த வாக்குறுதிக்கு அப்புறம் தான் சார் என்னை உங்க கூட வேலை பார்க்க விட்டாரு, அதுக்காக'' என்று அவன் அடிவாங்கியதை சொல்ல போகும்போது வேகமாக எழுந்து வந்து அவன் வாயை மூடிய கார்த்திக்.

''கிளம்பலாம்'' என்றான் எல்லோரையும் பார்த்து.

கார்த்திக் சொன்ன அவசரத்தை பார்த்து எல்லோரும் மனம் விட்டு சிரித்தனர்.

அவர்களுடன் சேர்ந்து சிரித்த கார்த்திக்கும், ''என்னை இன்னைக்கு காமெடியன் ஆக்கிட்டடா நீ'' என்று செல்வத்தை பார்த்து சொல்லிக் கொண்டே கையை எடுக்க,

''மொத்தமா சரண்டர் ஆகி கால்கிட்ட உட்கார்ந்துட்டீங்க. நீங்க காமெடியனா. ஆக்ஷன் ஹீரோல இருந்து

எப்போ பாஸ் நீங்க லவர் பாயா மாறினீங்க'' என்றான் கார்த்திக்கிற்கு மட்டும் கேட்குமாறு.

திரும்ப அவன் வாயை மூடிய கார்த்திக், ''மானத்தை வாங்காதடா'' என்றான் செல்வத்திற்கு மட்டும் கேட்குமாறு.

என்னவென்று புரியாத போதும் எல்லோர் முகத்திலும் புன்னகை.

சக்தி என்ன பேசுகிறார்கள் என்பது போல் ஆர்வமாக பார்த்தாள். ஒரு உரிமையான புன்னகையோடு அவளை திரும்ப பார்த்தான் கார்த்திக்.

**''உன்னிடம் மயங்குகிறேன்...**

**உள்ளத்தால் நெருங்குகிறேன்...**

**எந்தன் உயிர் காதலியே...**

**இன்னிசை தேவதையே...''**

கார்த்திக்கின் கண்கள் இதை பிரதிபலித்தன.



# 32

**பேச்சுக் கிடமேதடி – நீ**

**பெண்குலத்தின் வெற்றியடி**

**ஆச்சர்ய மாயையடி – என்றன்**

**ஆசைக் குமரியடி**

– பாரதி

எல்லோரும் கிளம்பி கீழே வந்தனர். பிரபு, வைஷ்ணவியை முதலில் அனுப்பினான் கார்த்திக்.

பின்பு சிவாவையும் சுமித்ராவையும் கிளப்பினான்.

அவர்களும் சென்ற பிறகு செல்வத்தை பார்க்க, ''ம்கூம் நான் போகமாட்டேன். முதல்ல நீங்க கிளம்புங்க'' என்றான்.

எப்பொழுதும் போல சக்திக்கு கார்த்திக் சென்று கார் கதவை திறந்து விட....

''ஒரே ஒரு பாஸ வெச்சிட்டு நான் படற அவஸ்தை இருக்கே...'' என்று நொடித்தவன் அவன் திறந்த கதவை மூடினான்.

கார்த்திக்கும் சக்தியும் கேள்வியாக பார்த்தனர்.

கார்த்திக் திறந்தது காரின் பின் கதவு, அதை கடுப்பில் அறைந்து சாத்திய செல்வம், முன் பக்க கதவை திறந்து, ''ஏறுங்க மேடம்'' என்றான்.

சக்திக்கு சிரிப்பு. அவள் சிரித்த முகத்தோடே ஏறினாள்.

''டேய், இன்னைக்கு நீ ரொம்ப பண்றடா.''

''என்ன பண்றது உங்களுக்கு கல்யாணம் ஆன பிறகாவது எனக்கு பொண்ணு பார்ப்பீங்கன்னு தான்'' என்று சொல்லியபடியே டிரைவர் சீட்டின் கதவை அவனுக்காக திறந்து விட்டான்.

புன்னகையோடே கார்த்திக் ஏற, ''லேட் பண்ணாதீங்க பாஸ், சீக்கிரம் வீட்டுக்கு கொண்டு போய் விட்டுடுங்க'' என்று சொல்லியபடி அவர்கள் கிளம்பிய பிறகு தான் அவன் கிளம்பினான்.

“உனக்கு நல்லா ஒரு அடிமை சிக்கியிருக்கான்” என்று சொல்லியபடியே சக்தி பேச்சை துவங்கினாள்.

“அவன் உன்கிட்ட வேலை பார்க்கிறான்.”

“என்ன நடக்குதுன்னு உன்கிட்ட சொல்றான் தானே.”

“இல்லை சக்தி, சொல்ல மாட்டான். முதல் நாள் சொன்னதோட சரி, அதுக்கப்புறம் ஒரு வார்த்தை கூட சொன்னது கிடையாது. அடிச்சு கேட்டாலும் வாய் தொறக்க மாட்டான்.”

“இப்போ தான் இந்த இன்விடேஷன் லிஸ்ட் எழுதும் போது தான் வந்து என் ஹெல்ப் கேட்டான்.”

“அப்போ கூட நான் லிஸ்ட் மட்டும் எழுதி கொடுக் கறதா தான் இருந்தேன். ஆனா நைட் ஒரு மணிக்கு நீங்க செல்வத்துக்கு போன் பண்ணுனீங்களா, தூக்கத்துல கூட இந்த யோசனையான்னு இருந்தது. அதுவுமில்லாம நைட் அந்த நேரத்துல நீங்க போன் பண்ணினது எனக்கு பிடிக்கவேயில்லை. அதுக்கப்புறம் தான் நான் மறுபடியும் அய்யாவை பார்க்க வந்தேன்.”

அவன் பிடிக்கவேயில்லை என்று சொன்னது சக்தி யின் முகத்தில் புன்னகையை அதிகப்படுத்தியது.

“இந்த நீங்க... விட்டுடேன். அப்புறம் மறுபடியும் உன் தங்கச்சி சண்டைக்கு வருவா. என் அண்ணா உங்களை மரியாதையா கூப்பிடனுமான்னு.”

“அவ எப்பவும் அப்படிதான் வெடுக் வெடுக்ன்னு பேசுவா. ஆனா பிரபு நல்லா கண்ட்ரோல் பண்ணுவான். அதனால பிரச்சனையில்லை. அன்னைக்கு ஏர்போர்ட்ல

உன்கிட்ட பேசினதுக்கு அப்புறம் பிரபுகிட்ட ஏர்போர்ட் லயே அடிவாங்கினா போல.''

''அடிச்சாங்களா, அதுவும் பப்ளிக்ல, தப்பில்ல.''

''தப்புதான். ஆனா ரெண்டு பேர்க்குள்ள நான் போக முடியாது. ஏன்டா அடிச்சேன்னு கேட்டேன். உன் தங்கச்சியை எனக்கு கல்யாணம் பண்ணி குடுக்குற ஐடியா இருந்தா இந்த விஷயத்துல தலையிடாதனான்.''

''நீ அடிச்சுக்கோ கொஞ்சிக்கோ என்னவோ பண் ணிக்கோன்னு விட்டுடேன். ரெண்டும் ரொம்ப க்ளோஸ், யாருக்கு தெரியும், தனியா அவகிட்ட மொத்து வாங்கு வானா இருக்கும்'' என்றான்.

கார்த்திக் சக்தியிடம் பேசுவான். அவளை இதை செய், அதை செய், இதை செய்யாதே, அதை செய்யாதே என்று தான் சொல்லுவான். ஆனால் இப்படி அவனைப் பற்றி பேசியதே இல்லை.

சக்திக்கு தெரியவில்லை கார்த்திக் யாரிடமும் இது போல பேசியது இல்லை. பேசவும் மாட்டான் என்று.

''சொல்லேன் கார்த்திக், உன்னை பத்தி. எனக்கு உன்னைப் பத்தி தெரிஞ்சுக்கணும் போல் இருக்கு.''

''என்னைப் பத்தியா? என்ன?''

''உன் லவ் ஸ்டோரிய சொன்ன. ஆனா ஏன் வீட்டை விட்டு வந்த. எதுக்கு அப்பா கிட்ட வந்த. ஏன் இப்படி பண்ணின?'' என்று நல்லவிதமாக கேட்டாள்.

''நீ ஏன் எங்களை ஏமாற்றினாய்'' என்பதை அவனின் மனம் புண்படாமல் சக்தி கேட்க வருவது கார்த்திக்கிற்கு நன்கு புரிந்தது.

காரை ஓரமாக நிறுத்தியவன், சக்தியை திரும்பி பார்த்தான்.

''என்னை பத்தி தெரியலைன்னா. என்னை ஏத்துக்க மாட்டியா.''

அவன் குரல் அவளிடம் அவளை யாசித்தது. ''என்ன பேசற கார்த்திக்.''

''நான் செஞ்சது எல்லாமே தப்பு தான் சக்தி. அதுக்கான காரணத்தை சொல்லி அதை ஜஸ்டிஃபை பண்ண எனக்கு விருப்பமில்லை சக்தி.''

''அதுவுமில்லாம அந்த காரணங்கள்ல எங்கப்பா வர்றார். You know I love my dad very much...'' சொல்லும்போது அவனின் கண்கள் பளபளத்தன.

''அவரை பத்தின விஷயங்கள் நான் எங்கம்மா கிட்ட கூட சொன்னதில்லை. அம்மா கிட்ட சொல்லாம நான் யார்கிட்டயும் சொல்ல கூடாது. எங்கம்மா வாழ்க்கையை அப்பாவோட சரியா வாழலை. யார் மேல தப்புன்னு எனக்கு தெரியலை.''

''எங்கம்மா ரொம்ப பாவம். சுத்தி நிறைய பேர் இருந்தாலும் கணவன் கூட இல்லாத தனிமையை அனுபவிச்சவங்க.''

''பிரிஞ்சு இருந்தாங்க. அப்புறம் அப்பா இறந்துட்டாங்க. அப்புறம் நானும் விட்டுட்டு வந்துட்டேன். இதுவரைக்கும் நான் செஞ்சது எல்லாமே அப்பாக்காக தான். எங்கம்மாவை நான் சரியா பார்க்கலைன்னு எனக்கு தோணுது'' என்றான்.

கியர் மேல் இருந்த அவனின் கை மேல் அவளின் கை வைத்த சக்தி, ''இனிமே நல்லா பார்த்துக்கோங்க'' என்றாள் ஆதரவாக.

''எனக்கு தெரியலை. எப்படி பார்த்துக்கறதுன்னு தெரியலை. ரொம்ப வருஷம் தள்ளி இருந்துட்டேன். அதுக்கு முன்னேயும் ஹாஸ்டல் தான். அவங்க என்கிட்டே பேசிக்கிட்டே இருந்தாலும் என்னால அவங்க கேட்கறதுக்கு தான் பதில் சொல்ல முடியுது. நான் பேசணும்னு நினைச்சாலும் சில வார்த்தைகள் தான் முடியுது.''

''இந்த விஷயத்துல எனக்கே என்னை பிடிக்கலை'' அந்த வார்த்தைகள் அவன் அடி மனதின் ஆழத்தில் இருந்து வந்தன.

அவனின் பற்றி இருந்த கையை இன்னும் இறுக்கியவள், ''நான் பார்த்துக்கறேன் உன் மேல குறை வராத அளவுக்கு நான் பார்த்துக்கறேன். உன்னையும் பார்க்க வைக்கிறேன்'' என்றாள்.

கார்த்திக், ''தேங்க்ஸ்'' என்று சொல்ல வர, அதை தான் அவன் சொல்லுவான் என்று தெரிந்தவள், அவன் வாயை தன் கைகளால் மூடியவள், ''ப்ளீஸ், தேங்க்ஸ் சொல்லிடாத.''

அவளின் கையை விலக்கி தன் கைகளுக்குள் வைத்துக் கொண்டான்.

''நான் நிறைய தப்பு பண்ணியிருக்கேன்.''

''சரி பண்ணலாம். எல்லாத்தையும் முடிஞ்ச வரைக்கும் சரி பண்ணலாம்.''

''சரி பண்ண முடியாத தப்பைக் கூட பண்ணி யிருக்கேன்'' என்றான் தன் தந்தையின் இறப்பை மனதில் கொண்டு,

''அப்போ அதைப் பத்தி பேச வேண்டாம்.''

''நான் எப்படி இருக்கணும்னு நினைச்சனோ அதுக்கு ஜஸ்ட் ஆப்போசிட்டா இருக்கேன் சக்தி. நல்லா படிப் பேன், படிக்க முடியலை. எனக்கு நிறைய பிரண்ட்ஸ், ஆனா இப்போ யாருமே கிடையாது. ரொம்ப நேர்மையா நல்லவனா இருக்கணும்னு நினைப்பேன். ஆனா இப்போ நான் நேர்மையானவனும் கிடையாது நல்லவனும் கிடையாது.''

சொல்லும்போது குரலில் அவ்வளவு வலி.

''நீ நேர்மையானவன் இல்லைன்னு சொல்லு. ஆனா நல்லவன் இல்லைன்னு சொல்லாத. நடந்தது நடந்த தாவே இருக்கட்டும். இனியும் அப்படியே இருக் கணும்னு அவசியம் இல்லையே. இப்போ மட்டும் என்ன கரஸ்ல படி. நிறைய பிரண்ட்ஸ் வெச்சிக்கோ. ஜாலியா இரு. நேர்மையா இரு.''

''சொல்றது ஈஸி செய்யறது கஷ்டம்.''

''செய்யணும்னு நினைச்சா தான் முடியும். முடி யாதுன்னு நினைச்சா முடியவே முடியாது. இதுவரைக் கும் எப்படியோ இனிமேலாவது வாழ்க்கையில் சில கோட்பாடுகளை கட்டுப்பாடுகளை வெச்சிக்கோ.''

''மே பீ இவ்வளவு பணம் வராம இருக்கலாம். ஆனா பணமே வராம இருக்காது. ட்ரை பண்ணுவ தானே.''

''ம்கூம் கஷ்டம். எல்லோருக்கும் அவ்வளவு லஞ்சம் குடுத்து பழக்கி வெச்சிருக்கேன். விட்டேன் என்னை முடிச்சிடுவானுங்க.''

''அட்லீஸ்ட் நேர்மையா இருக்குறவங்களை டிஸ்டர்ப் பண்ணாத.''

''ம்'' என்று தலையாட்டியவன், ''உங்க வீட்ல நான்...'' என்று ஆரம்பிக்கும்போது,

''அதையெல்லாம் வரதட்சணையா வெச்சிக்கோ'' என்றாள்.

''உங்க வீட்ல எனக்கு பொண்ணு குடுப்பாங்களா. முதல்ல சொன்னாங்க சரி, இப்போவும் சொல்வாங் களா.''

''அவங்க பொண்ணு உன்னை மட்டும் தான் கல்யாணம் பண்ணிக்குவா. அதனால அவங்களுக்கு வேற வழியே கிடையாது. அவ அம்மா வேற யோசிக் கவும் மாட்டாங்க. மணி பாரு பன்னிரண்டு உன்கூட இருக்க விட்டிருக்காங்க இல்லை.''

''அது என் மேல இருக்குற நம்பிக்கையன்றதை விட உன் மேல இருக்குற நம்பிக்கை. உன்கூட இருந்தா எந்த பயமும் இல்லை, நான் அவங்க கூட இருக்குற மாதிரின்னு அவங்களுக்கு தெரியும்.''

''இதை சொல்லக் கூடாது, இருந்தாலும் ஒரு தடவை சொல்லிடறேன். நீ ஏமாத்தி இருந்தாலும் உன்னை இன்னும் நம்பறாங்க. ரொம்ப நம்பறாங்க.''

''நான் இஷ்டப்படறேன், நம்பறேன்னு சொல்லலாம். ஆனா எங்கம்மா, எங்கப்பா எல்லோரும் நம்பறாங்க.

எப்படின்னு எனக்கே தெரியலை. ஏதோ வசியம் இருக்கு உன்கிட்ட'' என்றாள் கிண்டலாக.

''உன்னை எனக்கு மாப்பிள்ளையா பார்க்கலாமான்னு அப்பா கிட்ட கேட்டு, என் கவனத்தை அந்த மாதிரி உன்மேல திருப்பி விட்டதே என் அம்மா தான்.''

''ஆனா அம்மா நீ என் பொண்ணு வாழ்க்கையில வருவியான்னு கேட்டப்போ நான் பேசக் கூட இல்லை.''

''அது அம்மா கேட்கலை. அவங்க பொண்ணு கேட்டு விட்டிருந்தா.''

''என்ன நீயா?''

''ம்...''

''நானாவது பார்த்தவுடனே உன் மேல ஒரு க்ரஷ்ன்னு சொல்லலாம். உனக்கு...''

சிரித்தவள், ''தெரியலை. நீ என் கூட இருந்தவரை ஒன்னுமே தெரியலை. நீ என்னை விட்டு போன பிறகு உன்னை தவிர வேற ஒன்னுமே தெரியலை'' என்றாள்.

''ஆனா எனக்கு ஒரு வருத்தம் இருக்கு. ஒரு வேளை சுமித்ரா உன் வாழ்க்கையில இருந்து விலகியிருக்கலைன்னா. நீ என் வாழ்க்கையில வர்ற வாய்ப்பே இருந்திருக்காதே.''

''நடந்திருக்க வாய்ப்பிருக்கு. ஆனா நிச்சயமா நடந்திருக்கும்னு சொல்ல முடியாது. நானா ஏதாவது செஞ்சிருப்பேன். ஆனா அதுக்கான வாய்ப்பை சுமித்ரா எனக்கு குடுக்கலை.''

''இன்னும் எனக்கு கொஞ்சம் ரெஸ்பான்ஸிபிலிடீஸ் இருக்கு. மேக்ஸிமம் ஒரு மூணு மாசம் முடிச்சிடுவேன். அப்புறம் அம்மாகிட்டயும் அய்யாகிட்டையும் பேசட்டுமா.''

''இன்னும் மூணு மாசமா'' என்றாள் அதிர்ச்சியாக.

''சக்தி'' என்று சிரித்தான்.

''நீ இவ்வளவு ஃபாஸ்டா.''

''என்னவோ பயமா இருக்கு. இன்னும் கூட நீ என்கிட்டே இவ்வளவு பேசினன்றதை நம்ப முடியலை. நான் பேசறதை கேட்கறேன்னு நம்ப முடியலை. அப்பா வேற எலெக்ஷன் சீட் அது இதுன்றாங்க எனக்கு பயமா இருக்கு. நீ என்கூட இருந்தா பரவாயில்லை.''

''உங்கப்பாவோட கனவு சக்தி நீ. அதை நிறைவேத்தி வைக்கிற கடமை உனக்கு இருக்கு.''

''ஆனா எனக்கு இதுல அவ்வளவு விருப்பம் இல்லை. பீல்ட் வொர்க் பெரிய வேலை. எனக்கு கூட்டம்னாலே பிடிக்காது.''

''உங்கப்பா என்னை பார்த்து நான் பொண்ணை பெத்து வெச்சிருக்கிறதால தான் நீ என்னை ஏமாத்திட்டன்னு சொன்னார். அது அப்படி இல்லை. நீ எந்த வகையிலும் யாருக்கும் குறைஞ்சவ இல்லைன்னு நான் காட்டியே ஆகணும். எனக்காக இதை செய்.''

''எதுக்கு எனக்கு இது, தேவையில்லை. நான் பாட்டுக்கு காலேஜ் உண்டு, என் வேலை உண்டுன்னு இருந்துட்டு போறேன். என்னால முடியும்னு தோணலை.''

''முடியும்! உன்னால முடியும்! நான் எப்பவும் உன் கூட இருப்பேன். நமக்குள்ள பிரச்சனை வந்தப்போவே இருந்தேன். இப்போ இருக்க மாட்டேனா'' என்றான்.

''அரசியல் பெரிய விஷயம் கார்த்திக். சாதாரணம் இல்லை. அது ஒரு புதைகுழி. விழுந்தோம் மீண்டு வர்றது கஷ்டம். மான ரோஷம் பார்க்குறவங்க அங்க இருக்க முடியாது. விமர்சிக்க தகுதியிருக்கறவங்க மட்டுமில்லை யார் வேணா விமர்சிப்பாங்க.''

''மேல போனாலும் எனக்கொண்ணுமில்லை. கீழ போனாலும் எனக்கொண்ணுமில்லைன்ற மென்டாலிட்டி வேணும். யார் என்ன பேசினாலும் நம்மளை அது பாதிக் காத மனப்பான்மை வேணும்.''

''நான் மக்களுக்கு அதை செய்வேன் இதை செய்வேன்னு நாம என்ன தான் திட்டம் போட்டாலும் அதை செயல்படுத்த போறது அரசாங்க அதிகாரிகள் தான்.''

''அவங்க அரசியல்வாதிகளை கெடுக்கறாங்களா, இல்லை அரசியல்வாதிங்க அரசாங்க அதிகாரிகளை கெடுக்கறாங்களா கடவுளால கூட பதில் சொல்ல முடியாத விஷயம்.''

''ரெண்டு பக்கமும் நேர்மையா இருக்குறவங்க நமக்கு ஏன் வம்புன்னு ஒதுங்கி தான் போறாங்க.''

''நம்ம நேர்மையா இருக்க நினைச்சாலும் நம்மை சுத்தியிருக்குறவங்க அப்படி இருப்பாங்கன்னு சொல்ல முடியாது. அவங்களை எதிர்கொள்ற தைரியம் வேணும்.''

''எப்பவுமே பெண்களுக்கு போராட்ட குணம் அவசியம். அதுவும் பொது வாழ்க்கைக்கு வரும்போது ரொம்ப அவசியம்.''

''அதுவும் பெண்கள்ன்றப்போ முதல்ல அவங்க எதிர்கொள்றது Character assassinaton... ரொம்ப சுலபமா அவளை மத்த ஆண்களோட இணைச்சு பேசுவாங்க.''

''கல்யாணமானவங்க, கல்யாணமாகாதவங்க, வயசானவங்க, எதையும் பத்தியும் கவலைப்படமாட்டாங்க. எந்த உயர்ந்த நிலையில் இருந்தாலும் விட மாட்டாங்க. பொண்ணுன்னாலே they will do it... அதவும் வெற்றியை நோக்கி போற பெண்கள் இதனால அதிகமா பாதிக்கப்படுவாங்க'' என்றாள்.

''சொல்லப் போனா இது அரசியல்ல மட்டுமில்லை எல்லா இடத்துலையும் இருக்கு.''

''சொல்றோம் பெண்கள் வளர்ந்துட்டாங்க. உரிமை கொடுக்குறோம் அது இதுன்னு, ஆண்களை அடக்கி ஆள்றாங்க அப்படி இப்படின்னு.''

''ஆனா உண்மையா ஆண்கள் இருக்குற இடத்துல பெண்கள் இரண்டாம் பட்சம் தான்.''

''இவ்வளவு தெளிவா பேசற அப்புறம் என்ன? உன்னால முடியாம யாரால முடியும்.''

''பேசலாம் கார்த்திக். ஆனா செய்யறப்போ ரொம்ப மனதிடம் வேணும்'' என்று சொல்லிக் கொண்டிருந்த சக்தி அவனுக்கு புதிதாக தெரிந்தாள்.

இவ்வளவு நாட்களாக சக்தியை கார்த்திக் அவன் கைக்குள் வைத்திருப்பது போல் பார்த்து பார்த்து பார்த்துகொள்வான். இப்போது தோன்றியது அதற்கு அவசியமேயில்லை. கொஞ்ச நாட்கள் அவளிடம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவனுக்கு இளைப் பாறலாம் என்று தோன்றியது.

''ஏன்டா என்கிட்டே அங்க சேரமாட்டேன்னு சொல் லிட்டு. இப்போ போய் சேர்ந்துட்டியேன்னு கேட்டதுக்கு பிரபு சொன்னான் அப்போ எனக்கு சக்தியை தெரியா தேன்னு. சரியா தான் சொல்லியிருக்கான்.''

''விட்டா உனக்கு ரசிகர் மன்றமே ஆரம்பிச்சு இருப் பான்'' சொல்லிக் கொண்டு இருக்கும் போதே கார்த் திக்கின் போன் அடித்தது. தெய்வானை,

''கார்த்திக், எங்க இருக்கீங்க ரொம்ப நேரமாயிடுச்சு.''

''இதோ மா வந்துட்டே இருக்கோம்.''

இவ்வளவு நேரமாக அவளின் பற்றிய கையை விடா மல் பேசிக் கொண்டு இருந்தவன் அதில் ஒரு அழுத்தம் கொடுத்து நான் உன்னுடன் இருக்கிறேன் என்று சொல் லாமல் சொல்லி விடுவித்தான். பின்பு கார் ஸ்டார்ட் செய்து வேகமெடுத்தான்.

வீட்டில் கொண்டு போய் நிறுத்திய பேரது ஒரே இரவில் ஏதோ ஜென்ம ஜென்மமாய் வாழ்ந்துவிட்ட உணர்வு இருவருக்கும்.

உடலின் உந்து சக்திகள் கொடுக்கும் நெருக்கத்தை விட இருவரும் நெருங்கியிருந்தனர்.

தெய்வானை காரிடாரில் சேர் போட்டு அமர்ந்திருந் தார். கூட முனியம்மா.

இருவருக்கும் அவரை நிறைய அலை கழித்து விட் டோம் என்ற குற்ற உணர்வு. அவரை பார்த்தும் வேகமாக இறங்கி ஓடினாள் சக்தி.

''சாரிமா லேட் பண்ணிட்டேனா.''

''லேட்லாம் பண்ணலை. நேத்து போய் இன்னைக்கு வந்திருக்க'' என்றார் சிரிக்காமல்.

நேரம் பார்த்தால் ஒரு மணி.

''சாரிம்மா பேசிட்டே இருந்ததுல டைம் போனதே தெரியலை.''

''பேசினது பெருசில்ல உருப்படியா ஏதாவது பேசினீங்களா.''

''உருப்படியான்னா.''

அதற்குள் காரை விட்டு கார்த்திக் இறங்கி நின்றான்.

''கார்த்திக் நாம உருப்படியா ஏதாவது பேசினோ மான்னு அம்மா கேட்கறாங்க. என்ன சொல்லட்டும்'' என்றாள் குறும்பாக சக்தி.

கார்த்திக்கின் முகத்தில் ஒரு மலர்ந்த புன்னகை. எந்த நேரடியான பதிலும் சொல்லாத செய்தியை அந்த புன்னகை சொன்னது.

சிரித்தது கார்த்திக் தானா என்று அந்த சமையல் செய்யும் முனியம்மா வாயை திறந்து பார்த்தாள்.

''எப்பவும் சிரிக்காத முகத்தை வெச்சு எல்லோரையும் கடிக்குதே பேசாம திருஷ்டிக்கு இந்த தம்பி

போட்டோவை வைக்கலாம்'' என்பது தான் முனியம் மாவின் பழைய எண்ணம்.

ஒரு சிறு தலையசைவுடன் கார்த்திக் விடைபெற்று செல்ல, சக்தியும் தெய்வானையும் வீட்டை நோக்கி திரும்பினால், முனியம்மா அப்படியே பார்த்தது பார்த்த படி நின்றிருந்தாள்.

''அம்மா! ஏன் இவங்க இப்படி நிக்கறாங்க!''

''அநேகமா கார்த்திக் பேய் அடிச்சிருக்கும் நீ வா'' என்று சிரித்தபடியே தெய்வானை சொல்லி போனார்.



# 33

**தன்செயல் எண்ணி தவிப்பது தீர்ந்திங்கு**

**நின் செயல் செய்து நிறைவு பெறும் வண்ணம்**

**நின்னைச் சரணடைந்தேன்**

- பாரதி

நீண்ட நாட்களுக்கு பிறகு மனதின் பாரமெல்லாம் இறங்கி லேசாக உணர்ந்த கார்த்திக் வீடு வந்த போது, பிரபுவும் சிவாவும் ஹாலில் அமர்ந்திருந்தனர்.

சுமித்ராவும் சிவாவும் அன்று பிரபுவின் வீட்டிலேயே இருந்து கொண்டனர். சுமித்ராவும் வைஷ்ணவியும் உறங்க சென்றிருந்தனர்.

''நீங்க ஏன் தூங்காம உட்கார்ந்திருக்கீங்க'' என்ற கார்த்திக்கின் கேள்விக்கு.

''அத்தை உட்கார்ந்து இருந்தாங்க. நீங்க போங்க, நான் இருக்கேன்னு சொல்லி அனுப்பினேன். நான் இருக் கேன்னு சிவாவும் உட்கார்ந்துட்டாரு.''

''நாங்க வந்து ரொம்ப நேரம் ஆகிடிச்சு. நீ ஏன் இவ் வளவு நேரம்'' என்றான் பிரபு.

''பேசிட்டே இருந்தேன் டைம் ஆகிடுச்சு'' என்றான் கார்த்திக் சொல்லும்போது அவன் முகம் மலர்ந்து இருக்க.

''இது கார்த்திக் தானா'' என்று ஆச்சர்யமாக பார்த்த சிவா, ''இன்னைக்கு நிறைய மாற்றம் கார்த்திக் உங்க கிட்ட'' என்றான் மனதார.

ஒரு புன்னகை மட்டுமே பதில்.

பிறகு இருவரின் அருகில் அமர்ந்தவன், ''பிரபு உனக்கும் வைஷ்ணவிக்கும் கல்யாணத்துக்கு நாள் பார்க்கலாமா'' என்றான்.

''முதல்ல நீ பண்ணிக்கோ, நீ என்னை விட ஒரு வருஷம் பெரியவன்.''

''முதல்ல உன் கல்யாணம் நடக்கட்டும்.''

''ம்கூம், உன்னதுதான்.''

''சொன்னா புரிஞ்சிக்கோ பிரபு. வைஷ்ணவியும் சுமித்ராவும் ஒண்ணா சுத்திட்டு இருந்தாங்க. சுமித்ரா வைஷ்ணவியை தேடுறதை விட, வைஷ்ணவி சுமித்ராவை அதிகம் தேடுவா.''

''அம்மாவை விட அவங்க ரெண்டு பேரும் தான் அதிகம் பேசிக்குவாங்க. அதுல சுமித்ராக்கு கல்யாணம் ஆகிடுச்சு. அதனால வைஷ்ணவிக்கும் பண்ணனும். அதுக்கு அப்புறம் நான் பண்ணிக்கறேன். நான் என்ன பண்ணிக்க மாட்டேன்னா சொல்றேன்.''

''உன்னை என்னால நம்ப முடியாது. அவ்வளவு லவ் இருந்தும் ஒரு வார்த்தை கூட உன் வாயில் இருந்து வரலை. ரொம்பவும் ஒரு எக்ஸ்ட்ரீம்ல தான் சொல்லி யிருக்க. கோபம் வந்தா நீ என்ன பண்ணுவேன்னு உனக்கே தெரியாது. ஆனா நான் சக்தியை நம்பறேன். அவங்க உங்க கல்யாணம் நடக்கும்னு சொன்னா, நான் எங்க கல்யாணத்துக்கு சம்மதிக்கறேன்.''

''உங்க கல்யாணம் முடிஞ்ச பிறகு தான் நான் எங்க அம்மாகிட்ட பேசப் போறேன். அதுக்கு அப்புறம் தான் அய்யாகிட்ட பேசப் போறேன். இப்போ எப்படி சக்தியை சொல்லுன்னு சொல்லுவேன்.''

''ஏன் அவங்க மாட்டேன்னு சொல்லிட்டா. வேற யாரையாவது கல்யாணம் பண்ண போறியா நீ'' என்றான் பிரபு.

''டேய்!'' என்று கார்த்திக் எரிச்சல் பட.

''அப்புறம் எதுக்கு அதையும் இதையும் சொல்ற! சக்தி சொல்லட்டும்! அதுக்கு அப்புறம் நான் என் முடிவை சொல்றேன். இப்போ தூங்கப் போகட்டுமா'' என்று எழுந்தான்.

''தோ பாரு பிரபு! நீ எப்போ வைஷ்ணவியை கல் யாணம் பண்ணிக்குவேன்னு நீயே முடிவு பண்ணிக்கோ.

ஆனா எப்போன்னாலும் உங்க கல்யாணம் நடந்ததுக்கு அப்புறம் தான் என் கல்யாணம் நடக்கும். அவ்வளவுதான். அதுக்காக நான் சக்திகிட்ட போய் நீ என்னை கல்யாணம் பண்ணிக்குவேன்னு வாக்குறுதி குடுன்னு எல்லாம் கேட்க முடியாது. உனக்கு என்ன தோணுதோ செஞ்சிக்கோ'' என்றபடி கார்த்திக் செல்ல ஆரம்பிக்க,

''ஏன்டா? ஏன்டா? உனக்கு இவ்வளவு திமிர். சக்தி கிட்ட கூட கேட்க மாட்டியா.''

''நான் யார்கிட்டயும் எதையும் கேட்க மாட்டேன்! உரிமையா கேட்க கூடிய தைரியம் எனக்கு இல்லை. விட்ரு, உனக்கு புரியாது! ஏன்? யாருக்கும் புரியாது!'' என்று சொல்லி நிற்காமல் சென்றுவிட்டான்.

சிவா ஆதரவாக பிரபுவை தட்டி கொடுத்தவன், ''நீ இவர்கிட்ட பேசதை விட சக்திகிட்ட பேசலாம்.''

''எப்பவும் இப்படிதான் யார் பேச்சையும் கேட்கவே மாட்டான். இப்போ சக்தியை சொல்ல சொல்லுனா அவங்க கிட்ட கூட கேட்க மாட்டேன்னா எப்படி?'' என்று பிரபு வருத்தப்பட.

''சக்திகிட்ட பேசலாம்'' என்றான் சிவா.

அடுத்த நாளே சக்தியை கல்லூரியில் சந்தித்தான் சிவா. பிரபு, ''நான் வரலை நீங்க பேசுங்க'' என்று விட்டான்.

பிரபுவிற்கும் கார்த்திக்கிற்கும் நடந்த வாக்குவாதத்தை சக்தியிடம் சொன்னான் சிவா.

"கார்த்திக், ஒரு அண்ணனா பேசறான் அதுல என்ன தப்பு" என்றாள் சக்தி. கார்த்திக் உன்னிடம் கேட்க மாட்டேன் என்று சொல்லிவிட்டான் என்று சிவா சொன்னதை ஒதுக்கினாள். அதை சிவாவும் உணர்ந்தான்.

சிவாவின் முகத்தில் புன்னகை, "எப்பவும் கார்த்திக்கை விட்டுக் குடுக்காதீங்க."

இப்போது சக்தி முகத்தில் புன்னகை, "என்ன பண்றது? சொல்ற பேச்சை அவங்க கேட்க மாட்டாங்க. அப்போ இப்படி தானே போயாகணும்" என்றாள்.

சக்தி முயன்று மரியாதை பன்மையை பேச்சில் கொண்டு வந்தாள்.

"ரெண்டு பேரும் பிடிவாதமா இருக்காங்க. பிரபு முதல்ல கார்த்திங்கறான். கார்த்திக் முதல்ல பிரபுங்கறாங்க."

"என்ன பண்ணலாம்?" என்றாள் சக்தி.

"அதுக்கு தானே உங்க கிட்ட பேச வந்திருக்கேன்."

"கார்த்திக் கிட்ட பேசிப் பார்க்கிறேன். அப்போ கூட வைஷ்ணவிக்கு கல்யாணம் பண்ணாம ஒத்துக்குவாங்கன்னு தோணலை. அதுவுமில்லாம சிவா நீங்க புரிஞ்சிக்கணும். நான் கார்த்திக் கிட்ட போய் நம்ம கல்யாணம் முன்ன நடக்கணும்னு எப்படி சொல்லுவேன். அது முடியாது. வேற ஏதாவதுன்னா பரவாயில்லை. அவங்க தங்கச்சி கல்யாணம் நடக்கணும்னு நினைச்சிருக்கும் போது என்னால முடியாது."

"நீங்க என் பேட்ச் சக்தி."

''கார்த்திக்காக நான் எவ்வளவு நாள்னாலும் வெயிட் பண்ணுவேன்'' என்றாள் புன்னகையோடு.

''என்ன சக்தி இப்படி சொன்னா எப்படி.''

''நான் தான் பேசறேன்னு சொல்றேன்ல. ஆனா கண்டிப்பா நடக்கும்னு சொல்ல முடியாது.''

அரை மனதோடு எழுந்து போனான் சிவா.

அவன் போனவுடனேயே கார்த்திக்கிற்கு போன் அடித்தாள் சக்தி.

வெகு நேரம் கழித்தே எடுத்தான் கார்த்திக். எடுத்தவன் உடனேயே, ''முக்கியமான விஷயம்னா சொல்லு சக்தி! இல்லைன்னா அப்புறம் பேசலாம்'' என்றான்.

''முக்கியமா இல்லையான்னு எனக்கு தெரியலை?''

''சொல்லு''

''பிரபு உங்கிட்ட ஏதோ பேசினாறாமே அதை பத்தி.''

''அப்புறம் பேசலாம் சக்தி. நானே கூப்பிடறேன்'' என்றான்.

சொன்னவன் தான். இரண்டு நாட்கள் யார் கண்ணிலும் படவில்லை. வேலை என்று சொல்லி குவாரி ஆபீசிலேயே தங்கிக் கொண்டான்.

இது மட்டுமே எல்லோருக்கும் தெரிந்த விவரம். சக்தி சில முறை அழைத்த போது கூட, ''வில் கால் லேட்டர்'' என்ற மெசேஜ் மட்டுமே வந்தது.

''பத்து வருஷமா காதலிச்சதை ஒரு ரெண்டு நாளைக்கு முன்னாடி சொல்லிட்டு, ரெண்டு நாளா

ஆளைக் காணோம்! என்ன பண்றது இவனை?'' என்று தான் சக்திக்கு தோன்றியது.

''வர முடியலைன்னாலும் ஒரு போன் கூடவா பண்ண கூடாது! என்ன சொல்ல?'' என்று சலிப்பாக இருந்தது.

அவனை கண்டால் தாறுமாறாக திட்ட வேண்டும் என்றதற்கு மாறாக, அவனை கண்டவுடன் பேச்சே மறந்து விட்டது.

இரண்டு நாட்கள் கழித்து அவள் கல்லூரியில் இருந்து கிளம்பும் சமையம் வந்து நின்றான்.

மிகுந்த சோர்வான தோற்றம். களைப்பு அவன் கண்களில், உடல் மொழியில் நன்கு தெரிந்தது.

படிகளில் இறங்கி கொண்டிருந்தவள், கார்த்திக்கை பார்த்ததும் அவன் அருகில் வருவதற்காக நின்றாள்.

வந்தவன், ''சாரி! நிறைய வொர்க் அவுட் பண்ண வேண்டி இருந்தது! அதான் என்னால பேச முடியலை.''

பேசாமல் அவள் திரும்பவும் அவளின் ரூம் நோக்கி நடக்க பின் தொடர்ந்தான். ''கேண்டீன்ல காபியும் ஸ்நாக்சும் வாங்கிட்டு வாங்க'' என்று ப்யுனை பணித் தாள்.

வந்து அமர்ந்தவன் அவனையறியாமல் கழுத்தை பிடித்தான்.

''என்ன ஆச்சு கார்த்திக்?''

''கழுத்து வலி. அப்பப்போ வருது! அப்பப்போ போகுது!''

"ஏன் வருது. டாக்டர் கன்சல்ட் பண்ணுனியா இல் லையா?"

"பண்ணினேன்! ஒரு ப்ராப்ளமும் இல்லை! பட், ஐ டோன்ட் நோ வை? டென்சன் ஆனா அதிகமாகும்."

"இப்போ எதுக்கு டென்சன்."

ஒரு புன்னகை மட்டுமே பதில்.

சக்தி கடுப்பாக, "நீ சிரிச்சா நான் மயங்குவேன்னு உன்கிட்ட சொன்னேனா" என்றாள்.

எதற்கு இந்த பேச்சு என்பது போல் கார்த்திக் பார்க்க.

"அப்படியெல்லாம் எதுவுமில்லை. அதனால நீ ஒழுங்கா எனக்கு பதிலை சொல்லு" என்றாள்.

"சொல்ற மாதிரி இருந்தா சொல்ல மாட்டேனா."

"முன்னாடி நடந்த உன் வாழ்க்கையின் ரகசியங்கள் எதுவும் நான் கேட்கலை கார்த்திக். ஆனா இப்போ நடக்கறதை கூட சொல்லலைன்னா எப்படி. ஏதோ சினிமா தயாரிக்கிறியாமே! அதல ரொம்ப நஷ்டமாமே! அதனால இப்படி இருக்கிறியா!"

"ப்ச், அப்படி எல்லாம் எதுவுமில்லை!" என்று அவன் சொல்லும்போதே, காபியும் பப்சும் வர,

"முதல்ல சாப்பிடு" என்று அவன் புறம் நகர்த்தினாள்.

"உனக்கு" என்றான் வலிக்கும் கழுத்தை தடவிக் கொண்டே.

"நீ சாப்பிடு" என்றவள், "ரொம்ப வலிக்குதா? நான் கழுத்தை பிடிச்சிவிடட்டா?" என்று அவள் எழவும்.

"வேண்டாம், வேண்டாம்" என்று அவசரமாக மறுத்தான்.

அவன் மறுத்த வேகத்தை பார்த்த சக்தி, "ஊசி ஒன்னும் பண்ணலை உன்னை" என்றாள்.

"ப்ளீஸ் சக்தி புரிஞ்சிக்கோ."

"என்னத்தை புரிஞ்சிக்க தெரியலையே!" என்று வாய்க்குள்ளேயே முணுமுணுக்க.

"நீ தொட்டா நான் கரைஞ்சிடுவேன்னு" என்று சத்தம் கேட்க.

கார்த்திக் பேசினானா என்பது போல் சக்தி அவன் புறம் பார்த்தாள்.

அவனோ அமைதியாக சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

இவன் பேசினானா? இல்லையா? என்று சக்தி யோசிக்கும் போதே பிரபு வந்தான்.

"என்ன கார்த்திக் வர சொன்ன..."

"உட்காரு கொஞ்சம் பேசணும்."

பிரபு அமரவும், "கொஞ்சம் தனியா பேசணும். எங்கயாவது போகலாமா."

"ரொம்ப டயர்டா தெரியற கார்த்திக்! எங்கயும் அலையாத. இங்கேயே உட்கார்ந்து பேசு. நான் வெளில வெயிட் பண்றேன்" என்று சக்தி எழ.

"நீங்க உட்காருங்க சக்தி. என் விஷயம் உங்களுக்கு தெரியக் கூடாதுன்னு எதுவும் இல்லை. இவனோட

விஷயம் உங்களுக்கு தெரியாம இருக்கக் கூடாது'' என்று பிரபு சொல்ல.

''இல்லை, நான் போறேன்'' என்று சக்தி சொல்ல.

பிரபு கார்த்திக்கை முறைத்தான். ''ரொம்ப ஓவரா பண்ற நீ'' என்று.

சாதாரண நேரமாக இருந்தால் கார்த்திக் அவனை விடவும் அதிகமாக பேசுவான். இரண்டு நாட்கள் இடைவிடாத உழைப்பு களைப்பை கொடுக்க.

''இரு சக்தி'' என்றான்.

''பரவாயில்லை கார்த்திக்! எனக்கொண்ணும் பிரச்சனையில்லை. ஐ வில் வெயிட் அவுட் சைட்.''

''ப்ளீஸ், உட்காரு'' என்று அவளின் கை பிடித்து இழுத்து அருகில் அமர்த்திக் கொண்டான். ''ஒருவேளை நான் சொல்றதை இவன் சரியா புரிஞ்சிக்கலைன்னா கன்வின்ஸ் பண்ண ஈசியா இருக்கும்.''

அமைதியாக அவனின் அருகில் அமர்ந்து அவனின் பேச்சை கேட்க ஆரம்பித்தான்.

''பிரபு உனக்கு தெரியாததில்லை. இந்த வாசுகி குழுமம் எங்க அம்மாவை ஜஸ்ட் பார்த்துக்க சொல்லி தாத்தா கொடுத்த சொத்து. ஆக்சுவலா அது உங்கப்பாவுக்கு சேர வேண்டியது. தெரியும் தானே?''

''இப்போ எதுக்கு அந்த பேச்செல்லாம்.''

''தெரியுமா? தெரியாதா?''

''தெரியும்!''

''அதை எங்கப்பா யாருக்கும் தெரியாம வீரமணி அய்யாக்கு எழுதிக் கொடுத்தது தெரியுமா? தெரி யாதா?''

''தெரியும்.''

அவன் தெரியும் என்று சொன்னவுடன், லாப் டாப்பை திறந்து அதில் காட்டினான்.

''இது உங்கப்பாவோட சொத்து. அன்னைய தேதில இருந்த அதோட மதிப்பு. அதுக்கு அப்புறம் அதுல இருந்து இத்தனை வருஷமா நியாயமா என்ன லாபம் வந்திருக்குமோ, அந்த அமௌன்ட். அதோட இன்ட் ரெஸ்ட். இப்போதைய அதோட மதிப்பு எல்லாம் சேர்த்து இவ்வளவு'' என்று காட்டினான்.

சக்தி அதை பார்த்தாள். தங்களுக்கு கொடுத்த அளவு இல்லையென்றாலும் அதில் பாதி இருந்தது.

மலைப்பாக இருந்தது சக்திக்கு. அதை விட பிரபு அவனுக்கு பேச்சே வரவில்லை.

''இந்த அமௌன்ட் நான் உனக்கு செட்டில் பண் ணனும்.''

''நான் உன்கிட்ட கேட்கலையே'' என்று பிரபு சொல்ல, அதை காதிலேயே வாங்காமல்.

''இதெல்லாம் இந்த மதிப்பு வர்ற சொத்துக்கள் அண்ட் ஷேர்ஸ்'' என்று லாப் டாப்பில் ஒரு லிஸ்டை காட்டினான்.

''லிக்விட் காஷ் எதுவும் கிடையாது! எல்லாத்தையும் மோஸ்ட்லி இவங்களுக்கு செட்டில் பண்ணிட்டேன்!

என்று சக்தியை காட்டியவன், "கொஞ்சம் இருந்ததையும் படம் எடுத்து கரைச்சுட்டேன்."

"இந்த சொத்தை நீ வாங்கிக்கோ!"

"எனக்கு வேண்டாம்!" என்றான் பிரபு. இது கார்த்திக் ஒரு வகையில் எதிர்பார்த்ததுதான். அதனால் அசை யாமல் நின்றான்.

"பாரு பிரபு! உனக்கு வேணும் வேண்டாம்ன்றது பிரச் சனை கிடையாது! இது உங்களுக்கு சேர வேண்டியது. நான் கொடுத்துதான் ஆவேன்."

"வேண்டான்றேன். அப்புறம் கொடுத்துதான் ஆவேன்னா என்ன அர்த்தம்?"

"ஒரு அர்த்தமும் கிடையாது. நான் உனக்கு கொடுத் துடறேன். அதுக்கு அப்புறம் உனக்கு என்ன வேணுமோ அதை நீ முடிவு பண்ணிக்கோ."

"இல்லை! எனக்கு வேண்டாம்!" என்றான் திடமாக பிரபு.

"புரிஞ்சிக்கோ பிரபு. இந்த சொத்துனால தான் ப்ரச்சனையே. ஆனா அந்த சொத்தை உங்களுதுன்னு சொல்லிட்டாலும், உங்களுக்கு குடுக்க முடியாத சூழ்நிலையில் இருக்கேன்."

"அதுக்குண்டான பணத்தை வாங்கிக்கோ! தயவு செஞ்சு எனக்கு இந்த பிரச்சனையில இருந்து விடுதலை கொடு. எங்கப்பா எதையும் ஏமாத்தினதா இருக்க வேண்டாம்! வாங்கிக்கோ!"

"வேண்டாம் கார்த்திக்! நாங்க அதை அத்தைக்கு குடுத்ததாவே இருக்கட்டும்."

"அப்படி நினைச்சு உங்க தாத்தா பேசலை! இனி அதை பேசியும் பிரயோஜனமில்லை! வாங்கிக்கோ!"

"முடியாது"

"முடியாதுன்னா இனி உங்கக்கும் எங்களுக்கும் எந்த தொடர்பும் இருக்காது. நான் அம்மாவையும் வைஷ்ணவியையும் கூட்டிட்டு வெளில போயிடுவேன். உங்க வீட்டுக்கு நான் பொண்ணும் குடுக்க மாட்டேன்."

"என்ன ப்ளாக் மெயில் பண்றியா?"

"நீ எப்படி வேணா வெச்சிக்கோ."

"நீ என்ன பண்ணினாலும் வைஷ்ணவியை என் கிட்டே இருந்து பிரிக்க முடியாது கார்த்திக்."

"ஏன்? நான் மட்டும் தான் எங்கப்பாக்கு பிறந்தனா? அவ பிறக்கலை? ஏழுருக்கு வாயடிக்கறா. எங்கப்பாக்கு நேர்ந்த அவமானம் அவளுக்கு இல்லையா. அதையும் மீறியா அதை துடைக்காம நீ வேணும்னு கல்யாணம் பண்ணிக்குவா."

"பண்ணிக்க மாட்டா. மீறி பண்ணிக்கிட்டா. கொன்னுடுவேன்."

"கார்த்திக்" என்று அதட்டினாள் சக்தி.

"நீ இதுல தலையிடாத சக்தி. உன் வேலையை பார்" என்று எரிந்து விழுந்தான்.

"ஏன்டா இப்படி பைத்தியம் மாதிரி பேசற. என்னடா அப்படி உங்கப்பா மேல உனக்கு பைத்தியம்."

"ஆமா! நான் பைத்தியம் தான். எங்கப்பா மேல பைத்தியம் தான். அவருக்காக தான் எல்லாமே!

உங்களுக்கு சொத்து திருப்பி கொடுக்குற விஷயத் துக்காக தான் நான் வீட்டை விட்டு வந்து. இவ்வளவு தப்பான வேலைகளை செஞ்சு. என் எதிர்காலத்தை அழிச்சிக்கிட்டு, என் மனசோட நான் போராடிட்டே இருக்கேன்.''

சொல்லும்போதே கழுத்தில் சுளீரென்று வலி.

''இப்போ அதையெல்லாம் தேவையில்லைன்னு நீ ஒரு வார்த்தையில சொன்னா, நான் விட்டுடுவேனா.''

''உனக்காக அடுத்தவங்களை நீ சிரமப்படுத்துவியா, கொல்லுவேன்னு எல்லாம் சொல்லுவியா.''

''வேற என்ன பண்ண சொல்ற? என்னை சாக சொல்றியா? இந்த சொத்தை நான் உங்களுக்கு கொடுக்கலைன்னா என் சாவு ஒண்ணு தான் எனக்கு நிம்மதியை கொடுக்கும். உனக்கு அது தான் இஷ்டம்னா சொல்லு!''

''கார்த்திக்!'' என்று கத்தினாள் சக்தி.

''இதுக்கு தான் நான் தனியா பேசறேன்னு சொன் னேன்! நீ தானே சக்தி இருக்கட்டும்னு சொன்ன'' என்று பதிலுக்கு பிரபுவை பார்த்து குரலுயர்த்தி பேசியவன்,

''என்னன்னு சொல்லு. எப்படியிருந்தாலும் இதெல் லாம் உன் பேர்ல தான் இருக்கு! அதுல மாற்றமில்லை!'' என்று சொல்லி சென்றுவிட்டான்.

செல்லும் அவனை பார்த்தனர். கழுத்தை தடவிக் கொண்டே சென்றான்.

கார்த்திக்கின் வலியை சக்தி உணர்ந்தாள். இந்த கார்த்திக் இன்னும் அவளுக்கு புதிதாய் தெரிந்தான்.

எதுவும் செய்ய இயலாதவளாக சக்தி பார்த்தது பார்த்தபடி நின்றாள்.

திரும்பிய சக்தி, பிரபுவை பார்த்தாள்.

''ஏன் பிரபு? எதுக்கு இவ்வளவு பிடிவாதம்? அவங்க சொல்றது நியாயம் தானே அவங்கப்பா செஞ்சதுக்கு கார்த்திக் திருப்ப நினைக்கிறாங்க, வாங்கிக்கங்க அதுக்கப்புறம் அதை என்ன பண்ணனுமோ நீங்க முடிவு பண்ணிக்கங்க.''

''அவனுக்கு இல்லையில்லை. அவங்களுக்கு ஏன் இவ்வளவு டென்சன் குடுக்கறீங்க'' என்று பிரபுவிடம் சண்டைக்கு போனாள்.

''அவன் எங்களுக்கு திருப்ப நினைக்கறது சரி சக்தி! ஆனா அதை அவன் நியாயமா செய்யலையே. ஏன் நீங்களே கூட அவனை திருடன்னு சொல்லியிருக்கீங்க.''

''கண்டிப்பா! ஆனா அது சொத்தை மீன் பண்ற மாதிரி இருக்கும். நிஜம் அது இல்லை! அவன் என்னை தான் திருடினான். விடுங்க, திருடன் என்ன? அதை விட மோசமா கூட நான் அவனை திட்டுவேன்! That doesnt matter And that should not bother you even... நியாயமோ? அநியாயமா? அது அவனோடது... உங்களை பாதிக்காது பாதிக்கவும் விடமாட்டான். நீங்க அதை பத்தி பேசா தீங்க'' என்றான் கறாராக.

''என்ன பண்ணட்டும்'' என்றான் பிரபு ஒரு பெரு மூச்சை வெளியேற்றி.

''நீங்க சொல்லுங்க.''

''கல்யாணத்துக்கு நாள் பார்க்க சொல்லுங்க.''

''அப்போ சொத்து?''

''அதை வாங்கலைன்னா பொண்ணு குடுக்க மாட்டேங்கறானே, என்ன பண்ண. உங்களை அப்படி திட்டினானே கோவம் வரலை. இவ்வளவு அவனுக்காக பேசறீங்க.''

''வரலை! என்கிட்ட அவன் கோவத்தை காட்டாம வேற யார்கிட்ட காட்டுவான்.''

''நிஜமாவே கார்த்திக் லக்கி தான். டு ஹேவ் எ கேர்ள் லைக் யு இன் ஹிஸ் லைப். ஆனா எனக்கு ஒரு கண்டிஷன் இருக்குன்னு அவன் கிட்ட தெளிவா சொல்லிடுங்க. அட்லீஸ்ட் உங்க நிச்சயமாவது முடிஞ்சா தான் எங்க கல்யாணம்'' என்றான் தெளிவாக பிரபு.

''சாரி பிரபு! நிச்சயமா என்னால சொல்ல முடியாது. அவன் கிட்ட பேசி வேணா பார்க்கிறேன்'' என்றாள்.

''என்னவோ போங்க. அவன் என்ன செஞ்சாலும், சொன்னாலும் தலையாட்டுறீங்க'' என்றான்.

புன்னகைத்தாள் சக்தி.



# 34

வானகமே, இளவெயிலே, மரச்செறிவே, நீங்களெல்லாம்

கானலினீரோ? - வெறுங் காட்சிப் பிழைதானோ?

**போனதெல்லாம் கனவினைப்போற் புதைந்தழிந்தே போனதால்**

**நானுமோர் கனவோ? - இந்த ஞாலமும் பொய்தானோ?**

- பாரதி

வேகமாக வேலைகள் நடந்தன. ஆம், அது பிரபு வைஷ்ணவியின் திருமண வேலைகள்.

எவ்வளவோ பேசிப் பார்த்தும் சக்தியால் கார்த்திக்கை நிச்சயத்திற்கு கூட சம்மதிக்க வைக்க முடியவில்லை.

சக்திக்கு அதில் மிகுந்த மனவருத்தம், இவ்வளவு பேசியும் கார்த்திக் அவன் நிலையிலேயே நிற்கிறானே என்று.

என்ன செய்ய முடியும் அவளால், ஒன்றும் செய்ய முடியவில்லை.

கார்த்திக்கிடம் சம்மதம் பெற முயன்று, முடியாமல் பிரபுவிடம் வாக்கு கொடுத்தாள். ''எங்க கல்யாணம் எப்படியும் நடக்கும் பிரபு. அதை விடுங்க. உங்க கல்யாண ஏற்பாட்டை பாருங்க'' என்றாள்.

அவள் சொன்ன விதம் பிரபுவிற்கே சற்று கஷ்டமாக இருக்க, ''அவன் பிடிவாதமா என் பிடிவாதமான்னு ஒரு கை பார்த்துடுவேன். ஆனா பாதிக்கப்படப் போறது நீங்களும் வைஷ்ணவியும்தான். உங்களுக்காக விட்டு கொடுக்கறேன்'' என்றான்.

அதன் பிறகு திருமண வேலைகள் ஜரூராக நடந்தன.

கார்த்திக் என்னவோ ரொம்பவுமே பிசியாக இருந் தான். தங்கையின் திருமணம் என்பதாலா, இல்லை குவாரி வேலைகளா. இல்லை மறுபடியும் படத்

தயாரிப்பு என்று கிளம்பி விட்டானா எதுவும் தெரிய வில்லை.

சக்தி அவனிடம் போனில் தான் பேசினாள். கண் ணால் பார்ப்பதே அரிதாக இருந்தது. ''எனக்கு உன்னை பார்க்கணும் போல இருக்கு கார்த்திக்'' என்று அவள் சொன்னாள் அவளை கல்லூரியில் வந்து சந்திப்பான் இல்லையென்றால் அதுவுமில்லை.

''போ! நீ ஒண்ணும் என்னை பார்க்க வராத போ!'' என்று சக்தி கோபப்பட்டால் தான் வருவான். அன்றும் அப்படி தான் வந்திருந்தான்.

''என்ன கார்த்திக் அவ்வளவு பிசி நீ?''

''நீ கூட தான் பிசி.''

''நான் பிசினா ஹாஸ்பிடல் நல்லா ரன் ஆகணும். நிறைய இன்வெஸ்ட் பண்ணியிருக்கேன். சீக்கிரம் மெடிக்கல் காலேஜ் அப்ரூவல் வாங்கணும்னு, அதுக்கு வொர்க் பண்ணிட்டு இருக்கேன். அதனால பிசி. நீயேன் பிசி.''

எப்பொழுதும் போல் புன்னகை மட்டுமே பதில். அதில் ஒரு உற்சாகமில்லை.

''என்ன கார்த்திக் ஏதாவது பிரச்சனையா? ரொம்பவும் நீ டல்லா இருக்குற மாதிரி ஃபீல் பண்றேன்.''

''ஒண்ணுமில்லை நான் எப்பவும் போல் தான் இருக்கேன்.''

''என்னவோ போ! எனக்கு அப்படிதான் தோணுது! விடு, கழுத்து வலி எப்படி இருக்கு?''

"இப்போ இல்லை! ஆனா திடீர்னு வரும்" என்றான் ஒரு கசந்த முறுவலோடு.

"ஒண்ணும் பிரச்சனையில்லையே."

"no ma, I am sure for it dont worry" இது உதடுகள் மட்டுமே உச்சரிக்கும் வார்த்தை.

"நான் திரும்ப திரும்ப கேட்கறேன்னு தப்பா எடுக்க மாட்டியே" என்றாள்.

"என்னடா? சொல்லு!"

"எங்கேஜ்மென்ட் மட்டுமாவது போவோமே. அம்மா என்னை விட சின்ன பொண்ணுங்களுக்கு எல்லாம் கல்யாணம் ஆகுதுன்னு கவலை படறாங்க."

"எங்க போனாலும் எல்லோரும் பொண்ணுக்கு எப்போ கல்யாணம்னு கேட்கறாங்கலாம். அட்லீஸ்ட் எங்கேஜ்மென்ட்டாவது பண்ணிக்கலாமே. அப்பா எனக்கு சீட் கிடைக்கறதை எதிர்பார்த்துட்டு இருக்கற தால. அவர் இதை பத்தியெல்லாம் பேசலை. ஆனா அம்மா ரொம்ப கவலைப்படறாங்க. உன்கிட்ட பேசட்டு மான்னு கேட்டாங்க. நான் தான் வேண்டாம் சொல்லிட் டேன்" என்றாள்.

திரும்ப திரும்ப மறுப்பது கார்த்திக்கிற்கே ஒரு மாதிரி இருந்தது. ஆனால் வேறு வழியில்லை அவனிடம்.

"சொன்னா புரிஞ்சிக்கோ சக்தி. என்னோட எல்லா கடமைகளையும் முடிச்சிட்டு நான் உன்கிட்ட வர ணும்ன்றது தான் என் விருப்பம். நீயும் உங்கப்பா அம்மாவுக்கு ஒரே பொண்ணு. எதையும் அவசரமா

ஏதாவது கட்டாயத்துக்கு ஏன் செய்யணும்? கொஞ்சம் டைம் குடு. உங்க அம்மாகிட்ட பேசு'' என்றான் அவளை சமாதானப்படுத்தும் பொருட்டு.

''என்ன கார்த்திக்? நாம இன்னும் நம்ம வாழ்க்கையை வாழ கூட ஆரம்பிக்கலை. கடமையை முடிச்சிட்டு வர்றேன்னு நூத்துக் கிழவன் மாதிரி பேசற. திரு மணம்ன்றது கணவனோட உடல் சார்ந்த உறவுக்கு மட்டுமில்லை. அவனோட சுக துக்கம் எல்லாத்துலயும் பங்கெடுக்கறதும் தான். நீ வாழ்க்கையோட தாத்பர்யத் தையே சரியா புரிஞ்சிக்கலை.''

''நீ மட்டும் உன் கடமையை முடிக்கணும்னு ஏன் நினைக்கிற? நான் உன் கூட இருக்க மாட்டேனா.''

''வேண்டாம் சக்தி! இந்த விஷயங்கள்ல நீ வேண்டாம்! என் போராட்டம் என்னோடு!'' என்றான்.

எரிச்சலாக வந்தது சக்திக்கு, ''ப்ச், கார்த்திக்'' என்றவள், ''நாம நிறைய தடவை இதை பேசிட்டோம். இனிமே நான் உன்கிட்ட இதை பத்தி பேச மாட்டேன். எனக்கு என்ன தோணுதோ அதை தான் செய்ய போறேன்.''

''பொண்ணு தானே, இவ பேச்சை நாம ஏன் கேட்கணும்னு ஏதாவது ஆட்டிடியுட் வெச்சிருக்கியா கார்த்திக்.''

பதிலே பேசவில்லை கார்த்திக். ஒரு பார்வை மட்டுமே.

பெருமூச்சு விட்டவள், ''ரொம்பவும் டிலே பண்ணின, நீ எப்பவோ எங்கேஜ்மென்ட் பண்ணு, எப்பவோ தாலி

கட்டு அது உன் விருப்பம்னு விட்டுட்டு, நான் நம்ம மேரேஜை ரெஜிஸ்டர் பண்ணிடுவேன். என்னால தாலி தான் உங்கழுத்துல கட்ட முடியாது. இதை பண்ணலாம் தானே.''

''ரொம்ப வாயாகிடுச்சு உனக்கு.''

''ரொம்ப வாயாகலை வயசாகுது'' என்று கௌண்டர் கொடுத்தாள்.

''நாம என்ன திருட்டு கல்யாணமா பண்ண போறோம். அதெல்லாம் ஊரறிய ஜாம் ஜாம்னு நடக்கும். எனக்கு கொஞ்சம் டைம் கொடு'' என்றான்.

அவனுக்கு தெரியவில்லை திருட்டு கல்யாணம் என்ற அவனின் வாய் முகூர்த்தம் பலிக்க போகிறது என்று.

அவர்கள் மேலும் பேசவிடாமல் அவனின் தொலைபேசி அவனை தொல்லை பண்ண, எடுத் தவன், ''இப்போ வர்றேன்'' என்று சொல்லி வைத்தான்.

''என்ன கார்த்திக்?''

''ஒரு அர்ஜென்ட் வேலை. நான் போகணும் சக்தி.''

''இப்போ தானே வந்த. பத்து நிமிஷம் தான் ஆச்சு.''

''கொஞ்சம் வேலை சக்தி, போறேன்.''

''இது என்ன போறேன். போயிட்டு வர்றேன்னு சொல்லு.''

''dont be silly sakthi... its just a word.''

''சரி விடு, கிளம்பு'' என்றாள் சலிப்பாக.

என்னவோ சோர்வாக இருந்தது சக்திக்கு. கார்த்திக் சக்தியின் ரூம் கதவை நெருங்கி அதை திறக்கப் போகும் சமயம். அவனின் நடையை கவனித்தாள். எப்போதும் இருக்கும் வேகமில்லை. அவளை விட அவனிடம் இருந்த சோர்வு அவளை பலமாக தாக்கியது. அவனிடம் விஷயத்தை வாங்கியே ஆக வேண்டும் என்ற உணர்வு உந்த, அவனை பேச வைக்க இவள் பேச ஆரம்பித்தாள்.

"ஏன் கார்த்திக்? நீ என்னை ரொம்ப ஈஸியா எடுத்துக்கறியா. ஒருவேளை நான் உன் பின்னாடியே வர்றேன்னு என்னை அலட்சியமா நினைக்கிறியா. உன்னோட லவ் ஸ்டோரி எல்லாம் எனக்காக சொன்ன கதையா. நீ லவ் ஸ்டோரி தான் சொன்ன அப்போ கூட லவ் சொல்லலியே. ஏன் இன்னும் கூட சொல்லியே."

"ஒரு வேளை நீ வாசுகி குழுமத்தை எங்ககிட்ட இருந்து வாங்கறதுக்காக ப்ளே பண்ணி, அதுக்கு காம்பன்சேட் பண்ண சொத்து குடுத்தியே. அது மாதிரி என்கிட்ட ஏதாவது கேம் ப்ளே பண்றியா."

அதை அவள் சொல்ல சொல்ல கேட்ட கார்த்திக்கிற்கு உயிர் வரை வலித்தது. கழுத்திலும் சுளீரென்று வலி ஆரம்பித்தது.

அதையும் மீறி வேகமாக அவளிடம் வந்தவன், "எழுந்திரி" என்றான்.

அசையாமல் அப்படியே இருந்தாள்.

"எழுந்திரி" என்று கை பிடித்து எழுப்பினான்.

"எதுக்கு?"

''வா, போய் கல்யாணம் பண்ணிக்கலாம்.''

அவனையே பார்த்தபடி நின்றாள் ஆளை விழுங்கும் பார்வை. ''இனிமே நம்ம கல்யாணம் உன்னோட சாய்ஸ் இல்லை கார்த்திக், என்னோட சாய்ஸ்'' என்றாள் அழுத்தமான குரலில், தீர்க்கமான பார்வையோடு.

அதன் தீட்சண்யம் தாங்காமல், ''உன்னை கல்யாணம் பண்ணினா தான் நீ என்னை நம்புவியா'' என்றான்.

''கல்யாணம் பண்ணினா மட்டுமில்ல, நீ உண்மையை சொன்னாலும் நம்புவேன்'' என்றாள்.

''என்ன உண்மை.''

''நீ ஏன் எங்கேஜ்மென்ட்டுக்கு கூட ஒத்துக்க மாட்டேங்கற, சொல்லு!''

''கதை பேச நேரமில்லை. ரொம்ப அவசரம் நான் போயே ஆகணும்.''

''இப்போ தான் கல்யாணம் பண்ணிக்கலாம் வான்னு கூப்பிட்ட இப்ப கதை பேச நேரமில்லைன்னு சொல்ற.''

அவனையறியாமல் கழுத்தில் கை சென்றது. ''நீ என்னை உயிரோட கொல்ற'' என்று அப்படியே அமர்ந்து விட்டான்.

சக்திக்கு பாவமாக தான் இருந்தது. ஆனாலும் இளக்கம் காட்டவில்லை. அவளுக்கு கார்த்திக்கிடம் இருந்து விஷயத்தை வாங்கியே ஆக வேண்டி இருந்தது.

அவனின் கழுத்தின் புறம், அவன் வலியை குறைக்க இதமாக பிடித்து விட நீண்ட கைகளை முயன்று அடக்கி கையை கட்டி நின்றாள்.

அதற்குள் மறுபடியும் அவன் போன் அடிக்க, அதை பேச கூட விருப்பமில்லாமல் எடுக்காமல் இருந்தான்.

அவன் கையில் இருந்த போனை வாங்கி ஆன் செய்தாள். "அண்ணா, எங்க போகட்டும்? நடுவழில நிக்கறோம்!" என்று ஒரு குரல் பதட்டமாக ஒலித்தது.

"பேசு கார்த்திக்!" என்று அவனிடம் போனை நீட்டினாள்.

"என்னால முடியாது போ! என்னவோ ஆயிட்டு போறேன்! எப்படியோ போயிட்டு போறேன், போ...!" என்று உட்கார்ந்து கொண்டான்.

"கார்த்திக்! போ கார்த்திக்!"

"முடியாது போ!" என்று அடம் பிடிக்கும் சிறுவனாக அமர்ந்து விட்டான்.

அங்கே, "ஹலோ! ஹலோ அண்ணா கேட்குதா? சொல்லுங்க அண்ணா!" என்று கத்தினார்கள்.

"ஒரு நிமிஷம் இருங்க!" என்று போனில் சொல்ல, அவர்கள் பெண் குரலை கேட்டதும், அப்படியே அடங்கி னார்கள்.

இன்டர்காமை எடுத்து செல்வத்தை, "உடனே வாங்க" என்று அழைத்தாள்.

அவன் விரைந்து வர, "இந்த போன் அட்டெண்ட் பண்ணுங்க" என்று அவனிடம் கொடுத்தாள்.

சூழ்நிலை ஏதோ சரியில்லை என்று பார்த்தவுடனே புரிந்தது. அங்கிருந்த சோபாவில் கார்த்திக் கைகளை கட்டி அமர்ந்திருந்தான். முகம் எப்போதையும் விட இறுக்கமாக இருந்தது.

அது கார்த்திக்கின் போன் என்று தெரியும்.

''ஹலோ'' என்று செல்வம் சொல்ல.

''நாங்க வழில நிக்கறோம்! எங்க போக?'' என்றான்.

''நான் செல்வம் பேசறேன்! யாரு பேசறது?''

''செல்வமா! யாருங்க அது?'' என்றது குரல், ''டேய், தப்பா போன் பண்ணிட்டியாடா'' என்று அருகில் இருந்தவனை அதட்டுவது போனில் கேட்டது.

செல்வத்திற்கு தலையும் புரியவில்லை காலும் புரியவில்லை.

''யார் பாஸ்?'' என்றான்.

கார்த்திக் வாயை திறக்கவில்லை.

''டேய்! எவன்டா போன்ல விளையாடுறீங்க'' என்று அதட்டினான்.

''மாரி அண்ணன் இந்த நம்பர் தானே குடுத்துச்சு'' என்று அவன் யாரிடமோ சொல்வது போனில் கேட்க.

இது சரியாக வந்த போன் என்று கணித்தவன், ''என்ன விஷயம்? என்கிட்ட சொல்லுங்க, பாஸ் என் பக்கத்துல தான் இருக்கார்'' என்றான்.

''நாங்க லாரில சரக்கு ஏத்திக்கிட்டு வந்தோம்! எங்க போகணும்னு அய்யா சொல்லுவாங்கன்னு சொன் னாங்க. எங்க போக?''

கிரானைட் கற்களாக இருக்கும் என்று அனுமானித் தவன், ''ஒரு நிமிஷம்,'' ''கணக்குல வர்றதா? வராததா?'' என்றான் கார்த்திக்கிடம்.

கார்த்திக் பதில் பேசவில்லை. இப்படியெல்லாம் கார்த்திக் செய்யவே மாட்டான். அவனை பார்த்தவன், திரும்பி சக்தியை பார்த்து, ''என்ன செஞ்சீங்க? ஏன் பாஸ் இப்படி இருக்காங்க?'' என்று சண்டைக்கு போக.

சக்திக்கு கோபம் கண்மண் தெரியாமல் வந்தது, ''என்ன செஞ்சேன் உன் பாஸை, என்னடா செஞ்சேன் உன் பாஸ'' என்று திரும்ப சண்டைக்கு போனாள்.

செல்வத்தை சக்தி மரியாதையில்லாமல் டா போட்டு பேசவும் நடுவில் வந்த கார்த்திக், ''சக்தி'' என்று அவளை அதட்டியவன்.

''கணக்குல வராது'' என்றான் செல்வத்திடம்.

''எங்க கொண்டு போகட்டும்.''

''தருமபுரி கொண்டு போயிடு'' என்று சாவியை அவனிடம் தூக்கி போட்டவன், போனிற்காக கை நீட்ட, செல்வம் கொடுத்தான். ''செல்வம் வருவான்'' என்ற விவரத்தை போனில் சொன்னவன், ''நீ போ!'' என்றான் அவனை பார்த்து.

செல்வம் கிளம்பவும், ''ஏதோ டென்ஷன்ல டா போட்டுட்டா, மனசுல வெச்சிக்காத'' என்றான் செல்வத்தை பார்த்து.

''என் கடைசி தங்கச்சியே என்னைடா போட்டு தான் கூப்பிடுவா. இது ஒரு விஷயமே இல்லை. நீங்க ஏன் இப்படி இருக்கீங்க'' என்றான் அவனும்.

''கிளம்புடா. அவன் நடுவழில நிக்கறான். பிரச் சனையை ஆகிட போகுது'' என்று கார்த்திக் சொல்ல

நிலைமையின் தீவிரம் உணர்ந்து செல்வம் கிளம்பி னான்.

செல்வம் கிளம்பியதும் கார்த்திக் எதிரில் வந்து நின்றாள். கையை கட்டி அவனை பார்த்தாள்.

''உட்காரு'' என்று அவன் அவனுக்கு பக்கத்தில் காட்ட, அவனுக்கு பக்கத்தில் உட்காராமல் எதிரில் உட்கார்ந்தவள், ''சொல்லு'' என்றாள்.

''ஏன், இங்க உட்கார மாட்டியா?''

''உட்கார்ந்து, நீ ஏதாவது பண்ண போறியா, நீ பண்றது என்ன? என்னைக் கூட தொட விடமாட்ட, உனக்கெல் லாம் ரொமான்ஸ் வராது, மேல சொல்லு!''

''இப்போ என்ன எனக்கு வரும்னு ப்ரூவ் பண்ண னுமா.''

''நீ ஆணியே புடுங்க வேண்டாம், விஷயத்தை சொல்லு'' என்றாள் கடுப்பாக.

''என்ன சொல்லணும்.''

''ஏன் என்கேஜ்மென்ட் வேண்டாம்னு சொல்ற?''

''நிறைய பிரச்சனைங்க. இந்த மாதிரி ஒரு சூழ் நிலையில எனக்கு எங்கேஜ்மென்ட் பண்றதுல இஷ்ட மில்லை.''

''என்ன பிரச்சனை?''

''பணப் பிரச்சனை.''

''உனக்கு பணப் பிரச்சனையா?''

''என்கிட்டே பணமே கிடையாதுன்னு கிடையாது. ஆனா என்னோட தேவைகள் அதிகம். அதுக்கு எனக்கு பணப் பிரச்சனை.''

''வீரமணி அய்யாக்கு செட்டில் பண்ணினேன். அப்புறம் இப்போ பிரபுக்கு செட்டில் பண்ணியிருக்கேன். நடுவுல ரெண்டு படம் எடுத்தேன். ஒண்ணுல லாப மில்லை ஒண்ணு பயங்கர நஷ்டம். சிவா சுமித்ரா கல்யாணத்துக்கு எஸ்டேட் வாங்கி கிப்ட் பண்ணினேன்'' என்று நிறுத்தினான்.

இதில் அவன் சொல்லாமல் விட்டது, கட்சியின் தலைமை வந்த போது அதற்காகவும், ஹாஸ்பிடல் திறப்பு விழாவிற்காகவும் அவன் செலவு செய்த பெரிய தொகை, இன்னும் ஒரு மிகப் பெரிய காரியமாக. யாருக்கும் தெரியாமல் சக்தியின் மெடிக்கல் காலேஜ் அப்ரூவலுக்காக ஏறக்குறை 100C யாருக்கும் தெரி யாமல் பேரம் பேசியிருந்தான். அவனுக்கும் செல்வத் திற்கும் மட்டுமே தெரியும். அதில் பாதி பணம் கை மாறிவிட்டது. மீதி அப்ரூவல் கிடைத்ததும் என்று சொல்லியிருந்தான்.

இதை சக்தியிடம் சொல்ல முடியாது. ஏற்கனவே சக்தி செல்வத்திடம், ''என்னென்ன இருக்கணும்னு கேட்கறாங் களோ எல்லா வசதியும் நம்ம ஹாஸ்பிடல்ல காலேஜ்ல இருக்கற மாதிரி பார்த்துகங்க. லஞ்சம்னு ஒரு விஷ யத்தை கொடுத்து நான் அப்ரூவல் வாங்க மாட்டேன்'' என்று கறாராக சொல்லியிருந்தாள்.

அதை நடைமுறைப்படுத்துவது நடக்கிற காரியமா? நடக்காத காரியமா? என்று பரீட்சிக்கவே கார்த்திக்கிற்கு விருப்பமில்லை. அதில் இருக்கும் நடைமுறை சிக் கல்கள் அதிகம். அதை சொன்னாலும் சக்தி புரிந்து கொள்ள மாட்டாள்.

அதுவுமில்லாமல், "இது என்னோட வேலை, நீ தலையிடாத" என்பதாக தான் அவள் பேச்சிருக்கும்.

அதனால் யாரிடமும் சொல்லாமல் அட்மினிஸ்ட் ரேடிவ் ஆபீசரான செல்வத்தை வைத்து, வேலைகளை செய்து கொண்டிருந்தான்.

இதை கட்டாயம் சொல்ல முடியாது.

வீரமணிக்கும், பிரபுவிற்கும் கொடுத்ததை சொல்லி அமைதியாக அமர்ந்திருந்தான்.

"சரி உன்னோட தேவைக்கு பணமில்லை, அதுக்கும் நம்ம எங்கேஜ்மெண்ட்டுக்கும் என்ன சம்பந்தம்."

"பணம் மட்டுமில்லை. கொஞ்சம் பிரச்சனையும் கூட இருக்கு."

"என்ன பிரச்சனை?" என்று பொறுமையாக விசாரித்தாள்.

"புதுசா வந்திருக்குற ஒரு கலெக்டர் எல்லாத்தையும் நோண்டறான். அதனால தான் கிரானைட் ஸ்டாக் எல் லாத்தையும் மாத்திட்டு இருக்கேன். கொஞ்ச நாளைக்கு அந்த பிசினெஸ் கொஞ்சம் அதிகமா பண்ணக் கூடாது, பண்ணவும் முடியாது.

"சரி, அதுக்கும் நம்ம எங்கேஜ்மெண்ட்டுக்கும் என்ன சம்பந்தம்?" என்றாள் விடாமல்.

கார்த்திக்கினால் சொல்ல முடியவில்லை.

கலெக்டர் மிகவும் நேர்மையானவன், எதற்கும் மசிய மாட்டேன் என்கிறான். கண்டிப்பாக பிரச்சனைகள் வருவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம்.

மாட்டினால் குவாரி சீல் செய்து விடுவார்கள். கார்த்திக்கிடமும் அதிக பணம் கிடையாது. கிரானைட் கற்கள் இருந்தாலும் இப்போதைக்கு அதை விற்க முடியாது.

இதையெல்லாம் மீறி அவன் அரஸ்ட் ஆவான்.

இதை சக்தியிடம் எப்படி சொல்ல முடியும்.

''கொஞ்ச நாள் போகட்டும் சக்தி. இந்த பிரச்சனையெல்லாம் ஓயட்டும். அப்புறம் எங்கேஜ்மென்ட் போகலாம் ப்ளீஸ்'' என்றான் மன்றாடும் குரலில்.

இத்தனை சொல்லியும் மறுத்துப் பேசும் அவனை மாற்றும் வகையறியாது பார்த்து இருந்தாள் சக்தி.

அவளின் துளைக்கும் பார்வை கார்த்திக்கை துளைத்தாலும் அவனால் உண்மையை சொல்ல முடியவில்லை.

அவன் பிரச்சனையெல்லாம் இப்போதைக்கு ஒன்றே ஒன்று தான். அவன் மாட்டுவதை பற்றி கவலையில்லை. மாட்டினாலும் ஒன்றிற்கும் எந்த ப்ரூப்பும் கிடையாது. குற்றத்தை நிரூபிப்பது என்பது இயலாத காரியம். எல்லாம் பக்காவாக முடித்திருந்தான் கார்த்திக்.

ஆனால் சொத்துக்கள் எல்லாம் வீரமணி பேரிலும் பிரபு பேரிலும் இருக்கிறது. பினாமி என்று நோண்டினால்?

அவர்கள் பேர் வீணாக அடிபடும், சமூகத்தில் பெரிய தலைகுனிவு. பிரபு இதை தாங்கவே மாட்டான். சந்திரசேகரின் மகனாக சொத்தை கொடுப்பது போல் கொடுத்து அவனை மாட்ட விடுவதா.

சக்தி, அவளின் பேரில் அதிக சொத்துக்கள் இல்லா விட்டாலும், முன்பு காலேஜ் அவள் பெயரில் தான் வாங்கினான். இப்போது தான் அது டிரஸ்ட் ஆனது.

அவனால் வீரமணியோ? பிரபுவோ? சக்தியோ? அவர்களின் மற்ற குடும்ப உறுப்பினர்களோ மாட்டக் கூடாது என்பது தான் அவனின் இப்போதைய தலை யாய கவலை.

மனிதனுக்கு தொண்டை குழிக்குள் தண்ணீர் கூட இறங்க மாட்டேன் என்கிறது.

வாழ்க்கை வைத்திருக்கும் பிரச்சனைகள் எண்ணி லடங்காதவை. காதலித்த காதலியை பார்த்துக் கொண் டிருந்தால் இது விலகிவிடுமா. இல்லை அடுத்த வேளை உணவு நிம்மதியாக உண்ண முடியுமா. தொலையப் போகும் கௌரவம் கிடைத்து விடுமா.

இதில் காதலாவது? ரொமான்ஸாவது? நிச்சய மாவது? திருமணமாவது?

மனிதனுக்கு இதையும் மீறி உயிர் மூச்சான விஷ யங்கள் எத்தனையோ இருக்கின்றன.

உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும், அத்தியாவசிய தேவைகள். ஆனால் அதற்காக மட்டுமா மனிதன் உயிர் வாழ்கிறான்.

போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து, என்ற சொல் தெரியாதவர் யார் ஆனால் அதை கடைப் பிடிப்பவர் யார்.

கார்த்திக் அவனால் மற்றவர்கள் மாட்ட கூடாது என்ற மிகப்பெரிய பயத்தில் இருந்தான்.

பயம் வாழ்க்கையில் பயணத்தை மிக அதிகமாக அந்த நேரத்தில் உணர்ந்து கொண்டிருந்தான். யாரிடமும் சொல்லவும் முடியவில்லை என்பதை விட சொல்ல விருப்பமில்லை.

அது சக்தியாகினும் கூட?



# 35

**வெற்றியெட்டு திக்கு மெட்டக்**

**கொட்டு முரசே**

**வேத மென்றும் வாழ்க வென்று**

**கொட்டு முரசே**

- பாரதி

எவ்வளவோ கார்த்திக்கிடம் போராடி பார்த்த சக்தியும் ஏதும் செய்ய இயலாமல் விட்டுவிட்டாள். கார்த்திக் கிடம் ஒரு சிறிய காரியத்தை கூட சாதிக்க முடியாத அவளுடைய இயலாமை பலமாக அவளை தாக்கியது.

கார்த்திக் மற்றவர்கள் போல் இல்லை என்று அவளுக்கு தெரிந்ததுதான். இருந்தாலும் அவளை அவளால் சமாதானப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

மீண்டும் அவள் கல்லூரி வேலைகளில் தன்னை மூழ்கடிக்க ஆரம்பித்தாலும், கார்த்திக் அவளின் மனதில் பாரமாக ஏறி உட்கார்ந்து கொண்டான்.

என்ன வைஷ்ணவியின் திருமணத்தை தானே காரணம் சொல்கிறான். அவள் திருமணம் முடியட்டும். நிச்சயமும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம். நேரடியாக திருமணம் தான், அவன் என்ன மறுத்தாலும் விடக் கூடாது என்று முடிவாக இருந்தாள்.

சக்தி இப்படி நினைத்துக் கொண்டிருக்கும் போதே, வீரமணி எதிர்பார்த்துக் காத்திருந்த, மத்தியில் ஆட்சி காலம் முடிவடையும் நிலை வந்து, புதிய அரசு அமை வதற்கு தேர்தல் நடத்த நாட்கள் அறிவிக்கப்பட இருந்த நிலையில், வீரமணி இருந்த கட்சி வாக்காளர்களை அறிவித்தது.

கட்சி நிறைய இளைஞர்களுக்கு வாய்ப்பு கொடுக்க முடிவு செய்திருந்தது. அதுவுமில்லாமல் பெண்களுக்கு என கட்சியே இத்தனை தொகுதிகள் என்று ஒதுக்கி இருந்தது.

அதன் பொருட்டு சற்றுப் போட்டி இருந்தாலும் முடிவில் கிருஷ்ணகிரி தொகுதி எம் பீ எலெக்ஷனில் சக்திக்கு சீட் கொடுக்கப்பட்டது.

குறைந்த வயது, பெண் படித்திருந்தாள், தேர்தலுக்கு செலவு செய்யும் வசதியும் இருக்கிறது. இத்தனையும் கருத்தில் கொண்டு கட்சி மேலிடம் அவளுக்கு சீட் கொடுத்தது.

கட்சியில் நிறைய நாட்களாக சீட்டை எதிர்பார்த்து காத்திந்த சில பேருக்கு இதில் மிகுந்த மனவருத்தம், ''இப்போது வந்தவள் இந்த பெண், கட்சியிலேயே சேர்ந்து ஒரு வருடம் கூட இருக்காது, போனமுறையும்

தொகுதி கூட்டணி கட்சிக்கு போய்விட்டது. இப்போது கிடைக்கும் என்று பார்த்தால், இப்போதும் இப்படி, என்னை மாதிரி கட்சிக்கு நாயாய் பேயாய் உழைத்தவனுக்கு என்ன மரியாதை'' என்ற காழ்புணர்ச்சி அநேகம் பேரின் மனதில் இருந்தாலும்,

கட்சி தலைமை சக்திக்கு சீட் கொடுத்தது. இளைஞர்களுக்கு படித்தவர்களுக்கு வழிவிட கட்சி முடிவு செய்திருந்ததால், சக்திக்கு சீட் கிடைத்தே விட்டது.

தகவல் தெரிந்ததும் வீரமணிக்கு சந்தோசம் பிடிபடவில்லை. ''என் பொண்ணு நிக்கறா! ஜெயிக்கறா!'' என்று தெய்வானையிடம் காலையில் இருந்து பேச ஆரம்பித்தவர், நிறுத்தவேயில்லை.

அதற்குள் கட்சியிலிருக்கும் ஆட்கள் வீட்டிற்கு வந்தனர் வாழ்த்து தெரிவிக்க. கடை மட்டத்திலிருந்து மேலே வந்திருந்தாலும், சீட் கிடைக்காமல் இருப்பதில் வருத்தம் இருந்தாலும், அதை வெளியே காட்டாமல், என்ன வேலை செய்யலாம் எங்கே கட்சி ஆபீஸ் போடலாம் என்று கேட்க ஆட்கள் வந்துவிட்டனர்.

அவர்களுக்கு இது பணம் பார்க்கும் சமயம் அல்லவா, அதவுமில்லாமல் இப்போது உழைத்தால்தான் நாளை ஒரு வேளை சக்தி வெற்றி பெற்று விட்டாள் அவளை வைத்து காரியங்கள் சாதிக்கலாம்.

அரசியல் சக்தியின் வீட்டுக்குள் வந்தே விட்டது.

அநேகம் பேர் வாழ்த்து தெரிவிக்க, தெரிவிக்க வேண்டியவன் அழைக்கவேயில்லை.

காலையில் இருந்தே விஷயம் பரவி விட்டது. மாலை வரை அவனிடமிருந்து ஒரு தகவலும் இல்லை.

“அப்பா, கார்த்திக்கு தெரியுமாப்பா?” என்று வீரமணி யிடம் கூட கேட்டே விட்டாள்.

“தெரியுமே சக்திம்மா. காலையிலேயே நான் சொல் லிட்டேன். நான் சொல்றதுக்கு முன்னாடியே அவனுக்கு தெரிஞ்சிருந்தது.”

“ஒஹ், அவனுக்கு தெரியுமா?” பலமான ஏமாற்றம் தாக்கியது.

“என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் இவன்? இவன் சொன்னதால் தானே சரி என்றோம். இப் போதே இப்படி செய்கிறானே. என்னுடன் எப்படி இதற்கு துணை நிற்பான்” என்ற கேள்வி இன்னும் பலமாக தாக்கியது.

கோபம். மறுபடியும் ஒரு கண்மண் தெரியாத கோபம். ஆத்திரம் கரை கடக்க ஆரம்பித்தது.

அடுத்த நாள் காலைவரை பொறுத்தாள். அதற்கு மேல் அவளிடத்தில் பொறுமையில்லை. அவனை தொலைபேசியில் அழைக்கவும் மனது வரவில்லை. செல்வத்திடம் விசாரித்து அவன் எங்கே இருக்கிறான் என்று தெரிந்து, செல்வத்தை கூட அழைத்து கொண்டு போனாள்.

குவாரி ஆபீசில் இருந்தான். ஏதோ கணக்கு வழக்குகளை சரி பார்த்துக் கொண்டிருந்தான்.

அவளை பார்த்தும், “என்ன சக்தி? இங்க யாரோட

''யார் கூட வரணும். இனிமே தனியா போயிட்டு வர கத்துக்கிட்டு தானே ஆகணும்'' என்றாள் காட்டமாக அவனை பார்த்துக் கொண்டே. அப்படி பார்த்ததற்கு அப்போதைய காரணம் அவன் கழுத்தில் புதிதாக ஏறியிருந்த கழுத்து வலிக்கு போடும் காளர்.

தான் அவளைப் போய்ப் பார்க்காததுக்கு கோபமாக இருக்கிறாள் என்று புரிந்தது.

கழுத்து வலியோடு ஏதோ பறி கொடுத்தவன் போல் அமர்ந்திருந்த அவனின் தோற்றம் இன்னும் கோபத்தை கொடுத்தது.

''ரொம்ப வலியா?'' என்றாள்.

''ப்ச், அதை விடு!'' என்று அவன் சொல்லவும் ஒரு மாதிரி எரிச்சலாக, ''நீ எப்படியோ போ!'' என்று ஒரு பார்வை பார்த்தாள்.

''எப்போ வேணா இன்ஸ்பெக்ஷன் வரலாம். அதான் கணக்கு வழக்கு சரி பார்த்துட்டு இருக்கேன். அதான் வர முடியலை'' என்றான் விளக்கம் கொடுக்கும் விதமாக.

''ஒரு நிமிஷம் உனக்கு என்னோட போன்ல பேசக் கூடவா நேரமில்லை.''

''அது கொஞ்சம் டென்சன் சக்தி.''

''நீ சொல்ற காரணம் உனக்கே சரியா படுதா.''

''நிஜமாவே என்கிட்ட நேரமேயில்லை சக்தி. நான் ஒரு நிமிஷம் இன்னும் நேத்துல இருந்து தூங்கக் கூட இல்லை.''

''என்ன நேரமில்லை? சரி சாப்பிடலை, தூங்கலை, இப்படி பலது சொன்னாலும் தண்ணி கூடவா

குடிச்சிருக்க மாட்ட, அது உன்னோட அத்தியாவசியமா இருக்கும் போது, நான் உன்னோட அத்தியாவசியம் இல்லையா.''

கார்த்திக் பதில் பேசாமல் மௌனியாக நிற்க.

''உன்கிட்ட கெஞ்சி பார்த்துட்டேன். கோவப்பட்டு பார்த்துட்டேன். மிஞ்சி பார்த்துட்டேன். நல்ல விதமா சொல்லி பார்த்துட்டேன். இனிமே நிஜமாவே எனக்கு உன்னை எப்படி அப்ரோச் பண்றதுன்னு தெரியலை.''

''உனக்கா எப்போ என்கிட்டே வரணும்னு தோணுதோ! அப்போ வா'' என்று சொல்லி கிளம்ப.

''ப்ளீஸ் சக்தி! புரிஞ்சிக்கோ! நீயே என்னை புரிஞ் சிக்கலைன்னா எப்படி. பிரச்சனை முடிஞ்சதும் வந்துடு வேன்.''

''நீ பிரச்சனையோட என்கிட்டே வரக் கூடாதுன்னு நான் சொல்லியிருக்கனா என்ன? நீ எப்படி வந்தாலும் எனக்கு சம்மதம் கார்த்திக். அதை ஏன் நீ புரிஞ்சிக்க மாட்டேங்கற. சும்மா பிரச்சனை முடிஞ்சதும், முடிஞ்ச தும்னு சொல்லாத.''

''நீ கணக்கு வழக்கு சரி பண்ணலாம். நீ பண்ணின எதுக்குமே ஃப்ரூப் இல்லாம பார்த்துக்கலாம். ஆனா? நீ கிரானைட் எடுக்கறேன் குடைஞ்சு வெச்ச மலையையும் தோண்டி வெச்ச பள்ளத்தையும் என்ன பண்ணப் போற.''

''மலையை சிமெண்ட் கொண்டு அடைக்க போறயா, இல்லை பள்ளத்தை மண்ணு போட்டு மூடப் போறயா.''

நிதர்சனங்கள் அங்கிருந்த கார்த்திக்கையும், செல் வத்தையும் பலமாக தாக்கியது. இது கார்த்திக்கிற்கு தெரிந்ததுதான் என்றாலும் அவன் சிறு பெண்ணாக நினைக்கும் சக்திக்கே தெரிகிறதே என்பது தான் அவனின் எண்ணம்.

இன்னும் அவன் பார்வையில் சக்தி திறமையானவள் என்று ஒப்புக் கொள்ள மனம் வராமல் முரண்டிக் கொண்டே இருந்தது.

அவளால் இந்த பிரச்சனைகளை சமாளிக்க முடியும் என்ற எண்ண ஓட்டமே அவனுக்கு வரவில்லை.

''எதுவுமே முடியாது...'' என்றவள் நடக்க ஆரம்பித்து விட்டாள்.

அவள் செல்வதையே பார்த்துக் கொண்டு இருந் தவன், வேகமாக அவள் புறம் ஓடி, ''கார்த்திக் கூட இல்லைனாலும் சக்தி ஜெயிப்பா'' என்றான்.

அவனை விழியகற்றாமல் நீண்ட ஒரு நிமிடம் பார்த்தவள், ''கண்டிப்பா கார்த்திக் இல்லைன்னாலும் சக்தி ஜெயிப்பா! அதுல உனக்கு சந்தேகமே வேண்டாம்! ஆனா அதுல அவளுக்கு சந்தோசம் இருக்காது!'' என்று சொல்லி வேகமாக சென்று காரில் ஏறி அமர்ந்து கொண்டாள்.

பின்னாலேயே வந்த செல்வம், ''நான் சொன்னாலும் நீங்க எதுவும் கேட்க மாட்டீங்க. எனக்கு தெரியும் பாஸ்! இருந்தாலும் சொல்றேன்! அவங்க ஜெயிக்கறதுக்காக நீங்க அவங்க கூட இருக்கீங்களோ இல்லையோ? நீங்க

ஜெயிக்கறதுக்காக அவங்களை கூட வெச்சிகோங்க பாஸ்!'' என்றான்.

எதற்கும் கார்த்திக்கிடம் இருந்து பதிலில்லை.

செல்வமும் கிளம்ப, ''சக்தி கூடவே இருடா'' என்றான் செல்வத்தை பார்த்து.

''நீங்களா அவங்களை தேடி வர்ற வரைக்கும், அவங்க கூட தான் நான் இருப்பேன் பாஸ்'' என்றான்.

அவனின் தோளில் தட்டி கொடுத்த கார்த்திக் திரும்பி நடக்க ஆரம்பித்தான்.

திருமணத்திற்கு பத்து நாட்களே இருந்தன. அழைப் புகள் எல்லாம் ஓரளவிற்கு முடிந்து சிலது மட்டுமே பாக்கி இருந்தது.

கார்த்திக்கின் வீடு திருமண வேலைகளில் மிகவும் உற்சாகமாக இருந்தது. பிரபு அதைவிட உற்சாகமாக இருந்தான். எத்தனையோ மனவுளைச்சல்களையும் பிரச்சனைகளையும் கார்த்திக் நாளுக்கு நாள் எதிர்கொள்ள வேண்டியிருந்தாலும் எதையும் வெளிக்காட்டவில்லை.

ஒரே தங்கை அவளுடைய திருமண ஏற்பாடுகளை மிகவும் சிறப்பாக செய்தான்.

அன்று சக்தி வேட்புமனு தாக்கல் செய்யும் நாள். அன்றாவது வருவான் என்று மிகவும் எதிர்பார்த்தாள். கார்த்திக் வரவேயில்லை.

அங்கே செல்ல கிளம்பும் சமயம் வரை ஒரு எதிர் பார்ப்பு. ஒரு வேளை நான் மனு தாக்கல் செய்கிறேன் என்று தெரியாதோ என்று வேறு அந்த பேதை உள்ளம் நினைத்தது.

மெதுவாக செல்வத்திடம், "என்ன பண்றான் உங்க பாஸ், நான் இன்னைக்கு வேட்பு மனு தாக்கல் செய்யறது தெரியாதா?"

தயங்கினாலும் செல்வம் உண்மையை சொன்னான், "தெரியும்" என்று.

"ஒஹ்! அவனுக்கு வர நேமில்லையா! இன்னைக்கு எந்த கணக்கை பார்க்கிறானாம்."

"ஏதோ வேற வேலைன்னு சொன்னாங்க."

"வேலையிருக்குன்னு நாளைக்கு அவன் தங்கச்சி கல்யாணம் நடக்கும் போது போகாம இருப்பானா என்ன? அவனுக்கு வர இஷ்டமில்லைன்னு சொல்லு" என்றாள் கோபமாக.

"அவன் சொன்னான் கூட இருப்பேன்னு. அவன் சொன்னான்னு தானே நான் இதுக்கு ஒத்துக்கிட்டேன். இப்போ என்னை தனியா விட்டுட்டான்" என்று சொல்லும்போதே சக்தியின் குரல் கலங்கியது.

அவளால் கார்த்திக்கை பற்றி வேறு யாருடனும் பேச முடியவில்லை. வேறு யாரிடத்திலும் அவனை பற்றி குறை கூறவோ, குறைத்து பேசவோ முடியாது.

சக்தி கலங்குவது பிடிக்காமல்,

"அது அப்படியில்லை மேடம். நிறைய பிரச்சனை களுக்கு நடுவுல இருக்கார், உங்க கூட இந்த சமயத்துல வந்தா, நாளைக்கு பிரச்சனையாகும் போது உங்க பேர் கெடும்னு, உங்க வெற்றி பாதிக்கும்னு" என்று செல்வம் இழுக்க,

சக்தி வெடித்தாள். "உலகத்துல நீங்க மட்டும் தான்டா புத்திசாலிங்க! அதுவும் உன் பாஸ் இருக்கானே, அவனை தவிர எல்லாம் கூமுட்டைங்கன்னு அவனுக்கு நினைப்பு. இதே அவனுக்கும் எனக்கும் கல்யாணம் நடந்திருந்தா என்ன பண்ணியிருப்பான். விட்டுட்டாப் போயிருப்பான்."

"என்ன பெரிய பிரச்சனை. வர்றதுக்கு முன்னாடியே இப்படி அதை பிடிச்சு தொங்கினா எப்படி. செய்யும் போது தெரியாதா பிரச்சனை வரும்னு. சொன்னாலும் கேட்க மாட்டேங்கறான். அவனவன் பேர்ல பிரச் சனையிருக்கறவனே அரசியல்ல நிக்கறான். இதுல கூட இருக்கறவங்களுக்கு பிரச்சனையிருந்தா எனக்கு ஓட்டு போட மாட்டாங்களா."

"செய்யறதை எல்லாம் கெட்டதா செஞ்சிட்டு, இப்போ என்னை பொருத்தவரை மட்டும் ஒவர் நல்லவனா இருக்கான். ஓட்டு போட மாட்டாங்களாம். என்ன கதை இது."

"இப்படி உருப்படி இல்லாத கதையா செலக்ட் பண்ணி தான் சினிமால போயும் தோத்துட்டு இருக் கான்னு நினைக்கிறேன்."

"அறிவு கெட்டவன் என்ன சொன்னாலும், எப்படி சொன்னாலும் கேட்க மாட்டேங்கறான்" செல்வத்திடம் அவனை சகட்டுமேனிக்கு திட்டினாள். அவள் திட்டுவதை கேட்டுக் கொண்டிருந்த செல்வத்திற்கு இப்போவே அரசியல்வாதி ஆகிட்டாங்க போல என்று நினைத்து பெருமூச்சு விடுவதை தவிர வேறுவழி யில்லை.

''அவனை ஏன் அறிவுகெட்டவன்னு சொல்லணும், நான்தான் அறிவு கெட்டவ, அவனை பத்தியே நினைச்சுட்டு இருக்கேன்.''

''இவன் என் கூட இருந்தா எனக்கு பிரச்சனை வருமாம். நீதான் உன் பாஸ் சொல்றதை நம்பிட்டே உட்கார்ந்திருக்கணும். அதுக்கு சக்தி ஆளில்லை. கிளம்பு நேரமாச்சு'' என்று கோபமாக கத்தினாள்.

கோபம் எல்லாம் அவள் வீட்டை விட்டு கிளம்பும் வரையில் தான். வெளியில் அவளோடு வேட்புமனு தாக்கல் செய்ய கூட இருந்த ஆட்கள் பார்த்தும் முகம் புன்னகையை பூசியது.

அவர்களோடு பேசிக் கொண்டிருந்த தந்தையோடு போய் சேர்ந்து கொண்டாள்.

சிரித்த முகத்தோடு அவர்களை வரவேற்று பேச ஆரம்பித்தாள்.

''இவர்களா என்னிடம் இப்படி கத்தியது'' என்று செல்வம் யோசிக்கும்படியாக இருந்தது. இருந்தாலும் இது சக்தியின் இயல்பான சிரிப்பு அல்ல அவள் வரவழைத்துக் கொண்ட சிரிப்பு, அந்த சிரிப்பில் ஒரு இறுக்கமும் கூடவே இருந்தது.

செல்வத்திற்கு சற்று கவலையாக இருந்தது. அந்த கூட்டத்திற்கு மத்தியில், அந்த கரை வேட்டிகளுக்கு மத்தியில், அந்த அடிமட்ட தொண்டர்களுக்கு இடையில், சக்தி ஒட்டாமல் தான் தெரிந்தாள்.

அவள் சமாளிப்பாளா என்று கவலையாக இருந்தது. அவனுடைய பாஸின் மேல் அவனுக்கே கோபம் கோபமாக வந்தது.

அவன் இப்போதைக்கு செய்ய கூடியது மட்டுமெல்லாம் சக்தியின் நிழலாக இருப்பது மட்டுமே. ஆனால் அதிலும் ஒரு சிக்கலாக கார்த்திக்கின் மேல் இருக்கும் கோபத்தை செல்வத்திடம் கண்டிப்பாக சக்தி காட்டுவாள்.

''எத்தனையோ பார்த்துட்டோம்! இதை பார்க்க மாட்டோமா?'' என்ற மனப்பான்மையோடு சக்தியின் அருகில் போய் நின்று கொண்டான். அவனை தாண்டியே யாரும் சக்தியை அணுக முடியும்.

சக்தி பிரியதர்சினியின் வேட்புமனு தாக்கல் கார்த்திக் இல்லாமலேயே வெற்றிகரமாக முடிந்தது.

சக்தி பிரியதர்சினியின் பிரச்சாரமும் கார்த்திக் இல்லாமலேயே ஆரம்பித்தது.

ஆக மொத்தத்தில் அரசியலை பொருத்தவரை கார்த்திக் இல்லாமல் சக்தியின் பயணம் தொடங்கியது.



# 36

**தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா**

**நின்னை தீண்டும் இன்பம் தோன்றுதடா**

**நந்தலாலா நந்தலாலா**

- பாரதி

அன்று பிரபு வைஷ்ணவியின் திருமணம். எவ்வளவோ சொல்லியும் தெய்வானை வர மறுத்துவிட்டார்.

''எனக்கு மனசே சரியில்லை. நான் வரலை. யார் கல்யாணத்தையும் என்னால பார்க்க முடியாது. கல் யாணமாகறது எல்லாம் உன்னை விட சின்ன பொண் ணுங்க. எனக்கு தாங்காது சக்தி.''

''அம்மா! அதது நடக்க வேண்டிய நேரத்துல நடக்கும். அதுக்காக இப்படி முகத்தை தூக்கி வச்சுக்கு வியா.''

''ப்ச், வரலைன்னா விட்டுடு.''

அம்மாவை சமாதானப்படுத்த முடியாமல் சக்தி வீரமணியை பார்க்க, ''விட்டுவிடு'' என்பதாக சைகை செய்தார்.

வேறுவழியில்லாமல் சக்தியும் வீரமணியும் மட்டும் கிளம்பினர். நிறைய சக்தியினால் வற்புறுத்த முடிய வில்லை. வாசுகியும் பிரபுவும் தான் வந்து அழைத் திருந்தனர். கார்த்திக் வரவில்லை. அதில் அவளுக்கே சற்று ஆதங்கம். எப்போது பெண் கேட்டு வருவான் என்று எதிர்பார்த்திருக்கும் தெய்வானையிடம் என்ன சொல்லுவாள்.

ஜரிகை கூட இல்லாத ஒரு பட்டு கட்டி, எந்த ஒப் பனையுமில்லாமல், தெய்வானையின் வற்புறுத்தலின் பேரில் ஒரு சிறிய கண்ணை உறுத்தாத நெக்லஸ் மட்டும் அணிந்து கிளம்பினாள்.

''அரசியல்ல நிக்க வெக்கறேன். வெங்காயத்துல நிக்க வெக்கறேன்னு ஒரு அலங்காரம் கூட என் பொண்ணை பண்ண விடாம செஞ்சிட்டீங்க. நான் ரூம்க்கு ரூம்க்கு நகை வெச்சு லாக்கர் வெச்சிருக்கேன். தேடிப்பிடிச்சு

அத்தனை டிசைன் வாங்கி வெச்சிருக்கேன். என்ன பிரயோஜனம்'' என்று வீரமணியிடம் பொறிந்து தள்ளினார்.

''ஏம்மா, அம்மா சொல்றதை கட்டிக்கிட்டு, நகை கொஞ்சம் நிறைய போட்டுக்க வேண்டியது தானே மா.''

''அது இனிமே சரி வராதுப்பா. நான் அப்படி போனேன்னு வெச்சிக்கங்க, அரசியல்ல நிக்கறதுக்கு முன்னாலயே இந்த பொண்ணு இத்தனை நகை போட்டு இவ்வளவு ஆடம்பரமா வருதே, இன்னும் நின்னு ஜெயிச்சா என்ன பண்ணும்னு பேசுவாங்க'' என்றாள்.

வீரமணிக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரிய வில்லை.

தந்தையும் மகளும் திருமணத்திற்கு கிளம்பினர். அன்று எந்த பிரசாரமும் வேண்டாம் என்று தந்தையிடம் சொல்லியிருந்தாள்.

அதனால் இருவருமே சற்று ரிலாக்ஸாக இருந்தனர். சக்திக்கு கார்த்திக்கை காணப்போகும் ஆர்வமும் இருந்தது.

அவர்கள் திருமண மண்டபத்திற்குள் நுழைந்த போது தாலி கட்டும் நேரம் நெருங்கியிருந்தது. அதனால் எல் லோரும் அங்கேயிருந்தனர். யாரும் இவர்களை கவ னிக்கவில்லை. கூட்டமும் சற்று அதிகமாக இருந்தது.

முன்னிருக்கையில் வீரமணியை பார்த்த ஒருவர் எழுந்து இடம் விட, ''நீங்க உட்காருப்பா'' என்று சொல்லிய சக்தி, வீரமணி அருகில் அமர சொன்னதை

கேட்காமல், ''என் பிரண்ட்ஸ் இருக்காங்க'' என்று சொல்லி பின்னால் சென்றாள்.

அவள் என்னவோ வாய் வார்த்தைக்காக தான் சொல்லி சென்றாள். ஆனால் நிஜமாகவே அவளோடு யு ஜி படித்த தோழி ஒருத்தி அங்கே அவளின் கணவனோடு அமர்ந்திருந்தவள் இவளை பார்த்ததும், ''ஹாய் சக்தி'' என்று ஆர்வமாக அழைத்து அருகமர்த்தி கொண்டாள்.

அவளின் தோழியின் மடியில் அவளின் ஒன்றரை வயது அழகு பெண் குழந்தை அமர்ந்திருந்தது. அது சக்தியை ஈர்க்க அவளும் எல்லாவற்றையும் மறந்து தோழியின் அருகமர்ந்து குழந்தையை ஆர்வமாக வாங்கினாள்.

அதுவும் அடம் செய்யாமல் அவளிடம் சமத்தாக வந்தது.

''சக்தி எலெக்ஷன்ல நிக்கிறியாமே'' என்று அவளின் தோழி பேச்சை ஆரம்பிக்க.

''ஆமாம்'' என்று அவளுக்கு பதில் கொடுத்த வண்ணம் குழந்தையை கொஞ்ச ஆரம்பித்தாள்.

வீரமணி வந்ததை கவனித்த செல்வம் உடனே சென்று கார்த்திக்கிடம் கூறினான். அதன் பிறகே கார்த்திக், அவரை வரவேற்று விட்டு சக்தியையும் தெய்வானையையும் பற்றி விசாரித்தவன், தெய்வானை வரவில்லை. சக்தி மட்டும் வந்திருக்கிறாள் என்று தெரிந்தவுடனே அவளை தேடி வந்தான்.

அவன் சக்தியை பார்த்த போது சக்தி குழந்தையை கொஞ்சிக் கொண்டிருந்தாள். அவளின் தோழி பேச்சுக் கொடுத்து கொண்டிருந்தாள். சக்தி அவளிடம் பேசிக் கொண்டு இருந்தாலும், தன்னிச்சையான அந்த பேச்சில் கவனமில்லாது இருந்தது அவளின் பதில்கள்.

அவளின் கவனமெல்லாம் குழந்தையிடம் தான்.

அந்த குழந்தையிலேயே லயித்திருந்தாள். கார்த்திக் அருகில் வரும் வரையிலும் அவளுக்கு தெரியவில்லை. அவன் அருகில் வந்து, ''சக்தி'' என்று அழைத்த பிறகு தான் அவனை திரும்பி பார்த்தாள்.

கார்த்திக் என்று உணர்ந்து பார்த்த விழிகளில் அத்தனை ஏக்கம். கார்த்திக்கிற்கு வாழ்க்கையே வெறுத்தது. எதுவும் செய்ய முடியாத தன்னுடைய சூழ்நிலை அவனுக்கு அப்படி ஒரு வலியை கொடுத்தது.

யாருடன் அமர்ந்திருக்கிறாள் என்று பார்த்தான். அந்த கணவன் மனைவியில், கணவன் கார்த்திக்கின் உறவினன். அவனிடம் மரியாதை நிமித்தம் ஒரு இரண்டு வார்த்தை பேசிவிட்டு,

சக்தியிடம், ''அங்க மேடைக்கு வா சக்தி'' என்றான்.

''இல்லை, நான் இங்கேயே இருக்கேன். பாப்பா செம க்யூட்! என்கிட்டே கூப்பிட்டவுடனே வந்துட்டா. அழவேயில்லை!'' என்றாள் குழந்தைத்தனமாக.

''அங்க தாலி கட்ட போறாங்க! நீ அப்புறம் இங்க வருவியாம்! அங்க வா!'' என்றான் குரலில் சற்று வற்புறுத்தல் இருந்தது.

தோழியின் முன் கார்த்திக்கிடம் வாக்கு வாதத்தில் ஈடுபட முடியாமல் எழுந்து அவனுடன் நடந்தவள், ''கல்யாணத்துக்கே நீ என்னை கூப்பிடலை! இப்போ எதுக்கு மேடைக்கு கூப்பிடற'' என்றாள் மெதுவான குரலில் அவனுக்கு மட்டும் கேட்கும்படியாக.

கார்த்திக்கும் சற்றும் சளைக்காமல், ''அவங்கவங்க வீட்டு கல்யாணத்துக்கு அவங்கவங்களே இன்விடேஷன் வெச்சிக்குவாங்களா'' என்றான்.

அவன் கையில் நறுக்கென்று வலிக்கும் படியாக யாருடைய கவனத்தையும் கவராமல் கிள்ளினாள்.

''அச்சோ! என்ன இது?'' என்று அவன் முகம் சுருக்கவும்.

''பேசறது நீதானான்னு செக் பண்ணினேன்!'' என்றாள்.

அங்கே என்ன ஒரு கிலோமீட்டர் தூரமா. அதற்குள் மேடை வந்திருக்க, மேடையில் அமர்ந்திருந்த பிரபு இவளை பார்த்ததும் வரவேற்கும் விதமாக தலையசைத்தான்.

அவன் தலையசைக்கவும் தான் அங்கே இருந்த சுமித்ரா, சிவா எல்லோரும் திரும்ப, சக்தியை பார்த்தனர்.

வேகமாக இறங்கி வந்த சுமித்ரா சக்தியை கையோடு அழைத்துக் கொண்டு போய் மேடையில் அருகில் நிறுத்திக் கொண்டாள்.

''நான் பின்னாடி நிக்கறேன்!'' என்று பின்னால் போகப் பார்த்த சக்தியை சுமித்ரா விடவில்லை. அருகிலேயே நிறுத்திக் கொண்டாள். நகர விடவில்லை.

புண்பட்ட சக்தியின் மனதிற்கு இந்த செய்கைகள் சற்று ஆறுதலாக இருந்தது.

ஆர்வமாக திருமண சடங்குகளை பார்த்துக் கொண் டிருந்தாள். வைஷ்ணவியின் முகத்தில் அத்தனை பூரிப்பு, அத்தனை வெட்கம். பிரபுவின் முகமுமே சந்தோஷத்தை பூசிக் கொண்டு இருந்தது.

கண்களில் கனவுகளோடு சக்தி அதையே பார்த்துக் கொண்டிருந்தாள். முதல் முறையாக வீரமணியும் அவருடைய பெண்ணை ஆழ்ந்து கவனித்தார். சக்திக்கும் மனதில் திருமண ஆசை இருக்குமோ என்று தோன்றியது.

கவனிக்க வேண்டியவன் திருமண வேலைகளில் மும்முரமாக இருந்தான்.

பிரபு மங்கள நாண் பூட்டினான். அய்யர் சொல்லும் மந்திரங்களோடு அது மட்டுமே அங்கு நடந்த திருமண சடங்கு, அதோடு அக்னியை வலம் வந்தனர். அவ்வளவே தாரை வார்த்துக் கொடுக்கும் சடங்கே இல்லை.

பிரபுவிற்கு தாய் தந்தை கிடையாது. வைஷ்ணவிக்கு தந்தை கிடையாது. அதனால் பிரபு அதை வேண்டாம் என்று சொல்லிவிட்டான்.

வயதின் மூப்போடு இருக்கும் பத்ரிநாத் உறவுகளை வைத்து அதை செய்ய சொல்ல... பிரபு எதற்கும் அசையவில்லை. அது என் தாய், தந்தை, மாமாவிற்கு உரியது, அவர்கள் இல்லாத போது அது தேவையில்லை என்று விட்டான்.

வேறு மணமக்களின் நெருக்கத்திற்கு உதவும், இந்த மோதிரம் போடுவது, அப்பளம் உடைப்பது போன்ற விளையாட்டுகளும் இல்லை.

மற்றபடி திருமணம் அதற்குரிய சகல லட்சணங் களோடு சிறப்பாக நடந்தது.

கார்த்திக்கின் முகத்தில் அவனுடைய கடமையை முடித்த நிறைவு தெரிந்தது. அதனால் அவன் எதிர் கொள்ள வேண்டி இருந்த பிரச்சனைகளுக்கு தற்காலிக விடை கொடுத்தான்.

வாசுகி ஆரோக்யமான பெண்மணிதான். இருந் தாலும் திருமண அலைச்சலோ இல்லை வேறு ஏதோ முதல் நாள் இருந்து அவருக்கு காய்ச்சலாக இருக்க, பிரபு மேடையிலேயே ஒரு ஓரமாக சோபா ஒன்றை போட்டு அவரை அமர்த்தி இருந்தான்.

கார்த்திக் வாசுகியிடம் நெருங்காத குறையை பிரபு எப்போதும் தீர்த்து வைப்பான்.

''கல்யாணம், உறவுக்காரங்க வருவாங்க, அது இதுன்னு எங்கயும் அலையக் கூடாது அத்தை நாங்க பார்த்துக்கறோம்'' என்று பிரபு சொல்லியிருந்தான். அவரின் சோர்வான தோற்றமே அவருக்கு காய்ச்சல் என்பதை பறை சாற்ற, உறவுகளும் எந்த பேச்சும் பேசவில்லை. என்ன செய்ய வேண்டும் என்று கேட்டு ஆளுக்கு ஒரு வேலையாக இழுத்துப் போட்டு செய் தனர்.

கார்த்திக் அம்மாவின் பக்கத்திலேயே இருந்தான். மகளுடைய திருமணம். அவன் தந்தை இல்லாத

குறையை தாய் உணர்ந்தாலும், அவன் கூட இருக்கிறான் என்ற நம்பிக்கையை கொடுக்க கூடவே இருந்தான்.

அவனுக்கு ஏதோ வேலை வர, "சக்தி! அம்மாவோட இரு!" என்று சொல்லி அவளை அழைத்து பக்கத்தில் அமர்த்தி சென்றான்.

அது சக்திக்கு எவ்வளவு நிறைவை கொடுத்தது என்பது அவளுக்கு தான் தெரியும். வாசுகி என்னவோ அமைதியாக இருந்தார்.

அவருடைய வயதையொத்த அக்கா, தங்கை, அத்தை மக்கள், மாமன் மக்கள் எல்லாம் பூவும் பொட்டுமாக கணவனோடு இருக்க, தனக்கு கொடுப்பினையில்லாத சந்தோஷமான திருமண வாழ்க்கை, கார்த்திக்கின் அப்பா மிகவும் ஞாபகத்திற்கு வந்தார்.

மக்களுக்கு திருமணம் ஆகும் வரை தான் தாய் தந்தைக்கு முதல் உரிமை அவர்களிடம், அதன் பிறகு அது அவர்களின் கணவனாகவோ மனைவியாகவோ ஆகிவிடுவர்.

இளமையை விடவும், இந்த சூழலில் துணையை அதிகம் தேடும் மனது.

அவரின் மனவோட்டத்தை அறியாமல் அவர் சோர்வாக இருப்பதை பார்த்து, "உங்களுக்கு ஏதாவது குடிக்க கொண்டு வரட்டுமாம்மா" என்றாள் சக்தி.

"நான் தான்மா உன்னை உபசரிக்கணும். பிரபு இந்த இடத்தை விட்டு எந்திரிக்க கூடாதுன்னு ஆர்டர் போட்டிருக்கான்."

''அதனால என்னம்மா உங்களுக்கு உடம்பு சரியானதும் நல்லா கவனிச்சுக்கோங்க. சக்தி எப்பவும் டையட் எல்லாம் கிடையாது நல்லா சாப்பிடுவா'' என்று உற்சாகமா சொன்னாள்.

அவருக்கு சக்தி அவள் தான் என்று சட்டென்று ஞாபகம் வரவில்லை. ஆனால் அவளின் உற்சாகமான பேச்சு அவரை மேலும் சக்தியிடம் பேச வைத்தது.

''யாரு சக்தி?'' என்றார்.

''நான் தான்மா'' என்று சொல்லவும்.

அவருக்கு சோர்வையும் மீறி சிரிப்பு வந்துவிட்டது. நன்றாகவே புன்னகைத்தார். என்ன தான் வாசுகி வெளியில் எதையும் காட்டி கொள்ளாமல் இருந்தாலும் கணவனுடைய பிரிவு, பின்பு மறைவு, மகனுடைய பிரிவு, இதெல்லாம் அவர் முகத்தில் புன்னகை என்ற ஒன்றை மறையச் செய்து இருந்தது.

இரு திருமணங்கள் வீட்டில் வரவும் தான் புன்னகை முகத்தை மற்றவர்களுக்காக இழுத்துப் பிடித்தார்.

இப்போது அவரின் முகத்தில் புன்னகை தானாக விரிந்தது.

''உன்னை பார்த்தா அப்படி நல்லா சாப்பிடற மாதிரி தெரியலையே. ஒல்லியாதானே இருக்க.''

''என்னை பார்த்து அப்படியெல்லாம் தப்பா நினைக்காதீங்க. எங்க முனியம்மா மட்டும் காரச் சட்னி செஞ்சிச்சு, சக்தி பத்து இட்லிக்கும் குறையாம சாப் பிடுவா'' என்று பெருமை அடித்தாள்.

''அது மினி இட்லி தானே'' என்று புன்னகை முகத்தோட வாசுகி கேட்க,

''ம்கூம், பெரிய இட்லி, மினி புஃட் பால் சைஸ்ல இருக்கும். நீங்க வேணா கார்த்திக் கிட்ட கேளுங்க. இட்லி செஞ்சா நான் அவனை விட நிறைய சாப்பிடு வேன். அவன் கூட கதவை இடிச்சு புதுசா வைக்கணும் போலன்னு கிண்டல் பண்ணுவான்.''

சக்தி இயல்பாக பேசியதால் மரியாதை பன்மை மறந்திருந்தாள். அவள் பேசும்போது கார்த்திக்கை ஒருமையில் பேசுவதை வாசுகி கவனித்தார். அதில் மரியாதை இல்லாத தன்மை என்பதை விட ஒரு உரிமை கலந்திருந்தது.

''இப்போ கூட பாருங்க, நான் வர்றதே கல்யாண வீட்டுக்கு, எங்கம்மா நான் பசி தாங்க மாட்டேன்னு ரெண்டு இட்லியை உள்ள தள்ளுனதுக்கு அப்புறம் தான் அனுப்பினாங்க.''

''இது என்ன?'' என்று செல்லமாக கோபித்த வாசுகி, ''அப்போ இங்க சாப்பிட மாட்டியா.''

''யார் சொன்னது? அது ஜஸ்ட் ஸ்டார்ட்டர், சக்தி யோட கெப்பாசிட்டியே வேற, ஆனா அதுலயும் ஒரு சிக்கல் இருக்கு.''

''என்ன சிக்கல்?''

''நிறைய பேர் இருந்தா பந்தில சாப்பிடறதுக்கு முன்னாடியா எப்போ எழுந்திருப்போம்னு வந்து பார்த்துட்டே இருப்பாங்க, என்னால சாப்பிடவே முடியாது.''

வாசுகிக்கு இப்போது நன்றாகவே சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது.

''ஆனா அதுக்கு கூட ஒரு ஐடியா வெச்சிருக்கேன்.''

''என்ன'' என்றார் சிரிப்போடு.

''முதல்ல போய் சாப்பிட்டிட்டு வந்துடறேன். அப்புறம் நீங்க சாப்பிட போகும்போது இன்னொரு தடவை வர்றேன். நீங்க எப்படியும் லேட்டா தானே போவீங்க'' என்றாள்.

வாசுகிக்கு சக்தி அதை சொன்ன விதத்தில் சிரிப்பு பொங்கியது.

வாசுகி சிரித்ததை மேடையில் இருந்து திரும்பிய பிரபு பார்த்து, வைஷ்ணவியிடம் காட்டினான். வைஷ்ணவி கார்த்திக்கிடமும் சுமித்ராவிடமும் காட்டினாள்.

கார்த்திக்கின் கால்கள் தன்னை போல அங்கே சென்றது.

''அம்மா! இவங்க என்ன கதை அளந்துட்டு இருக்காங்க! ரொம்ப கதை விடுவாங்க! நம்பாதீங்க!'' என்றான்.

இந்த பெண் ஒருமையில் பேசுகிறது. இவன் இப்படி பேசுகிறானே என்று வாசுகிக்கு தோன்ற இருவரையும் கவனித்தார்.

''நான் ஒண்ணும் கதை விடுல! நான் பத்து இட்லி காரச் சட்னில சாப்பிடறதை சொன்னேன்'' என்றாள் சலுகையாக.

கார்த்திக்கும் இப்போது வாய் விட்டு நகைத்தான். பிரபு, வைஷ்ணவி, சுமித்ரா மூவரின் பார்வையும் அவர்களையே வட்டமிட்டது.

''நிஜமா அம்மா! அவங்க பத்து இட்லி சாப்பிடு வாங்க. ஆனா நம்மளால அந்த காரச் சட்னில ஒரு இட்லி கூட சாப்பிட முடியாது. அவ்வளவு கொடுமையா இருக்கும். அதுல இவங்க பத்து இட்லி சாப்பிடுவாங்க. அதுவும் எப்படி ரசிச்சு சாப்பிடுவாங்கன்னா'' என்று கார்த்திக் சொல்ல,

அவனை மேலும் பேசவிடாமல் நிறுத்தியவள், ''யாராவது கூப்பிட்டாங்களா உன்னை, கிளம்பு முதல்ல நீ. கல்யாண வீட்ல எல்லோரும் சொல்லிட்டு போக உன்னை தான் தேடுவாங்க! போ! போ!'' என்று துரத்தி னாள்.

''நான் உண்மையை சொல்லிட்டேன்னு பயம்.''

''ஆமா! பெரிய பயம் பாரு! நான் நினைச்சேன்னா உன்னை ஒரு நிமிஷத்துல பயப்படுத்துவேன்.''

''அப்படியா எங்க செய் பார்ப்போம்.''

வாசுகிக்கு கார்த்திக் இப்படி கூட பேசுவானா என் றிருந்தது.

சக்தி நேரே போனை எடுத்தவள், வீட்டிற்கு போன் செய்தாள். கார்த்திக் நேரம் போனை முனியம்மா எடுக்கவும்,

''முனியம்மாக்கா நீங்க காரச் சட்னி செய்வீங்க தானே, அது கார்த்திக்கு வேணுமாம்'' என்று சக்தி ஆரம்பிக்கும் போதே, அவளின் போனை பிடுங்கி ஆஃப் செய்த கார்த்திக், ''நிஜமாவே நான் பயந்துட்டேன்'' என்றான்.

''நீ பயப்படறது இருக்கட்டும், எங்கப்பா உங்க தாத்தா கிட்டபேச உட்கார்ந்து இருக்கார். உங்க தாத்தா நொந்து போயிடுவார், முதல்ல அவரைப் போய் காப்பாத்து'' என்றாள்.

ரெண்டு பேரும் பேச்சுல சரியா தான் இருப்பாங்க என்றபடி கார்த்திக் நிற்க.

''போப்பா! போ போ! வேலையைப் பாரு'' என்றாள்.

சிரித்தபடியே கார்த்திக் இறங்கிப் போனான்.

கார்த்திக் அகன்றதும் அத்தையின் அருகில் வந்த சுமித்ரா, ''சக்திக்கா! என்ன சொன்னீங்க, கார்த்திக் மாமா சிரிச்சிட்டே போறார்'' என்றபடியே அருகமர்ந்தாள்.

அதற்குள் கார்த்திக் சக்தியைப் பார்த்து கையசைத் தான் வீரமணி அழைக்கிறார் என்று.

''இதோ வந்துடறேன்மா'' என்று வாசுகியிடம் சொல்லி, சக்தி கீழிறங்கினாள்.

''நான் கிளம்பறேன்மா.''

''நான் பா.''

''நீயும் வர்றியா.''

''இல்லை! அவங்க அப்புறம் வரட்டும்'' என்றான் கார்த்திக்.

''நீ கொண்டு போய் விடறேன்னா இருக்கேன்'' என்று மெதுவாக முணுமுணுத்தாள்.

''நான் கொண்டு வந்து விடறேன் அய்யா'' என்று கார்த்திக் சொல்ல வீரமணி கிளம்பினார்.

அவர்களைப் பார்த்திருந்த வாசுகி ''அவன் இப்படி சிரிச்சோ பேசியோ நான் பார்த்ததில்லை'' என்றார்.

''ஆம்!'' என்பது போல் தலையாட்டிய சுமித்ரா... ''சக்திகிட்ட மட்டும் தான் மாமா இப்படிப் பேசுவாங்க! அதுவும் அடிக்கடி கிடையாது. எப்பவாவது!'' என்றாள் சுமித்ரா.

''இவ்வளவு விளையாட்டுத்தனமா இருக்கா! இவளா எலெக்ஷன்ல நிக்கறா.''

''உங்ககிட்ட இருந்தா அப்படித்தான்னு நினைச்சிடா தீங்க, ரொம்பக் கோபம் வரும். கோபம் வந்துச்சு, ம்கூம்.. மாமா கூட கண்ட்ரோல்ல இருப்பாங்க இவங்க கண்ட் ரோலே கிடையாது.''

''மாமாக்கு இவங்கன்னா ரொம்ப இஷ்டமத்தை, அதுபோல் தான் அவங்களுக்கும், அதான் நான் வில கிட்டேன். அதுல எனக்கு வருத்தம்னு நினைச்சிடாதீங்க, கொஞ்சமும் இல்லை'' என்றாள்.

வாசுகிக்கு சக்தியைப் பிடித்திருந்தது. ''ரொம்ப நல்லா பேசறா'' என்றார்.

''நல்ல பொண்ணு அத்தை. எல்லாரோடையும் நல்லா பழகிடுவாங்க. கார்த்திக் மாமாக்கு ஆப்போசிட். அவங்க எத்தனைக்கு எத்தனை ஆளுங்க கிட்ட இருந்து விலகறாங்களோ, இவங்க எல்லோரையும் அப்படியே இழுத்துப் பிடிச்சு வெச்சிக்குவாங்க.''

''கார்த்திக் மாமாவை இவங்களால மட்டும்தான் சமாளிக்க முடியும்'' என்று சொல்லிக்கொண்டு இருக் கும்போதே சக்தி வந்துவிட்டாள். பேச்சு மும்முரத்தில் வாசுகி கவனிக்கவில்லை. அவர் பேசிக்கொண்டே போனார்.

“எனக்கு வேண்டியது எல்லாம் என்ன சுமித்ரா.. என் பையனோட சந்தோசம்தான். நிறைய விஷயத்துல அவங்கப்பாவைக் கொண்டு இருக்கிறான். அவங்கப்பா கூட யாரோடவும் பேசினதோ பழகினதோ கம்மி... என்ன ப்ரச்சனைன்னாலும் மனசுக்குள்ளயே வெச்சிக்குவாங்க.”

“தலைக்கு மேல போறவரைக்கும் நமக்கு விஷயமே தெரியாது. அப்போ கூட அந்த கஷ்டத்தை தனியா அனுபவிக்கணும்னுதான் நினைச்சாங்க, என் கிட்ட சொல்லவேயில்லை. பிரிஞ்சோம்.. போயிட்டார்.”

“இவனும் எதுனாலும் தனியா தனியா போயிடறான். அதுதான் பயம்” என்று மிகவும் மெதுவாகத்தான் சொன்னார்.

சொல்லும்போது குரல் கலங்கியது.

மிகவும் அருகில் நின்றிருந்த சக்திக்கு கேட்டது, சக்தி கல்லாய் சமைந்து நின்றாள். சில நொடிகளே..

அவளுடைய முகத்தைப் பார்த்த சுமித்ரா அவளையே பார்த்தபடி இருக்க.. திரும்பிய வாசுகி சக்தியின் அதிர்ந்த முகத்தைப் பார்த்தவர், அவளை நோக்கி கை நீட்ட, அருகமர்ந்தாள்.



# 37

நீலக் கடலினிலே - நின்றன்

நீண்டகுழல் தோன்றுதடி;

**கோல மதியினிலே - நின்றன்**

**குளிர்ந்த முகங் காணுதடி;**

- பாரதி

வாசுகியும் சக்தியும் கார்த்திக்கையே பார்த்துக் கொண்டிருந்தனர். பிறகு அவர்களுக்குள் பேச்சு இல்லை. வாசுகியிடம் திருமணத்திற்கு வந்தவர்கள் சொல்லிக் கொண்டு போக வந்தனர்.

வாசுகிக்கு அவர்களுடன் பேச சரியாக இருக்க.. சக்தியும் இங்கிதம் அறிந்து நகர்ந்து அமர்ந்தவள், அவர் பேசுவதை மணமக்களை கார்த்திக்கை என்று பார்வையிட்டுக் கொண்டு அமைதியாக அமர்ந்திருந் தாள்.

வாசுகியும் எல்லோரிடமும் சக்தியை தன் கணவரின் நண்பரின் பெண் என்று சலிக்காமல் அறிமுகப்படுத்தி வைத்தார். சக்திக்கே கூச்சமாகப் போயிற்று.

அவ்வப்போது சுமித்ராவும் சிவாவும் வந்து பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். சுமித்ரா வைஷ்ணவி யோடு வேறு இருக்க வேண்டி இருந்தது.

சக்தியால் அங்கே மணமக்களின் அருகில் போக முடியவில்லை. ஒன்று அவள் வைஷ்ணவியை விட பெரியவள், அதே சமயம் திருமணமாகாதவள். அதுவு மில்லாமல் பிரபு அவளின் ஹாஸ்பிடல் இருப்பவன். அங்கே போய் நின்று கொண்டிருந்தால், திருமணத் திற்கு வரும் அவளின் மற்ற ஊழியர்களின் முன் நன்றாக இருக்காது.

ஒரு மாதிரி தேமே என்று அமர்ந்திருந்தாள்.

கார்த்திக்கினால் அவர்கள் அருகில் கூட வர முடிய வில்லை. அவனுக்கு எல்லோரையும் பார்க்க வேலை களைப் பார்க்க என்று நேரம் சரியாக இருந்தது.

திருமணம் முடிந்து மதிய விருந்தும் முடிந்து மண்டபத்தைக் காலி செய்யும் வேலை வேறு இருந்தது.

மணக்கள் வீட்டிற்குக் கிளம்பினர். சிவாவும் சுமித் ராவும் அவர்களோடு சென்று விட்டனர். சக்திக்கு எங்கே போவது என்று தெரியவில்லை. எல்லோரும் அவரவர் வேலையில் இருந்ததால் இவளை அழைக்க வேண்டும் என்று அவர்களுக்குத் தோன்றவில்லை.

வாசுகி உறவுகளோடு பேசிக்கொண்டு இருந்ததால் இவளை கவனிக்கவில்லை. கார்த்திக்கும் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தான்.

ஏறக்குறைய மண்டபம் காலி ஆகிக் கொண்டிருந்த நிலையில் செல்வத்தை அழைத்தவள், ''என்னை வீட்ல விட்டுடுங்க'' என்றாள்.

செல்வமும் உடனே கிளம்பினான். வாசுகியிடம் சென்று, ''நான் கிளம்பறேன்மா...'' என்று சொன்னாள்.

''வீட்டுக்கு வாயேன்மா'' என்றார் அவர்.

''இப்போ கல்யாண வேலை பிசியா இருப்பீங்க... இன்னொரு நாள் வர்றேன்மா'' என்று சொல்லிக் கிளம்பினாள்.

கார்த்திக்கிடம் சொல்லி விடுவோம் என்று தேடினால் அவன் கண்ணில் படவில்லை.

''எங்க செல்வம் உங்க பாஸ்.''

''தெரியலீங்களே மேடம்! இங்க தான் எங்கயோ இருந்தார். நான் பார்க்கட்டுமா'' என்று செல்வம் போகப் போக,

''விடு செல்வம்! பிசியா இருக்கான்! நான் கிளம்ப றேன். கார் இருக்கா?''

''இருக்கு, பாஸ்ஸோடது ஒரு கார் என்கிட்டே தான் இருக்கு!'' என்று அவன் அதை எடுத்து வந்தான்.

சக்தியும் அதில் ஏறி வீட்டின் பாதி தூரத்திற்கும் சென்று விட்டார்கள். சக்தியின் போன் அடித்தது.

''எங்க இருக்கீங்க?''

''வீட்டுக்குக் கிளம்பிட்டேன் கார்த்திக்! பாதி தூரத்துல இருக்கேன்!''

''திரும்பி வாங்க.''

''எதுக்கு கார்த்திக்?''

''நான் தானே கொண்டு போய் விடறேன்னு சொல்லியிருந்தேன்.''

''அதனால என்ன கார்த்திக். நீ கல்யாண வேலையைப் பார். பரவாயில்லை!''

''திரும்பி வாங்கன்னு சொன்னேன்'' என்றான்.

''என்ன பிடிவாதம் இது கார்த்திக்! காலைல இருந்து உட்கார்ந்து, ஐ அம் ரியல்லி டயர்ட், நான் வீட்டுக்குப் போறேன். இன்னைக்கு ஒரு நாள் தான் எனக்கு ரெஸ்ட் நாளைக்கு பிரசாரத்துக்குப் போகணும்.''

"வரமுடியுமா? முடியாதா?"

"வர்றேன்!" என்றவள், "மண்டபத்துக்கே போங்க செல்வம்!" என்றாள்.

கார்த்திக் இப்படி பேசுபவன் அல்ல. அங்கே சென்றாள். எல்லோருமே கிளம்பியிருந்தனர். கார்த்திக்கும் இன்னும் சாமான்களை எடுத்துக் கொண்டிருக்கும் வேலையாட்கள் மட்டுமே.

கார்த்திக் நிற்பதைப் பார்த்தும், "நான் பார்த்துக் கறேன்! நீங்க கிளம்புங்க பாஸ்!" என்று செல்வம் வேலையைப் பார்க்கக் கிளம்பி விட்டான்.

"நான் தான் கொண்டு போய் விடறேன்னு சொல்லி யிருந்தேனே."

"அதனால என்ன?"

"பார்க்க வர்றது இல்லை. கூட இருக்கறது இல்லைன்னு கம்ப்ளைன்ட் மட்டும் பண்ணத் தெரியுது. நான் வர்றேன்னு சொல்லும்போது எதுக்கு அவசரமா போகணும்."

"யார்கிட்ட நான் கம்ப்ளைன்ட் பண்ணினேன்" என்றாள் ரோஷமாக சக்தி.

"ஏன்? என்கிட்டே தான். நானா வந்தா நீ தள்ளிப் போற! அப்புறம் நான் வரலைன்னு சொல்ற."

"ஏய் கார்த்திக்! உனக்கு என்னமோ ஆயிடுச்சு!" என்று கன்னத்தில் கைவைத்து கவலையாகச் சொன்னாள்.

"என்ன ஆச்சு?"

''நீ இப்படியெல்லாம் பேச மாட்ட...'' என்றாள் நிஜமான கவலையோடு.

அவளின் பாவனைகளைப் பார்த்த கார்த்திக் வாய் விட்டுச் சிரித்து விட்டான்.

''கார்த்திக், நிஜம்மா ஏதோ ஆகிடுச்சு. நீ இப்படி யெல்லாம் சிரிக்க மாட்ட.''

''இடுக்கண் வருங்கால் நகுக'' என்று சொல்ல வந் தவன்... மாற்றி, ''ஒண்ணும் ஆகலை! எனக்கு என் னவோ இன்னைக்கு உன்கூட இருக்கணும் போல இருக்கு. இருப்பியா? மாட்டியா?''

''இருக்கேன்! எங்க போகலாம்?''

''எங்க வீட்டுக்கு...''

''அம்மாகிட்ட கேட்கணும்.''

''நான் சொல்லிக்கறேன்.''

''திட்டுவாங்க கார்த்திக்.''

''எனக்காக திட்டு கூட வாங்க மாட்டீங்களா?''

''அங்க உங்க உறவுக்காரங்க எல்லாம் இருப்பாங்க கார்த்திக்.''

''பரவாயில்லை வா!''

எதற்கு இவ்வளவு பிடிவாதம் என்று சக்திக்குத் தெரியவில்லை. ''என்னவோ புதுசா தெரியற கார்த்திக்!'' என்று அவனுடன் கிளம்பினாள்.

நெருங்கிய உறவுகள் சில பேரே இருக்க... எல் லோரும் திருமண அலைச்சல் மதிய நேரம் என்று உறங்கிக் கொண்டிருந்தனர்.

வைஷ்ணவி அவளின் ரூமில் தூங்க... பிரபு அவனின் ரூமில் உறங்கிக் கொண்டிருந்தான்.

வாசுகியும் அவரின் ரூமில் உறங்கிக் கொண்டிருந் தார். உறங்காமல் இருந்தது பத்ரிநாத்தும் சுமித்ராவும் மட்டுமே.

சுமித்ரா மாலைக்கான சிற்றுண்டி மற்றும் சமையல் ரெடியாவதை மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தாள்.

சக்தி வந்ததும் உற்சாகமாக, ''வாங்க! வாங்க!'' என்று வரவேற்றாள் சுமித்ரா.

மண்டபம் ஒன்றும் தெரியவில்லை, இப்போது சற்று கூச்சமாக இருந்தது சக்திக்கு.

அவள் சோபாவில் அமர்ந்தாள். ''ஒரு அஞ்சு நிமிஷம் உட்காரு. குளிச்சிட்டு வந்துடறேன். கசகசன்னு இருக்கு'' என்று அவளிடம் மெதுவாகச் சொல்லி கார்த்திக் ரூமிற்குச் சென்றுவிட்டான்.

சுமித்ராவையும் ஏதோ சாமான் எடுத்துக் கொடுப்ப தற்காக சமையல் செய்பவர்கள் அழைக்க, ''இதோ வந்துடறேன்கா'' என்று அவளும் சென்றாள்.

தனித்து விடப்பட்ட சக்தி மறுபடியும் தேமே என்று அமர்ந்திருக்க, அந்தப் பக்கம் வந்த பத்ரிநாத், ''யாரு'' என்று கேட்டபடி பக்கத்தில் வந்தமர்ந்தார்.

''வீரமணி பொண்ணு தாத்தா!'' என்று சக்தி எடுத்துக் கொடுக்க,

''யாரு நம்ம அரசியல்ல நிக்கற பாப்பாவா'' என்று கேட்டார்.

"ஆமாம்" என்பதுபோல் தலையசைத்தாள்.

அரசியலைப் பற்றி கார்த்திக்கின் தாத்தா சக்தியிடம் பேச ஆரம்பித்தவர் தான் நிறுத்தவேயில்லை. அரை மணி நேரம் ஆகிற்று சளைக்காமல் பேசிக்கொண்டு இருந்தார்.

பத்து நிமிடங்களில் எல்லாம் கார்த்திக் வந்துவிட்டான்.

தாத்தாவின் அருகில் சக்தி இருந்ததால், அவனால் அங்கே போய் அவளை எழுப்ப முடியவில்லை. அவளை, "எழுந்து வா" என்பது போல சைகை செய்தான்.

அவளோ, "இரு இரு" என்று காட்டிக் கொண்டே பேச்சு மும்முறத்திலேயே இருந்தாள்.

வேறு வழியில்லாமல் சுமித்ராவை அழைத்து சக்தியை அழைத்து வருமாறு பணித்தான்.

சுமித்ரா தாத்தாவிடம் போய், "மண்டபத்துல இருந்து இப்படியே இங்க வந்து இருக்காங்க தாத்தா, முகம் கை காலாவது கழுவி வரட்டும்" என்று சொல்லி சக்தியை அழைத்துச் சென்றாள்.

எழுந்து வந்த சக்தி, "நானே கேட்கணும்னு நினைச்சேன், எங்க இருக்கு" என்று சக்தி ஆரம்பிக்கும் போதே சமையல் செய்பவர்கள் சுமித்ராவிற்கு குரல் கொடுக்க,

"இதோ வந்துடறேங்கா" என்று அவள் போக,

அவள் சென்ற அடுத்த நொடி, "என்ன" என்றபடி கார்த்திக் வந்து நின்றான்.

''உங்கம்மா ரூம் எங்க கார்த்திக்'' என்றாள்.

''எதுக்கு?''

''நான் கொஞ்சம் ப்ரெஷ் ஆகிட்டு வர்றேன்.''

''ஏன்? என் ரூம்ல ஆகமாட்டியா!''

''லூசு மாதிரி உளறாத! வீடு ஃபுல்லா ரிலேடிவ்ஸ் இருக்காங்க! நான் உன் ரூம்க்கு வருவேனா... ஏற்கனவே அம்மா கிட்ட சொல்லாம வந்துட்டேன்! இப்போ சொல்ல லாம்னா, உடனே கிளம்பி வர சொல்லிட்டா என்ன பண்றதுன்னு சும்மா இருக்கேன்! நீ வேற...''

''இதெல்லாம் பேச்சில்ல, எல்லோரும் தூங்கறாங்க, என் ரூம்க்கு வருவியா? மாட்டியா?''

''உங்க தாத்தா இருக்கார். சுமித்ரா என்ன நினைப்பா?''

''எங்க தாத்தாக்கு அங்க இருந்து பார்த்தா ஒண்ணும் தெரியாது! அதில்லாம இந்நேரம் சுமித்ரா கிட்ட நீ ஏன் வீட்டுக்கு வந்திருக்கன்னு விசாரணையை ஆரம்பிச்சு இருப்பார். அதனால் சுமித்ரா அவர்கிட்ட மாட்டி இருப்பா.''

''என்ன சொல்லுவா அவ?'' என்றாள் கவலையாக.

''அது அவளைத் தான் கேட்கணும்'' என்றான்.

''போடா! திட்டப் போறேன்! நமக்கென்ன டீன் ஏஜ்ன்னு நினைச்சியா... இன்னைக்கு இந்த கலாட்டா பண்ற.''

''ஆக்சுவலா... உன்னை நான் என் டீன் ஏஜ்ல தான் பார்த்தேன்.''

''அச்சோ!'' என்று தலையில் கைவைத்தவள். ''கிளம்பு! கிளம்பு! உன் ரூம்கே வர்றேன்! என்னால இந்த பேச்செல்லாம் கேட்க முடியாது. என்னோட கார்த்தி; இப்படி உளர்னா எனக்குப் பிடிக்காது.''

''வா! வா! இத முதல்லயே பண்ணியிருக்கலாம் தானே!'' என்றுபடி கூப்பிட்டுக் கொண்டு போனான்.

ரூமினுள் சென்று... அங்கேயிருந்த பாத்ரூமிற்குள் சென்று கதவை சாத்திக் கொண்டு, முகம் கழுவி வந்தாள்.

வந்தவள் அங்கே இருந்த ட்ரெஸ்ஸிங் டேபிள் முன் அவள் கையில் வைத்திருந்த பொட்டை ஒட்டி உடனே, ''போகலாமா'' என்றாள்.

''என்ன அவசரம்... டையர்டா இருந்தா கொஞ்ச நேரம் தூங்குறியா சக்தி!''

''நீ என்கிட்டே இன்னைக்கு அடி வாங்காம விட மாட்ட போல!''

''ஏன்? என் பெட்ல தூங்க மாட்டியா?''

''இதுக்கு நான் ஏதாவது ஏடாகூடமா சொல்லிடுவேன்! அப்புறம் எனக்கு வெக்கமா இருக்கோ இல்லையோ, உனக்கு ரொம்ப வெக்கமா போயிடும்!''

''பழைய சக்தி திரும்பரா போல.''

''பின்ன எங்க வீட்டுக்கு நீ வந்ததும் அப்புறம் இதைப் பேசாத, அதைப் பேசாதன்னு, இப்படிப் பேசு, அப்படி பேசுன்னு உன் கான்வென்ட் இங்கிலீஷையும் மரியாதை யான தமிழையும் கத்துக் குடுத்த.''

''இல்லைனா நான் என் பாட்டியோட இருந்தப்ப கத்துக்கிட்ட பாஷையே பேசினேன்னு வை'' என்றாள் மிரட்டலாக.

''ஓகே, கூல்! கூல்!'' என்றான்.

''கீழ போலாம் கார்த்திக். முறையில்லாத ஒன்னை என்னால எப்பவுமே செய்ய முடியாது. அந்த மாதிரி பேச்சுக்களோ, விமர்சனங்களோ எனக்குப் பிடிக்காது! அதுக்கு பயந்து தான் அரசியல் வேண்டாம்னு சொன் னேன். என்னவோ அதை சொல்லி, இதைச் சொல்லி, நான் கூட இருக்கேன்னு சொல்லி, என்னை ஏமாத்தி தள்ளி விட்டுட்ட'' என்று குறைபட்டாள்.

அவளருகில் வந்தவன், ''என்மேல இப்படி எத்தனை குறைகள் இருந்தாலும் என்னை விட்டுட மாட்டியே'' என்றான்.

''பயப்படாத! நீ கொலையே பண்ணியிருந்தாலும் நான் விடமாட்டேன்'' என்றவள், ''அதுக்காக கொலை பண்றேன்னு கிளம்பிடாதப்பா'' என்றாள் விளையாட்டுத் தனமாக.

அவள் சொன்ன வார்த்தையின் அர்த்தம் அவளுக்குப் புரியாமல் இருக்கலாம். ஆனால் கார்த்திக்கிற்கு எத்தனை நிம்மதியை கொடுத்தது என்பது அவனுக்குத் தானே தெரியும். அவனின் மனதில் இத்தனை வருடங்களாக அழுத்திக் கொண்டிருந்த அவனின் தந்தையின் பாரம் சற்று குறைந்தது.

அவளை நோக்கி கைகளை விரித்தான்.

''என்ன கார்த்திக் இது? தனியா இருக்கும் போதெல்லாம் பத்தடி கேப் விட்டு தள்ளி நின்னுட்டு இப்போ.. ப்ளீஸ்!'' என்று கெஞ்சலாகப் பார்க்க.

கார்த்திக் விரித்த கையை இறக்கவேயில்லை.

''என்ன பிடிவாதம் கார்த்திக்'' என்று சக்தி சலித்தாலும்... தயங்கினாலும் கார்த்திக் அசையாமல் நின்றான்.

சற்று சிணுங்கிக் கொண்டே வந்து அவனின் கைகளில் தஞ்சம் புகுந்தாள். சக்தி மனம் முழுவதும் பதட்டம் மட்டுமே. தாத்தாவோ சுமித்ராவோ அவள் எங்கே இன்னும் காணோம் ென்பது மாதிரி தேடினால் என்ன செய்வது என்று.

ஆனால் கார்த்திக்கிற்கு எந்தப் பதட்டமும் இல்லை, சக்தி அவனின் கைகளுக்குள் இருக்கும் அந்த நொடியை அனுபவித்தவன். ''தேங்க்ஸ் சக்தி! தேங்க்யு வெரி மச்!'' என்றான் உணர்ந்து.

என்னவோ அவன் உணர்ச்சி வசப்பட்டு இருக்கிறான் என்று புரிந்த சக்தியும், ஏன்? எதற்கு? என்று கேட்காமல் அவன் அவனின் கைகளுக்குள் அடங்கி நின்றாள்.

நீண்ட நேரம் நீடித்த அந்த அணைப்பில் சக்தியின் இதயத் துடிப்பு கார்த்திக்கிற்கு இடம் மாறியது. அவளின் துடிப்பை உணர்ந்தான்.

''என்ன சக்தி உன் தைரியமெல்லாம் பேச்சுல தானா! ஏதாவது பேசிடுவேன்! எனக்கு வெக்கமா இருக்காது! உனக்கு வெக்கமா இருக்கும்! அப்படி இப்படின்னு

சொன்ன! இப்போ உன் ஹார்ட் பீட் நான் பில் பண்றேன்'' என்றான் அணைப்பை விலக்காமல்.

அதற்கு பதில் சொல்லாத சக்தி, அவளின் கைகளை உயர்த்தி, அவனின் ஷர்ட் காலரைத் தாண்டி, அவளின் கழுத்தில் கைவைத்து, ''கழுத்து வலி பரவாயில்லையா'' என்றாள்.

அவளின் பஞ்சு விரல்கள் அவன் கழுத்தில் பட்டதுமே உடல் சிலிர்த்த கார்த்திக். ''உன் கைபட்டா வலி தெரியலை'' என்றான்.

அதை தடவிக்குடுத்தபடியே மெதுவாக விலகியவள், ''போகலாமா'' என்றாள்.

''இன்னும் பைவ் மினிட்ஸ் ப்ளீஸ்!'' என்றான்.

அவள் தடவ தடவ... ''தூக்கம் வருது'' என்றான்.

''என்ன?''

''தூக்கம் வருது'' என்றான் சீரியசாக.

''அப்போ தூங்கு.''

''வேலையிருக்கும்.''

''கொஞ்ச நேரம் தூங்கு! ஒண்ணும் ஆகாது!'' என்றாள். அவன் படுக்கவும் பக்கத்தில் அமர்ந்தவள் கழுத்தை தடவிக் கொடுக்க... இரண்டே நிமிடத்தில் உறங்கி விட்டான்.

வெளியே வந்து கதவைச் சத்தம் செய்யாமல் மூடவும்... சுமித்ரா வரவும் சரியாக இருந்தது.

''மாமாகிட்டே ஏதோ கேட்கணுமாம்! அவர் எங்கேன்னு செல்வம் கேட்கறாங்க...'' என்று சுமித்ரா கதவைத் தட்டப் போக,

''வேண்டாம் சுமித்ரா.. கார்த்திக் தூங்கறாங்க'' என்றாள் சக்தி.

''என்ன தூங்கறாங்களா. நைட் கூட பேய் மாதிரி முழிச்சிகிட்டே இருப்பாங்க! பகல்ல தூங்கறாங்களா'' என்று ஆச்சர்யமாகக் கேட்டாள் சுமித்ரா.

''ஆம்'' என்பதுபோல் தலையாட்டியவள். ''செல்வம் தானே, வா நான் பேசறேன்!'' என்றாள்.

செல்வத்தைப் பார்த்ததும், ''ஏன், உன்னால பார்க்க முடியாதா'' என்று எடுத்த உடனே கடினமான குரலில் கேட்டாள்.

தூங்கும் கார்த்திக்கை டிஸ்டர்ப் செய்வதா என்ற கோபம் அவளுக்கு. எதற்குக் கோபம் என்று புரியாத போதும் உடனே தலையாட்டினான். ''முடியுமே! நான் பார்த்துக்கறேன்!'' என்று பரிதாபமாக.

''ம்! பார்த்துக்கோ!'' என்றாள் அதட்டலாக.

''ஏன் கோவம்?'' என்றான் மெதுவாக.

''கோவமா? இல்லையே! கார்த்திக் தூங்கறாங்க, அதான் டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்னு பார்த்தேன்!'' என்றாள்.

''என்ன தூங்கறாங்களா?'' என்றான் வேண்டு மென்றே... ''ங்களா''வில் அழுத்தம் கொடுத்து, சக்தி யின் மரியாதை பன்மையைக் கிண்டல் செய்தான்.

முகம் மாற்றத்தைக் காட்டிவிட்டால் இருக்க வெகு வாக சிரமப்பட்டாள் சக்தி.

விட்டேனா என்று செல்வமும், ''தூங்கறதுக்கா பாதி வழி போன உங்களை வரச் சொன்னாங்க'' என்று ராகமிழுக்க,

''வேலையைப் பார்த்துக் கிளம்பு! கிளம்பு!'' என்றாள் புன்னகையோடு சக்தி.

சிறிது நேரம் இருந்தவள், வாசுகி எழுந்ததும் சொல்லிக் கொண்டு கிளம்பினாள்.

''இருங்க நான் பிரபு அண்ணாவையாவது எழுப்பறேன்! நீங்க வந்து அவரை எழுப்பலைன்னா, திட்டு வாங்க!'' என்று சுமித்ரா சொல்லச் சொல்ல,

''வேண்டாம் சுமித்ரா'' என்று சொல்லிக் கிளம்பி விட்டாள்.

அதன் பிறகு சக்தி தேர்தலில் பிஸியாகிவிட, கார்த்திக்கும் பிசியாக இருந்தான். பார்த்துக் கொள்ள சந்தர்ப்பங்கள் அமையவில்லை. இருவரும் உருவாக்கவுமில்லை.

சக்தி சற்று பதட்டமாகவும் இருந்தாள், நின்று விட்டோம் வெற்றி பெற்றே ஆக வேண்டும் என்பது மாதிரி, அந்தச் சுழற்சியிலேயே இருந்தாள். அரசியலின் எண்ணத்தில் இருந்ததால் கார்த்திக்கின் ஞாபகம் அதிகமில்லை.

அவன் மனதில் தான் இருக்கிறோம், அவன் தன்னைத் தேடுகின்றான் என்பதே அவள் மனதில் ஒரு திருப்தியைக் கொடுத்திருக்க, தேர்தல் வெற்றி மட்டுமே அவளின் எண்ணமாக இருந்தது.

ஒரே மாதத்தில் வாழ்க்கை தலைகீழானது.

சக்தி எம்.பி. எலெக்ஷனில் அமோக வெற்றி பெற்றாள்.

அவளின் அந்த வெற்றி மட்டுமல்லாமல், சக்தி ப்ரியதர்சினியாகிய அவள், யாரும் எதிர்பார்க்காத வண்ணம், ஏன் அவளோ வீரமணியோ கூட எதிர்பார்க் காத வண்ணம் THE MINISTER OF STATE IN THE MINISTRY OF COMMERCE AND INDUSTRY எனப்படும் மத்திய இணை அமைச்சர் தனிப் பொறுப்பு சக்திக்கு கொடுக்கப்பட்டது.

ஒரு பக்கம் மத்திய அமைச்சரவையின் பதவி ஏற்பு விழா டி.வி.யில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்க, மற்றொரு புறம் ஸ்க்ரோல் நியூஸ் அதனடியில் ஓடிக் கொண்டிருந்தது.

granite scam in tamilnadu... more than 10,000 crores suspected... என்று ஒரு புறம் ஓடிக் கொண்டிருக்க, நான் கைந்து கிரானைட் உரிமையாளர்களின் பெயர் போடப் பட்டிருக்க, அதில் முதலாவதாக வாசுகி கிரானைட்ஸ் கார்த்திகேயன் என்ற கார்த்திக்கின் பெயர் இருக்க,

முதல் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட அடிப்படையில் கார்த்திக் கைது செய்யப்பட்டிருந்தான்.



# 38

**துன்ப மிலாத நிலையே சக்தி**

**தூக்க மிலாக்கண் விழிப்பே சக்தி**

**அன்பு கனிந்த கனிவே சக்தி**

**ஆண்மை நிறைந்த நிறைவே சக்தி**

**இன்ப முதிர்ந்த முதிர்வே சக்தி**

**எண்ணத் திருக்கு மெரியே சக்தி**

**முன்பு நிற் கின்ற தொழிலே சக்தி**

**முத்தி நிலையின் முடிவே சக்தி**

- பாரதி

பதவி ஏற்று அந்த அரங்கத்தில் அமர்ந்திருந்த போதே சக்தியின் காதுகளுக்கு விஷயம் வீரமணி மூலமாகக் கசிந்தது.

அப்படியே அமர்ந்து விட்டாள். அதன் பிறகு எதுவுமே அவளின் பார்வையிலோ மூளையிலோ ஏறவில்லை. முயன்று மனதை சிறிது நேரத்தில் சமன்படுத்தியவள்.

''நீங்க கிளம்பிடுங்க'' என்றாள் தந்தையைப் பார்த்து.

''என்னம்மா சொல்ற?'' என்றார் அவர் அதிர்ச்சியாக.

''ஆமாம்பா நீங்க கூட இருந்தா கேள்விகள் அதிகமா வர வாய்ப்பிருக்க, ஏன்னா முதல்ல வாசுகி கிரானைட்ஸ் உங்ககிட்ட இருந்தது. இப்போ கார்த்திக் அரஸ்ட் ஆகியிருக்கிறது வாசுகி கிரானைட்ஸ் உரிமையாளரா தான்.''

''நீ தனியா சமாளிப்பியாம்மா.''

''முடியாம என்னப்பா.. நீங்க கிளம்பிடுங்க.''

''எங்கேம்மா?''

''கிருஷ்ணகிரியே போயிடுங்கப்பா. அங்க அம்மா மட்டும் தனியா இருக்காங்க, யாராவது விசாரணைன்னு வந்தா அம்மாக்கு கஷ்டம், கிளம்பிடுங்க.''

''அம்மா உன்னை தனியா விட்டா திட்டுவா ளேம்மா.''

''நான் என்ன சின்ன பொண்ணா போங்க. என்னைக் கேட்காம ஒரு வார்த்தை கூட யார் கிட்டயும் எதையும் பேசக்கூடாது. முக்கியமா கார்த்திக் உங்க கூட இருந் திருக்கான். எதுவுமே எனக்குத் தெரியாதுன்னு சொல் லுங்க. ரொம்ப வருஷம் முன்னாடியே க்ரானைட்ஸ் கைவிட்டுப் போயிடுச்சுன்னு சொல்லுங்க. எதுவா இருந்தாலும் அப்புறம் பார்க்கலாம்.''

''கார்த்திக்கு சாதமாகவும் பேசாதீங்க, பாதகமாகவும் பேசாதீங்க. உணர்ச்சி வசப்பட்டு அவனைப் பார்க்கப் போறேன்னு கிளம்பி போயிடாதீங்க.''

''எப்படிம்மா அவனைப் போய் பார்க்காம இருக்க முடியும். அவனும் நம்ம பையன் தானேம்மா.''

''போய் பார்த்து தான் கார்த்திக் நம்ம பையன்னு காட்ட வேண்டிய அவசியமில்லைபா. எப்படியிருந் தாலும் அவன் நம்ம ஆளுதான். இப்போதைக்கு பார்க்கப் போகாதீங்க. நாளைக்கு வேற ஏதாவது உங்களைச் சுத்திக் கேள்விகள் வந்தா அவன் தான்பா என்னை விட டென்ஷன் ஆவான்.''

''சக்தி நீ தனியா சமாளிப்பியா.''

''செல்வம் இருக்கான்பா. அவன் போதும் நான் பார்த்துக்குவேன். நான் இங்க ஆபீஸ் போய் சார்ஜ் எடுக்கணும், நகர முடியாது,'' என்றாள்.

பதவி ஏற்பு நிகழ்ச்சி முடிந்து வெளியே வந்தபோது, ஆங்காங்கே பேட்டிகள். பத்திரிகையாளர்களின் கேள்விகள்.

''முதல் முறையா எலெக்ஷன்ல நின்னுருக்கீங்க. ஜெயிச்ச உடனே உங்களுக்கு மந்திரி பதவி, இதைப் பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க.''

''நான் நினைக்கிறது முக்கியமில்லீங்க மக்கள் நினைக்கறது தான் முக்கியம். கட்சி நினைக்கறது தான் முக்கியம். என்னை நம்பி மக்கள் ஓட்டுப் போட்டு இருக்காங்க. கட்சி இவ்வளவு பெரிய பொறுப்பை கொடுத்திருக்கு.''

''ரெண்டையும் நான் செம்மையா செய்வேன்ற நம்பிக்கை இருக்கு. கட்சியை மீறி என்னோட எந்தச் செயல்படும் இருக்காது. தலைமை என்ன சொல்லுதோ அதைச் செய்வேன். அதே சமயம் அதெல்லாம் மக்களைச் சார்ந்த பணிகளே. அவர்களுக்காகவே இந்த பதவி எல்லாமே.''

''இப்போ இந்தியாவையே திடுக்கிட வைத்திருக்குற கிரானைட்ஸ் ஊழல், வாசுகி கிரானைட்ஸ், உங்க கம்பெனியாமே.''

''ஒரு சின்ன திருத்தம், ஒரு பீரியட்ல எங்க அப்பாவோட கம்பெனியா இருந்தது, அவ்வளவே. அதுகூட எங்கப்பாவோட கம்பெனி தான் என்னோடது இல்லை.

அதுக்கு முன்னாடி அது வேற ஒருத்தரோடது. இப்போவும் அது அவங்களோடது தான்.''

“நம்ம சட்டம் நியாயமானது. அப்படி ஏதாவது எங்கப்பா மேல தவறு இருந்தா கண்டிப்பா அவரை நோக்கியும் பாயும். என்னோட தலையீடு இதுல எதுலயும் இருக்காது.”

“இந்த வெற்றி சக்தின்ற தனி மனுஷியோடது. நீங்க அவளோட செயல்பாடுகள் பற்றி எந்தக் கேள்வி வேணும்னாலும் கேட்கலாம், நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கேன்.”

“வேற எதைப் பத்தின கருத்தும் என்னால சொல்ல முடியாது. சொல்லவும் கூடாது. ஏன்னா பிரச்சனையை ஒட்டு இருக்கும்போது அதை பத்தி நான் கருத்து சொன்னா.. மக்கள் அதனால கொண்டு போகப் படுவாங்க. அதை நான் விரும்பலை. எது உண்மையோ கூடிய விரைவில் அது வெளியே வரும்.”

“என் கடன் பணி செய்வதே” என்று பேச்சை முடித்துக் கொண்டாள்.

சக்தி முழுமையாக அரசியல்வாதியாக மாறியிருந் தாள்.

“கார்த்திகேயன்,” என்று ஒருவர் ஆரம்பிக்கும் போதே,

“என்னைப் பத்தி கேளுங்க சொல்றேன். வேற யாரைப் பத்தியும் பேச எனக்கு விருப்பமில்லை” என்று சொல்லிச் சென்று காரில் ஏறிக் கொண்டாள்.

அவள் பின்னே போய் செல்வம் ஏறினான்.

சக்தியின் பதில்கள் அவனுக்குள் பெரும் சஞ்சலத்தை ஏற்படுத்தி இருந்தன. அதன் தாக்கத்தினால், “அப்போ எங்க பாஸை நீங்க விட்டுடுவீங்களா” என்றான்.

சக்திக்கு முதலில் அவன் கேட்டதே புரியவில்லை. புரிந்தபோது கண்மண் தெரியாத கோபம்.

''டிரைவர், ஸ்டாப் தி கார்'' என்றவள், ''இறங்கு நீ'' என்றாள் செல்வத்தைப் பார்த்து. அவள் குரலில் அடக்கப்பட்ட ஆத்திரமும், அடிபட்ட வலியும் நன்கு தெரிந்தது.

சக்தியைக் காயப்படுத்தி விட்டோம் என்று செல்வத் திற்குப் புரிந்தது.

அதற்குள் காரும் நின்றிருந்தது. ''இறங்கு நீ'' என்றாள்.

''சாரி மேடம்'' என்று செல்வம் கேட்க.

''நீ இறங்குறியா, இல்லை நான் இறங்கட்டுமா'' என்று சொல்லி சக்தி கதவைத் திறக்கப் போக,

இறங்கிக் கொண்டான் செல்வம்.

ஆனால் அவள் தங்கச் சென்ற இடத்திற்கு, அவளுக்கு முன்னே இருந்தான். ''சாரி'' என்று சொல்லிக் கொண்டு.

''என்கூட கிட்டத்தட்ட இப்போ ஒரு வருஷத்துக்கும் மேல இருக்க. நீயே என்னைப் பத்தி புரிஞ்சிக்காம பேசினா எப்படி.''

''அரசியல்லாம் ஒரு புதை குழி. மீள்றது ரொம்பக் கஷ்டம். நம்ம இஷ்டத்துக்கு எதுவும் பண்ண முடியாது. நாலு விஷயத்தை யோசிச்சு தான் பண்ணனும். எத்தனை தடவை கார்த்திக் கிட்ட சொல்லியிருப்பேன். இது எனக்கு வேண்டாம்னு, கேட்டானா, நான் கூட இருப்பேன், இருப்பேன்னு சொல்லியே என்னை ஏமாத் திட்டான்.''

''சரி அதைத் தான் கேட்கலை. என்னைக் கல்யாணமாவது பண்ணிகிட்டானா, அதுவும் இல்லை. இப்போ என்னன்னு சொல்லி அவன் கூட என்னால நிக்க முடியும். அவனோட காதலின்னா கேட்கவே அசிங்கமா இல்லை.''

''முதல்ல அவன் செஞ்சது தப்பு. மனைவின்னு கூட நின்னா அது வேற. இப்போ இப்போ என்ன செய்ய முடியும்.''

''கண்டிப்பா என்னால அவன் கூட நிக்க முடியாது. நிக்கவும் மாட்டேன். அவன் பிரச்சனை அவன் பார்த்துக்குவான்.''

''என்னால நியாயத்தை மீற முடியாது. நான் ஹெல்ப் பண்ணலைன்னா என்ன? அவன் வெளில வரமாட்டானா? இவ்வளவு செஞ்சவனுக்கு வெளில வர மட்டும் தெரியாதா என்ன. கண்டிப்பா வருவான். என்ன கொஞ்சம் நாள் ஆகும்.''

''சின்னதா ஏதாவது நான் மூவ் பண்ணி, அது வெளில தெரிஞ்சாகூட கிரானைட் அதிபரின் அமைச்சர் காதலின்னு எழுதுவாங்க பத்திரிகைல. அதையெல்லாம் என்னால டாலரேட் பண்ண முடியாது.''

''இப்போவே என்ன வரப் போகுதோன்னு நான் பயந்துகிட்டே இருக்கேன். கார்த்திக் எங்ககூட தான் இருந்தான்றது ஊரறிஞ்ச ரகசியம்.''

''என்னால இப்போதைக்குச் செய்ய முடிஞ்சது ஒண்ணே ஒண்ணுதான். எவ்வளவு நாள் ஆனாலும் அவனுக்காக வெயிட் பண்ணுவேன் அவ்வளவுதான்.

கார்த்திக் கூட நீ பேசுறதுனா போ. எனக்கு ஆட் சேபனையில்லை.''

''இல்லை! நான் உங்க கூட இருக்கேன்.''

''என்ன உன் பாஸ் சொல்லியிருக்கானா. எனக்கு என்ன ஆனாலும் நீ சக்தி கூட தான் இருக்கணும்னு'' என்று கேட்டாள்.

செல்வம் அமைதியாக நிற்க, அவனின் அமைதியே கார்த்திக் தான் அதை சொல்லியிருக்கிறான் என்று புரிந்தது.

''ஸோ! நீ உன் பாஸ்க்காக தான் என்கூட இருக்க... எனக்காக இல்லை...''

''இல்லை! அது அப்படி இல்லை'' என்று செல்வம் அவசரமாக மறுக்க,

''பின்ன என் பாஸை விட்டுடுவீங்களான்னு கேட்ட. உன் பாஸ்கிட்ட எப்பயாவது என் மேடமை ஏன் இப்படிக் கஷ்டப்படுத்தறீங்கன்னு கேட்டிருக்கியா.''

என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் செல்வம் நிற்க,

''போடா! போடா!'' என்றவள் அவளின் ரூமிற்குள் போய் கதவை அறைந்து சாத்தினாள். சாப்பிடவில்லை. போனை எடுத்துப் போகவில்லை. அழைத்தவர்களுக்கு எல்லாம் செல்வம் தான் பதில் சொல்லிக் கொண்டிருந் தான்.

பிரபு அழைத்திருந்தான். சுமித்ரா அழைத்திருந்தாள்.

எல்லோரையும் சமாளித்தவனால் தெய்வானையைச் சமாளிக்க முடியவில்லை. அவரிடம் பல திட்டுக்கள்

வாங்கி போனை வைத்தான். அதன் பிறகு அடுத்த நாள் காலை வரை சக்தி வெளியே வரவும் இல்லை.

வந்தவுடனே தெய்வானையிடம் பேசச் சொன்னான்.

பிறகு கட்சி ஆபீஸ் சென்றார்கள்.

காலை கட்சியின் தலைமையைச் சந்தித்து, அவளா கவே விஷயத்தைப் பகிர்ந்து கொண்டவள். கார்த்திக்கை திருமணம் செய்ய உத்தேசித்திருப்பதை மறைக்காமல் சொன்னாள். ''என்னுடைய அப்பாவின் பெயரும் அடிபட நிறைய வாய்ப்பிருக்கிறது. நான் ராஜினாமா செய்துவிடவா'' என்று கேட்டாள்.

''இப்போ திருமணம்'' என்றார் தலைமை.

''இல்லை'' என்றாள்.

''அப்போது அதைப் பற்றிப் பேச வேண்டாம்'' என்றவர், ''நிறைய பேர் பல ஆண்டுகளாக கட்சிக்கு உண்மையாக உழைத்திருக்கிறார்கள். அவர்களையெல் லாம் விட்டு இளைஞர்களுக்கு பெண்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று தான் உனக்குக் கொடுத் தேன். இப்போதே எதுவும் செய்ய முடியாது.''

''அது வேடிக்கையாகி நாமாகவே ஏன் எதற்கு என்பது போல் விமர்சனத்திற்கு ஆளாகி விடுவோம். அடுத்த வர்களின் கவனத்திற்கு வராத விஷயத்தை நாமாக பரப்பிவிடுவோம்.''

''நேற்று தான் மந்திரி சபை அமைத்தேன். இன்று ராஜினாமாவா? வேண்டாம். பிரச்சனை வந்தால் சமாளித்துக் கொள்வேன் என்ற தைரியத்துடன் இரு.''

''எனக்கு உன்னுடைய செயல்பாடுகள் உண்மையாக நேர்மையாக இருக்க வேண்டும் அவ்வளவே. இன்னும் இதைவிடப் பெரிய பிரச்சனைகளைக் கொண்டு கூட ஆட்கள் மந்திரிசபையில் இருக்கிறார்கள்.''

''வேறு ஏதாவது சலசலப்பு வந்தால் பிறகு யோசித்துக் கொள்ளலாம்'' என்று விட்டார்.

சக்திக்கு அப்போதும் மனதில்லை. எல்லாவற்றையும் தூக்கிப் போட்டுவிட்டு கார்த்திக்கிடம் ஓடிவிடலாமா என்று மனது போராட ஆரம்பித்தது.

ஆனால் அவளை அதிகம் யோசிக்க விடாமல், கட்சியே நல்ல நேரம் பார்த்து சொல்ல, அமைச்சகத்தில் போய் பொறுப்பெடுத்துக் கொண்டாள்.

அங்கே யார் வந்து அவளிடம் அறிமுகப்படுத்திக் கொண்டனர். யார் அங்கே எந்தப் பொறுப்பில் இருக் கிறார் ஒன்றும் மனதில் பதியவில்லை. முகம் புன் சிரிப்பை கொண்டிருந்தாலும் அதில் ஒரு இயந்திரத் தனம் இருந்தது.

அப்போது பிரபு அழைத்தான்.

''சொல்லுங்க பிரபு'' என்றவளிடம்,

''நீங்களே கூப்பிடுவீங்கன்னு நினைச்சேன்'' என்றான் பிரபு.

''கொஞ்சம் பிஸி பிரபு. இனிமே தான் கூப்பிட லாம்னு இருந்தேன்'' என்றாள் சமாதானமாக. ''எனக்கு நடக்குது பிரபு. கார்த்திக் எங்க வெச்சிருக்காங்க.''

''ஒண்ணும் தெரியலைங்க மேடம்'' என்றான் பிரபு.

''ஏன்?'' என்ற சக்தியின் கேள்விக்கு.

''நாங்க யாரும் இதுல பிக்ச்சர்லயே வரக்கூடாதுன்னு சொல்லிட்டான். அதுவுமில்லாம எனக்கும் என்ன பண்றதுன்னு ஒண்ணும் தெரியலை.''

''சிவா இல்லையா.''

''கூட தான் இருக்கார்.''

''குடுங்க'' என்றாள்.

''என்ன சிவா, என்ன நடக்குது.''

''சரியா தெரியலை சக்தி.''

''லாயர் வெச்சு மூவ் பண்ண வேண்டியது தானே. யார் லாயர்.. யாராவது பெரிய ஆளா பார்க்கணும். யாரையாவது அப்ரோச் பண்ணிடாதீங்க.''

''அவன் எப்பவும் டீல் பண்ற லாயர் இருக்கார். ஆனா அவரை எந்த மூவ்வும் பண்ண வேண்டாம்னு கார்த்திக் சொல்லிட்டான் போல.''

''ஏன்?'' என்றாள் சக்தி.

''தெரியலை. கார்த்திக்கிட்ட யார் பேச முடியும். சும்மாவே யாராலையும் பேச முடியாது. இந்த சிச்சுவேஷன்ல யார் பேச முடியும். அவனோட கோ-ஆப்ரேஷன் இல்லாம நாங்க என்ன பண்ண முடியும்'' என்றான் சலிப்பாக.

பிறகு, ''நீங்க ஏதாவது பண்ண முடியுமா சக்தி'' என்றான் சிவா நேரடியாக.

''சாரி சிவா! என்னால இந்த விஷயத்துல ஒண்ணுமே பண்ண முடியாது'' என்று விட்டாள் சக்தி.

இதை சக்தியிடமிருந்து சிவா எதிர்பார்க்கவில்லை.

''என்ன சக்தி? இப்படிச் சொல்றீங்க!'' என்றான்.

சக்தி பதிலே சொல்லவில்லை.

''நான் நீங்க இப்படி சொல்லுவீங்கன்னு எதிர்பார்க் கலை. நீங்க மட்டும் கார்த்திக்கை அப்ரோச் பண்ணக் கூடியவங்க. நீங்களே இப்படி சொன்னா எப்படி'' என்றான் சிவா.

''அவன் மேல தப்பில்லாம இருந்து அவன் மாட்டி யிருந்தா என்னன்னு பார்க்கலாம், ஆனா அவன் செஞ்சதுக்கு தானே மாட்டியிருக்கான். இதுல நான் என்ன பண்ண முடியும். இப்போதைக்கு என்னால ஒண்ணும் பண்ண முடியாது.''

''நேரடியா பண்ணலைன்னா போகுது. மறைமுகமா எதாவது பண்ணலாம் தானே.'

''சாரி சிவா, இப்போதைக்கு என்னால எதுவும் பண்ண முடியாது'' என்று விட்டாள் முடிவாக.

சிவா கோபத்தில் டக்கென்று போனை வைத்து விட்டான்.

என்னவென்று கேட்ட பிரபுவிடம், ''சக்தி, இதுல ஒண்ணும் பண்ண மாட்டாங்களாம்'' என்றான் ஆதங் கத்தோடு.

சிவா போனை வைத்த விதம் சக்திக்கு மனதிற்குக் கஷ்டமாக இருந்தது. ''என்ன நட்பு இவன்'' என்ற கோபம் தான் பெருகியது. முன்பொருமுறை இப்படிதான் சுமித்ரா அவனுக்கு இல்லையென்றான போது பல மாதங்கள் சிவா சக்தியைத் தொடர்பு கொள்ளவேயில்லை.

அவனுக்கு சுமித்ராவுடன் திருமணம் நிச்சயமான பிறகு பத்திரிகை கொடுக்கத் தான் வந்தான்.

சக்தி அதிகம் அதை மனதில் வைத்துக் கொள்ள வில்லை என்றாலும் இப்போது மனதிற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. முன்பு நடந்தவற்றை அசை போட விழைந்தது.

இனி எத்தனை பேரிடம் இப்படி பேச்சுக்கள் கேட்க வேண்டி வருமோ என்று பயமாக இருந்தது.

கார்த்திக் இல்லாத தனிமையை அவள் தான் அதிகமாக உணர்ந்தாள். கண்கள் கரித்தது.

செல்வம் வந்தவன், அவளைப் பார்த்து ஏதோ சொல்ல விழைந்து சொல்ல முடியாமல் நின்றான்.

''என்ன செல்வம்?'' என்று சக்தி வற்புறுத்தவும்,

''அந்த கலெக்டர், இந்த கிரானைட் ஸ்காம் பத்தி எல்லாம் கண்டு பிடிச்சவன்'' என்று நிறுத்தினான்.

''அவனுக்கு என்ன?''

''அவனுக்கு ஒண்ணுமில்லை. ஆனா அவன் குடும்பம் காணோமாம்'' என்றான்.

''என்ன உளர்ற?''

''இன்னைக்குக் காலையில அவன் ஆபீஸ்க்கு வந்ததுக்கு அப்புறம், அவன் அம்மா, பொண்டாட்டி, குழந்தை மூணு பேரும் காணாமப் போயிட்டாங்களாம்'' என்றான்.

சக்திக்கு மயக்கமே வரும் போல் இருந்தது.



# 39

**திருவே நினைக் காதல் கொண்டேன் - நின துதிரு**

**வுருவே மறவா திருந்தேனே - பல திசையில்**

**தேடித் திரிந்திளைத் தேனே - நினக்கு மனம்**

**வாடித் தினங்களைத் தேனே**

- பாரதி

சக்திக்கு நிஜமாக செல்வம் சொன்னதைக் கேட்டதும் மயக்கம் வந்தது.

என்ன நடக்கிறது என்று செல்வத்தைத் தெரிந்து சொல்லச் சொல்லியிருந்தாள்.

''பாஸ நேத்து அரஸ்ட் பண்ணியிருக்காங்க. இவர் மட்டுமில்லை இவரோட சேர்த்து இந்த பிரச்சினையில மூணு பேர். ஆனா இவர் மேல தான் கம்ப்ளைன்ட்ஸ் அதிகம்.''

''அது நானே பேப்பர்ல பார்த்துத் தெரிஞ்சிக்கிட் டேன்.''

''நேத்து அரஸ்ட் பண்ணி கோர்ட்ல ஆஜர் படுத்தி யிருக்காங்க. சேலம் சென்ட்ரல் ஜெயில்ல போடச் சொல்லியிருக்காங்க.''

''நேத்து நைட் அங்க அவங்களை கூட்டிட்டுப் போகும்போதே நேரமாயிடுச்சு. அப்போதைக்கு ஒரு

செல்லப் போட்டிருக்காங்க. இப்போ காலையில வி.ஐ.பி. செல்லுக்கு பாலை மாத்திட்டாங்க.''

''வி.ஐ.பி. செல்லுல என்ன ஸ்பெஷல் இருக்கு.''

''சாதான்னா குறைஞ்சது நாலு பேராவது இருப்பாங்க. எல்லாம் அப்படியே படுத்து உருளணும். எதுக்குமே ஒரு பிரைவசி இருக்காது. ரொம்ப கஷ்டம். வி.ஐ.பி. செல்னா ஒரு கட்டில் இருக்கும், பேன் இருக்கும், லைட் இருக்கும், அவ்வளவுதான்.''

''எப்படி இவனை மாத்தினாங்க.''

''அவங்களா மாத்தினாங்களா.. இல்லை ரிக்வெஸ்ட் குடுத்து பணம் கட்டி இவர் மாத்திகிட்டாரா தெரியலை.''

''யார் லாயர்.''

''நமக்கு எப்பவும் இருக்கிறவர் தான். ஆனா அவருக்குமே வேலை ஒண்ணுமில்லை. ஜாமீனுக்கு அப்பீல் பண்ண வேண்டாம்னு பாஸ் சொல்லிட்டார் போல.''

''என்ன பண்றான் அவன். இதுல நீ வேற என்னமோ சொல்ற. கலெக்டர் குடும்பத்தைக் காணோம்னு எப்படித் தெரியும் பேப்பர்ல வந்ததா.''

''இல்லை, இந்த செய்தியெல்லாம் சேகரிச்ச மாதிரி தான். அதுவும் என் காதுக்கு வந்தது. இன்னும் வெளில நியூஸ் பரவலை. அந்த கலெக்டர் இதை மீடியாக்குத் தெரியப்படுத்தலை. ரகசியமாதான் வெச்சிருக்கான். வெளில தெரியாம கண்டுபிடிக்க எல்லா முயற்சியும் எடுத்திருக்காங்க.''

''ஏன்.''

''தெரியலை.''

''கார்த்திக் இதுல இன்வால்வ் ஆகியிருப்பான்னு நினைக்கறியா.''

''தெரியலை மேடம்.''

''உண்மையைச் சொல்லு.''

''நிஜமாவே தெரியலை மேடம். அரஸ்ட் ஆனதுக்கு அப்புறம் பாஸ் யாரையும் பார்க்கலை. யாரும் அவரைப் பார்க்கலை. லாயர் வெச்சு எதையுமே மூவ் பண்ணலை. என்ன பண்றார்ன்னு ஒண்ணும் தெரியலை.''

''என்ன உள்ள போய் ரெஸ்டா எடுக்கறான்'' என்றாள் கடுப்பாக சக்தி. மீண்டும் கார்த்திக்கிடம் எதுவும் சொல்ல முடியாத இயலாமை பலமாகத் தாக்கியது.

மனதிற்குள் அவனை சகட்டு மேனிக்கு திட்டினாள். புலம்பினாள். ''என்ன சுதந்திர போராட்டத்துல உள்ள போயிருக்கானா இல்லை ஒரு நடக்காத விஷயத்துக்கு தப்பா அரெஸ்ட் ஆகிட்டானா. பண்ணினது எல்லாம் பிராடு தனம். இப்போ புதுசா கடத்தல் வேறயா. என்னமோ தெரியலையே.''

''எப்பவும் எல்லா முடிவும் அவன்தான். நம்மளை எதுவும் சொல்ல விடறதில்லை, கேட்கறதில்லை. அவன் என்ன செய்யறான்னு நமக்குத் தெரியறதில்லை'' என்றாள் மிதமிஞ்சிய வருத்தத்தோடு.

''இப்போ என்னால ஒண்ணும் செய்ய முடியா துன்றப்போ என்ன பண்ண முடியும்'' என்று அவளுக் குள்ளேயே பேசிக் கொண்டவள்.

''எல்லோரும் ஏதாவது பண்ணச் சொல்றாங்க. அவுட் ஆஃப் தி வே போய் எனக்கு பண்ண இஷ்டமில்லை. பண்ண மாட்டேன்றது வேற விஷயம். ஆனா என்ன பண்ணனும்னு கூட எனக்குத் தெரியாதே'' என்றாள் செல்வத்தைப் பார்த்து.

''நிஜமாவே உன் பாஸ் என்னைக்கு என்னை பைத்தியமாக்கி சுத்த விடப் போறானோ தெரியலை'' என்றாள் குரல் கமற.

''ஏற்கனவே பெரிய பிரச்சனை இப்போ இந்த மாதிரி கிட்னாபிங் அது இதுன்னு ஏதாவது மாட்டிக்குவானா தெரியலையே...'' என்று அவளாக மறுபடியும் புலம்பி னாள்.

அழுகை அடக்க முடியாமல் வந்தது. ரெஸ்ட் ரூம் போய் தாங்க மாட்டாமல் சிறிது நேரம் அழுதாள்.

பின்பு சிறிது நேரம் ஆபீசில் இருந்து கிளம்பி விட்டாள்.

அவளுக்கு அங்கே என்ன வேலை என்று ஆனா ஆவன்னா கூடத் தெரியவில்லை.

ஒரு அதிகாரி வந்து கையெழுத்து கேட்டார். எதற்கு என்று படித்துப் பார்த்தாள். புரிந்த மாதிரியும் இருந்தது புரியாத மாதிரியும் இருந்தது.

விளக்கம் கேட்டாள் தான், ஆனால் அவர் சொன்ன விளக்கம் சத்தியமாக இவள் மண்டைக்குள் ஏறவில்லை. அவளுக்கு இருந்த மனவுளைச்சல்கள், அவளின் மூளையை மழுங்கச் செய்திருந்தது.

அதுவுமில்லாமல் அவரின் ஆங்கில உச்சரிப்பு இவளுக்குப் புரியவில்லை. இன்னும் சக்தி பார்லிமென்ட் ஆங்கிலத்திற்கும், ஹிந்தியோடு கலந்து வரும் ஆங்கிலத்திற்கும் பழகவில்லை.

''எவனாவது பிராடு அதிகாரியிடம் என்ன செய்வது என்று கேட்டு அவன் பாட்டிக்கு என்னை வைத்துக் காரியங்கள் சாதித்துக் கொண்டால்,'' குழப்பத்தில் மண்டையே வெடித்தது.

செல்வத்திற்கு சக்தியைப் பார்க்கவே கஷ்டமாக இருந்தது. தன்னுடன் பிறந்தவர்களை நினைத்துப் பார்த்தான். அவர்களிடம் பணம் கிடையாது, பதவி கிடையாது. ஆனால் நிறைய சந்தோசம் இருந்தது. இப்படிப்பட்ட கவலைகள் இல்லை. கணவன் குழந் தைகள் என்று சௌக்கியமாக இருந்தனர்.

திருமணத்திற்கு நிற்கும் இரு தங்கைகளும் கண்களில் கல்யாண கனவுகளோடு அந்த வயதிற்கு உரிய துள்ளலோடு இருப்டர்.

இப்படி சக்தியைப் போல் மனவுளைச்சல்களோ, கவலைகளோ கிடையாது.

இரவு உறக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தாள் சக்தி. மணி பன்னிரண்டை கடந்திருந்தது. அந்த நேரத்தில் அவளின் தொலை பேசி ஒலிக்க,

இந்த நேரத்தில் யாராயிருக்கும் என்ற யோசனை யோடே எடுத்தாள்.

சக்தி என்ற கார்த்திக்கின் ஆழந்த குரல் உயிர்வரை தீண்டியது.

''கார்த்திக்! நீயா? நீயா பேசற?'' என்றாள் பதட்டமாக.

''ம்'' என்றான்.

''எப்படி? எப்படி போன் பேசற? ஜெயில்ல இருந்து தப்பிச்சிட்டியா?''

''லூசு மாதிரி உளறக்கூடாது. நீ இப்போ அமைச்சர். அமைச்சர் மாதிரி பேசணும்.''

''எனக்கு இது வேண்டாம். எனக்கு ஒண்ணுமே தெரியலை'' என்றாள் அழுகையோடு. அவன் ஜெயி லில் இருக்கிறான் அவனைப் பற்றி கேட்க வேண்டும். முதலில் என்று தோன்றவில்லை. அவளைப் பற்றி சொல்லத் தான் தோன்றியது.

கார்த்திக் இருந்தால் தான் சக்தியின் மூளை மழுங்கி விடுமே. இப்போதும் அதுவே செவ்வனே நிறை வேறியது.

''கத்துக்கோ சக்தி உன்னால முடியலைன்னா வேற யாரால முடியும்.''

''நீ இப்படிப் பேசி பேசி தான் என்னை இப்படிக் கொண்டு வந்து நிறுத்திட்ட.''

''ஷ்! சக்தி நான் ரிஸ்க் எடுத்துப் பேசிட்டு இருக்கேன்.''

''யார் போன் இது?''

''வார்டனது.''

''எப்படிக் கிடைச்சது.''

''அந்தக் கதையெல்லாம் நேர்ல பேசலாம்! நீ ரொம்ப அப்செட்டா இருப்பேன்னு தான் கூப்பிட்டேன். நீ தைரியமா இருக்கணும்.''

''ம்ம்! நேர்ல எப்போ பேசலாம்! நீ எப்போ வருவ?''

''இப்போதைக்கு வரமாட்டேன். கொஞ்ச நாள் போகட்டும். இந்த விஷயம் கொஞ்சம் அமுங்கட்டும் அப்புறம் பெயில் அப்பிளை பண்றேன். அதுவரைக்கும் எந்த ஸ்டெப்பும் எடுக்க மாட்டேன்.''

''யாரும் என்னைப் பார்க்கவும் வேண்டாம் நானும் யாரையும் பார்க்க மாட்டேன்.''

''என்கிட்டே போன்ல பேசுவல்ல.''

''அடிக்கடி முடியாது. எப்பயாவது பேசறேன்.''

''அந்த கலெக்டர் ஃபாமிலிய என்ன பண்ணின.''

''நான் ஒண்ணும் பண்ணலையே.''

''நீ ஒண்ணும் பண்ண மாட்ட, ஆனா நீ தானே கடத்தியிருக்க'' என்று பயத்தோடே கேட்டாள்.

''ம்.''

''ஏன் கார்த்திக்? ஏன் கார்த்திக்? இப்படிப் பண்ற மேலமேல தப்பு பண்ற.''

''என்ன பண்றது எதுக்கும் மசிய மாட்டேங்கறான். அவன் வீக்னெஸ் அவன் ஃபாமிலின்னு தெரிஞ்சது அதான் தூக்கச் சொன்னேன்.''

''நீயே அரெஸ்ட் ஆகிட்ட... குவாரிக்கு சீல் வெச்சிடாதிங்க. உன்னோட அக்கௌண்ட்ஸ் எல்லாம் முடக்கிருவாங்க. நிரூபணமாச்சுன்னா ப்ரோபெர்ட்டி சீஸ் பண்ணிருவாங்க. இனி அவன் குடும்பத்தைக் கடத்தி என்ன செய்யப் போற.''

''சும்மா அந்த கலெக்டர் டைவர்ட் பண்ண தான்.''

''என்னதான் பண்ணப் போற.''

''இப்போவும் சொல்றேன் ஒண்ணும் பண்ண மாட்டேன். கேஸ் என் மேல பைல் ஆகியிருக்கு. அது இனி ஒண்ணும் பண்ண முடியாது. ஆனா இது இல்லாம ஒரு செகண்ட் லிஸ்ட் ரெடி பண்ணி வெச்சிருக்கான். என்னோட பினாமின்னு பிரபு மேலயும் உங்கப்பா மேலயும்.''

''அது அவன் வெளில எடுக்கக் கூடாது அவ்வளவு தான்.''

''எப்படி எடுக்காம இருப்பான். அவன் குடும்பம் காணாமப் போனதை வெளில கூட சொல்லலை. இதுக்கெல்லாம் அவன் அசற மாட்டான்.''

''அப்படியில்லை சக்தி. ஒரு பத்து நாள் அவன் குடும் பத்தை தேடறதுலயே போயிடும். அந்த டென்சன்ல் இருப்பான். அப்போ ஏதாவது டீலுக்கு ஒத்துக்கறானா பார்ப்போம். என் ஃபாமிலிய அவன் ஒண்ணும் பண் ணலைன்னா அவன் ஃபாமிலிய உடனே நான் அவன் கிட்ட அனுப்பிடுவேன்.''

''எனக்கென்னவோ உன்னோட இந்த விஷயம் பிடிக்கலை கார்த்திக். இத்தனை நாள் கல்லோட விளையாண்ட ஒகே. எல்லோருக்கும் லஞ்சம் குடுத்து வேலையை சாதிச்சிகிட்ட ஒகே. ஆனா மனுஷங்களோட நீ விளையாடுறது எனக்குப் பிடிக்கலை கார்த்திக்.''

''நம்ம செய்யற பாவங்கள் நம்மளோட போகட்டும். நம்ம குழந்தைங்களுக்கு வேண்டாம் கார்த்திக். நீ

அரெஸ்ட் ஆகியிருக்கிற விஷயத்துல அரசாங்கத்துக்கு வருவாய் இழப்பு அவ்வளவுதான். இதுல தனிப்பட்ட மனுஷ பாதிப்பு கிடையாது. ஆனா இப்போ நீ பண்ணி யிருக்கிறது அப்படி இல்லை.''

''ப்ளீஸ் இந்தப் பிரச்சனையை வேற மாதிரி டீல் பண்ணிக்கோ. அவங்க குடும்பத்தை விட்டுடு கார்த்திக். நீ ஒண்ணும் பண்ண மாட்டன்னு எனக்குத் தெரியும். ஆனா அது அவங்ளுக்குத் தெரியுமா?''

சக்தி கார்த்திக்கையும் அவளையும் தனித்துப் பார்க்கவேயில்லை. அவனுடைய செய்கைகளையும் தன்னுடையதாகவே சொன்னாள்.

''நம்மளால நேர்மையா இருக்க முடியாத பட்சத்துல, நேர்மையா இருக்குறவங்களை நம்ம சோதிக்கக் கூடாது. வேற ஏதாவது யோசி அவன் குடும்பத்தை விட்டுடு. ப்ளீஸ் எனக்காக'' என்றாள் கெஞ்சுதலாக.

''வேற ஆப்ஷனே என்கிட்டே இல்ல சக்தி. இருந்தா நான் இந்த அளவுக்கு கீழ இறங்கியிருக்க மாட்டேன். இதுவரைக்கும் இந்த மாதிரி எல்லாம் நான் செஞ்சதே கிடையாது.''

''அதுக்கான அவசியம் வந்திருக்காது நீ செஞ்சிருக்க மாட்ட அவ்வளவுதான். அதுக்காக நீ நல்லவன் மாதிரி பேசாத விட்டுடு...'' என்றாள் கடுமையாக. கெஞ்சுதலை கைவிட்டு இருந்தாள்.

''விட்ரு அவங்களை விட்ரு வேற ஆப்ஷன் தேடலாம்.''

"நாளாயிடுச்சுன்னா எல்லாம் கைமீறிடும் சக்தி. நான் பண்ணினதுக்கு அடுத்தவங்க பாதிக்கப்படக் கூடாது இல்லையா."

"சொத்தை அனுபவிக்கும்போது பாதிப்பு மட்டும் வரக்கூடாதா?" என்றாள் ஆவேசமாக.

"சக்தி! இது நான் அவங்க கிட்ட இருந்து வாங்கினதை குடுத்ததுதான். இதுல அவங்க கை கிடையாதுப்பா" என்றான் பொறுமையாகவே.

சக்தி அமைதியாக இருக்க, அவனை வேற எந்த வழிகளையும் கார்னர் பண்ண முடியாது. அவன் அங்க இருக்குற வரை பிரச்சனை தான்."

கார்த்திக் பேசவும் சட்டென்று ஒரு யோசனை பளிச்சிட "நீ என்னை நம்புறியா கார்த்திக்.'

"என்ன கேள்வி இது?"

"அப்போ அவங்களை விட்டுடு... இப்போவே அவங்களை விட்டுடு. நான் ஏதாவது செய்ய முடியுமான்னு பார்க்கிறேன்."

"சக்தி இது விளையாட்டில்லை."

"உன்கிட்ட நான் விளையாட்டுப் பொண்ணு தான் கார்த்திக். ஆனா மத்த விஷயத்துலயும் மத்தவங்க கிட்டயும் நான் அப்படி கிடையாது."

"என்ன செய்யப் போற?"

"செஞ்சிட்டு சொல்றேன்."

ஒரு பெருமூச்சை வெளியேற்றியவன், "ரொம்ப நேரம் பேசிட்டேன், வெச்சிடறேன்."

''நாளைக்கு என்னை கூப்பிடு கார்த்திக், என்னன்னு நான் சொல்றேன்.''

''ம்'' என்றவன், ''எங்கம்மா கிட்ட பேசு சக்தி, அவங்களைப் பார்த்துக்கோ'' என்று சொல்லி வைத்தான்.

சக்தி கார்த்திக்கின் செயல் பற்றிய யோசனையில் இருந்ததால், இனி தான் என்ன செய்ய வேண்டும் என்று எண்ணிக் கொண்டு இருந்ததால் வாசுகி பின்னுக்குப் போய்விட்டார்.

சக்தி அதன் பிறகு முயன்று உறக்கத்தை வரவழைத்து தூங்கினாள். செய்ய வேண்டிய வேலைகளைப் பதட்டமில்லாமல் செய்ய வேண்டும். பதறிய காரியம் சிதறி விடும் அபாயம் உண்டு. அதனால் பதட்டமில்லாமல் கையாள முதலில் உறங்கினாள்.

எழுந்தவுடன் தெளிவாகியிருந்தாள்.

செய்ய வேண்டிய வேலைகள் மனதில் அணிவகுக்க,

முதலில் செல்வத்தை அழைத்து, ''கலெக்டரின் குடும்பம் கிடைத்து விட்டதா'' என்று கேட்க,

அவன் விசாரித்து, ''அதிகாலையே வந்து விட்டார்கள்'' என்று உறுதி படுத்தினான்.

''என்ன ஏதுன்னு காரணம் மாதிரி ஏதாவது பேசறாங்களா.''

''இன்னும் ஒண்ணும் தெரியலை.''

செய்தி கேட்ட பிறகே மனம் நிம்மதியாகிற்று பின்பு அமைச்சகம் சென்றவள்.

பேச வேண்டியவர்களிடம் பேசி, விரைந்து செயல் பட, மாலைக்குள் ஃபாக்ஸ்களும் மெயில்களும் பறந்தது.

மதுரை கலெக்டரான கங்காதரன் ஐ.ஏ.எஸ்.

சக்தியின் அமைச்சகத்திற்கு சக்திக்குக் கீழ் பொறுப் பெடுக்க, ஆன் ஸ்பெஷல் டெபுடேஷனில் அடுத்த நாளே டெல்லியில் பணியில் சேர பணித்து, பதவி உயர்வுடன் மாற்றப்பட்டான்.

மனம் பதைத்து இருந்தது எல்லாம் சரியாக நடக்க வேண்டுமே என்று.

அவர் ஜாயின் ஆவதை உடனே மெயிலில் உறுதி படுத்தச் சொல்ல, அவரோ, "நாளை பொறுப்பெடுக் கிறேன்" என்று மெயில் அனுப்பிய பிறகு தான் மூச்சே சரியாக விட்டான்.

அதன் பிறகே நிமிர்ந்தவள். சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டாள். செய்வது சரியா தவறா தெரியாது. பார்ப் போம் என்ற மனநிலையில் இருந்தாள்.

அன்று இரவு இதைச் சொல்வதற்காக கார்த்திக்கின் அழைப்பை எதிர்பார்த்து இருக்க,

கார்த்திக் அழைக்கவேயில்லை.

அவன் ஜெயிலில் இருக்கிறான் என்பதை மனதில் பதிய வைத்துக் கொண்டாள். அதன் பிறகே கார்த்திக் வாசுகியிடம் பேசச் சொன்னது ஞாபகம் வர, அழைக் கலாம் என்று நேரம் பார்த்தால் மணி ஒன்றுக்கு மேல் ஆகியிருந்தது.

இனி அழைக்க முடியாது காலையில் அழைத்துக் கொள்ளலாம் என்று விட்டு விட்டாள்.

காலையில் கங்காதரன் அங்கே வந்து ஜாயின் ஆகப் போவதைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தால் வாசுகிக்கு அழைக்க மறந்துவிட்டாள்.

அவள் அலுவலகம் வந்து அந்த கங்காதரன் எப்போது வேலையில் சேருவான் என்பது போல் எதிர்பார்த்துக் காத்திருக்க,

செல்வம் பதட்டத்தோடு வந்தவன், ''பாஸோட அம்மா ஹாஸ்பிடல்ல அட்மிட் ஆகியிருக்காங்க போல. நான் எப்பவும் போல் நம்ம ஹாஸ்பிடலுக்கு கூப்பிட்டேன் விஷயம் தெரிஞ்சது.''

''என்ன? என்ன அவங்களுக்கு?'' என்று சக்தி பதட்டமாக கேட்க,

''தெரியலை மேடம்.''

உடனே பிரபுவிற்கு அழைத்தான். அவன் எடுக்கவே இல்லை.

நேரே தலைமை மருத்துவருக்கே அழைத்தாள். அவர், ''சூசைட் அட்டெம்ப்ட்'' என்று சொல்ல சக்திக்கு ஒன்றுமே விடவில்லை.

கார்த்திக்கிற்கு என்ன பதில் சொல்லப் போகிறோம் என்ற பயம் பலமாகத் தாக்கியது.



# 40

**பச்சைக் குழந்தையடி - கண்ணிற்**

**பாவையடி சந்தரமதி**

இச்சைக் கினியமது; - என்றன்

இருவிழிக்கு தேநிலவு

- பாரதி

வாசுகியைப் பற்றி கேள்விப்பட்டதும் கங்காதரனை ஒதுக்கி, அடுத்த ஃபிளைட் பற்றி விசாரித்து, இன்னும் ஒன்றரை மணி நேரத்தில் ஒரு ஃபிளைட் பெங்களூர்க்கு இருக்கிறது என்று தெரிந்தவுடன் உடனே தாமதிக்காமல் கிளம்பினாள்.

அங்கே அமைச்சகத்தில் இருந்த உதவியாளரிடம் என்ன ஏதென்று உடனே தனக்கு தகவல் கொடுக்குமாறு பணித்து விட்டு அவள் வெளியே வரவும், ஒரு இளைஞன் வேகமாக வரவும்,

மோதப் போனவர்கள் நிமிட நேரத்தில் சுதாரித்து விலகினார்கள்.

உடனேயே இந்த இளைஞன் மன்னிப்பும் கேட்டான். "சாரி மேடம்! டைம்ல ஜாயின் பண்றதுக்காக அவசரமா வந்தேன் கவனிக்கலை."

"நீங்க!" என்றாள் சக்தி. அவன் தான் என்று தெரியும். இருந்தாலும் அவன் தான் கங்காதரனா என்று தெளிவு படுத்திக் கொள்ள விரும்பி.

"ஐ அம் கங்காதரன்" என்று சொல்லவும்,

"ஐம் அம் சக்தி பிரியதர்சினி. ப்ளீஸ் டு மீட் யு... நீங்க சார்ஜ் எடுத்துக்கங்க. நான் அவசரமா கிளம்ப வேண்டியிருக்கு. நான் திரும்பி வந்ததும் பேசலாம்" என்று சொன்னாள்.

''ஷ்யூர் மேடம்!'' என்று அவளுக்கு மரியாதை கொடுத்தவன், வாயில் அருகில் இருந்ததால் மரியாதை நிமித்தம் அவன் வாயில் வரை வர,

அங்கு வரவேற்பில் அவன் குடும்பம் அமர்ந் திருந்தது.

வேகமாக அறிமுகப்படுத்தினான். ''என் அம்மா, என் மனைவி, என் பொண்ணு'' என்று.

அவன் பெண் குழந்தை மிஞ்சிப் போனால். எல்.கே.ஜி. படிக்குமாயிருக்கும். தன் தந்தையைப் பார்த்ததும். ''அப்பா, தூக்கு!'' என்றபடி அது அவன் காலைப் பிடிக்க,

முன் வந்து சக்தி தூக்கினாள்.

அங்கிருந்தவர்கள் அதை எதிர்பார்க்கவில்லை.

''பரவாயில்லை மேடம்!'' என்று கங்காதரன் வாங்க போக.

குழந்தையின் கன்னத்தில் முத்தமிட்ட சக்தி. ''சாரி'' என்ற ஒற்றை வார்த்தையுடன் அவளை கங்காதரன் கையில் கொடுத்தவள் விரைந்து சென்று காரில் ஏறிக்கொண்டாள்.

பக்கத்தில் இருந்த செல்வம் அவனைப் பார்த்து ஒரு முறை முறைத்தான். கங்காதரன் செல்வத்தின் முறைப்பை கணக்கில் எடுக்கவே இல்லை. சக்தியின் முகமே கண்முன் நின்றது.

''சாரி'' என்ற வார்த்தையில் அவ்வளவு வருத்தம் இருந்தது, அவளின் கண்களும் கங்காதரனைப் பார்த்து அந்த வருத்தத்தைப் பிரதிபலித்தது. ஏன் எதற்கென்று

கங்காதரனுக்கோ, அவன் மனைவி, அம்மாவுக்கோ புரியவில்லை.

அவனின் அம்மா திட்டினார். ''நீ குழந்தையைத் தூக்க வேண்டாம்னு அவசரமா வாங்கப் போனல்ல, கோவிச் சிக்கிட்டாங்க போல'' என்று அவராக ஒரு காரணத் தையும் கண்டு பிடித்தார்.

''நான் அப்படிச் சொல்லலைம்மா'' என்று சொல்லி, அவனின் அம்மாவிடமும் மனைவியிடமும் திட்டு வாங்கினான் கங்காதரன்.

பின்னர் பணியில் சேர்ந்து அவனுக்கு அவசரத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த விருந்தினர் மாளிகைக்குச் செல்ல, அப்போதும் சக்தியின் சாரியும் அவளின் பார்வையுமே கங்காதரன் மனதிற்குள் ஓடிக் கொண்டிருந்தது.

நாலும் நாலும் எட்டு என்று மனது கணக்குப் போட விழைந்தது.

ஃபிளைட் பிடித்து பின்பு பெங்களூரின் அந்த கோடியில் இருந்து இந்தக் கோடி வரை பயணித்து, பின்பு பெங்களூரை விட்டு வெளியேறி ஹோசூர் வழியாக கிருஷ்ணகிரியை அடைந்தபோது, மணி நான்கு.

கார்த்திக்கின் அம்மாவிற்கு ஒன்றும் ஆகக் கூடாது என்ற இடைவிடாத பிரார்த்தனை வேறு.

அமைச்சர் ஆன பின் முதன் முதலாக தொகுதிக்கு வருகிறாள். வரவேற்பு கட்சியில் தடபுடல் படும் என்று யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று ரகசியமாக வேறு வருகிறாள்.

அமைச்சரின் சைரன் வைத்த கார் இல்லை ஒன்றுமில்லை. அவளின் அமைச்சர் அடையாளத்தை மறைத்து ஒரு சாதாரண பிரஜையாக கட்சி ஆட்கள் எல்லோரையும் தவிர்த்து யாரும் கண்டுவிடக் கூடாது என்று பயந்து, நேராக வீட்டிற்குப் போகாமல் தெய்வானைக்கு ஆயிரம் சமாதானங்கள் சொல்லி அவளின் ஹாஸ்பிடலுக்கே வந்தாள்.

வாசுகி ஐ சி யுவில் இருந்தார். எல்லோரும் அங்கே இருந்தார்கள். பிரபு, வைஷ்ணவி, சிவா, சுமித்ரா, ஏன் பத்ரிநாத் கூட அந்த தள்ளாத வயதில் அங்கே தான் அமர்ந்திருந்தார்.

வாசுகியின் நிலைமை சற்று சீரியசாக இருந்தது. "என்ன ஆச்சு" என்று பொதுவாக சக்தி கேட்க,

"தெரிஞ்சு நீங்க என்ன பண்ணப்போறீங்க?" என்றாள் வெடுக்கென்று வைஷ்ணவி அவளின் இயல்பு குணம் தலை தூக்க, கார்த்திக்கின் பொருட்டு சக்தி ஒன்றும் செய்ய மாட்டேன் என்று சிவாவிடம் சொன்ன எதிரொலி அது.

"வைஷூ" என்று பிரபு அதட்ட,

ஆனால் இந்த முறை சக்தி அமைதியாக இருக்கவில்லை.

"நீ என்ன பண்ற? நின்னு வேடிக்கை தானே பார்க்கிற."

"அவங்க எங்கம்மா."

"நான் உங்கம்மாவைப் பார்க்க வரலை! கார்த்திக் அம்மாவைப பார்க்க வந்தேன்!"

''பார்த்து என்ன பண்ணப் போறீங்க?''

''அதை உன்கிட்ட சொல்லணும்னு அவசியம் இல்லை. சும்மா எங்கம்மான்னு சொன்னா ஆகாது. அவங்ககூட இருக்கணும் இந்த சமயத்துல தனியா விடக் கூடாதுன்னு உனக்குத் தெரியாது. இந்த நிலைமைல அவங்களை படுக்க வெச்சிட்டு சும்மா என்கிட்டே சண்டைக்கு வர்ற'' என்றாள்.

பிரபு எதிலும் தலையிடவில்லை. இது உனக்கு தேவை தான் என்பது போல் வைஷ்ணவியைப் பார்த் தான்.

அதன் பிறகு வைஷ்ணவி அமைதியாக, சக்தி பிரபு விடம் வாசுகியைப் பார்க்க வேண்டும் என்று கேட்க வில்லை. அவள் பாட்டிற்கு செல்வத்தை அனுப்பி தலைமை மருத்துவரை அழைத்துக் கொண்டு வந்து பார்த்தாள்.

ஆங்காங்கே உபகரணங்கள் மாட்டப்பட்டு, அந்த பெண்மணி படுத்திருந்தார்.

''எப்படி இருக்காங்க டாக்டர்.''

''இப்போதைக்கு நிலைமை சீரியஸ் தான். ஆனா முதல்ல இருந்ததுக்கு பரவாயில்லை, இம்ப்ரூவ்மெண்ட் இருக்கு. கண்டிப்பா பிழைச்சிடுவாங்க'' என்றார் தலைமை மருத்துவர்.

''எனக்கு பயமா இருக்கு. ஒண்ணும் ஆகாதே.''

''ஆகாது மேடம்! நிறைய தூக்க மாத்திரை சாப்பிட்டு இருக்காங்க. ஆனா பிரபு இருந்ததனால உடனே பர்ஸ்ட் எய்ட் குடுத்து இங்கே கூட்டிட்டு வந்துட்டான்.''

"எப்போ நடந்தது இது."

"நேத்து நைட்."

நேற்று இரவு நடந்தது யாரும் அவளிடம் சொல்லவில்லை. மனதிற்கு ஒரு மாதிரி இருந்தது.

வெளியே வந்தவள் அங்கேயே உட்காராமல் தன்னுடைய ரூம் போய் அமர்ந்து கொண்டாள்.

அவள் வெளியே வந்தபோது அவளுடன் பேசுவார்களா என்பதுபோல் பார்க்க, யாரும் பேசவில்லை.

சக்தியும் அவளாகப் போய் யாருடனும் பேசவில்லை.

கார்த்திக் தொலைபேசியில் அழைத்து விட்டால் பரவாயில்லை, என்பதுபோல் இருந்தது. அவனுக்குத் தெரியப்படுத்திவிட மனம் நினைத்தது.

ஹாஸ்பிடலிலேயே அமர்ந்திருந்தாள். ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை சென்று வாசுகியைப் பார்த்து வந்தாள். எல்லாம் ஸ்டேபிள் ஆகத்தான் இருந்தது. ஆனால் அவர் கண் விழிக்கவில்லை.

இரவு எட்டு மணி ஆனதும் தெய்வானையும் வீர மணியும் வந்துவிட்டனர், அவளை வீட்டிற்கு அழைத்துப் போக,

வாசுகியை மரியாதை நிமித்தம் சென்று பார்த்து வந்தவர்கள்,

ஐ.சி.யு.வில் இருந்து வெளியே வந்தவுடனே, "கிளம்பு சக்தி வீட்டுக்குப் போகலாம். நாளைக்கு வேணா வருவியாம்" என்றார் தெய்வானை.

அங்கே தான் பிரபு, வைஷ்ணவி, சுமித்ரா, சிவா எல்லோரும் இருந்தனர். அவர்கள் முன்னிலையில்தான் பேசினார்.

"இல்லைம்மா, அவங்க கண் முழிக்காம நான் வரமாட்டேன்" என்றாள்.

"பிடிவாதம் பிடிக்காத சக்தி. வாசுகியோட பொண்ணு மாப்பிள்ளை எல்லோரும் இங்க தானே இருக்காங்க. நீ வா!" என்றார்.

"ம்கூம்! நான் வரமாட்டேன்! கார்த்திக் என்னை தான் கேட்பான்!" என்றாள் குரலில் வரமாட்டேன் என்ற உறுதியோடு.

தெய்வானைக்கு ஏனோ கண்மண் தெரியாத கோபம் வந்தது. "சும்மா எப்போ பார்த்தாலும் கார்த்திக், கார்த்திக். இதைவிட்டா உனக்கு ஒண்ணுமே கிடையாதா. அப்போ நான் யாரு உனக்கு. அந்தம்மா பக்கத்துல எனக்கும் ஒரு பெட் போட்டு படுக்க வைக்கப் போற நீ" என்று கத்தியவர், வேகமாகக் கிளம்பினர்.

அவர் முன் வேகமாகப் போய் நின்றவள், "அம்மா ப்ளீஸ்" என்றாள் கெஞ்சுதலாக கண்களில் நீரோடு.

அவள் நின்ற விதத்தில் தெய்வானைக்கு மனம் உருகித்தான் போயிற்று. ஒன்று செய்ய முடியாதவராக, "இரு" என்று சொல்லிச் சென்றார். வீரமணி இதில் வெறும் பார்வையாளர் மட்டுமே.

செல்வமும் நடப்பவை எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு தான் இருந்தான்.

பின்பு சுமித்ராவும் சிவாவும் பத்ரிநாத்தை அழைத்துக் கொண்டு வீட்டிற்குக் கிளம்பினர். சுமித்ரா தான் வந்து,

''நாங்க கிளம்பறோம்கா. பிரபு அண்ணாவும் வைஷ்ணவியும் இருக்காங்க'' என்றாள்.

''உனக்கு என்கிட்டே பேச இப்போ தான் மனசு வந்ததா'' என்று சக்திக்கு கேட்க வேண்டும் போல் தோன்றியது இருந்தாலும் எதுவும் பேசாமல், சரியென்ற ஒற்றை வார்த்தையோடு நிறுத்திக் கொண்டாள்.

செல்வத்தையும் சக்தி அனுப்பிவிட்டாள்.

இன்றாவது கார்த்திக் அழைப்பானா என்ற எதிர் பார்ப்போடு, சக்தி தூங்காமல் நிமிஷத்திற்கு ஒரு முறை போனை எடுத்துப் பார்த்தாள். டவர் சரியாக இருக்கிறதா சார்ஜ் இருக்கிறதா என்பது போல் அடிக்கடி பார்த்து உறுதி வேறு படுத்திக் கொண்டாள்.

இரவு இரண்டு மணிக்கு அவளுடைய காத்திருப்பு வீண் போகாமல் தொலைபேசி அழைத்தது.

அவ்வளவு நேரமாக அவனுடைய அழைப்பிற்கு எதிர்பார்த்து இருந்தவள், இப்போது எடுக்க பயமாக இருந்தது.

எடுத்தவுடன், ''கார்த்திக்'' என்றாள்.

கார்த்திக் எதிர்புறம் அமைதியாக இருந்தான்.

''கார்த்திக், வாசுகி அம்மாக்கு உடம்பு சரியில்லை. ஹாஸ்பிடல்ல இருக்காங்க'' என்றாள்.

கார்த்திக் அப்போதும் அமைதியாகவும் இருக்கவும்.

அவன் அமைதியே அவனுக்குத் தெரியும் என்று சக்திக்கு எடுத்துச் சொல்ல ''உனக்குத் தெரியுமா கார்த்திக்'' என்றாள்.

''நைட் தான் தெரியும்'' என்றான் கார்த்திக்.

''நான் கலெக்டர் விஷயத்தைப் பார்த்துகிட்டே இருந்தனா, உடனே பேசாம தள்ளி போட்டுட்டேன். கார்த்திக் இப்படியாகிடுச்சு'' என்றாள் சிறு விசும்பலோடு.

''நான் உன்கிட்ட சொன்னேன் தானே, அவங்க கிட்ட பேசுன்னு'' என்றான். சொல்லும்போதே குரல் கமறியது.

''சாரி கார்த்திக்! நான் இப்படி பண்ணுவாங்கன்னு நினைக்கலை.''

''தப்பு என்னோடது தான் சக்தி! நான் உன்கிட்ட பேசினப்ப அம்மா கிட்டயும் பேசியிருக்கணும் கொஞ்சம் அசால்டா இருந்துட்டேன். ஒரு மணிக்கு போன் அடிச்சு திடுக்குனு எழுந்தா பயந்துக்குவாங்கன்னு நினைச்சுக் கூப்பிடாம விட்டுடேன். நான் இந்த மாதிரி பண்ணிக்குவாங்கன்னு கொஞ்சமும் எப்பவும் நினைச்சது இல்லை'' என்றான். சொல்லும் அவனின் குரலில் கலங்கியது.

''அதான் உன்கிட்ட பேசு சக்தின்னு சொன்னேன்.''

''அழறியா கார்த்திக்'' என்றாள் அவனின் குரலை வைத்தே.

''உனக்குத் தெரியாது சக்தி, எங்கப்பாவோட உயிர் போனதுக்கும் நான் தான் காரணம். இப்போ எங்கம்மாக்கு ஏதாவது ஆகிடுச்சுன்னா என்னால என்னை என்னைக்கும் மன்னிக்கவே முடியாது'' என்றான் மிதமிஞ்சிய வருத்தத்தோடு.

''ஒண்ணும் ஆகாது கார்த்திக் அவங்களுக்கு. நான் பார்த்துக்குவேன் அவங்களை'' என்றாள்.

''அப்படி தான் நம்பினேன்! இப்போ என்ன ஆச்சு?''

''என்னை நம்பலையா கார்த்திக் நீ.''

''நம்பறதும் நம்பாததும் வேற விஷயம் சக்தி, உன்னை நம்பலைன்னா என்னையே நான் நம்பலைன்னு அர்த்தம். ஆனா அசம்பாவிதமா ஏதாவது நடந்துடுச் சின்னா? என்னால அதுல இருந்து எப்பவுமே வெளில வர முடியாது.''

''தானா உடம்பு சரியில்லைன்னா அது வேற! ஆனா இப்படி ஏன் செய்யணும் எங்கம்மா? ஏன் இப்படிச் செஞ்சாங்க? நான் என்ன செத்தா போய்ட்டேன்'' என்றான் ஆவேசமாக.

''கார்த்திக்! இப்படி எல்லாம் பேசாத கார்த்திக்'' என்றாள் அழுகையோடே.

''நான் எதைன்னு பார்ப்பேன். விடு! உன்னையும் சேர்த்து அப்செட் பண்ணிட்டு இருக்கேன். இனி என்ன பண்றதுன்னு யோசிக்கலாம். எப்படி இருக்காங்க இப்போ.''

''எல்லா உறுப்புகளும் நல்லா தான் இருக்கு. உயி ருக்கு எந்த ஆபத்தும் இல்லை. கண் முழிக்கறதுக்காக பார்த்துட்டு இருக்கோம். அவங்க கண் முழிச்சா உன்னை எப்படியும் தேடுவாங்க கார்த்திக்.''

அமைதியான கார்த்திக் சற்று யோசித்தவன், ''சக்தி முடியுமான்னு தெரியலை? எதுக்கும் ஒரு ட்ரை குடுத்து பாரு. நம்ம லாயர் பார்த்து பரோல்ல என்னைத் தடுக்க முடியுமான்னு கேளு.''

''அம்மாக்கு உடம்பு சரியில்லை. சீரியஸ்ன்னு சொல்லி ஜெயிலர் கிட்ட பெட்டிஷன் குடுத்து கேட்டு பார்க்கச் சொல்லு.''

''விடுவாங்களா.''

''தெரியலை சக்தி! ஒரு முயற்சி பண்ணச் சொல்லு!'' என்றான்.

சொன்னவன், ''நிறைய நேரம் பேச முடியாது சக்தி...'' என்று போனை வைக்கப் போக,

''கார்த்திக்! அந்த கலெக்டர அங்க டெல்லிக்கு எனக்குக் கீழ மாத்திக்கிட்டேன்.''

''ம்.'' என்றான் சுரத்தே இல்லாமல்.

''உனக்குத் தெரியுமா?''

''ட்ரான்ஸ்பர்ன்ற மாதிரி தெரியும். ஆனா எங்க ஏதுன்னு தெரியாது'' என்றவன், ''சரி வெச்சிடறேன்'' என்று வைத்து விட்டான்.

இப்போது அவன் மனதில், மூளையில் எல்லா இடத்திலும் அவனின் அம்மா பற்றிய சிந்தனையே.

கலெக்டரின் நினைவுகள் மற்ற பிரச்சனைகள் பின்னுக்குச் சென்று விட்டன.

அவருக்கு ஒன்றும் ஆகக் கூடாது என்று அவனும் இடைவிடாது பிரார்த்திக்க ஆரம்பித்தான்.

கார்த்திக் கூட சக்தியிடம் பேசிய பிறகு மனதை திடப்படுத்திக் கொண்டான். ஆனால் சக்தியினால் முடியவேயில்லை என்னவோ அவளே தவறு செய்து விட்டது போல மிகவும் வருந்தியவள் அழுகையிலேயே கரைந்தாள்.

இரவு முழுவதும் உறக்கமும் இல்லை. காலையில் சக்தியே வேறு மாதிரி தெரிந்தாள், முகமெல்லாம் அழுது வீங்கி, பார்க்கவே ஏதோ பத்து நாட்கள் படுக்கையில் இருந்து எழுந்தவள் போல.

காலை ஏழு மணிக்கெல்லாம் செல்வம் வந்தவன், சக்தியைப் பார்த்தும் அதிர்ந்து விட்டான்.

''என்ன மேடம்? என்ன ஆச்சு?'' என்று பதறினான்.

''ஒன்றுமில்லை'' என்று அவளால் சொல்லக்கூட முடியவில்லை.

அதற்குள் ஐ.சி.யு.விற்கு ஓடினான். வாசுகிக்கு ஏதாவது ஆகிவிட்டதோ என்று.

அங்கே பிரபுவைப் பார்த்ததும், ''எப்படி இருக்காங்க'' என்றான்.

''நல்லா இருக்காங்க'' என்று பிரபு சொல்லவும் தான் நிம்மதியானவன், ''அப்புறம் ஏன் மேடம் அப்படி இருக்காங்க'' என்று பிரபுவைப் பார்த்துக் கேட்டான்.

''எப்படி இருக்காங்க'' என்று பிரபு பதிலுக்குக் கேட்க,

''உங்ககிட்ட சொல்லி என்ன பண்ணப் போறேன் டாக்டர். நேத்திருந்து நீங்க யாரும் மேடம் கிட்ட சரியாவே பேசலை. இல்ல தெரியாம தான் கேட்கறேன்? என் மேடம் விடவா உங்களுக்கெல்லாம் பாஸ் மேல அக்கறை'' என்று சண்டைக்குப் போக.

பிரபுவிற்கு அந்த கேள்வியில் இருந்த நியாயம் சுள்ளென்று உரைத்தது.

செல்வத்தின் பின்னே வந்த சக்தி.

''வா செல்வம் போகலாம்'' என்றாள். அவளுக்கு குரல் கூட சரியாக வரவில்லை.

பிரபு கூட சக்தியைப் பார்த்து அதிர்ந்து விட்டான். ''என்ன மேடம்? என்ன ஆச்சு? உடம்பு சரியில் லையா?'' என்று கேட்டான்.

''ஒன்றுமில்லை'' என்பதுபோல் தலையசைத்தவள். உள்ளே போய் வாசுகியைப் பார்த்தாள். அங்கிருந்த சிஸ்டரிடம் விசாரிக்க, ''ஒரு தடவை கண் முழிச்சாங்க மேடம். தண்ணி கூட கேட்டாங்க. அப்புறம் திரும்பவும் மயக்கத்துக்குப் போயிட்டாங்க.''

''பிரபு சார் பார்த்தாங்க. இனி பயமில்லைன்ற மாதிரி தான் சொன்னாங்க.''

அதற்குள் பிரபுவும் வந்து, ''அத்தை நல்லா இருக் காங்க மேடம், ஷி இஸ் சேஃப்'' என்றான்.

தலையை மட்டும் அசைத்தாள் பேசவில்லை.

வெளியே வந்தவள், ''வக்கீல் பாக்க போகணும் அப்பாவை வரச் சொல்லு. என் போன் பார்த்து அம்மா எடுத்துட்டாங்கன்னா என் குரலைக் கேட்டே என்னை எங்கயும் அனுப்ப மாட்டாங்க செல்வம்'' என்றாள்.

பிரபுவும் அருகில் தான் இருந்தான்.

''எதுக்கு'' என்றான் செல்வம்.

''கார்த்திக் பரோல் அப்ளை பண்ணச் சொன்னான், அவனுக்கு அம்மாவைப் பார்க்கணுமாம்.''

''பாஸ்க்கு அம்மாக்கு உடம்பு சரியில்லைன்னு எப்படி தெரியும். அவர் பரோல்ல எடுக்க உங்ககிட்ட எப்ப சொன்னார்.''

பிரபுவும் எப்படி என்பது போல சக்தியையே பார்த்து நின்றான்.

திரும்பத் திரும்ப செல்வம் கேட்டும் பதில் இல்லாமல் போக,

''வக்கீல் தானே நான் வீட்டுக்குக் கூட்டிட்டு வரேன். நீங்க போய் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுங்க.''

''இல்லை வேண்டாம்.''

''சொன்னா கேட்கணும். உங்களுக்கு சின்னதா பிரச்சனைன்னா கூட பாஸ் என்னைக் கொன்னே போட்ருவார். என்ன செய்யணும்னு சொல்லுங்க, நான் செய்யறேன். முதல்ல இந்தக் காய்ச்சல் மாத்திரையைச் சாப்பிடுங்க'' என்று கட்டாயப்படுத்தி ஒரு மாத்திரையை கொடுத்தான்.

சக்திக்கும் காய்ச்சல் வருவது போல் இருக்க, அதை உட்கொண்டாள். அது கொஞ்சம் பவர்புல்லான தூக்க மாத்திரை.

அவள் காரில் போகும்போதே தூக்கம் ஆட்கொள்ள, அவளை வீட்டில் பத்திரமாக விட்ட செல்வம், சக்தி சொன்னதை செயல்படுத்தச் சென்றான்.



# 41

ஞால வெளியினிலே - நின்றன்

ஞானவொளி வீசுதடி

**கால நடையினிலே - நின்றன்**

**காதல் விளங்குதடி**

- பாரதி

செல்வம் விரைந்து வேலைகளைச் செய்ய ஆரம்பித்தான்.

இங்கே ஹாஸ்பிடலில் வாசுகியின் நிலை சற்று தேறியிருந்தது. கண் விழித்து சுற்றுப்புறம் பார்த்தார். ஆனால் யாரிடமும் பேச விருப்பின்றி கண்களை முடிந்தவரை மூடியே வைத்திருந்தார்.

ஏன் தனக்கின்னும் இந்த உலக வாழ்க்கையில் இருந்து விடுதலை கிடைக்கவில்லை. இன்னும் எனக்கென்ன பார்க்க இறைவன் வைத்திருக்கிறான் என்பதே அவரின் எண்ணமாக இருந்தது.

பிரபுவிற்கு காலையில் சக்தியின் கலங்கிய முகத்தைப் பார்த்ததில் இருந்து மிகுந்த குற்ற உணர்ச்சியாக இருந்தது. செல்வம் சொன்னது உண்மை தானே சக்திக்கு இல்லாத அக்கறை கார்த்திக்கிடம் வேறு யாருக்கு அதிகமாக இருக்கக்கூடும்.

வைஷ்ணவியையும் சிவாவையும் தாளித்துத் தள்ளி விட்டான். ''நீங்க அப்படி போன் வெச்சிருக்கக் கூடாது சிவா. எனக்கு சக்தியை இப்போ கொஞ்ச மாசமா தான் தெரியும், ஆனா உங்களுக்கு அவங்களை எவ்வளவு நாளா தெரியும். இதுல உங்க பிரண்ட் அவங்க.

''இப்போ நம்ம அவங்களுக்கு சப்போர்ட்டா இருக்கறதை விட்டுட்டு நாமளும் சேர்ந்து டென்ஷன் குடுத்திருக்கோம். காலையில என்னால அவங்க முகத்தைப்

பார்க்க முடியலை. அழுது முகமெல்லாம் வீங்கி பேசவே முடியலை. அப்போ கூட அவங்க என்கிட்ட முகத்தைத் திருப்பலை.''

''செல்வம் வந்து என்கிட்டே கேட்கிறான். அவங்க ரொம்ப பதட்டமா இருக்காங்க. ஒரு தூக்க மாத்திரை குடுங்கன்னு அவனுக்கிருகுற அக்கறை கூட நமக் கில்லாம போச்சு.''

''என்கிட்ட சண்டை போடறான். என் மேடம்க்கு இல்லாத அக்கறை தான் உங்களுக்கெல்லாம் என் பாஸ் மேலையான்னு? என்ன பதில் சொல்வேன் நான் அவன்கிட்ட.''

''சாப்பாடு, தூக்கம்னு இப்படி ஏதாவது உன் வேலை உங்கண்ணன் அரெஸ்ட் ஆகிட்டான்னு நின்னதா. அவங்களை எதுக்குடி பேசின. இன்னொரு தடவை இந்த மாதிரி நீ அதிகப் பிரசங்கித்தனம் பண்ணின கொன்னே போட்டுடுவேன்'' என்றான் வைஷ்ணவியைப் பார்த்து,

''விடுண்ணா'' என்று சுமித்ரா சமாதானப்படுத் தினாள், இப்போது சிவாவிற்குமே மிகுந்த குற்ற உணர்ச்சியாக இருந்தது.

''நம்ம போய் சக்தியைப் பார்த்துட்டு வரலாமா?'' என்றான் சுமித்ராவிடம்,

''இப்போ வேண்டாம் தூங்குவாங்க. என்கிட்டே தான் செல்வம் தூக்க மாத்திரை வாங்கிக் கொடுத்தான்'' என்றான் பிரபு.

சக்தி உறக்கத்தின் பிடியில் இருந்தாலும் அவளின் ஆழ்மனதில் கார்த்திக்கின் ஞாபகமே.

தெய்வானை சக்தியை விட்டு அகலவில்லை. உறங்கும் தன் மகளை பார்த்துக் கொண்டிருந்தார். சக்தி எப் போதுமே சற்று ஒல்லியான உடல்வாகு தான். இப்போது இன்னும் மெலிந்து தெரிந்தாள்.

அழுதழுது முகமெல்லாம் வீங்கி இருந்தது. கண் களைச் சுற்றி இரண்டு நாட்களிலேயே கருவளையம் ஆரம்பித்து இருந்தது.

பிதற்றிக் கொண்டிருந்தாள். என்னென்னவோ பேச்சுக்கள்.

''நான் போன் பண்ணியிருக்கனும்.''

''நீ என்னை நம்பலையா கார்த்திக்.''

''எனக்கு இது பிடிக்கலை வேண்டாம்.''

''மறுபடியும் நீ என்கிட்டே வரமாட்டியா.''

''ஐயோ! வக்கீல் பார்க்க போகனும்'' என்று தூக்கத்தில் உடல் உலுக்கிப் போட்டது. காய்ச்சல் வேறு இருந்தது.

அவளை மடியில் போட்டு அழுத்திப் பிடித்துக் கொண்டார் தெய்வானை. அவருக்கு மகளின் நிலையைப் பார்த்து அழுகை பொங்கியது.

மாலை வரையுமே இதே நிலைமை தொடர்ந்தது. பயந்து விட்டார். யாரை கூப்பிடுவது என்று தெரியாமல் செல்வத்திற்கு அழைத்து யாராவது ஹாஸ்பிடலில் இருந்து டாக்டர் வரை சொல்ல,

அவன் பிரபுவிடம் சொல்லி ஒரு லேடி டாக்டரை அனுப்பச் சொல்ல,

லேடி டாக்டருடன் பிரபுவும் வந்தான். எல்லா மருந்துகளையும் இஞ்செக்ஷன் மூலமாகவே செலுத்தினர். சிறிது நேரம் உட்கார்ந்தும் பார்த்தனர். சக்தியின் பிதற்றல் நின்று அவள் ஒரு மயக்கமான உறக்க நிலைக்குச் செல்லவும், தான் கிளம்பினர்.

''எதுன்னாலும் என்னை எப்போன்னாலும் கூப்பிடுங்க'' என்று பிரபு நம்பர் கொடுத்தான். ''நைட்ன்னு தயங்காதீங்க. என்ன அவசரம்னாலும் கூப்பிடுங்க'' என்று சொல்லிச் சென்றான்.

வீரமணியும் செல்வமும் கார்த்திக் பரோல் விஷயமாக அலைந்து கொண்டிருந்தனர். அவர்கள் சேலத்தில் இருந்தனர்.

இரவுமே மகளை அணைத்தவாறே தான் தெய்வானை உறங்கினார். அவ்வளவு மருந்துகளின் வீரியம் இருந்த போதும், சரியாக பன்னிரண்டு மணிக்கு எழுந்து அமர்ந்தவள் வேகமாக இறங்கிப் போனைத் தேடினாள்.

சக்தியின் அசைவினால் எழுந்த தெய்வானை, ''என்ன சக்திம்மா தேடற?'' என்று அவசரமாக அவர் இறங்கி லைட்டைப் போட,

''அம்மா என் போன் எங்கம்மா?''

''தெரியலை! நான் கவனிக்கலை! இரு பார்க்கிறேன்! நீ உட்காரு'' என்றவர்,

''எதுக்கு'' என்றார்.

''கார்த்திக் போன் பண்ணுவான்மா'' என்றாள்.

தெய்வானைக்கு சந்தேகமே வந்துவிட்டது, சக்திக்கு ஏதாவது ஆகிவிட்டதா என்று.

பொறுமையாக, ''அவன் எப்படி சக்தி போன் பண்ணு வான், அவன் ஜெயில்ல இருக்கான்.''

''ஜெயில்ல இருந்து தான்மா பண்ணுவான். வார்டன் கிட்ட போன் வாங்கிப் பேசுவான்'' என்றாள்.

தெய்வானைக்கு அவள் உண்மை சொல்கிறாளா இல்லை மனவுளைச்சலில் சொல்கிறாளா தெரியவில்லை.

கலவரமாகப் பெண்ணைப் பார்த்தார். அவருக்கு என்ன தெரியும் கார்த்திக் சக்தியிடம் பேசுகிறான் என்று.

தன் பெண்ணுக்கு ஏதோ ஆகிவிட்டது என்றே நினைத்தார்.

அதற்குள் போனை எடுத்திருந்த சக்தி, அதில் சார்ஜ் இருக்கிறதா, ஏதாவது போன் வந்திருக்கிறதா என்று சரி பார்த்தாள். அவளால் மருந்தின் வீரியத்தில் நிற்கக் கூட முடியவில்லை.

படுக்கையில் அமர்ந்தவள் பின்பு சரிந்து படுத்துக் கொண்டாள். உடலில் செலுத்தியிருந்த மருந்துகள் அவளை தூக்கத்திற்கு கொண்டு போக முயல, முயன்று கண்ணைத் திறந்து வைத்துக் கொண்டிருந்தாள்.

அவள் படும் சிரமங்களைப் பார்க்க முடியாமல், ''நீ தூங்கு சக்தி! போன் வந்தா நான் எழுப்பறேன்!'' என்றார் தெய்வானை.

டபக்கென்று எழுந்து உட்கார்ந்தவள், ''இல்லையே! எனக்கு தூக்கம் வரலையே!'' என்றாள்.

''சரி தூங்காத! அம்மா மடில சும்மா படுத்திட்டு இரு!'' என்று பேசி அவளை மடியில் சாய்த்துக் கொள்ள,

படுத்தவள் அன்னை மடியின் அணைப்பில் அவளையும் மீறி உறங்கி விட்டாள்.

எங்கே அசைந்தால் எழுந்து கொள்வாளோ என்று சற்றும் அசையாமல் அமர்ந்திருந்தார் தெய்வானை. சற்று நேரத்தில் போனின் ஒலி கேட்க அவசரமாக எடுத்தார்.

''சக்தி'' என்று கார்த்திக்கின் குரல் கேட்கவும் தெய்வானைக்கு அழுகையே வந்துவிட்டது. சக்திக்கு எதுவுமில்லை. அவள் கார்த்திக் போன் செய்வதை நிஜமாகதான் கூறியருக்கிறாள் என்றதும் அப்படி ஒரு நிம்மதி தெய்வானைக்கு.

''நான் சக்தி அம்மா!'' என்றார்.

சக்தி போன் எடுக்காமல் இருக்க மாட்டாளே. இவர் ஏன் எடுத்திருக்கிறார் என்றதும் கார்த்திக்கிற்கும் பயம் பிடித்துக் கொண்டது. ''என்னம்மா சக்திக்கு என்ன?'' என்றான் பதட்டமாக.

''உடம்பு சரியில்லை கார்த்திக்! பீவர்! இப்போ தான் கண் அசந்தா...'' என்றார்.

மேலே அவரிடம் என்ன பேசுவது என்று கார்த்திக்கிற்கும் தெரியவில்லை, அவருக்கும் தெரியவில்லை.

''நான் நாளைக்குக் கூப்பிடறேன்மா'' என்று அவன் வைக்கப் போக,

''வெச்சிடாத கார்த்திக்'' என்றார் பதட்டமாக. ''என்னால இவளைச் சமாளிக்க முடியாது, அவளை எழுப்பறேன்! இரு இரு!'' என்றார்.

''சக்தி'' என்ற அவரின் அழைப்பிற்கும் சிறு அசை விற்கும் எழுந்தாள். ''கார்த்திக்'' என்று அவர் போனை கொடுக்கவும்,

''கார்த்திக்'' என்றாள் போனில், அவளையும் மீறி அவளின் சோர்வு அவளின் குரலில் நன்கு தெரிந்தது.

''என்ன பண்ணுது சக்தி. உடம்பு சரியில்லையா.''

''இல்லையே! நான் நல்லா இருக்கேனே!'' என்றாள் முயன்று வரவழைத்த உற்சாகத்துடன்.

''பீவர்ன்னு தெய்வா மா சொல்றாங்க.''

அந்த நேரத்திலும் அம்மாவைத் திரும்பிப் பார்த்து முறைத்தவள், ''இல்லை கார்த்திக்! ஒண்ணுமில்லை. கொஞ்சம் டையர்டா இருந்தது. ஒரு கால் போல் போட் டேன்! அதான் அம்மா சொல்லியிருப்பாங்க. எனக்க ஒண்ணுமில்லை!''

''சரி உனக்கு ஒண்ணுமில்லை. பரோல் அப்ளை பண் ணிட்டாங்களா. அம்மா எப்படி இருக்காங்க'' என்றான்.

முழித்தாள். காலையில் இருந்து மருந்துகளின் பிடியில் உறங்கிக் கொண்டு அல்லவா இருக்கிறாள். ''ஐயோ! வக்கீல் பார்க்கலையே!'' என்று மனம் பதைத்தது.

''அது கார்த்திக்! லாயர்? அம்மா?'' என்று உளற, அவளிடம் இருந்து போனை வாங்கிய தெய்வானை, 'சக்தி அப்பாவும், செல்வமும், உன் பரோல் விஷயமா சேலம்ல தான் இருக்காங்க கார்த்திக். பிரபு சக்தியைப் பார்க்க வந்திருந்தார். அப்போ உங்கம்மா நல்லா இருக் கிறதா தான் சொன்னார்'' என்றார்.

கார்த்திக்கின் மனதில் பாரம் ஏறிக்கொண்டது. ''இது எதுவும் தெரியாமல் சக்தி இருக்கிறாள் என்றால் அவளுக்கு நிஜமாகவே உடம்பிற்கு முடியாமல் தான் இருக்க வேண்டும்'' என்று.

''சரிம்மா!'' என்றவன், ''சக்தி கிட்ட குடுங்க.''

அவள் போனை வாங்கியதும், ''டென்ஷன் ஆகக் கூடாது. உடம்பைப் பார்த்துக்கோ'' என்றான்.

''ம்ம்!'' என்றவள், ''கார்த்திக்'' என்றாள் தயங்கி தயங்கி.

''என்னம்மா'' என்று அவன் கனிவாகக் கேட்கவும்,

''இல்லை'' என்று இழுத்தவள், ''எத்தனை பிரச்சனை வந்தாலும் என்னை விட்டுட மாட்டியே. மறுபடியும் என்னை விட்டுப் போக மாட்டியே'' என்றாள்.

தெய்வானை அதைக் கேட்டுக் கொண்டு தான் இருந்தார்.

''நீதான் சக்தி என்னை விடாம இருக்கணும்.''

''நானாவது உன்னை விடறதாவது'' சக்தியின் முகம் அந்த சோர்விலும் புன்னகையை பூசியது. இருந்தாலும் மறுடியும் கேட்டாள். ''போயிட மாட்டியே'' என்று.

''ம்கூம்!'' என்றவன், ''ஆனா நாம எல்லோரும் சூழ்நிலைக் கைதி சக்தி, எதுன்னாலும் ஏத்துக்கற மனப்பக்குவம் வேணும். நான் இல்லைனாலும் உனக்கு வாழ்க்கை இருக்கு சக்தி.'' என்ற வார்த்தையை சொன்னதுதான் போதும் சக்தியின் போன் பார்ட் பார்ட்டாகப் போயிருந்தது.

சக்தி அதைத் தூக்கி வீசியிருந்தாள். கோபம், ஆத்திரம், அழுகை, எல்லாம் ஒரு சேர பொங்கியது சக்திக்கு கார்த்திக்கின் அந்த வார்த்தைகளில்.

''மறுபடியும் நான் இல்லைன்னாலும் சொல்றான்.''

''என்ன? என்ன சக்திம்மா?'' என்று தெய்வானை பதற.

''ப்ச்! போம்மா!'' என்றவள் அழுகையோடு கவிழ்ந்து படுத்துக் கொண்டாள்.

கார்த்திக்கின் காதுகளில், ''ங்கொய்'' என்று சத்தம்.

என்ன நடந்தது என்று தெரியாமல் மீண்டும் சக்தியின் போனிற்கு அழைக்க, அது ஸ்விட்ச் ஆஃப் என்று வரவும், தெய்வானைக்கு அழைத்தான்.

''என்ன ஆச்சும்மா.''

''நீ என்ன சொன்ன? அவ போனைத் தூக்கிப் போட்டு உடைச்சிட்டா.''

''அது சக்தி என்னை ரொம்ப டிபென்ட் பண்ற மாதிரி பேசினாங்க. அதனால நான் இல்லைனாலும் வாழ்க்கை இருக்குன்னு சொன்னேன்.''

''நீ புரிஞ்சு பேசறியா? புரியாம பேசறியா? தெரியலை கார்த்திக்! அவ என்ன உன்னோடு விளையாட்டு பொம்மையா, ஏற்கனவே நான் சொல்லியிருக்கேன், அவ வாழ்க்கையில வர்ற மாதிரி இருந்தா மட்டும் திரும்ப வா, இல்லைனா வராதன்னு, அவகிட்ட இந்த வார்த்தை சொன்னா கோபம் வராதா, அழுதுட்டு இருக்கா.''

''இருக்குற சிக்கல் போதாதுன்னு நீ ஏன் இன்னும் வாழ்க்கையை சிக்கல் ஆக்குற, அவளை எதுக்கு இப்படி ரியாக்ட் பண்ண வைக்கிற.''

''உங்களுக்கு என் மேல கோபம் இல்லையா?''

''இல்லைன்னு பொய் சொல்ல மாட்டேன்! ஆனா உன்கிட்ட கோபத்தைக் காட்டினா சக்திக்குப் பிடிக்காதே! நான் என்ன செய்யட்டும்! என்னவோ போ! காலையில இருந்து அவ உளறின உளறலைக் கேட்க முடியலை.''

''இப்போ என்ன செய்யப் போறாளோ?''

''அவங்க கிட்ட குடுங்கம்மா.''

சக்தி வாங்கவேயில்லை. ஏன் அவள் இந்த உலகத்திலேயே இல்லை. அவளின் காதுகளில் திரும்பத் திரும்ப, ''நான் இல்லைனா கூட உனக்கு வாழ்க்கை இருக்கு சக்தி'' என்ற வார்த்தையே ஒலித்துக் கொண்டே இருந்தது.

எதுவரை என்றால் சக்தி இப்படி பிரம்மை பிடித்த மாதிரி அமர்ந்திருப்பதைப் பார்த்து தெய்வானை மீண்டும் பிரபுவிற்கு தொலைபேசியில் அழைத்து, ''டாக்டர்! என் பொண்ணு நைட் இருந்து ஒரு செகண்ட் கூட தூங்கலை! அவ தூங்கணும்! ஏதாவது தூக்க மாத்திரை குடுங்க! இல்லைனா இஞ்செக்ஷன் பண்ணுங்க!'' என்றார்.

பிரபு அங்கே போகிறான் என்று தெரிந்து, வைஷ்ணவி, சுமித்ரா, சிவா மூன்று பேரும் உடன் வருகிறேன் என்க, ''நான் அங்கே டாக்டரா தான் போறேன்'' என்று அனைவரையும் மறுத்து விட்டான்.

வாசுகி சற்று உடல்நிலை தேறியிருந்தாலும் ஐ.சி.யு. விலேயே இருந்தார். கார்த்திக்கிற்கு பரோல் கிடைக்க வேண்டி அவர் அங்கேயே வைக்கப்பட்டிருந்தார்.

பிரபு வந்து சக்தியைப் பார்த்து மருந்து மாத்திரைகள் கொடுக்கவும், சக்தியும் எந்த மறுப்பும் சொல்லாமல் கொடுத்ததை எல்லாம் போட்டுக் கொண்டு நன்கு தூங்கி எழுந்தாள் சக்தி.

இப்போது சற்று தெளிவாக உணர்ந்தாள். உடல் நிலையும் நன்றாக இருந்த மாதிரி தோன்ற, வாசுகியைப் பார்க்கப் போனாள்.

வைஷ்ணவியும் சுமித்ராவும் அங்கே இருக்கவும், ஒரு அறிமுகமானவர்கள் என்ற பார்வையைத் தவிர சக்தி யிடம் வேறு பிரதிபலிப்பு இல்லை. அவளின் பார்வையே அவர்களை விலக்கி நிறுத்தியது.

சகஜமாக அவர்களால் பேச முடியவில்லை.

அவர்கள் முன்னிலையில் சக்திக்குப் பேச இஷ்ட மில்லை. ''நான் வாசுகிம்மா கிட்ட கொஞ்சம் தனியா பேசணும்'' என்றாள்.

அவர்கள் வெளியேற,

அவளைப் பார்த்ததும் வாசுகி, ''கார்த்திக் எப்படி இருக்கான். யாருக்கும் அவனைப் பத்தி கேட்டா தெரியலை.''

''கார்த்திக் நல்லா இருக்காங்க! ஜெயில்ல இருக் காங்கன்றதை தவிர ஒரு குறையும் இல்லை! அவங்க என்ன செய்ய நினைக்கிறாங்களோ அங்க உட்கார்ந் துட்டு கூட அதைத்தான் செஞ்சிட்டு இருக்காங்க. அதை விடுங்க! நீங்க ஏன் இப்படி பண்ணுனீங்க'' என்றாள் அதட்டலாக.

அதற்கு வாசுகி எந்த பதிலும் சொல்லவில்லை.

''எவ்வளவோ கஷ்டத்தைப் பார்த்துட்டீங்க. இப்போ ஏன் இந்த மாதிரி பண்ணுனீங்க.''

''எல்லோரும் அவனை விட்டுட்டாங்க. நீயும் அவனுக்காக எதையும் செய்ய மாட்டேன்னு சொன்னியாமே.''

''ஒண்ணு நல்லா புரிஞ்சுக்கோங்க. யாரும் உங்க பையனுக்குத் தேவையே கிடையாது. அவங்க என்னையே தேவைன்னு நினைக்கறது இல்லை! வேற யாரை நினைப்பாங்க?''

''நீயும் அவனை விட்டுட்ட தானே.''

''யார் சொன்னா அப்படின்னு? நான் சொன்னனா! உங்ககிட்ட யாராவது சொன்னா நம்பிடுவீங்களா. என்கிட்ட பேசணும்னு உங்களுக்குத் தோணலையா.''

''நீயும் தான் என்கிட்டே பேசலை.''

''எப்படிப் பேசுவேன்! உங்க பையன் செஞ்சு வெச்ச வேலைக்கு எனக்கு அதைப் பார்க்கவே சரியா போச்சு. அப்புறம் உங்ககிட்ட பேசலாம்னு வரும்போது இப்படினு செய்தி'' என்று அதட்டலாகவே பேசினாள்.

வாசுகி அமைதியாக இருக்கவும்,

''அவன் எங்க இருந்தாலும் உங்ககிட்ட கொண்டு வர்றது என் பொறுப்புன்னு சொன்னேன்! அதை ஏன் நீங்க நம்பலை.''

''அப்போ அவனைக் கூட்டிட்டு வர்றியா?'' என்றார் கண்கள் பளபளக்க.

அவர் அருகில் ஆதரவாக அமர்ந்தவள், அவரின் கையை எடுத்து கையில் வைத்துக் கொண்டு, ''உடனே

முடியாது! ஆனா கண்டிப்பா கூட்டிட்டு வருவேன்! நம்புங்க!'' என்றாள்.

''ஏம்மா இப்படி பண்ணுனீங்க.''

''என் அப்பா சொன்னாங்க, பிரபுவை அவரை எல்லாம் பிடிச்சிட்டுப் போயிடுவாங்கன்னு, எப்பவும் போல கார்த்திக் அப்பாவை, கார்த்திக்கை எல்லாம் திட்டுனாங்களா? என்னால தாங்க முடியலை!'' என்று உண்மையை மறைக்காமல் உரைத்தார்.

பாவமாக தான் இருந்தது அந்தப் பெண்மணியைப் பார்த்து சக்திக்கு. ''இனிமே இந்த மாதிரி பண்ணக் கூடாது! என் பையன் யாருக்கும் எந்தப் பிரச்சனையும் வர விடமாட்டான்னு தைரியமா பேசணும்.''

சொல்லும் சக்தியை அப்போது தான் நன்றாக பார்த்தார். முகமெல்லாம் வீக்கமாக இருக்க கண்களைச் சுற்றி கருவளையம் இருக்க, அவரையும் விட அவள் தான் பார்ப்பதற்கு உடம்பு சரியில்லாதவள் போல இருந்தாள்.

''நீயேன் சக்தி இப்படியிருக்க.''

''எப்படி இருக்கேன்? நல்லா இருக்கேன்?''

''இல்லை! பார்க்கவே உடம்பு சரியில்லாத மாதிரி இருக்கு.''

''நீங்க இப்படி பண்ணிக்கிட்டீங்க. உங்களைப் பார்க்கலைன்னு கார்த்திக் திட்டினானா? கொஞ்சம் அப்செட் ஆனேன்! இப்போ பரவாயில்லை! நாளைக்கு சரியாகிடுவேன்!'' என்றாள் புன்னகையோடு.

''என் பையனை விட்டுட மாட்டல்ல.''

''இந்த ஜென்மத்துல எனக்கந்த ஐடியா இல்லை. ஆனா உங்க பையனுக்கு இருக்கும் போல இருக்கு. அதுக்கு தான் என்ன பண்றதுன்னு தெரியலை'' என்றாள் லகுவாகவே.

அந்தக் குரலில் லகுத்தன்மையையும் மீறி வருத்த மிருந்தது. இரு பெண்களுமே அதன் பிறகு கார்த்திக்கின் நினைவில் அமைதியாகினர்.

சற்று நேரத்தில் சக்தி கிளம்ப, ''நாளைக்கு வரு வியா?'' என்றார்.

''கண்டிப்பா வருவேன்! நீங்க ஹாஸ்பிடல்ல இருக் குற வரைக்கும் வருவேன்! அதுக்கப்புறம் உங்களை என்கூட கூட்டிட்டுப் போயிடுவேன். உங்கப்பா கிட்ட விட மாட்டேன்!'' என்று சொல்லிவிட்டுச் சென்றாள்.

வாசுகி விளையாட்டு பெண், விளையாட்டிற்குச் சொல்கிறாள் என்று நினைத்தார்.

ஆனால் சக்தி விளையாட்டுப் பெண்ணில்லை என்பது ஒரு வாரப் போராட்டத்திற்குப் பின் பரோலில் வந்த கார்த்திக்கிற்கு தெரிந்தது. அந்த ஒரு வாரமும் கார்த்திக்கிடம் சக்தி பேசவில்லை.

பகலில் கட்சி பணியில் இருந்தாள். இரவில் தூக்க மாத்திரை உதவியுடன் போனை ஸ்விட்ச் ஆப் செய்து வைத்து உறங்கினாள்.

அவனின் அம்மாவைப் பார்தது தைரியம் சொல்லும் வரை அவன் அருகில் அமைதியாக நின்ற சக்தி,

அவன் கிளம்பும் நேரம் அவன் முன் கை நீட்டியவள், "இதை கட்டிட்டுப் போனா நீ திரும்ப வரும்போது நான் இருப்பேன். இல்லைன்னா அடுத்த டைம் உனக்கு பரோல் கிடைச்சு நீ வர்றதுக்காக எங்கப்பா வெயிட் பண்ணுவாரா இல்லை என்னை அடக்கம் பண்ணிடு வாரா என்னால சொல்ல முடியாது!" என்றாள்.

அவளின் வார்த்தைகளைக் கேட்ட கார்த்திக்கின் கண்கள் ரத்தமெனச் சிவக்க, அவனே சக்தியைக் கொன்று புதைத்து விடும் பார்வை பார்த்தான்.

"இதைக் கட்டிட்டா நீ உயிரோட இருப்பியா?"

"ம்கூம்! நீ இல்லாம வாழ கத்துக்குவேன்! நீ இல்லைனாலும் என் வாழ்க்கையை நான் வாழணும்னு நீ தான சொன்ன?"என்றாள்.



# 42

**காதல், காதல், காதல்**

**காதல் போயிற் காதல் போயிற்**

**சாதல், சாதல், சாதல்.**

- பாரதி

வாசுகியிடம், "உங்களைக் கூட அழைச்சுக்கறேன்" என்று சொல்லி வந்து விட்டாள் சக்தி. இருந்தாலும் கார்த்திக்கின் வார்த்தைகள் அவளுக்கு ஒரு எரிச்சலை கோபத்தை கொடுத்தது. மனம் என்ன முயன்றாலும் அதில் இருந்து வெளி வர மறுத்தது.

''நான் இல்லாம உனக்கு வாழ்க்கை இருக்கு. நாம எல்லோரும் சூழ்நிலைக் கைதி'' இந்த வார்த்தைகளே அவளுள் திரும்ப திரும்ப ஒலித்துக் கொண்டிருந்தது.

இந்த மன உளைச்சல் ஆகாது என்று முடிவெடுத் தவள், இன்னும் தேர்தல் வெற்றிக்கு பின் அமைச்சராக பதவி ஏற்ற பின் கட்சியினரை சந்திக்கவில்லை என்பது ஞாபகம் வர, அந்த வேலைகளில் இறங்கினாள்.

கட்சியினரை சந்தித்து, அவளுக்காக வேலை செய்த எல்லோரையும் சந்தித்து நன்றி கூறினாள். ''என்னுடைய அனுமதி இல்லாம என் பேரை உபயோகப்படுத்தி எந்த வேலையும் செய்யக் கூடாது'' என்று மிகவும் ஸ்ட்ரிக்ட் டாகக் கூறினாள்.

''எந்த உதவினாலும் என்கிட்டே வாங்க. என்னால முடிஞ்சா கண்டிப்பா செய்யறேன். முடியலைனாலும் அதுக்கு பதிலா வேற ஏதாவது செய்ய முடியுமான்னு பார்க்கிறேன். ஆனா என் பேரை உபயோகப்படுத்தி நீங்க ஏதாவது காரியம் செஞ்சீங்கன்னாளோ, இல்லை செஞ்சு குடுக்கறேன்னு யார் கிட்டயாவது பணம் வாங்கினிங்கன்னாளோ கடுமையான விளைவுகளைச் சந்திக்க வேண்டி இருக்கும்'' என்று எச்சரிக்கையாகவே சொன்னாள்.

''பணத்துக்காக எந்த வேலையும் நடக்கறதை நான் விரும்பலை... உங்களுக்கு அவசரத்துக்கு பண உதவி தேவைன்னா கேளுங்க, அதைக் கூட நான் செய்யத் தயாரா இருககேன். என் பேரை உபயோகப்படுத்தி எந்த பண பரிவர்த்தனையும் இருக்கக் கூடாது. நீ கட்சி

பேரைச் சொல்லுவியோ, தலைவர் பேரைச் சொல்லு வியோ... உன் விருப்பம். என் பேரை மிஸ் யூஸ் பண் ணக்கூடாது. நான் அமைச்சர் கிட்ட சொல்லி இந்த வேலையைச் செஞ்சி தர்றேன்னு பணம் வாங்கக் கூடாது'' என்றாள்.

சக்திக்கு தெரியும் அவளால் பெரிதாக இந்த மாதிரி யான செய்கைகளில் எதுவும் செய்ய முடியாது என்று, அவளால் முடியக் கூடியது எல்லாம் அவள் பேரை உபயோகப்படுத்தி யாரும் எதுவும் செய்யாமல் இருப்பதே,

அவள் இப்படிச் சொன்னவுடன் கட்சியில் இருந்த சில பேர் உதவி என்று ஓடிவந்து நின்றனர். உண்மையா என்று விசாரித்து, செய்யலாம் என்று தோன்றிய உதவியை உடனே செய்தாள்.

அவளுக்கு அது சற்று நல்ல பெயரைக் கொடுத்தது.

''புதுசா வந்து இந்தப் பேச்சு பேசுது! இதுல அமைச்சர் வேற! இதுகிட்ட இருக்கு பணம் வேண்டாம்னு சொல் லும் என்கிட்டே இருக்கா என்ன? என்ன ரவுசு பண் ணுது... எல்லா இவங்களே சம்பாரிக்கணும்... அடுத்தவன் எவனும் காசு பார்க்கக் கூடாது'' என்று பலரை முணு முணுக்கவும் வைத்தது.

கார்த்திக் பரோலில் வரப் போகும் நாளுக்காக காத்திருந்தவள், அதுவரை வாக்களித்தவர்களுக்கு நன்றி சொல்ல தொகுதி முழுவதுமே சென்றாள்.

கூட கட்சி ஆட்கள் மட்டுமே... செல்வமோ வீர மணியோ இல்லை. அவர்கள் தான் கார்த்திக்கின் பரோல்

விஷயமாக சேலத்தில் இருந்தனர். அவர்களை வர வேண்டாம் என்று சொல்லி தனியாகவே சமாளித்தாள்.

தெய்வானையும் எதிலும் தலையிடவில்லை. அவள் கார்த்திக்கின் நினைவில் இருந்து வெளியே வந்தால் போதும் என்று நினைக்க. அவளாவது கார்த்திக்கை மறப்பதாவது.

இதில் கங்காதரனோடு தொலைபேசியில் பேசி அங்கே அமைச்சக நிலவரங்களையும் தெரிந்து கொண் டாள்.

மொத்தத்தில் பிசியாக இருந்தாள். இரவில் கார்த் திக்கினோடு பேசுவதை தவிர்ப்பதற்காக தூக்க மாத்திரை உட்கொண்டு தூங்கினாள்.

தெய்வானை மகளோடு உறங்கியதால் இரண்டு நாட்கள் கார்த்திக்கின் பானை அவர் தான் எடுத்தார். அதிலேயே தன்னோடு பேச சக்திக்கு விருப்பமில்லை என்று புரிந்த கார்த்திக் திரும்ப அழைக்கவில்லை.

சிவா சுமித்ராவோடு சில முறை சக்தியை சந்திக்க முயற்சிகள் எடுத்தும் முடியவில்லை. சக்தி அவ்வளவு பிசியாக இருந்தாள்.

சக்தி சில முடிவுகளோடு மனதை சமாதானமாக வைத்திருக்க, கார்த்திக் தான் மிகவும் அல்லல் பட்டுப் போனான்.

சக்தியும் கோபித்துக் கொண்டு கார்த்திக்கினோடு பேசவில்லை. அவன் சொன்னதில் அவனுக்கு எதுவும் தவறிருப்பதாகத் தோன்றவில்லை. வேறு யாரோடும் அவனுக்குப் பேச விருப்பமில்லை.

இந்த உளைச்சல்களில் மறுபடியும் கழுத்து வலி ஆரம்பித்து அது வேறு உயிரை வாங்கியது.

செல்வமும் வீரமணியும் ஒருமுறை அவனைப் பார்த்து பரோலில் எடுக்க முயற்சி செய்து கொண்டிருப்பதைக் கூறினர்.

இவனோடு அரெஸ்ட் ஆன மற்ற குவாரி அதிபர்கள் ஜாமீனுக்கு முயற்சி செய்து கொண்டிருக்க கார்த்திக் அதற்கான எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

ஒரு வாரப் போராட்டத்திற்குப் பின் கார்த்திக் பரோலில் செல்ல அனுமதிக்கப்பட்டான்.

அதிகாலையிலேயே அவனை போலீசார் போலீஸ் வேன் மூலமாக, கிருஷ்ணகிரி கூட்டி வந்தனர். ஹாஸ்பிடலில் அவனின் அன்னையைப் பார்த்துவிட்டு சில மணி நேரத்தில் திரும்பக் கூட்டி வந்துவிடுவதாக ஏற்பாடு.

அவன் பரோலில் வருவதை மிகவும் ரகசியமாக வைத்திருந்தனர். ஏனென்றால் இன்னும் கிரானைட் ஊழல் செய்திகள் பத்திரிகைகளில் முதல் பக்கத்தில் தான் இருந்தன. கார்த்திக்கை பற்றி பலப் பல செய்திகள் ஊடகங்களில் உலாவிய வண்ணம் தான் இருந்தது.

சக்தியின் நல்ல நேரமோ என்னவோ, அவன் வீரமணியுடன் இருந்தான். வீரமணி இப்போதைய மத்திய அமைச்சரின் தந்தை என்பது மாதிரி தான் செய்திகள் உலாவின.

சக்தியை நேரடியாக யாரும் அவனோடு சம்மந்தப் படுத்தவில்லை. அவன் தான் அதற்கான வாய்ப்புகளை ஒன்றுமே கொடுத்தது இல்லையே.

அவன் பரோலில் வரும் விஷயம் வெளியே தெரியக் கூடாது என்பதில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கச் சொன்னான் கார்த்திக்.

ஆனால் பத்திரிகைகள் எந்த நேரத்தில் எப்படிச் செயல்படும் என்று கணிக்க முடியாது. கார்த்திக் வரும் விஷயம் எப்படி கசிந்தது என்று தெரியவில்லை.

அவன் கிருஷ்ணகிரியில் ஹாஸ்பிடலை அடைந்த போது அவ்வளவு பத்திரிகையாளர்கள், டி.வி. சேனல்கள் கூட்டம்.

அவனை வேனை விட்டு போலீசார் இறக்கவே யில்லை.

முதலிலேயே செய்தியாளர்கள் குழுமியதை அறிந்த சக்தி, அது அவளின் ஹாஸ்பிடல் என்பதால் அவர்கள் யாரும் உள்ளே நுழைந்து விடாதபடி போலீஸ் பந் தோபஸ்திற்கு ஏற்பாடு செய்திருந்தால்,

இப்போது பிரச்சனை என்னவென்றால் சக்திக்கு எப்படி உள்ளே போக பத்திரிகையாளர் கண்ணில் படாமல் என்று புரியவில்லை.

காலையிலேயே கிளம்பிவிட வேண்டும் என்று நினைத்திருந்தாள். கட்சியின் மூத்த பிரமுகர் ஒருவர் வாழ்த்துத் தெரிவிக்க வீட்டிற்கே வந்துவிட அவளால் அசைய முடியவில்லை.

அன்று தெய்வானை கோவிலில் பூஜைக்கு கொடுத் திருக்க, அவர் காலையிலேயே வீரமணியை அழைத்துக் கொண்டு கிளம்பியிருந்தார். பூஜையை முடித்துக்

கொண்டு அப்படியே ஹாஸ்பிடல் போய்விடுவதாகச் சொல்லிச் சென்றனர்.

சரியாக சக்தி கிளம்பும் நேரம் அந்த பிரமுகர் வந்துவிட சக்தியால் அசைய முடியவில்லை. அவள் பேசிக் கிளம்பும் போது ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆகியிருக்க, அதன் பிறகு சக்தி கிளம்புவோம் என்றால் அங்கே ஒரு பெரிய கும்பலே இருக்கும் செய்தி வர.

சோர்ந்து விட்டாள்.

போலீசிற்கு சொல்லி ஓரளவு ஒழுங்கு படுத்தி விட்டாள். இருந்தாலும்,

யார் போனாலும் பிரச்சனையில்லை. அவள் சென்றால் அது தலைப்புச் செய்தியாகிவிடும். அதற்காக கார்த்திக்கை பார்க்காமல் இருக்க முடியாது.

சற்று நேரத்திற்கு மூளையே ஓடவில்லை.

ஒரு வழியாக பத்திரிகையாளர்களைக் கடந்து கார்த்திக் இருந்த வேனை சற்று ஹாஸ்பிடலின் வராண்டா உள் கொண்டு நிறுத்தினர்.

அப்போதும் கார்த்திக் இறங்கிப் போகும் போது ஒரே பிளாஷ் லைட் மின்னல். வீடியோ ரெகார்டிங், கார்த்திக் ஒரு மாதிரியான எரிச்சலான மனநிலைக்குச் சென்று கொண்டிருந்தான்.

உள்ளே வந்தவுடனே, பத்திரிகையாளர் கண் பார் வையில் இருந்து மறைந்த உடனே எதிரில் வந்த செல்வத்திடம் எரிந்து விழுந்தான். ''இந்த கருமத்தை எல்லாம் பார்க்க வேண்டாம்னு தான் நான் யாரையும்

பார்க்க வரவேண்டாம்னேன். நானும் ஜாமீனுக்கு அப்ளை பண்ணலை, எதுவும் பண்ணலை.''

''அவங்க கவனத்தைத் திருப்ப வேண்டாம்னு தான் எதுவும் செய்யலை. எங்கம்மா வந்து இப்படி செஞ்சு உயிரை எடுக்கறாங்க'' என்று அவனிடம் எரிந்து விழுந் தான்.

''பண்ணினது ஊழல். இதுல யாரும் இவரை போட்டோ எடுக்கக் கூடாதாம்'' என்று அருகில் வந்த கான்ஸ்டபிள் மற்றொருவரிடம் மெல்லிய குரலில் சொல்ல, கூட வந்த சப் இன்ஸ்பெக்டர் முறைத்தார்.

''யோவ்! அவரை எதுவும் நாம கேட்கக் கூடாது, கண்டுக்கக் கூடாதுன்னு சுளையா ஆளுக்கு ரெண்டு லட்ச ரூவா பேசியிருக்கோம். அவரை எந்தத் தொந் தரவும் குடுக்காம மறுபடியும் ஜெயில் கொண்டு போய் விட்டதுக்கு அப்புறம் தான் பணமே கைக்கு வரும். அடக்கி வாசிங்கய்யா. இதுக்கு தான் கத்துக் குட்டிங்க கூட கூட்டணி போடக்கூடாது'' என்றார்.

அதன் பிறகு அவர்களுக்கு காதும் கேட்கவில்லை. பார்வையிலும் எதுவும் படவில்லை. வாயும் திறக்க வில்லை.

எப்போதும் பரோலில் வரும் கைதியை விட்டு இம்மியும் காவலர்கள் நகரக் கூடாது. எந்தக் காரணத்தை முன்னிட்டும்,

ஆனால் கார்த்திக் முன்னால் நடக்க, இவர்கள் அவனை இடைவெளி விட்டு தான் தொடர்ந்தனர்.

வாசுகியை தனியாக ஒரு ரூமில் வைத்திருந்தனர். அந்தப் பக்கமே யாரையும் விடவில்லை.

ஆனால் அவனின் குடும்பம் அங்கேயிருந்து, பிரபு, வைஷ்ணவி, சிவா, சுமித்ரா, வீரமணி, தெய்வானை என்றிருக்க, கார்த்திக்கின் கண்கள் சக்தியைத் தேடியது அவளைக் காணவில்லை.

கார்த்திக்கிற்கு யாரையும் பார்க்கப் பிடிக்கவில்லை. ''எதுக்குடா அத்தனை பேரும் நிக்கறாங்க'' என்றான் இன்னும் எரிச்சலாக. அம்மாவின் மேல் கோபம் கோப மாக வந்தது.

''மெதுவா பேசுங்க பாஸ், கேட்டுறப் போகுது'' என்று செல்வம் தான் அடக்கினான்.

''போடா'' என்றவன், ''எங்கடா உன் மேடம்'' என்றான்.

''அதான் தெரியலை, ஒரு வேளை உள்ள ரூம்ல வாசுகி அம்மாவோட இருக்காங்களோ என்னவோ?''

அருகில் வந்ததும் எல்லோரையும் பார்த்துப் பொது வாய் ஒரு புன்னகை புரிந்தான்.

தாடி வைத்த ஒரு சோகமான கார்த்திக்கை, ஏதோ தவறு செய்து விட்டவன் போல வருவானோ என்று எதிர் பார்த்துக் காத்திருந்தவர்களுக்கு, இப்படி கார்த்திக்கை எதிர்பார்க்கவில்லை.

நன்றாக நீட்டாக இருந்தது அவனின் உடை. ஷேவ் செய்து முகத்தில் எந்த உணர்வுகளுக்கும் இடம் கொடுக்காமல், எப்போதும் பார்ப்பது போலத் தான் இருந்தான்.

பொதுவாக, ''அம்மாவைப் பார்த்துட்டு வந்துடறேன்'' என்று உள்ளே புகுந்து கொண்டான்.

உள்ளே வாசுகியோடு ஒரு நர்ஸ் இருக்க, விர லசைவில் ''வெளிய போ'' என்றான்.

அந்தப் பெண்ணிற்கு ஒன்றும் புரியவில்லை. ''யார் நீங்க?'' என்றான் அந்தப் பெண்.

கதவைத் திறந்து தலையை வெளியே விட்ட கார்த்திக், ''நீ உள்ள இருக்காம இங்க வெளியில என்ன பண்ற?'' என்று வைஷ்ணவியைப் பார்த்து அதட்டி னான்.

வேகமாக வைஷ்ணவி உள்ளே போக, ''அந்தப் பொண்ணை வெளில போக சொல்லு!'' என்றான்.

அந்தப் பெண் சென்றதுதான் போதும். வாசுகியைப் பார்த்து கூட ஒரு வார்த்தை கேட்கவில்லை.

''கார்த்திக்!'' என்ற வாசுகியின் அழைப்பிற்கும் அவரின் அருகில் செல்லவில்லை.

''என்ன பண்ணின நீ? இதுதான் நீ அம்மாவைப் பார்த்துக்கற லட்சணமா. அவங்க இந்த மாதிரி பண்ற வரைக்கும் நீ என்ன பண்ணிட்டு இருந்த'' என்று கத்தினான்.

அவன் கத்தின சத்தம் வெளியே கேட்க அவசரமாக உள்ளே வந்தான் பிரபு. ''கார்த்திக்! அவங்க இப்படிச் செய்வாங்கன்னு நாங்க எதிர்பார்க்கலை'' என்று பிரபு சமாதானம் சொல்ல,

சற்றும் கார்த்திக் கேட்கவில்லை. பிரபுவையும் சேர்த்துத் திட்டினான். ''இவளுக்கு தான் எப்போவும் அறிவு வேலை செய்யாது. ஒண்ணும் செய்யாது. நீ எப்படி அலட்சியமா விட்ட. நீ கவனமா இருந்திருக்க

வேண்டாமா. நான் அரெஸ்ட் ஆகி ரெண்டு நாள்ல இப்படிப் பண்ணியிருக்காங்க. அந்த ரெண்டு நாள் கூட உங்களால கூட இருந்திருக்க முடியாதா'' என்று பிரபுவையும் திட்டினான்.

பிரபு பதில் பேசாமல் அவன் திட்டிய திட்டுக்களை வாங்கிக் கொண்டான்.

சத்தம் கேட்டு தெய்வானை உள்ளே வந்தார். அவரைத் தொடர்ந்து வீரமணி, சிவா சுமித்ரா என்று வந்தார்கள்.

சுமித்ராவையும் விட்டேனா என்று கேள்வி கேட்டான். ''எப்பவுமே வைஷ்ணவிக்கு பொறுப்பு கிடையாது. ஏன் சுமித்ரா நீ வந்து அம்மாவோட ரெண்டு நாள் இருந் திருக்கக் கூடாதா.''

''அங்க தான் இருந்தா'' என்று சிவா பதில் சொல்ல,

''இத்தனை பேர் இருந்துமா, கேர் லெஸ்ஸா இருந் தீங்க.''

''நான் பண்ணினதுக்கு ஏன் அவங்களைத் திட்டுற கார்த்திக்'' என்று வாசுகி இடைபுக,

''உங்களைத் திட்ட முடியாதுல்ல. அதான் அவங் களைத் திட்டிட்டு இருக்கேன்'' என்றான்.

வாசுகி முகம் சுருங்க, தெய்வானை வீரமணியிடம், ''கார்த்திக்கை அமைதியா இருக்கச் சொல்லுங்க. நீங்க சொன்னா தான் கேட்பான்'' என்று காதைக் கடிக்க,

வீரமணி கார்த்திக்கிடம், ''நடந்ததைப் பேசி என்ன பிரயோஜனம் கார்த்திக். ஒண்ணும் அசம்பாவிதம்

ஆகலைல விடு. இனிமே கவனமா இருப்பாங்க'' என்று சொல்லிக் கொண்டிருந்தபோது,

வேகமாக சக்தி உள்ளே வந்தாள். அவள் கோஷா உடையில் இருந்தாள். முகம் வெளியே தெரியாமல் இருக்க, கோஷா உடை அணிந்து, ஆம்புலன்ஸ் வரச் செய்து அதில் வந்திருந்தாள்.

அவளைப் பார்த்ததும் இன்னும் டென்ஷன் ஏறியது கார்த்திக்கிற்கு. யாருக்கும் தெரியாமல் இருக்க தான் அப்படி வந்திருக்கிறாள் என்று கார்த்திக்கிற்கு புரிந்தது.

''இப்படி என்னை ரிஸ்க் எடுத்துப் பார்க்க வர லைன்னா என்ன... அப்படி என்ன என்னைப் பார்க் கணும்னு... யாராவது பார்த்திருந்தா'' என்று அவளிடமும் எகிற,

ஏற்கனவே யாரும் பார்த்துவிடக் கூடாது என்ற டென் சனில் வந்திருந்தாள் சக்தி, எல்லோர் முன்னிலையிலும் இப்படி கார்த்திக் பேசியதும், கோபம் தலைக்கேற,

''வாயை மூடு,'' என்று கத்தினாள்.

''சும்மா எப்போ பார்த்தாலும் ஏதாவது சொல்லிக் கிட்டே, உன் விஷயத்தை மட்டும் நீ பாரு! நான் என்ன பண்ணனும். உன்னை ஏன் பார்க்கணும். இதெல்லாம் நீ சொல்லாத'' என்றாள்.

கோபத்தில் அவளின் முகமே சிவந்து விட்டது.

அவளுக்கு மிகுந்த கோபம் என்று கார்த்திக்கிற்குப் புரிந்து விட்டது. சற்று அமைதியானான்.

''மா! வாங்க!'' என்று உடனே அவளின் அம்மாவைக் கூப்பிட்டுக் கொண்டு வெளியே போனாள்.

''சக்தி! இரு! சாரி!'' என்று கார்த்திக் அவசரமாகச் சொல்ல,

''எதுக்கு வந்த? அம்மாவைப் பார்க்கத் தானே! முதல்ல அந்த வேலையைப் பாரு!'' என்றாள்.

பிறகு அம்மாவைக் கூப்பிட்டுக் கொண்டு ரூமை விட்டுப் போக, எதுவும் செய்ய முடியாதவனாக கார்த்திக் வாசுகியிடம் போனான்.

தெய்வானை சென்றதும் வீரமணி பின்னோடு சென்றார்.

செல்வம் வெளியே தான் நின்றிருந்தான். கூட அந்தக் காவலர்களும் சப்-இன்ஸ்பெக்டரும்.

சாதாரண சுரிதாரில் இருந்த சக்தியை அமைச்சர் என்றா அவர்களுக்குத் தெரியும். யாரோ ஒரு பெண் என்ற ரீதியில் தான் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சேலத்தைச் சேர்ந்தவர்கள். பேப்பரில் பார்த்திருந்தாலும், நேரில் அந்த உருவத்தை ஒப்புமைப் படுத்த முடியவில்லை.

வெளியே வந்ததுமே, ''அம்மா'' என்ற சக்தி, ''எனக்கு உங்க சம்மதம் வேணும்!'' என்றாள்.

''எதுக்குமா...'' என்று கேட்டவரிடம்,

கையில் ஒரு நகை டப்பாவை நீட்டினாள்.

தெய்வானை இப்படி இருக்கும் என்று யோசிக்கவேயில்லை. வீரமணியும் அருகில் தான் இருந்தார்.

அங்க நகை டப்பாவை தெய்வானை திறக்க, உள்ளே மஞ்சள் பூட்டில் கோர்த்திருந்தது தாலி.

''என்ன சக்தி இது'' என்று தெய்வானை பதற.

எட்டிப் பார்த்த செல்வம் தாலியைப் பார்த்தவுடன், ''வாங்க சார்! டீ சாப்பிட்டுட்டு வரலாம்'' என்று காவலர்களைத் தள்ளிக் கொண்டு போனான்.

''அம்மா! உன்னைக் கேட்காம நானா இதைச் செஞ்சது தப்புதான். ப்ளீஸ்மா! எனக்கு நிம்மதியேயில்லை. என்னால எந்த வேலையும் செய்ய முடியலை. செயல்பட முடியலை. இவனைப் பத்தி நினைக்கக் கூடாதுன்னாலும் நினைக்காம இருக்க முடியலை. இது எனக்குக் கொஞ்சம் நிம்மதியைக் கொடுக்கும்னு நினைக்கிறேன். வேண்டாம்னு மட்டும் சொல்லிடாதீங்'' என்றாள்.

பேசி சமாதானப்படுத்தவோ, சொல்லிப் புரிய வைக்கவோ கூடிய நிலையில் சக்தி இல்லை என்று தெய்வானைக்குப் புரிந்தது. ''சம்மதம்'' என்ற வார்த்தை மட்டுமே அவளை உயிர்ப்போடு வைக்கும்.

அப்போதும் வீரமணிக்குப் புரியவில்லை. ''என்ன தெய்வா தாலி.''

''கார்த்திக்கை இப்போ கல்யாணம் பண்ணிக் கறேன்னு சொல்றா.''

''என்ன'' என்றார் அதிர்ச்சியாக வீரமணி. அவருக்கு கார்த்திக்கிற்கும் சக்திக்கும் இடையில் ஓடிக் கொண்டிருக்கும் பிரச்சனைகளே தெரியாது.

''கார்த்திக்கை பார்க்காதீங்க. அவனைப் பத்தி யார் கிட்டயும் பேசாதீங்க! இப்படியெல்லாம் சொல்லிட்டு, இப்போ இது என்ன? எனக்குப் புரியலை!'' என்றார்.

''ரெண்டு பேருக்கும் ஒருத்தர் மேல ஒருத்தருக்கு இஷ்டம்'' என்றார் தெய்வானை.

''ஏன் தெய்வா என்கிட்டே சொல்லலை?''

''ப்ச்! என்னத்தப் போய் சொல்ல! ரெண்டு பேரும் உயிரை எடுக்கறாங்க'' என்றார் தெய்வானை சலிப்பாக.

''அப்பா! நீ சொல்லுங்க சம்மதமா? இல்லையா?'' என்று இடைவெளி விட்டவள், ''நீங்க சம்மதம் இல் லைன்னு சொன்னாலும் நடக்கும்பா.''

வீரமணிக்கு ஒன்றுமே ஓடவில்லை. இவ்வளவு பிடி வாதமான சக்தியை அவர் பார்த்ததே இல்லை. அங் கிருந்த சேரில் அமர்ந்து விட்டார்.

''இப்போ பண்ணினா பிரச்சனையாகும் சக்தி! அமைச்சர் பதவி கூட பறிபோயிடும்.''

''யாருக்கும் இப்போதைக்குத் தெரியாதுப்பா. தெரிய விட வேண்டாம். எனக்கு அமைச்சர் பதவி முக்கிய மில்லை. இருந்தாலும் அது உங்க கனவுன்னு எனக்குத் தெரியும். உங்களுக்காக அது பறிபோகாம நான் பார்த்துக்கறேன் பா.''

''என் அரசியல் வாழ்க்கைக்கு எந்தப் பிரச்சனையும் வராம நான் பார்த்துக்கறேன் பா'' என்று வாக்கு கொடுத் தாள்.

''எங்ககிட்ட பேசற சரி. கார்த்திக் ஒத்துக்க மாட்டான்'' என்றான் தெய்வானை.

''அவன் எப்படி ஒத்துக்காம போறான்னு நான் பார்க் கிறேன்'' என்றாள் கோபமாக.

''சக்தி! பொறுமையா செய்யலாம் மா!'' என்றார் தெய்வானை.

''முடியாது!'' என்று உள்ளே போனாள்.

வீரமணி கவலையாக மனைவியைப் பார்க்க, ''நம்ம ளால ஒண்ணும் பண்ண முடியாது, கவலைப்பட்டு உடம்பைக் கெடுத்துக்காதீங்க'' என்று வீரமணியைச் சமாதானப்படுத்த ஆரம்பித்தார் தெய்வானை.

காவலர்களை விட்டு சற்று முன்னே வந்திருந்த செல்வம் எல்லாவற்றையும் பிரமிப்போடு பார்த்துக் கொண்டிருந்தான். சக்தியின் பிடிவாதம். முடிவு. ''ஐயோ இந்த பாஸ் என்ன செய்யப் போறாரோ தெரியலையே?'' என்று அவனின் மனமும் பதைத்தது.

சக்தி திரும்ப ரூமினுள் சென்றபோது, கார்த்திக் அவனின் அம்மாவின் அருகில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தான்.

இவர்கள் ஆளுக்கொரு பக்கம் நின்று கொண்டிருந் தனர்.

சக்தியின் முகத்தில் இருந்த தீவிர பாவனையைப் பார்த்த பிரபு, மறுபடியும் இருவரும் சண்டை போட்டுக் கொண்டாலும் போட்டுக் கொள்ளலாம் என்று அனு மானித்து, மற்ற மூவரையும் வெளியே அழைத்துக் கொண்டு சென்றான்.

சக்தி, கார்த்திக் வாசுகியிடம் பேசும்வரை அமைதியாக இருந்தாள்.

பிறகு கார்த்திக்கைப் பார்த்து கை நீட்டினாள். அவள் கையில் மஞ்சள் கயிற்றில் கோர்த்த தாலி இருக்க,

''இதைக் கட்டிட்டுப் போனா நீ திரும்ப வரும்போது நான் இருப்பேன். இல்லைனா அடுத்த டைம் உனக்கு பரோல் கிடைச்சு நீ வர்றதுக்காக எங்கப்பா வெயிட் பண்ணுவாரா இல்லை என்னை அடக்கம் பண்ணிடு வாரா என்னால சொல்ல முடியாது!'' என்றாள்.

அவளின் வார்த்தைகளைக் கேட்ட கார்த்திக்கின் கண்கள் ரத்தமெனச் சிவக்க, அவனே சக்தியைக் கொன்று புதைத்து விடும் பார்வை பார்த்தான்.

''இதைக் கட்டிட்டா நீ உயிரோட இருப்பியா?''

''ம்கூம்! நீ இல்லாம வாழ கத்துக்குவேன்! நீ இல்லை னாலும் என் வாழ்க்கையை நான் வாழணும்னு நீதான சொன்ன?'' என்றாள்.

''என்ன ப்ளாக் மெயில் பண்றியா... அடக்கம்... இல்லாம வாழ கத்துக்குவேன் அது இதுன்னு சொல்லி, எதுக்கு அப்படி? நானே கொன்னுடறேன் உன்னை!'' என்று கோபமாக அருகில் வர,

''டேய்! கார்த்திக்'' என்று வாசுகிகூட கத்தினார்.

ஆனால் சக்தி சற்றும் அசையவில்லை. நீட்டிய கையையும் மடக்கவில்லை. ''ஓகே! அஸ் யு விஷ்'' என்றாள் எப்போதும் அவள் சொல்லும் வார்த்தையாக.

கோபம் இவளிடம் வேலைக்காகாது என்றுணர்ந் தவன், பொறுமையாகப் பேச ஆரம்பித்தான்.

''பாரு சக்தி, இத்தனை நாள் அப்பா யாரு அம்மா யாருன்னு கூடச் சொல்லாம அடையாளத்தை மறைச்சு வாழ்ந்துட்டேன். ஆனா அப்படி மனைவியைக் கூட

அடையாளம் காட்ட முடியாம, என்னால ஒரு வாழ்க்கை வாழ முடியாது.''

''இப்போதைக்கு நம்மளால கல்யாணம் பண்ணிக்க முடியாது. என்னைப் பார்க்கவே நீ எப்படி ஒளிஞ்சு வந்திருக்க. வெளில தெரிஞ்சா பத்திரிகைல எப்படி எழுதுவாங்கன்னுகூடச் சொல்ல முடியாது.''

''இப்போதைக்கு வெளில தெரியாம பார்த்துக்கலாம். அப்புறம் பிரச்சனை கொஞ்சம் ஓய்ஞ்சதுக்கு அப்புறம் என்ன பண்றதுன்னு யோசிக்கலாம்.''

''உன்னோட அரசியல் வாழ்க்கையே கேள்விக் குறியாகிடும்.''

''என் வாழ்க்கையே இங்க கேள்விக் குறி? அப்புறம் எங்கயிருந்து வந்தது அரசியல் வாழ்க்கை?''

''பிடிவாதம் பிடிக்காத சக்தி.''

''உன் பிரச்சனை இப்போதைக்கு ஓயாது கார்த்திக். அதுவரைக்கும் என்ன ஏதுன்னு யோசிச்சு, நீ எப்போ எது பேசுவேன்னு தெரியாம, ஒரு வேளை திரும்ப விட்டுட்டு போயிடுவியா. இப்படியெல்லாம் யோசிச்சு எனக்கு பைத்தியம் பிடிக்கற மாதிரி இருக்கு.''

''எதுன்னாலும் நான் பார்த்துக்கறேன்'' என்றாள் நீட்டிய கையை நீட்டியபடியே. பார்வையைச் சற்றும் விலக்காமல், அவள் பார்வை உரைத்த மொழிகள் பல.

எப்பொழுது உன்னை சேர்வேனடா

நான் தவிப்பது தெரியவில்லையா

எதிர்பாரா நிகழ்வுகளில்

ஏங்கித் தவிக்கும் என் மனதின் ஓசைகள்

ஓங்கி உரைத்திடும் தனிமையில்
உறக்கமே இல்லாத பல இரவுகளிலும்
இரக்கமே இல்லாத உன் பெயரையே
ஓயாமல் உச்சரிப்பதால்
என் நினைவும் எனக்கு பகையாகி விடுகிறதே

ஊழிக் காற்றினில் சிக்கிய
கலங்கள் கரை காண்பதில்லை!
உன் அண்மை இல்லாமல்
வாழ்வின் சுவையை உணர்ந்ததில்லை
வாழ்வின் தேவையை அறிந்ததில்லை

உன் நினைவினில் சிக்கி
உன் உறவினை நினைந்து
உன் காதலை சுவைத்தபின்
மறந்திடல் தகுமோ?
கலைந்த புன்னகையோடு
கலையாத உன் நினைவோடு
கேள்வி கேட்டு நின்ற இடங்களில்
பதிலும் கேள்வி எழுப்பிட
கேள்வியற்ற பதிலாய் நின்றேன்
ஆனாலும் மறப்பேனா உன்னை?

- ஹதீஜா

"நீ என்ன சொன்னாலும் என் முடிவு மாறாது" என்பது போல அவள் நிற்க, வேறு வழியில்லாமல் அவள் கைகளில் இருந்ததை எடுத்தவன்,

தெய்வானையையும் வீரமணியும் அழைத்தான். "என்ன சொன்னாலும் கேட்க மாட்டேங்கறாங்க" என்றான் பரிதாபமாக. "என்ன செய்யட்டும்" என்று அவர்களிடம் சம்மதம் வேண்டினான்.

அவர்களிடம் சம்மதம் வேண்டியவன், அவனின் அம்மாவையும் ஒரு பார்வை அவரின் சம்மதம் வேண்டிப் பார்த்தான்.

யாருக்கும், "சம்மதம்" என்ற வார்த்தையை சொல்வதைத் தவிர வேறு ஒன்றை சக்தி விட்டு வைக்கவேயில்லை.

தெய்வானை கலங்கிய கண்களை மறைத்தவாறு எல்லோரையும் உள்ளே அழைக்க,

காவலர்கள் நேரம் ஆகிறது, என்ன நடக்கிறது? ஏன் எதற்கு? எல்லோரும் உள்ளே போகிறார்கள் என்பது போல எழ,

"சார்! ரெண்டு சொன்னனா? மூணு சொன்னனா? எனக்கு சரியா ஞாபகமில்லை!" என்றான் செல்வம்.

'என்ன ரெண்டு மூணு?' என்பதுபோல அவர்கள் பார்க்க.

"அதான் சார், ரெண்டு லட்சமா? மூணு லட்சமா? நகையா? பணமா? இல்லை வேறே எப்படிக் குடுக்க?" என்று அவர்களை வாயடைக்க வைத்து உள்ளே சென்றான்.

அவர்களுக்குக் குழப்பம் வந்துவிட்டது, "ஆளுக்கு ரெண்டு லட்சமா? இல்லை மொத்தமா மூணு லட்சம் சொல்றாங்களா" என்று.

நாள் பார்க்காமல் நட்சத்திரம் பார்க்காமல், நல்ல நேரம் பார்க்காமல், யாருக்கும் தெரிந்து விடக் கூடாதே என்ற எண்ணத்தோடு,

சற்றும் பயமில்லாத இரு மனங்களின் சங்கமம். திருமணம் என்ற அங்கீகாரத்தை கொடுத்துக் கொண்டது.

சக்தியின் மனதிலும் உற்சாகமோ சந்தோஷமோ எல்லாம் இல்லை. தன்னுடைய திருமணத்தை எதிர் பார்த்துக் காத்திருந்த தன் பெற்றோரின் ஆசைகளை யெல்லாம் அவள் நிராசையாக்கியது மட்டுமல்ல. இந்த திருமணத்தை யாரிடமும் சொல்ல முடியாத ஒரு நிலையில் வைத்திருக்கிறோம் என்பது அவளுக்கு மிகுந்த வேதனையே.

இருந்தாலும் அவளுடைய போராட்டம் முடிவுக்கு வந்து விட்டது போல நிம்மதி.

கார்த்திக்கின் கைகள் அவளின் கழுத்தில் தாலி கட்ட,

காண்டீனில் இருந்து சிறிது அரிசியை விரைந்து எடுத்து வந்த செல்வம் அதில் மஞ்சளை பிரட்டி எல்லோர் கையிலும் கொடுத்தான்.

எல்லோரும் அட்சதை தூவ மூன்று முடிச்சை நிதானமாக அவளின் கழுத்தில் கட்டினான்.

சக்தியின் மனதின் போராட்டம் முடிய, கார்த்திக்கின் போராட்டம் ஆரம்பித்தது. இதுவரை அவன் தனி ஆள்,

அவனின் செய்கைகள் அவனை மட்டுமே தார்மீக ரீதியாக பாதிக்கும்.

இனி அப்படி அல்லவே.

அதன் பிறகு கார்த்திக்கும் சக்தியும் எதுவும் பேசிக் கொள்ளவேயில்லை.

நடந்து முடிந்ததில் கார்த்திக்கிற்கு சற்றும் விருப்ப மில்லை. அவன் வாழ்க்கை எப்படியோ. ஆனால் சக்தி, அவளின் திருமணம் இப்படியா நடக்க வேண்டும். அவன் மனமே அவனைக் கொன்றது.

உடனே கிளம்பியும் விட்டான்.

சக்திக்கு கண்களில் நீர் தளும்பியது.

பார்த்திருந்த கார்த்திக் மனம் கனத்துத் திரும்பியும் பாராமல் சென்றான்.

**விடை பெறுவது ஒன்றும்**

**அத்தனை சுலபமில்லை என் சகியே**

**உன் விழிகள் சுமந்து நிற்கும்**

**கண்ணீரைக் கண்ட பின்!**

**எத்தனை, எத்தனை**

**வார்த்தைகள் பேசிய**

**உன் உதடுகள்**

**ஊமையாய் நான் பேசும்**

**பலநூறு வார்த்தைகட்கும்**

**பதிலேதும் சொல்லாமல்**

**உன் மவுனமே சாட்டையாய்**

இதயமெங்கும் நுழைந்து
என்னை முழுவதுமாய்
உருக்குலைத்து, ஓங்கி
ஒலிக்கிறதே
கொஞ்சலாய்.. கெஞ்சலாய்..
கதறலாய்.. மழலையாய்..
கேள்வியாய்.. பதில்களாய்..

என் வாழ்க்கை பிறர் வாழ நான் பிறந்தேனோ
பாசக்கயிறு கழுத்தை நெருக்குகிறது
காலம் கனிந்து போகுமோ - இல்லை
கண்ணீரில் கழிந்து போகுமோ
சஞ்சலத்தில் மனமே ரணமாய்

சஹியே என் சகலமும் ஆனவளே
உனக்கான என் தேடலையும் தொலைத்து
உயிருள்ள ஜடமாய் நான்!

- ஹதீஜா



43

தன்செய லெண்ணித் தவிப்பது தீர்ந்திங்கு
நின்செயல் செய்து நிறைவு பெறும்வண்ணம்
நின்னைச் சரணடைந்தேன்

- பாரதி

வீட்டிற்கு வந்ததும் சக்தி அவளின் ரூமிற்குள் புகுந்து கொண்டாள். அவளுக்கு எதையோ சாதித்து விட்ட உணர்வு.

கீழே இருந்தால் தெய்வானையும் வீரமணியும் ஏதாவது கேட்டால் சங்கடமாக இருக்கும் என்று ரூமிற்குள் புகுந்து கொண்டாள்.

வீரமணிக்கு மிகுந்த வருத்தம். ''இப்படி தன் மகள் பிடிவாதம் பிடித்து மணக்கும் அளவுக்கு இருந்திருக் கிறாள். தான் அதைக் கூடத் தெரிந்து ரொள்ளாது இருந்திருக்கோம்.''

எப்போதும் சக்தி அதிகம் கார்த்திக்கை தேடுவாள் என்பது அவருக்குத் தெரிந்தது தான். திருமணத்திற்குக் கூட ஒரு முறை கேட்டிருக்கிறார்கள் தானே சக்தியிடம்.

அவள்தானே எனக்கு வேண்டாம் என்று மறுத்து விட்டாள். அதனால் திரும்ப அவர் அந்த மாதிரி யோசிக் கவேயில்லை. பிறகு கார்த்திக்குடன் பிரச்சனைகள், சென்றான், வந்தான்.

இவர் சக்தியின் அரசியல் அதில் வெற்றி இப்படி சிந்தித்து இருந்ததால் தெரியவில்லை. இல்லை எப் போதுமே கார்த்திக் சக்தி சிரித்துப் பேசியதோ, அடுத்த வரின் கவனத்தைக் கவரும் எந்தச் செய்கையும் இருந்ததே இல்லையே?

அதனால் தான் கவனிக்கவில்லையோ?

தெய்வானையிடம் கோபித்தார். ''இவ்வளவு தீவிரமா இருந்திருக்கா நீ எப்படி என் கிட்ட சொல்லாம விட் டுட்ட.''

''முதல்ல கார்த்திக்கை கல்யாணம் பண்ண கேட்டப்போ வேண்டாம்னா.. அப்புறம் இவ வேணும்னு சொன்னப்ப, கார்த்திக் போயிட்டான். திரும்ப சண்டை போட்டுக்கிட்டாங்க. பேசிக்கிட்டாங்க. அப்புறம் எகல்ஷன்ல நின்னா.''

''சரி, கல்யாணம் பேச உங்ககிட்ட சொல்லலாம்னு நான் நினைச்சபோ கார்த்திக் அரெஸ்ட் ஆகிட்டான்.''

''நீங்க அவனை பரோல்ல எடுக்க அலைஞ்சிட்டு இருந்தப்போ. பைத்தியம் மாதிரி அவன் பேரைச் சொல்லிட்டு உளர்றா. அடுத்த நாளே தெளிவாயிட்டா. இப்படி பண்ணுவான்னு நானே எதிர்பார்க்கலை'' என்றார், வீரமணியிடம் இரந்து மறைத்து விட்ட குற்ற உணர்ச்சியோடு.

''யோசிச்சு பாரு தெய்வா? என்ன பண்ணி வெச்சிருக்கா இந்த பொண்ணு. ரகசியக் கல்யாணன்ற மாதிரி வெளில தெரிஞ்சா எவ்வளவு கேவலம். வெளிலயும் சொல்ல முடியாது. இவ்வளவு சின்ன வயசுல மத்திய அமைச்சர் ஆகற வாய்ப்பு எத்தனை பேருக்குக் கிடைக்கும்.''

''எவ்வளவு பெரிய பதவி?

''அவ தான் நான் பார்த்துக்கறேன். பதவிக்கு எந்தப் பிரச்சனையும் வராதுன்னு சொல்லியிருக்கால்ல. பார்ப்போம் விடுங்க.''

என்னதான் தெய்வானை சொன்னாலும் வீரமணியால் சக்தியின் செய்கையை ஒப்புக்கொள்ள முடியவில்லை. இதுவரை அவர் எதற்கும் அதட்டிப் பேசியிராத செல்ல

மகள். இப்போது போய் அவளிடம் என்ன அதட்டி உருட்டி மிரட்டவா முடியும்.

சக்தி அடுத்த நாளே டெல்லி கிளம்பினாள். கூட வாசுகியை அழைத்துக் கொண்டு, யாரும் இதை எதிர்பார்க்கவில்லை.

அவளுடைய தோற்றம் எப்பொழுதும் போல இருந்தது. அவள் உடை வித்தியாசப்பட்டது. மஞ்சள் கயிறு வெளியே தெரியாமலிருக்க, க்ளோஸ் நெக் காலர் வைத்து சுரிதார் அணிந்திருந்தாள்.

பத்ரிநாத் மகளை அனுப்ப ஒப்புக் கொள்ளவே யில்லை. வைஷ்ணவி ஒரே அழுகை ஆர்ப்பாட்டம். "மா! நீ போகக்கூடாது" என்று.

சக்தி விடவேயில்லை. "நீங்க கார்த்திக்கை இதுவரை படுத்தினது எல்லாம் போதும். கொஞ்சம் உங்க வீட்ல இருந்து அவனுக்கு விடுதலை குடுங்க."

"அவங்கம்மா இங்க இருக்குற வரைக்கும் அவங்கப் பாவை பேசுவீங்க. மேல, மேல அவங்கப்பாவுக்காக அவன் ஏதாவது செய்யத் துணிஞ்சு சிக்கல்ல மாட்டிக்கு வான்."

"உங்க பக்கமிருந்து நீங்க பேசறது நியாயமா இருக் கலாம். ஆனா நினைச்ச மாதிரி வாழ்க்கை அமைய லைன்னா அடுத்தவங்களைத் திட்டிகிட்டே இருக்கக் கூடாது. நடக்கறதுக்கெல்லாம் மத்தவங்களை காரணம் காட்டக் கூடாது."

"உங்களுக்கு புத்தி சொல்ற வயசோ? அனுபவமோ? எனக்குக் கிடையாது. எனக்கு தேவையெல்லாம்

கார்த்திக்கோட நிம்மதி மட்டும்தான். நீங்க அவங்கப் பாவை பத்தி ஒரு வார்த்தை கூட பேசக்கூடாது.''

''இறந்து போயிட்டார் அவர். இத்தனை வருஷமா ஒவ்வொரு விஷயத்துக்கும் அவரைப் பிடிச்சு இழுப் பீங்களா நீங்க. இப்போ வாசுகிம்மாவோட தற்கொலை முயற்சிக்குக் கூட நீங்க தான் காரணம்.''

''அப்படியா உங்களையும் பிரபுவையும் பிரச்சினை யில கார்த்திக் மாட்ட விட்டுடுவான். அவன் உயிரே போனாலும் எல்லாத்தையும் தூக்கி அவன் தலைமேல தான் போட்டுக்குவான். தாத்தா பிரபுன்னு கிடையாது. யாரையுமே அவன் மாட்ட விடமாட்டான்.''

''அவனைப் புரிஞ்சிக்க முடிஞ்சா புரிஞ்சிக்கங்க! உங்க பொண்ணா இவங்க இவ்வளவு நாள் இருந்தாப் போதும். கார்த்திக்கோட அம்மாவா இருக்கட்டும். நான் கூட் டிட்டுப் போறேன்'' என்று சொல்லி பிடிவாதமாக அவரை அழைத்துக் கொண்டாள்.

''உன்னைப் பார்த்துக்கவே ஒரு ஆள் வேணும்! நீ அவங்களைப் பார்த்துக்குவியா. கார்த்திக் கூட இருந்தா அது வேற பேச்சு. அவங்க வேற டிப்ரஷன்ல இருக்காங்க. அங்க வந்து மறுபடியும் ஏதாவது ட்ரை பண்ணிட்டாங் கன்னா.. வேண்டாம் சக்தி!'' என்று தெய்வானை கூட ஆட்சேபித்தார்.

''அம்மா! எதுவும் சொல்லாத! ப்ளீஸ்... ப்ளீஸ். ஐ வில் மேனேஜ்!'' என்று அவரை கொஞ்சிக் கெஞ்சி ஒரு வழியாக சம்மதிக்க வைத்து,

விமானத்தில் ஏறியபோது, ''ஷ், ஹப்பாடா'' என்று ஆகிவிட்டது.

அவளும் வாசுகியும் மட்டுமே சென்றனர். செல்வம் காலேஜ் வேலை இருக்கிறது ஒரு வாரத்தில் வருகிறேன் என்று இருந்து கொண்டான்.

அவர்கள் தனியாகச் செல்கிறார்கள் என்று வீர மணியும் தெய்வானையும் கிளம்ப, "அம்மா வேண்டாம்மா. வாசுகிம்மா அன்னீசியா பீல் பண்ணலாம், முதல்ல என்கூட கொஞ்ச நாள் பழகட்டும்" என்று சொல்ல,

தெய்வானைக்கு மிகுந்த கோபம் தான். இருந்தாலும் சக்தியின் வார்த்தையை மதித்து அவர் கூடச் செல்ல வில்லை. அப்போதும், "தோ பாரு! அவங்களை அம்மான்னு கூப்பிட ரெண்டு பசங்க இருக்காங்க. என் பொண்ணு என்னை மட்டும் தான் அம்மான்னு கூப் பிடணும், அவங்களை அத்தைன்னு கூப்பிடு" என்று மிரட்டி அனுப்பி வைத்தார்.

செல்வம் செல்லாததற்குக் காரணம், கார்த்திக்கும் செல்வமும் தான் மெடிக்கல் காலேஜ் அப்ரூவளிற்காக நூறு சீ பேசி ஏற்கனவே அட்வான்சாக ஐம்பது சீ கொடுத்து இருந்தனவே. அந்த வேலையைக் கொஞ்சம் பார்க்க வேண்டி இருந்தது. எப்போது அவர்கள் இன்ஸ்பெக்ஷன் வருவார்கள் என்பது போல. நிறைய வேலைகள் அணிவகுத்து இருந்தன.

சக்திக்குத் தெரியாமல் வேறு செய்ய வேண்டுமே அந்த பதட்டம் வேறு செல்வத்திற்கு.

சக்திக்கு அப்போதைக்கு வாசுகியை நன்றாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். கொஞ்சம் கார்த்திக்கின்

மனவேதனையைக் குறைக்க வேண்டும் என்பது மட்டுமே எண்ணமாக இருந்தது.

இதில் கார்த்திக்கின் நினைவுகள் கூட அதிகமில்லை. ஆனால் அவளுக்குத் தெரியவில்லை. தான் திருமணம் என்ற பந்தத்தின் மூலம் கார்த்திக்கின் மனவேதனையை அதிகப்படுத்தி விட்டோம் என்று.

சக்தி வாசுகியை எந்தக் குறையுமில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அமைச்சகத்தில் போய் வேலை களைச் சரியாக செய்ய வேண்டும். கங்காதரனை வேறு பதவி மாற்றம் செய்து விட்டோம். அவனுக்கு தான் தான் காரணம் என்று தெரிந்திருக்குமா. அவன் என்ன ஏது என்று தன்னிடம் கேள்வி கேட்பானா, இப்படிப்பட்ட சிந்தனையிலேயே இருந்தாள்.

புதிய சூழ்நிலையைப் பழகத் தயாராகிக் கொண் டிருந்தாள்.

ஆனால் கார்த்திக்கின் நினைவு முழுவதும் இப்போது சக்தி! சக்தி! சக்தியே! இத்தனை நாட்கள் எப்படியோ. இனி சக்தியைப் பிரிந்திருப்பது என்பது ஆகாத காரியம் என்று மனதிற்குள் ஓடிக் கொண்டே இருந்தது.

அவளைப் பார்க்க வேண்டும் போல இருந்தது. ஒரு நாளைக் கடப்பதற்குள்ளாகவே சிரமப்பட்டு விட்டான்.

யாரவள் என்ற தெரியாத அந்த பதின் வயதில் ஒரு நிமிஷமே பார்த்த அந்த காரிகைக்காக, ரத்தம் வரும் அளவிற்கு அடிவாங்கி ரோடில் அனாதையாக மயங்கிக் கிடந்தவன்.

யாரவள் என்று தெரியாமல் அவளுடன் பழகிய அந்த ஒரு வார ஹாஸ்பிடல் வாழ்க்கையை இன்று வரை பொக்கிஷமாக நினைவில் வைத்திருப்பவன்.

அவள் யாரென்று தெரிந்த பொழுது விலகுவது ஒன்றே குறிக்கோளாக கொண்டிருந்தவன்.

அவள் நீ வேண்டும் என்று சொன்னபோதும் வேண்டாம் என்று ஒதுங்கியவன்.

இப்போது அவளாக திருமணத்திற்குப் பிடிவாதம் பிடித்த போதும் முழு மூச்சாக அதை எதிர்த்தவன்,

அவளின் பிடிவாதத்தின் முன் வேண்டா வெறுப்பாக தோற்றுப் போனவன்.

இப்போது அவளிடம் விரும்பியே தோற்றுப் போக விரும்பினான்.

உடலின் ஒவ்வொரு செல்லும் இப்போது சக்திக்காக ஏங்கியது.

அடுத்த நாள் இரவு எப்பொழுது வரும் அவளுடன் பேச வேண்டி காத்திருந்தான்.

சக்தி அன்று மாலை தான் டெல்லி வந்து சேர்ந் திருந்தாள். அவளுக்கான பங்களாவிற்கு அன்று தான் வந்தாள்.

அதைச் சுற்றிப் பார்த்து, ஆட்கள் யார் இருக்கிறார்கள் என்று பார்த்தாள். பந்தோபஸ்திற்கு இரண்டு காவலர்கள், வீட்டு வேலைக்கு ஒரு ஆள் சமையலுக்கு ஒரு ஆள் என்று இருந்தனர். என்ன எல்லோரும் ஆண்கள், மத்திய வயதில் இருந்தனர்.

சீக்கிரம் யாராவது பெண்ணை வேலைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

இல்லையென்றால் தான் வெளியே சென்று விட்டால் வாசுகிக்குப் பொழுது போகாது என்று நினைத்தாள்.

வாசுகிக்கும் அவளிற்கும் அவளே தான் ரூம் தயார் செய்தாள். இரண்டு பேரின் ரூமிற்குள்ளும் வேலை யாட்கள் வர வேண்டியது இல்லை என்பதுதான் அவளின் முதல் சொல்லாக இருந்தது.

தனியாகச் சமாளிக்க மனம் சற்று பயந்தது. முதலில் என்றால் செல்வம் கூட இருந்தான். இப்போது அவள் மட்டும், எல்லாம் அவளாகச் செய்ய வேண்டும். செல்வத்தை அழைத்து வந்திருக்க வேண்டும். காலேஜ் வேலையை அவன் இருந்து பார்க்க வேண்டும் என்று என்ன? வேறு யாராவது பார்க்க மாட்டார்களா.

அவளுமே கார்த்திக்கின் அழைப்பை எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

போனைக் கையில் வைத்து அமர்ந்திருந்தவளை அதிகம் காத்திருக்க வைக்காமல், அன்று பதினொரு மணிக்கே தொலைபேசி அடித்தது.

''சக்தி'' என்ற கார்த்திக்கின் குரல் கேட்டதுமே, கார்த்திக்கை பேச விடாது சக்தி தான் வாசுகியை அழைத்துக் கொண்டு டெல்லி வந்து விட்டதைச் சொல்ல,

''என்ன எங்கம்மாவைக் கூட கூட்டி வந்துட்டியா'' என்றான் ஒரு மாதிரி குரலில்.

''ஏன் கார்த்திக்? நான் நல்லா பார்த்துக்க மாட்டேன்னு நினைக்கிறியா.''

''அம்மா இருக்க மாட்டாங்க சக்தி'' என்றான்.

''ஏன்?''

''அவங்க என்னை விடவும் வைஷ்ணவி, பிரபு சுமித்ராவோட ரொம்ப க்ளோஸ். அதுவும் வைஷ்ணவி ரொம்ப செல்லம். அப்பாவும் கூட இல்லை. நானும் கேஜில இருந்தே ஹாஸ்டல், அப்புறம் வீட்டை விட்டு வந்துட்டேன். அவங்க வைஷ்ணவியோட ரொம்ப அட்டாச்மென்ட். விட்டுட்டு இருக்க மாட்டாங்க.''

''ஒரு ரெண்டு நாள் இருப்பாங்க. அப்புறம் போறேன்னு சொல்லுவாங்க பாரேன்'' என்றான்.

''ஒஹ்! நான் உங்க தாத்தா கிட்ட கொஞ்சம் பேசிக் கூப்பிட்டுகிட்ட வந்தேன்.''

''அதுக்கெல்லாம் பீஃல் பண்ணாத. அதெல்லாம் செவிடன் காதுல ஊதுன சங்கு. அதுக்கெல்லாம் எங்க தாத்தா கொஞ்சம் கூட அசர மாட்டார். அவர் செய்ய றதைத் தான் செய்வார்.''

''என்ன கார்த்திக் இப்படிச் சொல்லிட்ட? நான் என்னவோ வீர தீர பராக்கிரமம் எல்லாம் செஞ்சு உங்கம்மாவைக் காப்பாத்திக் கூட்டிட்டு வந்திருக்கேன்னு நினைச்சா.. நீ இப்படி பொசுக்குன்னு சொல்ற,'' என்று சிணுங்கினாள்.

கார்த்திக் சிரித்தான்.

''எங்க வீடு அப்படித்தான். எங்க அம்மாவை நம்பி நீ இறங்கியிருக்க வேண்டாம்! என்கிட்டே ஒரு வார்த்தை கேட்டிருக்கலாம்.''

''நான் உனக்கு சர்ப்ரைஸ் குடுக்கலாம்னு நினைச் சேன்.''

''சரி விடு! போறேன்னு சொன்னா அனுப்பிடு. வைஷ்ணவியை மிஸ் பண்ணுவாங்க.''

''நான் எங்கம்மாவை வேற ரொம்ப சமாதானப் படுத்திக் கூட்டிட்டு வந்தேன். அப்போவும் அம்மா சொன்னாங்க, கார்த்திக் இல்லாத சமயத்துல வேண் டாம்னு நான் கேட்கலை.''

''யார்? யார் இருக்கீங்க அங்க?''

''நானும் வாசுகிம்மாவும் மட்டும் தான்!''

''என்ன சக்தி இப்படி தனியாவா வருவ'' என்று கோபப்பட்டான்.

''அம்மாவும் அப்பாவும் வர்றேன்னு தான் சொன் னாங்க. நான் தான் அங்க காலேஜ்ல பில்டிங் வேலை நடந்துட்டு இருக்குன்னு விட்டுட்டு வந்தேன்.''

''ப்ச்! இப்படி யாராவது செய்வாங்களா. செல்வம் என்ன செய்யறான்.''

''மெடிக்கல் காலேஜ் அப்ரூவலுக்கு இந்த வாரம் இன்ஸ்பெக்ஷன் வர்றேன்னு சொன்னாங்க. முடிஞ்சதும் வர்றேன்னு சொன்னான்.''

கார்த்திக்கிற்கு இப்போது அவளைப் பார்க்க வேண் டும் என்ற ஆசையெல்லாம் போய் தனியாக இருக்கிறாள் என்ற கலை வந்துவிட்டது.

அந்தக் கவலையில் இன்னும் ஐம்பது சீ கொடுக்க வேண்டும் என்பது பின்னுக்குப் போய்விட்டது.

"இனிமே என்கிட்டே கேட்டுட்டு எதுவும் செய் சக்தி, இப்படி தனியா போகலைன்னா என்ன? ஐயா ப்ரீ ஆன துக்கு அப்புறம் இல்லை செல்வம் வந்ததுக்கு அப்புறம் நீ போயிருக்கலாம்."

"அச்சோ! என்ன கார்த்திக் நீ! நான் என்ன சின்ன பொண்ணா? யு நோ நான் அமைச்சர். என்னை சுத்தி பாதுகாப்புக்கு எத்தனை பேர் இருக்காங்க. ஐ ஹேவ் எஸ்கார்ட்ஸ். ஒரு நாலஞ்சு நாள் தானே செல்வம் வந் துடுவான்."

"என்னதான் பாதுகாப்புக்கு ஆள் இருந்தாலும் புது இடம்."

"நிறைய எனக்குத் தெரிஞ்சவங்க கட்சியில இருக்காங்கப்பா."

"அவங்களை எல்லாம் நம்ப முடியாது சரியா... யாரை நம்பி எந்த வேலையும் செய்யாத. அப்புறம் பெர்சனலா யார்கிட்டயும் பேசாத."

"போ! நீ என்னை இன்னும் சின்னப் பொண்ணு மாதிரியே ட்ரீட் பண்ற, நான் எல்லாம் பார்த்துக்குவேன்" என்று பெரிய மனுஷி போலச் சொல்லி போனை வைத்தாள்.

*சக்தி*யின் கவலையில் அவளைக் காண வேண்டும் என்று இதயம் துடிப்பதைச் சொல்ல அவனுக்கு சந் தர்ப்பமே இல்லை.

இவள் எதுவும் விளையாட்டுப் பெண்ணாக செய்து விடக் கூடாதே.

மீண்டும் அவளின் நினைவுகளுடன் அடுத்த நாளின் இரவை எதிர்பார்த்துக் காத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை கார்த்திக்கிற்கு.

சக்தி அடுத்த நாள் அமைச்சகத்திற்குச் சென்றாள். அங்கே கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல தான் இருந்தது அவளுக்கு.

சில கோப்புகள் அவளின் பார்வைக்கு வந்தபோது அவள் சற்றும் கூச்சமே படவில்லை. கங்காதரனை அழைத்து என்ன ஏதென்று கேட்டு, எப்படிப் பார்க்க வேண்டும் என்று கேட்டாள்.

சக்தி கேட்ட விதம் கங்காதரனுக்கு அவள் மேல் ஒரு நல்ல அபிப்பிராயத்தைக் கொடுத்தது. அமைச்சர் என்ற பந்தா இல்லாமல், ''சர்'' என்று மரியாதையுடன் அழைத்து ஒரு கற்றுக் கொள்ளும் மாணவியின் முறை யோடு தான் கேட்டாள்.

மிகுந்த சிரத்தையோடு புரிய வைத்தான் கங்காதரன். யார் என்ன சொன்னாலும் கேட்டாலும், கங்காதரனிடம் ஒரு வார்த்தை கேட்டே செய்தாள்.

கங்காதரன் கூட கேட்டே விட்டான். ''என்ன மேடம்? என்னை இப்படி நம்பறீங்க, நான் ஏதாவது தப்பா சொல்லிக் குடுத்துட்டேனா.''

''நீங்க செய்ய மாட்டீங்க. எல்லோரையும் நான் நம்பறதில்லை. ஆனா உங்களை நம்பறதுல எனக்கு பயமில்லை'' என்று சிரித்தாள்.

அவள் சிரித்துப் பேசவும், கங்காதரன் நேரடியாகக் கேட்டான். "மேடம்! என்னோட இந்த திடீர் ட்ரான்ஸ்பர், என்ன காரணம்?"

சக்தி சற்றும் யோசிக்கவில்லை. "உங்களை மாதிரி ஒரு நேர்மையான அதிகாரி என்கூட இருந்தா என்னால சிறப்பா செயல்பட முடியும்ன்னு நினைச்சேன்."

"அதுதான் காரணமா."

"ம், வேற என்னன்னு நீங்க நினைக்கறீங்க" என்று சக்தி அவனிடமே விஷயத்தை வாங்க முற்பட, இப்போது கங்காதரனுக்கு சிரிப்பு வந்தது.

"நானும் கிருஷ்ணகிரி கலெக்டர். நீங்க அதோட எம் பீ! கொஞ்ச நாள் கிரானைட் பிசினெஸ்ல இருந்திருக் கீங்க. நான் க்ரானைட்ல ஊழல்ன்னு ரிப்போர்ட் பண்ணி யிருக்கேன்."

"ம்கூம்! நான் க்ரானைட்ல இல்லை, அப்பா" என்றாள்.

"சரி உங்கப்பா! என்னோட ட்ரான்ஸ்பர்க்கும் இதுக்கும் சம்மந்தம் இருக்கா."

"இருக்கலாம் இல்லாமலும் இருக்கலாம். ஆனா உங்க மாதிரி ஒரு நேர்மையான அதிகாரி என்கூட இருக்கறதை நான் நிச்சயம் விரும்பறேன்" என்றாள்.

"அதுக்கு தான் அன்னைக்கு சாரி சொன்னீங்களா?"

ஒரு புன்னகை மட்டுமே பதில்.

அன்று இரவு கார்த்திக்கிடம் நடந்தது அனைத்தையும் ஒப்பித்தாள்.

''அம்மா! தாயே! கார்த்திக் தான் கடத்தினான்னு சொலலாம போனியே! உனக்கு ரொம்பப் புண்ணியம்'' என்றான்.

''அப்படியா நான் உன்னை மாட்ட விடுவேன்..'' என்று சிரித்தவள், ''அதை விடு! ஒரு முக்கியமான விஷயம் கேட்கணும்! உன்னைக் கேட்காம செல் வத்தைக் கேட்கக் கூடாதுன்னு தான் வெயிட் பண் றேன்.''

''என்ன?''

''நீ கேட்டேன்னு ஐம்பது சீ ஒரு பைனான்ஷியர்கிட்ட கேட்டிருக்கான். எங்க பாஸ் வந்ததுமே திரும்பக் குடுத்துடுவார்ன்னு உறுதி குடுத்திருக்கான். அவர் குடுக்கறதுக்கு முன்னாடி அப்பா கிட்ட ஒரு வார்த்தை கேட்டிருக்கார். அப்பா என்கிட்டே சொன்னாங்க. நீயா கேட்க சொன்ன...''

கார்த்திக் கேட்கச் சொல்லவில்லை. ஆனால் அனுமானித்தான் மெடிக்கல் காலேஜ் அப்ரூவலிற்காக கேட்டிருப்பான் என்று. ஏதாவது அவசரமாகக் கொடுக்க வேண்டியதிருக்கும். கார்த்திக்கிடம் பேச நேரம் இருந் திருக்காது என்று.

''இப்போ என்ன பணம் செல்வத்துக்குப் போய் சேர்ந் துச்சா இல்லையா.''

''அப்பா செல்வதுக்கிட்ட கேட்டிருக்காங்க. நீ தான் கேட்கச் சொன்னேன்னு அப்பாகிட்ட சொல்லியிருக் கான். அதை ஏன் வெளில கேட்கணும் நான் குடுக்க றேன்னு அப்பா சொல்லியிருக்காங்க. இல்லை பாஸ்

வெளில தான் வாங்கச் சொல்லியிருக்காங்கன்னு செல்வம் சொல்லியிருக்கான். எதுக்குன்னு கேட்டாலும் சொல்லை. அப்புறம் அப்பா குடுக்கச் சொல்லிட் டாங்க.''

''நீ தான் பணம் கேட்கச் சொன்னியா?''

''ம்! நான் தான் கேட்கச் சொன்னேன்.''

''எதுக்கு அவ்வளவு பணம்? என்கிட்டே கேட்காம எதுக்கு வெளில கேட்கச் சொன்ன...'' என்றாள் அதிகார மாக.

''நீ இப்போ கேட்டயில்லையா எதுக்குன்னு, அதுக்கு தான் உன்கிட்ட கேட்கலை.''

''ஏன்? எதுக்குன்னு நான் கேட்கக் கூடாதா, அப்படி எனக்குத் தெரியக்கூடாத விஷயம்.''

''எனக்கு யாருக்கும் கணக்கு சொல்லி பழக்கமில்லை சக்தி.''

''இது எப்படி கணக்குக் கேட்கறது ஆகும். நீ ஸ்பாட்ல இல்ல. உன் பேரச் சொல்லி இவ்வளவு பெரிய அமௌண்ட் செல்வம் கேட்கறான். எதுக்குன்னு கேட்கக் கூடாதா.''

''நீ என்ன செல்வத்தைச் சந்தேகப்படறியா.''

''நிச்சயமா இல்லை. நீ சொல்லாம அவன் செய்ய மாட்டான்னு தெரியும்.''

''நீ இப்படி வெளில வாங்க வேண்டிய அவசியம் என்ன, என்ன செஞ்சிட்டு இருக்க, எதுக்கு அவ்வளவு பணம். மறுபடியும் ஏதாவது செஞ்சு சிக்கலை இழுத்து விட்டுக்காத.''

''எனக்குத் தெரியும் சக்தி! என்ன பண்ணனும்? என்ன பண்ணக்கூடாதுன்னு?''

''தெரிஞ்சா அதை என்கிட்டே மறைக்க வேண்டிய அவசியம் என்ன. அவ்வளவு தைரியமானவனா இருந்தா உண்மையைச் சொல்லு'' என்று கார்த்திக்கை உசுப்ப,

''அது மெடிக்கல் காலேஜ் அப்ரூவல்க்கு'' என்று உண்மையைச் சொல்லிவிட்டான்.

''என்ன?'' என்றாள் அதிர்ச்சியாக. சக்தி இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை.

தான் நேர்மையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்று அவள் நினைத்துக் கொண்டிருக்க அவளுக்குத் தெரியாமல் இவ்வளவு வேலைகளா?

கரை காணாத கோபம் பொங்கியது.

''கார்த்திக்!'' என்று கோபமாகக் கத்தினாள்.

''உன்னை யாரு இந்த வேலையெல்லாம் செய்யச் சொன்னது. நான் அவுட் ஆஃப் தி வே போய் எந்த வேலையும் செய்ய மாட்டேன்னு உன்கிட்டச் சொல்லியிருக்கேன் தானே. என்னைக் கேட்காம உன்னை யாரு இதைச் செய்யச் சொன்னா.''

''உன் வேலையெல்லாம் இதுல காட்டாத,'' என்றாள். அந்த வார்த்தை கார்த்திக்கைக் காயப்படுத்த,

''என்ன வேலை என் வேலை,'' என்றான் நிதானமாக கார்த்திக்.

''அதான் இந்த லஞ்சம் கொடுத்து காரியத்தை நடத்திக்கறது, என்னோட இன்ஸ்டிட்யூஷன்ல அப்படி

நடக்கறதை நான் விரும்பலை. முன்ன எப்படியோ இனிமே நீ இப்படி இருக்கிறதை நான் விரும்பலை.''

''ஏன் இப்போ என்ன?''

''இப்போ என்னோட ஹஸ்பண்ட் கார்த்திக் நீ.''

''ஒஹ்! நான் தான் உன்னோட ஹஸ்பண்ட்டா. நீ என்னோட வைஃப் இல்லையா?''

''நான் அந்த மீனிங்கள சொல்லலை கார்த்திக். உன்னோட நல்லது கெட்டது எல்லாம் என்னையும் சேரும்.''

''என்னைக் கல்யாணம் பண்ணிக்கும்போது அது தெரியலையா?''

''அர்த்தமில்லாம பேசாத கார்த்திக். இதுவரைக்கும் எப்படியோ? இனிமே இந்த மாதிரி செய்யாதன்னா செய்யாத. அதை விட்டுட்டு நீ ஏன் இப்படிப் பேசற.''

''நான் இப்படி தான் சக்தி.''

''அப்போ எனக்கு, என்னோட வார்த்தைக்கு எந்த கன்ஷிடரேஷனும் இல்லையா.''

''என்னால அவ்வளவு ஈஸியா மாற முடியாது.''

''அப்போ நீ மாற மாட்ட.''

''இந்த கார்த்திக் தானே உனக்குப் பிடிச்சது. இப்போ நான் மாறணும்னு ஏன் சொல்ற.''

''எனக்கு நீ எப்படியிருந்தாலும் பிடிக்கும் கார்த்திக்! அதுக்குன்னு நீ மேல மேல தப்பு செய்வியா. நீ செஞ்ச காரியத்தால தான் என் மனசாட்சிக்கு விரோதமா அந்த கலெக்டரை இங்க ட்ரான்ஸ்பர் பண்ணினேன்.''

''உன்னை நான் பண்ணச் சொல்லலையே. என் விஷயம் எனக்கு பார்த்திருக்கத் தெரியும்.''

''ச்சே! ச்சே! உங்கிட்ட பேசறதே வேஸ்ட். எது எப்படியோ என் விஷயங்கள்ல இந்த மாதிரி வேலை யெல்லாம் செய்யாத. அது என் காலேஜ். நான் பார்த் துக்கறேன். உன்னோட நியாய அநியாயங்கள் உன் னோட, அதை என் வரைக்கும் கொண்டு வராத...''

கார்த்திக்கை இந்த வார்த்தை மிகவும் காயப்படுத் தியது.

அவனும் கோபமாக, ''நான் வந்தன்னா என்கூட எல்லாம் தான் வரும் சக்தி.''

''வரக் கூடாது! நீ மாறணும்.''

''நான் மாற முடியாது.''

''இன்னும் எல்லாமே உன் இஷ்டம்தானா, நீ மாறணும்.''

''கண்டிப்பா, மாற மாட்டேன்.''

''அப்போ வராத,'' என்று சொல்லி கோபத்தில் போனை தூக்கி எறிந்தாள்.



# 44

**கண்ணில் தெரியுதொரு தோற்றம் – அதில்**

**கண்ண னழகு முழுதில்லை**

**நண்ணு முகவடிவு காணில் - அந்த**

**நல்ல மலர்சிரிப்பைக் காணோம்**

- பாரதி

கிட்டத்தட்ட ஒரு வருடமாகிவிட்டது சக்தி கார்த்திக்கை பார்த்து.

அன்று சக்தி, ''வராதே'' என்று சொன்ன பிறகு கார்த்திக் தொடர்பு கொள்ளவேயில்லை.

கார்த்திக்கின் பதில்களால் சக்தி இறுகியிருந்தாள். அவளுக்கு அழுகை கூட வரவில்லை. இனி அவனிடம் இறங்கிப் போகக் கூடாது என்று முடிவு ஸ்திரமாக மனதிலும் மூளையிலும் உட்கார்ந்தது.

கார்த்திக் சொன்னது போல இரண்டே நாட்களில் வாசுகி வைஷ்ணவியைப் பார்க்க வேண்டும் போல இருக்கிறது என்று சொல்ல, சக்தி ஒன்றும் சொல்லவில்லை உடனேயே அவரை அனுப்பி வைத்துவிட்டாள்.

அவர் கிருஷ்ணகிரி திரும்பியதுமே, தெய்வானை மகளை தனியே விட இஷ்டமில்லாமல் சக்தியுடன் இருக்க டெல்லி சென்று விட்டார்.

வீரமணி டெல்லிக்கும் கிருஷ்ணகிரிக்கும் அலைந்து கொண்டிருந்தார்.

செல்வம் மெடிக்கல் காலேஜ் அப்ரூவல் வாங்கியிருந்தான்.

சக்தி அவனிடம் மிகவும் கோபப்பட்டாள். ''என்னுடைய வேலைங்க என் இஷ்டப்படி தான் நடக்கணும்.

இது என் காலேஜ். உங்களால அப்படி இருக்க முடியும்னா என்கூட இருங்க இல்லைன்னா. உங்க பாஸ் கூட கிளம்பிடுங்க. இனிமே நீங்க எனக்குத் தேவையில்லை'' என்று கட் அண்ட் ரைட்டாகச் சொன்னாள்.

''உங்க பாஸ் சொன்னான்னு ஏதாவது இங்க செஞ் சீங்க நடக்கறதே வேற.''

செல்வம், ''சாரி, கேட்டு நிற்க, அப்போதும் அவனை மன்னிக்கவெல்லாம் இல்லை.

''காலேஜ் வேலையை மட்டும் இனிமே பார்த்துக் கோங்க. என்கூட இருக்க வேண்டாம். அதுவும் காலேஜ் அட்மினிஸ்ட்ரேஷன் பக்காவா இருக்கணும். எனக்கு தெரியாம எதுவும் நடக்கக் கூடாது. டொனேஷன், லஞ்சம் இப்படி எதுவும் என்னோட காலேஜ்குள்ள வரக்கூடாது. வந்தது, தொலைச்சிருவேன் உங்களை.''

''உங்க பாஸ் எவ்வளவு குடுத்திருக்கான் இந்த அப்ரூவல் வாங்கறதுக்கு.''

செல்வம் தொகையைச் சொல்ல,

''அவன் வந்ததுமே சொல்லுங்க, முதல்ல அவன் கிட்ட இந்தப் பணத்தைத் திரும்பக் குடுக்கணும்.''

அவ்வளவு கோபமாக சக்தியைப் பார்த்திராத செல் வத்திற்கு அமைதியாக சக்தி சொல்வதைச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை.

அதனால் காலேஜ் பொறுப்பை முற்றிலுமாக செல்வம் எடுத்துக் கொண்டான்.

இரண்டு மாதங்கள் கார்த்திக் ஜெயிலில் இருந்த பிறகு, டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டில் பெயில் அப்ளை செய்து

அது ரிஜெக்ட்டாகி பின்பு ஹை கோர்ட்டில் பெயில் அப்ளை செய்து வெளியே வந்தான்.

ஓரளவு கிரானைட் ஊழல் விஷயம் அமுங்கி யிருந்தது.

வெளியே வந்ததுமே வீரமணி நேரே அவனை அவரின் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அங்கே சென்றவன் சக்தியை போனில் அழைத்துப் பேசினான்.

''சொல்லு கார்த்திக்...'' குரலில் ஏதோ ஒட்டாத தன்மை இருப்பதுபோல கார்த்திக்கிற்குத் தோன்றியது. அதனால் அவனுக்கு என்ன பேசுவது என்று தெரிய வில்லை.

''நான் பெயில்ல வந்துட்டேன் சக்தி,'' என்றான்.

சக்தி அமைதியாக இருக்க,

''எனக்கு உன்னைப் பார்க்கணும்.''

''எதுக்கு?''

''எதுக்குன்னா?''

''எதுக்குப் பார்க்கணும். நான் இப்படியே தான் இருப்பேன்னு முடிவா நீ இருக்கும்போது நாம பார்த்து என்ன செய்யப் போறோம். போன்ல சண்டை போட றதை நேர்ல சண்டை போடுவோம் அவ்வளவு தான் வித்தியாசம்.''

''ஒரு தடவை நான் சொல்றதைக் கேளேன். நாம நேர்ல பார்க்கலாம்.''

''வேண்டாம் கேட்க வேண்டாம். பார்க்க வேண்டாம். உன்னோட அநியாயங்களை நீ நியாயம் மாதிரியே

பேசுவ. உன்னைப் பார்த்தா கொஞ்சம் கூட சூடு சொரணையில்லாம நானும் உருகி நிப்பேன்.''

''அப்போ நாம பார்க்கணும்னு அவசியமில்லைங் கற...'' என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

''நாம பார்க்க அவசியமில்லாதபடி உன் செய்கைகள் இருக்கு கார்த்திக்.''

''அப்போ எதுக்கு அவ்வளவு பிடிவாதமா என்னைக் கல்யாணம் பண்ணிகிட்ட.''

''அது என் இஷ்டம் கார்த்திக். அதுக்காக நீ செய் யறதை எல்லாம் சரின்னு சொல்ல முடியாது.''

''சரி நம்ம பார்க்க வேண்டாம்'' என்று சொல்லி போனை வைத்து விட்டான்.

அதன் பிறகு கார்த்திக் எந்த முயற்சியும் செய்ய வில்லை.

ஆயிற்று ஒரு வருடமாகிவிட்டது அவனைப் பார்த்துப் பேசி, அவன் பரோலில் வந்தபோது அவனைக் கட் டாயப்படுத்தி தாலி கட்ட வைத்தபோது பார்த்தது தான்.

என்ன செய்கிறான். ஏது செய்கிறான். எதுவும் தெரி யாது. யாருக்கும் தெரியவில்லை. மீண்டும் தீவிர மாக சினிமா தயாரிப்பில் இறங்கி விட்டான் என்று கேள்வி.

வீரமணி அவனைப் பற்றி பேசுவார். ஆனால் சக்தியின் கோபத்தைப் பார்த்து அவளின் செய்கை களைப் பார்த்து அவரும் சொல்வதில்லை.

சக்திக்கு அவனுடைய ஞாபகங்கள் அதிகமாகும் போது உடையக் கூடிய வீட்டில் இருக்கும் பொருட்கள் தூள் தூளாகும். அதிகம் உடைப்பது போனை. கண்ணாடியை, வீட்டில் அலங்காரத்திற்கு இருக்கும் பொருட்களை.

முன்பு அதிகம் உடையும் இப்போது குறைந்து விட்டது.

என்ன ஏதென்று தெரிந்து அவர்களைச் சமாதானப் படுத்த வீரமணியும் தெய்வானையும் எடுத்த முயற்சிள் எல்லாம் தோல்வி. என்ன பிரச்சனையென்றே தெரிய வில்லை.

கார்த்திக் சக்தி தான் பார்க்க வேண்டாம் என்று சொல்லி விட்டாள் என்று முடித்துக் கொண்டான். திரும்ப அவனையும் கேட்க முடியவில்லை. கேட் டாலும் பதிலில்லை.

தலை வேதனையாய் இருந்தது வீரமணிக்கும் தெய்வானைக்கும்.

என்ன இல்லை அவர்களிடம், சக்தி வெளிப் பார்வைக்கு மிகவும் கம்பீரமாக இருந்தாள். அவளுடைய துறையில் கங்காதரனின் ஆலோசனையோடு நல்ல திட்டங்களைக் கொண்டு வந்து அதைச் செயல்படுத்தி அரசாங்கத்திற்கும் வருவாயைப் பெருக்கினாள். அதே சமயம் தொழில் செய்பவர்களுக்கும் அதில் ஆதாயமே இருக்குமாறு பார்த்துக் கொண்டாள்.

பத்திரிகை ஒன்று நடத்திய கருத்துக் கணிப்பில் சிறந்த யூத் ஐகானாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தாள். அதற்காக அவர்கள் பேட்டி ஒன்றை கேட்டிருந்தனர்.

அதற்காக அமைச்சகத்திற்கு சென்று கொண்டிருந்தாள்.

பேட்டி ஆரம்பித்ததும் மாற்றி மாற்றி கேள்விகள், சலிக்காமல் பதில் சொன்னாள். தங்கள் திட்டங்கள் அதனால் அரசாங்கத்திற்கு வந்த நன்மைகள்.

தன் வேலையின் எல்லா பெருமையையும் தூக்கி கட்சிக்கும், தன்னோடு உறுதுணையாக இருக்கும் கங்காதரன் போன்ற அதிகாரிகளுக்கும் கொடுத்தாள்.

அவளுடைய காலேஜ் அந்த வருடம் பத்து ஏழை மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இலவச மருத்துவப் படிப்பு வழங்குவதை சொன்னாள்.

எப்படி இவ்வளவும் தனி ஆளாகப் பார்க்க முடிகிறது என்றதற்கு.

தான் மட்டும் காரணமல்ல தன்னோடு இருக்கும் அனைவருக்கும் அந்த புகழையும் பகிர்ந்து கொடுத்தாள்.

கடைசியாக யாரோ ஒரு நிருபர் எப்போது உங்கள் திருமணம் என்று கேட்டார்.

யூத் ஐகான் என்ற பட்டத்திற்கு எடுக்கப்படும் பேட்டியில் சக்திக்கு பொய்யுரைக்க விருப்பமில்லை.

''எனக்குத் திருமணம் ஆகிடுச்சே'' என்றாள்.

''என்ன அரசியலை திருமணம் செஞ்சிகிட்டேன்னு சொல்லப் போறீங்களா?'' என்று ஒரு நிருபர் சிரிப்போடு கேட்க,

''நோ, நோ'' என்று புன்னகையோடு மறுத்தவள், தனக்கு திருமணமாகி விட்டது. சில கருத்து

வேறுபாடுகள், அவரவர் வாழ்க்கையின் பாதையில் அவரவர் பயணிக்கிறோம்'' என்றாள்.

உண்மையா? பொய்யா? என்று அவர்கள் குழப்பத்தில் இருக்க,

ஸ்திரமாகத் தான் திருமணமானவள் என்று சொன்னாள்.

''ஏன் சொல்லவில்லை?'' என்றதற்கு.

''யாராவது கேட்டிருந்தால் சொல்லியிருப்பேன், யாரும் இதுவரை கேட்கவில்லை. நீங்கள்தான் முதன் முதலில் கேட்கிறீர்கள், சொல்லி விட்டேன். எங்கள் இருவரின் வீட்டாரின் முன் நடந்த திருமணம்'' என்றாள்.

யார்? என்ன? என்ற விவரம் கேட்டபோது, ''சொல்கிறேன்! ஆனால் இப்போதில்லை. அதில் அவருக்கு விருப்பமா தெரியாது'' என்று முடித்துக் கொண்டாள்.

அவளுடைய பேட்டி தொலைகாட்சியிலும் ஒளிபரப்பானது.

ஒரு சிறு அலையை ஏற்படுத்தியது தான். ஆனால் அதன் பிறக சக்தி மௌனியாகி விட்டாள் ஒரு வார்த்தை அதைப் பற்றி பேசவில்லை.

''என்ன சக்தி இப்படி கல்யாணமாகிடுச்சுன்னு சொல்லிட்ட ஆளாளுக்கு போன் பண்றானுங்க யாரு என்னன்னு கேட்கறானுங்க. கருத்து வேறுபாடா யாரு அது நாங்க பேசறோம்ன்றானுங்க என்னமா பண்ற.''

''என்னைக்கு இருந்தாலும் தெரியப் போற விஷயம் தானேப்பா, என்ன ஏதுன்னு கேட்டா அவ்வளவு முக்கியத்துவம் குடுக்காதீங்க விட்டுடுங்க'' என்றாள்.

"யாருன்னு தெரிஞ்சா ப்ரச்சனையாகுமேம்மா."

"தெரியும்போது பார்த்துக்கலாம்."

"என்னமா? என்ன இது?" என்றார் சலிப்பாக.

"கல்யாணமானதைச் சொல்லாம இருந்திருக்கணும். சொன்னா மாப்பிள்ளை யாருன்னு சொல்லணும். ஏன் இப்படி பண்ற? இவ்வளவு நாள் சொல்லாம இப்போ ஒரு வருஷம் கழிச்சு திடீர்னு ஏன் சொல்ற" என்றார்.

"இவ்வளவு நாளா இப்படி பப்ளிக்ல என்னை யாரும் கேட்கலைப்பா, அது தான் நிஜம்."

சக்தியின் பேட்டியைக் கார்த்திக் பார்த்தான். அவனும் அவளை நேரில் பார்த்து வருடமாகிறது தான். பத்திரிகைகளில் எப்போதாவது பார்ப்பது தான். ஆனால் உருவம் அதில் மங்கலாகத் தானே தெரியும்.

இப்போது சக்தியின் பேட்டியைப் பார்த்தவனுக்கு, முதலில் சக்தியைப் பார்த்ததுமே தோன்றியது ஒன்று தான். இவள் சாப்பிடுகிறாளா? இல்லையா? என்பது போல தான்.

அவனுக்கு என்ன தெரியும் நிஜமும் அதுதான். சக்தி உயிர்வாழ மட்டுமே சாப்பிடுகிறாள் என்று.

வாரத்தில் ஐந்து நாட்கள் பாதி நாள் விரதம். அதாவது மதிய உணவு வரை பச்சை தண்ணீர் கூட சக்தியின் வாய்களில் படாது. ஒரு நாள் முழு விரதம், மாலை தான் உணவு இறங்கும்.

வாரத்தில் ஒரு நாள் அதாவது ஞாயிறு மட்டுமே மூன்று வேளை உணவு உண்பாள்.

தெய்வானையும் என்னென்னவோ செய்து பார்த்து விட்டார். சக்தி அசையவில்லை. ''சாமி கண்ணை குத்திடும், நான் வேண்டுதல் வெச்சிருக்கேன். தப்பக் கூடாது'' என்பாள்.

இந்த உணவு முறைகளால் மிகவும் மெலிந்திருந்தாள். அதோடு உடல் நலம் குறைந்துமிருந்தது. ரத்த சோகையோ என்று சொல்லும் அளவிற்கு வெளுத்து இருந்தாள். உடலில் ஹீமோக்ளோபின் அளவு குறைவாக இருந்தது. இரண்டு முறை மயக்கமாகிக்கூட இருந் திருக்கிறாள்.

தெய்வானையிடம் மறைத்து விட்டாள்.

இதெல்லாம் கார்த்திக்கிற்குத் தெரியாது. அவள் இப்படியெல்லாம் தன்னை வருத்திக் கொள்கிறாள் என்று அவனுக்கு எப்படித் தெரியும்.

வரவேண்டாம் என்று ஜெயிலில் இருந்தபோது தான் சொன்னாள் என்றால், வெளியே வந்து போன் செய்த போதும் அதையே சொன்னாள்.

அதன் பிறகு கார்த்திக் எந்த முயற்சியும் எடுக்க வில்லை. நடப்பது நடக்கட்டும் என்று விட்டு விட்டான். அவன் போராட்டங்கள் அவனோடு, வரவேண்டாம் என்று சொன்ன பிறகு எப்படி அவளிடம் சொல்லவான். சொல்லுவான்.

சக்தியும் திரும்ப பேசவில்லை. விட்டு விட்டான்.

சமீபமாக அவனின் இரண்டு படங்கள் பெரிய வெற்றியைப் பெற்றிருந்தது.

அவனின் தந்தையின் பேனரின் பெயர் வெற்றி பெற்றதில் உற்சாகமாக இருந்தான். கோர்ட்டில் அது பாட்டிற்கு ஒரு பக்கம் கேஸ் நடந்து கொண்டிருந்தது. எந்த இடத்தில் ஆரம்பித்ததோ வழக்கு அதே இடத்தில் இருந்தது. குறைந்த பட்சம் பதினைந்து ஆண்டுகளாவது இழுக்கும். இழுக்க வைத்து விடலாம் என்பது அவனின் நம்பிக்கை.

கொஞ்ச நாட்கள் அமைதியாக இருந்தவன், இப் போது பதுக்கி இருந்த கிரானைட் கற்களை எல்லாம் மீண்டும் எக்ஸ்போர்ட் செய்வதில் ஈடுபட்டு இருந் தான். அதில் நிறைய லாபம் பார்த்துக் கொண்டிருந் தான். அதோடு அவனின் உரிமம் தானே ரத்தாகி யிருந்தது.

இப்போது மாரி பெயரில் வேறு இடத்தில் உரிமம் எடுக்க முயன்று கொண்டிருந்தான்.

சக்தியின் ஞாபகங்கள் அதிகமாக இருந்தாலும் அது அவனின் செயல்பாடுகளை எந்த வகையிலும் பாதிக்க வில்லை. ஏனென்றால் அவனின் பதினேழாவது வயதில் இருந்து இது பழக்கம் தானே.

மீண்டும் வெற்றி, பணம் என்று அந்தப் பாதையை நோக்கி ஓடிக் கொண்டிருந்தான். ஓட வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டிருந்தான்.

செல்வம் தான் காலையில் அழைத்து, ''மேடம் பேட்டி வருது பாருங்க'' என்று சொன்னதும், சக்தியைப் பார்க்கும் ஆர்வமிகுதியில் டி.வி.யின் முன் அமர,

அவளின் தோற்றத்தைப் பார்த்தவன் பார்த்தது பார்த்தபடி அமர்ந்திருந்தான். நீண்ட நாட்களுக்குப் பிறகு பார்ப்பதால் தோற்ற மாற்றம் கண்ணுக்கு நன்கு புலப் பட்டது.

''தன்னை ஈர்த்த மதி முகமா இது.''

''அவள் வரவேண்டாம் என்று மறுத்திருந்தாலும் தான் போயிருக்க வேண்டுமோ, ஆனால் எப்படிப் போயிருக்க முடியும்?''

ஒரு இனம் விளங்கா வலியை நெஞ்சு உணர்ந்தது.

அவ்வளவு நேரமாக அவளையே பார்த்துக் கொண் டிருந்ததால், அவளின் பேட்டியை கவனிக்கவில்லை. அவன் கவனிக்க ஆரம்பித்தபோது பேட்டி முடியும் தருவாயில் இருக்க,

சக்தியின் திருமணத்தைப் பற்றிக் கேட்டதும், அதற்கான அவளின் பதில்களையும் கேட்டுக் கொண்டு தானிருந்தான்.

''தைரியம் தான் இவளுக்கு, திருமணமாகி விட்டது. இப்போதைக்கு யாரென்று சொல்ல முடியாது, என்று எவ்வளவு தைரியமாகச் சொல்லுகிறாள். யார் என்ன நினைப்பார்கள் என்ற அச்சமே இல்லை.''

அவளின் நினைவில் ஒரு சிறு புன்னகை, ''ரொம்ப தைரியம் தான்.''

பார்க்க வேண்டும் அவளை இப்படியே விட முடியாது என்று தோன்றியது.

இன்னும் ஒரு வாரத்தில் வரும் சுமித்ராவின் வளை காப்பு நினைவில் வர, பிரபுவை அழைத்தான்.

''பிரபு! சுமித்ராவோட செவன்த் மந்த் ஃபங்ஷனுக்கு வீரமணி அய்யாவை இன்வைட் பண்ணிட்டியா.''

''ம்! பண்ணிட்டேனே.''

''எப்போ பண்ணின.''

''போன வாரமே நானும் அத்தையும் வீட்டுக்குப் போய் இன்வைட் பண்ணினோம்.''

''யார் இருந்தா?''

''ஐயா மட்டும் தான் இருந்தார். அப்புறம் டெல்லிக்கு போன் செஞ்சு சக்திக்கும் அவங்கம்மாவுக்கு சொல்லிட லாம்னு விட்டுடேன்.''

''நீ அம்மாவைக் கூட்டிட்டு டெல்லி போய் நேர்ல சக்தியை அழைச்சிட்டு வா. கண்டிப்பா வரணும்னு அம்மாவை விட்டுச் சொல்லு.''

''என்ன திடீர்னு இவ்வளவு நாளா இல்லாம...''

''ம்! இந்தியன் ஏர்லைன்ஸோட டை அப் போட்டிருக்கேன். அடிக்கடி டெல்லிக்கு டூ அண்ட் ஃப்ரோ ஃபிளைட்ல ஆள் அனுப்பறேன்னு.''

''உன் திமிரு குறையவே குறையாதுடா.''

''சொல்றதைச் செய்டா. உன்னால முடியுமா? முடியாதா?''

கார்த்திக் போன் செய்ததே அதிசயம். இதில் சக்தியை வேறு அழைக்கச் சொல்கிறான். மறுக்க முடியாது.

''போறேன்!''

''எப்போ?''

''உடனே எப்படிடா சொல்ல ம்முடியும் வைஷ்ணவி கிட்ட கேட்கணும்டா.''

''இதைக் கூட வா கேட்ப.''

''பின்ன உன்ன மாதிரி உன் வீட்டமா அங்க நீ இங்கன்ற மாதிரியா இருக்கேன். அடிச்சாலும் பிடிச்சாலும் என்னால வைஷ்ணவியை விட்டுட்டு ஒரு நாள் கூட இருக்க முடியாது. உனக்கு இதெல்லாம் புரியாது.''

''எனக்குப் புரிய வேண்டாம். சக்தி வரணும் அதை ஞாபகத்துல வெச்சிக்கோ. நீ லேட்டா போனா எனக்கு வேலையிருக்குன்னு அவ வரலைன்னு சொல்லிட்டா. நாளைக்கே கிளம்பு.''

''உனக்கு மிச்சம் அவங்க. கூப்பிட தான் முடியும். வரலைன்னா.''

''அதுக்கு தான்டா எங்கம்மாவைக் கூட்டிட்டுப் போகச் சொல்றேன். சொல்றதைச் செய்.''

''சரி'' என்று அவன் சொல்லும் வரை விடவில்லை.

''இந்தப் பிடிவாதத்தை உன் வீட்டம்மாவோட சேர்ந்து வாழறதுல காட்டு'' என்று அப்போதும் கார்த்திக்கிற்கு ஒரு குட்டு வைத்து தான் போனை வைத்தான் பிரபு.

''இவளால அவனவன் பேசறான், எல்லாம் என் நேரம்,'' என்று கார்த்திக் நொந்து கொண்டாலும் சக்தியின் தற்போதைய தோற்றம் அவனை அசைத்திருந்தது. அவனின் முடிவுகளை தளர்த்த வைத்தது.

வீழ்வேனென்று நினைத்தாயோ அன்பே
வீழ்த்தி மீளுவேன் என்பதை மறந்தாயோ?
தாலி என்னும் வேலியில்
என்னைச் சிறை எடுத்தாயே
உன் நினைவில் என்னையே
மீள வைத்தாயே

கையணைக்க வேண்டிய கைகள்...
சூழ்நிலை கைதியாய் சமூகத்தின் பின்னே
உன் கருங்கூந்தலில் முகம் புதைக்க
உருகுகிறேன் இங்கே
உன் மென்காந்தள் விரலை சேர்த்தணைக்க
தவிக்கிறேன் அன்பே

உன்னை நேசிக்கும் அளவை நானறிய
பிரிவின் வலியை இறைவன் கொடுத்தானோ?
உந்தன் கோபங்கள் நேசங்கள்
பாசங்கள் வெறுப்புகள் விருப்புக்கள்
எனக்குள் இருக்கும் உன்னையும்
என்னோடு எடுத்துச் செல்கிறேன்
உன்னைச் சேரும் நாள் வரும் என்று
மீண்டு(ம்) சந்திப்போம் என்ற நம்பிக்கையோடு!

# 45

**கண்கள் புரிந்து விட்ட பாவம் - உயிர்க்**

**கண்ண னுருமறக்க லாச்சு;**

**பெண்களி னத்திலிது போலே - ஒரு**

**பேதையை முன்புகண்ட துண்டோ?**

- பாரதி

பிரபு வாசுகியை அழைத்துக் கொண்டு அடுத்த நாளே டெல்லி முடிவு செய்தான்.

"நானும் வருவேன், நான் தனியா இருக்க மாட்டேன்" என்று வைஷ்ணவி ஒரே அழுகை... எப்படி பத்ரிநாத்தை மட்டும் தனியாக விட்டுச் செல்வது என்று யோசித்தனர்.

வைஷ்ணவியின் பிடிவாதத்தைப் பார்த்த பத்ரிநாத் அவரே, "அவளையும் கூட்டிட்டுப் போங்க நான் இருந்துக்கறேன்" என்று சொன்னார்.

இவர்கள் டெல்லி செல்வதைப் பற்றி தெரிந்த சிவா, "நானும் வர்றேன். எனக்கும் அவங்களைத் தெரியும். நீங்க மட்டும் கூப்பிட்டா நல்லா இருக்காது" என்றான்.

சிவாவும் கிளம்பினான். சுமித்ரா, "என்னை மட்டும் விட்டுட்டு எல்லோரும் போறீங்களா" என்று ஏக்க மாகக் கேட்க.. பிரபு, "அவளும் வரட்டும்" என்று விட்டான்.

''செவன்த் மந்த் ஆகப் போகுது'' என்று சிவா பயப்பட,

''நான் தான் இருக்கேனே. இவ ஃபிப்த் மந்தல வரும்போது அவ வரக்கூடாதா'' என்று பிரபு வைஷ்ண வியைக் காட்டினான். ஆம் வைஷ்ணவிக்கும் இது ஐந்தாவது மாதம்.

அனைவரும் கிளம்பி டெல்லி சென்றனர். பிரபு அழைக்க வருகிறான் என்று முன்பே சக்தியிடம் சொல்லியிருந்தான்.

''யார்? யார் வர்றீங்க?'' என்று சக்தி எப்படிக் கேட்பது ஏதாவது தப்பாக நினைத்து விட்டால் என்று அவள் கேட்கவில்லை.

பிரபுவும் எல்லோரும் வருகிறோம் என்று சொல்ல வில்லை.

சக்தி பிரபு வருகிறான் என்று ஏர்போட்டிற்கு கார் அனுப்பியிருந்தாள்.

சொல்லப் போனால் கார் பத்தவில்லை,. இருவரும் கர்ப்பிணிகள் என்பதால் அவர்களை வாசுகியோடு காரில் அனுப்பிவிட்டு பிரபுவும் சிவாவும் டாக்ஸி எடுத்தனர்.

அவர்கள் வீட்டிற்குச் சென்ற போது சக்தியில்லை பெருமாளை மட்டுமே இருந்தார். ''ஏதோ முக்கியமான வேலையாம், இப்போ வந்துடுவா'' என்று அனை வரையும் வரவேற்றார்.

அவர்கள் வந்த சிறிது நேரத்திலேயே சக்தி வந்து விட்டாள். சக்தி அனைவரையும் உற்சாகமாக வரவேற்க, அந்த உற்சாகம் யாரையுமே தொற்றவில்லை.

சக்திக்கு சுமித்ராவையும் வைஷ்ணவியையும் கர்ப்பிணிகளாக மேடிட்ட வயிற்றோடு பார்க்க அவ் வளவு சந்தோசம். அவள் இருவரையும் அணைத்து தன் சந்தோஷத்தை வெளிப்படுத்தினாள்.

ஆனால் அவர்கள் கண்டது உடல் இளைத்துப் பொலிவிழந்திருந்த சக்தியை தான்.

"யாரிது? நான் ஏஞ்செல்ன்னு கூப்பிட்ட பொண்ணு எங்க?" சிவா கேட்டே விட்டான்.

அவன் கேட்டதும் தெய்வானை இருக்கிறாரா என்று தான் முதலில் சக்தி பார்த்தாள். சமீபமாக மிகவும் கோபமாக இருந்தார் தெய்வானை. சக்தி தன் உடல் நலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காதது குறித்து. இதை மட்டும் கேட்டிருந்தால் தெய்வானை மிகவும் வருத்தப் பட்டிருப்பார்.

சக்தியிடமிருந்து புன்னகை மட்டுமே பதில்.

வாசுகிக்கு மனதில் மிகுந்த பாரம் ஏறிக் கொண்டது. எவ்வளவு பிடிவாதம் பிடித்து கார்த்திக்கை மணந்து கொண்டாள்.

கார்த்திக் தன் மகன் என்பதைக் கூட மறந்து விட்டார். சமீபத்தில் பார்த்த அவனின் தோற்றத்தோடு சக்தியின் தோற்றத்தை ஒப்பிட்டார்.

கார்த்திக் முன்பை விட இப்போது இன்னும் ஹான்ட்ச மாக இருந்தான். சக்தி அவனின் பக்கத்தில் நின்றாள் பார்க்கவே பரிதாபமா இருப்பாள்.

சக்தி எல்லோரோடும் பேசிக் கொண்டிருக்க.

வாசுகியால் தாளவே முடியவில்லை. அவருக்கு ஒதுக்கியிருந்த ரூமிற்கு போனவர், கார்த்திக்கை முதில் தொலைபேசியில் அழைத்தார்.

''சொல்லுங்க அம்மா'' என்று அவனின் குரல் கேட்டது தான். அதன் பிறகு அவனை பேச விடாமல், ஆதங்கத்தைக் கொட்ட ஆரம்பித்தார்.

''ஏன் கார்த்திக் உங்கப்பாவோட சரித்தரத்த திருப் பறியா.. உங்கப்பா மாதிரி நீயும் உன் மனைவிய விட்டுட்டியா.''

''ஆனா பாரு உங்கப்பாவைப் பிரிஞ்சது எனக்கு வருத்தம் தான். சொல்ல முடியாத இழப்புதான். அது என் மனசை உருக்கியிருந்தாலும், என் உடம்பையெல்லாம் உருக்கலை. இன்னும் கல்லு மாதிரி உயிரோட தான் உட்கார்ந்து இருக்கேன்.''

''ஆனா நீ சக்தியைக் கொன்னுடுவ போல.'' என்று குரல் கம்மச் சொன்னவர்.

அதற்கு மேல் பேச முடியாமல் போனை வைத்து விட்டார்.

''சக்தியைக் கொன்னுடுவ போல'' என்ற அம்மாவின் வார்த்தை கார்த்திக்கை கொன்றது. ஆண்கள் அழக் கூடாது என்பதை எப்போதும் போல ஞாபகப்படுத்திக் கொண்டான்.

கார்த்திக்கிற்கு உடனே அவளைப் பார்க்க வேண்டும் போல இருந்தது. இன்றென்ன புதன் அடுத்த புதன் ஃபங்ஷன் வரட்டும் அப்புறம் அவளை விடமாட்டேன் என்று நினைத்துக் கொண்டான்.

அம்மா திட்டிய போதும் டெல்லியை நோக்கி அவன் கால்கள் திரும்பக் கூட இல்லை. ''வராத! என்னைப் பார்க்காத!'' என்ற வார்த்தைகள் தான் அவனின் காது களில் ஒலித்தன.

வாசுகி மறுபடியும் ஹாலுக்கு வந்து சக்தியைப் பார்த்த பார்வையில் அவரின் அருகில் வந்தவள், ''அத்தை! எங்கம்மா முன்னாடி இப்படி பார்த்துடாதீங்க. நான் நல்லா இருக்கேன். என்ன கொஞ்சம் வீக்கா இருக்கேன் அவ்வளவுதான். இப்படி சிவா பேசின மாதிரி இல்லை இப்படி என்னைப் பார்த்தீங்கன்னா அவங்க வருத்தப்படுவாங்க ப்ளீஸ்'' என்றாள் கெஞ்சுதலாக.

பேசாமல் அவளை அருகமர்த்திக் கொண்டார்.

''நீங்க ஏன் இவ்வளவு இளைச்சிட்டீங்க அண்ணி?'' என்றாள் வைஷ்ணவி.

''கொஞ்சம் வொர்க் அதிகம், அதான்'' என்றாள்.

''போங்க அண்ணி! எல்லோரும் மினிஸ்டர் ஆனா சொகுசா இருப்பாங்க. குண்டாயிடுவாங்க. நீங்க என் னன்னா வேலைன்னு சொல்றீங்க'' என்றாள்.

பிரபு இதைப் பற்றிப் பேசவேயில்லை. மருத்துவ னான அவனுக்கு சக்தி மிகவும் வீக்காக இருக்கிறாள் என்று புரிந்தது.

சுமித்ராவும் எதுவும் பேசவில்லை. அவளுடைய எண்ண ஓட்டங்கள் எல்லாம் வேறு மாதிரி இருந்தன.

சக்தியிடம் சிவா, ''சாரி'' கேட்க,

சக்தி எதற்கு சாரி என்று கேட்கவில்லை. அமைதியாக தான் இருந்தாள்.

''ஏதோ ஒரு டென்ஷன்ல பண்ணிட்டேன்'' என்றான் சிவா.

கோபமாக எல்லாம் சக்தி பேசவில்லை. பொறுமையாகவே பேசினாள். ''என்ன டென்ஷன். எனக்கில்லாத டென்ஷன் உங்களுக்கு. நண்பன்னா ஒரு கஷ்டத்துல கூட இருக்கணும். அதை விட்டுட்டு இப்படியா நடந்துக்குவாங்க...'' என்றாள் ஆதங்கமாக.

''முதல்லையும் இப்படி தான் சுமித்ரா விஷயமாக ஏதோ ப்ராப்ளம் வந்தப்போ என்கிட்டே பேசவேயில்லை. அப்புறம் ரொம்ப மாசம் கழிச்சு உங்களோட கல்யாணப் பத்திரிகையோட தான் என்னைப் பார்க்க வந்தீங்க.

''நான் நினைக்கிறேன் சுமித்ராவோட உங்க கல்யாணம் ஃபிக்ஸ் ஆகலைன்னா என்கூட பேசியே இருக்க மாட்டீங்கன்னு, எனக்கு சுமித்ரா கார்த்திக்கோட ரிலேடிவ்ன்னு கூடத் தெரியாது?''

''சாரி! அது எனக்கும் தெரியாது'' என்றான் சிவா.

''இப்போவும் அப்படிதான் கார்த்திக்காக எதுவும் செய்ய மாட்டேன்னு சொன்ன உடனே முகத்துல அடிச்ச மாதிரி போனை வைக்கறீங்க. ஐ ஃபெல்ட் வெரி பேட்.''

சிவா குற்றவுணர்வோடு சக்தியைப் பார்க்க, அதைப் போக்கும் விதமாக சக்தி,

''எது எப்படியோ எல்லாம் சுமித்ராக்காக தானே. அந்த வகையில் ஷி இஸ் லக்கி, நீங்க ஒரு மோசமான நண்பனா இருக்கலாம் ஆனா நல்ல கணவன்'' என்றாள் சக்தி.

இரவின் தனிமையில் சுமித்ராவும் சிவாவிடம் அதையே பிரதிபலித்தாள். ''நான் நிஜமாவே தப்பிச்சிட்டேன்'' என்றாள் சுமித்ரா.

''என்ன?'' என்று புரியாமல் பார்த்த சிவாவிடம், ''கார்த்திக் மாமா சக்தி அக்காவை எங்க வீட்ட விட்டு வந்ததுல இருந்து பார்த்துட்டு லவ் பண்றார். நான் ரெண்டு மூணு தடவை பார்த்தப்போவும் அவங்களை அப்படி கவனிச்சுப்பார். எனக்கு சக்தி ரொம்ப முக் கியம்னு தைரியமா சொல்லுவார்.''

''இதெல்லாம் தான் எனக்கு அவர் வேண்டாம்னு நான் டிசைட் பண்ணக் காரணம். சின்ன வயசுல இருந்து அவரோட கல்யாணம்னு பேசி அத்தை என்னோட மைண்ட்ல ஃபிக்ஸ் பண்ணினாங்க.''

''எனக்கு லவ் அந்த மாதிரி எல்லாம் அவர் மேல கிடையாது. ஆனா அவரோட தான் கல்யாணம்னு பேசி ஒரு மாதிரி என்னை உரிமையா நினைக்க வெச்சிருந் தாங்க.''

''பட், எப்பவும் ஒரு சின்ன விஷயத்துல கூட அந்த மாதிரி என்னால கார்த்திக் மாமா கிட்ட காட்ட முடியாது... எப்பவும் அவர் பார்வையாலேயே தூரமா நிறுத்தி வெச்சிடுவார்.''

''அதெல்லாம் எனக்குப் பிடிக்கவேயில்லை. என்னோடது என்னோடதா மட்டும் தான் இருக்கணும். எனக்குக் கணவனா வரப் போறவருக்கு என்னை விட யாராவது முக்கியம்னா how could I be able to tolerate that... chanceless.''

“ஒரு ஃப்ராக்ஷன் ஆஃப் செகண்ட்ல மாமா வேண்டாம்னு நான் டிசைட் பண்ணினேன். உடனே நீங்க தான் ஞாபகத்துக்கு வந்தீங்க. மாமாவை வேண்டாம்னு சொல்லிட்டு சும்மா இருந்தா திரும்பவும் அத்தை என்னை கன்வின்ஸ் பண்ணிடுவாங்கன்னு நினைச்சு எப்படித் தப்பிக்கறதுன்னு நினைச்சப்போ உங்க ஞாபகம் மட்டுமே வந்தது.”

“உங்ககிட்ட வந்தேன். நீங்க என்கிட்டே ஒண்ணுமே கேட்கலை. உடனே என்னைக் கல்யாணம் பண்ணிக் கிட்டீங்க.”

“யு நோ மாமா வேண்டட்ன்றதுக்காக அஸ் எ சாய்ஸ் தான் உங்களைக் கல்யாணம் பண்ணிகிட்டேன். but now I love every moment of my life... அப்பா அம்மா சின்ன வயசுல இறந்துட்டாங்க.”

“அத்தை நல்லா பார்த்துக்கிட்டாலும் ஒரு தனிமை, ஒரு குறை மனசு ஓரத்துல இருக்கும். அண்ணாவும் எப்போவும் ஹாஸ்டல்ல இருப்பான். இப்போ எனக்கு அது எதுவுமே ஞாபகம் இல்லை.”

“உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட நாள்ல இருந்து ஒரு நொடி கூட நான் தனியா ஃபீல் பண்ணினது இல்லை. எல்லாம் போன ஜென்மம் மாதிரி இருக்கு. ஐ லவ் யு... ஐ லவ் யு ஸோ மச்...” என்று அவனின் கழுத்தை கட்டிக் கொண்டாள்.

அவளை அணைத்துக் கொண்டவன். “இதை என்கிட்டே நீ நிறைய தடவை சொல்லிட்ட சுமி” என்றான் சிவா.

''அப்போல்லாம் நான் சொன்னது என்னோட ரீசன்ஸ். இப்போ நிஜமாவே மாமாகிட்ட இருந்து தப்பிச்சிட் டேன்னு தோணுது. சும்மா சின்ன வயசுல இருந்து பேசினாங்கன்றதுக்காக கல்யாணம் பண்ணியிருந்தா ஐயோ நினைச்சுப் பார்க்கவே முடியலை.''

''it would have been a big tragedy for both of us ''

''அவர் இவ்வளவு லவ் பண்ணின சக்தி அக்காவையே இந்த பாடு படுத்தறாரே என் நிலைமையெல்லாம் என்ன ஆகியிருக்கும். நிஜமாவே தப்பிச்சிட்டேன்.''

''என்னை உங்க வாழ்க்கையில நீங்க வரவிட்டதுக்கு நான் ரொம்ப லக்கி'' என்றாள்.

''லூசு மாதிரி பேசக்கூடாது. நான் லவ் பண்ணினேன் சுமித்ரா உன்னை, ரொம்ப நீ இல்லைன்னு தெரிஞ்ச துக்கு அப்புறம் என்னால ஏமாற்றத்தை தாங்க முடி யலை. அதான் சக்தியோட கூட என்னால பேச முடி யலை.''

''கார்த்திக்காக சக்திகிட்ட நான் அவ்வளவு கோபப் பட்டேன்னாலும் அதுக்கு காரணமும் நீதான். நீ என்னைப் பார்க்க வந்தப்போ கார்த்திக் தான் நீ என் வீட்டு முன்னாடி நிக்கறேன்னு போன் பண்ணினார். அப்புறம் கல்யாணத்தை நல்லபடியா முடிச்சு வெச்சார்.''

''அவர் பிரச்சனை பண்ணியிருந்தா சிக்கலா யிருக்கும். அந்த ஒரு நன்றி தான் என்னை சக்தி கிட்ட ஓவர் ரியாக்ட் பண்ண வெச்சிடுச்சு.''

''இப்போ நினைச்சா ரொம்ப கஷ்டமா இருக்கு. சக்தி என்னோட சகஜமா பேசவும் தான் இப்போ மனசுக்கு இதமாயிருக்கு.''

''மாமா சக்தி அக்காவை ரொம்பக் கஷ்டப்படுத்தறார் தானே.''

''பார்த்தா அப்படி தான் தெரியுது. ஆனா கார்த்திக் கோட ரீசன்ஸ் என்னன்னு தெரியலையே. ஏன் சக்தியைப் பார்க்காம கூட இருக்கார்ன்னு தெரியலையே. ஒரு வேளை சக்தி பார்க்க வேண்டாம்னு சொல்லி யிருப்பாங்களோ என்னவோ.''

''ம்கூம், கார்த்திக் மாமா ஒரு விஷயம் செய்யணும்னு நினைச்சா கண்டிப்பா செய்வாங்க. அவங்களைத் தடுக்க முடியாது. சக்திக்காவே வேண்டாம்னு சொல்லியிருந் தாலும், அவங்க எப்படி இப்படிச் செய்யலாம். ஒரு தடவை கூடப் பார்க்காம. எனக்கு அக்காவைப் பார்க்க ரொம்ப கஷ்டமா இருக்கு.''

''நான் மாமா கிட்ட பேசட்டா'' என்றாள்.

''நீ பேசினா கார்த்திக் தப்பா எடுத்துகிட்டா.''

''எடுத்துக்கட்டும். எனக்கு ஒண்ணும் பிரச்சனை யில்லை, நான் பேசுவேன்'' என்றவள் உடனே சிவாவின் போனை எடுத்து கார்த்திக்கின் நம்பரை அழைத் திருந்தாள்.

''மணி பாரு பதினொண்ணு...'' என்று சிவா தடுத்தும் கேட்கவில்லை.

''சொல்லு சிவா!'' என்று கார்த்திக் சொல்ல,

''மாமா, நான் சுமித்ரா!''

''சொல்லு சுமித்ரா!''

''ஏன் இப்படி பண்றீங்க... சக்திக்காவை ஏன் விட்டீங்க.''

''எங்க விட்டேன். எங்கயும் விடலை.''

''அது எனக்குத் தெரியாது. எனக்கு அவங்களைப் பார்க்க மனசுக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு. அக்காவே உங்களை வேண்டாம்னு சொல்லியிருந்தா கூட நீங்க அவங்களை விட்டுருக்கக் கூடாது...'' என்றாள் குரல் தழுதழுக்க.

''அவளும் என்னை வேண்டாம்னு சொல்லலை. நானும் அவளை விட மாட்டேன். இந்த மாதிரி கன்சீவா இருக்கும் போது நீ மனசைப் போட்டுக் குழப்பாத. நான் பார்த்துக்கறேன்'' என்றான் கார்த்திக்.

''சரி'' என்றபடி சுமித்ரா போனை வைக்கப் போக...

''தேங்க்ஸ் சுமித்ரா'' என்றான்.

''எதுக்கு?'' என்றவளிடம்,

''சக்திக்காகப் பேசறதுக்கு'' என்றான்.

''மாமா, இப்படிப் பேசி என்னை தள்ளி வைக்காதீங்க'' என்றாள் சற்று கோபத்தோடு சுமித்ரா.

''ஓகே! பேசினது வாபஸ்!'' என்றபடி போனை வைத்தான்.

அவன் சுமித்ராவிடம் பேசிக்கொண்டு இருக்கும் போது வைஷ்ணவியிடமிருந்து மூன்று மிஸ்டு கால்கள்.

அவளிடமிருந்து அடுத்த திட்டு என்று கார்த்திக்கிற்கு தெரியும் இருந்தாலும் அழைத்தான்.

''என்ன அண்ணா நீ?'' என்று ஆரம்பித்தவள். வை ப்ளட் சேம் ப்ளட் ரேஞ்சிற்கு பேசினாள்.

''ஏய் போதும் வைடி. என்னவோ நீ சொல்லி அவன் கேட்கற மாதிரி எதுக்கு இவ்வளவு பேச்சு'' என்று பிரபு அவளிடம் சொல்வது கார்த்திக்கிற்கு நன்றாகக் கேட்து.

காலையில் அம்மா பேசியபோது மனதிற்கு அவ்வளவு கஷ்டமாக இருந்தது. அவரின் வார்த்தைகள் சாட்டை யாய் அவனை அடித்தது தான். ஆனால் இவர்களின் வார்த்தைகள் ஒரு சந்தோஷத்தைக் கொடுத்தது. சக்திக்காக அவர்கள் பார்ப்பது மனதிற்கு இதமாயிருந்தது.

சக்திக்காக காத்திருக்க ஆரம்பித்தான்.

வளைக்காப்பன்று விடியலே பிரபு வீட்டில் கார்த்திக் அடித்த பெல்லினால் தான் ஆரம்பித்தது. ஆம், விடியற் காலையே வந்து பெல் அடித்தான்.

''யாரடா இந்த நேரத்தில், அதுவும் வாட்ச்மேன் போன் கூடச் செய்யவில்லை'' என்று நினைத்துக் கொண்டே வந்து பிரபு கதவைத் திறக்க.

கார்த்திக்.

அவனைப் பார்த்தும், ''ஃபிளைட் எத்தனை மணிக்கு வந்துச்ச'' என்று பிரபு கேட்க,

''எந்த ஃபிளைட்'' என்றான் கார்த்திக் புரியாமல்.

''இவ்வளவு காலையில வந்திருக்க, அதான் ஃபிளைட் எத்தனை மணிக்கு வந்துச்சுன்னு கேட்கறேன்'' என்று பிரபு சொல்லவும்,

அவனின் நக்கல் புரிந்து கார்த்திக் முறைத்தான்.

''என்னடா முறைக்கிற, இருக்கறது உள்ளூர்ல. நேத்து நைட் வந்திருக்கணும் இல்லை நல்லா விடிஞ்சதுக்கு

அப்புறம் வந்திருக்கணும். இப்படி அஞ்சு மணிக்கா வருவ'' என்று நக்கலடிக்க,

''கார்த்திக் உடனே வெளியே செல்லத் திரும்ப, ''மாமா, டேய்! உள்ள வாடா!'' என்று கார்த்திக்கின் கை பிடித்து உள்ளே இழுத்துச் சென்றவன், ''உனக்கு ரோசம் அதிகம்னு எனக்குத் தெரியும்! அதை என்கிட்டே காட்டு! ஆனா சக்தி கிட்ட காட்டாத.''

''அவங்க நாலு அடி அடிச்சா கூட வாங்கிட்டு, அவங்க கால்ல விழறதுன்னா கூட விழுந்து, அவங்களைச் சமாதானப்படுத்து, உனக்காகச் சொல்லலை அவங்களுக்காக சொல்றேன்.''

''நீ மட்டும் தான் அவங்களோட சந்தோசம், நிம்மதி எல்லாம் புரிஞ்சிக்கோ.''

கார்த்திக் எதற்கும் பதில் சொல்லவில்லை.

''நீ செய்யறதை தான் செய்வ! உனக்கு சொல்லக் கூடாதுன்னு தான் நினைச்சேன்! ஆனா சொல்லாம இருக்க முடியலை. பார்த்துக்கோடா...'' என்றான்.

பிரபு மிகவும் சீரியசாக இருக்கிறான் என்றுணர்ந்த கார்த்திக்... ''பார்த்துக்கறேன்!'' என்றான் வாயைத் திறந்து.

''எப்போ இங்க சக்தி வர்றா.''

''ஃபங்ஷன் மண்டபத்துல பத்தரை மணிக்கு மேல, நாம இங்கிருந்து எல்லாம் கொண்டு போகணும். காலையில் டிபனுக்கு நம்ம வீட்டுக்கு வரச் சொன்னேன். நேத்து நைட் கூட போன் பண்ணினேன்.''

“மண்டபத்துக்கு வந்துடறேன்னாங்க. வீட்டுக்கு தான் வரணும்னு சொல்லியிருக்கேன். என்ன பண்ணப் போறாங்க தெரியலை!” என்றான்.

சக்தி மண்டபத்திற்குப் போகலாம் என்று சொல் லியும், தெய்வானை பிடிவாதம் பிடித்து சக்தியை பிரபுவின் வீட்டிற்கு அழைத்து வந்தார்.

வாயிலில் போனில் பேசிக் கொண்டிருந்த கார்த்திக், சக்தியின் மினிஸ்டர் காரைப் பார்த்ததும், சக்திக்காக அதையே பார்த்தபடி நின்றான்.

கார் போர்டிகோவில் நிற்கவும் கார்த்திக்கின் கால்கள் அனைவரையும் மீறி எப்பொழுதும் போல காரின் அருகில் சென்று சக்திக்காக கார் கதவைத் திறந்தது.

தெய்வானை தான் இறங்கினார். கார்த்திக்கைப் பார்த்ததும் சக்திக்கு கால்கள் தடுமாறின. இப்படியே திரும்பிப் போய் விடலாமா என்றிருந்தது.

கண்டிப்பாக அவனைப் பார்ப்போம் என்று தெரியும். பார்த்தாலும் தன்னை அது எந்த விதத்திலும் பாதிக்கக் கூடாது என்று மனதை ஒருவாரமாக நிலைப் படுத்திக் கொண்டிருந்த சக்தியால், ஒரு நிமிடம் கூட தாக்குப் பிடிக்க முடியவில்லை.

அவளால் இறங்கவே முடியவில்லை.

நன்றாக கார் கதவைத் திறந்து பிடித்த கார்த்திக். சக்திக்காக கை நீட்டினான்.

நீட்டிய கையை சக்தி பற்ற யோசிக்க, குனிந்து அவ னாகவே கையைப் பற்றினான்.

அவளின் கைகள் சில்லிட்டு இருந்தன. கார்த்திக்கின் கைகள் சில்லிப்பை உணர, சக்தி கார்த்திக்கின் கைகளின் இதமான சூட்டை உணர்ந்தாள்.

இரு கைகளுமே துணையை விரும்பின. சூடான கார்த்திக்கிற்கு சக்தியின் கைகளின் சில்லிப்பு குளிர்ச் சியைத் தர, சக்தி கார்த்திக்கின் கதகதப்பை உணர்ந் தாள்.

''இறங்கு சக்தி'' என்றான். பற்றிய கையையும் விடவில்லை.

சக்தி இறங்கவும் அவளின் தோற்றத்தை ஆராய்ந் தான். டிவி.யில் தெரிந்ததை விட இன்னும் பரிதாபமாக இருந்தாள். அதிலும் அவளின் உடை புக் நெக் காலர் வைத்த ப்ளவுஸ், அந்த காட்டன் புடவை. கைகளில் போட்டிருந்த ஒற்றை வளையல் மட்டுமே கண்ணுக்குத் தெரிந்தது. கழுத்தில் எதுவும் தெரியவில்லை.

மொத்தத்தில் கார்த்திக்கின் பார்வைக்கு பஞ்சத்தில் அடிபட்ட பரதேசி மாதிரி இருந்தாள்.

''என்னம்மா பார்த்துக்கறீங்க. என்னமா டிரஸ் இது? இப்படி தான் ஒரு ஃபங்ஷனுக்கு வருவாங்களா? என்ன அரசியல் கூட்டத்துக்கா போறா இவ?'' என்று தாள மாட்டாமல் தெய்வானையிடம் கேட்க,

காலையில் இருந்து ஒவ்வொரு விஷயத்திற்கும் சக்தியிடம் போராடிக் கொண்டிருந்த தெய்வானை கார்த்திக்கிடம் கோபத்தைத் திருப்பினார்.

''அவ கிட்ட வேற சரி கட்டச் சொல்லி, நகை போடச் சொல்லி காலையில இருந்து எவ்வளவு சண்டை

தெரியுமா. அவளுக்கு எடுத்து வ்ச்ச டிரஸ் நகை கூட அப்படியே பெட் மேல தான் இருக்கு. திரும்ப அதை எடுத்த நான் பீரோல கூட வைக்கலை. இருந்த கோபத் துல அப்படியே விட்டுட்டு ரூமை பூட்டிட்டு வந்துட் டேன். ஆவூன்னா இப்போ புதுசா நான் இப்படியே டெல்லிக்குக் கிளம்பிடுவேன்னு மிரட்டறா.''

''என் பொண்ணா இருந்தவரைக்கும் நல்லா இருந்தா கார்த்திக். உன் மனைவியா ஆனதுக்கு அப்புறம் தான் இப்படியாகிட்டா.''

''நீயாச்சு உன் பொண்டாட்டி ஆச்சு, என்னால முடியலை. நான் உள்ள போறேன்!'' என்று சொல்லவும். அவர்களை அழைக்க பிரபுவும் வாசுகியும் வெளியே வரவும் சரியாக இருந்தது.

வாசுகியும் பிரபுவும் அவர்களை வரவேற்க, தெய் வானையிடம் சாவியை வாங்கியவன், ''நீங்க போங்க!'' என்று அவரை வாசுகியுடன் அனுப்பிவிட்டு,

''எங்களுக்கு வெயிட் பண்ணாதீங்க பிரபு, நீங்க மண்டபத்துக்குக் கிளம்பிடுங்க'' என்று சொல்லியவன், சக்தியிடம் ஒரு வார்த்தை பேசாமல் அவளின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போனான்.

அவள் வரும் வேகத்திலேயே அவளுக்கு விருப்ப மில்லை என்று தெரிந்தது. இருந்தாலும் விடாமல் சற்று இழுத்த மாதிரி தான் சென்றான். சக்தியின் மினிஸ்டர் காரை விட்டு... அவனின் காரின் கதவைத் திறந்து, ''ஏறு சக்தி!'' என்றான்.

சக்தி அவனிடம் இதுவரை ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. ''நான் வரவில்லை'' என்று வாயால்

சொல்லாமல், ஏறாமல் அப்படியே நின்று அவளின் விருப்பமின்மையைக் காட்டினான்.

சில நொடிகள் அவளுக்கு அவகாசம் கொடுப்பது போல கார்த்திக் அவளை பார்த்திருந்தான். சக்தி எப் போதும் அசைய மாட்டேன் என்பது போல நிற்க,

இது வேலைக்காகாது என்று புரிந்து, அவளை அப் படியே இடையில் ஒரு கையைக் கொடுத்து, முழங் காலில் ஒரு கையைக் கொடுத்துத் தூக்கினான். சக்தி இதை எதிர்பார்க்கவில்லை.

''ஏய் கார்த்திக், என்ன பண்ற விடு! விடு!'' என்று அதட்டியபடியே திமிறினாள்.

அவள் திமிறி இறங்கி விட்டால் என்ன செய்வது என்பதாக அவனோடு சேர்த்தணைத்து இறுக்கிப் பிடித்தான்.

''எல்லோரும் பார்க்கறாங்க விடு! கார் டிரைவர் எல்லாம் பார்க்கறான்! கீழ இறக்கி விடு!'' என்று அதட்டலை விட்டு கெஞ்சலில் இறங்கினாள் சக்தி.

தெய்வானை வாசுகி பிரபு மூவருமே பார்த்து தான் இருந்தனர். யார் பார்க்கிறார்கள், பார்க்கவில்லை என்று கார்த்திக் சற்றும் கவலைப்படவில்லை.

''இவ்வளவு நேரமா ஒரு வார்த்தை பேசினியா? இல்லல்ல... இப்போ மட்டும் என்ன? வாயை மூடு!'' என்று ஒரு அதட்டல் போட்டவன்.

அவளை அப்படியே சீட்டில் அமர வைத்து, மறுபக்கம் அமர்ந்து காரைக் கிளப்பினான். அது அவர்கள் இருவரின் மனவோட்டத்தைப் போல சீறிப் பாய்ந்தது.

# 46

காற்று வெளியிடைக் கண்ணம்மா - நின்றன்
காதலை யெண்ணிக் களிக்கின்றேன்; அமு
தூற்றினை யொத்த இதழ்களும் - நில
வூறித் ததும்பும் விழிகளும் -

- பாரதி

காரில் வரும்பொழுது கார்த்திக் சக்தியிடம், ''என்ன சக்தி உடம்பை இப்படிக் கெடுத்து வெச்சிருக்க, சாப்பிடுவியா மாட்டியா'' என்றான் ஆதங்கத்தோடு.

தன்னுடைய தோற்றத்தையும் கார்த்திக்கின் தோற்றத் தையும் ஒப்பிட்டாள் சக்தி. அவனின் முன்பை இன்னும் அதிகமாக வசீகரிக்கும் தோற்றம்?

''நான் எப்படியிருந்தா என்ன, நான் இல்லாம நீ ரொம்ப நல்லா இருக்க கார்த்திக். முன்னைவிட ஹான்ட் சமா, இன்னும் அட்ராக்டிவா பார்த்துக்கிட்டே இருக் கலாம் போல. ஜம்முனு ராஜா மாதிரி இருக்க என்ன உனக்கு கவலை மனைவி பத்தின கவலையா இல்லை புள்ள குட்டியா'' என்றாள்.

குரலில் அப்பட்டமான குற்றச்சாட்டு. நானில்லாமல் நீ ஒன்றும் வருத்தப்படவில்லையே. நன்றாகத் தானே இருக்கிறாய், இன்னும் அதிகமாக என்னைக் கவர்கிறாய்.

நான் தான் பைத்தியம் போல இப்படி இருக்கிறேன் என்பதாக.

''ஏன் நீ வராதன்னு சொன்னா, ரோட்ல யாருமில்லாம நிப்பேன்னு நினைச்சியா'' என்றான் பதிலுக்கு.

''நான் இல்லாம நீ நல்லா இருக்கேன்னு தான் சொன்னேன். ரோட்ல நிப்பேன்னு நினைச்சியான்னு பேச்சை மாத்தாத.''

''நான் ஒண்ணும் பேச்சை மாத்தலை. இதுதான் பேச்சு'' என்றான்.

''உன் திமிர் குறையவே குறையாது'' என்றாள் சக்தி.

''திமிரா? எனக்கா?'' என்றவன் குரலில் அவ்வளவு வலி. அது சக்தியையும் பாதித்தது. ஆனால் அதைத் தொடர்ந்து கார்த்திக் பேசியது மீண்டும் அவளை ஆத்திரப்படுத்தியது.

''ஆமா! என் பொண்டாட்டி மூணு வேளை எனக்கு சமைச்சுப் போட்டு நான் வக்கணையா சாப்பிடறேன் பாரு. அந்த திமிர் தான்'' என்றான்.

''அதிகம் பேசாத கார்த்திக். நான் என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது!'' என்று கோபமாகக் கத்தினாள்.

அடுத்து கார்த்திக் கேட்டது இன்னும் அவளை ஆத்திரப்படுத்தியது. ''என்ன இது வேஷம், நீயும் உன் டிரஸ்சும் பார்க்க சகிக்கலை.''

''ஓஹ்! உன் பெர்சனாலிடிக்கு நான் கம்மின்னு சொல்றியா.''

''நான் உன் டிரஸ்ஸை தான் சொன்னேன். இந்த மாதிரி காலர் வெச்சு கிழவிங்க மாதிரி ஒரு ப்ளவ்ஸ்... யங்கா இருக்குற உன்னை வயசான மாதிரி காட்டுது.''

''ஒஹ்! இந்த வேஷமா. இது நான் உன்கிட்ட வாங்கிக்கிட்ட தாலியை மறைக்க'' என்றாள்.

அவளை திரும்பி பார்த்த கார்த்திக் அதன் பிறகு பேசவில்லை.

சொன்ன பிறகு சக்திக்கே ஒரு மாதிரி ஆகிவிட்டது. அவளின் வாழ்க்கையின் மிக முக்கியமான தருணம் அதைத் தானே கேலி செய்வதா.

சக்தியின் வீடு வந்து உள்ளே நுழைந்த போது வீரமணி அங்கே ஹாலில் தான் அமர்ந்திருந்தார்.

கார்த்திக்கும் சக்தியும் சேர்ந்து வந்திருப்பதை வியப்புடன் பார்த்தவர்.

''ஏம்மா வந்துட்ட?'' என்று சக்தியைப் பார்த்துக் கேட்டார்.

பதில் சொல்லாமல் தந்தையின் அருகில் போய் அமர்ந்தவள் கார்த்திக்கை பார்த்து முறைத்தாள்.

''நான் தான் ஐயா கூட்டிட்டு வந்தேன். கொஞ்ச நேரம் கழிச்சுப் போறோம்'' என்றான்.

''சேர்ந்தா போறீங்க'' என்றார் வீரமணி.

''ஆம்'' என்பது போல கார்த்திக் தலையசைக்க, வீரமணி சக்தியைப் பார்த்தார். சக்தி 'ஆம்' என்று சொல்லவில்லை, ''இல்லை'' என்றும் சொல்லவில்லை. யாரோ யாரைப் பற்றியோ பேசுவது போல பார்த் திருந்தாள்.

''நம்ம இன்னும் கல்யாணத்தை முறையா அறி விக்கலை கார்த்திக். அதுக்கு முன்ன சேர்ந்து போய் யாராவது ஏதாவது பேசினா நமக்கு அது மரியாதை யில்லை'' என்றார் வீரமணி.

''எப்போ அறிவிக்கலாம்'' என்று கார்த்திக் பதிலுக்குக் கேட்க, வீரமணி என்ன சொல்லுவார்.

அவர் மௌனமாக சக்தியைப் பார்க்க, சக்தி அசை யாமல் உட்கார்ந்திருந்தாள்.

''கல்யாணம் என்னைக் கேட்டு பண்ணலை, இப்போ எப்போ அறிவிக்கலாம்னு என்னை கேட்டா நான் என்ன சொல்றது'' என்றார் இருவருக்கும் பொதுவாக,

கார்த்திக் சக்தியைப் பார்த்து இப்போது நேரடியாகவே கேட்டான், ''எப்போ சொல்லலாம்'' என்று.

சக்தி அதற்கும் அமைதியாக இருக்க, ''சக்திம்மா பதில் சொல்லு!'' என்று வீரமணி சொல்ல,

''நான் ஏற்கனவே எனக்குக் கல்யாணம் ஆனதைப் பத்தி சொல்லிட்டேன் பா.''

''கல்யாணம் ஆனதை தான் சொன்ன, யார் கூடன்னு இன்னும் சொல்லலையே'' என்றான் கார்த்திக்.

''கேட்கிறான் தானே! சொல்லு சக்தி!'' என்று தந்தையும் சொல்ல.

''யார்கூடன்னு சொல்ற அளவுக்கு இப்போ சந் தர்ப்பம் இல்லைப்பா.''

''இப்படி தான் நான். இதுதான் நான் தெரிஞ்சு தானே கல்யாணம் பண்ணிகிட்ட, இப்போ சந்தர்ப்பம் வரலை அது இதுன்னா.''

''கொஞ்ச நாள் போகட்டும்'' என்றாள் சக்தி.

''அப்படி எல்லாம் விட முடியாது, இப்போவே சொல்லணும்'' என்றான் கார்த்திக்.

''இப்போல்லாம் சொல்ல முடியாது'' என்றாள் சக்தி.

''ஏன்? ஏன் சொல்ல முடியாது?''

''அதெல்லாம் உன்கிட்ட சொல்ல முடியாது.''

கார்த்திக்கிற்கு இப்போது கோபம் வந்தது. அவளை விடுத்து வீரமணியிடம் புகார் படித்தான்.

''நானா அவசரமா கல்யாணம் பண்ணிக்கலாம்னு சொன்னேன்! இவளே கல்யாணம் பண்ணிகிட்டா. அப்புறம் நான் வெளில வந்ததுக்கு அப்புறம் பார்க்கக் கூட வரக் கூடாதுன்னு சொல்லிட்டா. நான் ஜெயிலுக்குப் போனதை அவ்வளவு கேவலமா ஃபீல் பண்ணினா, என்னை எதுக்குக் கல்யாணம் பண்ணனும். அப்புறம் எதுக்கு அவாய்ட் பண்ணனும்.''

''இப்போ நானா கல்யாணத்தைப் பத்தி சொல்லலாம்னு சொன்னாலும், வேண்டாம்னு சொன்னா நான் என்ன செய்ய, ஒரு வேளை பிரிஞ்சிடலாம்னு நினைக்கறாளோ என்னவோ'' என்று கார்த்திக் சொன்னது தான் தாமதம்.

ஆத்திரம் கண்ணை மறைக்க, எதிரே டீபாயின் மேல் இருந்த ஸ்டீல் ஃப்ளவர் வாஷைத் தூக்கி அவன் மேல் வீசினாள். கார்த்திக் அப்போதும் விரைவாக விலகினான். ஆனாலும் அதன் முனை நெற்றியில் பட்டு விட்டது.

வலியில் அவனையும் மீறி, ''அம்மா'' என்றவன் காயம் பட்ட இடத்தை கையை வைத்து அழுத்திக் கொண்டான்.

''சக்தி'' என்று வீரமணி அவளிடம் கோபமாக விரைந்தார். ''என் பொண்ணா இப்படி?'' என்று.

அவனை அது தாக்கியது என்று பார்த்தும் அசை யாமல் பிடிவாதமாக அமர்ந்திருந்தாள். இவ்வளவு பெரிய பெண்ணை என்ன செய்ய முடியும். செய்வது அறியாமல் வீரமணி நின்றுவிட,

கையை மீறி, கார்த்திக்கின் தலையில் இருந்து ரத்தம் வரவும் தான் முகம் மாறியவள், ''ஐயோ ரத்தம்!'' என்று எழுந்து விரைந்து அவனருகில் போனாள்.

இப்போது கார்த்திக் அசையாமல் உட்கார்ந்திருந்தான்.

''கையை எடு கார்த்திக்! பார்க்கலாம்!'' என்று சக்தி பதற,

கார்த்திக் கையை எடுக்கவேயில்லை.

''ஐயோ ரத்தம் வருது. கையை எடு கார்த்திக்.''

''நீ முதல்ல நம்ம கல்யாணத்தை எப்போ சொல் றோம்னு சொல்லு! அப்போ தான் கையை எடுப்பேன்.''

''என்ன ப்ளாக் மெயில் பண்றியா எடு?'' என்று அவனின் கையைப் பிடித்து இழுத்தாள்.

வீரமணி வேறு பார்த்துக் கொண்டிருந்தார். சக்தியின் நடவடிக்கைகள் அவருக்குமே கோபத்தைக் கொடுத்தது.

''கையை எடு கார்த்திக்! காயத்தைப் பார்க்கலாம்!'' என்று வீரமணி சொல்ல, அவர் பேச்சைத் தட்ட முடியாமல் கையை எடுத்தான்.

சக்தி அவளின் புடவையைக் கொண்டு ரத்தத்தை துடைத்தாள். துடைக்கத் துடைக்க ரத்தம் வந்தது. அந்த

பூச்சாடியின் முனை பட்டு ஆழமாக நெற்றியின் ஓரத்தில் ஒரு வெட்டு இருந்தது.

''என்ன சக்தி இப்படி பண்ணிட்ட?'' என்று வீரமணி கோபப்பட்டார்.

''ஹாஸ்பிடல் போகலாம் கார்த்திக்!'' என்று அவர் சொல்ல.

''வேணாங்கய்யா'' என்றான்.

கார்த்திக் வீரமணியிடம் மறுத்துப் பேச, வீரமணியின் கவனம் கார்த்திக் மேல் இருக்க, இருவருமே சக்தியை கவனிக்க தவறினர்.

அவனின் காயம், அதில் வழிந்த ரத்தம், தன்னால் தான் என்ற குற்ற உணர்வு, காலையில் இன்னும் சாப்பிடாதது, இது மட்டுமல்லாது முன்பே பலகீனமான அவளின் உடம்பு, சக்தியை ஒரு மயக்க நிலைக்குக் கொண்டு செல்ல,

ரத்தத்தைத் துடைத்தவள் கார்த்திக் மேலேயே மயங்கிச் சரிந்தாள்.

''சக்தி'' என்று பதறி கார்த்திக் அவளைப் பிடிக்க, அவனின் தலையில் இருந்து சொட்டிய ரத்தம் அவளின் புடவையில் ஆனது. ''சக்திம்மா'' என்று வீரமணியும் பதற, அவள் தான் மயங்கியிருந்தாலே,

பிரபு எப்படியும் விழா ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டும் என்பதை மனதில் வைத்து பிரபுவைக் கூப்பிடாமல், செல்வத்தைக் கூப்பிட்டு விஷயத்தைச் சொல்லி யாராவது டாக்டரை ஹாஸ்பிடலில் இருந்து அழைத்து வருமாறு கார்த்திக் சொல்ல,

ஒரு நம்பிக்கையான லேடி டாக்டரை அழைத்துக் கொண்டு உடனே வந்தான் செல்வம்.

சக்தியை பரிசோதித்தவர், ''ரொம்ப வீக்கா இருக்காங்க சார்! அதனால் கூட மயக்கமா இருக்கலாம்'' என்று சொல்லி ஏதோ இஞ்செக்ஷன் செய்தவர், ட்ரிப்சும் ஒரு நர்ஸின் உதவியுடன் போட்டார். பின்பு வீட்டிற்கே வந்து லேப் அசிஸ்டெண்ட் டெஸ்டிற்காக ப்ளட் எடுத்துச் சென்றனர். சக்தி விழிப்பதற்காக காத்திருக்க,

வீரமணி மகளைப் பார்த்து அமர்ந்திருந்தார்.

ட்ரிப்சிற்கு தேவையான உபகரணங்களை வாங்கி வருவது, லாப் அசிஸ்டெண்டை அழைத்து வருவது என்று பிசியாக இருந்த செல்வம், அப்போதுதான் கார்த்திக்கை சரியாகப் பார்த்த செல்வம், ''பாஸ்!'' என்று அலறினான்.

''என்னடா?'' என்று பதட்டமாகக் கார்த்திக் கேட்க,

''உங்க நெத்தில என்ன இது காயம், ரத்தம் உறைஞ்சிருக்கு'' என்று பதற,

சக்தியை கவனித்துக் கொண்டிருந்ததில் ரத்தம் தானாகவே நின்று, அது உறைந்தும் இருந்தது.

அப்போதுதான் ஞாபகம் வந்தவராக வீரமணி, ''அந்தக் காயத்தைப் பாருங்க டாக்டர்!'' என்று சொன்னதும்,

அவர் அதை க்ளீன் செய்து பார்த்தவர், ''ஆழமா இருக்கு சார். தையல் போட்டா சீக்கிரம் காயும், தையல் போட்டுட்டா பரவாயில்லை'' என்றார்.

கார்த்திக்கை வீரமணி பேசவே விடவில்லை. ''போடுங்க டாக்டர்!'' என்றார்.

சற்று நேரத்தில் சக்திக்கு விழிப்பு வந்தது. வந்தபோது டாக்டர் தையல் போட்டுக் கொண்டிருந்தார்.

சக்தியின் பார்வையில் பட்டது. கார்த்திக் அமர்ந் திருக்க, ஒரு பெண் அவளின் நெற்றியில் ஏதோ செய்து கொண்டிருந்தது தான்.

கண்களைச் சுழற்றியவள் பார்வையில் வீரமணி பட, ''என்ன பண்றப்பா அவ?'' என்றாள் அந்த சோர்விலும் எரிச்சலாக.

டாக்டர் காதில் இந்த மரியாதையில்லாத வார்த்தைகள் விழுந்து விடக்கூடாதே என்று அவசரமாக வீரமணி, ''ஷ்! டாக்டர் மா! தையல் போடறாங்க!'' என்று சொன் னார்.

அப்போதும், ''பிரபு, வரலையா'' என்றாள்.

''இன்னைக்கு அவங்க வீட்ல விசேஷம்மா'' என்று வீரமணி ஞாபகப்படுத்த அதன் பிறகே அமைதியானாள்.

அயர்வில் கண்களையும் மூடிக் கொண்டாள்.

தையல் போட்டு அதை பேண்டேஜ் செய்த டாக்டர்,

பின்பு சக்தியைப் பரிசோதித்தவர், ''இப்போ பரவா யில்லை, கான்ஷியஸ் வந்துடுச்சு. இருந்தாலும் ஹாஸ் பிடல்ல ஃபுக் செக் அப் பண்ணிடலாம். இந்த பாட்டில் ட்ரிப்ஸ் போதும்'' என்றார்.

''அந்த சிஸ்டரை விட்டுட்டு நீங்க கிளம்புங்க டாக்டர். இந்த ட்ரிப்ஸ் முடிஞ்சதும் அவங்க எடுத்து

விட்டுட்டு வரட்டும்'' என்று கார்த்திக் சொல்ல டாக்டர் கிளம்பினார்.

''சக்தி வர முடியாது. நான் மட்டுமாவது விசேஷத்துக்குப் போறேன் ஐயா!'' என்று கார்த்திக் வீரமணியிடம் சொன்னான்.

''இப்படி முகத்துல பேண்டஜ் போட்டுட்டு எங்கயும் போகாத. இங்கயே இவ கூடவே இரு. ஆட்ட கடிச்ச, மாட்ட கடிச்ச, மனுஷன கடிச்ச கதையா, என் பொண்ணு இதுவரைக்கும் கண்ணாடி சாமான் செட்டு, உடையக் கூடிய பொருட்கள், இதைத் தான் உடைச்சிட்டு இருந்தா, இப்போ மண்டையை உடைக்க ஆரம்பிச்சிட்டா.''

''நீ எங்கயும் போகலை, நீ அவகூட தான் இருக்க. உங்க கல்யாணத்தை என்ன பண்ணனும், ஏது பண்ணனும்னு நான் முடிவு பண்றேன். உங்க இஷ்டமெல்லாம் இனி எதுவும் கிடையாது. ரெண்டு பேரும் வார்த்தையை விட்டுக்காம அமைதியா இருக்க'' என்று அதட்டினார்.

''உங்க சார்பா வேணா நான் விசேஷத்துக்குப் போயிட்டு வர்றேன். அப்புறம் இந்த ஐயாவை விட்டுடு. உறவைச் சொல்லிக் கூப்பிடு'' என்றார்.

வீரமணி கிளம்பவும், ''நீ போ செல்வம்! பிரபுக்கு போய் ஹெல்ப் பண்ணு... நானும் இல்லை, பார்த்துக்கோ'' என்று அவனையும் அனுப்பினான்.

செல்வத்திற்கு முகமே இல்லை. ''எங்களுக்கு ஒண்ணுமில்லை! மேடம் கொஞ்ச வீக்கா இருக்காங்க. எனக்கு ஒரு சின்ன காயம் தான்! நீ போ!'' என்றான்.

''முடிச்சு இங்க தான் வருவேன்'' என்றான் விட்டுப் போக மனமேயில்லாமல்.

''சரி! இப்போ போ! அங்க வேலையைப் பாரு!'' என்று அனுப்பினான்.

சக்தி கண்களைத் திறக்கவேயில்லை. ஒரு சேரில் அமர்ந்து கால்களைத் தூக்கி சக்தியின் கட்டில் மேல் வைத்துக் கொண்டு கார்த்திக்கும் கண்களை மூடிக் கொண்டான்.

சிஸ்டர் தான் அவ்வப்போது வந்து ட்ரிப்சை செக் செய்தவள், முடியும் தருவாயில், ''சார், முடியப் போகுது'' என்றாள்.

''ட்ரிப்ஸ் மட்டும் எடுத்துடுங்க, அந்த ஊசி இருக்கட்டும், நான் டாக்டர் கிட்ட கேட்டுட்டு எடுத்துக் கறேன்'' என்றான்.

அதற்கு தான் கண்ணைத் திறந்த சக்தி, ''நீங்க எடுத்துடுங்க சிஸ்டர்'' என்றாள்.

''அமைதியா இரு!'' என்று சக்தியை அடக்கியவன்,

''நீங்க போங்க சிஸ்டர். நான் பார்த்துக்கறேன்'' என்று அந்தப் பெண்ணை அனுப்பினான்.

''இப்போ இது எதுக்கு'' என்று சக்தி கேட்க,

''வேற ஏதாவது மெடிசின்ஸ் குடுக்கணும்னா திரும்பக் குத்துவாங்க. வலிக்கும். சொன்னா கேளு. பிரபு கிட்ட ஒரு வார்த்தை கேட்டுட்டு எடுத்துடலாம்'' என்றான் கடுமையாக.

எழுந்து உட்கார்ந்தவள், ''நீதான் என்னை விட்டுப் பிரியப் போறியே, எனக்கு வலிச்சா உனக்கென்ன?'' என்றாள்.

"சக்தி ப்ளீஸ்! இப்படிச் சண்டை போட்டு, சண்டை போட்டே நம்ம வாழ்க்கை முடிஞ்சிடும் போல இருக்கு. நானும் எதையும் பேசலை, நீயும் எதையும் பேசாத... இருக்குற இந்த ஷணத்துல வாழ்வோம்" என்றான் கெஞ்சலாக.

அதற்கு பதில் சொல்லவில்லை. ஆனால் மேலே சண்டையை வளர்க்கவில்லை. அமைதியாகப் படுத் திருந்தாள்.

"என்ன சாப்பிடற? கொண்டு வரச் சொல்றேன்!" என்றான் கார்த்திக்.

"ஒன்றும் வேண்டாம்" என்பது போல சக்தி தலை யசைக்க,

அவனாக முனியம்மாவிடம், சாத்துக்குடி ஜூஸை கொண்டு வரச் சொன்னான்.

அவர் கொண்டு வரவும் ஒரு கிளாசை மட்டும் எடுத்துக் கொண்டு இன்னொன்றை திருப்பி அனுப்பி யவன், "குடி சக்தி!" என்று அவளிடம் நீட்டினான்.

சக்திக்கும் குடித்தால் பரவாயில்லை போலத் தோன்ற, எடுத்துக் குடித்தவள், பின்பு தான் கவனித்தாள் அவன் சாப்பிடவில்லை என்பதை, "உனக்கு" என்றாள்.

"வேண்டாம்!"

"ஏன்? உனக்கும் தான் அடிபட்டிருக்கு! நீயும் தான் டையர்டா இருப்ப."

"வேண்டாம்! நான் தான் சாப்பிட்டு சாப்பிட்டு நல்லா தானே இருக்கேன்! கொஞ்சம் சாப்பிடாம

உன்னை மாதிரி வீக் ஆகிடறேன். அப்போவாவது உனக்கு என் மேல கருணை வருதான்னு பார்க்கலாம்.''

''அந்த சிஸ்டர் இருக்காங்களா? போயிட்டாங்களா?''

''ஏன்? என்ன பண்ணுது? அவங்க போயிட்டாங்க'' என்று அக்கறையாக கார்த்திக் கேட்டான்.

''எனக்கொண்ணும் பண்ணலை! உனக்குத்தான்!'' என்றாள்.

''எனக்கொண்ணும் இல்லை!'' என்று கார்த்திக் சொல்ல,

''இல்ல! இந்தப் பக்க மண்டையை தான் உடைச்சு இருக்கேன். அந்தப் பக்கம் எதையாவது தூக்கிப் போட்டு உடைக்கிறேன். ஃபர்ஸ்ட் எய்ட்டுக்கு சிஸ்டர் வேணும்தானே. அதுக்குதான் கேட்டேன்'' என்றாள் சீரியசாக.

கார்த்திக் முகத்தில் புன்னகை எட்டிப் பார்த்தது.

**''என் மனதையும் உடைத்தாய்**

**என் மண்டையையும் உடைத்தாய்!**

ன்னு கவிதை சொல்லட்டுமா.

''உனக்குள்ள இப்படி ஒரு கவிதை திறமையா? இந்த ஒரு கவிதைக்காகவே உன் மண்டையைச் சுத்தியல் வெச்சு உடைக்கலாம்.'' என்று சக்தியும் புன்னகையோடு திருப்ப,

''வேண்டாம்! வேண்டாம்! உனக்கு அந்த சிரமமே வேண்டாம்! இப்போதைக்கு என் மண்டையை உடைக்கற குத்தகையை ஃப்ளவர் வாஷ்க்கே விட்டுடு.''

வாய்விட்டு சிரித்த சக்தி, ''ஜூஸ் கொண்டு வரச் சொல்லி நீ குடிக்கலை! கைவிட்டு நான் குடிச்சதை வாமிட் பண்ணிடுவேன்!'' என்று மிரட்டினாள்.

அவன் கொண்டு வரச் சொல்லிக் குடித்த பிறகே விட்டாள்.

''இந்தப் புடவையை மாத்திடு சக்தி. ரத்தமா இருக்கு'' என்றான்.

அவனின் தலையை அதில் தானே துடைத்தாள். பிறகும் அவனின் கைகளில் அவள் மயங்கி விழுந்த போது ரத்தம் அதில் தெறித்திருந்தது.

''அம்மா வரட்டும்!'' என்றாள்.

''அம்மா வர்ற வரைக்கும் இதுலயே இருப்பியா, வேண்டாம்! முதல்ல மாத்து! எனக்கு இதைப் பார்க்கவே பிடிக்கலை! யாரோ மாதிரி இருக்கு!'' என்றான்.

''அம்மா வரட்டும்!'' என்றாள் மீண்டும்.

''ஏன் இவ்வளவு பிடிவாதம்? நான் சொன்னா எதையும் கேட்கக் கூடாதுன்னு முடிவோட இருக்கியா.''

''கார்த்திக் கையில் வென்ஃப்ளான் இருக்கு. அந்த கை அசைச்சா வலிக்கும். நான் ஒரு கையில எப்படி டிரஸ் மாத்துவேன்.''

''முனியம்மாவை ஹெல்ப்புக்கு கூப்டுக்கோ.''

''அடிவாங்கப் போற நீ! அப்படியெல்லாம் யார் முன்னாடியும் நான் மாத்த மாட்டேன்'' என்று கோபப் பட.

''ஓகே! ஓகே! லீவ் இட்! லேடி தானேன்னு சொன்னேன்.''

''லேடின்னா'' என்று அதற்கும் கோபப்பட,

''தெரியாமச் சொல்லிட்டேன். நான் வேணும்னா ஹெல்ப் பண்ணட்டா'' என்றான் தயங்கித் தயங்கி.

''வேண்டாம்! அம்மா வரட்டும்!'' என்றாள் பிடிவாதமாக சக்தி.

அவள் மறுத்த விதம் பார்த்து கார்த்திக்கிற்கு கோபம் வர, ''ஏன் என்கூட குடும்பம் நடத்தற ஐடியாவே இல்லையா உனக்கு?'' என்றான் கோபமாக.

''ரகசியமா கல்யாணம் பண்ணிக்கிட்டா, ரகசியமா குடும்பம் கூடவா நடத்துவாங்க?'' என்றாள்.

கார்த்திக்கிற்கு வார்த்தையே வரவில்லை. அப்படிப் பட்ட பார்வை பார்த்தவன், ரூமை விட்டு மௌனமாக வெளியே போய் கதவைத் திறக்க,

அவனின் கையைப் பிடித்து நிறுத்தியவள், ''சாரி!'' என்றாள்.

''எவ்வளவு உயர்ந்த எண்ணம் உனக்கு என்னைப் பத்தி!'' என்றான் தாள மாட்டாமல்.

அவனை முதுகுப் பகுதியில் அணைத்து முகத்தை அங்கே புதைத்துக் கொண்டாள். ஆனாலும் அசையாமல் நின்றான். அவளின் கண்ணீரின் ஈரத்தை கார்த்திக் முதுகு பகுதியில் உணர்ந்தான்.

''சொல்லு! எப்பவாவது நான் உன்னை ஒரு ஹஸ்பண்ட் மாதிரி பார்த்திருப்பனா? ஒரு ஹக் பண்ணியிருப்பனா? ஒரு கிஸ் பண்ணியிருப்பனா? நான் போய் உன்கூட ரகசியமா குடும்பம் நடத்துவனா? அப்படி ஒரு நிலைமையில் உன்னை வைப்பனா?'' என்றான்.

"ஏன்? ஏன் நீ அப்படிப் பார்க்கலை? ஏன் நீ இதெல்லாம் செய்யலை? நான் எப்பவாவது செய்யக் கூடாதுன்னு சொன்னனா?" என்றாள் அழுதபடியே அவளின் அணைப்பை இறுக்கி,

அவளின் கை இறுக்கத்தை உணர்ந்தவன், நீடில் அசைந்து விடும் என்று மெதுவாக அவளின் விரல்களைப் பிரித்து விட்டவன், மீண்டும் அவளின் கையின் சில்லிப்பை உணர்ந்தான்.

"எப்படிப் பார்ப்பேன். நீதான் என்னை வராதன்னு சொல்லிட்டியே!"

"நான் சொன்னா நீ வரமாட்டியா. நான் அப்படிதான் வருவேன்னு சொல்லிக்கிட்டு நீ வந்து நிற்பேன்னு நான் எவ்வளவு நாள் எதிர்பார்த்தேன் தெரியுமா?" என்றாள் தேம்பியவாறே.

அவளின் கைகளை விலக்கி அவள் முன்பாகத் திரும்பி நின்றவன், அவளை மென்மையாக அணைத்துக் கொண்டான். தன் உடலின் சூட்டை அவளுக்குக் கொடுத்தான். அவனின் மார்பில் முகம் புதைத்தவள் வெகு நேரம் அழுது கொண்டிருந்தாள். ஆண்கள் அழக்கூடாது என்பது எப்போதும்போல கார்த்திக்கின் ஞாபகத்தில் இருந்தது.



# 47

**நீயென தின்னுயிர் கண்ணம்மா – எந்த**

**நேரமும் நின்றனைப் போற்றுவேன் – துயர்**

**போயின, போயின துன்பங்கள் - நினைப்**

**பொன்னெனக் கொண்ட பொழுதிலே**

- பாரதி

கார்த்திக் சக்தியின் அணைப்பு வெகு நேரம் நீடித்தது. கார்த்திக் அவனாக, ''எவ்வளவு நேரம் நிற்ப, கால் வலிக்கப் போகுது'' என்று சொல்லவும்,

''அப்போ தூக்கு!'' என்றாள்.

''ம்! எங்க? எங்க தூக்கிட்டுப் போறது?''

''நீ சொன்னதுக்கு அப்புறம் தான் எனக்கு கால் வலிக்கிறது தெரியுது. அங்க பெட்டுக்கு தூக்கிட்டுப் போ!'' என்றாள்.

கார்த்திக்கின் முகம் முழுக்க புன்னகை, பின்னே எட்டடி தூரத்தில் இருந்த கட்டிலுக்கு நடக்க முடிய வில்லையா.

அதைச் சொல்லும்போதும் அணைப்பில் தான் இருந்தாள். ''நீ தள்ளி நின்னா தானே தூக்க முடியும்.''

''ஒஹ்! தள்ளி நிக்கணுமா...'' என்று தலை தூக்கி முகம் பார்த்துக் கேட்க,

அவளையே இமைக்காமல் பார்த்தான். ''என்னதான் என்கிட்டே வெச்சிருக்க நீ. நானாவது பார்த்த நாள்ல இருந்து லவ் பண்றேன். நீ?'' என்று கேட்டவனை பார்த்துச் சிரித்தாள்.

''அதுதான் ஒவ்வொரு நாள் ராத்திரியும் நான் யோசிப்பேன்.''

''அது ஏன் ராத்திரி மட்டும்.''

''பகல் முழுசும் நீ கொஞ்சம் கூட ஞாபகம் வராத அளவுக்கு வேலையை இழுத்து விட்டுக்குவேன்'' என்றாள்.

அவனின் அணைப்பை இறுக்கியவன், அந்த பதிலை சொன்ன அவளின் இதழ்களில் தன் முதல் முத்திரையைப் பட்டும் படாமலும் மென்மையாகப் பதித்தான்.

இருவர் உடலிலுமே சிலிர்ப்பு, சக்தியின் உடல் கொஞ்சம் சூடானது.

பின்பு அவளை அப்படியே தூக்கினான். அது கீழே இருந்த கெஸ்ட் ரூம். ''உன் ரூமுக்குத் தூக்கிட்டா போகட்டுமா?'' என்றான்.

''ஹால்ல யாராவது இருந்தா?'' என்றாள். சொல்லும்போதே இறக்கி விட்டுவிடுவானோ என்பதாக தான் அந்த வார்த்தைகள் தயங்கித் தயங்கி வந்தன.

''யாரு இருப்பா? முனியம்மாக்கா தான் இருக்கும். பார்த்தா பார்க்கட்டுமே'' என்று அவளைத் தூக்கி ஹாலுக்கு வந்து மாடியேறினான்.

அவர்களின் நேரம் யாருமில்லை. அவளின் ரூம் தான் பூட்டியிருந்ததே. அவளை இறக்கி விட்டு சாவியை எடுத்துத் திறக்க நினைக்க,

''இறக்கி விடாத! சாவியைக் குடு! நான் திறக்கிறேன்!'' என்றாள் சக்தி.

''தெய்வாம்மா குடுத்ததை பேன்ட் பாக்கெட்ல போட்டேன்! நீ இறங்கினா தான் எடுக்க முடியும்!''

''நான் எடுக்கறேன்! எந்த சைட் பாக்கெட்?'' என்று கேட்டு அவள் கையை விடப் போக, கார்த்திக் தான் நெளிந்தான்.

''ரெண்டு மூணு செகண்ட் தான் இறங்கிக்கோ. நான் உடனே எடுத்துடறேன் அப்புறம் தூக்கிக்கறேன்'' என்றான் குழந்தைக்குச் சொல்வது போல.

''அதெல்லாம் முடியாது. நீ எனக்கு டிரஸ் சேஞ் பண்ண அச்சிஸ்ட் பண்ண கேட்ப, ஆனா நான் உன் பாக்கெட்ல இருந்து சாவி எடுக்கக் கூடாதா. ஏன் உனக்கு என்கூட குடும்பம் நடத்தற ஐடியாவே இல்லையா'' என்று அவன் கேட்டதைத் திருப்பிக் கேட்டாள்.

''அப்பா! உன்கிட்ட வாய் குடுக்க முடியாது!'' என்று கார்த்திக் சலிக்க,

''எப்போ நீ குடுத்த? நீ குடுக்கவேயில்லையே. வெச்ச உடனே எடுத்துகிட்ட'' என்றாள் கண் சிமிட்டி.

''ஓஹ் மை காட்! சக்தி... நீ இப்படில்லாம் பேசு வியா?'' ன்றான்.

''இன்னுமா நீ என்னை நல்ல பொண்ணுன்னு நம்பற. இப்பதானே உன் மண்டையை உடைச்சேன்'' என்றாள். பழைய குறும்புத்தனம் சக்தியிடம் நிமிடங்களில் திரும்பியிருந்தது.

''மண்டையை மட்டுமா உடைச்ச, காபியைக் கூடத் தான் கொட்டின.''

''அதுவா? அந்த காபி நல்லாவேயில்லை. அதான் எங்க கொட்டறதுன்னு தெரியாம உன் முகத்துல கொட்டிட்டேன்'' என்றாள் இமை கொட்டி.

சிரித்தவன், ''அம்மா தாயே! முடியலை! நீ என் பாக்கெட்லயாவது கைவிட்டுக்கோ இல்லை எங்கயாவது விட்டுக்கோ. என்ன வேணா பண்ணிக்கோ'' என்றான்.

''என்ன நான் பண்றதா? அப்போ நீ ஒண்ணும் பண்ணமாட்டியா?''

''முதல்ல கதவைத் திற.. உள்ளே போவோம். யாராவது வரப் போறாங்க'' என்றான் பொங்கிய சிரிப்புடன்.

பிறகு சக்தி அவளே தான் கைவிட்டு சாவியை எடுத்தாள். அவளே தான் திறந்தாள். கார்த்திக் அவளை கீழே இறக்கவேயில்லை.

நேரே சென்று அவளுடைய படுக்கையில் தான் இறக்கி விட்டான். படுக்கை முழுவதும் அவளின் புடவைகள் நகைகள் இறைந்து கிடந்தன.

அதுவே சொன்னது காலையில் அவளுக்கும் தெய் வானைக்கும் மிகப் பெரிய வாக்கு வாதம் நடந்திருக்க வேண்டும் என்று.

''காலையில ரொம்ப கலாட்டா பண்ணியிருப்ப போல நீ'' என்று கார்த்திக் கடிய சிரித்தாள்.

காலையில் தான் பார்த்த சக்தியா என்பது போல அவள் முகம் மாறியிருந்தது. முகத்தின் சோர்வு, கண் ணிற்குக் கீழே ஆரம்பித்த கருவளையம், எல்லாம் இப் போது அவளை அழகாகக் காட்டியது. முகத்தில் அப்படி ஒரு சோர்வோடு கலந்த பொலிவு.

அவளின் கண்கள் சோர்விலும் ஜொலித்தன.

கார்த்திக்கே அவளின் முகத்திற்கு ஒளியைக் கொடுக்கும் மந்திர விளக்க.

''இந்த டிரஸ் முதல்ல மாத்துரா'' என்றான்.

''கதவை லாக் பண்ணு'' என்று சக்தி சொல்லவும், கார்த்திக் கதவின் அருகே செல்லவும், தெய்வானை வரவும் சரியாக இருந்தது.

கார்த்திக் சக்தியைப் பார்க்க இருவர் முகத்திலும் ரகசியப் புன்னகை, ''வட போச்சே'' என்பது மாதிரி சக்தி உதடசைக்க, கண்களாலேயே சக்தியை அடக்கினான்.

மகளுக்கு உடம்பு சரியில்லை என்ற பதட்டத்தோடு வந்தவர், சக்தியின் முகப் பொலிவைப் பார்த்து வியந்தார். அது கார்த்திக்கினால் வந்த மாற்றம் என்று கூடவா அவருக்குத் தெரியாது.

''ஐயோ! என் பெண்ணே!'' என்று தான் பார்த்தார்.

சக்திக்கு இருந்த மனநிலையில் அதை கவனிக்க வில்லை. கார்த்திக் கவனித்தான்.

''ஏம்மா அப்படி பார்க்கறீங்க'' என்று கேட்டும் விட் டான்.

''உன்னைப் பார்த்தா மட்டும் என் பொண்ணுக்கு சந்தோசம் பொங்குது'' என்றார். உடனேயே ''என்ன தலையில உனக்கு பேண்டேஜ்'' என்றார்.

வீரமணி விசேஷ வீடு என்பதால் அவரிடம் சொல்லி யிருக்கவில்லை. சக்தியைப் பற்றியே இப்போது காரில் வரும்போது தான் சொன்னார். டிரைவர் இருந்ததால் சக்தி கார்த்திக்கைத் தாக்கியது பற்றி சொல்லவில்லை.

கார்த்திக் அவரின் என்ன பேண்டேஜ் என்ற கேள் வியைக் கவனிக்காமல், ''ஆமா! இன்னும் பொண்ணு உங்களையே பார்த்துட்டு உட்கார்ந்திருக்குமாக்கும்'' என்று நினைத்தான், ஆனால் வெளியே சொல்ல வில்லை.

கார்த்திக்கின் முகத்தைப் பார்த்தவர், ''என்ன இன்னும் எங்களையே பார்த்துட்டு இருப்பாளான்னு நக்கலா நினைச்சியா?'' என்று அவனைச் சரியாகக் கணித்தார்.

கார்த்திக் புன்னகைத்தான். அந்த புன்னகையே அப்படிதான் என்று சொல்ல,

''அப்படி தானே நினைச்ச?'' என்றார் மீண்டும்.

அதற்கும் புன்னகை.

அவனின் புன்னகை தெய்வானைக்கும் தொற்றியது.

''மா! என்னம்மா?'' என்றாள் சக்தி.

''ஒண்ணுமில்லை'' என்றவர், ''இப்போ எப்படி இருக்கு?''

''ஏன்? எனக்கென்ன?'' என்றாள்.

''அம்மாடி!'' என்று வியந்தவர், ''எனக்கு முடியலை. நீ மயக்கம் போட்டு விழலை. உனக்கு ட்ரிப்ஸ் ஏத்தலை. எதுவும் நடக்கலை'' என்றார்.

இங்கே ட்ரீட்மென்ட் வந்திருந்த அந்த லேடி டாக்டர், [illegible]விடம் விஷயத்தைச் சொல்லியிருக்க, அங்கே பந்தி [illegible] கொண்டிருக்கவும், சிவாவிடம், ''ஒரு அரை மணி நேரத்தில் வந்துடறேன்'' என்று சொல்லி இங்கே வந்தான்.

வீரமணி தெய்வானைக்கு குரல் கொடுக்க, எட்டிப் பார்த்தவர் பிரபுவைப் பார்த்ததும், ''டாக்டர் வந் திருக்கார்!'' என்று சொன்னார்.

''நான் போறேன்! இவளை டிரஸ் மாத்தி கூட்டுட்டு வாங்கம்மா'' என்றான்.

''எப்படி சக்தியின் உடையில் இவ்வளவு ரத்தம்?'' என்று கவனித்தவர், ''உன் தலையில என்ன இவ்வளவு பெரிய பேண்டேஜ்'' என்றார் மீண்டும் கார்த்திக்கிடம்.

''ஒண்ணுமில்லைமா சின்ன காயம், நீங்க அவளை டிரஸ் மாத்திக் கூட்டிட்டு வாங்க, பிரபு வெயிட் பண் றான்'' என்று பேச்சை மாற்றிச் சொல்லிப் போனான்.

பிரபு அவனைப் பார்த்தும், ''எப்படிடா காயம் ஆச்சு? தையல் போட்டாங்கலாமே! எப்படி ஆச்சு?'' என்றான்.

''இடிச்சிகிட்டேன்!''

''நிறைய ரத்தம் போயிருக்கும்னு சொன்னாங்க. அப்படி எங்க இடிச்சிக்கிட்ட.''

''விடுடா! ஒண்ணுமில்லை!''

''டீ டீ ஒண்ணு போடணும். இங்க வந்த டாக்டர் போடலையாம் சொன்னாங்க. நான் சிஸ்டரை எடுத்துட்டு வரச் சொல்லியிருக்கேன். போட்டுடலாம்.''

''மேடம்க்கு என்ன ஆச்சு... எப்படி மயக்கினாங்க?''

''உட்கார்ந்துட்டு இருந்தா அப்படியே மயங்கிட்டா.''

அதற்குள் சக்தி வந்தவள்.

''வாங்க பிரபுண்ணா!'' என்றாள்.

எப்போதும், ''பிரபு'' என்றோ, ''டாக்டர்'' என்றோ பெயர் சொல்லி மரியாதை பன்மையில் கூப்பிடுவாள். ஆனால் அண்ணா என்றெல்லாம் சொல்லியது இல்லை.

பிரபு ஆச்சர்யமாகக் கார்த்திக்கை பார்க்க அவன் தோளைக் குலுக்கினான்.

அவனின் பார்வை எல்லாம் சக்தியின் மேல் அவளின் கழுத்தில் இருந்த தாலிக்கயிறு, அது வெளியே தெரியாமல் இருக்க தான் அந்த ப்ளோவ்ஸ் அணிந்திருந்தாள் என்று புரிந்தது.

அவன் கட்டிய அதே கயிறாகத் தான் இருக்க வேண்டும். மாற்றவேயில்லை போல. மஞ்சள் போட்டிருந்தாலும் மிகவும் நைந்து போயிருந்தது கயிறு.

அவனை மேலும் யோசிக்க விடாமல் பிரபுவின் குரல் கலைத்தது. ''என்ன ஸ்விட்சா போட்ட? மேடம் முகத்துல பல்பு எரியுது'' என்றான் கார்த்திக்கிற்கு மட்டும் கேட்குமாறு.

ஒரு புன்னகை மட்டுமே கார்த்திக்கிடமிருந்து.

''அதானே! நீயாவது பேசறதாவது'' என்று பிரபு சொல்லும்போது அந்த ட்ரிப்ஸ் போட்ட சிஸ்டரே மீண்டும் ப்ளட் டெஸ்ட் ரிப்போர்ட்டையும், டீ டீ இன்ஜெக்ஷனையும் எடுத்து வந்திருந்தார்.

ப்ளட் டெஸ்ட் ரிபோர்ட்டைப் பார்த்தவன், ''ரொம்ப அனீமிக்கா இருக்காங்க. ஹிமோக்ளோபின் கன்டென்ட் கம்மியா இருக்கு. ப்ளட் ஏத்திப் பார்க்கலாம். நல்ல சத்தான உணவா எடுக்கணும். ஒரு கம்ப்ளீட் செக் அப் பண்ணிடலாம்.''

"ஒண்ணும் பயமில்லையே டாக்டர்!" என்று வீர மணியும் தெய்வானையும் கேட்டனர்.

"இனிமே தேறிடுவாங்க" என்றான் கார்த்திக்கைப் பார்த்தவாறு.

"அவன் தலையில இருக்குற கட்டைப் பிரிச்சு காயம் எப்படி இருக்குன்னு பாருங்க பிரபுண்ணா" என்றாள்.

"தேவையில்லை. அந்த டாக்டர் நல்லா சுச்சர் பண்ணுவாங்க. ஸோ அதை இன்னைக்கு ஒபன் பண்ண வேண்டாம், நாளைக்குப் பார்க்கலாம்" என்றான்.

பிறகு சிஸ்டரிடம், "இந்த டீ டீ அவருக்குப் போடுங்க" என்று கார்த்திக்கைக் காட்ட,

"நீங்களே போடுங்க டாக்டர்" என்றது அந்த சிஸ்டர் மிகவும் மெதுவான குரலில்,

"ஏன்மா?" என்று பிரபு கேட்கவும்,

"டாக்டர் சுச்சர் போட்டதுக்கே அப்படி முறைச்சாங்க மினிஸ்டர் மேடம், இன்னும் நான் ஊசி போட்டா, அப்புறம் என் மண்டையை உடைச்சிட்டா" ன்றாள்.

அப்போதுதான் பிரபுவிற்கு ஸ்ட்ரைக் ஆக, மெதுவாக கார்த்திக்கின் அருகில் போய், "இது சக்தி பண்ணின காயமா?" என்றான்.

"ஆம்" என்பது போல கார்த்திக் கண்களை மூடித் திறக்க, பிரபுவிற்கு என்ன பேசுவது என்றே தெரிய வில்லை.

"குடுங்க!" என்று டீ டீ ஊசியை வாங்கி அவனே கார்த்திக்கிற்குப் போட்டான். பிறகு அவன் கிளம்ப.

வாசல் வரை வந்த கார்த்திக், ''சக்தியை எப்போ ஹாஸ்பிடல் கூட்டிட்டு வரட்டும்!'' என்றான்.

''ஈவினிங் சுமித்ராவை வீட்டுக்குக் கூட்டிட்டு வந்ததும் சொல்றேன். நீ இப்படியே மேடம்ம கூட்டிட்டு வந்துடு. நான் அப்படியே வந்துடறேன்'' என்றான்.

''காயம் ஆழம்ன்னு தான் அந்த டாக்டர் சொன்னாங்க, வலி இருக்கா? பெயின் கில்லர் போட்டுக்கிறியா?' என்றான் அக்கறையாக பிரபு.

''குடு! வலி இருக்கு!'' என்றான் கார்த்திக்.

அந்த சிஸ்டர் கொண்டு வந்திருந்த டாக்டர் கிட்டில் இருக்கா என்று பார்க்க, இருந்தது.

அதைக் கொடுத்தவன், ''மண்டை உடைக்கிற அளவுக்கு என்ன சொன்ன?''

''பிரிஞ்சிடலாம்னு சொன்னேன்!'' என்று கார்த்திக் உண்மையை ஒப்புக்கொள்ள,

''உயிரோட விட்டாங்களேன்னு சந்தோஷப்படு! உடைச்சதுல தப்பே இல்லை'' என்று அவனின் பங்கிற்கு பிரபுவும் திட்டிவிட்டுப் போனான்.

அவன் உள்ளே வரவுமே, ''சாப்பிடலாம் கார்த்திக்! பசிக்குது!'' என்றாள் சக்தி.

அவளின் வலது கையில் தான் வென்ஃப்ளான் இருக்க, தெய்வானை சாதத்தை பிசைந்து ஊட்ட, கார்த்திக்கிடம் பேசிக்கொண்டே சக்தி அதை வாங்கிக் கொண்டாள்.

இதற்கு கார்த்திக் அதிகம் பேசவில்லை. அவள் பேசுவதைக் கேட்டுக் கொண்டு உம் கொட்டிக் கொண்டு தான் இருந்தான்.

அவனிடம் பேசிக் கொண்டே எப்போதும் உண்பதை விட அதிகமாக உண்டாள். அப்போதும் போதும் என்று சொல்லவில்லை.

தெய்வானை இன்னும் சாதம் பிசையவா வேண் டாமா என்று யோசிக்க, "அம்மா!" என்று அவள் சாதம் வாங்க வாயைத் திறக்க, "இரு சக்தி! ஒரு நிமிஷம்!" என்று தெய்வானை மறுபடியும் சாதத்தைப் போட்டு பிசையப் போக,

அவள் சாதம் உண்பதிலும் ஒரு கண் வைத்திருந்த கார்த்திக், "போதும்மா! வாமிட் பண்ணிடப் போறா!" என்று அவனாகத் தடுத்து நிறுத்தினான்.

"இல்ல! இன்னும் பசிக்கிற மாதிரி இருக்கு!" என்று சக்தி சொன்ன போதும்,

"போதும் சக்தி! கொஞ்ச நேரம் கழிச்சு கூட சாப் பிடுவியாம்!" என்றான்.

இதையெல்லாம் மௌனமாக வீரமணி கவனித்துக் கொண்டு தான் இருந்தார். சிறிது நாட்களாக சக்தி உணவு உண்ணும் அளவைக் கண்டு இருப்பவர் தானே அவர்.

இரண்டு இட்லி என்றால் இரண்டு இட்லி மட்டுமே சாப்பிடுவாள். உணவு எவ்வளவு ருசியாக இருந்தாலும் ஒரு பருக்கை மேலே இறங்காது. வீரமணி சொன்னாலும்,

தெய்வானை கெஞ்சினாலும், ஒரு வாய் கூட அதிகமாகப் போகாது.

சாப்பிட்டவுடன், "கொஞ்ச நேரம் தூங்கு சக்தி!" என்று தெய்வானை சொல்ல,

"எனக்குத் தூக்கம் வரலைம்மா!" என்றாள்.

"எனக்குத் தூக்கம் வர்ற மாதிரி இருக்கும்மா" என்று வேண்டுமென்றே கார்த்திக் சக்தியின் பொருட்டு சொல்ல,

"வா! தூங்குவியாம்!" என்று கார்த்திக்கை அழைத்துப் போனாள்.

"தூங்கு!" அவளின் என்று படுக்கையைக் காட்டவும்,

"பகல்ல எனக்கு பெட்ல படுத்தா தூக்கம் வராது. உட்கார்ந்து தானே தூங்குவேன்! உனக்குத் தெரியும் தானே! நீ படுத்துக்கோ!" என்றவன், ஒரு சோபாவை அருகிருந்து அதில் உட்கார்ந்து மடியில் ஒரு தலையணை வைத்து காலை படுக்கை மேல் போட்டு கண் மூடிக் கொண்டான்.

அதன் பிறகே சக்தி படுக்கையில் படுத்தாள். இரண்டு நிமிடம் போல அந்தப் புறம் இந்தப் புறம் புரண்டவள் உறக்கத்தில் ஆழ்ந்து விட்டாள்.

அவள் உறங்கி விட்டாள் என்று தெரிந்த கார்த்திக் ஏ சீ ஆன் செய்து, கதவை மூடிக் கொண்டு வெளியே வந்தான்.

அவன் வரும்போது வீரமணியின் குரல் தெய்வானை யிடம் பேசுவது கேட்க, தயங்கித் தயங்கி வந்தான்.

"எப்படி கண்ணசைவில் எல்லார் கிட்டயும் வேலை வாங்குறவ, சிறப்பா அவ அமைச்சகத்துல செயல் பட்டிருக்கான்னு பெயர் வாங்கியிருக்கா. யூத் ஐகான்னு தேர்ந்தெடுத்து இருக்காங்க! ஆனா குழந்தை மாதிரி கலாட்டா பண்றா" என்றார்.

கார்த்திக் தயங்குவதைப் பார்த்த தெய்வானை... "வா கார்த்திக்! உட்காரு!" என்றார்.

"கார்த்திக்கிட்ட மட்டும் தான் அப்படி நடந்துக் குவா?"

கார்த்திக்கும் வீரமணியிடம்... "இப்போ ரொம்ப இமோஷனலா டிஸ்டர்ப்டா இருக்கா. அதான் இப்படி கொஞ்ச நேரம் தான் சரியாயிடுவா" என்றான்.

"கொஞ்ச நேரத்துல சரியாயிடுவா? அப்புறம் சேர்ந்து இருக்கிறதா? வேண்டாமா? இந்தக் குழப்பமெல்லாம் வரும். என்ன பண்ணலாம் கார்த்திக். மேரேஜ் அன்னௌன்ஸ் பண்ணி, ஒரு ரிசப்ஷன் வச்சிடலாம். என்ன சொல்ற" என்றார் வீரமணி.

"அவளோட அரசியல் வாழ்க்கை. என்ன முடிவெடுப் பான்னு சொல்ல முடியாது ஐயா!" என்றான்.

"அதனால என்ன கார்த்திக்? குற்றம் என்ன நிரூ பணமா ஆகிடுச்சு. இதுக்கு மேல பிரச்சனை இருக் குறவன் எல்லாம் அமைச்சராவே இருக்கான். நீ சக்தியோட கணவன் தானே!"

"கேஸ் முடியறதுக்குள்ள இந்த ஆட்சி காலமே முடிஞ்சிடும்! அப்புறம் நம்ம கட்சி வருதா? வேற கட்சி வருதா? அப்படியே வந்தாலும் சக்திக்கு அமைச்சர்

பதவி கிடைக்குமா சொல்ல முடியாது. அரசியலை இதோட சம்மந்தப் படுத்த வேண்டாம்'' என்றார்.

கார்த்திக் அவரிடம் மறுத்துப் பேசவில்லை. அவரிடம் மறுத்துப் பேச அவனால் முடியாது.

ஆனால் சக்தி இதற்கு ஒப்புக் கொள்ள மாட்டாள் என்று தெரியும். கார்த்திக்குடன் திருமண அறிவிப்பை வெளியிட்டு விட்டால் பிறகு கண்டிப்பாக அமைச்சர் பதவியை தொடர மாட்டாள்.

குற்றம் சாட்டப்பட்ட ஒருவனை கணவன் என்று சொல்லிக் கொண்டு அவளால் அமைச்சர் பதவியில் தொடர முடியாது. சக்தியை அவனை விட அறிந்தவர் யார்?

வீரமணி இந்த மாதிரி முடிவெடுத்தால், மீண்டும் ஒரு பிரிவு அவர்களுக்குள் நிச்சயம்.

அவளால் கார்த்திக்கிற்கும், பதவிக்கும் நடுவில் போராட முடியாது.

அதைவிட நிச்சயம் அவள் அதைத் தாங்க மாட்டாள்.

அவன் யோசிக்கும் போதே அவனின் தொலைபேசி அடித்தது. ''கார்த்திக்! எங்க இருக்க? மறுபடியும் என்னை விட்டுட்டுப் போயிட்டியா?'' என்று சோர்வோடு தூக்கக் கலக்கத்தில் சக்தியின் குரல் ஒலிக்க,

''இங்க தான் இருக்கேன்!''

''இல்லை நான் வராதான்னு சொன்னேன்னு நீ வரவேயில்லை!''

''இல்லைடா இங்க தான் இருக்கேன்!''

"இல்லை! நீ போயிட்ட! பொய் சொல்ற!" என்று அவள் சொல்லும்போதே அவளின் ரூம் கதவைத் திறந் திருந்தான்.

"நீ இங்க தான் இருக்கியா? சரி!" என்று சொல்லி மீண்டும் உறங்க ஆரம்பித்தாள்.

சக்தி கார்த்திக்கைத் தேடியதும், அவன் விரைந்து ஓடியதும் பார்த்த வீரமணியும் தெய்வானையும் எல்லாம் நல்லபடியாக நடக்க வேண்டும் என்று அவர்களின் எண்ணத்தை ஒட்டி யோசித்தனர்.

வீரமணி சக்தியின் அரசியல் வாழ்க்கையை நினைக்க,

தெய்வானை சக்தியின் குடும்ப வாழ்க்கையைப் பற்றி நினைக்க,

கார்த்திக் செய்வதறியாது திகைத்து சக்தியையே பார்த்து அமர்ந்திருந்தான்.

இந்த வாழ்க்கை இதன் பயணங்கள்
என்னைக் கொண்டு செல்லும் இந்த பாதை
என்னை வீழ்த்தி விடுமோ

நான் ஜெயிக்கா விட்டாலும்
நான் தோற்க மாட்டேன் ஆனால்
இவள் தோற்று விடுவாள்!

என்னைப் பிரிந்தாலும் இவள் தோற்று விடுவாள்
நான் தோற்றாலும் இவள் தோற்று விடுவாள்!

இவள் என் சக்தி... என்னில் பாதியல்ல!

நானே அவள்! அவளே நான்

இவள் வீழவே கூடாது!



# 48

மங்கியதோர் நிலவினிலே கனவிலிது கண்டேன்

வயதுபதி னாறிருக்கும் இளவயது மங்கை

பொங்கிவரும் பெருநிலவு போன்றவொளி முகமும்

புன்னகையின் புதுநிலவும் போற்றவருந் தோற்றம்

- பாரதி

சக்தியை எப்படிச் சமாளிப்பது என்று யோசித்து யோசித்து கார்த்திக் இருந்த மனகுழப்பத்தில் உறங்கி விட்டான்.

சிறிது நேரம் கழித்து வந்து எட்டிப் பார்த்த தெய்வானை கார்த்திக் உட்கார்ந்து கொண்டே உறங்குவதையும் சக்தி படுக்கையில் உறங்குவதையும் பார்த்து சத்தம் செய்யாமல் மீண்டும் கதவை மூடி விட்டுச் சென்றார்.

மாலை ஏழு மணியாகியும் இருவரும் எழவில்லை. கார்த்திக் போன் கீழே இருக்க பிரபு விடாமல் போன் செய்து கொண்டிருந்தான். ஹாஸ்பிடலுக்கு சக்தியை அழைத்து வரச் சொல்ல,

வருகிறேன் என்று சொன்ன கார்த்திக் வராமல் இருக்கவும் வாசுகியும் போன் செய்தார்.

தெய்வானை மீண்டும் வந்து பார்க்கவும் இருவரும் எப்படி உறங்கினார்களோ அப்படியே உறங்கிக் கொண்டு இருந்தார்கள்.

சரியாக உறங்கியே பல நாட்கள் ஆன அந்த இரண்டு ஜீவன்களும் எது எப்படியோ ஒருவரின் அருகாமையில் மற்றொருவர் நிம்மதியாக உறங்கினர்.

தெய்வானைக்கு எழுப்புவதா வேண்டாமா என்று யோசனையாக இருக்க வேண்டாம் என்று விட்டு விட்டார்.

செல்வம் வேறு மூன்று முறையாக வந்து பார்ததான்.

கார்த்திக் எழுந்த போது மணி எட்டு. இருள் சூழ்ந்திருப்பதைப் பார்த்தவன், ''அச்சோ! ஹாஸ்பிடல் வருகிறேன் என்று சொல்லிவிட்டு உறங்கி விட்டேனே'' என்று அவசரமாக எழுந்தவன், ''கீழே வந்து போனை எடுத்து பிரபுவை அழைத்தான்.

''சாரி, பிரபு தூங்கிட்டேன். இப்போ வரட்டுமா.''

''வா, ஒரு பாட்டில் ப்ளட் ஏத்திடலாம்'' என்று பிரபு சொல்ல, சக்தியை எழுப்பி கூட்டிக் கொண்டு போனான்.

எழுந்த உடனே உற்சாகமாக ஏதோ பேச வந்த சக்தி, கார்த்திக்கின் யோசனையான முகத்தைப் பார்த்து அமைதியாகி விட்டாள்.

அவன் ஹாஸ்பிடல் போகலாம் என்றதும் உடனே கிளம்பி விட்டாள்.

''தேவைன்னா கூப்பிடு கார்த்திக்'' என்று சொல்லி தெய்வானை இருவருக்கும் தனிமை கொடுக்க விரும்பி வீட்டிலேயே இருந்து கொண்டார்.

சக்தி கார்த்திக்கின் அமைதியை கலைக்கவில்லை. அவனோ மௌனமாகவே வந்தாள். அவன் முகத்தையே அடிக்கடி பார்த்துக் கொண்டு இருந்தாள்.

''காயம் ரொம்ப வலிக்குதா?''

''இல்லை'' என்பது போலத் தலையாட்டினான்.

பிறகு சக்தி ஒன்றும் கேட்கவில்லை.

ஹாஸ்பிடல் வந்ததும் பிரபு அவளுக்கு ரத்தம் ஏற்ற ஏற்பாடு செய்தான்.

''ரொம்ப லேட் ஆகிடுச்சு, நாளைக்கு ஏத்திக்கலாமா'' என்று சக்தி கேட்க, பிரபு பதில் சொல்வதற்கு முன்பே,

''வேண்டாம், இப்போவே ஏத்தலாம்! அதுக்கு என்ன நேரம் காலம்'' என்று விட்டான் கார்த்திக்.

ரூமில் ப்ளட் ஏற்ற அவள் கையில் ஏற்கனவே குத்தப் பட்டிருந்த ஊசியை எடுத்து, புதிதாக வேறு இடத்தில் குத்தினர். அது ரத்த நாளம் சரியாகக் கிடைக்காமல் இரண்டு மூன்று முறை முயற்சிக்கும் படியாகிவிட,

கார்த்திக் சிஸ்டரிடம் கோபப்பட்டான். ''இதே வேலையை தான் எல்லா பேஷண்ட்கிட்டயும் செய் றீங்க. அப்பவும் இப்படித் தடுமாறலாமா?''

ஏற்கனவே மினிஸ்டர் அதுவுமில்லாமல் ஹாஸ்பிடல் ஓனர் என்று பயந்திருந்த சிஸ்டரின் கைகள் இன்னும் பயத்தில் தடுமாறின.

''கார்த்திக் அவங்களை ஏன் அதட்டுற...'' என்று சக்தி சமாதானப்படுத்த,

''எல்லாம் உன்னால தான்'' என்று அவளிடமும் கோபப்பட்டான்.

''ஒழுங்கா சாப்பிடறதுக்கு கூட என்ன, இப்போ வந்த வலியெல்லாம் தேவையா, தானா வந்தா வேற, நீயா இழுத்து விட்டுகிட்டா, உனக்கெல்லாம் அறிவே கிடையாது. எதெதுல அலட்சியமா இருக்குறதுன்னு வேணாம். ஹெல்த்துல எல்லாம் யாராவது ரிஸ்க் எடுப்பாங்களா. என் மேல கோவம்னா என்கிட்டே காட்டணும். அதுக்காக உன்னை நீ வருத்திக்குவியா'' என்று அவளிடம் ஆவேசமாகக் கேட்டான்.

கோபம் என்று ஒரு வார்த்தையில் அடக்க முடியாத அதீத கோபம். பார்ப்பவர்களுக்கு அடித்து விடுவானோ என்று பயம் கொடுக்கும் கோபம்.

சக்தி சற்றும் முகம் சுணக்கம் கூட காட்டவில்லை. ''சரியாகிடும் விடு!'' என்று மீண்டும் கார்த்திக்கை சமாதானப்படுத்தினால்,

''சரியாகாம இருக்கட்டும்! நானும் உன்னை மாதிரியே ஹெல்த்தை ஸ்பாயில் பண்ணிக்கிறேன்!'' என்றான் மிரட்டலாக.

''இல்லையில்லை சரியாகிடும்! நான் சரி பண்ணிக்குவேன்!'' என்றாள் அவசரமாக சக்தி.

பிரபு ஆச்சர்யமாகப் பார்த்தான். காலையில் கார்த்திக்கின் மண்டையை உடைத்த பெண்ணா இது, முன்பு ஒரு முறை காபியை அவனின் முகத்தில் ஊற்றிய

போதும் சக்தியின் கோபத்தைப் பார்த்திருக்கிறானே. எப்போதும் சக்தி கார்த்திக்கை அடக்க நினைப்பாள் போல என்பது மாதிரி பிரபு நினைத்திருக்க, அவள் அப்படியே வேறு மாதிரி தெரிந்தாள்.

ரத்தம் ஏற ஆரம்பிக்க, சிஸ்டர் வெளியே சென்றதும் கேட்டும் விட்டான்.

''ஏன்டா இவ்வளவு கோபப்படற, அமைதியா இருக் காங்க! அதே சமயம் உன்னை அசால்டா காயப்படுட றாங்க!'' என்று.

''எப்பவுமே அவன் அப்படிதான் என்கிட்டே கோவப் படுவான். அது யூசுவல்..'' என்றாள் சக்தி.

கார்த்திக் பதிலே சொல்லவில்லை.

''சரி நீயிரு! நான் ஹாஸ்பிடல் ஒரு ரவுண்டு பார்த்துட்டு வர்றேன்...'' என்றபடி பிரபு கிளம்பவும்,

''வைஷ்ணவி கிட்ட சொல்லிட்டியா? நீ வர லேட் ஆகும்னு!'' என்றான் அக்கறையாக கார்த்திக்.

''மணி பாரு பத்து! இந்த நேரத்துக்கு அவ நல்ல தூக்கத்துல இருப்பா. உன் தங்கச்சி உனக்கு மட்டும் தங்கச்சியில்ல கும்பகர்ணனுக்கும் தங்கச்சி, ரூம் கதவைக் கூட தாழ்ப்பாள் போட்டிருக்க மாட்டா. நான் லேட்டா போய் கதவைத் தட்டி அவ தூக்கம் கலைஞ் சிடுச்சுன்னா'' என்று சொல்லிக் கொண்டே சென் றான்.

கார்த்திக்கிற்கு முகம் முழுக்க புன்னகை. பிரபு வைஷ் ணவியை என்னதான் இப்படிக் கிண்டல் செய்தாலும் கோபப்பட்டாலும் அவள் மேல் அவனுக்கு அப்படி ஒரு

காதல். வைஷ்ணவியை அவளுடைய குறைகளுடன் அப்படியே ஏற்றுக் கொள்ளும் காதல்.

சக்தியை பார்த்து கார்த்திக், ''சும்மா சொல்றான்! இவன் கதவை தட்டினா வைஷ்ணவி தூக்கம் கெட்டுடும்னு ரூம் கதவை லாக் பண்ணாம தூங்குன்னு இவன் சொல்லியிருப்பான்'' என்றான் பிரபுவை பற்றி அறிந்தவனாக.

அந்த புன்னகை சக்தியையும் தொற்றியது.

வாசுகிக்கு போன் செய்து, சக்தியின் உடல்நிலை பற்றி சொல்லி அதனால் தான் வளைகாப்பிற்கு வர வில்லை என்று சொல்லி சிறிது நேரம் பேசிக் கொண் டிருந்து வைத்தான்.

அவனையே விடாமல் பார்த்திருந்தாள்.

பேசி முடித்ததும், ''என்ன?'' என்று கார்த்திக் கேட்க,

''நாம இனிமே சேர்ந்து தானே இருப்போம்! தனித் தனியா இருக்க மாட்டோம் தானே!'' என்றாள். குரலில் அவ்வளவு பயம் மீண்டும் பிரிய வேண்டி வருமோ என்று.

அவளருகில் அமர்ந்து அவளின் கைகளைப் பிடித்துக் கொண்டவன். ''எனக்கும் அது தான் ஆசை சக்தி'' என்றான்.

அவனை சக்தி புரியாமல் பார்க்கவும்,

''என்னதான் என்னோட வழக்கு பத்தி சர்ச்சைகள் குறைஞ்சிடுச்சுன்னாலும், இப்போ நம்ம கல்யாணத்தை அறிவிக்கும்போது திரும்ப எல்லோரும் பேசுவாங்க.''

''உங்கப்பா நீ பதவியிலயே இருக்கணும்னு இஷ்டப் படறார். ஒரு குற்றம் சாட்டப்பட்டவனை கணவ்னு சொல்லிட்டு நீ அமைச்சரா இருப்பியா? முடியுமா உன்னால? யோசி?'' என்றான்.

''நம்ம திருமண அறிவிப்பு கண்டிப்பா ஒரு சலசலப்பை ஏற்படுத்தும். நிறைய கேள்விகள் உன்னைப் பார்த்து வரும். யோசி?'' என்றான்.

இதைச் சொல்லும்போதே கதவைத் தட்டும் ஓசை கேட்க, யார் என்று பார்த்தால் செல்வம்.

''டேய் என்னடா இந்த நேரத்துல.''

''நான் தான் ஃபங்ஷன் முடிஞ்சதுமே வந்துடு வேன்னு சொல்லியிருந்தேன் தானே.''

''ப்ளட் ஏத்தறாங்கடா'' என்று சொல்லியை கார்த்திக், ''நீ வீட்டுக்குக் கிளம்பு... நான் பார்த்துக்கறேன்'' என்றான்.

''நான் இங்க வெளில இருக்கேன். நீங்க போகும்போது தான் போவேன்.''

''டேய்! தேவை இருக்காதுடா.''

''அப்படியெல்லாம் விட்டுட்டுப் போக முடியாது!'' என்று வெளியே ஒரு சேரை போட்டு அமர்ந்து கொண் டான்.

''சரி உன் ரூம்காவது போய் போய் தூங்குடா! நான் போகும் போது எழுப்பறேன்.''

''போங்க பாஸ்! நான் இங்க தான் இருப்பேன்!'' என்று அமர்ந்து கொண்டான்.

''சொன்னா கேட்க மாட்ட'' என்று அவனைத் திட்டிக் கொண்டே உள்ளே போனான்.

சக்தியின் முகம் சீரியசாக இருந்தது.

கார்த்திக் அவள் அருகில் அமர்ந்ததும், ''எனக்கு என்ன பண்றதுன்னு யோசிக்கவே முடியலை. எப்பவும் நான் என்ன பண்ணனும்னு நீதானே சொல்லுவ. நீ சொல்லு நான் என்ன பண்ணட்டும்'' என்றாள்.

கார்த்திக் அமைதியாக இருக்க,

''நான் கொஞ்சம் சேர்த்து சாப்பிட்டா கூட நான் வாமிட் பண்ணிடுவேன் வேண்டாம்னு சொல்ற. அது கூட உனக்குத் தெரியுது. இந்த விஷயத்துல நான் என்ன பண்ணனும்னு உனக்குத் தெரியாதா?''

''ஏன் அமைதியா இருக்க. நான் வராதன்னு சொன்னா ஏன் வராம இருந்த?''

''சக்தி ப்ளீஸ்! இதை பத்திப் பேச வேண்டாம்! நடந்ததையெல்லாம் விட்டுடுவோம். ஆகற வேலையைப் பார்ப்போம்.''

''சரி நடந்ததை விட்டுடுவோம். இன்னும் நான் என்ன செய்யட்டும் நீ சொல்லு.''

''அதை என்னால சொல்ல முடியாது'' என்றான்.

''ஏன்? ஏன் சொல்ல முடியாது?''

''நீ பதவியில இருக்கும்போது உன்னோட கணவனா என்னை அடையாளம் காட்டிகிட்டு உனக்கு அவப் பெயரை என்னால தேடித் தர முடியாது. அதே சமயம் இதையெல்லாம் விட்டுட்டு வந்துடுன்னும் சொல்ல முடியாது.''

''உங்கப்பா உனக்கு எவ்வளவு முக்கியமோ எனக்கும் அவ்வளவு முக்கியம்! அவரோட கனவுகளைச் சிதைக்கற உரிமை எனக்குக் கிடையாது. நீ அவரோட பொண்ணு! நீ பேசலாம். ஆனா என்னை நன்றின்ற உணர்ச்சில முழுசா கட்டிப் போட்டு இருக்கார்.''

''நான் இப்போல்லாம் கடவுள் கிட்ட கேட்கறதெல் லாம் ஒண்ணு தான்! நீ பாட்டுக்கு எனக்கு மினிஸ்டர் போஸ்ட் வேண்டாம்னு சொல்லி, அந்தக் கோபத்துல என்னை உன்னோட வாழ்க்கையை விட்டுப் போன்னு சொல்லிட்டா'' என்றான்.

''ஏன் சக்தி என் மனைவி! நான் அப்படிதான் கூட்டிட்டுப் போவேன்னு உன்னால சொல்ல முடியாதா. அவளுக்கு இந்த அரசியல் வேண்டாம்னு சொல்ல முடியாதா. என்னோட கார்த்திக்கு யாரைப் பார்த்தும் பயம் கிடையாது! எங்கப்பாவைப் பார்த்துகூட கிடை யாது. எனக்குத் தெரியும்'' என்றாள்.

அவள் சொன்ன விதமே நீ இதை என் அப்பாவிடம் சொல்ல வேண்டும் என்பதாகத் தான் இருந்தது.

''என்னால முடியாது சக்தி!'' என்றான்.

''ஏன்? ஏன் முடியாது?'' என்று படுக்கையில் இருந்து எழப் போக,

''எந்திரிக்காத'' என்று அவளின் தோள்களைப் பிடித்து படுக்க வைத்தான்.

அவள் மீண்டும் எழ முயற்சி செய்யவும்,

''நீ என்னை விட்டுப் போவும் அவர் என்னை விடலை. நான் எப்படி அவர்கிட்ட சொல்லுவேன்'' என்றான்.

''நான் உன்னை விட்டனா? எப்போ?'' என்றாள் புரியாமல் சக்தி.

''நான் ஜெயில்ல இருந்து வந்தப்போ!'' என்றான் கார்த்திக்.

அதைச் சொல்லும்போது அன்றைய நாட்களின் நினைவுக்கு அவன் போக..

அவன் கண்களுக்குள் கண்ணீர் வெப்பம், ஆண்கள் அழக் கூடாது என்ற அவனின் உறுதி கரைய. அவன் கண்களில் நீர் திரையிட்டது.

சக்தி பதறி விட்டாள்.

ரத்தம் ஏறிக் கொண்டிருக்கிறது. அவளை எழ விடாமல் அவளின் தோள்களை அழுத்திக் கொண்டிருந் தான்.

அவனின் கைகளைப் பிடித்து இழுத்து தன் மேலயே சாய்த்துக் கொண்டாள். கார்த்திக்கிற்கு அந்த நொடி சக்தி தேவையாய் இருக்க, அவன் சாய்ந்த பக்கம் ரத்தம் ஏற்றபடவில்லை மறுபுறம் தான் இருந்தது.

அவளருகில் படுத்து அவளை அணைத்து தோள் வளைவில் முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

அதுவே சிறிய பெட். அவள் மேல் தான் முழுதாகச் சாயும்படி இருந்தது.

என்ன மன பாரத்தை அவனுக்கு தான் கொடுத்தாம் என்று புரியாமலேயே அவனின் பாரத்தை தன் மீது தாங்கினாள் சக்தி.

அவனுடைய கண்ணீரின் ஈரத்தை சக்தியின் தோளின் முன் புறம் உணர்ந்தது. தன்னை அறியாமல் ஏதோ

பெரிய தப்பை செய்திருக்கிறோம் என்று சக்திக்கு புரிந்தது.

ஒரு கையால் அவனின் முகத்தை தன்னோடு சேர்த்து அழுத்திக் கொண்டாள்.

சிறிது நேரம் தான் அதற்குள் கட்டுக்குள் வந்திருந் தான், தான் அவள் மேல் இருக்கிறோம் என்று உடனே எழுந்து கொண்டான். ரத்தம் ஏறிக் கொண்டிருக்கிறதா என்று ஆராய்ந்து கொண்டிருந்தான்.

''என்ன தப்பு செஞ்சேன்'' என்றாள்.

''ஒண்ணுமில்லை விடு! அது என்னோட முட்டாள் தனம் தான்!'' என்றான் அவளை சமாதானப்படுத்த,

''இப்போ நீ சொல்லலை. இதையெல்லாம் பிடுங்கி எறிஞ்சிடுவேன்'' என்று அவள் ரத்தம் ஏறிக் கொண் டிருந்ததைப் பிய்த்து எறிப் போக,

''வேண்டாம்'' என்று கார்த்திக் அவளின் கையைப் பிடிக்க,

''அப்போ சொல்லு!'' என்றாள்.

''ஜெயில்ல இருந்து உங்கப்பா தான் ஜாமீன்ல கூட்டிட்டு வந்தார். வந்ததுமே உனக்கு போன் பண்ணி னேன்.''

''நீ வராத! என்னைப் பார்க்காதன்னு சொல்லிட்ட...! எங்க போவேன் நான். எனக்கு ஏது வீடு. உங்க வீட்ல இருந்தேன், அப்புறம் எங்க தாத்தா வீட்டுக்குப் போயிட் டேன். எனக்குன்னு வீடு எங்க இருக்கு.''

''நீ வராதன்னு சொல்லிட்ட! அது மட்டுமா? என் காலேஜ்ன்ற, உன் வேலையைக் காட்டாதன்ற. என்னை

ஒதுக்கற. அப்புறம் எப்படி உங்க வீட்ல உட்கார்ந்து இருக்க முடியும்.''

''நான் கிளம்பறேன்னு உங்கப்பாகிட்ட சொல்லிட்டு வந்துட்டேன். அவர் நான் என் அம்மாகிட்ட போறேன்னு நினைச்சிகிட்டார்.''

''ஆனா என்னால ஜெயில் இருந்து வந்துட்டு என் தாத்தா வீட்டுக்கு போக முடியலை. அவர் சாதாரணமா ஏதாவது சொல்லிட்டா கூட என்னால தாங்க முடியாது.''

''நான் வந்ததும் அம்மாவுக்கோ பிரபுவுக்கோ தெரியாது.''

''அப்புறம் எங்க போன?'' என்றாள் சக்தி பயத்தோடு, ஏதோ பெரிதாக வரப் போகிறது என்ற உள்ளுணர்வு உந்த.

''நீ ஒரு தடவை கோபத்துல என்கிட்டே சொன்ன. நான் நடுத்தெருவுல நிற்பேன்னு! அப்படிதான் நின்னேன். நடுத்தெருவுல தான் நின்னேன்...'' என்றான். சொல்லும்போது அவனின் குரலில் மிதமிஞ்சிய வலி.

சக்தி அவனையே திகைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ஒரு நைட் முழுசும் ஒரு பஸ் ஸ்டாப்ல போட்டிருந்த சேர்ல தான் உட்கார்ந்திருந்தேன். பசின்ற ஒன்னை அன்னைக்கு தான் ஃபீல் பண்ணினேன்.''

''லைஃப்ல நிறைய கஷ்டத்தைப் பார்த்திருக்கேன். ஆனா பசின்ற ஒண்ணை கடவுள் அதுவரைக்கும் எனக்குக் காட்டலை. அதை மட்டும் நீ ஏன் பார்க்காம இருக்கன்னு அதையும் எனக்குக் காட்டினார்.''

“எங்க போவேன் சொல்லு! யார்கிட்ட கேட்பேன். இவ்ளோ பெரிய உடம்பை வெச்சிக்கிட்டு ஒரு டீக்கு கூட வக்கில்லாம தான் உட்கார்ந்திருந்தேன்.”

“என்ன செய்வேன் சொல்லு! எங்க தங்குவேன். கூலி வேலக்கா போக முடியும். இல்லை யார்கிட்டயாவது சமபளத்துக்குப் போக முடியுமா.”

“என்னோட பேங்க் அக்கௌண்ட் ஹாண்டில் பண்ண முடியாது.”

“குடோவுன் சாவி எதுவும் என்கிட்ட கிடையாது. எல்லாம் மாரிகிட்ட கிட்ட இருக்கு. அப்போதைக்கு எதையும் விக்க முடியாது.”

“என் மனைவி என்னை வரவேண்டாம்னு சொல்லிட்டா.”

“நடுத்தெருவுல தான் நின்னேன்!” என்றான்.

“ஜெயில்ல இருந்து வந்திருக்கேன். கையில பத்து பைசா காசு கிடையாது. ஒரு டீக்குக் கூட வழி கிடையாது. நீ என்னைப் பார்க்கக் கூட ஒத்துக்கலையா. எனக்கு மனசு மூளை எதுவுமே செயல்படலை. ரொம்ப ஈசியா அந்த சிச்சுவேஷனை ஹாண்டில் பண்ணியிருக்கலாம்னு இப்போ தோணுது! ஆன அப்போ ஒண்ணுமே ஓடலை.”

“ராத்திரி எட்டு மணிக்கு அந்த பஸ் ஸ்டாப்ல உட்கார்ந்தவன், காலையில் எட்டு மணி வரைக்கும் அங்கயே உட்கார்ந்திருந்தேன்.”

“உலகத்துல நிஜமாவே கைல காசில்லாதவன் எல்லாம் பொணம் தான்.”

"என் மேல அத்தனை ஆயிரம் கோடி ஊழல், ஆனா அந்த நேரத்துல, அந்த இடத்துல ஒரு பைசா என்கிட்டே கிடையாது. போறதுக்கு இடமும் கிடையாது."

"உங்க வீட்டை விட்டு ரொம்ப தூரம் போகலை போல. எனக்குத் தெரியாமையே அந்த ஏரியால இருக்குற பஸ் ஸ்டாப்ல உட்கார்ந்திருந்திருக்கேன். யார் என்னைப் பார்த்தா பார்க்கலை எதுவுமே தெரியலை."

"என்னோட அதிர்ஷ்டம் உன்னோட அப்பா அந்த பக்கம் வாக்கிங் வந்ததுதான்."

"பார்த்தவர் தான்.. ஒண்ணுமே கேட்கலை என்னை. வீட்டுக்கு வான்னார். அங்க வரமாட்டேன்னேன்."

"பின்ன ஒண்ணுமே கேட்கலை. அவரும் என் பக்கத்துல உட்கார்ந்துகிட்டு காரை கொண்டு வரச் சொன்னார். முதல்ல என்னை ஹோட்டல்தான் கூட் டிட்டுப் போனார்."

"எங்க ரெண்டு பேருக்கும் சேர்த்து ஆர்டர் பண்ணி னார். தனியா ஆர்டர் பண்ணினா நான் சாப்பிட மாட் டேன்னு, சொல்லு எனக்கந்த சாப்பாடு தொண்டையில இறங்குமா. செத்தே போயிடலாம் போல இருந்தது."

"சொல்லு! முதல்லயே எங்கப்பாவுக்காக அவர் அவ்வளவு பண்ணியிருக்கார்! நான் அந்த மனுஷனை ஏமாத்தி இருக்கேன்."

"அவர் பொண்ணு வேற அவரை மீறி என்னைக் கல்யாணம் பண்ணியிருக்கு, அப்போவும் என்னை ஜாமீன்ல எடுத்திருக்கார்."

''என் முகத்தைப் பார்த்தே நான் சாப்பிடக் கூட இல்லைன்னு கண்டுபிடிச்சு சாப்பாடு வாங்கிக் குடுக்கறார், சொல்லு! எனக்கந்த சாப்பாடு இறங்குமா?''

''அந்த மனுஷரோட கனவுகளை என்னால கலைக்க முடியுமா?''

''அவரே என்னை ஒரு வீட்டுக்குக் கூட்டிட்டுப் போனார். மாரிக்கு தகவல் குடுத்து என்னைப் பார்க்கச் சொன்னார். அவரோட ஏ டி எம் கார்டை என்கிட்டே குடுத்து பின் நம்பரை அது மேல எழுதிக் கொடுத்தார்.''

''அதுவுமில்லாம ஒரு செக் புக் ஃபுல்லா எனக்குக் கையெழுத்து போட்டுக் கொடுத்தார்.''

''இதெல்லாம் நான் யூஸ் பண்ணாம விட்டுட்டா என்ன பண்றதுன்னு, ரெண்டு பெட்டி நிறைய பணத்தை வீட்ல கொண்டு வந்து வெச்சார்.''

''நான் இதெல்லாம் வேண்டாம்னு சொன்னப்போ என்ன சொன்னார் தெரியமா?''

''என்ன?'' என்று சக்தி குரல் நடுங்கக் கேட்க,

''நீ என் மாப்பிள்ளைன்றதுக்காக இதெல்லாம் செய்யலை. உன்னை என் பையன் மாதிரி நினைச்சதால தான் உன்னை என் வீட்ல வெச்சிருந்தேன்னார்.''

''உயிரோட சாகறதை அன்னைக்கு தான் ஃபீல் பண்ணினேன்'' என்றான்.

சொன்னது என்னவோ கார்த்திக் தான். ஆனால் அந்த உணர்வை சக்தி அப்போது பூரணமாக அனுபவித்தாள். தன்னுடைய மு... ...ாள் தனத்தினால் மீண்டும்

கார்த்திக்கை நன்றி என்னும் தளைக்குள் பூட்டி விட்டோம் என்று புரிந்தது.

இன்னும் என்னென்ன கஷ்டங்கள் அவனின் மனதிற்குள் பூட்டி வைத்திருக்கிறானோ என்றிருந்தது.

''அதான் நான் கொஞ்சம் ஸ்டான்ட் ஆனதுக்கு அப்புறமும் உன்னைத் தேடி வரலை. வந்த எல்லாத்தையும் விட்டுட்டு நீ வந்துடுவ. அவரோட கனவுகளை நான் எப்படி கலைப்பேன் சொல்லு...'' என்றான்.

இப்படிச் சொல்லு! சொல்லு! என்றால் சக்தி என்ன சொல்லுவாள்.

கார்த்திக்கை இந்த தளைகளில் இருந்து விடுவித்தே ஆக வேண்டும். அவனாக வரமாட்டான். தன்னால் மட்டுமே அவனின் காயங்களுக்கு மருந்தாக முடியும். தன் சந்தோசம் மட்டுமே அவனை சந்தோஷப்படுத்தும் என்று புரிந்தவள்.

''சொல்றதா, ம்! ஓகே!'' என்றவள், ''என் கண்ணைத் துடை!'' என்றாள். அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

கண்ணைத் துடைத்தான்.

''இப்போ என் முகம் நல்லா இருக்கா.''

''இருக்கு'' என்றான் எதற்கென்று புரியாமல்.

''அப்போ என்னை கிஸ் பண்ணு!''

''ஆங்!'' என்று விழித்தான் கார்த்திக்.

"குடுடா! நீயா குடுக்க மாட்ட! நானாவது கேட்டு வாங்கிக்கறேன்!" என்று கொஞ்ச, அவள் முகம் நோக்கி குனிந்தான் கார்த்திக்.

அவன் முகம் அருகில் வரவும், "சும்மா என் வாய்க்கு வலிக்குமோ? உன் வாய்க்கு வலிக்குமோன்னு? குடுக்கக் கூடாது, புரிஞ்சுதா!" என்றாள் உற்சாகமாக.

கார்த்திக் அவனின் உணர்வு பூர்வமான மன நிலையில் இருந்து சற்று உல்லாசமான மனநிலைக்கு மாறினான்.

"யோசிச்சுக்கோ? அப்புறம் என்னால முடியலைன்னு பேச்சு மாறக் கூடாது!" என்றான்.

"குடுக்கப் போறது ஒரு கிஸ்! அதுக்கு இவ்வளவு பெரிய பில்ட் அப்பா!"

"உன்னை!" என்று கார்த்திக் அவளின் இதழ்களை சற்று வன்மையாக முற்றுகையிட.. சளைக்காமல் ஈடு கொடுத்தாள்.

அவள் மூச்சுக்கு திணறுவாளோ என்று அவனாக தான் விடுவித்தான்.

விடுவித்தவன், அவள் முகம் பார்க்க, "நாட் பேட்! பட் இன்னும் பெட்டரா இருந்திருக்கலாம்!" என்று சொல்லவும்,

"அடிப்பாவி! இதை விட பெட்டரா, மூச்சு முட்டும்!"

"என்னவோ பத்து பொண்ணுங்களுக்கு குடுத்து எக்ஸ்பீரியன்ஸ் இருக்குற மாதிரி பேசற, ஒண்ணும் முட்டாது. நீ மறுபடியும் ட்ரை பண்ணு" என்றாள் அலட்சியம் போல.

வாய் விட்டுச் சிரித்த கார்த்திக், "மறுபடியும் வேணும்னா கேளு! அதுக்காக. நாட் பேட்! இன்னும் பெட்டரான்னு புளுகுவியா?"

"கண்டுபிடிச்சிட்டியா!" என்று அவளும் சிரித்தாள். கார்த்திக்கின் மனநிலையை முற்றிலும் அவளின் கட்டுக்குள் கொண்டு வந்திருந்தாள்.

"ஹாஸ்பிடல்ல இருக்க, ஞாபகம் இருக்கட்டும்" என்றான் கார்த்திக்.

"அது ஞாபகம் இருக்கறதாலதான். இப்போதைக்கு இது மட்டும் தான முடியும்னு தெரியும்" என்று சோகம் போலக் கூறியவள், "உன்னால முடியுமா? முடியாதா?" என்று சுணங்க.

மீண்டும் ஒரு இதழ் முற்றுகை. முற்று பெறாமல் நீண்டது.

கார்த்திக்கின் கஷ்டங்கள் எல்லாம் முன் ஜென்ம ஞாபகங்களோ என்ற உணர்வை அவனுக்குக் கொடுக்க முயன்று கொண்டிருந்தாள் சக்தி.

# 49

தீக்குள் விரலை வைத்தால்
நந்தலாலா - நின்னைத்
தீண்டுமின்பந் தோன்றுதடா
நந்தலாலா

பாரதி

முடிவு பெற விரும்பாத முத்தத்தை முடிக்க, கதவு தட்டப்பட.. விலகி கார்த்திக் சென்று பார்த்தான்.

பிரபு உள்ளே நுழைந்து ரத்தம் ஏறி முடிந்ததா என்று பார்த்து "வேற டெஸ்ட் எல்லாம் நாளைக்கு எடுத்துக் கலாம்" என்று கூறினான்.

பிறகு வீட்டிற்குக் கிளம்ப, செல்வம் தான் காரை எடுத்தான். "நீ ப்ரிசன்ல இருந்து வந்தப்போ இவன் இல் லையா?" என்று கார்த்திக்கை பார்த்துக் கேட்டாள் சக்தி.

"இல்லை, அவங்கக்கா ஒருத்தங்க சிங்கப்பூர்ல இருக்காங்க. அப்போ அவங்க கணவருக்கு ஆக்சிடென்ட் ஆகியிருந்தது. அதைப் பார்க்க சிங்கப்பூர் போயிருந் தான்."

"அதானே பார்த்தேன்! எப்படி உன்னை உன் சிஷ்யன் விட்டான்! நானே விட்டாலும் அவன் உன்னை விடமாட்டானே."

ஏதோ அவனைப் பற்றி பேசுகிறார்கள் என்று புரிந்த செல்வம்,

"என்னங்க மேடம்?" என்றான்.

இருவரும் அவன் பேசுவதைக் காதில் வாங்கவே யில்லை. அவர்களின் உலகத்திலேயே இருந்தனர். செல்வத்திற்கு மனதிற்கு நிறைவாக இருந்தது.

"உனக்குத் தெரிஞ்சா செஞ்ச! விடு சக்தி!" என்றான் கார்த்திக்.

"தெரிஞ்சு செஞ்சாலும், தெரியாம செஞ்சாலும் தப்பு, தப்பு தானே. ஐ'ம் சாரி கார்த்திக்," என்றாள் குரல் தழுதழுக்க.

''சக்தி!'' என்று அதட்டியவன், ''இதெல்லாம் நான் மறக்க நினைக்கற விஷயங்கள்! இனி எப்பவும் இதைப் பத்திப் பேசாத. நம்ம வாழ்க்கையில இதோட சுவடுகள் வேண்டாம்'' என்றான்.

''ம்,'' என்றவள் பின்பு அமைதியாகி விட்டாள்.

கார்த்திக் அவளின் கைகளை எடுத்து கைகளுக்குள் வைத்துக் கொண்டான்.

நேரம் ஒன்றுக்கு மேல் ஆகியிருந்தது. ஆனாலும் வீடு வந்தபோது ஹாலிலேயே வீரமணி உறங்கிக் கொண்டிருக்க, தெய்வானை இவர்களை எதிர்பார்த்து உறங்காமல் விழித்திருந்தார்.

என்ன? ஏதென்று விவரம் கேட்டார். அவர்கள் பேசும் சத்தத்திலேயே விழித்துக் கொண்ட வீரமணி எழுந்து அமர்ந்தார்.

பின்பு கார்த்திக் அவனின் வீட்டிற்குக் கிளம்பினான். ''அப்பா! கார்த்திக்கை இங்கேயே இருக்கச் சொல்லுங்களேன்'' என்றாள் நேரடியாக வீரமணியிடமே சக்தி.

காலையில் அவளின் அட்டகாசத்தை வீரமணி பார்த்தார் தானே. ''இங்கேயே இரு கார்த்திக்'' என்றார்.

கார்த்திக் தயங்க, அவனின் தயக்கத்தைப் பார்த்த சக்திக்குக் கோபம் வந்தது.

''அப்பா! அவன் போனா நானும் அவன் கூட போவேன்'' என்றாள் திரும்ப வீரமணியிடமே.

தூக்க கலக்கத்தில் இருந்தவர், ''இரு கார்த்திக்!'' என்றார் வற்புறுத்தலாக.

அவரின் பேச்சை மீற முடியாமல், ''சரி'' என்றவன் வெளியே வந்து செல்வத்தைப் பார்த்து ''நீ கிளம்புடா!'' என்றான்.

அவனிடம் சொல்லி உள்ளே வந்தால் வீரமணியும் இல்லை தெய்வானையும் இல்லை. ஹாலில் சக்தி மட்டுமே இருந்தாள்.

இப்போது அவன் எங்கே படுப்பது. அது அவனுக்குப் பெரிய சங்கடம்.

''எவ்வளவு நேரம் வெயிட் பண்றது, டையர்டா இருக்கு, வா!'' என்றபடி சக்தி மாடி ஏற,

''எங்க? நான் இங்கயே தூங்கறேன்'' என்றான் கார்த்திக்.

ஒன்றும் பேசாமல் சக்தி கீழே இறங்கி வீரமணியின் ரூம் நோக்கிப் போனாள். ''என்ன செய்யப் போற சக்தி'' என்று கார்த்திக் அருகில் வர,

''எங்கப்பா கிட்ட சொல்றேன்'' என்றாள்.

தலையில் கைவைத்தவன், ''யார்கிட்டயும் சொல்லாத நானே வர்றேன்'' என்று முன்னால் போக, இப்போது அவள் அப்படியே நின்றாள்.

''என்ன'' என்று அவன் திரும்பிப் பார்க்க, ''கால் வலிக்குது'' என்று சொல்லி அசையாமல் நிற்க,

யாரும் இருக்கிறார்களா என்று பார்வையை ஓட்டி யவன், அவளருகில் வந்து அவளைத் தூக்கிக் கொண்டு மாடியேறினான்.

''ரொம்ப பண்ற நீ'' என்று அவளைக் கடிந்தவாறே,

''ஏன்? ஒரே நாள்ல நான் உனக்கு போர் அடிச்சிட்டனா'' என்றாள்.

கார்த்திக் முறைக்க,

''என்ன முறைக்கிற?''

''ரொம்பப் பேசற நீ! என்னோட சக்தி இப்படியெல்லாம் அடுத்தவங்களை ஹர்ட் பண்ற மாதிரி பேச மாட்டா!'' என்று சொல்லிக் கொண்டே அவனை படுக்கையில் விட,

''நீ அடுத்தவன் இல்லையே கார்த்திக். உன்கிட்ட என் பேச்சுக்கு எந்த ரெஸ்ட்ரிக்ஸனும் கிடையாது. என் மனசுல என்ன தோணினாலும் பேசுவேன்.''

''பேசிக்கோ! என்ன வேணா பேசிக்கோ'' என்றவன், எங்கே தூங்குவது என்பது போலப் பார்வையை ஓட்ட,

''என்ன பார்க்கற, கண்ணை நோண்டி கைல குடுத்துடுவேன், ஒழுங்கா இங்க படு!'' என்றாள்.

''ரொம்ப அநியாயம் பண்ற சக்தி நீ! என்ன நினைப்பாங்க உங்க அப்பாவும், அம்மாவும்!''

''என்ன நினைப்பாங்க? நீ இங்கே இருக்கேன்னு சொல்லலை, நான் தான் இருக்கச் சொன்னேன். ஏதாவது நினைச்சா என்னைத் தான் நினைப்பாங்க. ஒரு ஒரு வாரம் அட்ஜஸ்ட் பண்ணு, அப்புறம் உன் வீட்டுக்கு நான் வந்துடறேன்.''

''உங்கப்பா விடமாட்டார். நீ ரிசைன் பண்ணத்தான் முடிவெடுப்பன்னு தெரியும், அதுக்கே ஏதாவது சொல்லுவார்.''

"அது என் பிரச்சனை, அது பத்தி உனக்கென்ன படு. தைரியமா படு. உன்னை ஒண்ணும் பண்ண மாட்டேன், உன் கற்புக்கு நான் கியாரண்டி" என்று வாக்குறுதி வேறு கொடுத்தாள்.

அவள் பேசுவதைக் கேட்க சிரிப்பு தான் வந்தது கார்த்திக்கிற்கு.

அவனும் பதிலுக்கு, "ஏதோ உன் வாக்குறுதியை நம்பி தான் தூங்கப் போறேன்." என்று அருகில் படுத்தான்.

பெரிய கட்டில் இன்னும் இரண்டு பேர் கூட தாராளமாகத் தூங்கலாம், கார்த்திக்கிற்கு அப்போது பார்த்து சந்தேகம் வந்தது.

"உன் ஒருத்திக்கு எதுக்கு இவ்வளவு பெரிய கட்டில்."

"காலையில இருந்ததா?" என்றாள்.

யோசித்தான். "இல்லையே."

"இப்போ எங்கம்மா போட்டிருப்பாங்க!" என்றாள் பெருமையாக.

"உங்கம்மா தானே! உன்னை மாதிரி ரொம்ப புத்திசாலி!" என்றான் கிண்டலாக.

"ஏன்...?"

"இருக்குறதை ஸ்பேஸ் கம்மி பண்ணினா பரவாயில்லை. இப்படி ஆளுக்கொரு பக்கம் தூங்குங்கன்ற மாதிரியா போயிடுவாங்க" என்றான் நக்கலாக.

"ஓஹ்! நீ அப்படி வர்றியா? சரி காலையில அம்மா கிட்ட எடுக்கச் சொல்லிடறேன்!" என்று அவள் சீரியசாகச் சொல்லவும்,

''அப்படி எதுவும் சொல்லி என் மானத்தை வாங்கிடாத சக்தி'' என்றான் பதறி. ஒரு வேலை அவள் சொல்லி விட்டாள் என்ன செய்வது என்று. அவனுக்கு சக்தியைத் தெரியும். செய்யாதே என்று சொன்னால் செய்து விடுவாள் என்று.

''சரி! சரி! பொழைச்சு போ!'' என்று பெரிய மனது மாதிரி சொன்னவள், ஒரு பக்கமாக உறங்க மறுபக்கம் கார்த்திக் படுத்தான்.

கார்த்திக் படுத்ததும் உறங்கிவிட, சக்திக்கு தான் உறக்கமேயில்லை. தான் துணை இருந்திருக்க வேண்டிய நேரத்தில் அவனை விட்டுவிட்டோம் என்பது மனதுக்கு சொல்லொணாத ஒரு துயரத்தைக் கொடுக்க, உறக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்தாள்.

அவனையே பார்த்தபடி படுத்துக் கொண்டிருந்தவள், ''சாரி கார்த்திக்!'' என்று முணுமுணுக்க... அந்த இரவின் நிசப்தத்தில் நன்கு கேட்டது. அந்த சிறு சத்தத்திற்கும் விழித்த கார்த்திக், ''நீ இன்னும் தூங்கலையா?'' என்றான்.

எழுந்து உட்கார்ந்தவள், ''ம்! தூக்கம் வரலை!''

''வா!'' என்று தலையசைத்து அவன் கூப்பிட,

அவனருகில் வந்தவளை இழுத்து மேலே போட்டுக் கொண்டான்.

''ம்! தூங்கு!'' என்று கார்த்திக் சொல்ல, அவன் மேல் படுத்திருந்த சக்தியைச் சிறிது நேரத்தில் எல்லாம் உறக்கம் தழுவியது.

சக்தி உறங்கி விட்டாள் என்று தெரிந்ததும், கார்த்திக்கும் கண் மூட அவனும் நிமிடத்தில் உறங்கி விட்டான்.

இருவருக்குள்ளும் எந்த சலனங்களும் இல்லை. உடல் சார்ந்த தேவைகள் அங்கே முன் நிறுத்தப் படவில்லை. இருவருமே எப்பொழுதும் மனதை அலை பாய விடாதவர்கள். அதிலும் அப்பொழுது அவர்களின் மனது வேறு யோசிக்கவில்லை.

அவர்களுக்குத் தேவை ஒருவருக்கொருவரின் அருகாமையே, துணையே.

அந்த முத்தப் பரிமாற்றம் கூட அவர்களின் உறவை மேம்படுத்திக் கொள்ள தான். ஒரு புதிய பரிமாணத்திற்கு வாழ்க்கையைக் கொண்டு செல்லத் தான்.

அவர்களின் நெருக்கத்தை அதிகப்படுத்திக் கொள்ள கார்த்திக்கின் மனதிற்கு ஒரு இதத்தை கொடுக்க சக்தியாக கையில் எடுத்தது தான். அவர்களுக்குள் எந்த அவசரமும் இல்லை.

சக்தி காலையில் எழுந்த போது.. கார்த்திக் இல்லை.

''அம்மா! கார்த்திக் எங்கே?'' என்று கேட்டபடி தான் சக்தி மாடிப்படியே இறங்கினாள்.

''லோடு ஏத்தணும்னு போயிருக்கான்மா!'' என்றார்.

அப்போதுதான் சக்திக்கு உரைத்தது, நேற்றிலிருந்து அவன் என்ன செய்து கொண்டிருக்கிறான் என்று கேட்கவில்லையென்று.

முதலில் அவன் வந்ததும் அதைக் கேட்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

வீரமணி பேப்பர் படித்துக் கொண்டிருந்தார் அவரருகில் போய் அமர்ந்தாள். அவளாகப் பேசட்டும் என்று வீரமணி இருக்க, அவர் ஏதாவது கேட்பாரா என்று சக்தியிருக்க, சிறிது நேரம் அமைதியில் கழிந்தது.

''அப்பா! என்ன முடிவு பண்ணியிருக்கீங்க?'' என்றாள் சக்தியாக.

''எதைப் பத்திமா?''

''என்னோட கல்யாணத்தைப் பத்தி!'' என்று சக்திக்கு கேட்க வாய் வரவில்லை.

சிறிது நேரம் அமைதியாக இருந்தவள். எழுந்து சென்று விட்டாள்.

எதிரில் வந்த தெய்வானை, சக்தியின் முகம் கோப மாக இருப்பதைப் பார்த்து, ''ஏங்க சக்தி கோபமா போறா!'' என்று கேட்க,

''கோபமா போறாளா..'' என்று இழுத்தார் வீரமணி.

''என்ன பேசினீங்க'' என்றார் கேள்வியாக.

''அப்பா என்ன முடிவு பண்ணியிருக்கீங்கன்னு கேட்டா. எதை பத்திம்மான்னு கேட்டேன். ஒண்ணும் பதில் சொல்லாம எந்திரிச்சு போயிட்டா'' என்றார்.

''நீங்க ஏன் இப்படி பண்ணினீங்க. அவ அவளைப் பத்தியும் கார்த்திக் பத்தியும் தான் கேட்டிருப்பா.''

''அவ கேட்டு இதுவரைக்கும் நாம ஏதாவது வேண் டாம்னு சொல்லியிருப்பமா. கார்த்திக்கை கல்யாணம் பண்ணிக்க இஷ்டப்படறேன்னு ஒரு வார்த்தை சொல்லியிருந்தா நான் நடத்தி வெச்சிருக்க மாட்

டேன்னா... அவசரப்பட்டு யாருக்கும் தெரியாம கல்யாணம் செஞ்சு, அப்புறம் யாரைக் கல்யாணம் பண்ணினேன்னு சொல்லாம, கல்யாணம் ஆனதை மட்டும் வெளில சொல்றா. நமக்குன்னு ஒரு கௌரவம் இல்லையா என்ன?''

''சின்ன பசங்க விளையாட்டுப் போல பண்றா!'' என்று கோபப்பட்டார்.

''நீங்க சொல்றது எல்லாம் சரிதான். நான் கேட்கற ஒரு விஷயத்துக்கு மட்டும் பதில் சொல்லுங்க. இது வரைக்கும் அவ ஏதாவது வேணும்னு கேட்டிருப்பாளா.''

நிஜம் தான்! சக்தி இதுவரை எதற்குமே பிடிவாதம் பிடித்ததோ கேட்டதோ கிடையாது.

''அவனை வீட்டுக்குள் விட்டது நீங்க. முதல் தடவை மட்டுமில்ல ரெண்டாவது தடவையும், நீங்க அவனை விட்டது மட்டுமல்ல. அவன் இந்த வீட்டுக்கு வரக் காரணமா இருந்ததும் நீங்க, சக்தியோட பொறுப்பை முழுசா அவன் கிட்ட விட்டதும் நீங்க. இப்படி எல்லாமே நீங்க செஞ்சிட்டு இப்போ எதுக்கு அவளைப் பேசறீங்க.''

''வெளில போய் யாரோ ஒருத்தனைப் பிடிச்சிருக்குன்னு என் பொண்ணு சொல்லலை. நீங்க வீட்டுக்குள்ள விட்ட ஒருத்தனை தான் சொல்றா. தப்பெல்லாம் உங்க மேல தான்.''

''அவங்கப்பாக்கு உதவி செய்யறேன்னு போய் இன்னைக்கு என் பொண்ணு வாழ்க்கை? எவ்வளவு கஷ்டம் அவளுக்கு. காதலிச்சுக் கல்யாணம் பண்றது தப்பா. நம்ம பண்ணலை. ஆனா என் பொண்ணு

கல்யாணம் பண்ணியும் அதை இன்னும் வெளில சொல்லாம தனியா இருக்கா...''

''எதுவாயிருந்தாலும் அவளோட முடிவுகளை நீங்க முடிவு பண்ணக் கூடாது. அவ ரிசைன் பண்ணிடுவா. பண்ணக்கூடாதுன்னு தானே நீங்க கோவத்தைக் காட்டறீங்க?'' என்றார் வீரமணியை சரியாக கணித்து.

''உங்களுக்கு வேணும்னா நீங்க அரசியல்ல நில்லுங்க! மந்திரியாகுங்க! என்ன வேணா ஆகுங்க. என்ன வயசா ஆகிப்போச்சு உங்களுக்கு. அவளை அவ இஷ்டத்துக்கு விடுங்க.''

''அவ ஏதாவது டிசைட் பண்ணியிருப்பா. நான் சொன்னா கேட்கப் போறதில்லை! அப்புறம் என்ன!'' என்றார்.

அவருக்கு சக்தியைப் பற்றித் தெரியும் அவரின் பெண் அல்லவா. முடிவெடுத்து விட்டால் மாற மாட்டாள். பிடிவாதம் ஒரு வார்த்தை கூட தன்னிடம் கேட்காமல் சொல்லாமல் கார்த்திக்கை திருமணம் செய்து கொண்டாள் தானே? அந்தக் கோபம் அவருக்குள் இருந்தது.

அதன் வெளிப்பாடே இது?

மந்திரி பதவி, இன்று வரும் நாளை போகும். அது போகும் வருத்தமும் இருந்தது.

கார்த்திக் அவளை ஹாஸ்பிடல் கூட்டிப் போக வேண்டும் என்று விரைவாக வந்துவிட்டான்.

''சாப்டியா? ஹாஸ்பிடல் கிளம்பலாமா?'' என்று கார்த்திக் கேட்க,

''இல்லை! இன்னைக்கு வேண்டாம்!'' என்றாள்.

''ஏன்? ஏன்? என்ன?''

''வேண்டாம்னா விடு!''

''என்ன ஆச்சு, நைட் நல்லா தானே இருந்த...''

''ப்ச், விடு கார்த்திக்!'' என்றாள்.

''என்னடா பிரச்சனை இப்போ! சொன்னா தானே தெரியும்.''

''நான் அப்பாகிட்ட என்ன முடிவு பண்ணி யிருக்கீங்கன்னு கேட்டேன். எதைப் பத்தின்னு கேட்கிறார். நம்ம கல்யாணத்தைப் பத்தின்னு எனக்குச் சொல்லப் பிடிக்கலை. வந்துட்டேன்'' என்றாள் கோபமாக.

சற்று யோசித்தவன்,

''அவர்கிட்ட கேட்காம தானே கல்யாணம் பண்ணி கிட்ட, இப்போ அதைப் பத்தி சொல்றதுக்கு என்ன? அதை தான் அவர் எதிர்பார்க்கிறாரோ என்னவோ?''

''நானெல்லாம் பேசமாட்டேன்! உன் பொண்டாட்டி வேணும்னா நீ கூட்டிட்டு போ! இல்லை இப்படியே இருந்துக்கலாம்!'' என்றாள்.

அவனை தான் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற முடிவெல்லாம் காணாமல் போயிருந்தது.

அவளைச் சமாதானப்படுத்த, ''சரி என்ன பண்ண னுமோ பண்ணலாம்! முதல்ல நீ ஹாஸ்பிடல் வா!'' என்றான்.

"ம்கூம்! வரமாட்டேன்!"

"சக்தி என்னைக் கோவப்படுத்தாத! எழுந்திரு!" என்றான் அதட்டலாக.

பதில் பேசாமல் அவனின் பின்னால் நடந்தாள்.

அவனே தான் வீரமணியிடமும் தெய்வானையிடமும் ஹாஸ்பிடல் செல்வதை சொன்னான். சக்தி தெய்வானையிடம் கூடச் சொல்லவில்லை.

ஹாஸ்பிடலில் ஒரு கம்ப்ளீட் செக் அப் செய்து, பெரிதாக ஒன்றுமில்லை. அவள் வீக்காக இருக்கிறாள் என்ற ரிசல்ட் மட்டுமே வர, அப்போதுதான் நிம்மதி யாகிற்று கார்த்திக்கு.

வெளியே வந்தவுடனே சக்தி, "கார்த்திக் எனக்கும் அப்பாக்கும் நாளைக்குக் காலைல ஃபிளைட்ல டெல்லிக்கு டிக்கெட் புக் பண்ணிடு. அவர் வந்தா வரட்டும்! இல்லை நான் பார்த்துக்கறேன்."

டெல்லிக்கு அப்போதும்கூட வாங்க என்று வீரமணியைச் சக்தி கூப்பிடவில்லை. அவரும் ஒன்றும் கேட்கவில்லை. ஓரளவிற்கு தந்தை அனுமானித் திருப்பார் தான் ராஜினாமா செய்யப் போவதை அதான் இந்தக் கோபம் என்று சக்திக்குப் புரிந்தது.

இப்போது மீண்டும் தானாகப் போய் பேசினால் வேண்டாம் என்று சொல்வார் என்று தெரிந்து சக்தியும் பேசவில்லை.

டிக்கெட் புக் செய்திருந்ததையே கார்த்திக் தான் சொன்னான். மகளும் தந்தையும் பேசிக் கொள்ளாம லேயே டெல்லி பயணப்பட்டனர். அவளுக்கு (முடிகள

வேண்டிய வேலைகள் சிறிது இருந்ததால் அவள் முதலில் அவளின் அமைச்சகம் சென்றாள்.

அங்கு சென்றவள், விரைந்து வேலைகளை முடித்து, கங்காதரனை மட்டும் அழைத்து தான் ராஜினாமா செய்யப் போவதைப் பற்றிச் சொன்னாள்.

"ஏன்?" என்றான் அவன் அதிர்ச்சியாக,

"எனக்குக் கல்யாணமாயிடுச்சுன்னு சொன்னதை நீங்க பார்த்திருப்பீங்க."

"ஆம்" என்பது போலத் தலையாட்டியவன், "நம்ம அஃபீசியலா நிறைய பேசியிருந்தாலும், நீங்க பெர்சனலா என்கிட்டே ஒரு வார்த்தை கூடப் பேசினதில்லை! அதான் கேட்கலை!" என்றான்.

கார்த்திக்கைப் பற்றி தான் எதுவும் அவனிடம் பேசிவிடக் கூடாதே என்பதற்காக அதிகம் பெர்சனலாகப் பேசியது இல்லை சக்தி.

புன்னகைத்தவள், "என்னோட கணவர் கார்த்திக். ஐ மீன் கார்த்திகேயன், வாசுகி க்ரானைட்ஸ். அதான் இந்த ரெசிக்னேஷன்" என்றாள்.

கங்காதரனின் முகம் ஒரு மாதிரியாகி விட்டது. "உங்கப்பாக்கும் அவருக்கும் ரொம்ப பழக்கம்னு தெரியும்! ரொம்ப வருஷம் சேர்ந்து இருந்தாங்க தொழில்ன்னு தெரியும்! அதான் இந்த ட்ரான்ஸ்பர்ன்னு தெரியும். அவ்வளவு கூடவா தெரியாம இருப்போம். ஆனா இதெல்லாம் சகஜம் தான் அதான் நான் எதுவும் இஸ்ஸு ஆக்கலை."

''ஏன் நான் இங்க வர்றதுக்கு முன்னாடி என் குடும்பமே காணாமப் போச்சு! உடனே திரும்ப வந்துட்டாங்க. உடனே என் ட்ரான்ஸ்பர், இதெல்லாம் அவர் தான் காரணம்னு என் மனசு சொல்லுது. ஆனா எதுக்கும் எந்த ஃப்ரூப்பும் கிடையாது அதான் சும்மா விட்டேன்'' என்றான்.

''ஆனா உங்க கணவர்ன்னு நான் கொஞ்சம் கூட நினைக்கலை. நாம சேர்ந்து ஒரு வருஷம் வேலை பார்த்திருக்கோம். நான் பல தடவை உங்க புத்திசாலித் தனத்தைப் பார்த்து, உங்க நேர்மையைப் பார்த்து வியந்திருக்கிறேன்.''

''இப்படி இருக்குற நீங்க கூட இந்த மாதிரி ஆட்களை உங்க கணவரா தேர்ந்தெடுக்கும்போது இந்த மாதிரி ஆட்கள் தப்பானவங்கன்னு மற்ற பெண்களுக்கும் தெரியறதில்லை.''

''தப்பு செய்யறவன் எல்லாம் ஹீரோ ஆகிடறாங்க'' என்றான் ஆதங்கத்தோடு.

''எனக்கு மத்தவங்களைப் பத்தித் தெரியாது. ஆனா நான் கார்த்திக்கோட மனைவின்றதுனால மட்டும் இதைச் சொல்லலை. அவனை எனக்குக் கிட்டத்தட்ட பன்னிரண்டு வருஷத்துக்கும் அதிகமா தெரியும்.''

''கார்த்திக்கின்ற மனுஷன் விமர்சனங்களுக்கு அப் பாற்பட்டவன். அவன் செஞ்சது நியாயம், தப்பில் லைன்னு நான் சொல்ல வரலை. அவன் நேர்மையா இல்லாம இருந்திருக்கலாம். ஆனா என்னோட இந்த நேர்மை அவன் குடுத்ததுதான்'' என்றாள் பெருமையாக.

''என்னோட இந்த தைரியமான நேர்மையான செயல்பாடுகள் அவன் கத்துக் கொடுத்தது தான். அவனும் மாறுவான் எனக்கு நம்பிக்கை இருக்கு.''

''மாறிட்டா அவர் செஞ்சது எல்லாம் இல்லைன்னு ஆகிடுமா.''

''இதுக்கு என்கிட்டே பதில் கிடையாது! ஆனா இந்தக் கேள்விக்கும் கண்டிப்பா ஒரு நாள் நான் உங்களுக்கு பதில் சொல்லுவேன்!'' என்றாள் புன்னகையோடு.

''இப்போ பாருங்க, நான் ரிசைன் பண்ணனும்னு எந்த அவசியமும் கிடையாது. கேஸ் தான் நடக்குது. எப்படியும் என்னோட இந்த மந்திரி பதவி முடியறதுக்கு முன்னாடி, கேஸ் முடியப் போறதில்லை.''

''நான் ரிசைன் பண்ணினாலும் விமர்சிப்பாங்க! பண்ணலைன்னாலும் விமர்சிப்பாங்க! ஆனா பதவில நான் இருந்தா எங்களால சேர்ந்து வாழ முடியாது. என் னாலயும் முடியாது. அவனும் அதை எப்பவும் விரும்ப மாட்டான்.''

அவள் சொல்லும் விதத்தைப் பார்த்தவன், ''ரொம்ப லவ் பண்றீங்க போல அவரை.'' என்றான்.

''அது எனக்குத் தெரியாது. பட் யு நோ! ஹி லவ்ஸ் மீ எ லாட். அவன் என்னை ரொம்ப லவ் பண்றான். ஆனா ரொம்ப அடமென்ட், இன்னும் சொன்னதுகூட இல்லை.''

''என்ன பதில் இது'' என்று யோசனையாக கங்காதரன் பார்த்தாலும், சக்தி சொன்ன விதத்தில் அவன் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

"நான் தப்பா நினைச்சிட்டிருக்குற ஒரு மனுஷனை பத்தின கண்ணோட்டங்களை உங்க கிட்ட பேசின இந்த கொஞ்ச நேரத்திலயே மாத்திடுவீங்க போல இருக்கே" என்றான்.

புன்னகைத்தவள், "எதிர்காலத்துல எப்பவாவது சந்தர்ப்பம் கிடைச்சா கார்த்திக்கோட உங்களை மீட் பண்றேன். நான் சொல்றது எந்தளவுக்கு நிஜம்னு நீங்க புரிஞ்சுக்குவீங்க."

"கீப் இன் டச்னு என்னால சொல்ல முடியாது. ஏன்னா என்னோட எப்பவும் கார்த்திக் இருப்பான். நீங்க உங்க பதவியில இருக்கீங்க. சந்தர்ப்பம் அமைஞ்சாலும் தவிர்க்கறது தான் பரவாயில்லை!" என்று சொல்லி சக்தி விடைபெற,

"அப்படி ஏன் மேடம் சொல்றீங்க? எனக்கு மனசுக்கு சரின்னு பட்டா கண்டிப்பா உங்களைச் சந்திப்பேன். நீங்க தான் அப்படி ஒரு காலம் வரும்னு கான்ஃபிடன்டா இருக்கீங்களே. பார்ப்போம்!" என்று அவனும் இன்முகத் தோட விடை கொடுத்தான்.

"கேட்கக் கூடாது! கேட்டாலும் நீங்க வேண்டாம்னு தான் சொல்வீங்க! இருந்தாலும் கேட்கறேன், நீங்க இங்க கம்ப்பர்ட்டபிளா இருக்கறீங்களா? இல்லை வேற எங்கயாவது ட்ரான்ஸ்பர் இஷ்டப்பட்டா, செஞ்சு கொடுக் கறேன்!" என்றாள்.

"அது கிருஷ்ணகிரிக்கு திரும்பவும் கலெக்டரான்னா பரவாயில்லையா?" என்றான் கங்காதரன் வேண்டு மென்றே.

சக்தி சிறிதும் யோசிக்கவில்லை, "ட்ரான்ஸ்பர் பண்ணச் சொல்லட்டுமா" என்றாள்.

"வேண்டாம்!" என்றான் புன்னகையுடன்.

"நோ! நோ! இஷ்டப்பட்டீங்கன்னா வாங்க! we are ready to face the consequences" என்றாள். கார்த்திக்கை அவள் தனித்து சொல்லவில்லை தன்னோடு சேர்த்து தான் சொன்னாள்.

"இல்லை மேடம்! வேண்டாம்!" என்றான் மிகவும் மரியாதையாக கங்காதரன்.

"nice working experience with you sir" என்று அவள் விடைபெற,

சக்தியை ஏற்கனவே கங்காதரனுக்குப் பிடிக்கும், இப்போது இன்னும் அதிகமாகப் பிடித்தது. "என்னுடைய நேர்மை அவன் கொடுத்தது..." அவளின் வார்த்தை களில் அவன் முகம் புன்னகையைப் பூசியது.

சக்தி முதலில் அமைச்சர் பதவியை மட்டும் ராஜி னாமா செய்ய யோசித்திருந்தவள். இப்போது முற்றிலும் எண்ணத்தை மாற்றி எம்.பி. பதவியையும் ராஜினாமா செய்தாள்.

தந்தையிடம் எதையும் கலந்தாலோசிக்கவில்லை.

நம்மிடையே வாரிசு அரசியல் என்பது சகஜம். கட்சி தலைமையிடம் பேசி மாறுதலாகத் தந்தையைப் பரிந் துரைத்தாள்.

கட்சியும் மந்திரி பதவியை அவருக்குக் கொடுக்க முடிவு செய்தது. எம்.பி. பதவியில் இல்லாவிட்டாலும்

மந்திரியாகி ஆறு மாதத்திற்குள் எலெக்சனில் நின்று ஜெயித்தால் போதும்.

எப்படியும் சர்ச்சைகள் வரும் தான். வீரமணி அதைப் பற்றி எல்லாம் கவலைப்பட மாட்டார் என்றுணர்ந்தவள் தைரியமாக இந்த முடிவை எடுத்தாள்.

"அப்பா! நீங்க என்ன ஏதுன்னு பார்த்துட்டு வாங்க!" என்று சொல்லி அடுத்த நாளே டெல்லியில் இருந்து தமிழ் நாட்டிற்குள் வந்தவள், கார்த்திக்கிடம் முன்பே வந்து கூட்டிப் போகச் சொல்லியிருந்தாள்.

அவன் சக்தியை அழைத்துக் கொண்டு கிருஷ்ண கிரியை நெருங்கும் சமயம், "நம்ம வீட்டுக்குப் போக லாம் கார்த்திக்!" என்றாள்.

"அவசரப்படாத உங்கப்பா அனுப்புவார்" என்று கெஞ்சிக் கொஞ்சி அவளை வீட்டில் விட்டான் கார்ததிக்.



# 50

மாரனம் புகளென்மீது வாரிவாரி வீச நீ - கண்
பாராயோ - வந்து சேராயோ, கண்ணம்மா!
நின்னையே ரதியென்று நினைக்கிறேனடி கண்ணம்மா
யாவு மே சுகமுனிக் கொர் ஈசனா மெனக்குன் தோற்றம்
மேவு மே இங்கு யாவுமே, கண்ணம்மா!

- பாரதி

வீரமணி வருவதற்கு இரண்டு மூன்று நாட்கள் ஆனது. கார்த்திக்கிடம் இங்கே தங்கிக் கொள் என்று சக்தி சொல்லியும் அவளின் வீட்டில் தங்க ஒத்துக் கொள்ளவில்லை. ''உங்கப்பா வரட்டும்'' என்று விட்டான்.

அதன் பிறகு சக்தியும் வற்புறுத்தவில்லை. அவள் காலேஜ் வேலைகளில் இறங்கிவிட்டாள்.

அவள் மாலை வீடு திரும்பிய நேரம் கார்த்திக் அவளுக்காக வீட்டில் காத்திருந்தான்.

''என்ன கார்த்திக்? அதிசயமா நான் வீட்டுக்கு வர்றியான்னு கேட்காததுக்கு முன்னாடியே வீட்ல இருக்க,''

அவள் கேட்டுக் கொண்டு இருக்கும்போதே செல்வம் வந்தான். ''என்ன செல்வம்? இப்போ தானே வீட்டுக்குப் போறேன்னு சொல்லிட்டுப் போனீங்க'' என்றாள் சக்தி.

''பாஸ் தான் மேடம் வரச் சொன்னார்'' என்றான் செல்வம்.

கார்த்திக்கை சக்தி பார்க்க, ''இன்னைக்கு உங்க காலேஜ்ல ஏதாவது இன்டர்வ்யூ நடந்ததா'' என்றான் இருவரையும் பார்த்து கார்த்திக்.

''ஆமாம், அட்மினிஸ்ட்ரேஷன்க்கு ஆள் வேணும்னு இன்னைக்கு இன்டர்வ்யூ இருந்தது'' என்றாள் சக்தி.

''யார் பண்ணினா?'' என்றான் கார்த்திக்.

செல்வம் தான் பண்ணினான்.

''நீதானா அது?'' என்றான் கார்த்திக் செல்வத்தைப் பார்த்து.

''என்ன பாஸ்?'' என்றான் புரியாமல் செல்வம்.

''ஏன்டா இன்டர்வ்யூ வந்தா கேள்வி கேளு. பதில் சொன்னா ஓகே இல்லைன்னா செலக்ட் பண்ணாத! அதை விட்டுட்டு மிரட்டுவியா?'' என்றான் கோபமாக கார்த்திக்.

கார்த்திக்கின் கோபத்தை உணர்ந்த சக்தி, ''யாரை மிரட்டினான்?'' என்றான் புரியாமல் கேட்டாள்.

''அவனையே கேளு?''

''மிரட்டினிங்களா செல்வம், யாரை, எதுக்கு?'' என்றாள் சக்தி.

''அது வந்து...'' என்று இழுத்தான். இழுத்ததிலேயே அவன் செய்திருக்கிறான் என்று சக்திக்குப் புரிந்தது.

''யாரை? உனக்கு எப்படித் தெரியும்?'' என்று கார்த்திக்கையும் பார்த்து கேள்விகளை அடுக்கினாள்.

''முதல்ல நீ அவனைக் கேளு'' என்றான் கார்த்திக்.

''பாஸ் அது...'' என்று செல்வம் இழுக்க,

''சொல்லுடா'' என்றான் கார்த்திக்.

''நடந்ததைச் சொல்றேன், கோவிக்கக் கூடாது!'' என்றான் செல்வம்.

''முதல்ல சொல்லுடா!''

''அந்த பொண்ணு உள்ள வந்துச்சா, அவ்ளோ அழகா இருந்துச்சு பாஸ், நான் பார்த்துட்டே இருந்தனா?''

''பக்கத்துல வந்தவுடனே, உட்காருங்க பேர் என் னன்னு கேட்டேன்.''

"அது வந்து ண்ணா வந்து ண்ணான்னு சொல்லிச்சா. முத முதலா இப்போ தான் ஒரு பொண்ணைப் பார்த்து நான் சைட் அடிக்கிறேன், அது என்னை அண்ணான்னு சொன்னா எவ்வளவு கோபம் வரும்! அதான் கோவத்துல எந்தக் கேள்வியும் கேட்காம எந்திரிச்சுப் போன்னு கொஞ்சம் கடுமையா சொல்லிட்டேன்."

"உங்களுக்குத் தெரிஞ்சவங்களா பாஸ்! என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாம் தானே" என்றான் செல்வம்.

செல்வம் சொல்லச் சொல்லவே கார்த்திக்கின் முகத்தில் அப்படி ஒரு சிரிப்பு.

"எனக்கு ரொம்ப தெரிஞ்ச பொண்ணு தான்! ஆனா வேலைக்கு எடுத்துக்கோங்கன்னு சொல்ல முடியாதே! உங்க மேடம் தான் இது என்னோட காலேஜ். அதுல நான் சொல்றதை தான் ஃபால்லோ பண்ணனும்னு சொல்லுவாளே! அதான் சொல்லலை!" என்றான் சீரியசாகவே.

"தேவையில்லாததை பேசாத கார்த்திக்! இன்னும் உன் தலைல தையல் கூடப் பிரிக்கலை. ஞாபகம் இருக்கட்டும், திரும்ப உடைக்கவும் யோசிக்க மாட்டேன். நீ யோசிச்சு பேசு" என்று அவனைக் கோபமாக அதட்டிய சக்தி, "யார் அந்தப் பொண்ணு முதல்ல அதைச் சொல்லு!" என்றாள்.

அவளின் கோபம் பார்த்து தணிந்தவன், "மாரியோட பொண்ணு! என்கிட்டே கேட்டுட்டு தான் அவன் இன்டர்வ்யூக்கு அனுப்பினான். நான் தான் அனுப்பி

விடுன்னு சொன்னேன். சாயந்தரம் உன்கிட்ட விஷயத்தைச் சொல்லலாம்னு இருந்தேன்! அதுக்குள்ள இந்த லூசு பய இப்படி பண்ணுவான்னு எனக்கென்ன தெரியும்'' என்றான் எரிச்சலாக கார்த்திக்.

''என்ன பாஸ் லூசு மாதிரி செஞ்சேன்! அண்ணான்னு கூப்பிட்டா கோவம் வராதா?''

''டேய்! நிஜமாவே நீ லூசு தான்டா! அந்த பொண்ணு பேரு வந்தானாடா!'' என்றான் சிரிப்போடு கார்த்திக்.

சக்திக்கும் சிரிப்பும் பொங்கியது. ''இப்படியா செல்வம் நீங்க பல்ப் வாங்குவீங்க!'' என்று சக்தி கிண்டல் செய்ய, செல்வத்தின் முகம் ஒரு வெட்கப் புன்னகையை பூசியது.

''அவ வந்து ண்ணான்னு சொன்ன மாதிரி எனக்குக் காதுல விழுந்தது பாஸ்!'' என்றான் அசட்டுச் சிரிப்புடன்.

''போடா டேய் போடா. அது வீட்டுக்குப் போய் ஒரே அழுகை போல. மாரி நேரா என்கிட்டே வந்துட்டான். எவன் அவன் என் பொண்ணை அழ வெச்சவன் நான் அவனை விடமாட்டேன்னு.''

''இரு நான் விசாரிக்கறேன்னு சொல்லி அவனைச் சமாதானப்படுத்தியிருக்கேன், நான் மட்டும் சீன்ல இருந்து நகர்ந்தேன்னு வை உன் கதை கந்தல்டா. அவனே ஒரு முரட்டு பய. உனக்கு தெரியாததா?''

''அப்படியா நீங்க என்னை விட்டுடுவீங்க'' என்று அசால்ட்டு போல சொன்னவன், ''பாஸ் மாரி அட்ரெஸ் என்ன?''

''எதுக்கு?''

''அப்பாயின்ட்மென்ட் ஆர்டர் அனுப்ப தான்.''

''இனிமே உன்கிட்ட அனுப்ப மாட்டேன்!'' என்று கார்த்திக் சொல்ல,

''பாஸ்! என் லைஃப்ல விளக்கேத்தின பெருமை உங்களையே சாரும் பாஸ். என்னை கைவிட்டுடாதீங்க'' என்றான்.

''டேய்! சீரியசாவா இருக்க நீ!''

அந்தப் பெண்ணின் முகத்தை நினைவில் கொண்டு வந்தவன், ''எஸ் பாஸ்! நிஜம்மா எனக்கு பார்த்தவுடனே பிடிச்சது! அது வேற காலுக்கு வலிக்குமோ தரைக்கு வலிக்குமோன்னு மெதுவா நடந்து வந்து உட்கார்ந்துச்சு. பேர் என்னன்னு கேட்டதும் திரும்பவும் அது வாய்க்கு வலிக்குமோ என் காதுக்கு வலிக்குமோன்னு வந்து அண்ணானுச்சா டென்ஷன் ஆகிட்டேன்'' என்றான்.

கார்த்திக் என்ன செய்யலாம் என்பது போல சக்தியைப் பார்க்க,

''நாளைக்கு ஜாயின் பண்ணச் சொல்லுங்க!'' என்றவள், செல்வத்தின் பக்கம் திரும்பி, ''அந்த பொண்ணுக்கு பிடிச்சா ஓகே! இல்லைன்னா டிஸ்டர்ப் பண்ணக் கூடாது!'' என்றாள் கண்டிப்புடன்.

''நம்புங்க மேடம்! நம்புங்க!'' என்றான் பாவம் போல.

''ஒண்ணும் பண்ண மாட்டான்!'' என்று கார்த்திக்கும் சர்டிபிகேட் கொடுக்க, அதன் பிறகே விட்டாள் சக்தி.

மறுநாளே வீரமணி வந்து விட்டார். ''என்ன செய்ய லாம், திருமண வரவேற்பை எப்படி நடத்தலாம்'' என்பது மாதிரி கேட்க,

''வரவேற்பு வேண்டாம்!'' என்று பிடிவாதமாகச் சொல்லி விட்டாள் சக்தி. ''திருமண அறிவிப்பு, வாழ்த்து இந்த மாதிரி ஏதாவது பேப்பர்ல பெருசா ஒரு நாலஞ்சு பக்கத்துக்கு எங்க போட்டோவைப் போட்டுக் குடுத்துடுங்க. நீங்க மந்திரி ஆனதுக்கு ஒரு பெரிய விருந்து உங்களுக்கு யாரையெல்லாம் கூப்பிடணும்னு தோணுதோ கூப்பிட்டுக் குடுத்துடுங்க,'' என்று விட்டாள்.

''ஏன்'' என்றவரிடம்,

''பதினாலு மாசத்துக்கு முன்னாடி நடந்த கல்யாணத்துக்கு இப்போ வரவேற்பா வேண்டாம், அவனவன் அவனவன் வீட்ல நம்மை விமர்சிச்சிட்டு இருக்குறதை நாம விருந்து குடுத்து மேடையில நின்னு எங்களை பார்த்து விமர்சிங்கடான்னு சொல்ற மாதிரி ஆகிடும் வேண்டாம்பா'' என்று விட்டாள்.

''கார்த்திக்கை நம்ம வீட்ல வந்து இருக்கச் சொல்லிடாம்மா'' என்றார்.

''அது உங்களுக்கும் கார்த்திக்கும் உள்ளதுப்பா'' என்று விட்டாள்.

அவர் கார்த்திக்கிடம் அப்படிச் சொல்ல,

''கொஞ்ச நாள் நாங்க எங்க வீட்ல இருக்கோம் ஐயா! அங்க வர்றதை அப்புறம் பேசிக்கலாம், இதுவும் நீங்க குடுத்த வீடு தானே!'' என்றான் சமாதானமாக.

''ஏன் கார்த்திக்?'' என்றவரிடம்,

''கேஸ் நடக்கும்போது அங்க வேண்டாம்!'' என்றான்

அவருக்கும் அது சரியென்று பட, நல்ல நாள், நல்ல நேரம் பார்த்து சக்தியை வீரமணியும் தெய்வானையும் கார்த்திக்கின் வீடு கொண்டு சென்று விட்டனர்.

அவர்கள் சென்றதும் ஆதரவாய் சக்தியை அணைத்துக் கொண்ட கார்த்திக், ''வெல்கம் ஹோம்'' என்றான்.

''அப்பா! உன்னோட வர எத்தனை போராட்டங்கள்!'' என்று பாந்தமாய் அவனின் கைகளுக்குள் அடங்கினாள்.

''நீ இப்போ என்ன பண்ற கார்த்திக்! நான் இன்னும் அதைக் கேட்கவேயில்லை. கேட்கணும்ன்னு நினைப் பேன்! மறந்து போய்டுவேன்...'' என்றாள் அவனின் கைகளுக்குள் இருந்தவாரே,

''நானா? இப்போ சினிமா தயாரிக்கிறேன். அப்புறம் மாரி பேர்ல மறுபடியும் குவாரி காண்ட்ராக்ட் எடுத்திருக் கேன்'' என்றான்.

மறுபடியுமா என்பது போல அவள் முகத்தில் கவலையைப் பார்க்கவும்,

''நம்பு! இந்த முறை கவர்ன்மென்ட் ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ் எதையும் மீற மாட்டேன், எனக்கு அதை விட்டா வேற தொழில் தெரியாது..'' என்றான்.

''அதான் சினிமா தயாரிக்கறியே!'' என்றாள்.

''சினிமான்றது ஒரு கேம்ப்ளிங் மாதிரி சக்தி! எப்போ வெற்றி வரும்! எப்போ தோல்வி வரும்னு சொல்ல முடியாது. அதை மட்டுமே நம்ப முடியாது.''

''நம்பு சக்தி! விதிமுறைகளை மீற மாட்டேன்.''

''நம்பறதும் நம்பாததும் இல்லை கார்த்திக் இங்க பிரச்சனை! அந்த கலெக்டர் இருக்கான் தானே...'' என்று ஆரம்பித்தவள் இருவருக்குள்ளும் நடந்த சம்பாஷ னையை அப்படியே தெரிவித்தாள்.

கார்த்திக் அவளை இன்னும் இறுக அணைத்துக் கொண்டான், ''தேங்க்ஸ் சக்தி!'' என்று.

''ஆனா அவன் கேட்டான். பழசு சேஞ்சதெல்லாம் இல்லைன்னு ஆகிடுமான்னு.. ஏன் கார்த்திக் இப்படி யெல்லாம் பண்ணின. எனக்கு எல்லாம் தெரிஞ்சது தானா. இல்லை எனக்குத் தெரியாம ஏதாவது இருக்கா?'' என்றாள்.

கார்த்திக் பதிலே சொல்லவில்லை, அவன் முகம் மிகவும் தீவிரமாக மாறிவிட்டது.

நிமிர்ந்து அவனைப் பார்த்தவள், அவன் முகத்தில் இருந்த தீவிரத்தைப் பார்த்ததும் வேறு பேச்சுக்கு மாறினாள்.

''இரு உங்கம்மாகிட்ட நான் இங்க வந்ததைச் சொல் லிடறேன்!'' என்று சொன்னவள், அவரை அழைத்து விஷயத்தைச் சொல்லி, ''எங்களோட வந்து இருங் கத்தை'' என்று சக்தி கூப்பிட,

''வைஷ்ணவி இப்போ கர்ப்பமா இருக்கா. சுமித்ரா வேற வந்து இருக்கா. அவளையும் பார்த்துக்கணும்'' என்று வாசுகி இழுக்க,

''சரி! அங்கேயே இருங்கத்தை!'' என்று விட்டாள்.

''நம்ம இன்னும் சுமித்ராவைப் பார்க்கவில்லையே கார்த்திக். பங்ஷனுக்கும் போகலை, போய் பார்த்துட்டு வரலாமா?''

"ம்! போகலாமே!" என்றான்.

பின்பு அவனின் தாத்தாவின் வீட்டிற்குச் செல்ல, பத்ரிநாத் அவளைப் பார்த்ததுமே, "ஏன்மா ராஜினா பண்ணிட்ட?" என்றார்.

அவரிடம் பெயருக்கு ஒரு காரணத்தைச் சொல்லி தப்பித்து வருவதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது.

பிரபு, வைஷ்ணவி மற்றும் சிவா, சுமித்ராவுடன் பொழுது இனிமையாகக் கழிய, இரவு வீடு வந்து சேர்ந்த போது வெகு நேரமாகி விட்டது. ஆனால் இவ்வளவு நேரத்திற்கும் கார்த்திக்கின் முகம் தீவிர யோசனையில் இருந்தது.

வீடு வந்ததும் கார்த்திக் அவனாக,

"இந்த வீக்கென்ட் ஊட்டில எங்க ஸ்கூல் அலுமினி மீட் இருக்கு. அதுகூட பழைய ஸ்டூடண்ட்ஸ் ஃபாமிலியோட கெட் டு கெதர். இதுவரைக்கும் என் பிரண்ட்ஸுக்கு நான் எங்க இருக்கேன்னு தெரியலை."

"போன வருஷம் தான் என்னோட கேஸ் எல்லாம் பேப்பர்ல பார்த்து என்னைக் கண்டு பிடிச்சானுங்க... இந்த தடவை நான் கண்டிப்பா வரணும்னு கம்பெல் பண்றாங்க. போகலாமா" என்றான்.

"போகலாமே கார்த்திக்!"

[illegible], "தூங்கலாமா?" என்று கேட்க,

"ஓஹ். [illegible]!" என்றாள்.

கார்த்திக் ஏதோ பேச வருவது போலத் தோன்ற, "ஏதாவது சொல்லணுமா கார்த்திக்!" என்றாள்.

அவன் முகத்தில் ஏதோ தயக்கம். பிறகு, "அப்புறம் சொல்லட்டுமா!" என்றான்.

"எதை?"

"நான் சொல்ல வர்றதை."

"உனக்குக் கஷ்டமா இருக்கும்னா சொல்லணும்னு அவசியமில்லை.." என்றாள் சமாதானமாக.

அதைக் கேட்டதும், "நான் தூங்கட்டுமா?" என்று பெர்மிஷன் கேட்டான். "சரி" என்பது போல சக்தி தலையசைக்க தூங்கி விட்டான். 'என்ன விஷயமாயிருக்கும்? தன்னிடம் சொல்வதில் எதற்கு இவ்வளவு யோசனை, தயக்கம்' என்று சக்திக்கு புரியவில்லை.

பிறகு வந்த மூன்று நாட்களும் அமைதியிலேயே கழிந்தது. கார்த்திக் அவளிடம் நன்றாகப் பேசுவது போலவும் இருந்தது. பேசாதது போலவும் இருந்தது.

முதல் நாள் இங்கு வந்தபோது அணைத்தது தான். பின்பு அணைப்பிற்குக் கூட பஞ்சமாகி விட்டது. ஏன் என்று புரியாத போதும், தங்களின் குடும்ப வாழ்க்கை இன்னும் தொடங்கப் படாத போதும், சக்தி எந்த வகையிலும் கார்த்திக்கை தொந்தரவு செய்யவில்லை, கேள்வி கேட்கவில்லை. அவன் போக்கிலேயே விட்டாள்.

"நாளைக்கு நாம ஊட்டி கிளம்பணும் சக்தி!" என்றான்.

"எத்தனை நாளைக்கு டிரஸ் எடுத்து வைக்கட்டும்!" என்று சக்தி கேட்க,

"உனக்கு காலேஜ் வொர்க் எதுவும் பார்க்க வேண்டியது இல்லைன்னா ஒரு ஒன் வீக் எடுத்து வெச்சிக்கோ" என்றான்.

"இரண்டு நாள் தான் மீட், அப்புறம் நம்ம ஒரு ரெண்டு மூணு நாள் அங்க இருக்கலாமா?" என்றான்.

"உன்கூட இருக்க எனக்கு கசக்குமா என்ன? ஏன் நீ இப்படி பேசற?" என்றாள்.

சிரித்தான். ஆனால் என்னவோ குறைந்தது.

ஊட்டியில் ஒரு ரிசார்டையே அவனுடைய பேட்ச் மேட்ஸ் புக் செய்திருந்தனர், கார்த்திக்கிற்கு அங்கே கோலாகல வரவேற்பு என்று தான் சொல்ல வேண்டும்.

நண்பர்களை பார்த்ததும் உற்சாகமானான் கார்த்திக்.

"We missed you very much karthick in every meet" என்பது வேறு வேறு விதமாக அங்கிருந்த அனேகம் பேரின் வாய் வார்த்தையாக இருந்தது.

அதன் பிறகே அவரவர் குடும்பத்தை அவரவர் அறிமுகப்படுத்த, கார்த்திக் சக்தியை, "என் மனைவி" என்று அறிமுகப்படுத்த, சக்தி அடையாளம் காணப்பட, இன்னும் ஆச்சர்யமாகிப் போயிற்று அனைவருக்கும்.

"ஹலோ மேம்!" என்று ஆர்வமாக அனைவருமே அறிமுகப்படுத்திக் கொண்டனர். பாரபட்சமில்லாமல் ஏன் ரிசைன் செய்துவிட்டாள் என்று கேட்டனர்.

இந்த சலசலப்பெல்லாம் அடங்கி நண்பர்கள் உற்சாகமாக பேச ஆரம்பித்தனர். சக்தி ஒரு இடத்தில் அமர்ந்து இன்முகத்தோடு அனைத்தையும் பார்வையிட்டுக் கொண்டிருந்தாள்.

கார்த்திக்கின் சிரிப்பு சத்தம் நன்றாக கேட்டது. கார்த்திக் அப்படி சிரிப்பான் என்பதே சக்திக்கு ஆச்சர்ய மாக இருந்தது.

ஏதோ ஒரு நண்பன் சக்தியை நோக்கி வருவதையும் கார்த்திக் அவனை இழுத்துக் கொண்டு போவதையும், அவன் போனால் மற்றொருவன் வருவதையும் கார்த்திக் அவனையும் இழுத்துக் கொண்டு செல்வதையும், எல்லோரும் ஏதோ சத்தமாக சிரிப்பதையும்,

பின்பு அவரவரின் துணைகளையும் குழந்தை களையும் ரிசார்ட்டில் இருந்த அவரவரின் ரூமிற்கு செல்ல சொல்ல, அங்கே டிரிங்க்ஸ் பார்ட்டி கலை கட்டும் என்று சொல்லவா வேண்டும்.

“சக்தி, நீ போ!” என்று இருந்த இடத்தில் இருந்தே கண்களால் கார்த்திக் சொல்ல, சக்திக்கு கார்த்திக் இப்படி சந்தோஷமாக இருப்பது பிடித்திருக்க, அவள் ரூமிற்கு சென்று விட்டாள்.

உறங்கியும் விட்டாள். எங்கோ விடாமல் மணி அடிப்பது போல் தோன்ற, சிரமப்பட்டு கண் விழித்தாள். அவளின் போன் அடித்தது. “கதவை திற சக்தி!” என்ற கார்த்திக்கின் குரல் ஒலிக்க,

கதவை திறந்து விட்டு அவன் மேலேயே சாய்ந்தாள். அவன் தூக்கி படுக்கையில் வந்து கிடத்த, கண்களை திறந்து நன்றாக பார்த்தாள் கார்த்திக் தெளிவாக இருந்தான்.

“நீ குடிக்கலையா கார்த்திக்?”

"உனக்கு தெரிஞ்சது தானே நான் எப்பவுமே அதை தொட கூட மாட்டேன்" என்றான்.

இல்லை உன் பிரண்ட்ஸ் கூட நீ எப்படின்னு எனக்கு தெரியாது தானே. அப்புறம் எதுக்கு இவ்வளவு நேரம் இருந்த?" என்று நேரத்தை பார்த்தபடி கேட்டாள். நேரம் நள்ளிரவு இரண்டு மணி.

"அதுவா குடிச்சவனை எல்லாம் பத்திரமா அவன் ரூம்ல விட வேண்டாமா?"

"இது பெரிய சேவையா இருக்கே!" என்று தூக்க கலக்கத்திலேயே சிரித்தாள்.

கார்த்திக்கின் முகத்தில் மருந்துக்கு கூட சிரிப்பில்லை முகம் தீவிரமாக இருந்தது.

"அப்பப்போ சீரியஸ் ஆகிடற கார்த்திக் நீ" என்று சொல்லியபடி தூக்கம் கண்களை இழுக்க கண் மூட ஆரம்பித்தாள்.

உறங்கும் அவளின் ராஜய்க்குள் புகுந்து அவனும் உறங்குவது போல கண்களை மூடிக் கொண்டான். அவனின் சிறு வயது, அவனின் குறும்புகள், நண்பர்கள், அவனின் தந்தை" என்று ஒன்று ஒன்றாக படமாக ஓட ஆரம்பித்தது.

எப்போது உறக்கம் அவனை தழுவியது அவனே அறியான்.

காலையில் அவன் படித்த பள்ளிக்கு சென்றனர். அங்கே ஒவ்வொரு இடமாக சுற்றி காட்டி வர, ஒரு இடம் ந்ததும் ஒரு நண்பன் ஓடி வந்து, "சிஸ், இந்த இடத்தோட

பெருமையை சொல்ல நேத்து நைட் வந்தோம். இவன் விடவேயில்லை'' என்று ஆரம்பிக்க,

''டேய்!'' என்று அவனை தூக்கிக் கொண்டு போனான் கார்த்திக்.

அதற்குள் அவர்களின் பள்ளி தலைமை ஃபாதர் வர, அங்கே கனமான அமைதி எல்லோரும் அவ்வளவு பணிவுடன் நின்றனர்.

கார்த்திக் கைகளில் தூக்கிய நண்பனுடன் அப்படியே நிற்க.

''இறக்கி விடு கார்த்திக், அவனை!'' என்றார் ஃபாதர்.

ஃபாதர் சொன்னதும் கார்த்திக் அப்படியே விட, அதை எதிர்ப்பார்க்காத நண்பன் தொப்பென்று விழுந்தான்.

அங்கே ஒரு மெல்லிய நகையோலி கிளம்பியது.

பிறகு அவர்களின் குடும்பத்தை ஃபாதரிடம் அறி முகப்படுத்த, கார்த்திக் கடைசியாக எல்லோரும் முடித்ததும் வந்தான்.

சக்தியை அறிமுகப்படுத்த, அவர்களை ஆசீர்வதித் தவர், அந்த இடத்தை பற்றி சொன்னார்.

''இந்த இடத்துல தான்மா இவனை நான் லாஸ்டா பனிஷ் பண்ணினேன். எல்லோரும் ஏதாவது செய் வாங்க. எல்லாத்தையும் தூக்கி இவன் மேல போட்டுக் கிட்டு மத்தவங்களை காப்பாத்தி விட்டுட்டு இவன் பனிஷ்மெண்ட் அனுபவிப்பான்.''

''நைட் பூராவும் இங்க நின்னான்!'' என்றார் அன்றைய நாளின் நினைவோடு.

''ஊட்டி குளிரில் நைட் முழுவதும் வெளியே நிற்பதா'' என்று அதிர்ந்த விழிகளோடு சக்தி பார்க்க, இதெல்லாம் எனக்கு சாதாரணம் என்பது போல ஒரு பார்வை பார்த்து நின்றான் கார்த்திக்.

மாலை வரை பள்ளியில் இருந்துவிட்டு பிறகு ரிசார்ட் வந்து, அங்கு பின்பு ஒரு பார்ட்டி இருக்க, டான்ஸ், லிக்கர் என்று மீண்டும் அமர்க்களப்பட்டது.

கார்த்திக் டான்ஸ் செய்வான் என்பதே சக்திக்கு அன்று தான் தெரியும். ரசித்துக் கொண்டு அமர்ந்திருந்த வளிடம், தண்ணி பார்ட்டியின் வீரியம் ஏற, ''நீ போ!'' என்ற கார்த்திக்கின் செய்கையில் ரூமிற்கு வந்தவள்,

கார்த்திக்கின் இந்த புதிய பரிமாணத்தை வியந்து யோசித்துக் கொண்டே உறங்கி விட்டாள்.

அன்றும் அதே போல கார்த்திக் மூன்று மணிக்கே வந்து எழுப்ப, கதவை திறந்து அவன் மேலேயே சாய புன்னகையோடே, அவளை தூக்கி கொண்டு வந்து உறங்கினான்.

மறுநாள் காலை நண்பர்கள் எல்லோரும் கிளம்பிவிட, அவர்களும் அந்த ரிசார்டை காலி செய்து வேறு ஹோட்டலுக்கு வந்தனர்.

''அவுட்டிங் போகலாமா?'' என்று கேட்டவனிடம்,

''கொஞ்சம் நேரம் தூங்கு கார்த்திக் போகலாம்'' என்றாள்.

அவளின் சொல் தட்டாமல் உறங்க ஆரம்பித்தான்.

அவன் விழித்த போதும் வெளியே செல்ல ஆர்வம் காட்டாமல் அமர்ந்திருந்தாள்.

''என்ன கார்த்திக் உன் பிரிண்ட்ஸ் சொல்ல வந்தாங்க, நீ விடலை!''

''அதுவா அது ஒண்ணுமில்லை!'' என்றான் ஒரு ரகசிய புன்னகையோடு.

''ஒண்ணுமில்லைன்னு நான் சொல்றேன்! நீ மேட்டரை சொல்லு!'' என்றாள்.

சிறு புன்னகையோடே, ''லாஸ்ட் டே நாங்க சினிமா போய் கலாட்டா பண்ணி பனிஷ்மெண்ட் வாங்கினோம், அதை சொல்ல வந்தாங்க.''

''அதுக்கு தான் நைட் முழுசும் ஊட்டி குளிர்ல வெளில நின்னியா? அப்போவே தைரியம் உனக்கு! என்ன கலாட்டா?''

''அதுவா...'' என்று மறுபடியும் இழுக்க, சாய்ந்து அமர்ந்திருந்தவனை அடிப்பவள் போல அருகில் செல்லவும் அவள் கை பிடித்து அருகில் இழுத்துக் கொண்டான்.

''டைடானிக் மூவி போனோம். முதல் நாள் எங்க சீனியர்ஸ் போய்ட்டு வந்து ஒரு ரெண்டு மூணு சீனை விலாவரியா டிஸ்க்ரைப் பண்ணியிருந்தாங்க. அந்த சீன எதிர்பார்த்து நாங்க பிரண்ட்ஸ் போனோமா?''

''அந்த சீனை கட் பண்ணிட்டான்.''

''போடடான்னு தியேட்டர்ல கலாட்டா பண்ணினோம். அவன் ஃபாதர் கிட்ட போட்டுக் கொடுத்துட்டான்.''

''ஃபாதர் நைட் பூராவும் வெளில நிக்க சொல்ல, வீட்டுக்கு தெரிஞ்சான்னு டென்ஷன் ஆகி[illegible]

நான் அவனுங்கல்லாம் பண்ணலை! நான் தான் பண்ணினேன்னு சொல்லி நான் நைட் முழுசும் நின்னே. அந்த புகழை பாட வந்தாங்க'' என்றான்.

பெருமையாக அவனை பார்த்தவள், ''கிரேட் கார்த்திக் நீ! அவனவன் பழிய தூக்கி அடுத்தவன் மேல போட்டு எஸ்கேப் ஆக பார்க்க, நீ அவங்களுக்காக வெளிய நின்னிருக்க!'' என்றாள் அவன் மீது சாய்ந்து அணைத்துக் கொண்டே.

அவனும் சக்தியை கைகளுக்குள்ளேயே வைத்திருக்க, திடீரென்று சக்திக்கு ஒரு சந்தேகம் உதித்தது.

''ஆமா! என்ன சீன் அது? ஏதாவது கிஸ் சீனா?'' என்றாள்.

''ம்கூம்'' என்று இல்லையென்பது போல தலையாட்டியவன், புன்னகையோடே ''இண்டர்வலுக்கு அப்புறம் கேட் வின்ஸ்லெட்ட ஹீரோ ஓவியமா வரைவாறு, அந்த சீன்'' என்றான்.

''அதுல என்ன கலாட்டா பண்ணி பார்க்க இருக்க.''

''அவ டிரஸ் இல்லாம போய் குடுப்பா! அவளை அபபடியே ஹீரோ இஞ்ச் பய் இஞ்சா ரசிச்சு வரைவாண்டி என் மண்டு'' என்றான் அவளை பார்த்து கண்ணடித்த படி.

''என்ன?'' என்று அவனை விட்டு எழுந்து இடுப்பில் கையை வைத்து அவனை முறைத்தாள்.

கார்த்திக் புன்னகை முகத்தோடு இருக்க, ''அப்போ நீ அப்போ பார்க்கலைன்னாலும் அப்புறம் பார்த்துட்ட?'' என்றாள் கேள்வியாக.

''இதெல்லாம் அந்த ஏஜ்ல பெண்களை தெரிஞ்சுக் கணும்னு ஒரு ஆர்வம். தப்பா எடுக்க கூடாது!'' என்றான்.

''பெண்களை தெரிஞ்சிக்கற ஆர்வமா? அப்படி ஒண்ணும் எனக்கு தெரியலையே!'' என்றாள்.

''நீ என்னை தெரிந்து கொள்ள ஆர்வம் காட்ட வில்லை'' என்ற மறைமுக குற்றச்சாட்டு அதில் இருந்தது.

பெருமூச்சு விட்டவன், ''யார் சொன்னா ஆர்வ மில்லைன்னு! நிறைய ஆர்வமிருக்கு ஆனா அதுக்கும் முன்னாடி எனக்கு உன்கிட்ட ஒரு விஷயம் சொல் லணும்! என் வாழ்க்கையோட கருப்பு பக்கங்கள்'' என்றான்.

''என்ன?'' என்றாள் சஞ்சலத்தோடு.

''நான் ஒரு கொலை செஞ்சிருக்கேன்!''

''யாரை?'' என்றாள் நம்பாத குரலில்.

''எங்கப்பாவை!'' என்றான்.

அவள் இன்னும் நம்பாத பார்வை பார்க்க,

தன் அப்பா தனியாக இருந்தது, குடிக்கு அடிமை யாகியிருந்தது, அவன் ஸ்கூல் அரையாண்டு லீவிற்கு வந்த போது அவரை பார்க்கப் போனது, அவரைத் தேடி போன போது அவர் சாக்கடையில் விழுந்து கிடந்தது.

பதினைந்து வயதில் ஒற்றை ஆளாக அவரை தூக் கியது. போதையில் இருந்த அவரை அவன் தான் குளிக்க வைத்தது. குளிக்க வைக்கும் போது நாய் கடித்த

இடத்தை அதுதான் என்று தெரியாமல் வெறும் காயம் என்று கவனிக்காமல் விட்டது.

பரீட்சை முடிந்து மூன்று மாதம் கழித்து, திரும்ப வந்த போது, தான் அஜாக்ரதையாக கவனிக்காமல் விட்டிருந்த நாய் கடியால் தந்தையை ரேபிஸ் நோய் தாக்கியிருந்தது. அந்த புண் சீல் பிடித்து புழுக்கள் நெளிந்து கொண் டிருந்த நிலையில் இருந்தது. அவர் நாய் மாதிரியான செய்கைகளை செய்ய ஆரம்பித்திருந்தது.

பார்க்க முடியாமல் ஒரு விஷ ஊசி போட்டு அவரை தானே கொன்றது, என்று அவன் முடித்த போது பிரமிப் பாய் கேட்டிருந்தாள்.

அவன் கண்களில் மெல்லிய நீர் படலம், ''அவரை கொன்னது மட்டுமில்லை. அவர் சாகற ஒரு நிலை மையும் என்னால தான்'' என்றான்.

''அவரோட சாவுக்கு வந்த பிரபுவோட அப்பாவும் அம்மாவும் இறந்துட்டாங்க'' என்று ஆரம்பித்து, தான் வீட்டை விட்டு வந்தது, அதன் காரணம், பின்பு சக்தியை பார்த்தது என்று ஆதி முதல் அந்தம் வரை உரைத் திருந்தான்.

சக்தி வாயடைத்து அமர்ந்திருந்தாள். அவனின் தந்தையின் முடிவு, அவன் அதை கொடுத்த விதம், அதை அவன் மறைத்த விதம், இத்தனை நாட்கள் அவன் அதை தன் மனதில் பூட்டி வைத்தது.

''இப்படியும் ஒரு மனிதனா.''

அதை தன்னிடம் ஒப்புக் கொள்கிறான்.

அவனின் எல்லா செய்கைகளுக்குமான காரணங்கள்,

ஓரளவிற்கு கார்த்திக் இப்போது பிடிபட்டான்.

''எங்கம்மாவுக்கு கூட இது தெரியாது சக்தி! தெரியவும் வேண்டாம்! அப்புறம் அவங்களுக்கும் ஒரு நிம்மதியான சாவு இருக்காது.''

''வராது கார்த்திக்! என் வாயில இருந்து ஒரு வார்த்தை இதை பத்தி வராது!'' என்றாள்.

அவள் இன்னும் பிரமிப்பு அகலாமல் அமர்ந்திருக்க, ''என் மேல வெறுப்பா எதுவும் இல்லையே, அதுவும் எங்கப்பா...'' என்று அவன் ஆரம்பிக்கும் போது,

உதட்டின் மேல் கை வைத்து, ''பேசாதே!'' என்பது போல காட்டினாள்.

''ஒண்ணே ஒண்ணு மட்டும் சொல்லிடறேன்'' என்றவன், ''ஐ லவ் மை டாடி வெரி மச்!'' என்றான் சுவரில் சாய்ந்து காலை நீட்டி அமர்ந்து,

ஒன்றும் பேசாமல் அவன் மேல் ஏறி படுத்துக் கொண்டாள்.

''இதை மறந்துடு! கார்த்திக் மறந்துடு!''

''கஷ்டம் சக்தி! என்னோட இந்த செய்கை என்னோட நிழல் மாதிரி என்னை துரத்திட்டே இருக்கு!'' என்றான்.

அவனை விட்டு விலகி அமர்ந்தவள், பேசத் துவங்கினாள்.

''நாமெல்லாம் பொம்மலாட்டத்தில் வர்ற பொம்மைகள் கார்த்திக்! நம்மை ஆட்டி வைப்பவன் அவன், இது அவன் செயல், இதுவும் கடந்து போகும்.''

"நியாயத்தையும் அவனே நடத்துகிறான். அநியாயத்தையும் அவனே நடத்துகிறான். அவனின்றி அணுவும் அசையாது."

"யாம், எமது, எமக்கு, அப்படின்னு செய்யற செயல்கள் தப்பு. நீ இங்க செஞ்சது அவருக்கு கொடுத்த விடுதலை. இந்த உலக வாழ்க்கையில் இருந்து அவரோட வலிகள்ல இருந்து, அவரே அவமானத்துல இருந்து."

"இது விதின்னு சொல்லி முடிக்கலாம். ஆனா அதை உன் கையால செய்ய வெச்சது கடவுளோட செயல். பாரத்தை தூக்கி அவன் மேல போடு. எல்லாம் அவன் பார்த்துக்குவான்."

சக்தியின் வார்த்தைகள் கார்த்திக்கிற்கு ஒரு ஆன்மீக தேடலை கொடுக்க முற்பட்டது.

ஆனால் அதை அவனின் கழுத்து வலி தடை செய்ய.

அவள் பேசிக் கொண்டு இருக்கும் போதே கார்த்திக் கழுத்தை பிடித்தான். "வலிக்குது சக்தி! இது என் ஞாபகத்துக்கு வரும்போது இல்லை நீ எனக்கு கிடைக்க மாட்டியோன்னு நினைக்கும் போது வலிக்குது" என்றான் சிறுபிள்ளை போல.

"நீ படுத்துக்கோ! நான் பிடிச்சு விடறேன்!" என்றாள்.

கார்த்திக் படுக்க முற்படவும், "உன் டீ ஷர்ட்" என்றாள்.

அதை அவன் கழட்ட கையை தூக்கும் போது வலியில் முகம் சுளிக்க, சக்தி அவனுக்கு உதவினாள்.

மனதின் பாரத்தை கார்த்திக் இறக்கி வைத்திருக்க, சக்தியின் அருகாமையில் ஒரு மெல்லிய சலனம்.

அவளோ கருமமே கண்ணாயினார் என்பது போல அவன் டீ ஷர்ட்டை கழற்றி, அவனை திரும்பி படுக்க வைத்து தன் தளிர் கரங்களால் அவனின் கழுத்தை இதமாக பிடித்து விட,

ஒரு புது வித மயக்கம் கார்த்திக்கினுள்.

"சக்தி!" என்றான்.

"ம்" என்று அவள் தன்னுடைய விரல்களால் கார்த்திக்கின் உடலின் அத்தனை உணர்ச்சிகளையும் தூண்டிக் கொண்டிருக்க,

"எனக்கு பொண்ணுங்களை தெரிஞ்சிக்க ஆர்வ மில்லை! ஆனா உன்னை தெரிஞ்சிக்க ரொம்ப ஆர்வ மிருக்கு, தெரிஞ்சிக்கட்டுமா?" என்றான்.

வார்த்தை நிற்க...

திரும்பி அவளை கண்களில் காதலோடு பார்த்தவன், "தெரிஞ்சிக்கட்டுமா" என்றான் மீண்டும்.

கார்த்திக்கின் இந்த புதிய பரிமாணம் சக்தி புதிது, சற்று அச்சத்தோடு பார்க்க,

"என்கிட்டே என்ன பயம், வா!" என்று கண்களால் அழைத்தான்.

சக்தி தயங்கினாள். கார்த்திக் அவளிடம் பகிர்ந்த விஷயங்களை ஜீரணிக்க முயன்று கொண்டிருந்தாள்.

கார்த்திக் யோசிக்கவேயில்லை இழுத்து மேலே போட்டுக் கொண்டவன், ஒரு புது உலகத்தை சக்திக்கு அறிமுகப்படுத்த ஆரம்பித்தான். முடிவு பெறா தேடல்கள்.

''ஐயோ! எப்போது முடியுமோ இது?'' என்று யாராவது ஒருவர் நினைத்தாலும் அடுத்தவருக்கு அது தோல்வியே.

''ஐயோ! முடிந்துவிட்டதா?'' என்ற உணர்வை ஒருவருக்கு கொடுத்தாலும் அது தோல்வியே.

''இன்னும் நீளாதா...'' என்று இருவருக்கும் தோன்றினால் தான் அது வாழ்க்கை கல்வியின் வெற்றி.

இது கயிற்றின் மேல் நடப்பது போல் தான். கரணம் தப்பினாலும் உணர்வுகளின் மரணம்.

வாழ்க்கை கல்வியின் வெற்றியை கார்த்திக் சக்திக்கு பூரணமாக கொடுத்துக் கொண்டிருந்தான்.

இருவருமே அவனின் தந்தையின் நினைவுகளில் இருந்து வெளியே வந்திருந்தனர்.

வார்த்தை பிரயோகங்களினால் அது காதலாகவும் காட்டப்படும், காமமாகவும் காட்டப்படும், தெய்வீகமாகவும் காட்டப்படும், சிற்றின்பம் என்று வரையறுக்கப்பட்டாலும், அதை அறிந்தே, பேரின்பதையும் காண முடியும்.

கார்த்திக்கின் வெளிப்பாடுகள் சக்தியின் ரகசியங்கள் ஆகின. அவளின் உடல் நிலையை கருத்தில் கொண்டு அவளை சிறிதும் கஷ்டப்படுத்தாத, அவளும் முழு ஈடுபாட்டுடன் அனுபவித்த, ஒரு உறவு, அவர்களின் வாழ்க்கை நிறைவு பெற நினைக்காமல், இப்போது தான் ஆரம்பிப்பது போல ஒரு உணர்வை இருவருக்கும் கொடுத்தது.

ஒரு வாரம் அவர்களின் பிரத்யேகமான உலகத்தில் இருந்து வீடு திரும்பினர்.

வீடு வந்து விட்ட போதும் அவர்கள் எங்கேயும் எந்த இடத்திலும் ஒரு கொஞ்சல், சிறு அத்துமீறல் என்று எந்த மாதிரியும் ஆர்வத்தை வெளிப்படுத்தவில்லை.

இவர்களுக்குள் எல்லாம் சரியாகிவிட்டதா? இல்லையா? என்ற கேள்வியை தான் எல்லோருக்கும் கொடுத்தது.

சக்தியின் முகத்தில் ஒரு அமைதி. கார்த்திக்கின் முகத்தில் இன்னும் தீவிரமான அவனின் உழைப்பு. இதை தவிர ஒன்றும் கண்டறிய யாராலும் முடிய வில்லை.

சக்தி சரியாக முப்பத்தைந்து நாளில், ''எனக்கு ஒரு மாதிரி இருக்குதும்மா'' என்று அம்மாவிடம் பகிர, அவர் லேடி டாக்டரிடம் அழைத்து சென்று கர்ப்பத்தை உறுதி செய்த போது தான்.

தெய்வானைக்கு உயிரே திரும்ப வந்தது போல் இருந்தது.

சரியாக ஒன்பது மாதங்களில் சக்தி ஆண்மகவை ஈன்றேடுக்க, ''சுந்திரசேகர்'' என்ற பெயரை அக்குழந் தைக்கு நாமகரணம் சூட்ட வீரமணி பிரியப்பட,

சக்தி அதற்கு சம்மதிக்கவேயில்லை. கார்த்திக் அந்த பெயரை கூப்பிடும்போது அவனின் தந்தை ஞாபகம் வந்துவிட்டால் என்ன செய்வது என்ற கவலை அவளுக்கு. ஆதர்ஷ் என்று கார்த்திக்கின் சம்மதத்தோடு தான் குழந்தைக்கு பெயர் வைத்தாள் சக்தி.

கார்த்திக் இன்னும் மயங்கியிருந்தான் சக்தியிடம்.

ஆம்! கார்த்திக்கிற்கு இந்த பத்து மாதங்களாக கழுத்து வலியும் இல்லை தந்தையின் ஞாபகங்களும் இல்லை.

கடுமையாக உழைத்தான். குவாரி, சினிமா தயாரிப்பு என்று பிசியாக இருந்தான்.

மற்ற நேரம் மனைவி மகனுடன் நேரத்தை செலவழித்தான். அவனுக்கு அவனுடைய பதினைந் தாவது வயதில் இருந்து தோன்றி சக்தியுடன் சேர்ந்து வாழ ஆரம்பிக்கும் வரை இருந்த நாட்கள் போன ஜென்ம ஞாபகங்களாக தோன்றின.

அவனை வருத்திக் கொண்டிருந்த ஞாபகங்கள் மறைந்து சக்தியின் முழு கட்டுப்பாட்டில் இருந்தான். வாழ்க்கையை சக்தியுடன் நிம்மதியாக அனுபவித்து வாழ்ந்தான்.



# 51

துன்பமினியில்லை சோர்வில்லை
சோர்வில்லை தோற்பில்லை

நல்லது தீயது நாமறியோம்
நாமறியோம் நாமறியோம்

அன்பு நெறியில் அறங்கள் வளர்த்திட
நல்லது நாட்டுக தீமையை ஓட்டுக

நின்னைச் சரணடைந்தேன் கண்ணம்மா
நின்னைச் சரணடைந்தேன்

- பாரதி

## ஐந்து வருடங்களுக்கு பிறகு

அன்று கார்த்திக்கின் வழக்கில் தீர்ப்பு சொல்லப் படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நாள்.

கார்த்திக் வழக்கை திசை திருப்ப எந்த முயற்சியும் எடுக்கவில்லை. அதிக நாட்கள் இழுக்கவும் முயற்சிக்க வில்லை. ஒரு மாதிரி மனதை தயார்படுத்தி வைத் திருந்தான். என்ன தீர்ப்பு வந்தாலும் எதிர்கொள்வது என்ற முடிவில் இருந்தான். யாரையும் இதில் தலையிட விடவில்லை.

வீரமணியும் வழக்கில் தலையிட்டு ஏதாவது செய்ய முடியுமா என்று பிரம்மப்ரயர்தனம் செய்து பார்த்தார். ''ம்கூம்! இதில் தலையே விட கூடாது!'' என்று மிகவம் கண்டிப்பாகக் கார்த்திக் சொல்லிவிட்டான்.

கார்த்திக்கின் முடிவு சக்தி அறிந்ததே. இருந்தாலும் அந்த நாள் வந்த போது.

காலையில் எழுந்ததில் இருந்து வீடு அமைதியாக இருந்தது. ஐந்து வயது ஆதர்ஷ் யு கே ஜி படித்துக் கொண்டிருந்தான்.

ஆதர்ஷை ஸ்கூலிற்கு ரெடி செய்து கொண்டிருந்த சக்தியின் முகத்தில் மிகுந்த கலக்கம். அவள் காலையில் அவனுக்கு ஒரு ஆம்லெட்டை ஊட்டிக் கொண்டிருந்தாள். அவள் ஊட்டிக் கொண்டிருக்கும் போதே கார்த்திக் அவனுக்கு யூனிபார்மை அணிவித்துக் கொண்டிருந் தான்.

அங்கே ஆதர்ஷின் குரல் மட்டுமே ஒலித்துக் கொண் டிருந்தது. ''அப்பா'' என்று கார்த்திக்கை அழைத்து.

"நேத்து ஸ்கூல்ல..." என்று ஆரம்பித்து அங்கு நடந் தவைகளை மழலையில் மிளிற்றிக் கொண்டிருந்தான் ஆதர்ஷ்.

இது எப்போதும் வழக்கமாக நடப்பது தான். காலை வேலைகளில் கார்த்திக் ஆதர்ஷிற்கு யூனிபார்ம் அணி விக்கும்போது அவ்வளவு கதைகளையும் சொல்வான் ஆதர்ஷ்.

ஆதர்ஷ் ரெடியாகி வர, கருப்பண்ணன் காருடன் தயாராக இருந்தார். "நான் இன்னைக்கு ஸ்கூல் கொண்டு போய் விடறேன்" என்று காரின் சாவியை கருப்பண்ண னிடம் இருந்து வாங்கிய கார்த்திக், "அம்மாக்கு டாடா சொல்லிட்டு வா" என்றான்.

"அம்மா பய்" என்று வாசலை நோக்கி சென்ற ஆதர்ஷ், "அச்சோ! பாப்பா கிட்ட சொல்லலை" என்று ஓடி வந்து அம்மாவின் வயிற்றில் முத்தமிட்டு, "பாப்பா பய்" என்று சொல்லி போனான்.

ஆம்! இப்போது சக்தி நிறை மாத கர்ப்பிணி.

சோர்வுடன் திரும்ப உள்ளே போகும் அவளை பார்த்தவாரே காரை எடுத்தான் கார்த்திக்.

ஸ்கூலில் அவனை இறக்கி விட்டவன், மகன் விரைந்து உள்ளே செல்ல முயலவும், "ஆதர்ஷ்" என்று மகனை அழைத்தவன், "அப்பா ஊருக்கு போனாலும் போவேன்! அப்பா வர்ற வரைக்கும் அம்மாவையும் பாப்பாவையும் நீதான் பார்த்துக்கணும்! பார்த்துக்குவ தானே!" என்றான் கார்த்திக்.

கார்த்திக்கின் பொறுப்பான குணம் அவனுடைய மகனிடம் இல்லாமல் போகுமா என்ன? "ம்! நான்

பார்த்துக்குவேன் பா!'' என்று சொன்னவனை அணைத்து தூக்கி கன்னத்தில் ஒரு முத்தம் வைத்தான் கார்த்திக்.

''அப்பா இல்லைனா அம்மா சரியா சாப்பிட மாட்டாங்க. ஆதர்ஷ் என்ன செய்யணும்னா, டெய்லி நீ சாப்பிடும் போதும் அம்மா சாப்பிட்டா தான் ஆதர்ஷ் சாப்பிடுவான்னு சொல்லணும், சரியா! சொல்லுவியா?'' என்றான்.

''ம்! ம்! பா!'' என்று சமர்த்தாக தலையசைத்தான் ஆதர்ஷ்.

மனமேயில்லாமல் மகனை இறக்கிவிட்டு, கார்த்திக்கே அவளை கிளாஸ் ரூம் வரை கொண்டு போய் விட்டு வந்தான்.

கிளாஸ் உள் விடும்போது கூட, ''அப்பா சொன்னதை மறக்க மாட்டியே!'' என்று கார்த்திக் உறுதிப் படுத்த, ''மறக்க மாட்டேன் பா!'' என்ற உறுதியை உறுதியாக கொடுத்தான் அந்த ஐந்து வயது குழந்தை.

சக்தி தன்னை தேற்றிக் கொள்ள வேண்டும் என்பதே கார்த்திக்கின் இடைவிடாத வேண்டுதலாக இருந்தது. எப்படியும் ஏதோ ஒரு தண்டனை உறுதி, அதை எதிர்த்து மேல் முறையீடு செய்யும் எண்ணமும் தற்போதைக்கு அவனுக்கு இல்லை.

அவனுடைய குழந்தைகள் பெரிதாவதற்கு முன் இந்த பிரச்சனைகளை முடிவுக்கு கொண்டு வர அவன் முடிவு செய்திருந்தான்.

வீடு வந்து சக்தியை தேடிய போது அவள் பூஜை அறையில் கடவுளை வணங்கிக் கொண்டிருந்தாள்.

கார்த்திக் வந்தவுடன் தீபாராதனை காட்டியவள், கண்மூடி தெய்வத்தின் சன்னதியில் நின்று கொண்டிருந்த கார்த்திக் கண் திறக்கும் வரை காத்திருந்து அவளே ஆரத்தி ஒற்றினாள்.

பின்பு திருநீறை எடுத்து அவனுக்கு இட்டு விட்டாள். பின்பு தானும் திருநீற்றை இட்டு வெளியே வந்தாள்.

இருவரும் மௌனமாக காலை உணவினை உட்கொண்டனர். சக்தி உணவு உண்டு முடிக்கும் வரை பொறுமையாக இருந்தவன், ''தீர்ப்பு எது வந்தாலும் கலங்க கூடாது சக்தி. தைரியமா இருக்கணும். அப்போ தான் நீ ஆதர்ஷை பார்த்துக்க முடியும்! பொறக்க போற பாப்பாவையும் பார்த்துக்க முடியும். செய்யவ தானே!'' என்றான்.

''ம்!'' என்று தலையாட்டினாள்.

''சக்தி!!!! இப்படி நீ ரொம்ப சோர்ந்து தெரிஞ்சா நான் எப்படிடா தீர்ப்பை எதிர் கொள்வேன்'' என்றான் மென்மையாக அவளை அணைத்து,

''நான் எப்படி கார்த்திக் தனியா குழந்தை பெத்துக்குவேன், will miss you karthick'' என்று கரகர வென்று கண்ணில் கண்ணீர் விட்டாள்.

''சக்தி!'' என்று கார்த்திக் அதட்டி அவளை விலக்க முற்பட, சக்தி அவனை இறுக கட்டிக் கொண்டாள்.

''வயிறு அழுந்த போகுது சக்தி!'' என்று கார்த்திக் அவளின் அணைப்பை தளர்த்தி விட்டான்.

''நீ தைரியமா இருந்தா தான் சக்தி! என்னால நிம்மதியா ஒரு முடிவை எடுக்க முடியும்.''

''நான் இருந்துக்குவேன்! நீ இல்லாம இருந்துக்குவேன்! ஆனா இப்போ எப்படி இருப்பேன்!'' என்று குனிந்து அவள் வயிற்றை பார்த்தபடி கேட்க.

''இருந்துக்குவா, என் சக்தி தைரியமான பொண்ணு!'' என்று அவளை தேற்றினான்.

''எதுவா இருந்தாலும் நான் அதை ஏத்துக்க போறேன் சக்தி. ஜட்ஜ்மென்ட் வந்துடுச்சுன்னா அப்பீல் பண்ண மாட்டேன். ஜெயில்ல இருக்கும் போது போன் பண்ண மாட்டேன். நீயும் என்னை அங்கெல்லாம் வந்து பார்க்க கூடாது. எதுவா இருந்தாலும் மாரி மூலமாவோ செல்வம் மூலமாவோ சொல்லி அனுப்பு.''

''உங்கப்பாவை அனுப்பாத! இன்கேஸ் நான் வர நாளாகும்னா நான் வர்ற வரைக்கும் நீ உன் அப்பா வீட்ல தான் இருக்கணும். நான் இல்லைன்ற ஃபீலிங் ஆதர்ஷுக்கு வரவே கூடாது'' என்றான்.

''ம்'' என்று தலையாட்டினாள்.

பின்பு மென்மையாக அவளின் நெற்றியில் இதழ் பதித்து விடுவிக்க, பதிலுக்கு சக்தி அவனின் இதழ்களில் அழுத்தமாக தன் கவிதையை எழுதினாள்.

அவள் விடவும், ''கிளம்புவோமா நேரமாச்சு. நான் பத்து மணிக்கு கோர்ட்ல இருக்கணும்'' என்றான்.

மௌனமாக அவனுடன் சக்தி கிளம்ப, அவளை அழைத்துக் கொண்டு வீரமணியின் வீட்டிற்கு வந்தான். அங்கே வீரமணியும் தெய்வானையும் இருக்க,

''பார்த்துக்கோங்கம்மா'' என்ற ஒற்றை வார்த்தை மட்டுமே சொல்லி கிளம்ப, அவனுக்கு முன்னால்

வீரமணி போய் வெளியில் நின்று கொண்டிருந்தார். "நானும் வருவேன்!" என்ற பிடிவாதம் முகத்தில் இருக்க,

"நீங்க எம்.பீ ஐயா! நீங்க வர வேண்டாம்!" என்றான்.

ஆம்! இப்போது வீரமணி மந்திரி பதவியில் இல்லை! ஏனென்றால் அவரின் கட்சி ஆட்சியில் இல்லை. ஆனால் தேர்தலில் நின்று ஜெயித்து எம் பீ பதவியில் இருந்தார்.

"இருந்தா? நீ என் மாப்பிள்ளை இல்லைன்னு ஆகிடுமா!"

"ஏதாவது பத்திரிகைல தேவையில்லாம எழுது வாங்க."

"எழுதிட்டு போறாங்க! நானே கவலைப்படலை! உனக்கென்ன! நான் வருவேன்!" என்றார் பிடிவாதமாக.

அவன் சக்தியை பார்க்க, சக்தி "விட்டுவிடு!" என்பது போல ஒரு பார்வை பார்த்தாள்.

பின்பு கருப்பண்ணன் கார் எடுக்க, இருவரும் கிளம் பினர். அவர்கள் கோர்ட் சென்றால் மாரியும் செல்வமும் அவர்களுக்கு முன்னே இருந்தனர். மாமனாரும் மருமகனும் அல்லவா அதனால் அவர்கள் முன்னே காத்திருந்தனர். மாரியின் பெண்ணை செல்வம் திருமணம் செய்திருந்தான்.

இவர்கள் கோர்ட் சென்று அமர்ந்த சிறிது நேரத்திற்கு எல்லாம் பிரபுவும் சிவாவும் வேறு வந்துவிட்டனர்.

கார்த்திக் கேசின் முறை வந்த போது, கார்த்திக் என்னவோ கூலாக தான் அமர்ந்திருந்தான். ஆனால் வீரமணி, பிரபு, சிவா, செல்வம், மாரி என அனைவர் முகத்திலும் பதட்டம்.

கேஸ்ஸின் தீர்ப்பு படிக்கப்பட அதன் சாராம்சம் இதுதான். கார்த்திக்கிற்கு இரண்டு வருட கடுங்காவல் தண்டனையும், குவாரியில் கவர்மென்ட்டிற்கு கணக்கு காட்டாமல் எடுத்த கிரானைட்டிற்கு ஒரு மதிப்பு போட்டு, அதற்கு ரிகவரி ஃபைன் ஆக ஒரு மிகப் பெரிய தொகையை செலுத்த சொல்லியிருந்தனர்.

செலுத்த தவறினால் மேலும் இரண்டு ஆண்டு காலம் தண்டனை நீட்டிக்கப்படும் என்று சொல்லப் பட்டது.

இரண்டு ஆண்டுகள் என்றதுமே கேஸ் நடத்திய வக்கீலின் முகத்தில் அவ்வளவு சந்தோசம். ஏன் வீரமணி, செல்வம், மாரி, பிரபு, சிவா என்று அனைவரின் முகத் திலும் ஒளி.

ஏனென்றால் இரண்டு ஆண்டுகள் என்றால் அப்படியே இரு நபர் ஜாமீன் கொடுத்து ஜெயிலுக்கு போகாமல் உடனே வெளியே வந்துவிடலாம். பின்பு மேல் கோர்ட்டில் அப்பீல் செய்து கொள்ளலாம்.

ஜெயிலுக்கு போவதை தவிர்த்து விடலாம்.

ஆனால் கார்த்திக்கின் முடிவு வேறு மாதிரியாக இருந்தது. அவன் ஜாமீனுக்கு முயற்சிக்கவில்லை. அப்பீல் போகவும் இல்லை. இரண்டு வருட தண் டனையை ஏற்று, ரிகவரி ஃபைன்னையும் செலுத்த முடிவு செய்தான்.

இந்த ஐந்து வருடமாக அவன் சம்பாதித்ததை, முன்பு கணக்கில் வராமல் மிச்சம் இருந்ததை அத்தனையையும் கணக்கில் வரும் பணமாக செய்திருந்தான்.

ஃபைன் மிகப்பெரிய தொகை, அதை கட்டினால் மீண்டும் அவன் ஒன்றுமில்லாமல் போய்விடுவான். வாழ்க்கையை ஆரம்பித்த இடத்திற்கே வந்துவிடுவான். ஆனால் தயங்கவேயில்லை.

முடிவெடுத்து விட்டான்.

தண்டனையை அனுபவிப்பது. ஃபைனை கட்டுவது.

அவன் முடிவை சொன்னதும் வீரமணி ஒத்துக் கொள்ளவேயில்லை. "ஜாமீனில் வந்தே ஆக வேண் டும்!" என்று ஒற்றைக்காலில் நின்றார்.

"முடியவே முடியாது!" என்று பிடிவாதமாக கார்த்திக்கும் மறுத்துவிட்டான்.

இவர்கள் வழக்காடிக் கொள்வதை பார்த்த செல்வம், சக்தியை போனில் அழைத்து சொல்ல,

வீரமணியை அழைத்தவள், "அப்பா ப்ளீஸ்! வீட்டுக்கு வாங்க! அவரை அவர் போக்குல விடுங்க!" என்று வற்புறுத்த,

ஒன்றும் செய்ய இயலாதவராக வீரமணி வீடு திரும்பி னார்.

அங்கேயே கார்த்திக் அரெஸ்ட் செய்யப்பட்டு இம்முறை வேலூர் சிறையில் அடைக்கப்பட்டான்.

அவன் வேன் ஏறும் முன் செல்வத்திடம் சொல்லி விட்டான். "என்னோடது எல்லாத்தையும் யூஸ் பண்ணி ஃபைன் கட்டு. முடியலைன்னா மட்டும் மேடம் கிட்ட கேளு" என்று.

பின்பு பிரபுவை பார்த்தவன், "சக்தியை பார்த்துக் கோடா அவ டெலிவரில எந்த பிரச்சனையும்

வந்துடக்கூடாது! நீ இருக்குற தைரியத்துல நான் இந்த டைம்லயும் அவளை விட்டுட்டு போக முடிவெடுத்தேன்!'' என்றான்.

''நான் பார்த்துக்கறேன்! நல்லா படியா குழந்தை பிறக்கும்'' என்று அவனுக்கு நம்பிக்கை கொடுத்து பிரபு அனுப்பினான்.

செல்வம் தீர்ப்பில் இருந்தபடி ஃபைன் கட்டி நிமிர்ந்த போது, கார்த்திக்கிடம் இருந்த எல்லாமும் போயிருந்தது.

ஆனால் அவன் மனதில் ஒரு நிம்மதி, அமைதி குடி புகுந்தது. பஞ்சு மெத்தையில் வராத உறக்கம் ஜெயிலின் கட்டாந்தரையில் கார்த்திக்கிற்கு வந்தது.

சக்தி நல்லபடியாக ஒரு பெண் மகவை ஈன்றெடுக்க, அவனின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

''என்ன பெயர் வைப்பது?'' என்ற சக்தியின் கேள்வி செல்வம் மூலமாக அவனை சென்றடைய, ''எங்கம்மாவை கேட்க சொல்லு செல்வம்! அவங்க சந்தோஷப் படுவாங்க!'' என்றான்.

சக்தி அவன் பேச்சை தட்டவில்லை. வாசுகியிடம் கேட்க, அவர், ''காயத்ரி'' என்ற பெயரை சொல்ல,

''காயத்ரி! காயத்ரி! காயத்ரி!'' என்று முதன் முதலில் குழந்தையின் காதுகளில் அவளின் அண்ணன் தான் சொன்னான்.

அவன் தானே அம்மாவையும் பாப்பாவையும் பார்த்துக் கொள்ளும் பெரிய மனிதன். சக்திக்கு கார்த்திக்கின் ஞாபகங்கள் எப்போதும் இருந்தாலும் அதை

யோசிக்க விடாமல்... ஆதர்ஷும் காயத்ரியும் அவளை ஒரு வழியாக்கினர்.

காயத்ரி அவளின் அம்மாவை விட்டு யாரிடமும் போக மாட்டாள். தெய்வானையிடமும் கொஞ்ச நேரம் தான் இருப்பாள்.

தன் இரு மக்களையும் கவனிப்பதில் வருடங்கள் போனதே தெரியவில்லை. கார்த்திக் இல்லாத குறை தெரியாமல் இருவரும் அவளின் நேரத்தை எடுத்துக் கொள்ள. அவளும் மக்களின் மழலையில் தொலைந்திருந்தாள்.

அது மட்டுமல்லாமல் கார்த்திக்கின் ப்ரொடக்ஷன் கம்பெனி அதையும் சேர்த்து பார்த்துக் கொண்டாள். அது கார்த்திக்கின் கனவு அதை விட மனமில்லை. பணத்தை அவள் போட்டு பர்ஸ்ட் காப்பி அடிப்படையில் படத்தை தயாரித்தாள்.

சக்திக்கு அங்கே வேலையில்லை. பணம் கொடுப்பது மட்டுமே அவளின் வேலை. பாக்கி எல்லாம் டைரக்டரே பார்த்துக் கொள்வார்.

குவாரியை கொடுத்து விட சொல்லியிருந்தான் கார்த்திக். அதை கொடுத்த பணமாக பெரும் தொகை கை மாறி அதுவும் ஃபைன் கட்டுவதற்கு தான் போனது.

ஆனால் அது கை மாறியது சக்தியிடம். கார்த்திக்கின் முக்கியமான சொத்துக்கள் எல்லாம் தன்னிடம் வருவது போல பார்த்துக் கொண்டாள். குவாரியை மாரியும் செல்வமும் பார்த்துக் கொண்டனர்.

இரண்டு வருடம் ஓடியே விட்டது....

அடுத்த வாரம் கார்த்திக்கின் ரிலீஸ். இவ்வளவு நாட்களாக தாக்காத கார்த்திக்கின் பிரிவு அன்று சக்தியை அதிகமாக தாக்கியது. எப்போது வருவான், எப்போது வருவான், என்று மனது ஓயாமல் நினைக்க.

சக்தியால் முடியவேயில்லை.

அவனை போயாவது பார்த்துட்டு விட்டு வருவோமா என்று யோசிக்கும் அளவிற்கு வந்துவிட்டாள்.

காயத்ரியை தூங்க வைத்துக் கொண்டே யோசித்துக் கொண்டிருந்தாள்.

''அம்மா!'' என்று ஆதர்ஷ் உலுக்கும் வரை சக்தி அதே யோசனையில் இருந்தாள்.

''என்ன ஆதர்ஷ்?''

''அப்பா!'' என்று ஆதர்ஷ் ஆரம்பிக்க,

அவளாக, ''அப்பா நெக்ஸ்ட் வீக் வந்துடுவாங்க!'' என்று சொல்ல ஆரம்பிக்க,

''அம்மா!'' என்று ஆதர்ஷ் இடைபுக...

''ஷ்!'' என்று சைகை காட்டிக் கொண்டே ஒரு உருவம் சக்தியின் கண்களை பொத்தியது. கதவிற்கு எதிர்புறம் அமர்ந்திருந்தாள். அதனால் யாரென்று தெரியாவிட்டாலும் உணரக் கூடவா தெரியாது. உணர்வதில் தாமதமானாலும், அவளின் கண்களை இப்படி உரிமை யோடு பொத்தும் தைரியம் ஒருவனை தவிர யாருக்கு உண்டு.

''கார்த்திக்!'' என்று ஆனந்த அதிர்ச்சியோடு கூவிக் கொண்டே கைகளை விலக்கி திரும்ப, அங்கு சாட்சாத் கார்த்திக் தான் நின்று கொண்டிருந்தான்.

''கார்த்திக்!'' என்று அவனை ஆவேசமாக அணைத்துக் கொண்டாள்.

''ஹேய்! இரு! இரு! அழுக்கா இருக்கேன். குளிச்சிட்டு வர்றேன்!'' என்று கார்த்திக் சொன்னதை காதில் வாங்கவேயில்லை. அவனை விடவும் இல்லை.

எதிர்பாராமல் வந்து நின்றதால் சக்தி உணர்ச்சிகளின் பிடியில் இருந்தாள்.

அவளை விலக்காமல் தன் மகளை பார்த்தான். அவனின் மகள் ஒரு ஆனந்த நித்திரையில் இருந்தாள்.

சக்தியாக விலகும் வரை தன் மகளை கண்களில் நிரப்பிக் கொண்டிருந்தான்.

சிறிது நேரம் கழித்து விலகியவள், அவனை பார்க் கவும், அவனின் கவனம் முழுவதும் மகளிடத்தில் இருப்பது புரிய, முறைக்க முயன்று தோற்றாள்.

''நான் அப்பா வந்ததை தான்மா சொல்ல வந்தேன்!'' என்று ஆதர்ஷ் விளக்கம் கொடுத்துக் கொண்டிருக்க,

மகளின் அருகில் போன கார்த்திக்கை, பாத்ரூம் நோக்கி திருப்பி விட்டவள், ''ஓடு! ஓடு! ஓடு! சீக்கிரம் குளிச்சிட்டு வா! அப்புறம் தான் தூக்க விடுவேன்!'' என்றாள் புன்னகையோடு.

''ஃபைவ் மினிட்ஸ், அப்பா வந்துடுவேன்!'' என்று ஆதர்ஷிடம் சொல்லிக் கொண்டே கார்த்திக்கும் குளிக்கப் போனான்.

அவன் எப்போது கதவை திறப்பான் என்பது போல அம்மாவும் மகனும் குளியலறைக் கதவை பார்த்து இருந்தனர்.

வெளியே வந்தவன் ஆதர்ஷை நோக்கி கை நீட்ட, அவன் தாவி ஏறினான் தந்தை மேல்.

''வர்றேன்னு சொல்லவேயில்லை கார்த்திக்! நெக்ஸ்ட் வீக் தானே வர்ற மாதிரி இருந்த'' கேட்டுக் கொண்டே அவனை பார்வையில் ஆராய்ந்து கொண்டிருந்தாள்.

அப்படியே அவனின் வசீகரிக்கும் தோற்றத்துடன் இருந்தான்.

''அப்படிதான் சொல்லிட்டு இருந்தாங்க. நேத்து ஈவினிங் தான் இன்னைக்கு போகலாம்னு சொன்னாங்க. உனக்கு சர்ப்ரைஸ் குடுக்கணும்னு யார்கிட்டயும் சொல்லலை'' என்று சொல்லிக் கொண்டே ஆதர்ஷை இறக்கி விட்டவன்,

காயத்ரியை கையில் தூக்கினான். தூக்கவும் தூக்கம் தடைபட காயத்ரி சிணுங்க.

''தோள்ல போட்டு தட்டிக் குடு!'' என்று அவசரமாக கார்த்திக்கிற்கு சொல்லிக் கொடுத்தாள் சக்தி.

அவன் தட்டவும் திரும்ப அவன் மகள் அவனின் தோள் மேலேயே உறங்கினாள்.

சக்திக்கு இன்னும் கேட்க நிறைய கேள்விகள் இருக்க, ''ஹால்ல இருந்த உங்கப்பா ஏதோ கேட்டார் சக்தி! நான் பதில் கூட சொல்லலை! இதோ வர்றேன்னு சொல்லிட்டு உங்களை பார்க்க வந்துட்டேன். அவரை பார்க்கலாம் வா!'' என்று ரூமை விட்டு வெளியேறினான்.

மகளை தோளில் போட்டு அவளை கையால் அணைத்தபடி மாடிப்படி இறங்க, ஆதர்ஷ் அவனின் டீஷர்டின் நுனியை பற்றிக் கொண்டு அவனிடம் கதை பேசிக் கொண்டே இறங்கினான்.

பார்த்த சக்தி கண்கள் பனித்தது. இருந்து எல்லா டென்ஷனும் சட்டென்று வடிந்துவிட்டது. இனி எல்லாம் அவன் பார்த்துக் கொள்வான் என்பது அவளுக்கு எத்தனை பெரிய ஆசுவாசத்தை கொடுத்தது என்பது அவளுக்கு தான் தெரியும்.

தெய்வானைக்கு அழுகையே வந்துவிட்டது. ஆதர்ஷ் இத்தனை நாட்கள் பெரிய மனித தோரணையில் சுத்திக் கொண்டிருந்த சிறு குழந்தை. இப்போது தந்தையை பார்த்ததும் குழந்தையாக மாறிவிட்டான்.

அது இரவு எட்டு மணி.

வீரமணிக்கும் உணவருந்தும் நேரம். இவன் வருவ தற்காக காத்திருந்தார்.

அவன் வருவதை பார்த்தும் டைனிங் டேபிள் முன் அமர்ந்து கொண்டு, ''வா கார்த்திக், சாப்பிடலாம்!'' என்றார்.

கார்த்திக்கிற்கு பசி இருந்தாலும் மகளை கைகளில் இருந்து இறக்கி விட யோசிக்க,

''இப்படி கொடு கார்த்திக்!'' என்று வாங்கிய தெய்வானை, ''சக்தி நீ பரிமாறு!'' என்றாள்.

கார்த்திக் அமர்ந்தவன், ''ஆதர்ஷ், நீயும் உட்கார்!'' என்று சொல்ல.

''அம்மா இன்னும் சாப்பிடலைப்பா! நீங்க தானே சொல்லியிருக்கீங்க. அம்மா சாப்பிட்ட அப்புறம் தான் நான் சாப்பிடணும்னு'' என்று உண்மையை சொல்ல.

இத்தனை நாட்கள், ''நீ சாப்பிடும் போது தான் சாப்பிடுவேன்'' என்ற மகனின் பிடிவாதத்தின் காரணம் புரியாமல் இருந்த சக்தி, கார்த்திக்கை பார்த்தாள்.

அவன் தன் மகனை பிரமிப்போடு பார்த்துக் கொண் டிருந்தான். வாய் வார்த்தையாக சொன்னதை தன் மகன் அப்படியே செயலில் கொண்டு வந்திருப்பதை பார்க்க பெருமையாக இருந்தது.

அவனை அள்ளி அணைத்துக் கொண்டான்.

வீரமணிக்கே கண்கள் கலங்கிவிடுமோ என்பது போல தோன்றியது.

''இனி நான் பார்த்துக்கறேன். நீ அப்பாவோட சாப்பிடு'' என்று சொல்ல, அவன் சமர்த்தாக சாப்பிட உட்கார்ந்தான்.

வீரமணிக்கு அவர் கேட்க நினைத்ததெல்லாம் மறந்து விட்டது. மௌனமாக மாமனாருடனும் மகனுடனும் உணவருந்தினான் கார்த்திக்.

வெகு நாட்களுக்கு பிறகு ருசியறிந்து உண்ணு கிறான்.

ஆதர்ஷ் வாயை மூடவேயில்லை. அவனுக்கு அப்பாவிடம் சொல்ல நிறைய விஷயமிருந்தன.

''ஆதர்ஷ் எல்லாம் ஒரே டைம்ல சொன்னா அப்பா மறந்துடுவாங்க. டெய்லி கொஞ்சம் கொஞ்சமா

சொல்லலாம், சாப்பிடு!'' என்று சக்தி சொல்லவும் தான் சாப்பிட ஆரம்பித்தான்.

கார்த்திக் சாப்பிட்டு முடித்து, ''ப்ளேட்ல எடுத்துகிட்டு மேல வா!'' என்று சக்தியிடம் சொல்லி மகள் மகனுடன் ரூமிற்கு போய் விட்டான்.

காயத்ரியை படுக்க வைத்தவன் சாய்ந்து அமர, ஆதர்ஷ் அவன் மேல் ஏறிப் படுத்தவன் நிமிஷத்தில் உறங்கியும் விட்டான்.

சக்தி கீழேயே சாப்பிட்டு விட்டு தான் வந்தாள். அவளுக்கு அன்று சாப்பாடு இறங்கும் போல தோன்ற வில்லை. அவன் முன்னால் அரைகுறையாக சாப்பிட் டால் திட்டு விழும்.

அதனால் சாப்பிட்டேன் என்று பெயர் செய்து விரைந்து மேலே சென்றாள்.

மகளின் மேல் ஒரு கையை வைத்து கொண்டு, மகனை நெஞ்சின் மீது போட்டுக் கொண்டு பாந்தமாய் கார்த்திக் சக்திக்காக காத்திருந்தான்.

சக்தி வரவும் அவளை ரசனையோடு பார்க்க, அவனின் பார்வை மாற்றத்தை கவனிக்காமல்,

அவனருகில் வந்து ஆதர்ஷை அவன் மேலிருந்து தூக்கி படுக்க வைத்தாள். அவனருகில் அமர்ந்து, ''ஜெயில்ல ரொம்ப கஷ்டமா இருந்ததா கார்த்திக்'' என்றாள்.

''முடிச்சே வந்துட்டேன்! இப்போ அதை பத்தி என்ன?'' என்றான் அவளை பார்வையிட்டுக் கொண்டே.

''அப்போ கஷ்டமா இருந்தது! அதான் பேச்சை மாத்தற.''

''நான் கொஞ்சம் ஹை ஃபையா வளர்ந்துட்டேன்! ஹை ஃபையா இருந்து பழகிட்டேன். அப்படி பார்த்தா அந்த வாழ்க்கை கஷ்டம் தான். மத்தபடி கஷ்டம்ன்னு பெருசா ஒண்ணுமில்லை சக்தி.''

''சாப்பாடு தான் கொஞ்சம் பிடிக்கலை, தூங்குனா கொசு கடிக்கும், பிரைவசி கஷ்டம், இப்படித்தான், பட் ஓகே! என்னால இதோட எல்லாம் அட்ஜஸ்ட் பண்ண முடிஞ்சது, முதல்ல கஷ்டமா இருந்தாலும் அப்புறம் பழகிடுச்சு'' என்றான்.

''கல்லெல்லாம் உடைக்க சொல்வாங்கலாமே.''

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை! என்னால செய்ய முடியாத அளவுக்கு எந்த வேலையும் இல்லை. அதையெல்லாம் விடு! நீ என்ன பண்ணின?''

''நான் தானே! உங்க பையனும் பொண்ணும் என் நேரத்தை முழுசா எடுத்துக்கிட்டாங்க. அதுவும் ஆதர்ஷ் சொன்னா கேட்டுக்குவான்! ஆனா காயத்ரி, இப்போவே அவளுக்கு என்ன தெரியும், நாம பேசறது கூட சரியாய் புரியாது! எதையாவது செய்யாதேன்ற மாதிரி நாம சொன்னா உடனே செய்றா, என்னை அசையவிடற தில்லை.''

''காலேஜ் கூட சில சமயம் அவளை தூக்கிட்டு போவேன்!'' என்றாள்.

அவள் ஆவர்மாக பேசுவதை ரசனையுடன் பார்த்தவன், ''ரெண்டு வருஷத்துல உன்கிட்ட நிறைய சேஞ்'' என்றான்.

''என்ன சேஞ்'' என்றாள் புரியாமல்.

''உனக்கு வயசு கூடுதா குறையுதான்னு தெரியலை. ரெண்டு குழந்தைக்கு அம்மா மாதிரியே இல்லை! யு லுக் யங்!'' என்றான் பார்வையால் அவளை அங்குலம் அங்குலமாக அளந்தபடி.

''ஹேய்! நீ ஜெயில்ல பொண்ணுங்களையே பார்க் காம காஞ்சு போய் வந்திருக்க இல்லையா. அதனால கொஞ்சம் பசுமை ரொம்ப பசுமையா தெரியுது'' என்றாள் குறும்புடன்.

''யார் சொன்னா நான் ஜெயில்ல பொண்ணுங்களை பார்க்கலைன்னு?'' என்றான் சரசமாக.

''ஒஹ்! உன்னோட ஜெயில் கோ எஜுகேஷன்னா'' என்றாள். அவனை பார்த்ததும் பழைய சக்தி திரும்பி யிருந்தாள்.

அவள் காதை பிடித்து திருகுவது போல கார்த்திக் பாவனை செய்ய,

''சரி! சரி! டிஸ்டர்ப் பண்ணலை! மேல சொல்லு!''

''எதை!''

''உன்னோட ரொமாண்டிக் டைலாக்கை.''

''அப்போ நான் என்ன பேச வந்தேன்னு உனக்கு தெரியுமா?''

''இது கூட சக்திக்கு தெரியாதா?'' என்று அவனையே பதிலுக்கு கேட்டாள்.

''எங்கே சொல்லு'' என்று அவன் சவால் விட,

''கண்ணை மூடினா உன் உருவம் தான் தெரியும்னு சொல்லுவா! கரக்டா!''

கார்த்திக் உற்சாகமாக, "ஹேய் பப்ளி! நிஜமாவே அதுதான் சொல்ல வந்தேன்!" என்றான்.

"அது என்ன பப்ளி."

"குச்சி குச்சியா இருந்த உன் கை பாரு இப்போ சதை போட்டு அழகா இருக்கு" என்று சொல்லிக் கொண்டே அவளின் கையை வருடி அவளை சிலிர்க்க வைத்தான்.

"அப்புறம் உன் கன்னம் பார்த்தவுடனே கடிக்க தோணுது" என்று சொன்னதை செயலில் காட்டினான்.

"இதுவரைக்கும் உனக்கு இடுப்பு இருக்குமா இல்லை யான்னு யோசிக்கற மாதிரி இருக்கும். இப்போ தான் அது ஒரு ஷேப்ல இருக்கு" என்று சொல்லிக் கொண்டே அவளை இடுப்பில் அணைத்து பிடித்து அங்குலம் அங்குலமாக வர்ணிக்க ஆரம்பிக்க,

"ஹேய்! கார்த்திக் ஸ்டாப்! ஸ்டாப்!" என்று விலக முற்பட.

"No stop baby... this is non stop... you turned as a beautiful lady... நிஜமாவே உன்னோட வளைவுகள் அதிக மாகிடிச்சு" என்றான் கண்ணடித்தபடி.

"ஷ்! கார்த்திக்! என்ன இது?" என்றவளின் குரல் உள்ளே போயிருந்தது.

"ஆமாம்! சரியாய் பார்க்காம சொல்லக் கூடா தில்லை. வா பார்க்கலாம்" என்றவன் அதை செயலில் காட்ட விரும்ப.

"குழந்தைங்க!" என்று லாவகமா விலகியவள், "என்ன கார்த்திக் ரொம்ப ரொமாண்டிக்கா இருக்குற இன்னைக்கு."

''ரெண்டு வருஷம் ஒரு மனுஷன் பொண்டாட்டிய பார்க்காம இருந்து பார்க்கிறேன்! இவ்வளவு ரொமாண்டிக்கா கூட இருக்க மாட்டானா என்ன? அதுவும் உண்மையா நீ இன்னும் அழகா மாறிட்ட.''

''எத்தனை தடவை சொல்லுவ அதை'' சக்தி முகச் சிவப்பை மறைக்க முயன்றாலும் முடியவில்லை.

''நான் முதல்ல உன்னை உன்னோட டீன் ஏஜ்ல பார்க்கும் போது இப்படி தான் பப்ளியா இருப்ப'' என்று கன்னத்தில் முத்தமிட.

சக்தி மயங்க ஆரம்பித்தாள் என்று சொல்வதை விட கார்த்திக் அவளை மயக்க ஆரம்பித்தான்.

''I missed you baby... I missed you very much'' என்ற வார்த்தைகள் கார்த்திக்கின் வாயிலிருந்து வந்த போது சக்தி உலகையே மறந்திருந்தாள் என்பதை விட உலகையே மறக்க செய்திருந்தான் கார்த்திக்.

"I love you baby... I love you very musch" என்று அவன் சொன்ன போது அவனுள் கரைந்தே போயிருந்தாள்.

அது இருவருக்குமே மீளா மயக்கம்.

சரியாக மூன்று மணிக்கு காயத்ரி அழுத அழுகையில், அடித்து பிடித்து எழுந்தான் கார்த்திக்.

சக்தியும் விழித்து அவளை கைகளில் தூக்கி இருந்தாள்.

''எதுக்கு சக்தி இவ இப்படி அழறா?'' என்று கார்த்திக் பதற.

''பசின்னு வந்துட்டா இந்த கத்து தான் கத்தும் இந்த சின்ன குட்டி'' என்று அவளை தூக்கிக் கொண்டு சக்தி கதவை திறந்து சமையலறை போக முற்பட,

அவளை கையில் வாங்க முயன்றான் கார்த்திக். புதியவனை பார்த்தும் அழுகையின் வீரியம் அதிக மாகியது.

குழந்தை கத்திய கத்தலில், ''இல்ல! இல்ல! நான் தூக்கலை'' என்றான் பதட்டமாக.

''அவ அப்படிதான் கத்துவா'' என்று கார்த்திக்கை சமாதானப்படுத்திக் கொண்டே, கதவை திறக்க, வாசலில் ஒரு ட்ரேயில் பிளாஸ்க்கில் பால், அவளின் சிப்பர் என்று இருந்தது.

காயத்ரியை பற்றி அறிந்திருந்த தெய்வானை, அதை வைத்து விட்டு தான் உறங்க போயிருந்தார்.

அவளை இடுப்பில் வைத்துக் கொண்டே பாலை கலக்க ஆரம்பிக்க, பாலை பார்த்தும் அவளின் அழுகை சற்று மட்டுப்பட்டது.

அம்மாவின் மடியில் உட்கார்ந்து கொண்டு பாலைக் குடித்தவள், அந்த பால் காலியாகும் முன்னரே உறங்கி யிருந்தாள்.

''இவளா சக்தி அந்த கத்து கத்துனா! அதுக்குள்ள தூங்கிட்டா?''

''அப்படிதான் உங்க பொண்ணு!'' என்று சிரித்தாள் அவனின் மனைவி.

காலையிலும் விழித்ததில் இருந்து தூரமாக தான் காயத்ரி நின்று அவனை வேடிக்கை பார்த்தாள், அருகில் வரவில்லை.

காலை எழுந்து வந்த ஆதர்ஷிடம் தமிழ் பேப்பர் ஒன்றை கையில் வீரமணி கொடுக்க, அவன் அதை

வைத்துக் கொண்டு, எழுத்துக் கூட்டி வார்த்தையை கூட படிக்கவில்லை. வெறும் எழுத்தை க,ம,ற,ல என்று வேண்டுமென்றே அவனின் இஷ்டத்திற்கு சொல்லிக் கொண்டிருந்தான்.

பார்த்த கார்த்திக், "என்ன சக்தி இது!" என்று கேட்க.

"எங்கப்பா அவனை அரசியல்வாதி ஆக்க போறாராம். அதுக்கு இப்போ இருந்தே தமிழ் பேப்பர் படிக்க ட்ரைனிங் குடுக்கறார்" என்று சக்தி சொல்ல.

கார்த்திக்கினால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை. வாய் விட்டு சத்தமாக சிரித்தான்.

வீடே அதை ஆசையாய் பார்த்தது.

பின்பு ஆதர்ஷும் சக்தியுமாய் கார்த்திக்கை, "அப்பா" என்று சொல்லி காயத்ரியை அவனிடம் போக வைத்தனர்.

இரண்டே நிமிடம் இருந்து அனனையிடம் தாவினாள்.

மீண்டும் சக்தி அவனிடம் கொடுக்க முற்பட, "அவளா வருவா! விடு!" என்று விட்டான்.

பின்பு காலையில் மனைவி மக்களுடன் வாசுகியை பார்க்க போனான்.

இவர்கள் வருவது தெரிந்து பிரபு, வைஷ்ணவி, அவன் மக்கள் மட்டுமல்ல சிவா சுமித்ராவும் கூட அவர்களின் பிள்ளைகளுடன் இருந்தனர்.

அவனின் தாத்தா பத்ரிநாத் இன்னும் ஆரோக்யமாக நன்றாக இருந்தார்.

வாசுகியை பார்த்ததும் ஆதர்ஷும் காயத்ரியும் அவருடன் ஒட் டிக் கொண்டனர். சக்தி பழக்கி வைத் திருக்கிறாள் என்று புரிந்தது.

அவர்களுடன் பொழுது இனிமையாக கழிந்தது.

மாலையில் வீடு வந்த போது குழந்தைகளை அம்மா விடம் விட்டு, ''கார்த்திக்! உன் கிட்ட பேசணும்'' என்று சக்தி சொல்ல.

''என்ன'' என்று ரூமிற்குள் வந்தவனிடம்,

''நான் உனக்கு சொல்லாம கொஞ்ச வேலையை செஞ்சிட்டேன்'' என்றாள்.

''என்ன'' என்று கார்த்திக் பார்க்க.

''நீ வர்ற வரைக்கும் சினிமா தயாரிக்க வேண்டாம்னு சொன்னியாம். நான் ஃபர்ஸ்ட் காப்பி பேசிஸ்ல பண்ணிட்டு தான் இருந்தேன்'' என்றாள்.

இது கார்த்திக்கிற்கு தெரிந்தது தான். அமைதியாக அவளை பார்த்தான்.

''அப்புறம் குவாரி அதை நீ கை மாத்தி விட சொன்னியாம். அதை நான்தான் வாங்கினேன்'' என்றாள்.

இதுவும் அவனுக்கு தெரியும். அதற்கும் அவன் அமைதியாக இருக்கவும்.

சக்தியாக அவனிடம் சொன்னதில்லை. இப்போது சொல்கிறாள் அவ்வளவே.

''இதெல்லாம் அதோட அக்கௌன்ட்ஸ்'' என்று சில ஃபைல்களை காட்டியவள்,

''நீ வேணா இதையெல்லாம் கடனா வெச்சிக்கோ! அப்புறம் நீ வேணா எனக்கு திருப்பி கொடு! இதையெல்லாம் வேண்டாம்னு சொல்லாத!'' என்றாள் கண்களில் பயத்தோடு.

''என்னது கடனா திரும்ப குடுக்கறதா, ஆகவே ஆகாது! சான்சே இல்லை. எல்லாத்தையும் நீயே வெச்சிக்கோ, இனிமே இந்த கடன் கட்டுறது, சொத்தை திரும்ப குடுக்கறது! எதுவும் என்னால ஆகாது.''

''ஏன், உன்னோடது என்னோடது இல்லையா?'' என்று கார்த்திக் கேட்க,

''கார்த்திக்!'' என்று உணர்ச்சி மிகுதியில் கட்டிக் கொண்டாள், ''நீ இதையெல்லாம் யூஸ் பண்ண மாட்டியோ! வேண்டாம்னு சொல்லிடுவியோன்னு எவ்வளவு பயந்துட்டு இருந்தேன் தெரியுமா?''

''உன்னையே யூஸ் பண்றேன்! உன்னோடதை யூஸ் பண்ண மாட்டனா!'' என்று சொல்லி சக்தியை முகம் சிவக்க வைத்தான். கூடவே, ''இருக்கறது உன்கிட்டேயே இருக்கட்டும்! இனிமே எல்லாம் புதுசா நான் பார்த்துக்கறேன்!'' என்றான்.

அவனை விட்டு விலகி, ''அதானே நீயெல்லாம் மாறவே மாட்ட, நீ திருந்தாத ஜென்மம்டா!'' என்று மொத்தினாள்.

அதற்குள், ''அப்பா! செல்வம் அங்கிள் உங்களை பார்க்கணுமாம்!'' என்றபடி ஆதர்ஷ் வர,

கீழே சக்தியும் கார்த்திக்கும் இறங்கி வந்தனர்.

''பாஸ்! நேத்து வந்துட்டு என்னை நீங்க இன்னும் பார்க்கவேயில்லை!'' என்று குறைப்பட்டான்.

''நேத்து நான் யார்கிட்டயும் பேசலை. இன்னைக்கு காலைல உன்னைக் கூப்பிட்டேன். நீ போன் எடுக்கலை.''

''நீங்க மேடம் நம்பர்ல இருந்து கூப்பிட்டீங்க. அதான்.''

''ஏன்டா மேடம் போன் பண்ணினா எடுக்காத அளவுக்கு பெரிய ஆளா நீ'' என்று மிரட்ட.

''பாஸ்! தெரியாம பேசாதீங்க. நேத்து காலைல இருந்து ஒவ்வொரு பத்து நிமிஷத்துக்கும் போன். நீங்க எப்போ வருவீங்க! எப்படி வருவீங்கன்னு. சொன்ன தையே நேத்து சாயந்தரம் வரைக்கும் நூறு தடவை யாவது சொல்லியிருப்பேன்.''

''காலைல குழந்தைக்கு உடம்பு சரியில்லைன்னு ஹாஸ்பிடல்ல இருந்தேன். அதான் எடுக்கலை. உடனே வந்து கூப்பிட்டேன்! மேடம் எடுக்கலைங்க'' என்றான்.

''ஏன் சக்தி?''

''அதுவா யாராவது எதுக்காவது கூப்பிடுவாங்கன்னு ஸ்விட்ச் ஆப் பண்ணிட்டேன். இன்னும் ரெண்டு நாளைக்கு ஆன் பண்ண மாட்டேன்'' என்றாள் புன்னகையோடு.

அவளை காதலாக பார்த்தவாறே, ''விட்றா! விட்றா! ஏதோ மிஸ் ஆகிடுச்சு!'' என்று செல்வத்தை சமாதானப் படுத்தினான்.

பத்து நாட்கள் கழித்து, மனைவி மக்களோடு குலு மணாலி சுற்றுலா செல்ல முடிவெடுத்து, டெல்லி ஃபிளைட் ஏற பெங்களூர் ஏர்போர்ட்டிற்கு சென்று கொண்டிருந்தான் கார்த்திக்.

கருப்பண்ணன் வண்டியை ஓட்ட, முன்னால் செல்வம் அமர்ந்திருந்தான். அவன் மடியில் அமர்ந்து ஆதர்ஷ் அவனுடன் கதை பேசிக் கொண்டிருந்தான்.

''நாங்க போயிக்குவோம்'' என்று சொல்லியும், செல்வம், ''நான் தான் அனுப்புவேன்!'' என்று வந்திருந்தான்.

காயத்ரி கார்த்திக்கின் மடியில் சமர்த்தாக உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவனை விட்டு இப்போது நகர்வதில்லை.

''இந்த சின்ன குட்டி பத்து நாளைக்கு முன்னாடி என்னை விட்டு நகர மாட்டா. இப்போ நானா கூப்பிட்டா தான் பக்கத்துல வர்றா. அப்பா அப்பான்னு உங்களையே சுத்துறா!''

''அவங்கம்மாவே என்னை தான் சுத்துறா!'' என்று கார்த்திக் பேச ஆரம்பிக்க,

செல்வமும் கருப்பண்ணனும் இருப்பதைக் கண்களால் காட்டியவள், மேலே பேசாதே என்று கண்களால் அடக்கினாள்.

''உன் கண்ணு ரொம்ப பேசுது வர, வர'' என்று கார்ததிக் புன்னகையோடு சொல்ல, சக்தியும் புன்னகைத்தாள்.

ஏர்போர்ட் வந்து அவர்கள் அமர்ந்திருக்க, எதிர்பாராத விதமாக கங்காதானும் அங்கே அமர்ந்திருந்தான்.

இவர்கள் அவனைப் பார்க்கவில்லை. அவனாக வந்து, ''ஹலோ மேடம்!'' என்று பேச, ''ஹலோ சார்'' என்று சக்தியும் ஆர்வமாகப் பேசினாள்.

''எப்படி இருக்கீங்க மேடம்?''

''நல்லா இருக்கேன்! நீங்க சார்...!''

''நல்லா இருக்கேன்!'' என்றவன், அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்த கார்த்திக்கைப் பார்த்து, ''சாரை

எனக்கு அறிமுகப்படுத்த மாட்டீங்களா'' என்றான் கங்காதரனாகவே.

கார்த்திக்கிற்கு அவன் கலெக்டர் கங்காதரன் என்று தெரிந்தாலும் ஒரு அறிமுகமானவனைப் பார்க்கும் பார்வையோடு கங்காதரனைப் பார்த்துக் கொண்டிருந் தாலும், அவனாகப் பேச முயற்சிக்கவில்லை.

இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

''கார்த்திக'' என்று சக்தி அழைக்க, காயத்ரியைத் தூக்கிக் கொண்டே அருகில் வந்தவன்,

''கார்த்திகேயன்!'' என்று அவனின் பெயரைச் சொல்லி கங்காதரனை நோக்கி கை நீட்ட, ''கங்காதரன்!'' என்று சொல்லி அவன் கையைப் பற்றி கங்காதரன் கை குலுக்கினான்.

''சக்தி டெல்லில இருந்தப்போ நீங்க நிறைய அவளுக்கு வொர்க்ல ஹெல்ப் பண்ணுனிங்கலாமே தேங்க்ஸ்!'' என்றான் கங்காதரனைப் பார்த்து,

அதை விடுத்து, ''ரொம்ப தைரியமான முடிவு உங்களோடது!'' என்று கங்காதரன் சொல்ல.. எது என்று யாரும் கேட்காமலேயே அது அவன் ஜெயில் சென்றதை குறிக்கிறது என்று புரிந்தது.

''நான் ஜட்ஜ்மென்ட் வந்த அன்னைக்கே மேடம் கிட்ட பேசினேன். உடனே பெயில் அப்ளை பண்ண ப்ரோவிஷன் இருக்குன்னு சொன்னேன். சொல்லப் போனா அஸ் எ பப்ளிக் சர்வென்ட் நான் அதைப் பத்தி சொல்லக் கூடாது. இருந்தாலும் மேடம்காக அதைச்

சொன்னேன். she is a good friend of mine and I know she loves you a lot.''

''மேடம் தெரியும்னு ஒரே வார்த்தைல முடிச்சிட்டாங்க. அப்புறம் நடந்ததை பேப்பர்ல பார்த்தேன். பிரேவ் டெசிஷன்'' என்றான்.

''இது என்னோட டெசிஷன்றதைவிட இது சக்திக்கான என்னோட கிஃப்ட், she deserves this'' என்றான் கார்த்திக் சக்தியை கரை காணாத காதலோடு பார்த்துக் கொண்டே...

''நான் கூட கேட்டேன், இவ்வளவு சீரிய சிந்தனைகளோட இருக்குற நீங்க எப்படி கார்த்திக்கை செலக்ட் பண்ணுனீங்கன்னு. but now I think you deserve this'' என்றான் கார்த்திக்கை பார்த்துக் கொண்டே.

சக்தியும் பெருமையாக கார்த்திக்கை பார்த்தாள். ''இவ சும்மா பில்ட் அப் குடுப்பா, நம்பாதீங்க'' என்றான் சகஜமாக கங்காதரனைப் பார்த்து கார்த்திக்.

''நிஜமாவே நான் அவங்க கிட்ட உங்களைப் பத்தி பேசினப்போ பில்ப் அப் மாதிரி தான் நினைச்சேன். ஆனா இல்லை, நிஜம் தான் சொல்லியிருக்காங்க. நான் அங்க இல்லை நீங்க ஈசியா கேஸ்ல இருந்து வெளில வந்திருக்கலாம். இல்லை இன்னும் ஒரு இருவது வருஷத்துக்காவது இழுத்திருக்கலாம். நீங்க எதுவும் பண்ணலை.''

''சக்தி மேடம் உங்களைப் பத்தி சொன்னது நிஜமான வார்த்தைகள் தான் போல!'' என்றான் புன்னகையோடு கங்காதரன்.

அங்கே ஒரு மென் புன்னகை மூவரின் முகத்திலும், நீங்கள் பேசியது போதும் என்பது போல கார்த்திக்கின் தோளில் இருந்த காயத்ரி இறங்கி ஓட,

சக்தி அவளைப் பிடிக்கப் போனாள்.

''நைஸ் மீட்டிங் யு சார்!'' என்று கார்த்திக் விடைபெற,

''கீப் இன் டச் சர்!'' என்று கங்காதரனும் விடை பெற்றான். இந்த வார்த்தைகளை பணியின் நிமித்தம் அவன் எப்போதும் யாரிடமும் சொன்னது இல்லை. ஆனால் கார்த்திக்கைப் பார்த்துச் சொல்லி விடை பெற்றான்.

காயத்ரியைத் தூக்கிக் கொண்டு மூச்சு வாங்க வந்து நின்ற சக்தி, ''ம்கூம்! முடியலை, இவ அட்டகாசம்.. நீயே பிடி உன் பொண்ணை'' என்று கார்த்திக்கின் கையில் திணித்தாள்.

''உன்னையே இன்னும் அடக்க முடியலை என்னால...'' என்று கார்த்திக் சலிப்பது போல காதலாக அவளைப் பார்த்துப் பேச...

''நான் தான் அதைச் சொல்லணும்!'' என்று சக்தி இடுப்பில் கைவைத்து முறைத்தாள்.

இருவரும் ஒருவருக்கு ஒருவர் அடங்குபவர்களே. ஆனால் அது அவர்களாக நினைத்தால் மட்டுமே.

''எது நிஜம், எது பொய்ன்னு நைட் பேசிக்கலாம்'' என்று கார்த்திக் சொல்லிய விதத்தில் இருவருக்குமே உற்சாகம் பொங்க, சிரித்தனர்.

''அப்பா பேகலாமா!'' என்று ஆதர்ஷ் கேட்க ஃபிளைட் அனௌன்ஸ்மென்ட்டும் கேட்க, செல்வத்திடம் ஒரு சிறு

தலையசைப்போடு விடைபெற்று, அவர்களின் மக்க ளோடு கார்த்திக்கும் சக்தியும் ஃபிளைட் ஏற சென்றனர்.

தேடிச் சோறு நிதந்தின்று - பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி - மனம்
வாடித் துன்பமிக உழன்று - பிறர்
வாழ பல செயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப்பருவம் எய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே - நானும்
வீழ்வே னென்று நினைத்தாயோ!

- மகாகவி சுப்ரமணிய பாரதி

(நிறைவுற்றது)

மேலும் மின்நூல்களுக்கு
www.tamilnesan1981.blogspot.in